லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு
தொகுதிகளில்

❁

தொகுதி
12

அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டு விழா
போர்க்குணம் கொண்ட பொருள் முதல்வாதத்தின்
முக்கியத்துவம் குறித்து
வி. இ. லெனினுடைய கடைசிக் கடிதங்களும் கட்டுரைகளும்

ஈ. 11980

В. Ульянов (Ленин)

வி. இ. லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி 12

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

В. И. Ленин

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 12

на тамильском языке

V. I. Lenin

SELECTED WORKS IN 12 VOLUMES

VOL. 12

in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1982

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$Л\frac{10102—934}{014(01)—82}$ 680—82 0101020000

பொருளடக்கம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ், ஜூன் 22—ஜூலை 12, 1921 9

1. ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது போர்த்தந்திரங்கள் பற்றிய விரிவுரைக்கான ஆய்வுரைகள் 9

1. ரு. சோ. சோ. கூ. குடியரசின் சர்வதேச நிலைமை 9

2. சர்வதேச அளவில் வர்க்க சக்திகளது பரஸ்பர உறவுநிலை 10

3. ருஷ்யாவில் வர்க்க சக்திகளது பரஸ்பர உறவுநிலை 12

4. ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும் 13

5. ரு. சோ. சோ. கூ. குடியரசில் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான இராணுவக் கூட்டணி 14

6. பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒழுங்கான பொருளாதார உறவுகளுக்கு மாறிச் செல்லுதல் 15

7. சோவியத் ஆட்சியதிகாரம் எந்நிலைமைகளில் முதலாளித்துவத்துக்கும் சலுகைகளுக்கும் அனுமதியளிக்கலாம் என்பதும், இப்படி அனுமதியளிப்பதன் உட்பொருளும் 16

8. நமது உணவுக் கொள்கையின் வெற்றி . . 18

9. சோஷலிசத்தின் பொருளாயத அடித்தளமும் ருஷ்யாவை மின்மயமாக்கும் திட்டமும் . . 19
10. ''தூய ஜனநாயகமும்'' இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் மூலதனத்தின் கூட்டாளிகளாய் ஆற்றும் பாத்திரம் 20
2. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசுக்கான போர்த்தந்திரங்கள் பற்றிய நகல் ஆய்வுரைகள் மீதான கருத்துரைகள். கி. யெ. ஸினோவியெவுக்கு கடிதம். 23
3. கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய உரை, ஜூலை 1 31
அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டு விழா 49
தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம் . 65
ஜெனோவா மாநாட்டு சோவியத் பிரதிநிதிக் குழுவுக்கு விடுத்த நெறிமுறைகள் . . . 79
1. ஜெனோவா மாநாட்டு சோவியத் பிரதிநிதிக் குழுவுக்கு ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டி விடுத்த நகல் நெறிமுறைகள் 79
2. தோழர் கி. வ. சிச்சேரினுக்குக் கடிதம் . . . 82
3. ஜெனோவாவில் சோவியத் பிரதிநிதிக் குழுவின் பணிகள் பற்றிய ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் நகல் தீர்மானம் 83
போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து 88

ரு. க. க.(போ.)இன் பதினொன்ருவது காங்கிரஸ், மார்ச் 27—ஏப்ரல் 2, 1922 . . . 106
1. ரு. க. க.(போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை, மார்ச் 27. . 106
2. காங்கிரசின் முடிவில் ஆற்றிய உரை, ஏப்ரல் 2 186
''பிராவ்தாவின்'' பத்தாவது ஆண்டு விழா. 190
சோ. சோ. கு. ஒன்றியம் நிறுவப்படுவது பற்றி. ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ உறுப்பினர்களுக்கு வேண்டி லே. ப. காமெனெவுக்கு எழுதிய கடிதம் 197
அயல்துறை வாணிகத்தின் ஏகபோகம் பற்றி. 201
1. 201
2. 206
கம்யூனிஸ்டு அகிலத்தின் நாலாவது காங்கிரஸ், நவம்பர் 5—டிசம்பர் 5, 1922 214
ருஷ்யப் புரட்சியின் ஐந்தாண்டுகளும் உலகப் புரட்சிக்கான சாத்தியக்கூறுகளும். கம்யூனிஸ்டு அகிலத்தின் நாலாவது காங்கிரசுக்கு அறிக்கை, நவம்பர் 13, 1922 214
மாஸ்கோ சோவியத்தின் முழுநிறைக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, நவம்பர் 20, 1922 240

வி. இ. லெனினுடைய
கடைசிக் கடிதங்களும் கட்டுரைகளும்
டிசம்பர் 23, 1922—மார்ச் 2, 1923

1. காங்கிரசுக்குக் கடிதம் 256
2. 257
1922 டிசம்பர் 24ஆம் தேதிக் கடிதத்துடன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது 261

3. 262
4. அரசுத் திட்டக் கமிஷனுக்கு சட்டமியற்றும் பணிகளை வழங்குதல் 264
5. 267
6. 269
7. (மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் தொகையை அதிகரிப்பது சம்பந்தமான பிரிவுக்குச் சேர்ப்பு) 271
தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது ''தன்னாட்சிமயமாக்கல்'' 272
தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது ''தன்னாட்சிமயமாக்கல்'' (தொடர்ச்சி) 276
நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள் 283
கூட்டுறவு குறித்து 292
1. 292
2. 298
நமது புரட்சி (நி. சுஹானவின் குறிப்புக்கள் சம்பந்தமாய்) 305
1. 305
2. 310
தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும் (பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரசுக்குப் பரிந்துரை) 312
சொற்பமாயினும் சிறந்ததே நன்று . . . 321
பதிப்பாளர் குறிப்புக்கள் 348
பெயர்க் குறிப்பகராதி 387

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரஸ்[1]

ஜூன் 22—ஜூலை 12, 1921

1

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது போர்த்தந்திரங்கள் பற்றிய விரிவுரைக்கான ஆய்வுரைகள்

1. ரு. சோ. சோ. கூ. குடியரசின் சர்வதேச நிலைமை

ருஷ்யாவின் சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசின் சர்வதேச நிலைமையானது தற்போது ஒருவிதச் சமநிலையால் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சமநிலை மிதமிஞ்சி உறுதியற்றதாக இருப்பினும் உலக அரசியலில் விசேஷமான செல்வாக்கை உண்டாக்கியுள்ளது.

இந்த விசேஷ நிலைவரம் வருமாறு: ஒரு புறத்தில் சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் சோவியத் ருஷ்யாவிடம் மூர்க்கத்தனமான வெறுப்பும் பகைமையும் கொண்டிருக்கிறது, அதன் மென்னியைப் பிடித்து நெரிப்பதற்காக எத்தருணத்திலும் அதன் மீது பாய்வதற்குத் தயாராய் இருக்கிறது. மறுபுறத்தில் ராணுவத் தலையீட்டுக்கான எல்லா முயற்சிகளும், சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் பத்துக் கோடிக் கணக்கிலான பிராங்குகளைச் செலவிட நேர்ந்திருக்கும் இந்த எல்லா முயற்சிகளும், படுதோல்வியடைந்தன—சோவியத் ஆட்சியதிகாரம் தற்போது இருப்பதைக் காட்டிலும் அப்போது இன்னும் அதிகமாகப் பலவீனமாகவே இருந்ததென்ற போதிலும், ரு. சோ. சோ. கூ. குடியரசின் பிரதேசத்தில் ருஷ்ய நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் பெருஞ்சேனைகளை உடையோராய் இருந்த போதிலும், இம்முயற்சிகள் படுதோல்வியிலே முடிவுற்றன. சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான போருக்கு முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலும் எதிர்ப்பு வெகுவாய்

வலுப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்துக்கு மேலும் தூபமிட்டும், குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் மிக விரிவான பகுதிகளுக்குப் பரவியும் வந்திருக்கிறது. பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளது நலன்களுக்கு இடையிலான மோதல் கடுமையாகியுள்ளதுடன், நாளுக்கு நாள் மேலும் மேலும் கடுமையாகி வருகின்றது. கிழக்கத்திய நாடுகளின் கோடானு கோடியான ஒடுக்கப்பட்ட மக்களது புரட்சி இயக்கம் குறிப்பிடத்தக்க வலிமை பெற்று வளர்ந்து வருகிறது. இந்த எல்லா நிலைமைகளின் விளைவு என்னவெனில், சர்வதேச ஏகாதிபத்தியம்—அது ருஷ்யாவை விட மிகவும் கூடுதலான பலம் படைத்திருப்பினும்—சோவியத் ருஷ்யாவின் மென்னியை நெரித்திட முடியாமற்போய், சோவியத் ருஷ்யாவுக்குத் தற்காலிகமாய் அங்கீகாரம் அல்லது பகுதியளவிலான அங்கீகாரம் அளிக்கும்படியும் அதனுடன் வாணிப ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதம் ஒரு சமநிலை ஏற்பட்டிருக்கிறது. சிறிதும் உறுதியற்றதுதான், எந்நேரத்திலும் தகர்ந்துவிடக் கூடியதுதான் என்ற போதிலும் இந்தச் சமநிலையானது சோவியத் குடியரசை முதலாளித்துவ வளையத்துக்குள்—அதிக காலத்துக்கு அல்லவென்பது மெய்தான்—அடைபட்டு நிலவ முடியும்படிச் செய்கிறது.

2. சர்வதேச அளவில் வர்க்க சக்திகளது பரஸ்பர உறவுநிலை

இந்த நிலவரம் வர்க்க சக்திகளது பின்வரும் சர்வதேச உறவுநிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

சோவியத் ருஷ்யாவை எதிர்த்துப் பகிரங்கப் போர் புரிய வாய்ப்பு இல்லாதவாறு தடுக்கப்பட்டிருக்கும் சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் திரும்பவும் போரை மேற்கொள்வதற்கு நிலைமைகள் அனுமதிக்கும்படியான தருணம் எப்போது வருமென்று காத்துக் கொண்டும் கவனித்துக் கொண்டும் இருக்கிறது.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலும் பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே தனது முன்னணிப் படையினை, அதாவது கம்யூனிஸ்டுக் கட்சிகளை நிறுவிக் கொண்டு விட்டது. இந்தக் கட்சிகள் வளர்ந்து வருகின்றன, ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்தாரில் பெரும்பான்மையினரைக் கவர்ந்து இழுத்துக் கொள்வதை நோக்கியும், பழைய தொழிற்சங்க அதிகார வர்க்கத்தாரது செல்வாக்கையும் ஏகாதிபத்தியத் தனியுரிமைகளால் சீரழிக்கப்பட்டுள்ள அமெரிக்க, ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க மேற்படிவத்தினரது செல்வாக்கையும் அழித்திடுவதை நோக்கியும் இடையருது முன்னேறி வருகின்றன.

முதலாளித்துவ நாடுகளில் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளைத் தான்—இவர்களது முன்னணிப் பிரிவினர் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களால்[2] பிரதிநிதித்துவம் செய்யப்படுகிருர்கள்—இன்று முதலாளித்துவம் தனது பிரதான ஆதாரமாகப் பயன்படுத்தி வருகிறது. ஏனெனில் இவர்கள், ஏகாதிபத்தியத்துக்குள்ள தனியுரிமைகளால் உண்டாக்கப் பெற்ற ஒப்பளவிலான குட்டிமுதலாளித்துவ சுபிட்சத்தைப் புரட்சி மூளுமாயின் தாம் இழக்க நேருமென அஞ்சும் தொழில் துறை, வாணிபத் துறைத் தொழிலாளர்கள், அலுவலகச் சிப்பந்திகளில் பெரும்பான்மையோர் அல்லது கணிசப் பகுதியோர் இடத்தே செல்வாக்குடையோராக இருப்பவர்கள். ஆனல் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடியானது எங்கும் மக்களது விரிவான பகுதியோருடைய நிலைமைகளை மோசமாக்கிச் செல்கிறது. இதுவும், முதலாளித்துவம் ஒழிக்கப்படவில்லையானல் புதிய ஏகாதிபத்தியப் போர்கள் மேலும்மேலும் கண்கூடாகத் தவிர்க்கமுடியாதபடி மூளும் அபாயமும் இந்தப் பிரதான ஆதாரத்தைத் தொடர்ந்து மேன்மேலும் பலவீனமாக்கி வருகின்றன.

உலக மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானேராய் இருக்கும் காலனி, அரைக் காலனி நாடுகளது உழைப்பாளி வெகுஜனங்கள் இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலேயே, குறிப்பாய் ருஷ்யாவிலும் துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனுவிலுமான புரட்சிகளால் அரசியல் உயிர்ப்பு

பெரும்படி தட்டியெழுப்பப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்களும் உட்பட ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் சேர்ந்த கல்வியறிவு படைத்த அற்பவாதிகள் இதைப் பார்ப்பதற்குப் பிடிவாதமாய் மறுத்த போதிலும், உலக அரசியலிலும் ஏகாதிபத்தியம் புரட்சிகரமாய் அழிக்கப்படுவதிலும் இந்த வெகு ஜனங்கள் செயலூக்கம் கொண்ட காரணக்கூறாக மாற்றப்படும் வளர்ச்சிப் போக்கினை 1914-18ஆம் ஆண்டுகளின் ஏகாதிபத்தியப் போரும் ருஷ்யாவிலான சோவியத் ஆட்சியதிகாரமும் நிறைவு பெறச் செய்து வருகின்றன. இந்நாடுகளில் தலையாயது பிரிட்டிஷ் இந்தியா. அங்கே ஒரு புறத்தில் தொழில் துறை, ரயில்வேப் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியையும், மறு புறத்தில் பிரிட்டிஷாரது மிருகத்தனமான பயங்கரம் அதிகமாவதையும் தொடர்ந்து அதே விகிதத்தில் புரட்சியும் முதிர்ச்சியடைந்து வருகிறது—மேலும் மேலும் கூடுதலான அளவில் பிரிட்டிஷார் அடிக்கடி அங்கே வெகு ஜனப் படுகொலைகளிலும் (அமிர்தசரஸ்)[3], பொதுக் கசையடிகளிலும் இன்ன பிறவற்றிலும் இறங்குகிறார்கள்.

3. ருஷ்யாவில் வர்க்க சக்திகளது பரஸ்பர உறவுநிலை

சோவியத் ருஷ்யாவின் உள்நாட்டு அரசியல் நிலைமையானது பின்வரும் உண்மையால் நிர்ணயிக்கப்படுகிறது: உலக வரலாற்றிலே முதன் முறையாய் இங்கே, கடந்த பல ஆண்டுகளாய் இரண்டு வர்க்கங்கள் மட்டுமே இருந்துள்ளன—பாட்டாளி வர்க்கம், மிகவும் இளையதாயினும் நவீனமான பெருவீத இயந்திரத் தொழில் துறையில் பல பத்தாண்டுகளாகப் பயிற்சி பெற்றது; சிறு விவசாயிகள், தேச மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானோராய் இருப்பவர்கள்.

ருஷ்யாவில் பெரிய நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் மறைந்துவிடவில்லை; ஆனால் இவர்கள் முழுநிறை உடைமை நீக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு வர்க்கமென்ற முறையில் அர

சியல் வழியில் முற்றிலும் நசுக்கப்பட்டிருக்கிருர்கள்; மிச்ச சொச்சமாய் இருப்போர் சோவியத் ஆட்சியதிகாரத்தின் சிப்பந்திகளிடையே ஒளிந்து கொண்டிருக்கிருர்கள். குடி பெயர்ந்தோராய் வெளிநாடுகளில் இவர்கள் தமது வர்க்க நிறுவனத்தை அழியாது பாதுகாத்துக் கொண்டுள்ளனர்—எண்ணிக்கையில் இவர்கள் சுமார் 15,00,000 முதல் 20,00,000 வரை இருக்கலாம், முதலாளித்துவ, ''சோஷலிஸ்டு'' (அதாவது, குட்டிமுதலாளித்துவ) கட்சிகள் யாவற்றுக்குமாகச் சேர்ந்து 50க்கு மேற்பட்ட நாளேடுகளையும் சேனையின் மீதமிச்சங்களையும் பெற்றிருக்கிருர்கள், சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தாருடன் எண்ணற்ற பிணைப்புகள் கொண்டிருக்கிருர்கள். நாட்டை விட்டுக் குடிபெயர்ந்தவர்களாகிய இவர்கள் சோவியத் ஆட்சியதிகாரத்தை ஒழிப்பதற்காகவும் ருஷ்யாவில் முதலாளித்துவத்தை மீட்டமைப்பதற்காகவும் முழு மூச்சுடனும் சகல சாதனங்களுடனும் பாடுபட்டு வருகிருர்கள்.

4. ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும்

ருஷ்யாவில் உள்நாட்டு நிலைமை இவ்வாறு இருப்பதால், ஆளும் வர்க்கம் என்ற முறையில் அதன் பாட்டாளி வர்க்கத்தைத் தற்போது எதிர்நோக்கும் பிரதான பணி, விவசாயிகளுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தி, அவர்களுடன் உறுதியான கூட்டணியை நிறுவி, வரிசையாய் அமைந்த படிப்படியான கட்டங்களின் வாயிலாக, சமூகமயமானதும் இயந்திரமயமானதும் ஆகிய பெருவீத விவசாயத்துக்கான மாற்றத்தை நடந்தேறச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிர்ணயித்து அவற்றை நிறைவேற்றுவதுதான். குறிப்பாய் ருஷ்யாவில் இது கடினமான ஒரு பணியாகும். ருஷ்யாவின் பின்தங்கிய நிலையும், மற்றும் ஏழு ஆண்டுகளாக ஏகாதிபத்தியப் போரும் உளநாட்டுப் போரும் நடைபெற்றதன் விளைவாய் நாடு அளவுகடந்த அழிவுக்கு உள்ளாகியுள்ள நிலையும்

இதற்குக் காரணமாகும். ஆனால் இந்தப் பிரத்தியேக நிலைமைகளை அன்னியில், இது சோஷலிசக் கட்டுமானத்தின் மிகவும் கடினமான பணிகளில் ஒன்றாய் முதலாளித்துவ நாடுகள் யாவற்றையுமே எதிர்நோக்கும். இதற்கு ஒரேயொரு விதிவிலக்காய், பிரிட்டனை வேண்டுமானால் குறிப்பிடலாம். ஆயினும் பிரிட்டன் சம்பந்தமாகவுங்கூட, சிறிய குத்தகை விவசாயிகள் மிகச் சிறிய வர்க்கமாகவே இருந்த போதிலும், பிரிட்டனுடைய காலனி ''உடைமைகளில்'' நூறு கோடிக் கணக்கிலான மக்கள் அப்பட்டமாகவே அடிமைப்படுத்தப் பட்டிருக்கும் காரணத்தால் பிரிட்டனில் குட்டிமுதலாளித்துவ வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கும் தொழிலாளர்கள், அலுவலகச் சிப்பந்திகளது சதவீதம் மிக மிக அதிகம் என்பதை மறக்கலாகாது.

ஆகவே, ஒரே நிகழ்ச்சிப் போக்காய் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி கண்டு வரும் வளர்ச்சியின் கண்ணோட்டத்தில், ருஷ்யா கடந்து கொண்டிருக்கும் இந்தச் சகாப்தமானது, ஆட்சியதிகாரம் வகிக்கும் பாட்டாளி வர்க்கம் குட்டிமுதலாளித்துவப் பெருந்திரளினர் பால் அனுசரிக்கும் கொள்கையின் நடைமுறைச் சோதனையாகவும் மெய்ப்பிப்பாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

5. ரு. சோ. சோ. கூ. குடியரசில் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான இராணுவக் கூட்டணி

சோவியத் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே ஒழுங்கான உறவுகளுக்குரிய அடித்தளம் 1917க்கும் 1921க்கும் இடையிலான காலத்தில் கட்டியமைக்கப்பட்டதாகும்; அப்போது அனைத்து உலகின் முதலாளித்துவ வர்க்கத்தாராலும் எல்லாக் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகக் கட்சிகளாலும் (சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் மென்ஷிவிக்குகளாலும்)[4] ஆதரிக்கப்பட்டு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் நடத்திய படையெடுப்பானது சோவியத் ஆட்சியதிகாரத்தைப் பாதுகாப்பதற்காகப் பாட்

டாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் இராணுவக் கூட்டணியை நிறுவி ஒப்பமிட்டு முத்திரை பதித்து உறுதியாக்கிக் கொள்ளச் செய்தது. வர்க்கப் போராட்டத்தின் மிகமிகக் கடுமையான வடிவமே உள்நாட்டுப் போர். இந்தப் போராட்டம் எவ்வளவுக்கு எவ்வளவு கடுமையாகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு விரைவாகக் குட்டிமுதலாளித்துவப் பிரமைகள், தப்பெண்ணங்கள் யாவற்றையும் அதன் தீ சுட்டெரிக்கிறது; அவ்வளவுக்கு அவ்வளவு தெளிவாய் அனுபவமானது விவசாயிகளது மிகவும் பிற்பட்ட வகுப்பாருக்குங்கூட பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஒன்ருல் மட்டுமே தம்மைப் பாதுகாக்க முடியுமென்பதையும்; சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் உண்மையில் நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் தொண்டூழியம் புரிவோரே ஆவாரென்பதையும் நிரூபித்துக் காட்டுகிறது.

பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான இராணுவக் கூட்டணியே அவர்களது உறுதியான கூட்டணிக்குரிய முதல் நிலை வடிவமாக இருந்தது, இன்றியமையாதவாறு இருக்கவும் வேண்டியிருந்தது என்ருலும், மேற்குறித்த வர்க்கங்களுக்குமிடையே பொருளாதாரக் கூட்டணி இல்லாமற்போயிருந்தால் ஒரு சில வாரங்களுக்குங்கூட அதை நிலைக்கச் செய்திருக்க முடியாது. தொழிலாளர்களது அரசிடமிருந்து விவசாயிகள் எல்லா நிலங்களையும் பெற்றனர், நிலப்பிரபுக்களையும் குலாக்குகளையும்[5] எதிர்த்து நிற்பதற்கு அவர்களுக்குப் பாதுகாப்பு தரப்பட்டது; தொழிலாளர்கள் பெருவீதத் தொழில் துறை மீட்டமைக்கப்படும் வரைக் கடனுக விவசாயிகளிடமிருந்து உணவுப் பொருள்களைப் பெற்று வந்துள்ளனர்.

6. பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒழுங்கான பொருளாதார உறவுகளுக்கு மாறிச் செல்லுதல்

போக்குவரத்தும் பெருவீதத் தொழில் துறையும் முழு அளவுக்கு மீட்டமைக்கப்படுவதன் மூலம் பாட்டாளி வர்க்க

மானது உணவுப் பண்டங்களுக்குப் பரிவர்த்தனையாக விவசாயிகளுக்கு அவர்களது சொந்த உபயோகத்துக்கும் மற்றும் அவர்களது பண்ணைகளது மேம்பாட்டுக்கும் தேவையான எல்லாப் பண்டங்களையும் அளிக்க வல்லதாகும் போதுதான் சோஷலிச நோக்குநிலையிலிருந்து சிறு விவசாயிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான கூட்டணி போதுமான அளவு ஒழுங்கானதும் நிலையானதும் ஆக முடியும். பாழ்பட்ட நிலையில் இருக்கும் நாட்டில் இதனை உடனே சாதிப்பது முடியாத காரியம். போதுமான அளவுக்கு ஒழுங்கமைக்கப்படாத அரசு, நிலப்பிரபுக்களுக்கு எதிரான நம்ப முடியாத அளவுக்கு உக்கிரமான போரில் தன்னை நிலைநாட்டிக் கொள்வதற்கு இருக்கக் கூடிய சிறந்த முறை உபரியை வசூலித்துக் கொள்வதுதான். ஏற்கெனவே கடுமையாய் இருந்த விவசாயிகளது இன்னல்கள் 1920ல் விளைச்சல் தவறியதாலும் தீவனம் பற்றுக்குறையானதாலும் மேலும் அதிகமாயின, பண்ட வடிவிலான வரிக்கு உடனடியாக மாறிச் செல்வது அவசர அவசியமாகியது.

மிதமான பண்ட வடிவ வரி உடனே விவசாயிகளது நிலைமையினைப் பெரிய அளவில் மேம்படச் செய்யும், அதேபோது சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும்படியும் சாகுபடி முறைகளை மேம்படுத்தும்படியும் செய்யும்.

பண்ட வடிவ வரியானது, விவசாயிகளது உபரி தானியம் அனைத்தையும் வசூலித்துக் கொள்வதிலிருந்து தொழில் துறைக்கும் விவசாயத் துறைக்குமிடையே சோஷலிச வழியிலான, முறையான பண்டப் பரிவர்த்தனை நடைபெறுவதற்கு மாறிச் செல்வதைக் குறிப்பதாகும்.

7. சோவியத் ஆட்சியதிகாரம் எந்நிலைமைகளில் முதலாளித்துவத்துக்கும் சலுகைகளுக்கும் அனுமதியளிக்கலாம் என்பதும், இப்படி அனுமதியளிப்பதன் உட்பொருளும்

இயற்கையாகவே பண்ட வடிவ வரி என்பது, வரி போகத் தம்மிடம் எஞ்சும் உபரிப் பொருள்களை விவசாயி தம் விருப்பப்படி பட்டுவாடா செய்வதற்குச் சுதந்திரம்

பெறுவதையே குறிக்கிறது. விவசாயி வைத்திருக்கும் உபரி அனைத்துக்கும் பரிவர்த்தனையாக அரசால் சோஷலிச ஆலைகளிலிருந்து பண்டங்களை அளித்திட முடியவில்லை என்பதால், இந்த உபரியைக் கொண்டு வாணிபம் புரிவதற்கான சுதந்திரம் தவிர்க்க இயலாதவாறு முதலாளித்துவம் வளர்வதற்கான சுதந்திரத்தையே குறிக்கிறது.

ஆனால் போக்குவரத்தும் பெருவீதத் தொழில் துறையும் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் இருக்கும் வரையில், இது இங்கு சுட்டிக்காட்டப்படும் வரம்புகளுக்குள், எவ்விதத்திலும் சோஷலிசத்துக்கு அபாயகரமானது அன்று. மாருக, பாட்டாளி வர்க்க அரசால் கண்காணிக்கப்பட்டும் ஒழுங்கியக்கப்பட்டும் முதலாளித்துவம் வளர்வதானது (அதாவது, ''அரசு'' முதலாளித்துவம்—இத்தொடரின் இந்த அர்த்தத்தில்—வளர்வதானது), மிதமிஞ்சிய நாசத்துக்கு உள்ளாகியுள்ள நாடாகிய சிறு விவசாயிகளது பிற்பட்ட நாட்டுக்கு அனுகூலமானதும் அவசியமானதும் ஆகும் (குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டே என்பதைக் கூறத் தேவையில்லை), எப்படியெனில் விவசாயிகளது வேளாண்மை உடனடியாகப் புத்துயிர் பெறுவதை இந்த வளர்ச்சி துரிதப்படுத்த வல்லதாய் இருக்கின்றது. சலுகைகளுக்கு இது இன்னுங்கூட அதிக அளவுக்குப் பொருந்துவதாகும்: நாட்டுடைமையான எதையும் தனியுடைமை ஆக்காமல், தொழிலாளர்களது அரசு சிற்சில சுரங்கங்களையும் வனப் பரப்புகளையும் எண்ணெய் வயல்களையும் பிறவற்றையும் அன்னிய முதலாளிகளிடம் குத்தகைக்கு விடுகிறது; சோவியத் பெருவீதத் தொழில் துறை மீட்டமைக்கப்படுவதைத் துரிதப்படுத்துவதற்கு நமக்கு உதவக் கூடிய இயந்திர சாதனங்களையும் பொறிகளையும் கூடுதலாய் இவர்களிடமிருந்து பெறும் பொருட்டு இதைச் செய்கிறது.

உற்பத்தி செய்யப்படும் உயர் மதிப்புள்ள பண்டங்களில் ஒரு பங்கின் வடிவில் சலுகையாளர்களுக்குச் செலுத்தப்படும் தொகையானது சந்தேகத்துக்கு இடமின்றி கப்பமே ஆகும், தொழிலாளர்களது அரசு உலக முதலாளித்துவ வர்க்கத்துக்குக் கட்டும் கப்பமே ஆகும். இதை நாம் எவ்வகை

யிலும் மூடிமறைக்க வேண்டியதில்லை, இந்தக் கப்பம் நமது பெருவீதத் தொழில் துறை மீட்டமைக்கப்படுவதைத் துரிதப் படுத்தியும் தொழிலாளர்கள், விவசாயிகளது நிலையைக் கணிச அளவுக்கு மேம்படுத்தியும் வரும் வரை இதைக் கட்டு வதன் மூலம் நாம் ஆதாயமடைவோரே ஆவோம் என்பதைத் தெளிவாய் உணர்ந்து கொள்ள வேண்டும்.

8. நமது உணவுக் கொள்கையின் வெற்றி

1917-21ல் சோவியத் ருஷ்யா பின்பற்றிய உணவுக் கொள்கை சந்தேகத்துக்கு இடமின்றி சிறிதும் நயமற்றதாக வும் மிகவும் குறைபாடானதாகவுமே இருந்தது, பல கேடு களையும் விளைவித்தது. அதைச் செயல்படுத்துகையில் தவறு கள் பலவும் இழைக்கப்பட்டன. ஆனால் மொத்தத்தில் அக் காலத்திய நிலைமைகளில் அது ஒன்று மட்டுமே சாத்தியமான கொள்கையாக இருந்தது. தவிரவும் அதற்குரிய வரலாற்றுப் பணியை அது நிறைவேற்றவே செய்தது: பாழ்பட்டுவிட்ட பிற்பட்ட ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத் தை அது காப்பாற்றியது. படிப்படியாக அக்கொள்கை மேம் பாடு அடைந்தது, அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நாம் முழு அளவில் ஆட்சியதிகாரம் பெற்றதும் முதலாம் ஆண்டில் (1918 ஆகஸ்டு 1 முதல் 1919 ஆகஸ்டு 1 வரை) அரசு 11 கோடி பூடு தானியத்தை வசூலித்தது; இரண்டாம் ஆண்டில் 22 கோடி பூடும், மூன்றும் ஆண்டில் 28 கோடி 50 லட்சம் பூடுக்கு அதிகமாகவும் வசூலித்தது. நடைமுறை அனுபவம் பெற்றிருக்கும் நாம் இப்போது 40 கோடி பூடு வசூலிக்க முற்பட்டுள்ளோம், வசூலிப்போமென எதிர்பார்க்கிறோம் (பண்ட வடிவ வரியின் மூலம் 24 கோடி பூடு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது). தொழிலாளர்களது அரசு போதிய அளவில் உணவுப் பொருள்களை மெய்யாகவே கையிருப்பில் கொண்டுள்ள போதுதான் பொருளாதார வழியில் அது தனது சொந்தக் கால்களில் உறுதியாக நிற்கவும், பெருவீதத் தொழில் துறையை மெதுவாகவே எனினும் இடையறாது தொடர்ந்து மீட்டமைத்திடவும், ஒழுங்கான நிதியமைப்பைத் தோற்றுவிக்கவும் முடியும்.

9. சோஷலிசத்தின் பொருளாயத அடித்தளமும் ருஷ்யாவை மின்மயமாக்கும் திட்டமும்

விவசாயத்தைப் புனரமைக்க வல்லதான பெருவீத இயந்திரத் தொழில் துறை ஒன்றுதான் சோஷலிசத்துக்குச் சாத்தியமான பொருளாயத அடித்தளம். ஆனுல் இந்தப் பொதுவான முடிவுடன் நாம் நின்றுவிடலாகாது. இதனை மேலும் ஸ்தூலமாக்கியாக வேண்டும். தொழில்நுட்பத்தின் நவநவீன சாதனைகளை அடிப்படையாகக் கொண்டதும் விவசாயத்தைப் புனரமைக்க வல்லதுமான பெருவீதத் தொழில் துறையானது நாடு முழுதும் மின்மயமாதலைக் குறிக்கின்றது. ரு. சோ. சோ. கூ. குடியரசை இப்படி மின்மயமாக்குவதற்கான ஒரு திட்டத்தை வகுத்திடும் விஞ்ஞானப் பணியை நாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது; இதை நாம் செய்து முடித்துள்ளோம். ருஷ்யாவிலுள்ள சிறந்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், விவசாய விஞ்ஞானிகளில் இருநூற்றுக்கும் அதிகமானோரது ஒத்துழைப்புடன் இந்தப் பணி இப்போது பூர்த்தியாகியுள்ளது. இது பெரியதொரு தொகுதியாக வெளியிடப்பட்டது, 1920 டிசம்பரில் சோவியத்துக்களது எட்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசால் ஒட்டுமொத்தமாய் அங்கீகரிக்கப்பட்டது. அரசாங்கத்தால் இறுதியாக அங்கீகரிக்கப்படுமுன் இத்திட்டத்தை விவரமாகப் பரிசீலிப்பதற்காக மின்பொறியாளர்களது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் ஒன்றை 1921 ஆகஸ்டில் கூட்டுவதற்கு இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.[6] மின்மயமாக்கும் திட்டத்தின் முதற் பகுதியை நிறைவேற்ற பத்து ஆண்டுகளாகும் என்று மதிப்பிடப்படுகிறது; இதற்குச் சுமார் 37 கோடி வேலை நாட்கள் தேவையாய் இருக்கும்.

1918ல் நாம் புதிதாக எட்டு மின்நிலையங்கள் கட்டினேம் (இவற்றின் மொத்த ஆற்றல்: 4,757 கிலோவாட்); 1919ல் இந்த எண்ணிக்கை 36ஆக உயர்ந்தது (மொத்த ஆற்றல்: 1,648 கிலோவாட்); 1920ல் இது 100ஆக உயர்ந்தது (மொத்த ஆற்றல்: 8,699 கிலோவாட்).

விரிந்து பரந்த நமது நாட்டுக்கு இந்தத் துவக்கம் பெரி

தல்ல. எனினும் துவக்கி வைக்கப்பட்டு விட்டது, வேலை ஆரம்பமாகி விட்டது, தொடர்ந்து முன்னேறி வருகிறது. ஏகாதிபத்தியப் போருக்குப் பிறகு, பத்து லட்சம் போர்க் கைதிகள் ஜெர்மனியில் நவீனத் தொழில்நுட்பத்தில் பரிச்சயம் பெற்ற பிறகு, கடுமையானது எனினும் உறுதியூட்டும்படியான மூன்றாண்டுக் கால உள்நாட்டுப் போரின் அனுபவத்துக்குப் பிற்பாடு, ருஷ்ய விவசாயி வேறொரு மனிதராகியிருக்கிறார். பாட்டாளி வர்க்கத்தின் வழிகாட்டல் மட்டும் தான் சிறு விவசாயிப் பெருந்திரளினரை முதலாளித்துவ அடிமை வாழ்விலிருந்து சோஷலிசத்துக்கு அழைத்துச் செல்ல வல்லது என்பதை இவ்விவசாயி மாதத்துக்கு மாதம் மேலும் மேலும் தெளிவாகவும் கண்கூடாகவும் காண்கிறார்.

10. "தூய ஜனநாயகமும்" இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் மூலதனத்தின் கூட்டாளிகளாய் ஆற்றும் பாத்திரம்

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது வர்க்கப் போராட்டம் முடிவுற்றுவிட்டதைக் குறிப்பதல்ல, மாறாகப் புதிய வடிவில், புதிய ஆயுதங்களைக் கொண்டு தொடர்ந்து அது நடைபெறுவதைக் குறிப்பதாகும். வர்க்கங்கள் இருந்து வரும் வரையில், ஒரு நாட்டில் வீழ்த்தப்பட்டுவிட்ட முதலாளித்துவ வர்க்கம் சோஷலிசத்தின் மீதான தனது தாக்குதல்களைச் சர்வதேச அளவில் பத்து மடங்கு கடுமையாக்கி வரும் வரையில், இந்தச் சர்வாதிகாரம் இன்றியமையாததாகும். மாறிச் செல்வதற்கான இடைநிலைக் கட்டத்துக்குரிய இந்தக் காலத்தில் சிறு விவசாயிகளது வர்க்கம் நிச்சயமாகச் சிற்சில ஊசலாட்டங்களுக்கு உள்ளாகவே செய்கிறது. மாறிச் செல்வதிலுள்ள இன்னல்களும் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கும் தவிர்க்க முடியாதபடி இந்தப் பெருந்திரளினரது மனப்பாங்கை அவ்வப்போது மாறும்படிச் செய்கின்

றன. பாட்டாளி வர்க்கம் அதற்கு ஜீவாதாரமாய் அமையும் அடித்தளமாகிய பெருவீத இயந்திரத் தொழில் துறையின் அழிவினுல் பலவீனமுற்றும் ஓரளவு வர்க்கத் தரங்கெட்டும் உள்ளது; மேற்கூறிய ஊசலாட்டங்களை மீறி உறுதியாக நின்று, மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து உழைப்பை விடுதலை பெறச் செய்வதென்ற மெத்தக் கடினமானதாயினும், தலையாய வரலாற்றுப் பணியானது இவ்வர்க்கத்திற்கே உரியதாகும்.

குட்டிமுதலாளித்துவ ஜனநாயகக் கட்சிகள், அதாவது இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களுடன் இணைந்துள்ளவையும், ருஷ்யாவில் ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்'', மென்ஷிவிக்குகளது கட்சிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறவையுமான கட்சிகள் பின்பற்றும் கொள்கை, குட்டிமுதலாளித்துவப் பகுதிகளது ஊசலாட்டங்களின் அரசியல் வெளியீடே ஆகும். இந்தக் கட்சிகள் இப்போது தமது தலைமையகங்களையும் பத்திரிகைகளையும் வெளிநாடுகளில் வைத்திருக்கின்றன. உண்மையில் இவை முதலாளித்துவ எதிர்ப்புரட்சி அனைத்துடனும் கூட்டுசேர்ந்து கொண்டு விசுவாசமாக அதற்குத் தொண்டூழியம் புரிந்து வருகின்றன.

''காடேட்டு'' (''அரசியல் சட்ட-ஜனநாயக'') கட்சியின்[7] தலைவரான மில்யுக்கோவின் தலைமையில் அமைந்த ருஷ்யப் பெரு முதலாளித்துவ வர்க்கத்தாரது கூர்மதி கொண்ட தலைவர்கள் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளுடைய (அதாவது சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகளுடைய) இந்தப் பாத்திரத்தை மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் ஒளிவுமறைவின்றியும் மதிப்பீடு செய்திருக்கிறுர்கள். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் வெண்படையினரும் கூட்டுசேர்ந்து செயல்பட்ட க்ரன்ஷ்தாத் கலகம்[8] சம்பந்தமாக, மில்யுக்கோவ் ''போல்ஷிவிக்குகள் இல்லாத சோவியத்துக்கள்'' என்னும் கோஷத்துக்கு ஆதரவு தெரிவித்து மொழிந்தார். இந்தக் கருத்தை மேலும் விரிவுபடுத்தி, சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் ''முயற்சி செய்வது வரவேற்கத் தக்கதே'' என்று அவர் எழுதினுர் (பிராவ்தா, இதழ் 64,

1921, பாரிஸ் பஸ்லேத்னியே நோவஸ்தியிலிருந்து[9] தரப் பட்ட மேற்கோள்). ஏனெனில் போல்ஷிவிக்குகளிடமிருந்து ஆட்சியதிகாரத்தை முதலில் பறித்திடும் பணி அவர்களுக்கே உரியதாகும் என்றார். எல்லாப் புரட்சிகளும் அளித்திடும் படிப்பினையை—அதாவது குட்டிமுதலாளித்துவ ஜனநாயக வாதிகள் ஆட்சியதிகாரத்தை விடாது வைத்திருக்கத் திரா ணியற்றவர்கள், முதலாளித்துவ வர்க்கத்தின் எதேச்சாதி காரத்துக்கு மூடுதிரையாகவும் இவ்வர்க்கம் வேறு எவருக் கும் பங்களிக்க வேண்டியிராத தனி ஆட்சியதிகாரம் பெறு வதற்கான இடைநிலையாகவுமே எப்போதும் பயன்படுகிற வர்கள் என்பதை—பெரு முதலாளித்துவ வர்க்கத்தின் தலை வரான மில்யுக்கோவ் பிழையற்றவாறு கணித்து வைத்திருக் கிறார்.

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியானது, 1789-94ஆம் ஆண்டுகளும் 1848-49ஆம் ஆண்டுகளும் அளித்த இந்தப் படிப்பினையையும், மற்றும் 1884 டிசம்பர் 11ல் பெபெலுக்கு எழுதிய கடிதத்தில் பிரெடெரிக் எங்கெல்ஸ் கூறியதையும் திரும்பத் திரும்ப உறுதி செய்து காட்டுகிறது.

''....தூய ஜனநாயகம்... புரட்சிக்குரிய தருணம் வரு கையில் குறுகிய காலத்துக்குத் தற்காலிக முக்கியத்துவம் பெறுகிறது... முதலாளித்துவப் பொருளாதாரம் அனைத் துக்கும், பிரபுத்துவப் பொருளாதாரத்துக்குங்கூடத்தான் கடைசி ஆதாரமாய் முக்கியத்துவம் பெறுகிறது.... இவ் வாறு 1848 மார்ச்சுக்கும் செப்டம்பருக்கும் இடையில் பிர புத்துவ-அதிகாரவர்க்கத் திரள் அனைத்துமாகச் சேர்ந்து, புரட்சிகர வெகுஜனங்களை அடக்கி வைக்கும் பொருட்டு மிதவாதிகளைப் பலப்படுத்தியது.... தூய ஜனநாயகத்தைச் சுற்றிலும் கூடிக் கொள்ளும் பிற்போக்குத் திரள் அனைத்தும் தான் நெருக்கடி நாளிலும் நெருக்கடிக்கு அடுத்த நாளிலும் நமக்கு எதிரான ஒரே பகையாக அமைந்திருக்கும். இதை எப்படியும் மறக்கலாகாதெனநினைக்கிறேன்'' (ருஷ்ய ஏடான கம்யூனிஸ்தீச்செஸ்கி த்ருத்,[10] இதழ் 360, 1921 ஜூன் 9ல், தோழர் வி. அதராத்ஸ்கியின் கட்டுரையான ''ஜனநாயகம் குறித்து மார்க்சும் எங்கெல்சும்'' என்பதில் வெளிவந்தது;

ஜெர்மனில் பிரெடெரிக் எங்கெல்ஸ் புத்தகமான *Politisches Vermächnis*, "Internationale Jugend-Bibliothek", *இதழ் 12, பெர்லின், 1920, பக்கம் 19ல் வெளிவந்தது).*[11]

நி. லெனின்

மாஸ்கோ, கிரெம்ளின், ஜூன் 13, 1921

கம்யூனிஸ்டு அகிலத்தின் பத்திரிகைத் துறையால் *1921*ல் தனிப் பிரசுரமாய் மாஸ்கோவில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு (ஐந்தாவது ருஷ்யப் பதிப்பு), தொகுதி *44*, பக்கங்கள் *3-12*

2

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசுக்கான போர்த்தந்திரங்கள் பற்றிய நகல் ஆய்வுரைகள் மீதான கருத்துரைகள்

கி. யெ. ஸினேவியெவுக்கு கடிதம்[12]

மிகப் பல அம்சங்களில் லெவீயின் நிலை அரசியல் முறையில் சரியானது என்பதே இங்கு விஷயத்தின் அறுதிக் கூறு. துரதிருஷ்டவசமாக, அவர் கட்டுப்பாட்டைப் பல தடவை மீறிய குற்றத்தைச் செய்துள்ளார். இதற்காக கட்சி அவரை நீக்கம் செய்திருக்கிறது.

தால்கெய்மரின் மற்றும் பேலா கூனின் ஆய்வுரைகள் அரசியல் முறையில் படுமோசமாயும் தவறுனவை. இவை வெறும் சொல் அடுக்குகள், இடதுசாரி போலி விளையாட்டு.

ராதெக் ஊசலாடி வருகிறுர், ''இடதுசாரி'' மடமைக்குப் பல சலுகைகள் தந்து தமது ஆரம்ப நகலைப் பாழ்படுத்தி விட்டார். அவரது முதல் ''விட்டுக் கொடுப்பு'' மிகவும் தன்மைக் குறிப்பானது: அவரது ஆய்வுரைகளின் முதல் பாராவில் "Umgrenzung der Fragen"* அவர் ''(கம்யூனிசக்

* ''பிரச்சினைகள் பற்றிய நிர்ணயம்.''—ப-ர்.

கோட்பாடுகளுக்கு)'' (இதைக் கவனிக்க) ''தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையின் ஆதரவைப் பெறுவது'' பற்றி முதலில் குறிப்பிட்டிருந்தார். இது பின்வருமாறு திருத்தப்பட்டது (verballhornt*): ''தொழிலாளி வர்க்கத்தின் சமுதாய முறையில் தீர்மானகரமான பகுதிகளின் ஆதரவைப் பெறுவது.''

ஒரு முத்தான கருத்து! ''கம்யூனிசக் கோட்பாடுகளுக்குத்'' துல்லியமாயும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையின் ஆதரவை பெறுவதன் அவசியத்தை இத்தகைய ஒரு பகைப்புலனில் இங்கு பலவீனப்படுத்துவது என்பது மடமையின் சிகரமாகும்.

ஆட்சி அதிகாரத்தை வென்று பெறுவதற்கு, ஒரு சில நிலைமைகளின் கீழ் (கம்யூனிசக் கோட்பாடுகளுக்குத் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையின் ஆதரவு ஏற்கெனவே பெறப்பட்டுவிட்டாலும் கூட) தொழிலாளி வர்க்கத்தின் சமுதாய முறையில் தீர்மானகரமான பகுதிகளின் பெரும்பான்மை மூலம் தீர்மானகரமான இடத்தில் ஒரு தாக்குதல் மேற்கொள்வது அவசியமாகும்.

இந்த உண்மையை verballhornen, இத்தகைய வழியில் உருமாற்றம், அதாவது கம்யூனிசக் கோட்பாடுகளுக்குத் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவது பற்றியதான கம்யூனிஸ்டு அகிலத்தின் பொதுவான பணிகளின் முதல் பாராவில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையின் ஆதரவைப் பெறுவது அவசியம் எனும் கருத்தைப் பலவீனப்படுத்தும் என்பதாகத் திருத்திக் கூறுவது பேலா கூன் மற்றும் தால்கெய்மரின் உதவாக்கரைத் தன்மைக்கும் (அவர் கனவான் போலக் காணப்படுகிறார், ஆனல் உண்மையில் அவரைத் தடியால் அடிக்க வேண்டும்) மற்றும்... ராதெக்கின் அவசரக் கோலமான விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைக்கும் ஒரு முதல்தரமான உதாரணமாகும்.

ராதெக்கின் ஆய்வுரைகள் அளவுக்கு மேல் நீளமானவை,

---

* நல்லதாக்க முயன்று மேலும் மோசமாக்கப்பட்டது.—ப-ர்,

உறுதியற்றவை, அரசியல் மையக் கருத்து இல்லாதவை. மேலும் ராதெக் அவற்றை இன்னும் அதிகமாக முனைப்புக் குறைத்து படுமோசமாகப் பாழ்படுத்தி விட்டார்.

என்ன செய்வது? நான் அறியேன். அவ்வளவு நேரமும் முயற்சியும் விரயமாக்கப்பட்டன.

காங்கிரசில் ஒரு பகிரங்கமான சண்டையை நீங்கள் விரும்பவில்லை என்ருல் பிறகு நான் பின்வருமாறு பிரேரேபிக்கிறேன்:

1) தால்கெய்மரினதும் பேலா கூனுடையதுமான ஆய்வுரைகள் இந்த நாளிலேயே (அடிப்படையான அம்சங்கள் தாமதம் இன்றி இன்றைக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்று புஹாரின் உறுதி கூறுவதால்: அவற்றை ஒத்திப் போடுவது நல்லது) அடிப்படையாயும் பிழைபாடானவை என்பதாக சரியான வோட்டு மூலம் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும். இதை எழுதிக் கொள்ள வேண்டும். இதைச் செய்யாமல் சலுகை காட்டுவீர்களானுல் நீங்கள் எல்லாவற்றையும் பாழ்படுத்தி விடுவீர்கள்.

2) ராதெக்கின் முதல் நகல் எந்தத் திருத்தங்களாலும் ''மேம்படுத்தப்படாமல்''—இவற்றின் மாதிரி ஒன்றை நான் முன்பு மேற்கோள் காட்டியுள்ளேன்—அடிப்படையாக ஏற்கப்பட வேண்டும்.

3) இந்த வாசகத்தைத் தக்கபடி வெட்டிக் குறைத்து மேம்படுத்தும் பொறுப்பு 1 முதல் 3 பேர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் மூலம் (சாத்தியமாகும் பட்சத்தில்) இதன் உறுதியற்ற தன்மை இனியும் நீடிக்காது, மற்றும் பின்வருவனவற்றை கேந்திரமான கருத்துக்களாக தெளிவாகவும், துல்லியமாயும், ஐயப்பாட்டுக்கு இடமின்றியும் நடுமையத்தில் வைக்க வேண்டும்:

· அமைப்புத் துறைத் தலைமை சம்பந்தமாக மட்டுமன்றி, கம்யூனிசக் கோட்பாடுகளுக்கும் கூட (தொழிலாளி வர்க்கத்தின்) பெரும்பான்மையின் ஆதரவை எந்த ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியும் எந்த இடத்திலும் இன்னும் பெற்றுவிடவில்லை, இது எல்லாவற்றுக்கும் அடிப்படை. விவேகமான ஒரே ஒரு போர்த்

தந்திரத்தின் இந்த அடித்தளத்தைப் ''பலவீனப்படுத்துவது'' குற்றகரமான பொறுப்பின்மையாகும்.

இதன் விளைவு: ஐரோப்பாவில் காணப்படும் உணர்ச்சித் தீயை மூட்டும் அமோகமான சாதனங்களைக் கருதிப்பார்க்கையில், எப்படியும் மிக விரைவில் புரட்சிகரமாகப் பொங்கும் எழுச்சிகள் சாத்தியம்; தனிவிலக்கான இடங்களில் தொழிலாளி வர்க்கம் எளிதாக வெற்றியடைவதும் சாத்தியம். ஆனுல் இந்த சாத்தியக்கூறின் மீது கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை இப்போது அடிப்படையாக்குவது அபத்தமானது; பிரசாரக் காலகட்டம் முடிந்து விட்டது என்றும் செயல் புரியும் காலகட்டம் தொடங்கி விட்டது என்றும் எழுதுவதோ சிந்திப்பதோ அபத்தமானதும், தீங்கு விளைப்பதுமாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை முதலாவதாயும் முக்கியமாயும் **பழைய** தொழிற்சங்கங்களுக்கு அகத்தே திரட்டி அதன் ஆதரவைப் பெறுவதற்கான ஓர் உறுதியான முறையான முயற்சியைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்கள் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பின்னர் நாம் நிகழ்ச்சிகளின் போக்கு என்னவாக இருந்தாலும் நிச்சயம் வெற்றி பெறுவோம். தனிச்சிறப்பான சாதகமான நிகழ்ச்சிகளின் திருப்பத்தில், குறுகிய காலத்திற்கு ''வெற்றி பெறுவது'' என்பதை எந்த முட்டாளும் செய்ய முடியும்.

இதன் விளைவாக: ''பகிரங்கக் கடிதம்'' எனப்படும் போர்த்தந்திரம் எல்லா இடங்களிலும் திட்டவட்டமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். இதை நேரடி வெளிப்படையாயும் தெளிவாயும் துல்லியமாயும் சொல்லிவிட வேண்டும். காரணம் ''பகிரங்கக் கடிதம்'' சம்பந்தமான தடுமாற்றங்கள் மிகவும் தீங்கு விளைப்பவை, மிகவும் வெட்கக் கேடானவை, **மிகவும் பரவலாக இருப்பவை.**[13] இதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ''பகிரங்கக் கடிதப்'' போர்த்தந்திரத்தின் அவசியத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டவர்கள் எல்லோரும் அதன் மூன்ருவது காங்கிரஸ் முடிந்த ஒரு மாதத்திற்குள் கம்யூனிஸ்டு அகிலத்தில் இருந்து **விலக்கப்**

படுதல் வேண்டும். ஜெ. க. தொ. கட்சியைச் சேர்த்துக் கொள்வதற்கு ஆதரவாக நான் வாக்களித்தது தவறு என்பதைத் தெளிவாகக் காண்கிறேன். சாத்தியமான அளவு விரைவாகவும் முழுமையாகவும் இந்தத் தவறு நீக்கப்பட வேண்டும்.[14]

ராதெக்கைப் போன்று நீண்ட கதையை வளர்த்துக் கொண்டு போகாமல், இந்தப் ''பகிரங்கக் கடிதத்தின்'' முழு வாசகத்தையும் மொழிபெயர்ப்பதும் (ஜெர்மன் மொழியில்: முழுமையாக மேற்கோள் காட்டுவதும்), இதன் உட்பொருளை சரிவர மனதில் பதிய வைப்பதும், இதை ஒரு முன்மாதிரியாக ஏற்றுக் கொள்வதும் சிறந்தது.

போர்த்தந்திரங்கள் மீதான பொதுத் தீர்மானத்தை இதற்குள் அடக்கி விடுகிறேன்.

இதற்குப் பின்னர் மட்டுமே இதற்கான துவக்கத்தைச் செய்ய முடியும். மையக் கருத்து தெளிவாக இருக்கும். எந்த விதமான குழப்பமும் இருக்காது. ஒவ்வொருவரும் (ராதெக்கின் ஆய்வுரையில் போன்று) தமது சொந்த அர்த்தத்தை இதனுள் பார்க்கும் சாத்தியக்கூறு இராது.

அப்போது ராதெக்கின் மூல நகல் குறைந்தது, கால்வாசி அளவுக்குக் குறையாமல் வெட்டிக் குறுக்கப்படும்.

நாம் எழுதுவதை நிறுத்தி விட்டு, ஆய்வுரைகளுக்குப் பதில் சிற்றேடுகளைத் தேர்வுசெய்யும் காலம் வந்து விட்டது. இந்த அமைப்பு முறையின் கீழ் நாம் எல்லோரும் இடையில் விஷயம் மறுக்க முடியாததாக இருந்த போதிலும் சில சிறிய பிழைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. நம்மிடம் உறுதியற்றதும் மறுக்கக் கூடியதுமான ஏதேனும் இருக்குமானால் நாம் கட்டாயமாயும் பெரிய பிழைகளைச் செய்வோம், எல்லாவற்றையும் பாழ்படுத்தி விடுவோம்.

இதற்கான ஓர் அரிப்பு உங்களிடம் இருக்குமாயின், பிறகு அத்தகைய போர்த்தந்திரத்தின் அடிப்படையில், பிரத்தியேகமாயும் ஓர் உதாரணம் என்ற முறையில், துல்லியமாயும் ஓர் உதாரணம் என்ற முறையில் ஒரு கோட்பாடாக அல்லாமல் நீங்கள் ஒரு பின்சேர்ப்பைக் கூட்டலாம், இதை-இதை மற்றும் இதை-இதைச் சேர்க்கிறோம் என்பதாக.

மேலே செல்வோம்.

செராட்டியையும் லெவீயையும் அதே ''சந்தர்ப்பவாதத்தில்'' பொதுமைப்படுத்துவது அசட்டுத் தனம். செராட்டி குற்றவாளி; எதனுல்? இ த் தா லி ய ப் பிரச்சினை மீது, பொதுவான போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினை மீது அல்ல என்பதைத் தெளிவாயும் துல்லியமாயும் சொல்லிவிட வேண்டும். கம்யூனிஸ்டுகளிடமிருந்து பிரிந்து சென்றதால், சீர்திருத்தவாதிகளான டுராட்டி வகையருவை விலக்காததால். இத்தாலியத் தோழர்களே, இதை நீங்கள் செய்து முடிக்கும் வரையில் நீங்கள் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு வெளியில்தான் இருப்பீர்கள். நாங்கள் உங்களை விலக்கி வைக்கிறேம்.[15]

இத்தாலியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கருத்தார்ந்த புத்திமதி கூறி நாம் கோருகிறேம்: நீங்கள் செராட்டியைப் பின்பற்றும் தொழிலாளர்களில் பெரும்பான்மையை, விடாப்பிடியாகவும் பொறுமையுடனும் சாமர்த்தியமாகவும் **ந ம் பி க் கை யூ ட் டி** ஆதரவாகத் திரட்ட உங்களால் இயலாத காலம் வரை வீறுப்புப் பேசாதீர்கள், இடதுசாரிப் போக்குடன் விளையாடாதீர்கள். "Fall Levi"* பொதுவான போர்த்தந்திரத்தினுள் இல்லை, மாறுக ஜெர்மன் பிரச்சினை மீதான Märzaktion** குறித்த மதிப்பீட்டில் இருக்கிறது[16]. தற்காப்புப் போக்கில் இது இருந்தது என்கிறுர் பிராண்ட்லர். அரசாங்கம் இதை ஆத்திரமூட்டித் தூண்டியது.

இது உண்மை என்றும் அது ஒரு மெய்நடப்பாகும் என்றும் ஒப்புக் கொள்ளலாம்.

இதிலிருந்து பெறும் முடிவு என்ன?

1) ஏறித்தாக்குதல் பற்றிய கூச்சல் யாவும்—இது ஏராளமாக இருந்தது—தவறுனது அபத்தமானது.

2) அரசாங்கத்தின் தரப்பில் இருந்து ஆத்திரமூட்டல் ஏற்பட்டிருக்கும் போது ஒரு பொது வேலைநிறுத்தத்திற்கு அறைகூவுவது ஒரு போர்த்தந்திரத் தவறு ஆகும். ஏனெனில்

* ''லெவீ விவகாரம்.''—ப-ர்.

** *மார்ச் போராட்டம்.*—ப-ர்.

அரசாங்கம் கம்யூனிசத்தின் சிறு கோட்டையைப் போராட்டத்தில் இழுக்க விரும்பியது (மத்தியில் இருக்கும் இந்த மாவட்டத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்கெனவே பெரும்பான்மை இருந்தது).

3) வலதுசாரிகளின் சாமர்த்தியமான தந்திர உபாயங்களால் உள்நாட்டுப் போரில் 20,000 தொழிலாளர்கள் கொல்லப்பட்ட பிறகு, ஜெர்மனியின் நிலை தனிப்பட்டது என்ற அளவில், இதைப் போன்ற பிழைகள் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

4) நூறு ஆயிரக் கணக்கான தொழிலாளர்களின் தற்காப்புப் போராட்டத்தை (பிராண்ட்லர் பத்து லட்சம் என்கிறார். அவர் கூற்றுத் தவறல்லவா? அவர் மிகைப்படுத்துகிறார் அல்லவா? பிராந்தியங்கள், நகரங்கள் வாரியாக ஏன் புள்ளிவிவரங்கள் இல்லை???) ஒரு ''திடீர்ப்புரட்சி'' எனவும் ''பக்கூனின்வாதத் திடீர்ப்புரட்சி'' எனவும் அழைப்பது ஒரு பிழையை விடவும் மோசமான செயல், இது புரட்சிகரக் கட்டுப்பாட்டை மீறுவதாகும். லெவீ இதோடு சேர்த்து இன்னும் பல மீறல்களில் இறங்கியதால் (இவற்றை மிகவும் கவனமாயும் சரிநுட்பமாயும் பட்டியல் போட வேண்டும்) அவர் தண்டனைக்குத் தக்கவராகிறார், வெளியேற்றப்படுவதை வேண்டிப் பெறுகிறார்.

வெளியேற்றுவதன் காலவரை குறைந்தது ஆறு மாதம் என்ற அளவுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு அவர் கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்க அனுமதிக்கப்பட வேண்டும். அந்தக் காலப்பகுதியில் அவர் விசுவாசமுடன் செயல்படும் பட்சத்தில் அவர் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று கம்யூனிஸ்டு அகிலம் யோசனை கூறுகிறது.

பிராண்ட்லரின் பிரசுரம் தவிர வேறெதையும் நான் இன்னும் படிக்கவில்லை. இதை லெவீ மற்றும் பிராண்ட்லரின் பிரசுரங்களின் அடிப்படையில் மட்டுமே எழுதுகிறேன். பிராண்ட்லர் எதையாவது நிரூபித்துக் காட்டியிருப்பாரானால்—அவர், Märzaktion ''பக்கூனின்வாதத் திடீர்ப்புரட்சி'' அல்ல [இத்தகைய அவதூறு பாஷைக்காக லெவீ விலக்கப்பட

வேண்டும்], மாருக புரட்சிகரத் தொழிலாளர்களின், நூறு ஆயிரக் கணக்கான அவர்களின் வீரஞ்செறிந்த தற்காப்புப் போராட்டமே என்று ஒரு விஷயத்தை நிரூபித்துக் காட்டி விட்டார். ஆனல் இது எவ்வளவுதான் வீரஞ்செறிந்ததாயினும், ஆத்திரமூட்டல் மூலம் ஜனவரி 1919க்குப் பிறகு 20,000 தொழிலாளர்களை ஏற்கெனவே படுகொலை செய்து விட்டதான ஓர் அரசாங்கத்தால் ஆத்திரமூட்டப்பட்டு, நாடு முழுவதிலும், ஒரு சிறு மாவட்டத்தில் மட்டுமன்றி, கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவாகப் பெரும்பான்மை ஏற்படும் வரையில் இத்தகைய சவால்களை எதிர்காலத்தில் ஏற்கக் கூடாது.

((1917 ஜூலை நாட்களில் நடந்தது[17] பக்கூனின்வாதத் திடீர்ப்புரட்சி அல்ல. அத்தகைய ஒரு மதிப்பீடு செய்யும் நபரை நாம் கட்சியில் இருந்து விலக்கியிருப்போம். ஜூலை நாட்களில் நடந்தது ஒரு வீரஞ்செறிந்த எதிர்த்தாக்குதல். இதிலிருந்து நாம் பெற்ற முடிவு நாம் அடுத்த வீரஞ்செறிந்த எதிர்த்தாக்குதலை உரிய காலத்துக்கு முன் தொடுக்க மாட்டோம் என்பதே. ஒரு பொதுவான போராட்டத்தை உரிய காலத்துக்கு முன்பு ஒப்புக் கொள்வது இதுவே Märzaktionஇன் மெய்யான பொருள். திடீர்ப்புரட்சி அல்ல, மாருக ஒரு தவறு, நூறு ஆயிரம் பேர்களின் தற்காப்புப் போராட்டத்தின் வீரசாகசத்தால் கடுமை தணிக்கப்பட்ட ஒன்று.))

ஷ்மெரால் பற்றி. 2 அல்லது 3 ஆவணங்கள் எனக்குக் கிடைக்காதா?

கம்யூனிஸ்டு அகிலத்துக்காக ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் அச்சிடப்பட்ட குறைந்தது 2 ஆவணங்களாவது (ஒவ்வொன்றும் 2—4 பக்கங்கள்) அச்சிடுவது நல்லது.

ஷ்மெரால் பற்றிய மெய்விவரங்கள் என்ன? ஷ்ட்ரேசர் பற்றியோ?

ராதெக்கின் முதல் ஆய்வுரைகளில் இருந்து ''காத்திருக்கும் கட்சிக்கும்'' அதன் கண்டனத்துக்கும் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் நிச்சயமாய் அகற்றிவிடும் பிரதான விஷயத்தை மறந்து விட வேண்டாம். இவை எல்லாவற்றையும் அகற்றிவிட வேண்டும்.[18]

பல்கேரியா, செர்பியா (யூகோஸ்லாவியா?) மற்றும் செக்கோஸ்லோவாகியா சம்பந்தமாக, இந்த நாடுகள் பற்றிய கேள்வி ஸ்தூலமாகவும் தனிப்படவும் தெளிவாக வும் துல்லியமாகவும் முன்வைக்கப்பட வேண்டும்.

இதன் மீது நமது கருத்துக்கள் வேறுபட்டால், அரசியல் பியூரோவைக் கூட்டும்படி நான் ஆலோசனை கூறுகிறேன்.

ஜூன் *10, 1921.* லெனின்

நூல் திரட்டு, ஐந்தாவது ருஷ்யப் பதிப்பின் தொகுதி 52ல், 1965ல் முதலில் வெளியிடப்பட்டது	நூல் திரட்டு, தொகுதி 52, பக்கங்கள் 265-269

3

கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களை ஆதரித்து ஆற்றிய உரை

ஜூலை 1

தோழர்களே! நான் என்னை நானே தற்காப்புக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பது குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு.) நான் ஆழ்ந்த வருத்தம் தெரிவிப்பதாகக் கூறுகிறேன், காரணம் தோழர் டெராச்சினியின் உரையையும் மூன்று பிரதிநிதிக் குழுக்கள் கொண்டுவந்த திருத்தங்களையும் பற்றி அறிமுகம் செய்து கொண்ட பிறகு நான் வலிந்து தாக்குவதை மிகவும் விரும்புகிறேன். ஏனெனில், சரியாகக் கூறுமிடத்து டெராச் சினியும் இந்த மூன்று பிரதிநிதிக் குழுவினரும் தாங்கி ஆத ரித்த கருத்துக்களை எதிர்த்து வலிந்து தாக்கும் செயற்பாடு கள் அத்தியாவசியமானவை.[19] இத்தகையை தவறுகளுக்கு எதிராகவும் இத்தகைய ''இடதுசாரி'' அசட்டுத்தனங்களுக்கு எதிராகவும் இந்தக் காங்கிரஸ் ஓர் ஊக்கமான எதிர்த்தாக்கு தலைத் தொடுக்கப் போவதில்லை என்ருல் இயக்கம் முழுவதும்

அதோகதிக்கு ஆளாகிவிடும். இதுவே எனது ஆழமான திட நம்பிக்கை. ஆனால் நாம் அமைப்புத் திரட்சியுள்ள, கட்டுப் பாடுள்ள மார்க்சியவாதிகள் ஆவோம். தனிப்பட்ட தோழர் களுக்கு எதிரான பிரசங்கங்களுடன் நாம் திருப்திப்பட முடி யாது. இந்த இடதுசாரி தொடர்களால் ருஷ்யர்களான நாம் ஏற்கெனவே கசப்பும் சலிப்பும் அடைந்து விட்டோம். நாம் அமைப்பைச் சேர்ந்த நபர்கள் ஆவோம். நமது திட்டங்களை வகுக்கும் போது நாம் ஸ்தாபன முறையில் சென்று சரியான கொள்கை வழியைக் காண்பதற்கு முயல வேண்டும். நமது ஆய்வுரைகள் ஒரு சமரச ஏற்பாடே என்பதில் எவருக்கும் இரகசியம் எதுவும் இல்லை என்பது நிச்சயம். அதனால் என்ன? தமது மூன்றாவது காங்கிரசை ஏற்கெனவே ஏற்பாடு செய் துள்ளவர்களும், திட்டவட்டமான அடிப்படைக் கோட்பாடு களை ஏற்கெனவே வகுத்து விட்டவர்களுமான கம்யூனிஸ்டு களின் மத்தியில் ஒரு சில நிலைமைகளின் கீழ் சமரசங்கள் அவசியமே. ருஷ்யன் பிரதிநிதிக் குழுவால் முன்வைக்கப் பட்ட நமது ஆய்வுரைகள் மிகவும் கவனமாக ஆராய்ந்து தயாரிக்கப்பட்டவை, நீண்ட பல வாதப் பிரதிவாதங்கள் மற்றும் பல்வேறு பிரதிநிதிக் குழுக்களுடன் நடத்திய சந் திப்புகளின் விளைவுமாகும். அவை கம்யூனிஸ்டு அகிலத்தின் அடிப்படையான கொள்கை நிறுவப்படுவதை நோக்கமாகக் கொண்டவை, மற்றும் மெய்யான மையவாதிகளை நாம் சம்பிரதாயமாகக் கண்டனம் செய்தது மட்டுமன்றி அவர் களைக் கட்சியில் இருந்து விலக்கிவிட்ட பிறகு, இவை இப் போது விசேஷமாயும் அவசியமானவை. மெய்விவரங்கள் இத்தகையனவாகும். இந்த ஆய்வுரைகளை நான் ஆதரித்து நின்றாக வேண்டும். இப்போது டெராச்சினி முன்வந்து நாம் மையவாதிகளை எதிர்த்து தொடர்ந்து போராட வேண்டும் என்று சொல்லும் போது, இந்தப் போராட்டத்தை எவ் வாறு நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று மேலும் சொல்லும் போது, இந்தத் திருத்தங்கள் ஒரு திட்டவட்ட மான போக்கினைக் குறிக்கும் பட்சத்தில் இந்தப் போக்கை எதிர்த்து இரக்கமற்ற போராட்டம் அத்தியாவசியம் என்று நான் கூறுகிறேன். இல்லாவிட்டால் கம்யூனிசமும் இல்லை,

கம்யூனிஸ்டு அகிலமும் இல்லை. இந்தத் திருத்தங்களை ஜெர்மன் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சி ஒப்புக் கொண்டு கையெழுத்திடவில்லை என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. (சி ரி ப் பு.) உண்மையில், டெராச்சினி எதைத் தாங்கி ஆதரிக்கிருர் மற்றும் இந்தத் திருத்தங்கள் என்ன கூறுகின்றன என்பதைச் சற்றே கவனியுங்கள். அவை இவ்வாறு தொடங்குகின்றன: ''பக்கம் 1, பத்தி 1, வரி 19ல் 'பெரும்பான்மை' எனும் சொல் நீக்கப்பட வேண்டும்''. பெரும்பான்மை! அது மிகவும் அபாயகரமானது! (சி ரி ப் பு.) பிறகு மேலும் தொடர்கிறது: ''அடிப்படை முற்கோள்கள்'' என்ற சொற்களுக்குப் பதில் ''நோக்கங்கள்'' என்பதைப் புகுத்த வேண்டும். அடிப்படை முற்கோள்கள் மற்றும் நோக்கங்கள் என்பவை இரண்டு வேறுபட்ட விஷயங்கள்; ஏனெனில் அராஜகவாதிகளும் கூட நோக்கங்கள் பற்றி நம்முடன் உடன்படுவர், காரணம் அவர்களும் சுரண்டல் மற்றும் வர்க்க வேறுபாடுகள் ஒழிக்கப்படுவதை ஆதரிக்கிருர்கள்.

நான் எனது வாழ்நாளில் ஒரு சில அராஜகவாதிகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன், இருந்த போதிலும் அவர்களைப் போதியளவு கண்டறிந்து கொண்டிருக்கிறேன். நோக்கங்கள் குறித்து அவர்களுடன் உடன்பாட்டை எட்டுவதில் சில சமயங்களில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன், ஆனுல் கோட்பாடுகள் சம்பந்தமாக என்றுமே உடன்பாடு எட்டியதில்லை. கோட்பாடுகள் என்பவை ஒரு நோக்கமோ ஒரு வேலைத்திட்டமோ ஒரு போர்த்தந்திரமோ அல்லது ஒரு தத்துவமோ அல்ல. போர்த்தந்திரமும் தத்துவமும் கோட்பாடுகள் அல்ல. கோட்பாடுகள் மீது நாம் அராஜகவாதிகளிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிருேம்? பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதிலும் இடைமாற்ற கட்டத்தில் அரசுப் பலவந்தத்தைப் பயன்படுத்துவதிலும் அடங்கியுள்ளன கம்யூனிசக் கோட்பாடுகள். கம்யூனிசத்தின் கோட்பாடுகள் இத்தகையவை; ஆனுல் இவை அதன் நோக்கம் அல்ல. இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ள தோழர்கள் ஒரு பிழை செய்துள்ளனர்.

இரண்டாவதாக, அங்கு கூறப்பட்டிருக்கிறது: '' 'பெரும்

பான்மை’ எனும் சொல் நீக்கப்பட வேண்டும்’’. முழு வாசகத்தையும் படித்துப் பாருங்கள்:

‘‘பல நாடுகளில் எதார்த்தமான நிலைமை புரட்சிகர அர்த்தத்தில் உக்கிரமடைந்திருக்கும் போது, பல கம்யூனிஸ்டு வெகுஜனக் கட்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் போது, இவை தமது மெய்யான புரட்சிகரப் போராட்டத்தில் பெரும்பான்மை தொழிலாளி வர்க்கத்தின் நடைமுறைத் தலைமையினைத் தம் கரங்களில் எங்குமே எடுத்துக் கொண்டிராத சந்தர்ப்பத்தில்—இத்தகைய நிலைமைகளின் கீழ் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரஸ் போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினைகளை மறு சீராய்வு செய்வதற்கு ஒருங்கி முன்வந்துள்ளது.’’

எனவே அவர்கள் ‘‘பெரும்பான்மை’’ எனும் சொல்லை நீக்கிவிட விரும்புகிறுர்கள். இத்தகைய சாமான்ய காரியங்களில் நாம் உடன்பட முடியாவிட்டால் நாம் எப்படி சேர்ந்து செயல்பட்டு பாட்டாளி வர்க்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. பிறகு கோட்பாடுகள் பற்றிய பிரச்சினையிலும் கூட நாம் உடன்பாடு எட்ட முடியாது என்பதில் வியப்புக்கு இடமில்லை. பெரும்பான்மைத் தொழிலாளி வர்க்கத்தினரின் ஆதரவை ஏற்கெனவே பெற்றுவிட்ட கட்சியை எனக்குக் காட்டுங்கள். டெராச்சினி எந்தவொரு உதாரணத்தையும் எடுத்துச் சொல்வது பற்றி நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. உண்மையில் அத்தகைய உதாரணம் எதுவும் இல்லை.

எனவே ‘‘கோட்பாடுகள்’’ என்பதற்குப் பதிலாக ‘‘நோக்கங்கள்’’ எனும் சொல் புகுத்தப்பட வேண்டும்; ‘‘பெரும்பான்மை’’ எனும் சொல் நீக்கப்பட வேண்டும். இல்லை உங்களுக்கு நன்றி! நாங்கள் அதைச் செய்ய மாட்டோம். ஆகச் சிறந்த கட்சிகளில் ஒன்றுன ஜெர்மன் கட்சியிலும் கூட பெரும்பான்மை தொழிலாளி வர்க்கம் அதன் பின்னுல் இருக்கவில்லை. இது உண்மை. மிகவும் கடினமான போராட்டத்தை எதிர்கொள்ளும் நாம் இந்த உண்மையினை வெளியிடப் பயப்படவில்லை. ஆனுல் இங்கு ஒரு பொய்மையுடன்

துவங்க விரும்பும் மூன்று பிரதிநிதிக் குழுக்கள் இருக்கின்றன. ஏனெனில் இந்தக் காங்கிரஸ் ''பெரும்பான்மை'' எனும் சொல்லை நீக்கம் செய்யுமாஞல் அது ஒரு பொய்மையை விரும்பு கிறது என்பது வெளிப்படும். இது முற்றிலும் தெளிவானது.

பின்னர் வருகிறது பின்வரும் திருத்தம்: ''பக்கம் 4, பத்தி 1, வரி 10ல் 'பகிரங்கக் கடிதம்' இத்தியாதி சொற்கள் நீக்கம் செய்யப்பட வேண்டும்''. நான் இன்று ஏற்கெனவே ஓர் உரையைக் கேட்டு விட்டேன். அதில் இதே கருத்து இருக்கக் கண்டேன். ஆனுல் அங்கு இது முற்றிலும் இயல்பாக இருந்தது. அது, ஜெர்மன் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சி உறுப்பினர் தோழர் ஹெம்பெல் ஆற்றிய உரையாகும். அவர் கூறினுர்: '' 'பகிரங்கக் கடிதம்' ஒரு சந்தர்ப்பவாதச் செயல்''. இத்தகைய கருத்துக்களை நான் ஏற்கெனவே தனிப் பட்ட முறையில் கேட்டிருக்கிறேன்; இதனுல் மாபெரும் வருத்தமும் ஆழ்ந்த வெட்கமும் அடைகிறேன். ஆனுல் இத் தகைய நீண்ட விவாதத்திற்குப் பிறகு காங்கிரசில் இந்தப் ''பகிரங்கக் கடிதம்'' சந்தர்ப்பவாதத் தன்மையது என்று சாற்றப்படும் போது அது வெட்ககரமானது பழிப்புக்கிட மானது! இப்போது தோழர் டெராச்சினி மூன்று பிரதிநிதிக் குழுக்களின் சார்பில் முன்வந்து ''பகிரங்கக் கடிதம்'' எனும் சொற்களை நீக்கம் செய்ய வேண்டும் என்று விரும்புகிருர். ஜெர்மன் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிக்கு எதிரான போராட்டத்தால் இனிப் பயன் என்ன? ''பகிரங்கக் கடிதம்'' ஒரு முன்மாதிரி அரசியல் நடவடிக்கை. இது நமது ஆய் வுரைகளில் கூறப்பட்டுள்ளது. நாம் இதை நிச்சயமாயும் ஆதரித்து நிற்க வேண்டும். இது ஒரு முன்மாதிரி, காரணம் இது தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம் பக் கம் ஆதரவாக வென்று பெறுவதற்கான ஒரு காரிய சாத்திய மான முறையின் முதல் செயலாகும். ஏறத்தாழ எல்லாப் பாட்டாளிகளும் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்டுள்ள ஐரோப்பாவில் நாம் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான் மையின் ஆதரவை வென்று பெற வேண்டும். இதைப் புரிந்து கொள்ளத் தவறும் எவரும் கம்யூனிஸ்டு இயக்கத்துக்குப் பயனற்றவராவார். இந்த மகத்தான புரட்சியின் மூன்ருண்டு

களின் போது அந்த அளவுக்குக் கற்றுணரத் தவறும் ஒருவர் என்றுமே எதையுமே கற்றுணர மாட்டார்.

கட்சி மிகவும் சிறியதாக இருந்த போதிலும் ருஷ்யாவில் நாம் வெற்றிவாகை சூடினோம் என்று டெராச்சினி கூறுகிறார். ஆய்வுரைகளில் செக்கோஸ்லோவாகியா பற்றிச் சொல்லப் பட்டிருப்பது குறித்து அவர் அதிருப்தியடைந்துள்ளார். இங்கு இருபத்தேழு திருத்தங்கள் உள்ளன. அவற்றை விமர் சனம் செய்ய வேண்டும் என்று நான் கருதும் பட்சத்தில் நான் சில நாவலர்கள் போன்று மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல் பேச வேண்டும்.... செக்கோஸ்லோவாகியா வில் கம்யூனிஸ்டுக் கட்சியில் 3,00,000 முதல் 4,00,000 வரை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் எனவும், பெரும்பான் மையின் ஆதரவை வென்று பெறுவதும், வெல்லற்கரிய ஒரு படைபலத்தை உருவாக்குவதும், தொடர்ந்து புதிய தொழி லாளர் திரள்களை ஆதரவாகத் திரட்டுவதும் அத்தியாவசியம் எனவும் இங்கு நாம் சொல்லக் கேட்டோம். டெராச்சினி ஏற்கெனவே தாக்கத் தயாராக இருக்கிறார். அவர் கூறுகிறார்: கட்சியில் ஏற்கெனவே 4,00,000 தொழிலாளர்கள் இருப் பார்களானால் இன்னும் அதிகமாக வேண்டும் என்று நாம் ஏன் விரும்ப வேண்டும்? நீக்கம் செய்க! (சிரிப்பு.) அவர் ''மக்கள் திரள்'' எனும் சொல்லைக் கண்டு பயப்படுகிறார், அதைத் தொலைத்தொழித்துவிட விரும்புகிறார். ருஷ்யாவின் புரட்சி பற்றி தோழர் டெராச்சினி புரிந்து கொண்டிருப் பது மிகச் சொற்பமே.

ருஷ்யாவில் நாம் ஒரு சிறிய கட்சியாக இருந்தோம். ஆனால் நாடு முழுதிலுமுள்ள தொழிலாளர் மற்றும் விவசாயி கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களில் பெரும்பான்மை இதற்குக் கூடுதலாக நம் பக்கம் இருந்தன. (கூச்சல்: ''முற்றிலும் உண்மை!''.) உங்களிடம் இது போன்ற ஏதே னும் இருக்கிறதா? எங்களிடம் கிட்டத்தட்ட பாதி சைனியம் இருந்தது. அதின் எண்ணிக்கை அன்று குறைந்தது ஒரு கோடி யாகும். சைனியத்தில் பெரும்பான்மை மெய்யாகவே உங்கள் பின்னால் இருக்கிறதா? அத்தகைய ஒரு நாட்டை எனக்குக் காட்டுங்கள்! தோழர் டெராச்சினியின் இந்தக் கருத்துக்

களேயே இதர மூன்று பிரதிநிதிக் குழுக்களும் கொண்டிருக்கு மாளுல் பின்னர் அகிலத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்றுகும்! பின்னர் நாம் கூற வேண்டும்: ''நிறுத்துக! ஒரு நிர்ணயகரமான போராட்டம் வேண்டும்! இல்லாவிடில் கம் யூனிஸ்டு அகிலம் அழிந்து போய்விடும்.'' (ப ர ப ர ப் பு.)

நான் ஒரு தற்காப்பு நிலைவரம் மேற்கொண்ட போதிலும் (சி ரி ப் பு), எனது அனுபவத்தின் அடிப்படையில், எனது உரையின் கோட்பாடும் நோக்கமும் நமது பிரதிநிதிக் குழு முன்மொழிந்த தீர்மானம் மற்றும் ஆய்வுரைகளைத் தாங்கி ஆதரிப்பதாகவே இருக்கும் என்பதை நான் கூறிவிட வேண்டும். அவைகளில் ஓர் எழுத்தைக் கூட மாற்றக் கூடாது என்று சொல்வது புலமைப் பகட்டானது என்பது உண்மை. நான் பல தீர்மானங்களைப் படிக்க வேண்டி இருந்தது. அவற்றின் ஒவ்வொரு வரியிலும் மிகவும் நல்ல திருத்தங்களைப் புகுத்த முடியும் என்பதையும் நான் நன்முக அறிவேன். ஆனுல் அது புலமைப் பகட்டாகும். இருந்த போதிலும், இப்போது அர சியல் அர்த்தத்தில் ஓர் எழுத்துக் கூட மாற்றப்பட முடியாது என்று நான் சாற்றும் பட்சத்தில் இதற்குக் காரணம் எனது பார்வையில் இந்தத் திருத்தங்கள் முற்றிலும் திட்டவட்டமான அரசியல் தன்மையுடையவை. மற்றும், அவை கம்யூனிஸ்டு அகிலத்துக்குத் தீங்கு விளைப்பதும் ஆபத்தானதுமான ஒரு பாதையின் ஊடாக நம்மை இட்டுச் செல்கின்றன என்பதே. ஆகையால் இந்த ஆய்வுரைகளில் தனி ஓர் எழுத்துக் கூட மாற்றப்படக் கூடாது என்று நானும், நாம் எல்லோரும், ருஷ்யாவின் பிரதிநிதிக் குழுவும் வற்புறுத்த வேண்டும். நாம் நமது வலதுசாரி நபர்களைக் கண்டனம் செய்தது மட்டு மன்றி அவர்களை விலக்கியும் விட்டோம். ஆனுல் டெராச் சினி போன்று வலதுசாரிகளை எதிர்த்த போராட்டத்தைச் சிலர் ஒரு விளையாட்டாக மாற்றுவார்களாளுல் பின்னர் நாம் கூற வேண்டும்: ''நிறுத்துங்கள்! இல்லாவிட்டால் இந்த அபாயம் மிகவும் மோசமானதாகிவிடும்!''

தாக்குதல் போராட்டத் தத்துவத்தை[20] டெராச்சினி தாங்கி ஆதரித்துள்ளார். இதன் தொடர்பாக இந்த இக ழார்ந்த திருத்தங்கள் இரண்டு அல்லது மூன்று பக்கங்கள்

நீண்டதான ஒரு சூத்திரத்தைப் பிரேரேபிக்கின்றன. அவற்றைப் படிக்க வேண்டிய தேவை நமக்கு இல்லை. அவை என்ன கூறுகின்றன என்பதை நாம் அறிவோம். டெராச்சினி இந்தப் பிரச்சினையை முற்றும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். தாக்குதல் தத்துவத்தை அவர் தாங்கி ஆதரித்துள்ளார். ''இயக்காற்றல் போக்குகளையும்'' ''செயலின்மையில் இருந்து செயல்பாட்டுக்கு மாறிச் செல்வதையும்'' சுட்டிக் காட்டியிருக்கிறார். மையவாதிகளை எதிர்த்த போராட்டத்தில் ருஷ்யாவிலிருக்கும் நமக்கு ஏற்கெனவே போதிய அரசியல் அனுபவம் இருந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முந்திய காலத்திலேயே நாம் நமது சந்தர்ப்பவாதிகள் மற்றும் மையவாதிகளை எதிர்த்து, மென்ஷிவிக்குகளையும் எதிர்த்து போராட்டம் நடத்தியுள்ளோம்; நாம் மென்ஷிவிக்குகள் மீது மட்டுமன்றி அரை அராஜகவாதிகள் மீதும் வெற்றி பெற்றோம்.

இதை நாம் செய்திருக்காவிட்டால் நாம் மூன்றரை ஆண்டு காலத்திற்கு மட்டுமன்றி மூன்றரை வாரக் காலத்துக்கும் கூட நமது கரங்களில் ஆட்சி அதிகாரத்தை நீடித்து வைத்திருந்திருக்க முடியாது, இங்கு கம்யூனிஸ்டுக் காங்கிரசுகளை ஏற்பாடு செய்திருக்க முடியாது. ''இயக்காற்றல் போக்குகள்'' ''செயலின்மையில் இருந்து செயல்பாட்டுக்கு மாறிச் செல்வது'' இவை யாவும் நமக்கு எதிராக இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்[21] பயன்படுத்திய தொடர்களாகும். இப்போது அவர்கள் சிறையில் இருக்கிறார்கள்; அங்கே ''கம்யூனிசத்தின் நோக்கங்களைத்'' தாங்கி ஆதரித்துக் கொண்டும் ''செயலின்மையில் இருந்து செயற்பாட்டுக்கு மாறிச் செல்வது'' பற்றிச் சிந்தித்துக் கொண்டும் இருக்கிறார்கள். (சிரிப்பு.) பிரேரேபிக்கப்பட்ட திருத்தங்களில் அனுசரிக்கப்பட்டதான வாதமுறை அசாத்தியமான ஒன்று, காரணம் அவற்றில் மார்க்சியமோ அரசியல் அனுபவமோ வாதமுறையோ எதுவும் இல்லை. புரட்சிகரத் தாக்குதல் பற்றிய ஒரு பொதுத் தத்துவத்தை நாம் நமது ஆய்வுரைகளில் விரிவிளக்கம் செய்திருக்கிறோமா? ராதெக்கோ அல்லது நம்மில் யாரேனும் ஒருவரோ இத்தகைய அசட்டுத்தனம்

புரிந்திருக்கிருேமா? நாம் முற்றிலும் திட்டவட்டமான ஒரு நாடு சம்பந்தமாக, முற்றிலும் திட்டவட்டமான ஒரு கால கட்டத்தில் ஒரு தாக்குதல் தத்துவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளோம்.

மென்ஷிவிக்குகளை எதிர்த்த நமது போராட்டத்தில் இருந்து, முதலாவது புரட்சிக்கு முன்பே கூட புரட்சிகரக் கட்சி ஒரு தாக்குதலை நடத்த வேண்டுமா என்று சிலர் சந்தேகித்தார்கள் என்பதைக் காட்டும் சான்று நிகழ்ச்சிகளை நாம் மேற்கோள் காட்ட முடியும். அத்தகைய சந்தேகங்கள் ஏதேனும் ஒரு சமூக-ஜனநாயகவாதியை—அந்தக் காலத்தில் நாம் அனைவரும் அப்படித்தான் அழைத்துக் கொண்டோம்—தாக்குமானுல் நாம் அவருக்கு எதிராகப் போராட்டம் மேற்கொண்டு அவர் ஒரு சந்தர்ப்பவாதி எனவும் அவர் மார்க்சியம் பற்றியோ புரட்சிகரக் கட்சியின் இயக்கவியல் பற்றியோ எதையுமே புரிந்து கொள்ளாதவர் எனவும் கூறினேம். ஒரு புரட்சிகரத் தாக்குதல் பொதுவாக அனுமதிக்கத் தக்கதா என்று எதிர்த்துக் கேட்பது ஒரு கட்சிக்கு உண்மையில் சாத்தியமா? நமது நாட்டில் இத்தகைய உதாரணங்களைக் காண வேண்டுமானுல் ஒருவர் பதினைந்து ஆண்டுகள் பின்னுல் செல்ல வேண்டும். தாக்குதல் தத்துவத்தை எதிர்த்துக் கேட்கும் மையவாதியோ வேறு வேடமிட்ட மையவாதியோ இருப்பாரானுல் அவர் உடனே விலக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையில் கேள்விக்கே இடமில்லை. ஆனுல் கம்யூனிஸ்டு அகிலம் நிறுவி மூன்ருண்டுகளுக்குப் பிறகு இப்போதும் கூட நாம் ''இயக்காற்றல் போக்குகள்'' குறித்தும் ''செயலின்மையில் இருந்து செயல்பாட்டுக்கு மாறிச் செல்வது'' பற்றியும் வாதம் செய்து வருகிருேம் என்ருல் அது வெட்கக்கேடானது, இகழ்ச்சிக்குரியது.

நம்முடன் கூட்டாகச் சேர்ந்து இந்த ஆய்வுரைகளைத் தயாரித்த தோழர் ராதெக்குடன் இதைப் பற்றி நமக்கு எவ்விதத் தகராறும் இல்லை. உள்ளபடியே தாக்குதலுக்குத் தயாரிப்பு செய்யப்படாத போது, ஜெர்மனியில் புரட்சிகரத் தாக்குதல் தத்துவம் பற்றிப் பேசத் துவங்குவது அவ்வளவு சரியானது அல்ல என்று கருதப்படலாம். இருந்த போதிலும்,

மார்ச் போராட்டம் அதன் தலைவர்களின் பிழைகள் இருந்தாலும்கூட ஒரு மாபெரும் முன்னேற்றப் படியாகும். ஆனல் இது ஒரு பொருட்டல்ல. நூருயிரக் கணக்கான தொழிலாளர்கள் வீரத்துடன் போராடினர். முதலாளி வர்க்கத்தை எதிர்த்து ஜெர்மன் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சி எவ்வளவு தீரமாகப் போராடிய போதிலும் ஹேல்ட்ஸ் பற்றிய ஒரு ருஷ்யக் கட்டுரையில் தோழர் ராதெக் கூறியதை நாம் மீண்டும் எடுத்துக் கூற வேண்டும். எவரேனும் ஓர் அராஜகவாதி கூட முதலாளி வர்க்கத்தை எதிர்த்து வீரத்துடன் போராடினல் அது ஒரு மாபெரும் நடப்பே; ஆனல் சோஷலிஸ்டு-துரோகிகளின் வன்மமான ஆத்திரமூட்டலுக்கு எதிராகவும் முதலாளித்துவத்துக்கு எதிராகவும் நூருயிரக் கணக்கான மக்கள் போராடும் போது அது உண்மையிலேயே ஒரு முன்னேற்றப் படி ஆகும்.

சொந்த பிழைகளைப் பற்றிக் கண்டிக்கும் பான்மை மிகவும் முக்கியமானது. அதோடு நாம் துவங்கினேம். நூருயிரக் கணக்கான மக்கள் பங்கேற்றதான ஒரு போராட்டத்திற்குப் பிறகு, எவரேனும் இந்தப் போராட்டத்திற்கு எதிராக முன் வந்து லெவீயைப் போன்று நடந்து கொள்வாரானல் அவர் கட்டாயம் விலக்கப்பட வேண்டும். அதுவே செய்யப்பட்டது. ஆனல் இதில் இருந்து நாம் ஒரு படிப்பினை பெற வேண்டும்: நாம் உண்மையிலேயே தாக்குதலுக்குத் தயார் செய்திருந்தோமா? (ராதெக்: ''நாம் தற்காப்புக்குக் கூட தயார் செய்திருக்கவில்லை''.) ஆமாம், செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள் மட்டுமே தாக்குதல் பற்றிக் கூறின என்பது உண்மை. இந்தத் தத்துவம், 1921ல் ஜெர்மனியில் நடைபெற்ற மார்ச் போராட்டத்திற்குப் பிரயோகிக்கப்பட்ட விதத்தில், சரியானது அல்ல—இதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்; ஆனல் பொதுவாக புரட்சிகரத் தாக்குதல் தத்துவம் முற்றிலும் தப்பானதல்ல.

நாம் ருஷ்யாவில் அந்தளவுக்குச் சுலபமாக வெற்றியடைந்தோம் காரணம் நாம் ஏகாதிபத்தியப் போரின் சமயம் தொடர்ந்து நமது புரட்சிக்குத் தயார் செய்தோம். அதுவே முதல் நிபந்தனை. நமது நாட்டில் ஒரு கோடி தொழிலாளர்

களும் விவசாயிகளும் ஆயுதபாணிகள் ஆக்கப்பட்டார்கள். நமது கோஷம்: எப்பாடுபட்டும் உடனடி சமாதானம் என்பதாக இருந்தது. நாம் வெற்றியடைந்ததற்குக் காரணம் விவசாயிகளில் மிகப் பெரும் திரளினர் பெரிய நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் புரட்சிகரமான தோரணையைக் கையாண்டார்கள். 1917 நவம்பரில் இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்களின் ஆதரவாளர்களான சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஒரு பெரிய விவசாயிகள் கட்சியாக இருந்தனர். அவர்கள் புரட்சிகர முறைகளைக் கோரினர்கள், ஆனல் இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்களின் மெய்யான வீரர்களைப் போல புரட்சிகரமான வழியில் செயல் புரியும் போதுமான துணிவின்றி இருந்தார்கள். 1917 ஆகஸ்டு மற்றும் செப்டம்பரில் நாம் கூறினேம்: ''தத்துவார்த்த முறையில் நாம் முன்போலவே சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை எதிர்த்துப் போராடி வருகிருேம்; ஆனல் நடைமுறையில் நாம் அவர்களது வேலைத்திட்டத்தை ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிருேம், காரணம் நம்மால் மட்டுமே இந்த வேலைத்திட்டத்தை அமுல் நடத்த முடியும்.'' நாம் சொன்னதையே செய்தோம். 1917 நவம்பரில் நமது வெற்றிக்குப் பிறகு நம்மிடம் சுமுகமாக நடந்து கொள்ளாதவர்களும், அரசியல் நிர்ணயச் சபைக்குப் பெரும்பான்மையாக சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை அனுப்பி வைத்தவர்களுமான விவசாயிகளை[22] நாம் நம் பக்கமாக வென்று பெற முடிந்தது; நான் தவருக எதிர்பார்த்து முன்னறிவித்தது போல ஒரு சில நாட்களுக்குள் அல்ல என்ற போதிலும் எப்படியும் ஒரு சில வாரங்களுக்குள் இவ்வாறு செய்ய முடிந்தது. இந்த வித்தியாசம் பெரிதல்ல. ஒரு சில வாரங்களுக்குள் விவசாயிகளின் பெரும்பான்மையைத் தம் பக்கம் வென்று பெற முடிந்த ஐரோப்பிய நாடு எதையேனும் நீங்கள் காட்ட முடியுமா? ஒருவேளை இத்தாலி? (சிரிப்பு.) நாம் ஒரு பெரிய கட்சியைக் கொண்டிருக்கவில்லை என்ருலும் கூட ருஷ்யாவில் நாம் வெற்றியடைந்தோம் என்று சொன்னல், அது இவ்வாறு கூறுவோர் ருஷ்யப் புரட்சியைப் புரிந்து கொள்ளவில்லை என்பதையும் ஒரு புரட்சிக்கு எவ்வாறு தயார் செய்

வது என்பது பற்றி அவர்களுக்கு அறவே எவ்வித அறிவும் இல்லை என்பதையுமே நிரூபிக்கிறது.

நாம் யாரிடம் பேசுகிறோம், நாம் யாரைப் பூரணமாக நம்ப முடியும் என்பதை அறிந்து கொள்வதற்கு ஓர் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்குவதே நமது முதல் நடவடிக்கையாக இருந்தது. முதலாவது மற்றும் இரண்டாவது காங்கிரசுகளின் கோஷம் ''மையவாதிகள் ஒழிக!'' என்பதாகும். ருஷ்யாவில் நாம் மென்ஷிவிக்குகள் எனக் குறிப்பிடும் மையவாதிகள் மற்றும் அரை மையவாதிகளை இடைவிடாமலும் உலகம் முழுவதிலும் தீர்த்துக் கட்டாவிட்டால் கம்யூனிசத்தின் அரிச்சுவடியைக் கூட கற்றுக் கரை காண்பதை நாம் எதிர்பார்க்க முடியாது. நமது முதல் கடமை உண்மையான ஒரு புரட்சிகரக் கட்சியைப் படைத்துருவாக்குவதும் மென்ஷிவிக்குகளுடன் முறித்துக் கொள்வதுமாகும். ஆனால் அது ஒரு துவக்கப் பள்ளி மட்டுமே. நாம் ஏற்கெனவே மூன்றாவது காங்கிரசை ஏற்பாடு செய்து வருகிறோம்; ஆனால் தோழர் டெராச்சினி, துவக்கப் பள்ளியின் பணி மையவாதிகள் மற்றும் அரை மையவாதிகளைத் துரத்திப் பிடித்தும் பின்தொடர்ந்தும் அம்பலப்படுத்துவதும் ஆகும் என்று முன்போலவே சொல்லிக் கொண்டே இருக்கிறார். இல்லை உங்களுக்கு நன்றி! இதைப் போதியளவு நீண்ட காலம் ஏற்கெனவே நாம் செய்துள்ளோம். இரண்டாவது காங்கிரசில் மையவாதிகள் நமது விரோதிகள் என்று ஏற்கெனவே கூறினோம். ஆனால் நாம் உண்மையில் முன்னேறிச் செல்ல வேண்டும். ஒரு கட்சியாக ஒழுங்கமைந்த பிறகு இரண்டாவது கட்டம் புரட்சிக்குத் தயார் செய்யக் கற்றுக் கொள்வதாகும். பல நாடுகளில் நாம் தலைமையை மேற்கொள்வது எப்படி என்பதைக் கூட நாம் இன்னும் கற்றுத் தெரிந்து கொள்ளவில்லை. நாம் ருஷ்யாவில் வெற்றியடைந்ததற்குக் காரணம், தொழிலாளி வர்க்கத்தின் மறுக்க முடியாத பெரும்பான்மை நமது பக்கம் இருந்தது மட்டுமல்ல (1917 தேர்தல்களில் மிகப் பெரும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் மென்ஷிவிக்குகளுக்கு எதிராக நமது பக்கம் இருந்தார்கள்) அதோடு கூட நாம் ஆட்சி அதிகாரத்தைக்

கைப்பற்றிய பிறகு உடனடியாகப் பாதி சைனியமும், ஒரு சில வாரங்களில் விவசாயிகளில் பத்தில் ஒன்பது பகுதியினரும் நம் பக்கம் ஆதரவாக வந்தார்கள்; நாம் நிலம் பற்றிய நமது சொந்த வேலைத்திட்டத்துக்குப் பதில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் நிலம் பற்றிய வேலைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதை நடைமுறையில் செயல்படுத்தியதன் காரணமாக நாம் வெற்றியடைந்தோம். நாம் சோஷலிஸ்டு-புரட்சியாளர் வேலைத்திட்டத்தினை நிறைவேற்றி முடித்தோம் என்ற மெய்நடப்பில்தான் நமது வெற்றி காணக்கிடக்கிறது; இதனுல் தான் இந்த வெற்றி இவ்வளவு எளிதாக இருந்தது. மேலை நாடுகளில் இருக்கும் நீங்கள் இத்தகைய பிரமைகளைக் கொண்டிருப்பது சாத்தியமா?இது கேலிக்கிடமானது! பிரேரேபிக்கப் போகும் திருத்தங்களில் கையொப்பமிட்டுள்ள தோழர் டெராச்சினியும் மற்றும் நீங்கள் எல்லோரும் ஸ்தூலமான பொருளாதார நிலைமைகளை ஒப்பு நோக்கிப் பாருங்கள்! பெரும்பான்மை இவ்வளவு விரைவாக நமது பக்கம் வந்தது மெய்யே என்ற போதிலும் நமது வெற்றிக்குப் பிறகு நம்மை எதிரிட்ட இடர்ப்பாடுகள் மிகப் பெரியவை. இருப்பினும் நாம் வெற்றி பெற்ருேம்; காரணம் நாம் நமது நோக்கங்களை மட்டுமன்றி நமது கோட்பாடுகளையும் மனதில் கொண்டிருந்தோம்; மேலும் கோட்பாடுகள் பற்றி மௌனம் பூண்டு ஆனுல் நோக்கங்கள் பற்றியும் ''இயக்காற்றல் போக்குகள்'' மற்றும் ''செயலின்மையில் இருந்து செயல்பாட்டுக்கு மாறிச் செல்வது'' பற்றியும் பேசியவர்களை நமது கட்சிக்குள் நாம் அனுமதிக்கவில்லை. இத்தகைய கனவான்களைச் சிறையில் வைப்பது நல்லது என்று கருதியதற்காக ஒருவேளை நம் மீது பழி சாட்டப்படலாம். ஆனுல் வேறு எந்த ஒரு வழியிலும் சர்வாதிகாரம் சாத்தியம் அல்ல. நாம் சர்வாதிகாரத்துக்குத் தயார் செய்ய வேண்டும். இது இத்தகைய தொடர்கள் மற்றும் திருத்தங்களை எதிர்த்துப் போராடுவதாகும். (சி ரி ப் பு.) நெடுகிலும் நமது ஆய்வுரைகள் மக்கள் திரளினர் பற்றிப் பேசுகின்றன. ஆனுல் தோழர்களே மக்கள் திரளினர் என்பதன் பொருள் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஜெர்மன் கம்யூனிஸ்டு தொழிலாளர்

கட்சியினர், இடதுசாரித் தோழர்கள் இந்தச் சொல்லைத் தவருகப் பயன்படுத்துகிருர்கள். ஆனல் தோழர் டெராச்சினியும் மற்றும் இந்தத் திருத்தங்களில் கையொப்பமிட்டுள்ள எல்லோரும் கூட ''மக்கள் திரளினர்'' எனும் சொல்லை எப்படிப் படித்தறிய வேண்டும் என்பதை அறியவில்லை.

ஒருவிதத்தில் நான் மிகவும் நீண்ட நேரம் பேசி விட்டேன் என்று தோன்றுகிறது. எனவே ''மக்கள் திரளினர்'' எனும் கருத்துரு பற்றி ஒரு சில வார்த்தைகள் மட்டுமே கூற விரும்புகிறேன். இது போராட்டத்தின் தன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப மாற்றமடையும் ஒன்ருகும். போராட்டத்தின் துவக்கத்தில் மக்கள் திரளினர் பற்றிப் பேச உண்மையான புரட்சிகரத் தொழிலாளர் சில ஆயிரம் பேர் மட்டுமே போதும். போராட்டத்தின் அகத்தே கட்சியானது தனது சொந்த உறுப்பினர்களை ஈர்ப்பதோடு மட்டுமன்றி கட்சி சார்பற்ற மக்களையும் எழுச்சியுறச் செய்வதில் வெற்றி பெற முடியுமானல் மக்கள் திரளினரைத் தன் பக்கம் வென்று பெறும் பாதையில் அது முதல் படி என்பதாகும். நமது புரட்சிகளின் போது சில ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் மக்கள் திரளினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல சான்று நிகழ்ச்சிகள் இருந்தன. நமது இயக்கம் மற்றும் மென்ஷிவிக்குகளை எதிர்த்த நமது போராட்டத்தின் வரலாற்றில் ஒரு நகரில் இயக்கத்துக்குத் தெட்டத்தெளிவான வெகுஜனத் தன்மையைக் கொடுக்கப் போதுமான சில ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இருந்ததன் பல உதாரணங்களைக் காணலாம். வழக்கமாயும் ஓர் அற்பவாதி வாழ்க்கை வாழ்ந்து, ஓர் அவலமான வாழ்வில் இழுபட்டோரும், அரசியல் பற்றி என்றுமே எதுவுமே கேள்விப்பட்டிராதவருமான சில ஆயிரக் கணக்கான கட்சி சார்பற்ற தொழிலாளர்கள் ஒரு புரட்சிகரமான வழியில் செயல்படத் தொடங்கும் போது மக்கள் திரளினரைப் பெறுவோம். இந்த இயக்கம் பரவி தீவிரமடையுமானல் அது படிப்படியாக ஒரு மெய்யான புரட்சியாக வளர்கிறது. இதை நாம் 1905லும் 1917லும் மூன்று புரட்சிகளின் போது[23] கண்டோம். நீங்களும் இதைப் புரிந்து தீர வேண்டும். புரட்சிக்குப் போதுமான

தயாரிப்புகள் செய்யப்படும் பொழுது ''மக்கள் திரளினர்'' என்ற கருத்துரு வேருக மாறுகிறது: சில ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இனிமேல் மக்கள் திரளினர் ஆக முடியாது. இந்தச் சொல் வேறு எதையோ சுட்டிக்காட்டத் தொடங்குகிறது. மக்கள் திரளினர் எனும் கருத்துரு மாற்றம் அடைகிறது. இதன் விளைவாக அது பெரும்பான்மையை, தொழிலாளர்களின் ஒரு பெரும்பான்மையை மட்டுமல்ல, மாருக சுரண்டப்படுவோர் அனைவரின் பெரும்பான்மையைக் குறிக்கிறது. வேறு எந்த ஒரு வகையான வியாக்யானமும் ஒரு புரட்சியாளருக்கு அனுமதிக்கப்படத்தக்கதல்ல. இந்தச் சொல்லின் வேறு எந்த ஓர் அர்த்தமும் புரிந்து கொள்ள முடியாதது. ஒரு சிறு கட்சியும் கூட —உதாரணமாக, பிரிட்டிஷ் அல்லது அமெரிக்கன் கட்சி—அது அரசியல் வளர்ச்சியின் போக்கைத் தீர்க்கமாக ஆராய்ந்து கட்சி சார்பற்ற மக்கள் திரளினரின் வாழ்க்கை மற்றும் வழக்கங்களைப் பற்றி அறிந்து கொண்ட பிறகு ஒரு சாதகமான தருணத்தில் ஒரு புரட்சிகர இயக்கத்தைத் தூண்டி உருவாக்குவது சாத்தியம் (இதற்கு ஒரு நல்ல உதாரணம் என்ற முறையில் தோழர் ராதெக் சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தைச்[24] சுட்டிக்காட்டியுள்ளார்). இத்தகைய ஒரு தருணத்தில் இத்தகைய ஒரு கட்சி தனது கோஷங்களுடன் முன்வந்து, லட்சக் கணக்கான தொழிலாளர்கள் அதைப் பின்பற்றும்படிச் செய்வதில் வெற்றியடையுமானல் ஒரு வெகுஜன இயக்கத்தைப் பெறலாம். மிகச் சிறிய ஒரு கட்சியால் ஒரு புரட்சி துவங்கப்பட்டு வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியும் என்பதை நான் முற்ருக மறுக்க மாட்டேன். ஆனல் மக்கள் திரளினரைத் தம் பக்கம் வென்று பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த ஞானத்தைப் பெற்றிருக்க வேண்டும். இதற்குப் புரட்சிக்கான நிறைமுழுமையான தயாரிப்புகள் அத்தியாவசியமாகும். ''பெரியளவில்'' மக்கள் திரளினரை எதிர்பார்க்கும் கோரிக்கையை நாம் உடனே கைவிட வேண்டும் எனும் வன்கூற்றுடன் முன்வரும் தோழர்கள் இருக்கிருர்கள். அவர்கள் கூற்றை மறுத்துரைக்க வேண்டும். நிறைமுழுமையான தயாரிப்புகள் இல்லாமல் எந்த ஒரு நாட்டிலும் நீங்கள்

வெற்றியை அடைய முடியாது. முற்றும் சிறியதான ஒரு கட்சியே மக்கள் திரளினரைத் தலைமை தாங்கி நடத்தப் போதுமானது. சில சமயங்களில் பெரிய அமைப்புகள் தேவையில்லை.

ஆனால் வெற்றி பெறுவதற்கு மக்கள் திரளினரின் அனுதாபம் நமக்கு நிச்சயம் வேண்டும். முற்ற முழுப் பெரும்பான்மை எப்போதும் இன்றியமையாதது என்பதில்லை. ஆனால் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்று அதை நீடித்து வைத்திருப்பதற்கு அத்தியாவசியமாக இருப்பது தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை மட்டுமல்ல—இங்கு ''தொழிலாளி வர்க்கம்'' என்ற சொல்லை அதன் மேற்கு ஐரோப்பிய அர்த்தத்தில், அதாவது தொழில் துறைப் பாட்டாளி வர்க்கம் என்ற அர்த்தத்தில், பயன்படுத்துகிறேன்—உழைக்கும், சுரண்டப்படும் நாட்டுப்புற மக்கள் தொகையின் பெரும்பான்மையும் ஆகும். இதைப் பற்றி நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா? டெராச்சினியின் உரையில் இந்தச் சிந்தனையின் பாலான ஒரு ஜாடையாவது காணப்படுகிறதா? அவர் ''இயக்காற்றல் போக்கு'' மற்றும் ''செயலின்மையில் இருந்து செயல்பாட்டுக்கு மாறிச் செல்வது'' குறித்து மட்டுமே பேசுகிறார். உணவுப் பிரச்சினை பற்றி ஒரு வார்த்தையாவது சொல்கிறாரா? இருப்பினும், ருஷ்யாவில் நாம் ஏற்கெனவே கண்டபடி தொழிலாளர்கள் பெருமளவு கஷ்டத்தை ஏற்று பட்டினி கிடக்க முடியும் என்றாலுங்கூட அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வேண்டும். ஆகவே நாம் நமக்கு ஆதரவாக தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை மட்டுமன்றி நாட்டுப்புற மக்கள் தொகையின் உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் பெரும்பான்மையையும் கூட வென்று பெற வேண்டும். இதற்கு நீங்கள் தயார் செய்திருக்கிறீர்களா? கிட்டத்தட்ட எங்குமே இல்லை.

எனவே நான் மீண்டும் கூறுகிறேன்: நான் நமது ஆய்வுரைகளை மட்டுமழுப்பல் இன்றி கட்டாயம் தாங்கி ஆதரிக்க வேண்டும். இதைச் செய்வது எனது கடப்பாடு என்று நான் உணர்கிறேன். நாம் மையவாதிகளைக் கண்டனம் செய்தது மட்டுமல்ல அவர்களைக் கட்சியில் இருந்து விலக்கினோம்.

நாம் இப்போது இன்னெரு அம்சத்தை எடுத்துக் கவனிக்க வேண்டும். இதுவும் அபாயகரமானது என்று கருதுகிருேம். யாரும் அவமதிக்கப்பட்டதாக எண்ணுவதற்கு இடமின்றி நாம் தோழர்களிடம் மெய்நடப்பை மிகவும் பண்பட்டதான வடிவில் எடுத்துச் சொல்ல வேண்டும் (நமது ஆய்வுரைகளில் இது மிகவும் அன்பும் ஆதரவுமான வழியில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது): இப்போது நாம் மையவாதிகளை எதிர்த்த தாக்குதல்களை விடவும் அதிக முக்கியமான இதர பிரச்சினைகளை எதிர்ப்படுகிருேம். இந்த விஷயம் போதும் போதுமென்ருகி விட்டது. இது ஏற்கெனவே சற்று சலிப்புத் தருவதாகிவிட்டது. இதற்குப் பதில் தோழர்கள் ஒரு மெய்யான புரட்சிகரப் போராட்டத்தை நடத்தக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். ஜெர்மன் தொழிலாளர்கள் இதை ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள். அந்த நாட்டில் நூருயிரக் கணக்கான பாட்டாளிகள் வீரமாகப் போராடி வருகிருர்கள். இந்தப் போராட்டத்தை எதிர்க்கும் எவரும் உடனே விலக்கப்பட வேண்டும். ஆனுல் அதற்குப் பிற்பாடு நாம் வெற்றுச் சொல் புனேவில் இறங்கக் கூடாது. மாருக செய்யப்பட்ட பிழைகளின் அடிப்படையில் இந்தப் போராட்டத்தை மேலும் சிறப்பாக ஒழுங்கமைப்பது எப்படி என்பதை உடனே கற்றுணரத் தொடங்க வேண்டும். நமது பிழைகளை எதிரிகளிடமிருந்து நாம் மறைக்கக் கூடாது. இதைப் பற்றி அஞ்சுபவர் எவரும் புரட்சியாளர் அல்ல. நேர் மாருக ''ஆமாம், நாங்கள் பிழைகள் செய்திருக்கிருேம்'' என்று நாம் தொழிலாளர்களிடம் பகிரங்கமாகக் கூறவோமானுல் அதன் பொருள் இவை மீண்டும் செய்யப்பட மாட்டா என்பதும் நாம் தக்க தருணத்தை மேலும் நல்ல முறையில் தேர்ந்து கொள்ள முடியும் என்பதுமாகும். போராட்டத்தின் போதே பெரும்பான்மை உழைக்கும் மக்கள் நம் பக்கம் இருப்பது—தொழிலாளர்களின் பெரும்பான்மை மட்டுமல்ல சுரண்டப்படும், ஒடுக்கப்படும் எல்லோரின் பெரும்பான்மை நம் பக்கம் இருப்பது—நிருபணமாஞல் பின்னர் நாம் மெய்

யாகவே வெற்றிவாகை சூடுவது திண்ணம். (நீடித்த ஆரவாரமான கரவொலி.)

கம்யூனிஸ்டு அகிலத்தின்
மூன்றுவது காங்கிரஸ்
செய்தி வெளியீடு, இதழ் 11ல்,
ஜூலை 8, 1921ல்
வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 23-33

அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டு விழா

அக்டோபர் 25இன் (நவம்பர் 7) நான்காவது ஆண்டு விழா நெருங்கி வருகிறது.

அம்மாபெரும் நாள் நம்மிடமிருந்து எவ்வளவுக்கு எவ்வளவு தொலைவில் செல்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் நாம் ருஷ்யாவில் நடைபெற்ற பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முக்கியத்துவத்தைத் தெளிவாகக் கண்ணுறுகிறோம்; அவ்வளவுக்கு அவ்வளவு ஆழமாய் நமது ஒட்டுமொத்தப் பணியின் நடைமுறை அனுபவம் குறித்துச் சிந்தித்துப் பார்க்கிறோம்.

மிகவும் சுருக்கமாய், சிறிதும் நிறைவு பெறாத பெரும் போக்கான உருவரையில், இந்த முக்கியத்துவத்தையும் அனுபவத்தையும் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சியின் நேரடியான உடனடிக் குறிக்கோள் முதலாளித்துவ-ஜனநாயகக் குறிக்கோள் தான்: அதாவது மத்திய கால முறைமையின் மீதமிச்சங்களை அழித்து அவற்றை அறவே துடைத்தெறிவதும், இந்தக் காட்டுமிராண்டித் தனத்தை, இந்த அவக்கேட்டை ருஷ்யாவிடமிருந்து களைந்தெறிவதும், நமது நாட்டில் அனைத்துக் கலாசாரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் பிரம்மாண்டத் தடையாய் அமைந்த இதனை அகற்றிடுவதும்தான்.

நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு அதிகமான காலத்துக்கு முன்பு நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும் அதிக வைராக்கியத்தோடும், மிக விரைவாகவும் துணிவாகவும் வெற்றிகரமாகவும், மற்றும் பெருந்திரள்

மக்களிடத்தே ஏற்பட்ட பலனைக் கொண்டு பார்க்கையில் பன்மடங்கு விரிவாகவும் ஆழமாகவும் இந்தக் கடமையெடுப்பினை நடத்தினேமென நாம் நியாயமாகவே பெருமை கொள்ளலாம்.

சோஷலிஸ்டு (அதாவது பாட்டாளி வர்க்கப்) புரட்சியிடம் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குள்ள உறவு குறித்து அராஜகவாதிகளும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் (அதாவது, மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்—இவர்களே அந்தச் சர்வதேச சமூக வகையினரது ருஷ்யப் பிரதிநிதிகள்) நம்ப முடியாத அளவுக்கு அபத்தம் பேசி வந்துள்ளனர், இனியும் தொடர்ந்து பேசி வருகின்றனர். இந்த விவகாரத்தில் மார்க்சிய ஆய்வு குறித்து நாங்கள் அளித்த விளக்கமும், முந்திய புரட்சிகளது அனுபவம் குறித்து நாம் செய்த மதிப்பீடும் பிழையற்றவை என்பதைக் கடந்த நான்கு ஆண்டுகள் முழு அளவுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கின்றன. முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை இதன் முன் வேறு யாருமே செய்திராதபடி நாம் நிறைவு பெறச் செய்துள்ளோம். சோஷலிசப் புரட்சியை நோக்கி நாம் உணர்வு பூர்வமாகவும் உறுதியாகவும் இம்மியும் பிறழாமலும் முன்னேறிச் செல்கிறோம். இப்புரட்சி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியிலிருந்து எந்தச் சீனமதிலாலும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது நமக்குத் தெரியும்; நாம் எவ்வளவு தூரம் முன்னேறுவோம், இந்தப் பிரம்மாண்டமான, மகத்தான பணியில் எப்பகுதியை நாம் சித்தி பெறச் செய்வோம், நமது வெற்றிகளைத் திண்மை பெறச் செய்வதில் எந்த அளவுக்கு வெற்றியடைவோம் என்பது (இறுதியாகப் பார்க்குமிடத்து) போராட்டத்தால் மட்டுமே நிர்ணயிக்கப்படும் என்பதும் நமக்குத் தெரியும். காலம் இதனைத் தெளிவுபடுத்தும். ஆயினும், சமுதாயத்தைச் சோஷலிசத் திசையிலே மாற்றியமைத்திடுவதில் ஏற்கெனவே பிரம்மாண்ட அளவில்—அழிவுற்று, பலமிழந்து ஓய்ந்து போயுள்ள இந்தப் பிற்பட்ட நாட்டுக்கு இது பிரம்மாண்ட அளவுதான்—சாதிக்கப் பெற்றுள்ளதை இப்போதே காண்கிறோம்.

ஆனல் நமது புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயக உள்ளடக்கம் குறித்துச் சொல்லி முடிப்போம். மார்க்சியவாதிகள் இதன் பொருளைப் புரிந்து கொண்டாக வேண்டும். இதை விளக்கும் பொருட்டு, பளிச்சென தெரியும் சில உதாரணங்களை எடுத்துக் கொள்வோம்.

புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயக உள்ளடக்கம் என்பது, நாட்டின் சமூக உறவுகளிலிருந்து (அமைப்பு, நிறுவன ஏற்பாடுகளிலிருந்து) மத்திய கால வாழ்வினை, பண்ணையடிமை முறையை, நிலப்பிரபுத்துவத்தைக் களைந்து அகற்றுவதைக் குறிப்பதாகும்.

ருஷ்யாவில் 1917 வரை பண்ணையடிமை முறையின் பிரதான வெளிப்பாடுகளாகவும் மீதமிச்சங்களாகவும் இருந்தவை எவை? முடியரசும், குலப் படிநிலை ஆதீனங்களும், நிலவுடைமை முறையும், நிலத்தைப் பயன்படுத்துவதற்கான முறையும், பெண்களின் நிலையும், மதமும், தேசிய இன ஒடுக்கு முறையும் ஆகியவையே. இந்த "அவுகியஸ் லாயங்களில்"[25] எதை வேண்டுமானலும் எடுத்துக் கொள்ளுங்கள்—அதிகம் முன்னேறிய அரசுகள் யாவும் அவற்றின் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகளை நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் அதற்கும் அதிகமான காலத்துக்கும் முன்பு சித்திபெறச் செய்து கொண்டபோது (இங்கிலாந்தில் 1649), இந்த "லாயங்களை" அவை பெருமளவுக்குச் சுத்தம் செய்யாமலே விட்டு வைத்திருந்தன என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிட வேண்டும்—இந்த அவுகியஸ் லாயங்களில் எதை வேண்டுமானலும் எடுத்துக் கொள்ளுங்கள், இவற்றை நாம் துப்புரவாய்ச் சுத்தம் செய்திருப்பதைக் காண்பீர்கள். இத்துறையில் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் மிதவாதிகளும் (காடேட்டுகள்) குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் (மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்) அவர்கள் அதிகாரத்திலிருந்த எட்டு மாதக் காலத்தில் சாதித்ததைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமாய் நாம் பத்தே வாரங்களில்—1917 அக்டோபர் 25 (நவம்பர் 7)க்கும் அரசியல்

நிர்ணயச் சபை கலைக்கப்பட்ட 1918 ஜனவரி 5க்கும் இடையிலான காலத்தில்—சாதித்தோம்.

இந்தத் தொடைநடுங்கிகளும், வாய்வீச்சுக்காரர்களும், தற்பெருமையாளரான நார்ட்ஸீஸ்களும் குட்டி ஹாம்லெட்டுகளும்[26] தமது அட்டைக் கத்திகளை வீசி ஆர்ப்பாட்டம் செய்தனர்—ஆனால் முடியரசைக் கூட அழித்திடவில்லை! யாரும் என்றும் செய்திராத முறையில் நாம் முடியரசு அசிங்கம் அனைத்தையும் அகற்றிச் சுத்தம் செய்தோம். குலப் படிநிலை ஆதீனங்கள் என்னும் அந்தப் பழங்கால அமைப்பில் ஒரு கல்லையும் விட்டு வைக்காமல் நாம் அதனை ஒழித்திட்டோம் (மிகவும் முன்னேறிய பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளுங்கூட அந்த அமைப்பின் மீதமிச்சங்களை இது நாள் வரை அறவே அகற்றியாகவில்லை!). குலப் படிநிலை ஆதீனங்களது ஆணி வேர்களாகிய நிலவுடைமையிலான பிரபுத்துவ மீதமிச்சங்களையும் பண்ணையடிமை முறை மீதமிச்சங்களையும் நாம் அடியோடு கெல்லியெறிந்து விட்டோம். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியால் செய்யப்பட்ட நிலச் சீர்திருத்தத்தின் ''இறுதியான'' விளைவு எப்படிப்பட்டதாய் இருக்குமென ''விவாதம் நடத்தலாம்'' (இம்மாதிரியான விவாதங்களில் மூழ்கியுள்ள எழுதுகோலர்களும் காடேட்டுகளும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் நாட்டுக்கு வெளியே ஏராளமாய் இருக்கிறார்கள்). இம்மாதிரியான விவாதங்களில் தற்போது நேரத்தை விரயமாக்க நாம் விரும்பவில்லை, ஏனெனில் இந்த விவாதத்துக்கும் இதனையொட்டிய ஏராளமான ஏனைய விவாதங்களுக்கும் போராட்டத்தின் வாயிலாய் நாம் முடிவு கட்டி வருகிறோம். ஆனால் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் பண்ணையடிமை முறை மரபுகளின் காவலர்களாகிய நிலப்பிரபுக்களுடன் தொடர்ந்து எட்டு மாதங்களாய்ச்[27] ''சமரசம் செய்து'' வந்திருக்க, நாம் ஒரு சில வாரங்களுக்குள் அந்த நிலப்பிரபுக்களையும் அவர்களது மரபுகள் யாவற்றையும் ருஷ்ய மண்ணிலிருந்து அறவே துடைத்தெறிந்தோம் என்பது எந்த விவாதத்தாலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

மதத்தையோ, பெண்களது உரிமையின்மையையோ, ருஷ்யர்களல்லாத தேசிய இனத்தோர் ஒடுக்கப்படுதலையும் அவர்களுக்குச் சமத்துவ உரிமைகள் இல்லாமையையுமோ எடுத்துக் கொள்ளுங்கள். இவை யாவும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குரிய பிரச்சினைகள். அற்ப புத்தி கொண்ட குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் தொடர்ந்து எட்டு மாதங்களாய் இவை குறித்து வாய்ப் பேச்சு பேசினார்கள். உலகின் மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றிலேனும் இந்தப் பிரச்சினைகளுக்கு முதலாளித்துவ-ஜனநாயக வழியில் முடிவான தீர்வு காணப்படவில்லை. நமது நாட்டில் அக்டோபர் புரட்சியின் சட்டங்களால் முடிவாக இவை தீர்க்கப்பட்டிருக்கின்றன. மதத்துக்கு எதிராய் நாங்கள் மெய்யான போராட்டம் நடத்தினோம், தொடர்ந்து நடத்தி வருகிறோம். ருஷ்யர்களல்லாத எல்லாத் தேசிய இனத்தோருக்கும் அவர்களது சொந்தக் குடியரசுகள் அல்லது தன்னாட்சிப் பிராந்தியங்களை வழங்கியுள்ளோம். பெண்களை உரிமையற்றோராய் அல்லது முழுவுரிமை இல்லாதோராய் இருத்தி வைத்தல்—இந்த இழிவார்ந்த படுமோசமான அவக்கேடு—பண்ணையடிமை முறையின், மத்திய காலத்தின் இந்த அருவருக்கத்தக்க மீதமிச்சம்—இலாபவெறி கொண்ட முதலாளித்துவ வர்க்கத்தாராலும் மந்த புத்தியினரும் தொடை நடுக்கம் கொண்டோருமான குட்டிமுதலாளித்துவப் பகுதியோராலும் உலகில் விதிவிலக்கின்றி ஏனைய ஒவ்வொரு நாட்டிலும் புதுப்பிக்கப்பட்டு வரும் இது—இங்கு ருஷ்யாவில் நம்மிடம் இல்லாதொழிந்து விட்டது.

இவை யாவும் சேர்ந்ததுதான் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கம். நூற்று ஐம்பது, இரு நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் புரட்சியின் (அல்லது ஒரு பொது வகையின் ஒவ்வொரு தேசியத் திரிபுருவையும் கருதுவோமாயின், அந்தப் புரட்சிகளின்) முற்போக்கான தலைவர்கள் வாக்குறுதி அளித்தார்கள்: மத்திய காலத் தனியுரிமைகளிலிருந்தும், ஆண்களுடன் பெண்களுக்குச் சமத்துவம் இல்லாமையிலிருந்தும், அரசில் அந்த அல்லது இந்த மதத்துக்கான (அல்லது ''மதக் கருத்துக்கான,''

பொதுவில் ''மதச் சார்புடைமைக்கான'') தனியுரிமையிலிருந்தும், தேசிய இனச் சமவுரிமை இன்மையிலிருந்தும் மக்களை விடுவிப்போம் என்றனர்கள். வாக்குறுதி அளித்தார்கள்—ஆனல் நிறைவேற்றவில்லை. அளித்த வாக்குறுதிகளை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை, ஏனெனில் ''புனித உரிமையான தனிச் சொத்துரிமையிடம்'' அவர்களுக்கு இருந்த ''மரியாதை உணர்வால்'' அவர்கள் தடுக்கப்பட்டனர். நமது பாட்டாளி வர்க்கப் புரட்சி இந்தக் கேடுகெட்ட ''மரியாதை உணர்வால்''—கொடுங்கேடுகெட்ட இந்த மத்திய கால முறைமையிடத்தும் ''புனித உரிமையான தனிச் சொத்துரிமையிடத்துமான'' இந்த உணர்வால்—பீடிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனல் ருஷ்யாவின் மக்களுக்கு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் சாதனைகளை உறுதியாய் நிலைபெறச் செய்யும் பொருட்டு நாம் மேலும் முன்செல்ல வேண்டியிருந்தது, அவ்வாறே முன்செல்லவும் செய்தோம். முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குரிய பிரச்சினைகளுக்கு நாம் போகிற போக்கில், நமது பிரதானமான, மெய்யான, பாட்டாளி வர்க்க புரட்சிகர, சோஷலிசச் செயற்பாடுகளின் ''உடன் விளைவாய்த்'' தீர்வு கண்டோம். சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் உடன் விளைவுகளாகும் என்றே நாம் எப்போதுமே கூறி வந்திருக்கிறோம். முதலாளித்துவ-ஜனநாயகச் சீர்திருத்தங்கள் பாட்டாளி வர்க்க, அதாவது சோஷலிசப் புரட்சியின் உடன் விளைவுகளாகும் என்று கூறினேம், செயல்கள் மூலம் அதை நிரூபித்தும் காட்டினேம். இடைக் குறிப்பாய் இங்கு இதனைக் குறிப்பிட வேண்டும்: காவுத்ஸ்கிகளும் ஹில்ஃபர்டிங்குகளும் மார்த்தவ்களும் செர்னேவ்களும் ஹில்குவித்துகளும் லொங்கேகளும் மாக்டானல்டுகளும் டுராட்டிகளும் மற்றும் ''இரண்டரையாவது'' மார்க்சியத்தின் ஏனைய எல்லாச் சூரர்களும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க-சோஷலிசப் புரட்சிக்கும் இடையிலுள்ள இந்த உறவினைப் புரிந்து கொள்ளும் திராணியற்றோராய் இருந்தனர். முதலாவது இரண்டாவதாக வளர்ச்சியுறுகிறது. இரண்டாவது, போகிற போக்

கில், முதலாவதுக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது. இரண்டாவது முதலாவதன் செயலைத் திண்மை பெறச் செய்கிறது. முதலாவதைக் கடந்து வளர்வதில் இரண்டாவது எவ்வளவு தூரம் வெற்றியடைகிறது என்பதை நிர்ணயிப்பது போராட்டம்தான், போராட்டம் மட்டுமேதான்.

ஒரு புரட்சி எப்படி மற்றொன்றாக வளர்ச்சியுறுகிறது என்பதற்கு மிகவும் கண்கூடான நிரூபணங்கள் அல்லது வெளிப்பாடுகளில் ஒன்றே சோவியத் அமைப்பு. தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் சோவியத் அமைப்பானது அதிகபட்ச அளவிலான ஜனநாயகத்தைக் கிடைக்கச் செய்கிறது; அதே போது முதலாளித்துவ ஜனநாயகத்திடமிருந்தான முறிவையும், ஜனநாயகத்தின் ஒரு புதிய, சகாப்த முக்கியத்துவம் வாய்ந்த வகையின், அதாவது பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின், அல்லது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் உதயத்தையும் அது குறிக்கின்றது.

நமது சோவியத் அமைப்பினைக் கட்டியமைத்திடும் பணியில் நமது பின்னடைவுகள் குறித்தும் தவறுகள் குறித்தும் அந்தியக் காலத்திய முதலாளித்துவ வர்க்கத்தாரையும் அவர்களுக்கு வால் பிடித்துச் செல்லும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளையும் சேர்ந்த கோட்டான்களும் காட்டேரிகளும் நம் மீது சாபங்களையும் வசவுகளையும் ஏளனத்தையும் பொழியட்டும். நிறைய தவறுகள் புரிந்துள்ளோம், புரிந்து வருகிறோம் என்பதையும், மிகப் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதையும் நாம் கணமும் மறந்து விடவில்லை. முன்பின் கண்டிராத வகையிலான ஓர் அரசு அமைப்பினைக் கட்டியமைத்திடுவதைப் போன்ற ஒரு புதிய பணியில், உலக வரலாற்றிலே முற்றிலும் புதுமையான இதில் பின்னடைவுகளையும் தவறுகளையும் தவிர்க்கவும் முடியுமோ! நமது பின்னடைவுகளையும் தவறுகளையும் சரிசெய்வதற்கும், சோவியத் கோட்பாடுகளை நடைமுறையில் நாம் செயல்படுத்துவதை —குற்றங்குறையற்ற நிலையிலிருந்து இன்னமும் நெடுந்தொலைவில், மிக நெடுந்தொலைவில் இருந்து வரும் இதனை— மேம்படுத்துவதற்கும் இடையறாது பாடுபடுவோம். சோவியத் அரசு ஒன்றைக் கட்டியமைக்க முற்படும் நற்பேறு, இவ்விதம்

உலக வரலாற்றில் ஒரு புது யுகத்தை—முதலாளித்துவ நாடு ஒவ்வொன்றிலும் ஒடுக்கப்பட்ட வர்க்கமாய் இருப்பதும், ஆனால் புது வாழ்வினை நோக்கி, முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான வெற்றியை நோக்கி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நோக்கி, மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்தும் ஏகாதிபத்தியப் போர்களிலிருந்தும் மனித குலத்தை விடுதலை பெறச் செய்வதை நோக்கி எங்கும் முன்னேற்ற நடை போடும் வர்க்கமாய் இருப்பதுமாகிய ஒரு புதிய வர்க்கத்தின் ஆட்சிக்கான புது யுகத்தை—துவக்கி வைக்கும் நற்பேறு நமக்குக் கிட்டியுள்ளது குறித்துப் பெருமை கொள்ள நமக்கு உரிமை உண்டு, நாம் பெருமை கொள்ளவும் செய்கிறோம்.

ஏகாதிபத்தியப் போர்களைப் பற்றிய பிரச்சினை, இன்று அனைத்து உலகின் மீதும் ஆதிக்கம் புரியும் நிதி மூலதனத்தின் சர்வதேசக் கொள்கையைப் பற்றிய பிரச்சினை—புதிய ஏகாதிபத்தியப் போர்களைத் தவிர்க்க முடியாதவாறு தோற்றுவிக்கச் செய்வதாகிய ஒரு கொள்கையைப் பற்றிய பிரச்சினை—தேசிய ஒடுக்குமுறையையும் பலவீனமான, பின்தங்கிய, சிறிய தேசிய இனங்களை விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய ஒருசில ''முன்னேறிய'' வல்லரசுகள் கொள்ளையடித்தலையும் சூறையாடுதலையும் மென்னியை நெரித்தலையும் தவிர்க்க வொண்ணாத முறையில் அளவு கடந்து கடுமையாக்குவதாகிய ஒரு கொள்கையைப் பற்றிய பிரச்சினை—1914 முதலாய் உலகின் எல்லா நாடுகளிலும் இப்பிரச்சினைதான் கொள்கை அனைத்துக்குமான உயிர்நாடியாக இருந்துள்ளது. கோடானு கோடியான மக்களுக்கு இது ஜீவமரணப் பிரச்சினையாகும். (1914-18ஆம் ஆண்டுகளின் போரிலும் அதனுடன் சேர்க்கப்பட்டு இனியும் தொடர்ந்து நடைபெறும் ''சிறு'' போர்களிலும் கொல்லப்பட்ட 1,00,00,000 பேருடன் கூட) நம் கண்ணெதிரே முதலாளித்துவ வர்க்கம் தயாரித்து வருவதும் நம் கண்ணெதிரே முதலாளித்துவத்திலிருந்து மூண்டெழுவதுமாகிய அடுத்த ஏகாதிபத்தியப் போரில் 2,00,00,000 மக்கள் கொல்லப்படப் போகிறார்களா என்கிற பிரச்சினையாகும் இது. (1914-18ல் முடமாக்கப்பட்ட 3,00,00,000 பேருடன் கூட) வரப்போகும் எதிர்கால போரில்—(முத

லாளித்துவம் தொடர்ந்து இருந்துவருமாயின்) இந்தப் போர் தவிர்க்க முடியாததே—6,00,00,000 பேர் முடமாக்கப்படப் போகிருர்களா என்கிற பிரச்சினையாகும் இது. இந்தப் பிரச்சினையிலும் நமது அக்டோபர் புரட்சி, உலக வரலாற்றிலே ஒரு புது யுகத்தின் துவக்கத்தைக் குறித்தது. "ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராய் மாற்றிடுக" என்ற நமது கோஷத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகளும் இவ்வர்க்கத்தின் ஆமாம் சாமிகளும்—சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் உலகெங்குமுள்ள குட்டிமுதலாளித்துவ ("சோஷலிஸ்டுகள்" என்பதாய்க் கூறிக் கொள்ளும்) ஜனநாயகவாதிகளும்—ஏளனம் புரிந்தனர். ஆனல் அந்தக் கோஷம்தான் உண்மை என்பது மெய்ப்பிக்கப்பட்டது—கசப்பாகவும் நயமற்றதாகவும் அப்பட்டமாகவும் முரடாகவும் இருப்பினும், நுண்ணயம் வாய்ந்த பகட்டான தேசியவெறி கொண்ட எண்ணிலடங்கா அமைதிவாதப் பொய்களைப் போலல்லாமல் அது மட்டும்தான் உண்மை. அந்தப் பொய்கள் தகர்க்கப்பட்டு வருகின்றன. பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை[28] அம்பலமாகி விட்டது. பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை விடவும் மோசமான வெர்சேய் சமாதான ஒப்பந்தத்தின்[29] உட்பொருளும் விளைவுகளும் நாள்தோறும் மேலும் அதிக உக்கிரத்துடன் அம்பலமாகி வருகின்றன. நேற்றைய போருக்கான காரணங்கள் குறித்தும் நெருங்கி வரும் நாளைய போர் குறித்தும் சிந்திக்கின்ற கோடானு கோடியானேரின் கண் முன்னல் முற்றும் தெளிவாகவும் அம்மணமாகவும் தவிர்க்க வொண்ணுதவாறும் காட்சியளிக்கும் கொடிய உண்மை என்னவெனில்: ஏகாதிபத்தியப் போரிலிருந்தும் தவிர்க்க முடியாதபடி அதனைத் தோற்றுவிக்கும் ஏகாதிபத்திய "மீரி"டமிருந்தும் தப்ப இயலாதென்பது (பழைய எழுத்திலக்கணம் வழக்கில் இருக்குமாயின் இங்கே நான் "மீர்"* என்னும் சொல்லை அதன்

* ருஷ்யச் சொல்லான மீர் என்பதற்கு உலகம், சமாதானம் என்று இரண்டு அர்த்தங்கள் உண்டு. பழைய எழுத்திலக்கணத்தின்படி, இச்சொல் இரு வேறு எழுத்தமைப்புகளில் எழுதப்பட்டது.—ப-ர்,

இரண்டு அர்த்தங்களேயும் குறிக்கும்படி இரண்டு தரம் எழுதி யிருப்பேன்), போல்ஷிவிக்குப் போராட்டமும் போல்ஷிவிக்குப் புரட்சியும் இல்லேயேல் இந்த நரகத்திலிருந்து தப்ப இயலா தென்பதுதான்.

முதலாளித்துவ வர்க்கத்தாரும் அமைதிவாதிகளும், ஜெனரல்களும் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரும், முத லாளிகளும் அற்பவாதச் சிறு மதியினரும், பக்தி ஆர்வங் கொண்ட எல்லா கிறிஸ்தவர்களும் இரண்டாவது, இரண் டரையாவது அகிலங்களின் எல்லா சூரர்களும் இந்தப் புரட்சி யின் மீது தமது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக் கொள் ளட்டும். அடிமையுடைமையாளர்களுக்கு இடையிலான போரை எதிர்த்து, நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலு மான ஆண்டுகளில் முதன்முதலாய் அடிமைகள், ''அடிமை யுடைமையாளர்கள் தமது கொள்ளேயைப் பாகப் பிரிவினே செய்து கொள்வதற்காக நடத்தும் இந்தப் போரை எல்லாத் தேசங்களேயும் சேர்ந்த அடிமையுடைமையாளர்களே எதிர்த்து எல்லாத் தேசங்களேயும் சேர்ந்த அடிமைகளும் நடத்தும் போராய் மாற்றுக'' என்னும் கோஷத்தைப் பகிரங்கமாகவே பறைசாற்றிப் பதிலளித்தனர் என்ற உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உண்மையை, எவ்வளவு தான் வசையையும் அவதூறுகளேயும் பொய்களேயும் பொழிந்த போதிலும் அவர்களால் மறைத்துவிட முடியாது.

நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலுமான ஆண்டு களில் முதன்முதலாய் இந்தக் கோஷம் தெளிவின்றி, செய லற்றுக் காத்திருக்கும் நிலேயிலிருந்து தெளிவான, திட்டவட்ட மான அரசியல் வேலேத்திட்டமாய், கோடானு கோடியான ஒடுக்கப்பட்ட மக்கள் பாட்டாளி வர்க்கத் தலேமையில் நடத் திய பயனுள்ள போராட்டமாய் வளர்ந்துள்ளது; பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது வெற்றியாய் வளர்ந்துள்ளது; போர்களே ஒழித்திடுவதற்கும், வெவ்வேறு தேசங்களின் ஒன்றுபட்ட முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக, மூலதனத் தின் அடிமைகளாகிய கூலித் தொழிலாளர்கள், விவசாயி கள், உழைப்பாளி மக்களுக்குப் பிரதிகூலமாக சமாதானத் துக்கும் போருக்கும் ஏற்பாடு செய்யும் முதலாளித்துவ வர்க்

கத்துக்கு எதிராக எல்லா நாடுகளின் தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதற்குமான போராட்டத்தில் கிடைத்த முதலாவது வெற்றியாய் வளர்ந்துள்ளது.

இது முதலாவது வெற்றியே ஆகும், இன்னமும் இறுதி வெற்றியாகிவிடவில்லை. நம்புதற்கரிய துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளானேம், முன்பின் கண்டிராத துயரத்துக்கு ஆளானேம், நம் தரப்பிலிருந்து வரிசையாகப் பல கடுந்தவறுகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டன—இப்படி எல்லாம் விலை கொடுத்துத்தான் நமது அக்டோபர் புரட்சி இந்த வெற்றியைச் சாதித்தது. பின்தங்கிய ஒரு நாட்டின் மக்கள் பின்னடைவுகள் இன்றி, தவறுகள் புரியாமல், உலகின் மிகுந்த சக்தி வாய்ந்த, மிகவும் முன்னேறிய நாடுகளது ஏகாதிபத்தியப் போர்களை முறியடிப்பது சாத்தியமல்லவே! நமது தவறுகளை ஒத்துக் கொள்ள நாம் அஞ்சவில்லை. இவற்றைச் சரிசெய்யக் கற்றுக் கொள்ளும் பொருட்டு, இவற்றை நாம் விருப்பு வெறுப்பின்றி பரிசீலனை செய்வோம். ஆனல் அடிமையுடைமையாளர்களுக்கு இடையிலான போருக்கு, எல்லா வகையான அடிமையுடைமையாளர்களையும் எதிர்த்து அடிமைகள் நடத்தும் புரட்சியைக் கொண்டு ''பதிலளிக்கப்படும்'' என்ற வாக்குறுதி நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலுமான ஆண்டுகளில் முதன்முதலாய் முழு நிறைவாய் நிறைவேற்றப்பட்டுள்ளது—எல்லா இன்னல்களையும் மீறி நிறைவேற்றப்பட்டு வருகிறது—மறுக்க முடியாத உண்மையாகும்.

நாம் இந்தப் பணியை ஆரம்பித்து வைத்துள்ளோம். எந்தத் தேதியில், எந்த நேரத்தில், எந்தத் தேசத்தின் பாட்டாளிகள் இந்த நிகழ்ச்சிப் போக்கை நிறைவு பெறச் செய்வார்கள் என்பது முக்கியமன்று. முதலாவது உடைப்பு உண்டாக்கப்பட்டு விட்டது, சாலை திறக்கப்பட்டுப் பாதை சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது என்பதுதான் முக்கியம்.

எல்லா நாடுகளையும் சேர்ந்த திருவாளர் முதலாளிமார்களே, ''தாய்நாட்டைப் பாதுகாப்பதாய்''—ஜப்பானியத் தாய்நாட்டை அமெரிக்காவிடமிருந்தும், அமெரிக்கத் தாய் நாட்டை ஜப்பானிடமிருந்தும், பிரெஞ்சுத் தாய்நாட்டை பிரிட்டனிடமிருந்தும், இப்படியே ஒன்றை இன்னென்றிட

மிருந்தும் பாதுகாப்பதாய்—தொடர்ந்து பாசாங்கு செய்யுங்கள்! இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களது சூரன்மார்களே, அனைத்து உலகையும் சேர்ந்த எல்லா அமைதிவாதக் குட்டிமுதலாளித்துவவாதிகளும் அற்பவாதிகளுமானேரே, (1912ஆம் ஆண்டு பாசெல் அறிக்கையை[30] மாதிரியாகக் கொண்டு) புதிய ''பாசெல் அறிக்கைகளை'' வெளியிட்டு, ஏகாதிபத்தியப் போர்களை எதிர்த்துப் போராடும் வழிகள் பற்றிய பிரச்சினையைத் தொடர்ந்து ''தட்டிக் கழித்துச்'' செல்லுங்கள்! முதலாவது போல்ஷிவிக்குகளின் புரட்சி ஏகாதிபத்தியப் போரின் பிடியிலிருந்தும் ஏகாதிபத்திய உலகின் பிடியிலிருந்தும் புவியின் முதலாவது பத்து கோடி மக்களை விடுவித்து விட்டது. அடுத்து வரப்போகும் புரட்சிகள் இம்மாதிரியான போர்களிடமிருந்தும் இம்மாதிரியான உலகத்திடமிருந்தும் மனித குலம் முழுமையுமே விடுவித்து விடும்.

கடைசியாய் நம் முன் இருப்பது—யாவற்றிலும் மிக முக்கியமான, யாவற்றிலும் மிகக் கடினமான, யாவற்றிலும் மிகக் குறைவாய் நாம் முயற்சி செலுத்தியிருக்கும் நமது பணியாகும்: பொருளாதாரக் கட்டுமானத்துக்கான—தகர்க்கப்பட்டுள்ள பிரபுத்துவக் கட்டமைவுக்கும் பகுதியளவு தகர்க்கப்பட்டுள்ள முதலாளித்துவக் கட்டமைவுக்கும் பதிலாய் எழுப்பப்பட வேண்டிய புதிய, சோஷலிசக் கட்டமைவுக்குரிய பொருளாதார அடித்தளங்களை அமைத்திடுவதற்கான—பணியாகும். இந்த மிக முக்கிய, மிகக் கடின பணியில்தான் மிக அதிகமாய் நமக்குப் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன, மிக அதிகமாய் நாம் தவறுகள் புரிந்திருக்கிறோம். அனைத்து உலகுக்கும் புத்தம் புதியதான இத்தகைய ஒரு பணியைப் பின்னடைவுகள் இல்லாமல், தவறுகள் இல்லாமல் ஆரம்பித்து வைப்பது சாத்தியமல்லவே! ஆனல் இதனை ஆரம்பித்து வைத்து விட்டோம். இதனைத் தொடர்ந்து நடத்திச் செல்வோம். நமது தவறுகளில் பலவற்றை நமது ''புதிய பொருளாதாரக் கொள்கையின்'' மூலம் இத்தருணம் சரிசெய்து வருகிறோம். சிறு விவசாயிகளது நாடு ஒன்றில், இம்மாதிரியான தவறுகளைப் புரியாமல்

சோஷலிசக் கட்டமைவைத் தொடர்ந்து கட்டியெழுப்பிச் செல்வது எப்படியென்று நாம் கற்றுத் தெரிந்து கொள் கிருேம்.

இன்னல்களுக்கு அளவே இல்லே. ஆனுல் நாம் அளவு கடந்த இன்னல்கஃள எதிர்த்து நின்று சமாளிக்கப் பழகிக் கொண்டவர்கள். நமது பகைவர்கள் காரணமின்றி நம்மை "கல் போல் கெட்டியானவர்கள்'' என்றும், "எலும்பை முறித்திடும் கொள்கையினர்'' என்றும் குறிப்பிடவில்லே. ஆனுல் நாம் இத்துடன் இன்னென்றையும் ஓரளவு கற்று வைத்திருக்கிருேம். புரட்சிக்கு அத்தியாவசியமான இன்னெரு கலேயான நெளிவு சுளிவை, அதாவது எதார்த்தப் புறநிலேமைகளில் ஏற்படும் மாறுதல்களின் காரணமாய் அவசியமாகும் போது விரைவாகவும் திடுதிப்பென்றும் போர்த் தந்திரத்தை மாற்றிக் கொள்வதற்கும், நமது குறிக்கோஃள அடைய நமது பழைய பாதையானது குறிப்பிட்ட ஒரு தருணத்தில் உசிதமற்றதாகவோ, சாத்தியமற்றதாகவோ மாறி விடுமாயின் அதற்குப் பதில் வேறெரு பாதையைத் தேர்ந்து கொள்வதற்குமான திறனே நாம் கற்று வைத்திருக்கிருேம்.

ஆர்வப் பெருக்கின் அலே உச்சியால் தூக்கிச் செல்லப் பட்டு, முதலில் மக்களது பொதுவான அரசியல் ஆர்வமும் பிறகு அவர்களது ராணுவ ஆர்வமும் கிளர்த்தி விடப் பட்டுச் சாதிக்கப் பெற்ற (பொதுவான அரசியல், ராணுவப் பணிகஃளப் போல்) அதே அளவுக்குப் பெரியவையான பொருளாதாரப் பணிகஃளயும் நேரடியாக அதே ஆர்வத்தை ஆதாரமாகக் கொண்டு சாதித்துவிடலாமென நாம் எதிர்பார்த்தோம். அரசின் பொருளுற்பத்தியையும் அரசின் பண்ட வினியோகத்தையும் பாட்டாளி வர்க்க அரசின் ஆணைக் கேற்ப கம்யூனிச வழியில், சிறு விவசாயிகளது நாடு ஒன்றில் ஒழுங்கமைத்துவிட முடியுமென நாம் எதிர்பார்த்தோம்— அல்லது, இன்னும் சுருராகச் சொல்வதெனில், போதிய அளவு சிந்தஃன செலுத்தாமலே நாம் அனுமானித்துக் கொண்டோம். இது தவறுகும் என்பதை அனுபவம் நிரூபித்துக் காட்டியுள்ளது. பல இடைக்கால கட்டங்கள்—அரசு முதலாளித்துவமும் சோஷலிசமும்—அவசியமாகும், கம்யூனிசத்

துக்கு மாறிச் செல்வதற்காகத் தயாரிப்பு செய்யும் பொருட்டு —நீண்ட பல ஆண்டுகளுக்குப் பாடுபட்டுத் தயாரிப்பு செய்யும் பொருட்டு—இவை அவசியமாகும் என்பதாகத் தெரிகிறது. நேரடியாக ஆர்வத்தையே ஆதாரமாகக் கொண்டு விடலாகாது, மாபெரும் புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட ஆர்வத்தைத் துணை கொண்டும், தனியாள் நலனையும் தனியாளுக்குத் தூண்டுதல் அளித்தலையும் பொருளாதாரக் கணக்கு வைப்பையும் அடிப்படையாகக் கொண்டு சிறு விவசாயிகளது நாடான இந்நாட்டில் நாம் அரசு முதலாளித்துவத்தின் வழியே சோஷலிசத்தைச் சென்றடைய உறுதியான பாலத்தை முதற்கண் அமைத்திட வேண்டும். இல்லையேல் என்றுமே நீங்கள் கம்யூனிசத்தைச் சென்றடைய முடியாது, கோடானு கோடியான மக்களை எந்நாளும் நீங்கள் கம்யூனிசத்துக்கு அழைத்துச் செல்ல முடியாது. அனுபவம் நமக்குக் கற்பிப்பது இதுதான். புரட்சியினது வளர்ச்சியின் எதார்த்தப் புறநிலைப் போக்கு நமக்குக் கற்பிப்பது இது தான்.

திடுமெனக் கொள்கை வழியை மாற்றிக் கொள்வதற்கு (திடுமென மாற்றிக் கொள்வது அவசியமாகியதும்) இந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் ஓரளவுக்குக் கற்றுக் கொண்டுள்ள நாம், முனைப்போடும் விழிப்போடும் விடா முயற்சியோடும் (முனைப்பும் விழிப்பும் விடாமுயற்சியும் இன்னமும் போதிய அளவு இல்லையெனினும்) கொள்கை வழியில் புதிய மாற்றம் செய்வதற்கு, அதாவது ''புதிய பொருளாதாரக் கொள்கைக்குச்'' செல்வதற்குக் கற்றுக் கொள்ள முற்பட்டிருக்கிறோம். பாட்டாளி வர்க்க அரசு எச்சரிக்கையும் ஊக்கமும் மதிநுட்பமும் வாய்ந்த ''வணிகர்'' ஆக வேண்டும், இம்மியும் ஒழுங்குமுறை தவறாத மொத்த வியாபாரி ஆக வேண்டும்—இல்லையேல் சிறு விவசாயிகளது நாடாகிய இந்நாட்டைப் பொருளாதார வழியில் எந்நாளும் அதனால் காலூன்றி நிற்கச் செய்ய முடியாது. தற்போதுள்ள நிலைமைகளில், முதலாளித்துவ மேலைய நாடுகளின் (தற்போதைக்கு முதலாளித்துவ நாடுகளாய் இருக்கும் இவற்றின்) அண்டையிலுள்ள நாம் கம்யூனிசத்தை நோக்கி முன்

னேறுவதற்கு வேறு வழி ஏதும் இல்லை. விண்ணுக்கும் மண்ணுக்குமுள்ள தொலைவில் கம்யூனிசத்திலிருந்து விலகி யமைந்தவராகத் தோன்றும் ஒரு பொருளாதார வகையினரே இந்த மொத்த வியாபாரி. ஆனால் நடைமுறை வாழ்வில், சிறு விவசாயிகளது பொருளாதாரத்தை அரசு முதலாளித் துவத்தின் வழியே சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் முரண்பாடுகளில் ஒன்றாகும் இது. தனியாளுக்குக் கிடைக் கும் தூண்டுதல் பொருளுற்பத்தியைப் பெருகச் செய்வ தாகும். எப்பாடுபட்டேனும் யாவற்றுக்கும் முதலாய் நாம் பொருளுற்பத்தியைப் பெருகச் செய்தாக வேண்டும். மொத்த வியாபாரமானது பொருளாதார வழியில் கோடிக் கணக்கான சிறு விவசாயிகளை ஒன்றுபடச் செய்கிறது: அது அவர்களுக்குத் தனியாள் தூண்டுதல் கிடைக்கச் செய்கிறது, அவர்களை ஒன்றிணைத்து அடுத்த படிக்கு—அதாவது பொரு ளுற்பத்திச் செயல்முறையிலேயே இணைவுக்கும் கூட்டுக்கு மான பல்வேறு வடிவங்களுக்கு—இட்டுச் செல்கிறது. நமது பொருளாதாரக் கொள்கையில் தேவையான மாற்றங்களை ஏற்கெனவே நாம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இந்தத் துறையில் ஏற்கெனவே நாம் சில வெற்றிகளையும் பெற்றுள் ளோம். சிறியவையே, அரைகுறையானவையே என்பது மெய்தான் எனினும், எப்படியும் இவை வெற்றிகளே ஆகும். இந்தப் புதிய "கல்வித்" துறையில் நாம் நமது புகுமுக வகுப்பினை ஏற்கெனவே முடித்து வருகிறோம். இடைவிடாம லும் விடாமுயற்சியோடும் படித்தும், நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடைவடிக்கையையும் நடைமுறை அனுபவத்தின் வாயிலாகப் பரீட்சித்துப் பார்த்தும், நாம் ஏற்கெனவே தொடங்கியுள்ளதைத் திரும்பத் திரும்ப மாற்றம் செய்து கொள்ள அஞ்சாமலும், மிகவும் கவனமாக நமது தவறு களின் குறிப்பொருளைப் பகுத்தாய்ந்து அவற்றைச் சரி செய்து கொள்ள அஞ்சாமலும், நாம் மேல் வகுப்புகளுக்குச் செல்வோம். உலகப் பொருளாதாரம், உலக அரசியல் இவற்றின் தற்போதைய நிலையானது இந்தப் "பயிற்சித் திட்டத்தை" நாம் விரும்பக் கூடியதைக் காட்டிலும் நீண்ட தாகவும் கடினமானதாகவும் செய்திருப்பினும், "இத்திட்

டம்'' அனைத்தையும் நாம் பயின்று முடிப்போம். நாம் மாறிச் செல்வதற்குரிய இடைநிலைக் காலத்தின் இன்னல்கள் எவ்வளவுதான் கடுமையாக இருப்பினும் சரி, விபத்தையும் பஞ்சத்தையும் அழிவையும் மீறி, நாம் சோர்வின்றி உறுதியுடன் இருப்போம், நமது இலட்சியத்தை வெற்றிகரமாய் நிறைவேறச் செய்வோம்.

அக்டோபர் 14, 1921

பிராவ்தா, இதழ் 234,
அக்டோபர் 18, 1921

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 144-152

தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம்

மாபெரும் ஒரு புரட்சியின் ஆண்டு விழா கொண்டாட, அதன் தீர்வு பெருத பிரச்சினைகளில் கவனத்தை ஒன்றுகுவிப்பதுதான் மிகச் சிறந்த வழி. அந்தப் புரட்சி இன்னமும் தீர்வு அளிக்காத அடிப்படை பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கும் ஒரு நேரத்தில், இந்தப் பிரச்சினைகளின் தீர்வுக்காக நாம் புதிய ஒன்றை (அந்தப் புரட்சி இதுகாறும் சாதித்திருப்பதன் கண்ணோட்டத்தில்) கற்றுப் பாண்டித்தியம் பெற வேண்டியுள்ள ஒரு நேரத்தில், இப்புரட்சியை இந்த வழியில் கொண்டாடுவது மிக்கப் பொருத்தமாய் இருப்பதோடு, அவசியமும் ஆகும்.

பொருளாதாரக் கட்டுமானத்தின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ''சீர்திருத்தவாத வழியிலான'', படிப்படியான, எச்சரிக்கையான, சுற்றிவளைந்து செல்லும் போக்கு தேவைப்படுவதானது தற்போது நமது புரட்சிக்குப் புதிய ஒன்ருகும். இந்தப் ''புதுமையானது'' தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலும் பல கேள்விகளையும் திகைப்புகளையும் ஐயுறவுகளையும் எழச் செய்கிறது.

ஒரு தத்துவார்த்தப் பிரச்சினை: ஒட்டுமொத்தமாய்ப் புரட்சி முழுவதும் வெற்றிகரமாய் முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் ஒரே துறையில் மிகமிகப் புரட்சிகரமான வரிசையான பல செயல்களிலிருந்து மிகமிகச் ''சீர்திருத்தவாத வழியிலான'' செயல்களுக்கு மாறிச் செல்ல வேண்டியிருப்பதற்கு எப்படி நாம் விளக்கம் கூறுவது? ''நிலைகளை விட்டுக் கொடுக்கிறோம்'', ''தோல்வியை ஒத்துக்கொள்

கிறேம்'' அல்லது இதையொத்த ஒன்றினைக் குறிப்பதாய் இருக்குமோ இது? ஆம், அப்படித்தான் என்று கூறுகின்றனர் நமது பகைவர்கள்—அரைப்பிரபுத்துவ வகைப்பட்ட பிற்போக்காளர்களிலிருந்து மென்ஷிவிக்குகள் அல்லது இரண்டரையாவது அகிலத்தின் ஏனைய வீரர்கள் வரையில். சாக்கு கிடைக்கும் தோறும், எந்தச் சாக்கும் இல்லாத போதுங்கூட இது போல எதாவது கூச்சல் எழுப்பவில்லையானல் அவர்கள் பகைவர்களாய் இருக்க மாட்டார்களே. பிரபுத்துவப் பிற்போக்காளர்களிலிருந்து மென்ஷிவிக்குகள் வரையிலான எல்லாக் கட்சிகளிடையிலும் இந்தப் பிரச்சினை குறித்து நிலவும் இதமான கருத்து ஒருமைப்பாடானது இந்த எல்லாக் கட்சிகளும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு விரோதமான ''ஒரு பிற்போக்குத் திரளே'' (எங்கெல்ஸ் 1875, 1884ல் பெபெலுக்கு எழுதிய கடிதங்களில்[31] முன்னறிந்து கூறியது போலவென இடைக்குறிப்பாய்ச் சொல்லலாம்) என்பதற்கு மற்ெருரு சான்றே அன்றி வேறல்ல.

ஆனல் நண்பர்களிடத்தும் ஓரளவு... ''திகைப்பு''—எனலாமா—இருந்து வருகிறது.

பெருவீதத் தொழில் துறையைப் புனரமைத்து, அதன் பண்டங்கள் சிறு விவசாயியின் பயிர்த்தொழிலின் விளைபொருள்களுடன் நேரடியாய்ப் பரிவர்த்தனையாவதற்கு ஏற்பாடு செய்து, இவ்வழியில் பின்னது சமுதாய உடைமையாவதற்கு உதவு. பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக விவசாயிகளிடமிருந்து உபரியை வசூலித்துக் கொள்வதன் மூலம் ஓரளவு உணவுப் பொருள்களும் மூலப் பொருள்களும் கடனய் வாங்கிக்கொள்—இதுவே மூன்று ஆண்டுகளுக்கு மேலாய் 1921 வசந்தம் வரையில் நாம் அனுசரித்த திட்டம் (அல்லது முறை, செயல்வழி). பிரச்சினையை இது புரட்சிகர வழியில் அணுகுவதாகும்—பழைய சமூக-பொருளாதார அமைப்பினை ஒரேயடியாய் அறவே நொறுக்கி அதற்குப் பதில் ஒரு புதிய அமைப்பை எழுப்பும் வழி இது.

1921 வசந்தம் முதலாய் இந்த அணுகலுக்கு, திட்டத்துக்கு, முறைக்கு அல்லது செயல்வழிக்குப் பதிலாய் முற்றிலும் மாறுன ஒரு முறையை, சீர்திருத்தவாத வகைப்பட்ட

முறையை அனுசரித்து வந்திருக்கிறோம் (இன்னும் நாம் ''அனுசரித்துவிட''வில்லை, ''அனுசரித்துக் கொண்டிருக் கிறோம்'', இன்னும் இதனைப் பூரணமாய்ப் புரிந்து கொள்ள வில்லை): பழைய சமூக-பொருளாதார அமைப்பை—வர்த் தகம், சிறு உற்பத்தி, தனியார் பண்ணை, முதலாளித்துவம் இவற்றை—நொறுக்குவதற்குப் பதிலாய் வர்த்தகத்தை, சிறு உற்பத்தியை, முதலாளித்துவத்தைப் புத்துயிர் பெறச்செய்து அதே போது விழிப்புடனும் படிப்படியாகவும் இவற்றின் மீது மேல்நிலை பெறுதல் அல்லது அவை புத்துயிர் பெறும் அளவுக்கு மட்டும் அவற்றை அரசின் ஒழுங்கியக்கத்துக்கு உட்படுத்த வகை செய்தல் என்னும் ஒரு முறையை அனுசரித்து வந்திருக்கிறோம்.

பிரச்சினையை முற்றிலும் புதியதொரு வழியில் அணுகு வதாகும் இது.

முந்தைய, புரட்சிகர முறையிலான அணுகலுடன் ஒப்பிடு கையில் இது சீர்திருத்தவாத முறையிலான அணுகலாகும் (புரட்சி என்பது பழைய அமைப்பினை அதன் அடிநிலைகளோடு நொறுங்கச் செய்யும் மாற்றமாகுமே அன்றி, கூடுமான வரை நொறுங்காதபடி பார்த்து எச்சரிக்கையாய், மெதுவாய், படிப்படியாய் அதைத் திருத்தியமைப்பதல்ல).

இங்கு எழும் கேள்வி இதுவே: புரட்சிகர முறைகளைக் கையாண்டு பார்த்து, அவை தோற்றுவிட்டதைக் கண்டு சீர்திருத்தவாத முறைகளை நீங்கள் அனுசரிப்பீர்களாயின், புரட்சி செய்தது பொதுவிலேயே தவறெனப் பிரகடனம் செய்கிறீர்கள் என்பதைத்தானே அது நிரூபிக்கிறது? நீங்கள் புரட்சியை ஆரம்பித்திருக்கக் கூடாது, சீர்திருத்தங்களைத் தொடங்கி அவற்றுக்குள்ளேயே உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இது நிரூபிக்கவில்லையா?

இதுவே மென்ஷிவிக்குகளும் அவர்களையொத்த ஏனை யோரும் வந்தடையும் முடிவு. ஆனால் இந்த முடிவு குதர்க்க வாதம் அல்லது தோல் தடித்துவிட்ட அரசியல்வாதிகள் புரியும் பித்தலாட்டமாகும், அல்லது அரசியல் கற்றுக் குட்டி களின் சிறுபிள்ளைத்தனமாகும். புரட்சிகர முறைகள் ஏற்ற வையாய், அவை வெற்றிகரமாய்க் கையாளத்தக்கனவாய்

இருக்கும் வரம்புகளையும் நிலைமைகளையும் கவனியாது ஒதுக்கி விடும் புரட்சிவாதத்தை மிகைப்படுத்துவதால் உண்டாகும் அபாயம்தான் மெய்யான புரட்சியாளருக்கு உண்டாகக் கூடிய மிகப் பெரிய—ஒரேயொரு என்று கூடச் சொல்ல லாம் — அபாயமாகும். உண்மையான புரட்சியாளர்கள் ''புரட்சியைக்'' கொட்டை எழுத்திட்டு எழுதத் தொடங் கியதும், ''புரட்சியை'' ஏறத்தாழ தெய்வீகமான ஒன்றின் நிலைக்கு உயர்த்த முற்பட்டதும், நிதானம் தவற ஆரம்பித் ததும், எந்தத் தருணத்தில், எந்தச் சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் புரட்சிகர வழியில் செயல்பட வேண்டுமென்பதையும் எந்தத் தருணத்தில், எந்தச் சூழ் நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் சீர்திருத்தவாதச் செயலில் இறங்க வேண்டுமென்பதையும் மிகமிக அமைதி யாகவும் கொஞ்சமும் விருப்புவெறுப்பின்றியும் சிந்தித்துச் சீர்தூக்கி நிர்ணயிப்பதற்கான ஆற்றலை இழக்கத் தொடங் கியதும் பெரும்பாலும் அதோகதியாகியுள்ளனர். நிதானக் கண்ணோட்டத்தைத் துறந்து, ''மாபெரும், வெற்றிகர, உலகப்'' புரட்சி எல்லா நிலைமைகளிலுமே எல்லாச் செயல் துறைகளிலுமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் புரட்சிகர வழி யிலேதான் தீர்வு காண முடியும் தீர்வு காணவும் வேண்டு மென்று நினைக்க முற்படும் போது தான் மெய்யான புரட்சி யாளர்கள் அழிந்துபடுவர் (வெளியிலிருந்து தோற்கடிக்கப் பட்டு விடுவர் என்பதல்ல, அவர்களுடைய பணி உள்ளி ருந்தே தகர்வுக்கு உள்ளாகி விடும்). அவர்கள் இதைச் செய் வார்களாயின் அவர்கள் அழிந்துபடுவது உறுதி.

இத்தகைய கருத்துக்களை மண்டையில் ஏற்றிக் கொள் பவர் எவரும் அழிந்துபடுவார், ஏனெனில் அடிப்படையான ஒரு பிரச்சினை குறித்து அவர் அசட்டுக் கருத்துக்கள் கொண் டவர். கொடூரமான ஒரு போரில் (புரட்சியானது மிகமிகக் கொடூர வகைப்பட்ட போரே ஆகும்)அசட்டுத் தனத்துக்குத் தண்டனை தோல்விதான்.

''மாபெரும், வெற்றிகர, உலகப்'' புரட்சி புரட்சிகரமான முறைகளை மட்டும்தான் கையாள முடியும் கையாள வேண் டும் என்று கொள்வதற்கு ஆதாரம் உண்டா? எந்த ஆதார

மும் கிடையாது. இவ்வாறு கொள்வது முற்றிலும் போலியான முடிவே ஆகும். நாம் மார்க்சியத்திலிருந்து பிறழாது செல்வோமாயின் முற்றிலும் தத்துவார்த்த முதற்கோள்களைக் கொண்டு இதனை நிரூபித்துக் காட்டலாம். நமது புரட்சியின் அனுபவமும் இது போலியான முடிவே ஆகுமென்பதைத் தெளிவுபடுத்துகிறது. தத்துவார்த்தக் கண்ணோட்டத்திலிருந்து முட்டாள் தனமான காரியங்கள் ஏனைய காலத்தில் செய்யப்படுவது போலவே புரட்சிக் காலத்திலும் செய்யப்படுகின்றன என்று எங்கெல்ஸ் கூறினர்.[32] அவர் கூறியது முழுக்கவும் சரியானதே. முட்டாள் தனமான காரியங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாய்ச் செய்ய முயல வேண்டும், செய்யப்பட்டவற்றை எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய்ச் சரிசெய்து கொண்டுவிட வேண்டும். எந்த ஒரு நேரத்திலும் எந்தப் பிரச்சினைகளுக்குப் புரட்சிகர முறைகளில் தீர்வு காண முடியும், எவற்றுக்கு முடியாது என்பதை நாம் கூடுமான அளவுக்கு நிதானமாய் மதிப்பிட்டாக வேண்டும். நமது சொந்த நடைமுறை அனுபவத்தின் கண்ணோட்டத்திலிருந்து பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை எவ்விதத்திலும் புரட்சிகரமல்லாத செயலுக்குரிய ஓர் உதாரணம். அது சீர்திருத்தவாதச் செயலாகும், இன்னுங்கூட மோசமானதாகும். ஏனெனில் அது பின்வாங்குதலாகும், ஆனல் சீர்திருத்தவாதச் செயலானது பொதுவாய் மெள்ளமெள்ள, எச்சரிக்கையோடு, படிப்படியாய் முன்னேறுகிறதே அன்றி பின்னேக்கிச் செல்வதில்லை. பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதில் நம்முடைய போர்த்தந்திரம் பிழையற்றதாகும் என்பது முழுநிறைவாகவும் எல்லோருக்கும் விளங்கும்படியும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்படியும் நிரூபிக்கப்பட்டு விட்டதால், இது குறித்து மேலும் கூறத் தேவையில்லை.

நமது புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயகப் பணி மட்டுந்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்துப் பெருமிதம் கொள்ள நமக்கு முழு உரிமை உண்டு. புரட்சியின் பாட்டாளி வர்க்க அல்லது சோஷலிசப் பணியை மூன்று பிரதானக் கூறுகளில் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறலாம்:

1) ஏகாதிபத்திய உலகப் போரிலிருந்து புரட்சிகரமாய் வெளியேறுதல்; முதலாளித்துவக் கொள்ளைவெறியர்களின் இரு உலகக் கோஷ்டிகளும் ஏற்பாடு செய்திருக்கும் கொலைத் தாண்டவத்தை அம்பலப்படுத்துவதும் நிறுத்துவதும்—நம் தரப்பைப் பொறுத்தவரை இப்பணி பூரணமாய்ச் செய்யப் பட்டு விட்டது; முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் புரட்சி ஏற்பட்டிருந்தால் இப்பணி அதன் எல்லாக் கூறுகளிலும் செய்து முடிக்கப்பட்டிருக்கலாம். 2) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய ஒரு வடிவமாய் சோவியத் அமைப்பினை நிறுவுதல். சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்ற முறையின் சகாப்தம் முடிவடைந்து விட்டது. உலக வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம்—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரச் சகாப்தம்—ஆரம்பமாகியுள்ளது. சோவியத் அமைப்பும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் எல்லா வடிவங்களும் பல நாடுகளின் முயற்சிகளால்தான் முத்தாய்ப்பு அளிக்கப்பட்டு நிறைவு செய்யப்படும். இத்துறையில் இன்னும் நாம் செய்யாதிருப்பவை மிக மிகப் பலவும் உள்ளன. இதைப் பார்க்கத் தவறுவது மன்னிக்க முடியாததாகும். மீண்டும் மீண்டும் நாம் இப்பணியைச் செம்மை செய்துச் செல்ல வேண்டியிருக்கும், திரும்பிச் செய்ய வேண்டியிருக்கும், தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கும். நமது உற்பத்தி சக்திகளையும் நமது கலாசாரத்தையும் வளர்த்திடுவதில் முன்னேக்கியும் மேல்நோக்கியும் நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் கூடவே நமது சோவியத் அமைப்பை மேம்படுத்துவதற்கும் மாற்றுவதற்குமான பணிகளும் நடைபெற்றாக வேண்டும்—பொருளாதாரம், கலாசாரம் இவற்றின் அளவுநிலையில் இன்னமும் நாம் கீழ் மட்டத்தில்தான் இருக்கிறோம். மிகுதியான பலவும் மாற்றப்பட்டாக வேண்டும், இது குறித்து ''கூச்சப்படுவது'' அபத்தமும்(இன்னுங்கூட மோசமானதும்) ஆகும். 3)சோஷலிச அமைப்புக்கான பொருளாதார அடித்தளம் படைப்பிக்கப் பட்டாக வேண்டும். இந்தத் துறையில் மிகவும் முக்கியமானதன், மிகவும் அடிப்படையானதன் பிரதான கூறுகள்

இன்னும் பூர்த்தி செய்யப்பட்டாகவில்லை. இவற்றைச் செய்வதே நமக்குரிய பிழையற்ற பணி—கோட்பாட்டின் கண்ணோட்டத்திலும், நடைமுறைக் கண்ணோட்டத்திலும், இன்றைய ருஷ்யாவின் சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசினது கண்ணோட்டத்திலும், சர்வதேசக் கண்ணோட்டத்திலும் பிழையற்றதாகும்.

இந்தப் பணியின் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையாதலால், நமது கவனம் அனைத்தையும் இவற்றில் ஒன்றுகுவித்தாக வேண்டும். இங்குள்ள இடர், மாறிச் செல்வதற்குரிய வடிவம் சம்பந்தப்பட்டதாகும்.

1918 ஏப்ரலில் **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** என்பதில் நான் எழுதினேன்:

''பொதுவில் ஒரு புரட்சியாளராக, சோஷலிச ஆதரவாளராக அல்லது கம்யூனிஸ்டாக இருந்துவிட்டால் போதாது. அந்தந்த தருணத்திலும் சங்கிலி அனைத்தையும் பிடித்துக் கொள்ளும் பொருட்டு சங்கிலியில் குறிப்பிட்ட எந்தக் கரணையை உங்கள் சக்தி முழுவதையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டுமென்பதைக் கண்டு கொள்ளவும் அடுத்த கரணைக்கு மாறிச் செல்வதற்காக உறுதியுடன் தயார் செய்யவும் நீங்கள் ஆற்றலுடையோராய் இருத்தல் வேண்டும். கரணைகளின் வரிசைக் கிரமம், அவற்றின் வடிவம், அவை சேர்ந்து இணைந்திருக்கும் விதம், வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில் ஒன்றுக்கொன்று அவற்றுக்குள்ள வேறுபாடு இவையெல்லாம் கொல்லுப்பட்டறையாளர் செய்யும் சாதாரண சங்கிலியில் இருப்பது போல அவ்வளவு எளிதாகவும் பொருளற்றதாகவும் இருக்கவில்லை.''*

நாம் பரிசீலிக்கும் செயல் அரங்கில் தற்போது இந்தக் கரணை, தக்கபடியான அரசு ஒழுங்குமுறையின் (நெறிமுறையின்) கீழ் உள்நாட்டு **வர்த்தகத்தைப்** புத்துயிர் பெற்றெழச் செய்வதே ஆகும். வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில், *1921-22*ல் நமது சோஷலிசக் கட்டுமானத்தின் இடைக்கால வடிவங்களில், வர்த்தகம்தான் பாட்டாளி வர்க்க அரசாட்சி

* இப்பதிப்பின் தொகுதி *8*, பக்கம் *109* பார்க்க.—ப-ர்

யான நாம், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியான நாம், ''நமது சக்தி முழுவதையும் கொண்டும் பற்றிக் கொள்ள வேண்டிய'' ''கரணையாகும்.'' இப்பொழுது நாம் போதிய அளவு உறுதியுடன் இந்தக் கரணையைப் ''பற்றிக் கொள்வோம்'' ஆயின், மிக அருகாமையிலான வருங்காலத்தில் சங்கிலி அனைத்தின் மீதும் நிச்சயமாய் நாம் கட்டுப்பாடு செலுத்துவோம். பற்றிக் கொள்ளாவிடில், சங்கிலி அனைத்தின் மீதும் நாம் கட்டுப்பாடு செலுத்தப் போவதில்லை, சோஷலிச சமூக-பொருளாதார உறவுகளுக்கான அடித்தளத்தைப் படைப்பிக்கப் போவதுமில்லை.

கம்யூனிசமும் வர்த்தகமுமா?! விநோதமாய்த்தான் தோன்றுகிறது. இரண்டும் தொடர்பில்லாதனவாய், ஒவ்வாதனவாய், துருவங்களைப் போல விலகி நிற்பனவாய்த் தோன்றுகின்றன. ஆனால் பொருளியலின் கண்ணோட்டத்திலிருந்து நாம் ஆராய்வோமாயின், கம்யூனிசமானது சிறு விவசாயியின் தந்தைவழி மரபிலான பயிர்த்தொழிலிலிருந்து விலகி இருப்பதைக் காட்டிலும் அதிகமாய் இவை இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று விலகியிருக்கவில்லை என்பதைக் காண்போம்.

உலக அளவில் நாம் வெற்றி ஈட்டியதும் தங்கத்தை உலகின் மிகப் பெரிய நகரங்கள் சிலவற்றின் தெருக்களில் பொதுக் கக்கூசுகள் கட்டுவதற்காக உபயோகிப்போம் என்று நினைக்கிறேன். ''சுதந்திரத்துக்கான மகத்தான'' போர் என்பதாய் 1914-18ல் நடைபெற்ற போரில், எந்த சமாதானம் மோசமானது—பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையா, வெர்சேய் சமாதான ஒப்பந்தமா என்கிற பெரும் பிரச்சினையைத் தீர்மானிப்பதற்காக நடைபெற்ற அந்தப் போரில், தங்கத்துக்காக வேண்டி எப்படி ஒரு கோடிப் பேர் கொல்லப்பட்டனர், மூன்று கோடிப் பேர் முடமாக்கப்பட்டனர் என்பதை மறந்து விடாத தலைமுறைகளுக்கும், எப்படி இதே போலத் தங்கத்துக்காக வேண்டி உதாரணமாய் 1925லோ, 1928லோ உதாரணமாய் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமோ பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமோ இதையொத்த இரு நாடுகளுக்குமோ நடக்கக் கூடிய போரில் இரண்டு கோடிப் பேரைக் கொல்லவும் ஆறு கோடிப் பேரை முட

மாக்கவும் நிச்சயமாய்த் திட்டமிடுகிருர்கள் என்பதைக் காண்போருக்கும் இது அனுகூலமாய்த் தங்கத்தை உப யோகிப்பதற்கான ''நேர்மை மிக்க'' முறையாகவும் கல்வி போதமளிக்கும் முறையாகவும் இருக்கும்.

ஆனல் தங்கத்தை இந்தக் காரியத்துக்காக உபயோகிப் பது எவ்வளவு ''நேர்மை மிக்கதாயும்'' பயனுள்ளதாயும் அல்லது மனிதாபிமானம் கொண்டதாயும் இருப்பினும், இந்த நிலையை வந்தடையும் பொருட்டு நாம் இன்னும் பத்து, இருபது ஆண்டுகளுக்கு 1917-21ஆம் ஆண்டுகளின் கட்டத் தில் செய்தது போலவே அதே கடுமையுடனும் அதே அளவு வெற்றியுடனும் மேலும் மிக விரிவான துறையிலே பாடுபட் டாக வேண்டுமெனக் கூறுகிருேம். இதற்கிடையில் ருஷ்யா வின் சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசில் நாம் தங்கத்தை மீத்துச் சேமிக்கவும், மிக உயர்ந்த விலைக்கு விற்கவும், அதைக் கொண்டு மிகக் குறைந்த விலைக்குப் பண்டங்கள் வாங்கவும் வேண்டும். ஓநாய்களிடையே வாழும் போது ஓநாயைப் போல ஊளையிடத்தான் வேண்டும், எல்லா ஓநாய்களையும் ஒழித்துக் கட்டுவதைப் பொறுத்த மட்டில்— அறிவு வழிப்பட்ட மனித சமுதாயத்தில் இவற்றை ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்—''பெருமைப் பேச்சுக்கு நேரம் போருக்குப் பிற்பாடே அன்றி முன்னதாய் அல்ல'' என்கிற அறிவார்ந்த ருஷ்ய முதுமொழியின் பிரகாரம் நடந்து கொள் வோம்....

கோடிக் கணக்கான சிறு விவசாயிகளுக்கும் பெருவீதத் தொழில் துறைக்கும் இடையில் வர்த்தகம்தான் சாத்திய மான ஒரேயொரு பொருளாதார இணைப்பு—இந்த விவ சாயிகளுடன் கூடவே சிறந்த சாதனங்களையும் மின்விசைக் கம்பிவழிகளது வலைப்பின்னல் அமைப்பையும் கொண்ட பெருவீத இயந்திரத் தொழில் துறை இல்லையேல், சிறு விவ சாயிகளுக்குச் சிறந்த பண்டங்களை முன்னிலும் கூடுதலான அளவுகளிலும் மேலும் சீக்கிரமாகவும் மலிவாகவும் வழங் கும் திறன் பெறுவதற்குப் போதுமான தொழில்நுட்ப சாதனங்களும் ஒழுங்கமைப்பு ''மேற்கட்டுமானங்களும்'' பிற கூறுகளும் கொண்ட தொழில் துறை இல்லையேல்...

வர்த்தகம்தான் சாத்தியமான ஒரேயொரு பொருளாதார இணைப்பு. உலக அளவில் இந்த ''இல்லையேல்'' என்னும் நிபந்தனை ஏற்கெனவே சாதிக்கப்பெற்று விட்டது; இந்த நிபந்தனை ஏற்கெனவே இருப்பதாகி விட்டது. ஆனால் முன்பெல்லாம் மிகவும் பிற்பட்ட முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாய் இருந்த நாடு தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே அனேகமாய்ப் புத்தம்புதிய இணைப்புகளைத் தனித்து நின்று நேரடியாய் ஒரே அடியில் தோற்றுவிக்கவும் பயன்படுத்தவும் ஒழுங்கமைக்கவும் முயற்சி செய்து, ''நேரடித் தாக்குதல்'' மூலம் இந்தப் பணியை நிறைவேற்றத் தவறி விட்டது; இப்பொழுது அது மெதுவான, படிப்படியான, எச்சரிக்கையுடனான ''முற்றுகை'' நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் இப்பணியை நிறைவேற்ற முயற்சி செய்தாக வேண்டும்.

பாட்டாளி வர்க்க அரசாட்சி வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்து அதனை நெறிப்படுத்திக் குறிப்பிட்ட வழிகளிலே செலுத்தி, குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அதைச் செயல்பட வைக்க முடியும். ஒரு சிறு, மிகச் சிறிய ஓர் உதாரணம் தருகிறேன்: தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசத்தில் பொருளாதாரம் சிறிதளவு, இன்னமும் மிகச் சிறிதளவே ஆன, ஆனால் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி புத்துயிர் பெற்றிருக்கிறது. இதற்குப், பெரிய அரசாங்கச் சுரங்கங்களில் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட உயர்வு ஓரளவும், விவசாயிகளின் சிறிய சுரங்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டது ஓரளவும் காரணமாகும். இதன் விளைவாய்ப் பாட்டாளி வர்க்க அரசாட்சிக்குக் கூடுதலாய்ச் சிறிதளவு (முன்னேறிய நாடுகளில் கிடைப்பதுடன் ஒப்பிட்டால் அற்ப சொற்ப அளவே என்றாலும் வறுமை வாய்ப்பட்ட நமது நிலைமையைக் கருதும் போது குறிப்பிடத்தக்க அளவிலான) நிலக்கரி கிடைத்து வருகிறது. இதன் அடக்க விலை 100 என்பதாய் வைத்துக் கொள்வோம். இந்த நிலக்கரியை அது பல்வேறு அரசாங்க இலாகாக்களுக்கு 120 என்கிற விலைக்கும், தனி நபர்களுக்கு 140 என்கிற விலைக்கும் விற்று வருவதாய்க் கொள்வோம். (நான் தரும் புள்ளிகள் முற்றிலும் கற்பிதமானவை என்பதை

இடைக்குறிப்பாய் இங்கு கூற வேண்டும்: ஏனெனில் முதலாவதாக, சுறாரான விலைகள் எனக்குத் தெரியாது; இரண்டாவதாக, தெரிந்தாலுங்கூட இப்பொழுது அவற்றை நான் பகிரங்கப்படுத்த மாட்டேன்.) மிகவும் மிதமான அளவுகளில் தான் என்றாலும் தொடங்கி விட்டோம் என்பதாய் இதிலிருந்து தெரிகிறது: தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே பரிவர்த்தனையைக் கட்டுப்பாடு செய்ய, மொத்த வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்ய, இருக்கக்கூடிய சிறிய, பிற்பட்ட தொழில் துறையை அல்லது பலவீன முற்றுவிட்ட பாழ்பட்ட நிலையிலுள்ள பெருவீதத் தொழில் துறையை நிர்வகிக்கும் பணியைச் சமாளிக்கத் தொடங்கி விட்டோம் என்பதாய்த் தெரிகிறது; தற்போதைய பொருளாதார அடிப்படையில் வர்த்தகத்துக்குப் புத்துயிரூட்டவும், சாதாரண நடுத்தர விவசாயியை (அதாவது வகை மாதிரியாய்க் கொள்ளத்தக்க விவசாயியை, பெருந்திரளுக்கு உதாரணமான, பெருந்திரளானோரின் மனப்பாங்குக்கு மெய்யான பிரதிநிதியான விவசாயியை) பொருளாதாரம் புத்துயிர் பெறுவதன் அனுகூலத்தை உணரும்படிச் செய்யவும், மேலும் முறையாகவும் விடாப்பிடியாகவும் மேலும் விரிவாகவும் வெற்றிகரமாகவும் பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக இதைப் பயன்படுத்திக் கொள்ளவும் தொடங்கி விட்டோம் என்பதாய்த் தெரிகிறது.

வர்த்தகத்தின் பால் பரம அலட்சியப் போக்கு கொண்ட ''உணர்ச்சி வயப்பட்ட சோஷலிசத்துக்கோ'', பழைய ருஷ்ய, பகுதியளவு பிரபுக்குலத்து, பகுதியளவு நாட்டுப்புறத்து, தந்தைவழிச் சமூகத்து மனப்பான்மைக்கோ நாம் சரணடையப் போவதில்லை. இடைக்காலப் பொருளாதார வடிவங்கள் யாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், இது அவசியமென்பதால் பயன்படுத்தக் கற்றுக் கொண்டாக வேண்டும். விவசாயிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான இணைப்பை வலிமையாக்கும் பொருட்டு, நாசமாகிவிட்ட அவதிக்குள்ளான நமது நாட்டின் பொருளாதாரத்தை உடனடியாக உயிர் பெற்றெழச் செய்யும் பொருட்டு, தொழில் துறையை மேம்படுத்தும்

பொருட்டு, மின்னுக்கம் செய்வது போன்ற வருங்காலத்துக்குரிய மிகவும் விரிவான ஆழ்நிலை செயற்பாட்டுக்குரிய நடவடிக்கைகளுக்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு இவையாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

புரட்சியின் பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினை மார்க்சியம் ஒன்றுல் மட்டுமே துல்லியமாகவும் பிழையின்றியும் வரையறுக்க முடிந்துள்ளது. அதே போதில் மார்க்ஸ் இந்த உறவை ஒரு கோணத்தில் மட்டுமிருந்துதான்—ஒரே நாட்டில் தான் என்றுலும் பாட்டாளி வர்க்கத்தின், ஓரளவுக்கு நிரந்தரமான நீடித்து நிலவும் முதலாவது வெற்றிக்கு முற்பட்டதான நிலைமைகளில் மட்டுந்தான்—கண்ணுற முடிந்தது. இந்த நிலைமைகளில், பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவே சீர்திருத்தங்கள் என்பதுதான் சரியான உறவுக்குரிய அடிப்படையாய் இருந்தது. முதலாளித்துவ உலகு முழுவதிலும் இந்த உறவுதான் பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போர்த்தந்திரத்தின் அடிப்படையாகும், இரண்டாவது அகிலத்தின் ஊழல் மலிந்த தலைவர்களும் இரண்டரையாவது அகிலத்தின் போலிப் புலமையும் பொய் மினுக்கும் கொண்ட தீரர்களும் திரித்துப் புரட்டியும் மூடிமறைத்தும் வரும் அரிச்சுவடிப்பாடமாகும். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குப் பிற்பாடு—ஒரேயொரு நாட்டில்தான் இந்த வெற்றி என்ற போதிலும்—புரட்சியின் பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினில் புதியதொன்று இடம் பெறுகிறது. கோட்பாட்டினில் அது முன்பு போலவே தான் இருக்கிறது. ஆனுல் வடிவத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது—மார்க்சினுலுங்கூட முன்னறிந்து கொள்ள முடியாத மாற்றம். ஆயினும் மார்க்சியத்தினுடைய தத்துவஞானத்தின், அரசியலின் அடிப்படையிலேதான் இதைப் புரிந்து கொள்ள முடியும். பிரேஸ்த் பின்வாங்குதலை நம்மால் வெற்றிகரமாய் நடத்த முடிந்தது ஏன்? ஏனென்றுல், பின்வாங்குவதற்கு இடமிருக்கும்படி அந்த அளவுக்கு நாம் முன்னேறிச் சென்றிருந்தோம். அப்படித் தலைதெரிக்கும் வேகத்தில், ஒருசில வாரங்களுக்குள், 1917 அக்டோபர்

25லிருந்து பிரேஸ்த் சமாதான உடன்படிக்கைக்குள், நாம் சோவியத் அரசைக் கட்டியெழுப்பினோம், ஏகாதிபத்தியப் போரிலிருந்து புரட்சிகர முறையில் வெளியேறினோம், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை நிறைவுறச் செய்தோம்; ஆகவே பின்னோக்கி அமைந்த அந்தப் பெரிய நடையும்கூட (பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை) நாம் இந்த ''இடை ஓய்வைப்'' பயன்படுத்திக் கொள்ளவும் கல்ச்சாக்கையும் தெனீக்கினையும் யுதேனிச்சையும் பில்சூட்ஸ்கியையும் விராங்கெலையும் எதிர்த்து வெற்றிகரமாய் முன்னேறிச் செல்லவும் நமக்குப் போதுமான இடம் விட்டுவைத்தது.

பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு முன்பு சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவாய் இருக்கின்றன. வெற்றிக்குப் பிற்பாடு (சர்வதேச அளவில் இன்னமும் ''இடைவிளைவாகவே'' இருப்பினும்) வெற்றி ஈட்டப் பெற்ற நாட்டுக்கு, மூச்சு விடுவதற்கான அவசியமும் நியாயமுமான சிறிது நேர இடைவெளியாக அமைகிறது; மிகவும் கடுமையாய்ப் பிரயாசையில் ஈடுபட்டிருந்ததைத் தொடர்ந்து இப்பொழுது ஏதேனும் சில மாற்றமைவுகளைப் புரட்சிகர வழியில் சாதிக்கப் போதுமான பலம் இல்லை என்பது தெளிவாகிறது. வெற்றியானது பலவந்தப் பின்வாங்குதலிலுங்கூட உறுதியுடன் நிற்க, பொருளாயத வழியிலும் ஆன்மீக வழியிலும் உறுதியுடன் நிற்க ''உள்ளார்ந்த பலத்தைப்'' படைக்கிறது. பொருளாயத வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, படு தோல்வி அளித்து விடாதபடி பகைவனைத் தடுப்பதற்குப் போதுமான அளவுக்குப் பலத்தில் மேல்நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்று அர்த்தம். ஆன்மீக வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, நாம் மனந்தளர்ந்துவிடவும் ஒழுங்கு குலைந்துவிடவும் இடந் தராதிருத்தல், நிலைமையைப் பற்றிய நிதானம் தவறாதிருத்தல், உத்வேகத்தையும் மன உறுதியையும் பாதுகாத்து, நெடுந்தொலைவு—ஆனால் அளவு மீறாமலும், தக்க தருணத்தில் பின்வாங்குதலை நிறுத்தித் தாக்குதலுக்குத் திரும்பும்படியும்—பின்வாங்க முடியும் படியாய் இருத்தல் என்று அர்த்தம்.

நாம் அரசு முதலாளித்துவத்துக்குப் பின்வாங்கினோம். ஆனால் அளவு மீறி நெடுந்தொலைவு பின்வாங்கவில்லை. இப்பொழுது வர்த்தகத்தில் அரசாங்க ஒழுங்கியக்கத்துக்கு நாம் பின்வாங்கிச் செல்கிறோம். ஆனால் அளவு மீறிப் பின்வாங்கி விடப் போவதில்லை. இந்தப் பின்வாங்குதல் முடிவுறும் நிலைக்கு வருகிறது என்பதற்குக் கண்கூடான அறிகுறிகள் தெரிகின்றன. அதிக தொலைவிலில்லாத வருங்காலத்தில் நாம் இந்தப் பின்வாங்குதலை நிறுத்திவிட முடியும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. அவசியமாயுள்ள இந்தப் பின்வாங்குதலை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உணர்வு பூர்வமாகவும் ஒருமனதாகவும் தப்பெண்ணங்களிலிருந்து விடுபட்டும் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இதை நாம் சீக்கிரமாகவே நிறுத்த முடியும்; அவ்வளவுக்கு அவ்வளவு இதனை அடுத்து நமது வெற்றிகர முன்னேற்றம் நிலையானதாகவும் வேகமுடையதாகவும் விரிவானதாகவும் இருக்கும்.

நவம்பர் 5, 1921

பிராவ்தா, இதழ் 251,
நவம்பர் 6 மற்றும் 7, 1921

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 221-229

ஜெனேவா மாநாட்டு சோவியத் பிரதிநிதிக் குழுவுக்கு விடுத்த நெறிமுறைகள்[33]

1

ஜெனேவா மாநாட்டு சோவியத் பிரதிநிதிக் குழுவுக்கு ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டி விடுத்த நகல் நெறிமுறைகள்

பின்வரும் மத்தியக் கமிட்டியின் நகல் நெறிமுறைகளை நான் பிரேரேபிக்கிறேன்:

நிபுணர்கள் பட்டியலை அனுமதிக்காமலே, மத்தியக் கமிட்டி இதில் நியமனம் செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் ஒரு வாரத்துக்குள் ஜெனேவா மாநாடு முழுவதற்குமான (சம்பந்தப்பட்ட நிபுணர் ஆய்வுக்குரிய வரையறைக்குள் வரும் பிரச்சினைகள் மீது) வேலைத்திட்டம் மற்றும் போர்த்தந்திரம் குறித்த ஒரு பொழிப்பைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று நெறிமுறை செய்கிறது. நிபுணர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் தமது பிரதிநிதிகளுக்கு எல்லா மக்கள் கமிசார்களும் இரண்டு நாட்களுக்குள் எழுத்து மூலமான சான்றிதழ்களையும் உத்தரவாதங்களையும் கட்டாயமாகக் கொடுத்துவிட வேண்டும். இந்த நிபுணர்கள் ஐரோப்பாவில் தமக்குத்தாமே அவமானகரமாக நடந்து கொள்வார்களானல் அதற்கு அவர்களும் மக்கள் கமிசார்களும் பொறுப்பாளிகளாகக் கருதப்படுவார்கள்.

ஜெனேவா மாநாடு சம்பந்தப்பட்ட நெறிமுறைகள் வளர்க்கவும் கூட்டவும் நான் பின்வருவனவற்றைப் பிரேரேபிக்கிறேன்:

1. நமது பிரதிநிதிக் குழுவின் உரை எந்த வடிவில் எந்த நேரத்தில் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதை முன்கூட்டி

நிர்ணயிக்காமலே, இந்தப் பிரதிநிதிக் குழு எல்லா அதிமுக்கியமான பிரச்சினைகள் மீதும் ஒரு முழுமையான, சுயேச்சையான, ஒன்றிணைந்ததான வேலைத்திட்டத்தை உருவாக்கும் திட்டவட்டமான கடமை கொண்டதாகும் என்று மத்தியக் கமிட்டி கருதுகிறது.

2. இந்த வேலைத்திட்டம் ஒரு முதலாளித்துவ-அமைதிவாத வேலைத்திட்டமாகவே இருத்தல் வேண்டும். நாம் இங்கு நமது கருத்துக்களுக்கு உகந்த ஒரே திட்டமான (இதைச் சுருக்கமாக வகுத்து முன்வைத்து) ஒரு கம்யூனிஸ்டு வேலைத்திட்டத்தை முன்வைக்கவில்லை என்று தக்க நேரத்திலும் தெட்டத்தெளிவாகவும் நமது பிரதிநிதிக் குழு வெளியிடும் நிபந்தனையுடன் கூடியதாக இது இருத்தல் வேண்டும். காரணம் நாம் அடிப்படையிலேயே வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள இதர தூதுக் குழுக்களின் முன்பு சீர்திருத்தவாத பாணியிலான பல நிவாரண முறைகளையும் நடவடிக்கைகளையும் வைக்க விரும்புகிறோம். இவை முதலாளித்துவக் கருத்துக்களை ஆதரிக்கும் நபர்களால் இங்கிலாந்திலும் இதர முதலாளித்துவ நாடுகளிலும் ஏற்கெனவே பகுதிகளில் பிரேரேபிக்கப்பட்டுள்ளன. ஒரு சில நிலைமைகளின் கீழ் இந்த நிவாரண முறைகளின் வேலைத்திட்டம் இன்றைய இடர்ப்பாடான நிலைமையை அமைதிப்படுத்த உதவ முடியும் (இதிலிருந்து விடுபட சாத்தியமான ஒரே மெய்யான வழி முதலாளித்துவச் சொத்துடைமையின் அடிப்படைகள் அனைத்திடமிருந்தும் இறுதியாக முறித்துக் கொள்வதே).

3. இந்த வேலைத்திட்டத்தின் பிரதான அம்சங்களின் தற்காலிகமான பட்டியலாவது:

(1) எல்லாக் கடன்களையும் ரத்துச் செய்தல்;

(2) எல்லாக் காலனிகள் மற்றும் சார்பு நாடுகள், தேசிய இனங்கள் விஷயத்தில் ''ஐரிஷ்'' தீர்வைப்[34] பிரயோகித்தல்;

(3) வெர்சேய் சமாதான ஒப்பந்தத்தை அடிப்படையாகத் திருத்தம் செய்தல்;

(4) போரினால் படு நாசமடைந்து தமது கால்களில் மீண்டும் எழுந்து நிற்க வாய்ப்பு இல்லாதபடி

மிகவும் பலவீனமாக இருப்பதும், அதே போதில் பேரளவிலான உணவு மற்றும் மூலப் பொருள்களை மேலால் வழங்கும் நாடுகளாக உலகப் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமானவையாக விளங்குவனவுமான நாடுகளுக்கு சாதகமான நிபந்தனைகளின் மீது கடன்களை வழங்குதல்;

(5) பல நாடுகளின் செலாவணி அமைப்புகளுக்கு ஒருமுகமான சர்வதேச தங்க அலகினை நிறுவுதல், இந்த அலகைப் புகுத்துவதற்குரிய நடவடிக்கைகள்;

(6) பணவீக்கம் மற்றும் பணத்தின் மதிப்பிறக்கத்தை எதிர்த்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து பல நாடுகளின் மத்தியில் ஓர் உடன்பாடு ஏற்படுத்தல் (இந்த நடவடிக்கைகள் சிலவற்றை வரிசைப்படுத்திக் கூறுக);

(7) எரிபொருள் நெருக்கடியைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும், ஒருமுகமான திட்டமிட்ட மின்சாரமயமாக்கலின் அடிப்படையில் மின்விசை ஆதாரங்களை மிகவும் சீராகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றியும் பல நாடுகளின் இடையே உடன்பாடு ஏற்படுத்தல்;

(8) மூலப் பொருள்கள் மற்றும் உணவுப் பண்டங்கள் பட்டுவாடாவை நிர்வகிப்பதற்காக சர்வதேசப் போக்குவரத்து சாதனங்களை மறுசீரமைப்பது மற்றும் மேம்படுத்துவது சம்பந்தமான மிகவும் அவசரமான நடவடிக்கைகள் குறித்தும் அதே ஏற்பாடு.

மற்றும் இத்தியாதி.

4. இத்தகைய திட்டம் பேச்சுக்கள் வழி விரிவிளக்கம் செய்யப்பட வேண்டும். இது சாத்தியமில்லை எனில் 3—4 ஐரோப்பிய மொழிகளில் அச்சடித்து பிரதிநிதிகளுக்கும் பத்திரிகைகளுக்கும் (ஒரு பொழிப்பு வடிவத்தில் எனினும்) வினியோகிக்கப்பட வேண்டும். (எப்படியும் இது அச்சடிக்கப்பட வேண்டும்.)

5. இத்தகைய ஒரு வேலைத்திட்டத்தை (இதன் ஏதேனும் ஒரு பகுதியின்) வளப்படுத்தி விளக்கி தாங்கி ஆதரிக்க கூடியவர்களும் இந்த ஆற்றலை நிரூபித்துக் காட்டியுள்ளவர்களுமான

அத்தகைய பேர்கள் மட்டுமே நிபுணர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இந்த நிபுணர்கள் தமது சொந்தக் கையொப்பமிட்ட ஐரோப்பாவுக்கு உரிய தமது வேலைத்திட்டம் மற்றும் திட்டங்களை அச்சடித்து வைத்திருக்க வேண்டும். ((இத்தகைய ஒரு வேலைத்திட்டத்தை மூன்ரும் அகிலத்தின் பத்திரிகைகளின் கட்டுரைகள் எதிரொலிக்கும்: ''திட நம் பிக்கையூட்டுவதற்கான'' இந்த முயற்சியால் கேடு எதுவும் இல்லை, ஆனல் கிட்டத்தட்ட இது பயனற்றது, காரணம் தேவையாக இருப்பது ஒரு புரட்சியே; இரண்டாம் மற்றும் இரண்டரையாம் அகிலங்களின் பத்திரிகைகள் என்ன கூறு கின்றன என்பதைப் பார்ப்போம்.))

பிப்ரவரி 6, 1922ல் எழுதப்பட்டது

ஐந்தாவது ருஷ்யப் பதிப்பின் நூல் திரட்டு, தொகுதி 44ல், 1964ல் முதலில் முழுமையாக வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 44, பக்கங்கள் 382-384

2

தோழர் கி. வ. சிச்சேரினுக்குக் கடிதம்

தோழர் சிச்சேரின்! நீங்கள் கவலையால் மிகவும் உணர்ச்சி வசப்படுகிறீர்கள். ஜெனேவாவில் எப்படி நடந்துகொள்வது என்பது குறித்த திட்டத்தை விவாதிப்பதற்கு நமக்கு பிப்ர வரி 22 அல்லது 23ந் தேதிகளில் இன்னும் அவகாசம் இருக் கும்.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு அமைதிவாதம் ஒரு வேலைத்திட்டமாக இருப்பதை எதிர்த்து நானும் நீங் களும் ஒருங்கே போராடினேம். அந்தளவு தெட்டத்தெளி வானது. ஆனல் விரோதியை, முதலாளித்துவ வர்க்கத்தை நயப்படுத்துவதற்கு அமைதிவாதிகளை அந்தக் கட்சி பயன்

படுத்துவதை எவரேனும் எங்கேனும் எப்போதேனும் மறுதலித்ததுண்டா?[35]

தங்கள் லெனின்

பிப்ரவரி 16, 1922ல் எழுதப்பட்டது

ஐந்தாவது ருஷ்யப் பதிப்பின் நூல் திரட்டு, தொகுதி 54ல், 1965ல் முதலில் வெளியிடப்பட்டது	*நூல் திரட்டு, தொகுதி 54, பக்கங்கள் 170-171*

3

ஜெனோவாவில் சோவியத் பிரதிநிதிக் குழுவின் பணிகள் பற்றிய ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் நகல் தீர்மானம்

அரசியல் பியூரோ உறுப்பினர்கள் மத்தியில் மட்டுமே சுற்றுக்கு விடப்படும்

மத்தியக் கமிட்டியின் நகல் தீர்மானம்

1. தோழர் லித்வீனவின் ஆய்வுரைகளில் தரப்பட்டுள்ள நிலைமை மற்றும் (ஜெனோவாவில் நமது பிரதிநிதிக் குழுவின்) பணிகள் பற்றிய மதிப்பீடு சரியானது என்பதை மத்தியக் கமிட்டி அங்கீகரிக்கிறது.

2. உதவித் தலைவர் தோழர் சிச்சேரின் பிரதிநிதிக் குழுவின் தலைவராகச் செயல்படுவதற்கு மத்தியக் கமிட்டி முழு அதிகாரமும் வழங்குகிறது.

3. தோழர் சிச்சேரின் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது அங்கிருந்து பயணப்பட்டாலோ அவரது அதிகாரங்கள் பின்வரும் மூவர் குழுக்களைச் சேர்ந்த ஒருவருக்கு மாற்றித் தரப் படும்: அ) லித்வீனவ், கிராசின், ரகோவ்ஸ்கி; ஆ) லித்வீனவ், இயோஃபெ, வரோவ்ஸ்கி.

4. நமது பிரதிநிதிக் குழு கான் நிபந்தனைகளை[36] ஒத்துக் கொள்ளும் பிரச்சினையைத் தட்டிக் கழிக்க முயல வேண்டும். இது இயலாது போய், நம்மிடம் ஒரு நேரடி இறுதி எச்சரிக்கை தரப்படும் பட்சத்தில் நாம் கிராசின் சூத்திரத்தைச் செயல்படுத்த முயல வேண்டும்: ''எல்லா நாடுகளும் தமது அரசுக் கடன்களை அங்கீகரிக்கின்றன, மற்றும் தமது அரசாங்கங்களின் செயல்களால் விளைந்த சேதம் மற்றும் இழப்புக்களை ஈடு செய்ய ஒப்புக் கொள்கின்றன.''

இதுவும் செய்ய இயலாது போகும் பட்சத்தில், நாம் முறித்துக் கொண்டு வெளியேற வேண்டும். தனிப்பட்ட கடன்களை அங்கீகரிக்க நாம் தயாராக இருப்பதாக உறுதியாகச் சாற்ற வேண்டும். ஆனால், ஒளித்து விளையாடுவதை விரும்பாத காரணத்தால் அவை நாம் கொடுக்க வேண்டிய தொகை முழுவதுடனும் சேர்த்து நமது எதிர் கோரிக்கைகளால் நிறைவு செய்யப்பட்டு விட்டதாக நாம் கருதுகிறோம் என்று சுட்டிக் காட்ட வேண்டும். நமக்கும் எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையே முக்கிய நடுவர் எவரையும் நாம் ஒப்புக் கொள்ள மாட்டோம். ஏனெனில் தகராறு இரு சொத்துடைமை அமைப்புகளுக்கு இடையிலானதாகும்.

நாம் முறித்துக் கொண்டு வெளியேற வேண்டியிருக்கும் பட்சத்தில், இந்த முறிவுக்குப் பிரதானமான ஏக காரணம் ஒரு சில தனியார் முதலாளிகளின், உர்கார்ட் இத்தியாதியரின் பேராசையே என்பதை நாம் முற்றிலும் தெளிவாகக் கூறிவிட வேண்டும். இவர்களுக்குத்தான் அரசாங்கங்கள் உதவுகின்றன.

அதிகபட்ச சலுகை என்ற முறையில் இந்த முதலாளிகளுக்குப் பின்வருவனவற்றை வழங்கலாம்: சலுகைகள் விஷயத்தில் ஒரு முன்னுரிமை (அதாவது, அ. எனப்பட்டவருக்கு அவர்களது முன்னாள் சொத்துக்களின் மீது இன்னின்ன நிபந்தனைகளின் பேரில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒரு சலுகையை வழங்கும் பட்சத்தில் இதன் முன்னாள் உரிமையாளருக்கு இதே நிபந்தனைகளின் பேரில் தர ஒப்புக் கொள்கிறோம்).

5. நாம் நமது வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்து கொள்வதில் இருந்து நம்மைத் தடுப்பதற்கு முதலாளித்துவ வர்க்கத்தினர் முயற்சி செய்யும் சாத்தியப்பாடு இருப்பதன் காரணமாக, நாம் ஆக முதல் உரையிலேயே இந்த வேலைத் திட்டத்தை விவரிக்காவிடினும் கூட, வகுத்து முன்வைக்கவும் அல்லது குறைந்த பட்சம் அதை உருவரை செய்யவும் (இன்னும் மேலதிகமான விவரங்களுடன் இதை வெளியிடவும் வேண்டும்) எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்.

6. நாம் நமது கம்யூனிஸ்டுக் கருத்துக்களை மூடி மறைக்காமல், இவற்றை மிகவும் சுருக்கமாகவும் போகிற போக்கிலும் குறிப்பிடுவதோடு (உதாரணமாக, ஒரு சார்புறுப்பு வாசக மீதில்) அமைந்துவிட வேண்டும் என்பவை நமது வேலைத்திட்டத்தில் அடங்கும். அதோடு, நமது கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்கு இது சரியான இடம் என்று நாம் கருதவில்லை எனவும் காரணம் நாம் வாணிக உடன்படிக்கை செய்து கொள்ளவும், மற்ற (முதலாளித்துவ) முகாமில் இருக்கும் அமைதிவாதிகள் பிரிவுடன் உடன்பாடு எட்டுவதற்கு ஒரு முயற்சி நடத்தவுமே வந்திருக்கிறோம் எனவும் நேர்மையாக அறிவித்துவிட வேண்டும்.

அந்த முகாமின் அமைதிவாதிகள் பிரிவு (அல்லது வேறு சில விசேஷமாக தேர்ந்தெடுக்கப்பட்ட கண்ணியமான தொடர்) என்பது மூலம் நாம் இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்களின் மாதிரியிலான மற்றும் கீன்ஸ் மாதிரியிலான குட்டிமுதலாளித்துவ, அமைதிவாத, அரை அமைதிவாத ஜனநாயகவாதிகளையே நாம் கருதி அழைக்க வேண்டும்.

ஜெனேவாவில் நமது அரசியல் பணிகளில், முதன்மையானது அல்லாவிடினும், முக்கியமானவற்றுள் ஒன்று இந்த முதலாளித்துவ முகாமில் இருக்கும் இதரர்களிடமிருந்து இந்தப் பிரிவை பொறுக்கி எடுத்து, இந்தப் பிரிவினைப் புகழ்ச்சி செய்ய முயன்று, அவர்களுடன் ஒரு வாணிக உடன்படிக்கை மட்டுமல்ல, ஆனல் அரசியல் உடன்பாடும் கூட சாத்தியமானது விரும்பத்தக்கது என்று நாம் கருதுவதாக அறிவிக்க வேண்டும் (புதிய அமைப்பு முறையை நோக்கிய

முதலாளித்துவத்தின் சமாதான பூர்வமான பரிணமத்திற் கான மிகச் சில வாய்ப்புகளில் ஒன்று என்ற முறையில்—கம் யூனிஸ்டுகளாகிய நாம் இதைப் பெருமளவு நம்பவில்லே, ஆனுல் பகைமை கொண்ட இதர வல்லரசுகளின் பெரும் பான்மையின் எதிரே நிற்கும் ஒரு வல்லரசின் பிரதிநிதிகள் என்ற முறையில் இதற்கான முயற்சி செய்ய முயல ஒப்புக் கொள்கிறேம்,அது நமது கடமை என்பதாகக் கருதுகிறேம்).

முதலாளித்துவ வர்க்கத்தின் அமைதிவாதப் பிரிவை வலுப்படுத்தவும், தேர்தல்களின் அதன் வெற்றி வாய்ப்பு களேச் சிறிதளவே எனினும் அதிகரிக்கவும் சாத்தியமானதும் அசாத்தியமானதுங்கூடவான எல்லாவற்றையும் செய்ய வேண்டும். இது முதலாவதாகும். இரண்டாவதாக, ஜெனே வாவில் நமக்கு எதிராக ஒன்றுசேர்ந்து நிற்கப் போகும் முதலாளித்துவ நாடுகளேப் பிளவுறுத்த வேண்டும். இதுவே ஜெனேவாவில் நமது இரட்டை அரசியல் பணியாகும், கம் யூனிஸ்டுக் கருத்துக்களே விரிவுபடுத்துவது அல்லவே அல்ல.

7. அரசுத் திட்டக் கமிஷனின் ஆராய்ச்சிகளின் உணர் விலும், இந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையிலும்—ருஷ்யா விலும் ஐரோப்பாவிலும் தேசியப் பொருளாதாரத்தை மறு சீரமைப்பதற்கான திட்டத்தை (உரைகளில் இல்லாவிடினும் அச்சுவடிவில்) விளக்கமாக விரித்துரைத்து சாத்தியமான வரைப் பரவலாக வெளியிட சகல முயற்சிகளும் செய்யப்பட வேண்டும்.

8. ஜெனேவாவில் முதலாளித்துவ முகாம் நாம் அமைதி வாதம் பற்றிய பிரச்சினேகளேத் தொடக் கூடாது என்றும், மாருக குறுகிய வாணிக விஷயங்கள் பற்றி மட்டுமே பேச வேண்டும் என்றும் இறுதி எச்சரிக்கை விடுக்கும் பட்சத்தில், நாம் நமது வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும், ஆனுல், இந்த மாநாட்டில் நமக்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன—அமைதிவாத நோக்கம், வாணிக நோக்கம்—என்பதாகச் சொல்லி இந்த இறுதி எச்சரிக்கைக்கு உடன்பட வேண்டும். இது ஒன்றை மட்டுமே விட்டுவைக்கும்.

9. அமைதிவாத வேலேத்திட்டத்தை விரிவிளக்கம் செய் யும் பொறுப்பை மத்தியக் கமிட்டி பிரதிநிதிக் குழுவிடம்

விட்டுவிட்டு, பிரதான நெறிமுறைகளை மட்டுமே வற்புறுத்துகிறது: இக்குழுவினர், சர்வதேச முதலாளி வர்க்கத்தின் அமைதிவாத முகாம் படுமோசமான முதலாளித்துவ, ஆக்கிரமிப்பு முதலாளித்துவ, பிற்போக்கு முதலாளித்துவ முகாமிடமிருந்து ஆழமாகப் பிளந்து கொண்டு வெளியேறும் பொருட்டு இதை சாத்தியமான அளவு விரிவாக விளக்க முயல வேண்டும்.

10. வாணிகம் மற்றும் சலுகைகள் பற்றிய பிரச்சினையில் (கடன்கள் பிரச்சினை உட்பட) வட பகுதி நாடுகள் இத்தியாதி பிரதான உத்தரவாதமாக முன்வைக்கப்பட வேண்டும். நமது அரசின் உரிமைகள் ஊறுபடுத்தப்படுவதை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம். தந்தி மூலமான மத்தியக் கமிட்டியின் விசேஷ ஒப்புதல் இல்லாமல் எந்த உடன்பாட்டிலும் கையொப்பமிடக் கூடாது.

லெனின்

பிப்ரவரி 24, 1922ல் எழுதப்பட்டது

ஐந்தாவது ருஷ்யப் பதிப்பின் நூல் திரட்டு, தொகுதி 44ல், 1694ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 44, பக்கங்கள் 406-408

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து

பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா சஞ்சிகையின்[37] பொது நோக்கங்கள் குறித்துச் சொல்ல வேண்டியவை யாவற்றையும் தோழர் திரோத்ஸ்கி இதழ் 1—2ல் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார், நன்றாகவே சொல்லியிருக்கிறார். சஞ்சிகையின் ஆசிரியர்கள் இதழ் 1—2ன் அறிமுக உரையில் குறிப்பிட்டிருக்கும் பணியின் உள்ளடக்கத்தையும் திட்டத்தையும் மேலும் துல்லியமாய் வரையறுக்கும் சில பிரச்சினைகள் குறித்து நான் பரிசீலிக்க விரும்புகிறேன்.

பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா சஞ்சிகையை மையமாய்க் கொண்டு ஒன்றுசேர்ந்துள்ளார்கள் எல்லோருமே கம்யூனிஸ்டுகளல்ல, ஆனால் எல்லோருமே முரணற்ற பொருள்முதல்வாதிகள் என்று இந்த அறிமுக உரை கூறுகிறது. கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளல்லாதோருமாகிய இந்தக் கூட்டணி முற்றிலும் அத்தியாவசியமானது என்றும், இந்தச் சஞ்சிகையின் நோக்கங்களைச் சரிவர வரையறுப்பதாயுள்ளது என்றும் நினைக்கிறேன். கம்யூனிஸ்டுகள் செய்யக்கூடிய மிகப் பெரிய, மிகவும் அபாயகரமான தவறுகளில் ஒன்று என்னவெனில் (மாபெரும் ஒரு புரட்சியின் துவக்கத்தை வெற்றிகரமாய் நடத்தி முடிக்கும் புரட்சியாளர்கள் பொதுவாகச் செய்யும் தவறு இது), புரட்சியாளர்கள் மட்டும் சேர்ந்து ஒரு புரட்சியை நடத்திவிட முடியுமெனக் கருதுவதுதான். இதற்கு மாறாய், புரட்சிகரமான எந்த முக்கிய பணியும் வெற்றி பெற வேண்டுமாயின், மெய்யாகவே உயிர்ச் சக்தி கொண்ட முன்னேறிய வர்க்கத்தின் முன்னணிப் படைக்குரிய பங்கை மட்டுமே புரட்சியாளர்களால்

ஆற்ற முடியுமென்ற கருத்து புரிந்து கொள்ளப்பட்டு, செயல் படுத்தப்படுவது அவசியமாகும். முன்னணிப் படையானது தான் தலைமை தாங்கிச் செல்லும் திரளான மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளவும், இந்த முழுத் திரளினருக்கும் மெய்யாகவே தலைமை தாங்கி இவர்களை முன்னே அழைத்துச் செல்லவும் கூடியதாய் இருக் கையில்தான் அது முன்னணிப் படைக்குரிய பணிகளைச் செய்து முடிக்கிறது. மிகப் பல்வேறுபட்ட செயல் துறை களிலும், கம்யூனிஸ்டுகளல்லாதோருடன் கூட்டணி கொள் ளாமல் கம்யூனிசக் கட்டுமானப் பணி எதுவும் வெற்றிகர மாய் நடந்தேறுவது சாத்தியமன்று.

பொருள்முதல்வாதத்தையும் மார்க்சியத்தையும் பேணிப் பாதுகாப்பதென்று பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா மேற் கொண்டிருக்கும் பணிக்கும் இது பொருந்துவதாகும். அதிர்ஷ்டவசமாய் ருஷ்யாவில் முன்னேறிய சமூகச் சிந்தனை யின் பிரதான போக்குகள் உறுதியான பொருள்முதல்வாத மரபினை அடிப்படையாய்க் கொண்டுள்ளவை. கி. வ. பிளெ ஹானவை அன்னியில் செர்னிஷேவ்ஸ்கி ஒருவரை மட்டும் குறிப்பிட்டாலே போதும். நவீன கால நரோதியவாதிகள் (மக்கள் சோஷலிஸ்டுகளும்[38] சோஷலிஸ்டு-புரட்சியாளர் களும் ஏனையோரும்) அடிக்கடி செர்னிஷேவ்ஸ்கியிடமிருந்து பின்வாங்கிச் சென்றுள்ளனர்;இவர்கள் ஐரோப்பிய விஞ்ஞா னத்தின் ''இறுதி முடிவாய்ச் சொல்லப்படுகின்ற'' பகட்டான மினுக்கைக் கண்டு மயக்குண்டு, முதலாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவத் தப்பெண்ணங்களுக்கும் முதலாளித்துவப் பிற்போக்கிற்கும் ஏதேனும் ஒரு வகையிலான அடிவருடித் தனம் இந்த மினுக்கின் மறைவில் பதுங்கியிருப்பதைக் கண்டு கொள்ளும் திறனற்றோராய், புதிய பாணியிலாகிய பிற்போக்குத் தத்துவஞானப் போதனைகளைத் தேடிப் பின் வாங்கிச் சென்றுள்ளனர்.

ஆயினும் எப்படியும் நமது ருஷ்யாவில் கம்யூனிஸ்டுகளல் லாதோரின் முகாமைச் சேர்ந்த பொருள்முதல்வாதிகள் இன் னமும் இருந்து வருகின்றனர், ஓரளவு நீண்ட காலத்துக்கு இனியும் நிச்சயம் இருந்தே வருவர். தத்துவஞானப் பிற்

போக்கையும் ''படித்த சமூகத்தார்'' என்பதாய்ச் சொல்லப்படுவோரின் தத்துவஞானத் தப்பெண்ணங்களேயும் எதிர்த்துப் போராடும் கூட்டுப் பணியிலே, முரணற்றதும் போர்க்குணம் கொண்டதும் ஆகிய பொருள்முதல்வாதத்தின் ஆதரவாளர் எல்லோரையும் படைதிரட்டிக் கொள்வது நமது முழுமுதற் கடமையாகும். முதலாளித்துவ நாடுகளில் வெகுவாய் மலிந்து, இந்நாடுகளின் விஞ்ஞானிகள், கருத்துரை எழுத்தாளர்களின் மதிப்புக்குரியனவாய் இருந்து வரும் தத்துவஞானப் போக்குகளேப் பற்றிய அடிப்படை மார்க்சியக் கருத்தோட்டத்தை டித்ஸ்கென் முதியவர்—அவருடைய எழுத்தாளர் மகனுடன், எவ்வளவுக்கு எவ்வளவு அகம்பாவம் கொண்டிருந்தாரோ அவ்வளவுக்கு அவ்வளவு தோல்வியும் கண்டவரான அந்த மகனுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது—பிழையின்றியும் மிகப் பொருத்தமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்; நவீன காலச் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலும் தத்துவஞானப் பேராசிரியர்கள் நடைமுறையில் ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே'' ஆவாரெனக் கூறினுர்.[39]

நமது ருஷ்யப் படிப்பாளர்களுக்கு, ஏனைய எல்லா நாடுகளிலுமுள்ள இவர்களுடைய சோதரர்கள் ஆசைப்படுவது போலவே முன்னேறியவர்களாய்த் தம்மைக் கருதிக் கொள்ள ஆசைப்படும் இவர்களுக்கு, டித்ஸ்கெனுடைய சொற்கள் வெளியிடும் அபிப்பிராயத்தின் நிலேக்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்ல மனம் ஒப்பவில்லே. உண்மையில் நேர் முன்னல் நின்று தலே நிமிர்ந்து அதைப் பார்க்க முடியவில்லே என்பதால்தான் இவர்களுக்கு மனம் ஒப்பவில்லே. ஆதிக்கத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தை நவீன காலப் படித்தச் சமூகத்தார் அரசாங்க வழியிலும், மற்றும் பொதுவாய்ப் பொருளாதார வழியிலும், அன்ருட வாழ்விலும், ஏனைய எல்லா வழிகளிலும் சார்ந்து வாழ வேண்டியிருப்பதைச் சற்றே சிந்தித்துப் பார்த்தால் போதும், சுருக்கெனத் தைக்கும்படி டித்ஸ்கென் கூறிய சொற்கள் முற்றிலும் உண்மையே என்பது தெளிவாய் விளங்கும். ஐரோப்பிய நாடுகளில் இப்படி நாளொரு மேனியாய் உதித்தெழும் புதுப்

பாணித் தத்துவஞானப் போக்குகளில், உதாரணமாய் ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டதை ஒட்டி எழுந்தவற்றிலிருந்து தொடங்கி, தற்போது ஐன்ஷ்டைனைப் பற்றிக் கொண்டு தொங்க எத்தனிப்பவை வரையிலான இந்தப் போக்குகளில் மிகப் பெருவாரியானவற்றை நினைவு கூர்ந்தாலே போதும், முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க நலன்கள், அதன் வர்க்க நிலை, மதத்தின் எல்லா வடிவங்களுக்கும் அது அளிக்கும் ஆதரவு ஆகிய இவற்றுக்கும், நவநவீன தத்துவஞானப் போக்குகளின் சித்தாந்த உள்ளடக்கத்துக்கும் இடையிலுள்ள இணைப்பைப் புரிந்து கொண்டுவிடலாம்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் பத்திரிகையாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகையானது பிரதானமாய்ப் போர்க்குணம் கொண்ட பத்திரிகையாகவே இருக்க வேண்டுமென்பது. அதாவது தற்காலத்திய ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகள்'' எல்லோரையும்—அதிகாரபூர்வமான விஞ்ஞானத்தின் பிரதிநிதிகளாய்ச் செயல்படுவோராயினும் சரி, ''ஜனநாயக இடதுசாரி, அல்லது சித்தாந்த வழி சோஷலிஸ்டு'' பத்திரிகையாளர்களாய்த் தம்மை அழைத்துக் கொள்ளும் அதிகாரபூர்வமல்லாத தன்னிச்சையாளர்களாயினும் சரி இவர்கள் எல்லோரையும்— தயங்காது அம்பலப்படுத்தி இவர்களது உண்மை சொரூபத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென்ற அர்த்தத்தில் போர்க்குணம் கொண்ட பத்திரிகையாகவே இருக்க வேண்டுமென்பது மேற்கூறியதிலிருந்து தெரியவரும்.

இரண்டாவதாக, இப்படிப்பட்ட ஒரு சஞ்சிகை போர்க்குணம் கொண்ட நாத்திக ஏடாய் இருத்தல் வேண்டும். இந்தப் பணித் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள இலாகாக்கள், அல்லது குறைந்தது அரசு நிறுவனங்கள் நம்மிடம் உள்ளன. ஆனால் இந்தப் பணி அளவு கடந்த அசட்டையோடு, சிறிதும் திருப்தியில்லாதபடி நடைபெற்று வருகிறது; மெய்யான நமது ருஷ்ய (சோவியத்தே ஆயினுங்கூட) அதிகார வர்க்க முறைகளின் பொது நிலைமைகளால் பீடிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆகவே இந்த அரசு நிறுவனங்கள் செய்து வரும் பணியுடன் கூடவே, இப்பணியை மேம்

படுத்தும் பொருட்டும், இதற்கு உயிர்ச் சக்தி ஊட்டும் பொருட்டும், போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதப் பிரசாரம் புரிய முற்படும் இந்த சஞ்சிகை, அயராத நாத்திகப் பிரசாரமும் அயராத நாத்திகப் போராட்டமும் புரிவது மிகவும் அவசியமாகும். இப்பொருள் குறித்து எல்லா மொழிகளிலும் வெளிவரும் இலக்கியங்களைக் கவனமாய்ப் பரிசீலனை செய்து வர வேண்டும்; எவ்விதத்திலும் மதிப்புக்குரியவையாய் இருப்பவற்றை மொழிபெயர்த்திட வேண்டும், அல்லது குறைந்தது இவை குறித்து மதிப்புரைகளாவது எழுத வேண்டும்.

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியினது போர்க்குணம் கொண்ட நாத்திக இலக்கியத்தை மக்களிடையே பெருவீத அளவில் வினியோகித்துப் பரப்புவதற்காக மொழிபெயர்த்திடும்படி நெடுங்காலத்துக்கு முன்பு எங்கெல்ஸ் அக்காலத்தியப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறினர்.[40] இது நாள்வரை நாம் இதைச் செய்தாகவில்லை, நாம் வெட்கித் தலை குனியும் வண்ணம் இதைச் சொல்லியே ஆக வேண்டும் (புரட்சிகர சகாப்தத்தில் ஆட்சியதிகாரம் கைப்பற்றுவது கடினமல்ல, ஆனல் இந்த ஆட்சியதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது எப்படி என்று அறிந்து கொள்வது மெத்தக் கடினம் என்பதற்குரிய எண்ணற்ற நிரூபணங்களில் ஒன்றுகும் இது). நமது அசட்டைக்கும் செயலின்மைக்கும் திறனின்மைக்கும் சால்ஜாப்பு கூறும் பொருட்டு எல்லா வகையான ''உன்னத'' காரணங்களும் எடுத்துரைக்கப் படுகின்றன; உதாரணமாய், பதினெட்டாம் நூற்றுண்டின் பழைய நாத்திக இலக்கியம் பழமைப்பட்டு விட்டது, விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததாகவும் சிறுபிள்ளைத்தனமானதும் ஆகிவிட்டது என்றெல்லாம் காரணம் கூறப்படுகிறது. இத்தகைய போலியான விஞ்ஞானக் குதர்க்கங்களைக் காட்டிலும் மோசமானது எதுவும் இல்லை; பகட்டுப் புலமையை அல்லது மார்க்சியத்தைப் பற்றிய அறவே தவறுன உணர்வை மூடிமறைக்கவே இந்தக் குதர்க்கங்கள் பயன்படுகின்றன. பதினெட்டாம் நூற்றுண்டின் புரட்சியாளர்களுடைய நாத்திக நூல்களில் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததும் சிறுபிள்ளைத்தனமானதும்

நிறைய இருப்பது மெய்தான். ஆனல் இந்நூல்களின் பதிப்பாளர்கள் இவற்றைச் சுருக்கி வெளியிடுவதையும், பதினெட்டாம் நூற்முண்டின் இறுதிக்குப் பிற்பாடு மதங்களைப் பற்றிய விஞ்ஞான விமர்சனத்தில் மனித குலம் கண்டிருக்கும் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியும், இப்பொருள் குறித்து அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களைக் குறிப்பிட்டும், இன்ன பிற விவரங்களைக் கூறியும் சுருக்கமான பின்னுரைகளை இந்நூல்களுக்கு அளிப்பதையும் யாரும் தடுத்து நிற்கவில்லை. கோடிக் கணக்கான மக்கள் (முக்கியமாய் விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும்), நவீன காலச் சமுதாயம் அனைத்தாலும் இருளிலும் அறியாமையிலும் மூட நம்பிக்கையிலும் வதையும்படி இருத்தப்பட்டிருக்கும் இவர்கள் கலப்பற்ற தூய மார்க்சியப் போதமெனும் நேரான பாதையிலேதான் இந்த இருளிலிருந்து விடுபட்டு வெளியே வர முடியுமென நினைப்பது, மார்க்சியவாதி ஒருவர் புரியக் கூடிய மிகப் பெரிய, மிகக் கடுந் தவருகிவிடும். இந்த வெகு ஜனங்களை நாட்டங் கொள்ளும்படிச் செய்வதற்காகவும், மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து இவர்களை விழித்தெழச் செய்வதற்காகவும், மிகப் பல்வேறுபட்ட கோணங்களிலிருந்தும் மிகப் பல்வேறுபட்ட வழிகளிலும் இவர்களை உசுப்பிவிடுவதற்காகவும், இன்ன பிறவற்றுக்காகவும், இவர்களுக்கு நாம் மிகப் பல்வேறுபட்ட நாத்திகப் பிரசார வெளியீடுகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்; வாழ்க்கையின் மிகப் பல்வேறுபட்ட துறைகளிலிருந்துமான உண்மைகளை இவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்; சாத்தியமான எல்லா வழிகளிலும் இவர்களை அணுகியாக வேண்டும்.

பழைய, பதினெட்டாம் நூற்முண்டு நாத்திகர்களது தீட்சண்யமான, உயிர்த்துடிப்புள்ள, அறிவாற்றல் மிகுந்த இலக்கியங்கள், ஆதிக்கத்திலிருந்த சமய சித்தாந்தத்தைக் கிண்டலும் கேலியுமாகவும், மற்றும் பகிரங்கமாகவும் தாக்கின. மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து மக்களைத் தட்டியெழுப்புவதற்கு மிகப் பல சந்தர்ப்பங்களிலும் இவை, மார்க்சியத்தின் உப்புச்சப்பில்லாத, சலிப்பூட்டும் பொழிப்புரைகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கூடுதலாய் ஏற்றவை

யாய் இருக்கும். திறம்படத் தெரிந்தெடுக்கப்பட்ட உண்மைகளைக் கொண்டமைந்த எடுத்துக்காட்டுகள் வாயிலான விளக்கங்கள் அனேகமாய் எவையுமில்லாத இப்படிப்பட்ட பொழிப்புரைகள்தான் நமது வெளியீடுகளில் மிகவும் மலிந்திருக்கின்றன, இவையும் (இவ்வுண்மையை மறைத்துப் பயனில்லை) அடிக்கடி மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவனவாகவே இருக்கின்றன. மார்க்ஸ், எங்கெல்சின் பிரதான நூல்கள் யாவற்றின் மொழிபெயர்ப்புகளும் நம்மிடம் இருக்கின்றன. ஆகவே பழைய நாத்திகமும் பழைய பொருள்முதல் வாதமும், மார்க்சும் எங்கெல்சும் அவற்றில் புகுத்திய திருத்தங்களால் சரிசெய்யப்பட்டுச் செம்மையாக்கப்படாமல் இருந்து விடுமென்று அஞ்சக் காரணம் சிறிதும் இல்லை. மிகவும் முக்கியமானது என்னவெனில், இன்னமும் வளர்ச்சியின்றி இருந்து வரும் வெகுஜனங்களிடத்தே மதப் பிரச்சினைகள் பால் அறிவு வழிப்பட்ட போக்கினையும், மதங்கள் குறித்து அறிவு வழிப்பட்ட விமர்சனத்தையும் கிளர்த்திவிடத் தெரிந்து கொள்வதுதான்—இதைத்தான் நமது கம்யூனிஸ்டுகளில் மார்க்சியவாதிகளாய்க் கருதப்படுவோர், ஆனால் உண்மையில் மார்க்சியத்தை உருக்குலைப்போராய் இருப்போர் கவனியாது அடிக்கடி புறக்கணித்து விடுகிறார்கள்.

மறு புறத்தில், மதங்களைப் பற்றிய நவீன விஞ்ஞான விமர்சகர்களைச் சற்று உற்றுநோக்குங்கள். கல்வியறிவுடைய இந்த முதலாளித்துவ எழுத்தாளர்கள், மத மூடநம்பிக்கைகளைப் பற்றிய தமது சொந்த மறுப்புரைகளுடன் கூட, தாம் முதலாளி வர்க்கத்தின் சித்தாந்த அடிமைகளே, ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே'' என்பதை உடனே அம்பலமாக்கிக் காட்டும் வாதங்களையும் அனேகமாய் எப்பொழுதும் ''அனுபந்தமாய்ச்'' சேர்த்தளிக்கின்றனர்.

இரண்டே இரண்டு எடுத்துக்காட்டுகள். பேராசிரியர் ரோ. யூ. வீப்பர் **கிறிஸ்துவத்தின் தோற்றம்** என்னும் தலைப்பில் (''ஃபரோஸ்'' பதிப்பகம், மாஸ்கோ) 1918ல் ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டார். நவீன விஞ்ஞானத்தின் பிரதான விளைவுகளைப் பற்றிய தமது உரையில் இவ்வாசிரியர்,

மதச் சபையானது ஓர் அரசியல் நிறுவனம் என்ற முறையில் அதற்குரிய ஆயுதங்களாய்க் கொண்டிருக்கும் மூடநம்பிக் கைகளையும் ஏமாற்றையும் எதிர்த்துப் போராடுவதைத் தவிர்த்துக் கொள்வதோடல்லாமல், இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதோடல்லாமல், கருத்துமுதல்வாதம், பொருள் முதல்வாதம் ஆகிய இரு ''கடை கோடி நிலைகளுக்கும்'' தாம் மேம்பட்டவர் என்பதாய் நகைக்கத்தக்கதான, மிகவும் பிற்போக்கான முறையில் உரிமை கொண்டாடுகிறார். உழைப் பாளி மக்களைக் கசக்கிப் பிழிந்து பெறப்பட்ட லாபங்களி லிருந்து மதத்தின் ஆதரவுக்காக உலகெங்கும் கோடானு கோடியான ரூபிள்களைச் செலவிடும் ஆளும் முதலாளி வர்க்கத்துக்குத் தொண்டூழியம் புரிவதே ஆகும் இது.

பெயர் பெற்ற ஜெர்மன் விஞ்ஞானி ஆர்த்தூர் டிரேவ்ஸ் **கிறிஸ்து கற்பனை** என்னும் தமது புத்தகத்தில் மத மூட நம் பிக்கைகளுக்கும் புராணக் கதைகளுக்கும் மறுப்பு கூறுகிறார், கிறிஸ்து இருக்கவே இல்லை என்று விளக்குகிறார், அதே போதில் இப்புத்தகத்தின் முடிவில் மதத்தை ஆதரித்துப் பேசுகின்றார்—ஆனால் இது புத்துரு கொண்ட, சுத்தமாக்கப் பட்ட, நுண்ணயம் வாய்ந்த மதமாயிருக்கும், ''நாளுக்கு நாள் பெருகி வளரும் இயற்கைவாத வெள்ளப் பெருக் கினைச்'' சமாளிக்க வல்லதாய் இருக்கும் என்கிறார் (நான் காவது ஜெர்மன் பதிப்பு, 1910, பக்கம் 238). ஒளிவு மறை வில்லாத, திட்டமிட்டுச் செயல்படுகிற பிற்போக்காளரை, அழுகலாகிவிட்ட பழைய மத மூடநம்பிக்கைகளுக்குப் பதி லாய்ப் புதிய, மேலும் வெறுக்கத்தக்கதான, இழிவான மூட நம்பிக்கைகளை விதைப்பதற்குச் சுரண்டலாளர்களுக்குப் பகிரங்கமாகவே துணை புரிகிறவரை இங்கு நாம் காண் கிறோம்.

டிரேவ்சை மொழிபெயர்க்கக் கூடாது என்பதல்ல இதற்கு அர்த்தம். முதலாளி வர்க்கத்தின் முற்போக்குப் பிரிவினருடன் ஓரளவுக்குக் கூட்டணி கொண்டு செயல் படும் அதேபோதில் கம்யூனிஸ்டுகளும் முரணற்ற பொருள் முதல்வாதிகள் எல்லோரும் அப்பிரிவினர் பிற்போக்கில் ஈடு படும் குற்றமிழைக்கும் போது சிறிதும் தயங்காமல் அவர்

களை அம்பலம் செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். பதினெட்டாம் நூற்றுண்டின், அதாவது முதலாளி வர்க்கம் புரட்சிகரமானதாய் இருந்த அந்தக் காலத்தின் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளுடன் கூட்டணி கொள்ளாமல் விலகி ஓடுவது மார்க்சியத்துக்கும் பொருள்முதல்வாதத்துக்கும் துரோகமிழைப்பதாகும் என்பதே இதன் அர்த்தம்; ஏனெனில், ஏதேனும் ஒரு வடிவில், ஏதேனும் ஓர் அளவுக்கு, டிரேவ்ஸ்களுடன் ''கூட்டணி கொள்வது'', ஆதிக்கம் புரிந்து வரும் மத மௌடீகவாதிகளுக்கு எதிரான நமது போராட்டத்துக்கு அவசியமாகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் ஏடாய்ச் செயல்பட முற்படும் பத் ஸ்னுமினெம் மார்க்சிஸ்மா, நாத்திகப் பிரசாரத்துக்காகவும், இப்பொருள் பற்றிய வெளியீடுகளின் மதிப்புரைக்காகவும், இத்துறையில் நமது அரசாங்கம் ஆற்றி வரும் பணியிலுள்ள மிகப் பெரும் குறைபாடுகளைத் திருத்துவதற்காகவும் தனது பக்கங்களில் ஒரு பெரும் பகுதியை ஒதுக்க வேண்டும். இக்காலத்து முதலாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களும் வர்க்க நிறுவனங்களும் மத நிறுவனங்களுடனும் மதப் பிரசார நிறுவனங்களுடனும் எப்படி இணைந்திருக்கின்றன என்பதைக் காட்டும் ஸ்தூலமான பல உண்மைகளும் ஒப்பீடுகளும் அடங்கியுள்ள புத்தகங்களையும் பிரசுரங்களையும் பயன்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

மதத்துக்கும் மூலதனத்துக்கும் அதிகாரபூர்வமான, அரசு வழியிலான இணைப்பு அவ்வளவு வெளிப்படையாய்த் தெரியாத அமெரிக்க ஐக்கிய நாடுகள் பற்றிய எல்லா விவரப் பொருள்களும் மிக மிக முக்கியமானவை. ஆனால் மறு புறத்தில், ''நவீன ஜனநாயகம்'' எனப்படுவது (மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும், ஓரளவுக்கு அராஜகவாதிகளும், ஏனையோரும் சிறிதும் நியாயமின்றி இதைப் பூசிக்கின்றனர்), முதலாளி வர்க்கத்துக்கு எதெல்லாம் அனுகூலமாய் இருக்கிறதோ அதை, அதாவது மிகவும் பிற்போக்கான கருத்துக்களையும் மதத்தையும் மௌடீகத்தையும் சுரண்டலாளர்களைப் பேணிக் காப்பதையும் பிற

வற்றையும் உபதேசிப்பதற்கான சுதந்திரமே ஆகும் என்பது நமக்குத் தெளிவாகிறது.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாத ஏடாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகை நமது வாசகப் பெருமக்களுக்கு நாத்திக இலக்கியத்தைப் பற்றிய விமர்சன மதிப்புரைகளை வழங்குமென்றும், குறிப்பிட்ட வெளியீடு எந்த வாசகர் குழுவுக்கு ஏற்றது, எவ்விதத்தில் ஏற்றது என்பதைச் சுட்டிக்காட்டுமென்றும், நாம் வெளியிட்டிருக்கும் புத்தகங்கள் எவை (தகுதியுடைத்த மொழிபெயர்ப்புகளை மட்டுந்தான் குறிப்பிடப்பட வேண்டும், இவை அதிகமில்லை), இனி வெளியிடப் போகிறவை எவை என்பதைக் குறிப்பிடுமென்றும் நம்புகிறோம்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதம் ஆற்ற வேண்டிய பணிக்கு, கம்யூனிஸ்டுகளது கட்சியைச் சேர்ந்திராத முரணற்ற பொருள்முதல்வாதிகளுடன் கொள்ள வேண்டிய கூட்டணியோடுகூட, இதற்கு எவ்வகையிலும் குறையாத முக்கியத்துவம் வாய்ந்த, ஏன் இதனினும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததென்றுகூட சொல்லத்தக்க மற்றொரு கூட்டணியும் இருக்கின்றது. நவீன இயற்கை விஞ்ஞானிகளில் பொருள்முதல்வாதத்தின் பக்கம் சாய்ந்தோரும், கருத்துமுதல்வாதத்திலும் ஐயுறவுவாதத்திலுமாகிய புதுப்பாணித் தத்துவஞான சஞ்சாரங்களை எதிர்த்து—''படித்த சமூகத்தார்'' என்பதாய்க் கூறப்படுவோரிடையே வெகுவாய் மலிந்திருக்கும் இந்தச் சஞ்சாரங்களை எதிர்த்து—பொருள்முதல்வாதத்தைக் காக்கவும் பிரசாரம் செய்யவும் அஞ்சாதோரும் ஆகியோருடன் கொள்ளப்படும் கூட்டணி இது.

ஐன்ஷ்டைன் சார்பியல் தத்துவம் குறித்து பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா இதழ் 1—2ல் வெளிவந்துள்ள அ. திமிர்யாஸெவின் கட்டுரையானது இந்த இரண்டாவது கூட்டணியை உருவாக்கிக் கொள்வதிலும் இந்தச் சஞ்சிகை வெற்றி பெறுமென்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. இதில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். நவீன

இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்டு வரும் கடும் தகர்வானது பிற்போக்குத் தத்துவஞான மரபுகளையும் சில்லறை மரபுகளையும், போக்குகளையும் சில்லறைப் போக்குகளையும் அடிக்கடி தோற்றுவிக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, அண்மைக் காலத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்டிருக்கும் புரட்சியால் எழுப்பப்படும் பிரச்சினைகளைக் கூர்ந்து கவனித்துச் சென்றாலொழிய, தத்துவஞான சஞ்சிகையாகிய இந்தச் சஞ்சிகையின் பணித் துறையில் இயற்கை விஞ்ஞானிகளைக் கவர்ந்து இழுத்துக் கொண்டாலொழிய, போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதம் உண்மையில் போர்க்குணமுடையதாகவோ, பொருள்முதல்வாதமாகவோ இருக்க முடியாது. திமிர்யாஸெவின் கருத்துப்படி பொருள்முதல்வாதத்தின் அடிப்படைகள் மீது ஐன்ஷ்டைன் நேரடித் தாக்குதல் நடத்தாமல் இருக்கையில், எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ அறிவுத்துறையினர் மிகப் பலரும் அதற்குள் துள்ளிக் குதித்து ஐன்ஷ்டைன் தத்துவத்தைப் பற்றிக் கொண்டுவிட்டதாய் இந்தச் சஞ்சிகையின் முதல் இதழில் திமிர்யாஸெவ் குறிப்பிட வேண்டியதாகியுள்ளது. இப்படி நிகழ்ந்திருப்பது ஐன்ஷ்டைன் சம்பந்தமாய் மட்டுமல்ல, பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதி முதலாய் இயற்கை விஞ்ஞானத்தின் மாபெரும் சீர்திருத்தாளர்களில் பெருவாரியானேர் இல்லையேல், எப்படியும் மிகப் பலர் சம்பந்தமாகவும் இப்படித்தான் நிகழ்ந்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இப்படிப்பட்ட புலப்பாடு குறித்து நம்முடைய போக்கு அரசியல் உணர்வுடைத்ததாய் இருக்க வேண்டுமாயின், எந்த இயற்கை விஞ்ஞானமும் சரி, எந்தப் பொருள்முதல்வாதமும் சரி, உறுதியான தத்துவஞான அடிநிலையின் மீது காலூன்றி நின்றாலன்றி, முதலாளித்துவக் கருத்துக்களுடைய வெறித்தாக்குதலுக்கும் முதலாளித்துவ உலகக் கண்ணேட்டத்தின் மீட்சிக்கும் எதிரான போராட்டத்தில் அதனல் தனது நிலையைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் போராட்டத்தில் இயற்கை விஞ்ஞானி தமது நிலையைப் பாது

காத்துக் கொள்ளும் பொருட்டும் இந்தப் போராட்டத்தை வெற்றிகர முடிவுக்கு நடத்திச் செல்லும் பொருட்டும் அவர் நவீனப் பொருள்முதல்வாதியாய், மார்க்சைப் பிரதிநிதியாய்க் கொண்ட அந்தப் பொருள்முதல்வாதத்தின் உணர்வுபூர்வமான ஆதரவாளராய் இருந்தாக வேண்டும்; அதாவது, அவர் இயக்கவியல் பொருள்முதல்வாதியாய் இருந்தாக வேண்டும். இந்தக் குறிக்கோள் சித்தி பெறும் பொருட்டு, பத் ஸ்னுமினெம் மார்க்சிஸ்மாவில் எழுதும் ஆசிரியர்கள் ஹெகலின் இயக்கவியலைப் பொருள்முதல்வாத நிலையிலிருந்து முறையாய் ஆய்ந்தறிந்து கொள்ள ஏற்பாடு செய்தாக வேண்டும். அதாவது, மார்க்ஸ் தமது மூலதனத்திலும் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய தமது நூல்களிலும் செயல்முறையில் கையாண்ட இயக்கவியலை, கிழக்குலகின் (ஜப்பானிலும் இந்தியாவிலும் சீனுவிலும்) புதிய வர்க்கங்கள்—உலக மக்கள் தொகையின் பெரும்பகுதியான, இதுகாறும் தமது வரலாற்றுச் செயலின்மையாலும் வரலாற்று உறக்கத்தாலும் ஐரோப்பாவின் வளர்ச்சி பெற்ற பல நாடுகளின் தேக்க நிலையையும் சீரழிவையும் நெறிமுறையாக்கி வந்த கோடானு கோடியானேர் — விழிப்புற்று உயிர்த்தெழுந்தும் போராடியும் வரும் இக்காலத்தின் ஒவ்வொரு நாளும், புதிய பல நாடுகளது மக்களும் புதிய வர்க்கங்களும் விழிப்புற்று உயிர்த்தெழும் இக்காலத்தின் ஒவ்வொரு நாளும் மார்க்சியத்தை மெய்ப்பித்து உறுதி செய்யும் புதிய நிரூபணமாய் அமையும்படி அவ்வளவு வெற்றிகரமாய் மார்க்ஸ் கையாண்ட இந்த இயக்கவியலை முறையாய் ஆய்ந்தறிந்து கொள்ள ஏற்பாடு செய்தாக வேண்டும்.

ஹெகலின் இயக்கவியலை இப்படி ஆய்ந்தறிவதும் விளக்கம் செய்வதும் பிரசாரம் புரிவதும் மிகமிகக் கடினம்தான். இந்தத் திசையிலான முதலாவது முயற்சிகளுடன் பிழைகளும் நிச்சயம் உடன்வரும்தான். ஆனுல் ஏதும் செய்யாமவிருப்போரால்தான் பிழைகள் புரியாதிருக்க முடியும். பொருள்முதல்வாத வழியில் புரிந்து கொள்ளப்படும் ஹெகலின் இயக்கவியலைக் கையாளுவதற்குரிய மார்க்சின் முறையை நமது அடிப்படையாய்க் கொண்டு, எல்லா அம்சங்

களிலும் நாம் இந்த இயக்கவியலை விரித்து விளக்க முடியும், விரித்து விளக்கவும் வேண்டும், ஹெகலின் முக்கிய நூல்களிலிருந்து சிறு பகுதிகளை இந்தச் சஞ்சிகையில் அச்சிட வேண்டும்; பொருள்முதல்வாத வழியில் இப்பகுதிகளுக்கு விளக்கம் அளித்து, இயக்கவியலை மார்க்ஸ் கையாண்டது பற்றிய உதாரணங்களின் துணை கொண்டும், மற்றும் அண்மைக் கால வரலாறும் முக்கியமாய் நவீன ஏகாதிபத்தியப் போரும் புரட்சியும் அசாதாரணச் செழுமையுடன் இயக்கவியலுக்குப் பொருளாதார, அரசியல் உறவுகளின் துறையில் மிகுதியாய் அளித்திடும் உதாரணங்களின் துணை கொண்டும் இவை குறித்துக் கருத்துரைக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தில் பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மாவின் ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் ஒரு வகையில் ''ஹெகலிய இயக்கவியலின் பொருள்முதல்வாத நண்பர்களது கழகமாய்ச்'' செயல்பட வேண்டும். பொருள்முதல்வாத வழியில் விளக்கம் செய்யப்பட்ட ஹெகலின் இயக்கவியலில், நவீன கால இயற்கை விஞ்ஞானிகள் (அவர்களுக்குத் தேடிக் கண்டறிந்து கொள்ளத் தெரிந்திருந்து, நாமும் அவர்களுக்குத் துணை புரியக் கற்றுக் கொள்வோமாயின்) இயற்கை விஞ்ஞானத்தில் நடைபெறும் புரட்சியால் எழுப்பப்படும் தத்துவஞானப் பிரச்சினைகளுக்கு, முதலாளித்துவ மோஸ்தர்களால் மயக்கப்படும் அறிவுத்துறையினரைப் பிற்போக்கினுள் ''வழுக்கிவிழச்'' செய்யும் இப்பிரச்சினைகளுக்கு, வரிசையாய் விடைகள் இருக்கக் காண்பார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பணியை வகுத்துக் கொண்டு முறையாய் அதை நிறைவேற்றிச் சென்றாலொழிய, பொருள்முதல்வாதம் போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதமாய் இருக்க முடியாது. ஷெத்ரீனுடைய சொற்களில் சொல்வதெனில் அது அவ்வளவாய்ப் போராடி வாகை சூடும் ஒன்றாய் இல்லாமல், போராடப்பட்டு வீழ்த்தப்படும் ஒன்றாகவே இருக்கும்.[41] இப்படி அது பணியாற்றாத வரை, தலைசிறந்த இயற்கை விஞ்ஞானிகள் தமது தத்துவஞான அனுமானங்களையும் பொதுமையாக்கப்பட்ட முடிவுகளையும் வந்தடைவதில் இதுகாறும் அடிக்கடி இருந்துள்ளது போலவே இனி

யும் திக்கற்றவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் இயற்கை விஞ்ஞானம் அவ்வளவு வேகமாய் முன்னேறிச் செல்கிறது; எல்லாத் துறைகளிலும் அவ்வளவு ஆழ்ந்த புரட்சிகர மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது; அது தத்துவ ஞான அனுமானங்களின்றி இருக்கலாமென நினைக்க முடியவே முடியாது.

முடிவில் ஓர் உதாரணத்தை எடுத்துரைக்கிறேன். இது தத்துவஞானத்துடன் சம்பந்தப்பட்டதல்ல; ஆனால் எப்படியும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றியதுதான். பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா சமூகப் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த விரும்புகிறது.

நவீன காலத்திய போலி விஞ்ஞானம் உண்மையில் படு மோசமான, மிகவும் இழிவான பிற்போக்குக் கருத்தோட்டங்களுக்கான ஒரு சாதனமாய் எப்படிப் பயன்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

''ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தின்'' பதினொராவது இலாகாவினால் வெளியிடப்படும் எக்கனமீஸ்ட்,[42] முதல் இதழின் (1922) பிரதி அண்மையில் எனக்கு வரப்பெற்றது. இந்தச் சஞ்சிகையை எனக்கு அனுப்பி வைத்த இளம் கம்யூனிஸ்ட் (அதைப் படித்துப் பார்க்க அவருக்கு நேரம் கிடைக்காமல் இருந்திருக்கலாம்) அவசரப்பட்டு அதனுடன் பெருமளவு தாம் உடன்படுவதாய்க் குறிப்பிட்டார். உண்மையில் இந்தச் சஞ்சிகை நவீன பிரபுத்துவவாதிகளது ஏடாய்ச் செயல்படுகிறது — எந்த அளவுக்குத் தெரிந்து வேண்டுமென்றே இப்படிச் செய்கிறதோ நான் அறியேன். விஞ்ஞானம், ஜனநாயகம் இத்தியாதியான வேடங்களின் மறைவில் இவ்வேலையைச் செய்கிறது.

திரு. பி. அ. சரோக்கின் என்ற ஒருவர் ''போரால் ஏற்பட்ட விளைவு'' குறித்து, ''சமூகவியல்'' பரிசீலனை என்பதாய்க் கூறிக் கொண்டு இந்தச் சஞ்சிகையில் விரிவான ஆய்வுரை வெளியிட்டிருக்கிறார். புலமை வாய்ந்த இந்தக் கட்டுரையில், இந்த ஆசிரியரும் வெளிநாடுகளிலுள்ள இவருடைய எண்ணற்ற போதனாசிரியர்களும் சக ஆய்வாளர்களும் எழுதிய ''சமூகவியல்'' நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட

புலமை வாய்ந்த மேற்கோள்கள் நிறைய இருக்கின்றன. இவருடைய புலமைக்கு இதோ ஓர் உதாரணம்:

பக்கம் 83ல் படிக்கிறேன்:

''பெத்ரோகிராதில் தற்போது நடைபெறும் திருமணங் களில் ஒவ்வொரு 10,000லும் திருமண ரத்துக்களின் எண் ணிக்கை 92.2—நம்ப முடியாத பெரிய எண்ணிக்கை இது. ரத்து செய்யப்படும் ஒவ்வொரு 100 திருமணங்களிலும் 51.1 ஓராண்டுக்குக் குறைவாய் நீடித்தவை; 11 சதவீத மானவை ஒரு மாதத்துக்குக் குறைவாகவும், 22 சதவீத மானவை இரண்டு மாதங்களுக்குக் குறைவாகவும், 41 சத வீதமானவை மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்குக் குறை வாகவும் நீடித்தவை; 26 சதவீதமானவையே ஆறு மாதங் களுக்கு மேல் நீடித்தவை. தற்காலத்திய சட்டபூர்வமான திருமணம் நடைமுறையில் தாம்பத்தியத்துக்குப் புறம்பான பாலுறவை மூடிமறைக்கும் ஒரு வடிவமாய் அமைந்து, 'பழம் தேடியலேயும்' காதலர்கள் 'சட்டபூர்வமான' வழியில் தம் பசியைத் தீர்த்துக் கொள்ள வகை செய்கிறது என் பதைத்தான் இப்புள்ளிகள் காட்டுகின்றன'' (எக்கனமீஸ்ட், *இதழ் 1, பக்கம் 83).*

இந்தக் கனவானும் இந்தச் சஞ்சிகையை வெளியிட்டு இம்மாதிரியான பேச்சுக்களுக்கு இதில் இடம் தரும் ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தாரும் நிச்சயம் தம்மை ஜனநாய கத்தைப் பற்றியொழுகுவோராகவே கருதிக் கொள்வார் கள்; உண்மையில் இவர்களுக்கு உரிய பெயரைக் கொண்டு அழைத்தோமாயின்—அதாவது பிரபுத்துவவாதிகள், பிற் போக்காளர்கள், ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகள்'' என்று கூறுவோமாயின்—தாம் பெரிதும் அவ மதிக்கப்படுவதாகவே கருதிக் கொள்வார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் திருமணம் குறித்தும், திரு மண ரத்து குறித்தும், திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகள் குறித்தும் நடப்பிலுள்ள சட்டங்களேயும், இத் துறையில் உண்மையில் அங்குள்ள நிலேவரங்களேயும் பற்றி சொற்ப அளவு ஞானம் இருந்தாலே போதும், இந்த விவ காரத்தில் கருத்துடைய எவரும் நவீன முதலாளித்துவ ஜன நாயகம், மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசு களில் இருப்பதுங்கூட, இத்துறையிலே பெண்கள் குறித்

தும் திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகள் குறித்தும் மெய்யாகவே பிரபுத்துவப் போக்கு கொண்டிருப்பதைக் கண்டு கொண்டுவிடலாம்.

இந்த நிலைமை மென்ஷிவிக்குகளையும், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும், அராஜகவாதிகளில் ஒரு பகுதியோரையும், மேலைய நாடுகளில் இவர்களை ஒத்தவையாயுள்ள எல்லாக் கட்சிகளையும், ஜனநாயகம் என்பதாகவும் போல்ஷிவிக்குகள் இதைக் குலைக்கிறார்கள் என்பதாகவும் கூச்சல் போடாதபடி தடுத்துவிடவில்லைதான். ஆனால் உண்மை என்னவெனில், போல்ஷிவிக்குகளின் புரட்சி ஒன்று மட்டுந்தான் திருமணம், திருமண ரத்து, திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகளின் நிலை ஆகியவை போன்ற பிரச்சினைகளில் முரணில்லாத ஜனநாயகப் புரட்சியாய் நடந்தேறியிருக்கிறது. எந்த நாட்டிலும் மக்களில் பாதிக்கு மேற்பட்டோரது நலன்களுடன் மிகவும் நேரடியாய்ச் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை இது. போல்ஷிவிக்குகளின் புரட்சிக்கு முன்பு மிகப் பல புரட்சிகள் நடைபெற்றிருப்பினும், இவை தம்மை ஜனநாயகப் புரட்சிகளாய் அழைத்துக் கொண்டன என்ற போதிலும், போல்ஷிவிக்குகளின் புரட்சிதான் இத்துறையில் பிற்போக்கையும் பிரபுத்துவத்தையும் மற்றும் சொத்துடைத்த ஆளும் வர்க்கங்களது வழக்கமான கபடத்தையும் எதிர்த்து உறுதி வாய்ந்த போராட்டம் நடத்தியுள்ள முதலாவது புரட்சியும், ஒரே புரட்சியும் ஆகும்.

10,000 திருமணங்களில் *92* திருமண ரத்துக்கள் என்பது, திரு. சரோக்கினுக்கு நம்ப முடியாத பெரிய எண்ணிக்கையாய்த் தோன்றினால், வாழ்க்கையிலிருந்து அறவே துண்டித்து ஒதுக்கி வைக்கப்பட்ட துறவி மடத்தில்—அப்படி ஒரு துறவி மடம் இருக்க முடியுமென யாராலும் நம்ப முடியாதபடி அந்த அளவுக்கு அறவே துண்டித்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்றில்—வளர்ந்து ஆளாகி அங்கேயே வசித்து வருகிறவராகவே இந்த ஆசிரியர் இருக்க வேண்டும்; அல்லது பிற்போக்கின் நலத்தையும் முதலாளி வர்க்கத்தின் நலத்தையும் உத்தேசித்து இவர் உண்மையைத் திரித்துப் புரட்டுகிறார் என்றுதான் கொள்ள வேண்டும். முதலாளித்துவ நாடு

களிலுள்ள சமூக நிலைமைகளைச் சிறிதளவேனும் அறிந்தவர் எவரும், இந்நாடுகளில் எல்லாம் உண்மையில் நடைபெறும் திருமண ரத்துக்களின் மெய்யான எண்ணிக்கை (இந்தத் திருமண ரத்துக்கள் மதச் சபையாலும் சட்டத்தாலும் அங்கீ கரிக்கப்படாதவை என்பதைக் கூறத் தேவையில்லை) கணக் கின்றி மிகவும் அதிகமாகும் என்பதை நன்கறிவர். இத்துறை யில் ருஷ்யாவுக்கும் பிற நாடுகளுக்குமுள்ள ஒரே வித்தியாசம் என்னவென்ருல், நமது சட்டங்கள் கபடத்தையும், பெண் ணும் பெண்ணின் குழந்தையும் இழிவு செய்யப்படுவதையும் புனிதமாக்குவதில்லை; அதற்கு மாருய் எல்லா வகையான கபடத்தின் மீதும் இழிவு செய்தலின் மீதும் பகிரங்கமாகவும் அரசாட்சியின் பெயரிலும் முறையான போர்ப் பிரகடனம் செய்கின்றன.

மார்க்சிய சஞ்சிகை ''படித்தறிந்த'' இந்த நவீன பிரபுத்துவவாதிகளையும் எதிர்த்துப் போராடியாக வேண் டும். நமது நாட்டில் இவர்களில் பலர் அரசாங்கப் பணம் பெறுகின்றவர்களாகவே இருப்பார்கள்; வக்கரித்துப் போன வர்களாய்ப் பெயரெடுத்தவர்கள் வளரும் தலைமுறை யினரது கல்வி நிலையங்களுடைய மேலாளர்களாய் இருக்க எப்படித் தகுதியற்றவர்களோ அதே போல சிறிதும் தகுதி யற்ருேராகிய இவர்கள் நமது இளந் தலைமுறையினருக்குக் கல்வி போதகர்களாய் நமது அரசாங்கத்தால் அமர்த்தப் பட்டவர்களாகவே இருப்பார்கள்.

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை வென்று கொண்டு விட்டது. ஆனல் இந்த ஆட்சியதிகாரத் தைப் பயன்படுத்த இன்னும் அது கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொண்டிருந்தால், நெடுங்காலத்துக்கு முன்பே அது இத்தகைய போதனுசிரியர்களையும் புலமை படைத்த கழ கங்களது உறுப்பினர்களையும் முதலாளித்துவ ''ஜனநாய கத்தைக்'' கொண்ட நாடுகளுக்குப் பணிவன்புடன் அனுப்பி வைத்திருக்கும். இப்படிப்பட்ட பிரபுத்துவவாதிகளுக்கு அவையே ஏற்ற இடமாகும்.

ஆயினும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற திடச் சித்தம் இருக்குமாயின் நிச்சயம் அது கற்றுக் கொண்டுவிடும்.

மார்ச் 12, 1922

பத் ஸ்ஹமினெம் மார்க்சிஸ்மா,
இதழ் 3, மார்ச் 1922

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் ***23-33***

ரு. க. க. (போ.)இன் பதினொன்றுவது காங்கிரஸ்

மார்ச் 27—ஏப்ரல் 2, 1922

1

ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை
மார்ச் 27

(கரவொலி.) தோழர்களே! மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கையை இந்த ஆண்டின் துவக்கத்தில் இருந்து அல்லாமல் கடைசியில் இருந்து ஆரம்பிக்க என்னை அனுமதியுங்கள். இன்று மிகவும் அதிகமாக விவாதிக்கப்படும் அரசியல் பிரச்சினை ஜெனோவா[43] ஆகும். ஆனால் இந்த விஷயம் பற்றி நமது பத்திரிகைகளில் ஏற்கெனவே பெருமளவில் விவரிக்கப்பட்டிருப்பதாலும், இதற்கு எது மிகவும் அத்தியாவசியமானதோ அதனை நான் ஏற்கெனவே எனது மார்ச் 6ந் தேதி உரையில் கூறிவிட்ட காரணத்தாலும் நீங்கள் நான் அவ்வாறு செய்ய வேண்டும் என்று பிரத்தியேகமாக விரும்பினல் ஒழிய நான் விவரங்களுக்குள் செல்லாது நிறுத்திக் கொள்ள அனுமதிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்தில் உங்களுக்கு ஜெனோவா பற்றி சகலமும் தெரியும். காரணம் அதைப் பற்றிச் செய்திப் பத்திரிகைகளில் அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. எனது கருத்துப்படி அளவுக்கு மேல் அதிகமாக, பொதுவாக நமது நிர்மாணப் பணியின்—குறிப்பாக நமது பொருளாதார வளர்ச்சிப் பணியின்—மெய்யான நடைமுறை மற்றும் அவசரத் தேவைகளுக்குப் பாதிப்பான அளவுக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில், எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் ஜெனோவா பற்றிய எல்லா வகையான குப்பைகளிலும் மக்கள்

மனங்களை ஈடுபடுத்தவும் அவற்றை அவர்கள் தலைகளில் திணிக்கவும் அவை விரும்புகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் (இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல என்று நான் கூறுவேன்) நாம் அவற்றைக் காப்பி அடிக்கிருேம், அளவுக்கு மீறிக் காப்பி அடிக்கிருேம்.

நமது சிறந்த அரசுறவாளர்களை ஒரு பிரதிநிதிக் குழுவாக நியமனம் செய்வதற்கு மத்தியக் கமிட்டியில் நாம் மிகுந்த பிரயாசை எடுத்திருக்கிருேம் என்பதை நான் நிச்சயம் கூறிவிட வேண்டும் (இப்போது நம் வசம் விரும்பத்தக்க அளவில் சோவியத் அரசுறவாளர்கள் இருக்கிருர்கள், சோவியத் குடியரசின் துவக்க நாட்களில் இந்த நிலைமை இருக்கவில்லை). ஜெனேவா மாநாட்டில் நமது அரசுறவாளர்களுக்குப் போதியளவு தேவையான விரிவான நெறிமுறைகளை மத்தியக் கமிட்டி தயார் செய்திருக்கிறது. இந்த நெறிமுறைகளை விவாதிக்க மிக நெடுங்காலம் செலவிட்டோம், அவற்றைப் பல தடவைகள் ஆராய்வும் மறு ஆராய்வும் செய்தோம்.* இங்குள்ள பிரச்சினை, நான் போர் என்று சொல்ல மாட்டேன் காரணம் இத்தொடர் தவருகப் புரிந்து கொள்ளப்படலாம், எப்படியும் போட்டி பற்றிய ஒன்ருகும் என்பது கூருமலே விளங்கும். முதலாளித்துவ முகாமில் ஜெனேவா மாநாட்டைத் தகர்க்க விரும்பும் மிகப்பலமான ஒரு போக்கு, இதர போக்குகள் எதையும் விட அதிக வலுவான ஒன்று நிலவுகிறது. ஜெனேவா மாநாட்டுக்கு மிக ஆதரவானதும் எப்பாடுபட்டும் அது நடைபெற வேண்டும் என்று விரும்புவதுமான போக்குகளும் உள்ளன. பின்னவை இப்போது மேலோங்கி உள்ளன. இறுதியாக எல்லா முதலாளித்துவ நாடுகளின் முகாமில் அமைதிவாதப் போக்கு என்று அழைக்கப்படக் கூடியதான போக்கு உள்ளது, இதில் இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்கள் முழுதும் உட்படுத்தப்பட வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தின் இந்த முகாம்தான் பல அமைதிவாத யோசனைகளை

---

* இத்தொகுதியின் பக்கங்கள் *79—87* பார்க்க.—ப-ர்.

ஆதரித்து வாதிடுகிறது, அமைதிவாதக் கொள்கைத் தன்மை வாய்ந்த சிலவற்றைப் புனைந்துவிட முயல்கிறது. கம்யூனிஸ்டு கள் என்ற முறையில் இந்த அமைதிவாதம் பற்றி நமக்குத் திட்டவட்டமான கருத்துக்கள் உண்டு; அவற்றை இங்கு விளக்க முற்படுவது அறவே மிகையாகும். நாம் ஜெனோ வாவுக்குக் கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் போகவில்லை, மாறாக வர்த்தகர்கள் என்ற முறையில் செல்கிறோம் என் பதைக் கூறத் தேவையில்லை. நாம் வாணிகம் செய்ய வேண் டும், மற்றும் அவர்கள் வாணிகம் செய்ய வேண்டும். நாம் வாணிகம் நமக்கு அனுகூலமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம், அவர்கள் தமக்கு அனுகூலமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்தப் போராட்டத்தின் செல்வழியானது சிறு அளவுக்கு மட்டுமே என்ற போதிலும், நமது அரசுறவாளர்களின் திறமையால் நிர்ணயிக்கப்படும்.

ஜெனோவாவுக்கு நாம் வர்த்தகர்களாகவே செல்கிறோம் என்ற அளவுக்கு, பிரச்சினையைப் போரின் மூலம் தீர்க்கும் நாட்டமுடைய முதலாளித்துவ முகாமிலுள்ள அந்தப் பகுதி யினருடன் நாம் செயல் புரிவோமா, அல்லது அமைதி வாதத்தில் நாட்டமுடைய—ஆக மோசமான அமைதிவாதம் என்றால் கூட, கம்யூனிசத்தின் கருத்துக் கோணத்தில் இருந்து ஆகச் சொற்பமான விமர்சனத்தைக் கூடத் தாங்க முடியாத அமைதிவாதத்தில் நாட்டமுள்ள—பகுதியினருடன் செயல் புரிவோமா என்பது எவ்விதத்திலும் அசட்டை செய்யக் கூடிய காரியமல்ல என்பது தெளிவு. இந்தத் தனிவேறு பாட்டை அறிந்தேற்றுக் கொள்ளாமலும், தனது உத்திகளை இதற்கேற்ப உருவாக்கிக் கொள்ளாமலும், எதார்த்த நோக்கங்களை அடைய முடியாமலும் இருக்கும் பேர்வழி ஒரு மோசமான வர்த்தகர் ஆவார்.

வாணிகத்தை விரிவுபடுத்தல் மற்றும் ஆகப் பரவலான அளவில் அதன் வெற்றிகரமான வளர்ச்சிக்கு மிகவும் சாதக மான நிலைமைகளைப் படைத்துருவாக்குதல் எனும் நடை முறைக் குறிக்கோளுடன் நாம் ஜெனோவா செல்கிறோம். ஆனால் நாம் ஜெனோவா மாநாட்டின் வெற்றியை உத்தரவாதம் செய்ய முடியாது. அது சம்பந்தமாக எவ்வித உத்தரவாதத்

தையும் தருவது என்பது கேலிக் கூத்தானது, அபத்தமானது. ஆனுல் ஜெனேவாவின் இன்றைய சாத்தியக்கூறுகளை மிகவும் நிதானமான எச்சரிக்கையான முறையில் சீர்தூக்கிப் பார்க்கும் போதில், நாம் நமது குறிக்கோளை அடைவோம் என்று கூறுவது மிகையாகாது என்று நான் கருதுகிறேன் என்பதாக நான் கூற வேண்டும்.

பேரப் பேச்சுக்கள் நடத்தும் இதர தரப்பினர் போதியளவுக்கு சாமர்த்தியசாலிகளாக இருந்து பெருமளவுக்குப் பிடிவாதம் செய்யாதவர்களாக இருந்தால் ஜெனேவா வழியூடே செயல் புரிவோம்; அவர்கள் மிகவும் பிடிவாதம் செய்ய முடிவு செய்தால் ஜெனேவாவைத் தாண்டிச் சென்று செயல் புரிவோம். ஆனுல் நமது லட்சியத்தைச் சாதித்தே தீருவோம்!

இதில் காணப்படும் மெய்நடப்பு என்னவென்ருல், கடந்த சில ஆண்டுகளாக எல்லா முதலாளித்துவ வல்லரசுகளிலும் கூர்மையாக வெளியீடாகியுள்ளதான மிகவும் அவசரமான, நெருங்கிவரும் எதார்த்த நடைமுறை நலன்கள் ருஷ்யாவுடன் வர்த்தகம் வளர்ச்சியுற்று, விதிமுறை செய்யப்பட்டு விரிவடைவதை அவசியமாக்குகின்றன என்பதே. இத்தகைய நலன்கள் நிலவுவதால், நாம் வாதிடலாம், சண்டை போடலாம், பிரத்தியேக இணைப்புகள் குறித்துக் கருத்து வேறுபடலாம்—நாம் வேறுபட வேண்டும் என்பது பெரிதும் நிகழக் கூடியதல்ல—இருந்த போதிலும், எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு பார்க்கும் போதில், இந்த அடிப்படையான பொருளாதாரத் தேவை தன்வகைக்கு வெற்றி தேடித்தருவது திண்ணம். இது உறுதி என்று நாம் கருத முடியும் என்று நான் நினைக்கிறேன். இதற்கான நாளை நான் உத்தரவாதம் செய்ய முடியாது, இதன் வெற்றிக்கு உறுதி கூற முடியாது. ஆனுல் இந்த மாநாட்டில்தான், சோவியத் குடியரசுக்கும் உலகில் உள்ள எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையிலான முறையான வாணிக உறவுகள் தொடர்ந்து வளர்ச்சியுறுவது நிச்சயம் என்று ஓரளவுக்கு உறுதியுடன் சொல்ல முடியும். எனது அறிக்கையின் இன்னெரு உரிய பகுதியில் இது பற்றி வரும் போது நிகழக் கூடியதான சிக்கல்கள் பற்றி

நான் குறிப்பிடுவேன்; ஆனல், ஜெனேவா பிரச்சினே குறித்துச் சொல்லத் தேவையானது எல்லாம் இவ்வளவே என்று நான் கருதுகிறேன்.

இந்தப் பிரச்சினையை மேலும் விரிவாக ஆராய்வதற்கு விரும்பும் தோழர்கள், பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ள பிரதிநிதிகள் பட்டியல் குறித்துத் திருப்திப்படாத பேர்கள், ஒரு கமிஷனேயோ அல்லது ஒரு பிரிவையோ நிறுவி மத்தியக் கமிட்டி தரும் எல்லா விவரப் பொருள்களேயும் மற்றும் எல்லாக் கடிதப் போக்குவரத்துக்கள், நெறிமுறைகளேயும் பற்றிப் பரிச்சயம் செய்து கொள்ளலாம் என்பதைச் சொல்லத் தேவையில்லே. நாம் உருவரை செய்துள்ள விவரங்கள் தற்காலிகமானவை என்பது நிச்சயம். ஏனெனில் ஜெனேவாவில் பேரம் பேசப் போவது யார் என்பதையோ என்ன நிபந்தனேகள், பூர்வாங்க நிபந்தனேகள் அல்லது ஷரத்துக்கள் அறிவிக்கப்படும் என்பதையோ இது வரையில் யாரும் அறியார். இங்கு இவற்றை எல்லாம் விவாதிப்பது என்பது மிகவும் உசிதமல்லாதது மற்றும் நடைமுறையில் சாத்தியமல்லாதது என்று நான் கருதுகிறேன். இந்தக் காங்கிரஸ் ஒரு கமிஷன் அல்லது ஒரு பிரிவின் வாயிலாக இந்தப் பிரச்சினே பற்றிய எல்லா ஆவணங்களேயும்—வெளியிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் மத்தியக் கமிட்டியின் வசம் இருப்பவையும்—ஒருசேரத் திரட்டிச் சேர்ப்பதற்கான சகல வாய்ப்பையும் பெற்றிருக்கிறது என்பதை மீண்டும் கூறுகிறேன்.

இதற்கு மேல் அதிகமாக நான் எதுவும் சொல்ல மாட்டேன், ஏனெனில் நமது ஆகப்பெரிய இடர்ப்பாடுகள் காணக் கிடப்பது இங்கல்ல என்பது உறுதி. கட்சி முழுவதன் பிரதான கவனத்தையும் மையப்படுத்த வேண்டிய ஒரு பிரச்சினே யல்ல இது. ஐரோப்பிய முதலாளித்துவப் பத்திரிகைகள் உழைக்கும் மக்கள் திரளினரை ஏமாற்றும் பொருட்டு இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தைச் செயற்கையாகவும் வேண்டுமென்றே திட்டமிட்டும் பெரிதாக்கிக் காட்டுகின்றன, மிகைப்படுத்துகின்றன (இந்த எல்லா சுதந்திர ஜனநாயக நாடுகளிலும் குடியரசுகளிலும் உள்ள எல்லா முதலாளித்துவப் பத்திரிகைகளிலும் பத்தில் ஒன்பது எப்போதும் இம்

மாதிரியே செய்கின்றன). இந்தப் பத்திரிகைகளின் செல்வாக்குக்கு நாம் ஓரளவுக்கு இரையாகியுள்ளோம். வழக்கம் போலவே நமது பத்திரிகைகள் பழைய முதலாளித்துவப் பழக்கங்களுக்கு இன்னும் இடமளிக்கின்றன, புதிய சோஷலிச முறைகளை ஏற்க மறுக்கின்றன மற்றும் இந்த விஷயம் குறித்து அதன் தகுதிக்கு மேல் மிக அதிகமாக நாம் களேபரம் செய்துள்ளோம். உண்மையில், கம்யூனிஸ்டுகளுக்கு, அதிலும் 1917க்குப் பிறகு நாம் வாழ வேண்டியிருந்த அத்தகைய கடினமான ஆண்டுகளில் வாழ்ந்திருந்த பேர்களுக்கு, மற்றும் அந்தக் காலப் பகுதியில் தோற்றமளித்த வல்லமை மிக்க அரசியல் இணைப்புகளை நேரில் கண்ட பேர்களுக்கு ஜெனோவா எந்தவொரு பெரிய இடர்ப்பாட்டையும் ஏற்படுத்திவிடவில்லை. இந்தப் பிரச்சினை மீது மத்தியக் கமிட்டியில் மட்டுமல்ல கட்சியின் அணிகளிடையிலும் கூட எவ்விதக் கருத்து வேறுபாடோ, வாதப்பிரதிவாதமோ ஏற்பட்டதாக எனக்கு நினைவில்லை. இது இயல்பே, ஏனெனில் கம்யூனிஸ்டுகளின் கருத்து நிலையில் இருந்து வாதப்பிரதிவாதத்திற்கான எதுவும் இங்கு இல்லை, அவர்கள் மத்தியில் நிலவிய பல்வேறு கருத்துச் சாயல்களை மனதிற்கொண்டு பார்த்தாலும் கூட எதுவும் இல்லை. மீண்டும் சொல்கிறேன்: ஏற்கெனவே துவங்கி விட்டதும், இப்போது நடைபெற்று வருவதும், எவரேனும் சில காலம் வலுவந்தமாகத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்றாலும் கூட இந்த இடைத்தடுப்புக்குப் பிறகு தவிர்க்க முடியாதபடி தொடர்ந்து நீடிக்கக் கூடியதுமான வாணிகத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு மிகவும் சாதகமான நிபந்தனைகளைப் பெறும் நோக்கமுடன் வியாபாரிகள் என்ற முறையில் நாம் ஜெனோவாவுக்குப் போகிறோம்.

இதனால், ஜெனோவா பற்றிய இந்த சுருக்கமான குறிப்புக்களோடு வரையறுத்துக் கொண்டு, எனது கருத்துப்படி கடந்த ஆண்டின் பிரதான அரசியல் பிரச்சினைகளாக இருந்ததும் வரப்போகும் ஆண்டில் அவ்வாறே இருக்கப் போவதுமான இப்பிரச்சினைகளை இப்போது எடுத்துக் கவனிக்கத் தொடங்குகிறேன். மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை பரிசீலனையில் இருக்கும் ஆண்டின் நிகழ்ச்சிகளை எடுத்துக்

கவனித்தால் மாத்திரம் போதாது, ஆனால் அதோடு அந்த ஆண்டின் நிகழ்ச்சிகளின் பிரதானமான அடிப்படையான அரசியல் படிப்பினைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும் (இதை நான் எப்படியும் வழக்கமாகச் செய்வதுண்டு). அதன் மூலம் நாம் வரப்போகும் ஆண்டுக்கான சிலவற்றைப் பயின்று அந்த ஆண்டில் நமது கொள்கை முழுவதையும் பிழையின்றி வரையறுத்துக் கொள்ளும் நிலையில் இருப்போம்.

புதிய பொருளாதாரக் கொள்கைதான் பிரதானப் பிரச்சினை என்பது திண்ணம். பரிசீலனையில் இருக்கும் ஆண்டில் முழுதூடாக ஆதிக்கம் வகித்த பிரச்சினை இதுவேயாகும். இந்த ஆண்டுக்கென்று, நாம் ஏதேனும் முக்கியமான, காரிய கரமான, மாற்றவொண்ணாத வெற்றியை சாதித்திருப்போமானல் (அப்படி பெற்றதாக நான் உறுதியாகச் சொல்ல முடியாது) அது, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையினை துவக்கி வைத்ததில் இருந்து சிலதைப் படித்தறிந்து கொண்டோம் என்பதேயாகும். நாம் ஒரு சிறிதாவது படித்தறிந்திருந்தோமானல், பின்னர் கடந்த ஆண்டின் போது நாம் உண்மையில் புதிய பொருளாதாரக் கொள்கையின் துறையில் மிகப் பெருமளவு படித்தறிந்திருக்கிறோம் எனலாம். நாம் உண்மையிலேயே எதையேனும் படித்தறிந்து கொண்டு விட்டோமா, எந்த அளவுக்கு என்பது குறித்த சோதனை, அவற்றின் நிர்ணயிப்பில் நம்மால் ஏதும் செய்ய வியலாத வகைப்பட்டதான பிந்திய நிகழ்ச்சிகளால், உதாரணமாக நெருங்கி வரும் நிதித்துறை நெருக்கடியால் செய்யப் படலாம். நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் தொடர்பாக, வாதங்கள் அனைத்துக்கும் உரிய அடிப்படை என்ற முறையிலும், கடந்த ஆண்டின் போதான நமது அனுபவத்தினைச் சோதனை செய்வதற்கான மார்க்கம் என்ற முறையிலும், வரப்போகும் ஆண்டில் நடைமுறைப் படிப்பினைகளைப் பயில்வதற்கான வழி என்ற முறையிலும் நாம் மனதில் இருத்த வேண்டிய மிகவும் முக்கியமான கருத்துக்கள் பின் வரும் மூன்று அம்சங்களில் அடங்கியுள்ளன என்று எனக்குத் தோன்றுகிறது.

முதலாவது, நாம் விவசாயிப் பொருளாதாரத்துடன் மெய்யாகவே ஓர் இணைப்பை நிறுவுகிறோமா என்பதைச் சோதிப்பதற்கான சாதனம் என்ற முறையில், முதல் நிலையாக புதிய பொருளாதாரக் கொள்கை நமக்கு முக்கியமானது. நமது புரட்சியின் பிந்திய வளர்ச்சிக் கட்டத்தில் நமது கவனம் முழுவதும் நமது முயற்சிகள் யாவும் பிரதானமாக படையெடுப்பை எதிர்த்துத் தடுக்கும் பணியில் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்த போது, ஏறத்தாழ முற்றிலும் அதில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது இந்த இணைப்பு சம்பந்தமாக நாம் போதிய கவனம் செலுத்த முடியவில்லை, வேறு காரியங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியிருந்தது. உலக ஏகாதிபத்தியத்தின் பிரம்மாண்டமான படைபலத்தால் உடனடியாக நசுக்கப்படும் அபாயத்தைத் தடுத்து நிறுத்துவது எனும் பரம அவசரமான, பிற அனைத்தையும் மறைத்துவிடக் கூடியதான கடமை நம் முன் இருக்கும் போதில், ஓரளவுக்கு இந்த இணைப்பை நாம் புறக்கணிக்க முடிந்தது, புறக்கணிக்க வேண்டி இருந்தது.

புதிய பொருளாதாரக் கொள்கை நோக்கிய திருப்பம் கடந்த காங்கிரசில்,தனிச் சிறப்பு வாய்ந்த ஒருமுகத் தன்மையுடன், நமது கட்சியால் முடிவு செய்யப்பட்டுள்ள இதர பிரச்சினைகளில் தோற்றுவிக்கப்பட்டதை விடவும்கூட மேலதிகமான ஒரு முகத் தன்மையுடன் முடிவு செய்யப்பட்டது (நமது கட்சி அதன் ஒருமுகத் தன்மை விஷயத்தில் பொதுவாயும் தனிச் சிறப்புடன் விளங்குவது என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும்). இந்த ஒருமுகத் தன்மை, சோஷலிஸ்டுப் பொருளாதாரத்திற்கான புதிய அணுகு முறையின் தேவை ஏற்கெனவே பூரணமாயும் முதிர்ச்சியடைந்து விட்டது என்பதைப் புலப்படுத்தியது. பல பிரச்சினைகளில் கருத்து வேறுபட்ட பேர்கள், நிலைமையை வெவ்வேறு கோணங்களில் இருந்து மதிப்பிட்ட பேர்கள், சோஷலிஸ்டுப் பொருளாதாரத்திற்கு, அதன் அடித்தளங்களைக் கட்டும் கடமைக்கு உரிய மெய்யான அணுகு முறை நம்மிடம் இல்லை என்பதையும், இந்த அணுகு முறையினைக் கண்டறிவதற்கான ஒரே சாதனம் புதிய பொருளாதாரக் கொள்கை என்

பதையும் ஒருமுகமாயும் மிக விரைவாகவும் எந்தத் தயக்க மில்லாமலும் ஒப்புக் கொண்டார்கள். போர் நிகழ்ச்சிகளின் பெருக்கத்தாலும் அரசியல் நிகழ்ச்சிகளின் வளர்ச்சியாலும் பழைய நாகரிகமடைந்த மேலே நாடுகளில் முதலாளித்துவத் தின் விரிவாக்கத்தாலும் மேற்கொள்ளப்பட்ட வழிமுறை யின் காரணமாயும், காலனிகளில் ஏற்பட்ட சமுதாய மற்றும் அரசியல் நிலைமைகளின் வளர்ச்சியின் காரணமாயும், நமது நாடு பொருளாதார துறையில் முற்றும் பின்தங்கியது என் றில்லாவிடினும், எப்படியும் உலகின் ஆகப் பின்தங்கிய நாடு களில் ஒன்ருக இருந்த ஒரு நேரத்தில்,பழைய முதலாளித்துவ உலகில் முதன் முதலாக உடைப்பை ஏற்படுத்தியவர்கள் நாமே ஆவோம். நமது நாட்டிலுள்ள விவசாயிகளில் மிகப் பெரும்பான்மையினர் சிறுதர தனிப்பட்ட சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கம்யூனிஸ்டு சமுதாய அமைப்பினை நிர்மாணிப்பதற்கான நமது வேலைத்திட்டத்தில் நாம் உடனடியாகச் செயல்படுத்தக் கூடியதான இனங்கள் பரவ லான விவசாயிகள் திரளினரின் செயல்துறை வரம்புக்குச் சற்றே ஓரளவுக்கு வெளியில் இருந்தன; மேலும் விவசாயி மக்கள் மீது மிகவும் பெரிய கடப்பாடுகளை நாம் சுமத்தி ேனும். இந்த விஷயத்தில் போர் எவ்வகையான தயக்கத் தையும் அனுமதிக்காது என்ற ஆதாரத்தின் மீது இதை நாம் நியாயப்படுத்திேனும். ஒட்டுமொத்தத்தில் நாம் தவிர்க்க முடியாதபடி பிழைகள் செய்து இருந்த போதிலும்கூட, இது விவசாயிகளால் நியாயமானது என்று ஒப்புக் கொள்ளப் பட்டது. தொழிலாளர் மற்றும் விவசாயிகள் ஆட்சியை நிலப்பிரபுக்களிடமிருந்து பாதுகாக்கவும், புரட்சியின் வெற்றி சாதனைகள் அனைத்தையும் பறித்துக் கொள்வதற்கு அச் சுறுத்தும் முதலாளித்துவப் படையெடுப்பால் அந்த ஆட்சி நெருக்கி நசுக்கப்படுவதைத் தடுக்கவும் வேண்டுமானுல், தம் மீது திணிக்கப்பட்ட பேரளவான இந்த சுமைகள் அவசியமே என்பதை மொத்தத்தில் விவசாயி மக்கள் திரளினர் உணர்ந் தார்கள், புரிந்து கொண்டார்கள். ஆனுல் விவசாயிப் பொரு ளாதாரத்துக்கும் தேசவுடைமையாக்கப்பட்ட சமுதாய வுடைமையாக்கப்பட்ட ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும்

அரசுப் பண்ணைகளிலும் கட்டப்பட்டு வரும் பொருளாதாரத் துக்கும் இடையே இணைப்பு இருக்கவில்லை.

இதை நாம் கடந்த கட்சிக் காங்கிரசின் போது தெளி வாகப் பார்த்தோம். புதிய பொருளாதாரக் கொள்கை தவிர்க்க முடியாததா இல்லையா என்ற பிரச்சினையில் கட்சி யில் எந்த விதமான தயக்கமும் இல்லை என்ற அளவுக்கு இதை நாம் அவ்வளவு தெளிவாகப் பார்த்தோம்.

வெளிநாடுகளில் இருக்கும் பல்வேறு ருஷ்யக் கட்சிகளின் மிகப்பல வெளியீடுகளில் நமது இந்த முடிவு பற்றிச் சொல் லப்பட்டிருப்பதைப் படித்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவை வெளியிடும் கருத்துக்களில் மிகவும் அற்ப மான வேறுபாடு மட்டுமே உள்ளது: பழைய கால நினைவு களுடன் வாழ்ந்து வரும் அவை, இன்றும் கூட இடதுசாரி கம்யூனிஸ்டுகள்[44] புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து வருவதாக இன்னும் தொடர்ந்து வற்புறுத்திக் கூறு கின்றன. 1921ஆம் ஆண்டில் 1918ல் என்ன நடந்ததோ அதை, எதை நமது இடதுசாரி கம்யூனிஸ்டுகள் தாமே மறந்து போய் விட்டார்களோ அதை இந்த மக்கள் நினைவில் கொண் டிருக்கிறார்கள்; மற்றும் இந்த போல்ஷிவிக்குகள் தந்திரக் கார, பொய்க்கார கும்பல் என்றும், தமது சொந்த அணிகளில் கருத்து வேற்றுமைகள் இருப்பதை ஐரோப்பாவிடமிருந்து மறைக்கிறார்கள் எனவும் உலகத்திற்கே உறுதியாகக் கூறி இதையே மீண்டும் மீண்டும் அசைபோட்டு வருகிறார்கள். இதைப் படிக்கும் எவரும் ''அவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளட்டும்'' என்றுதான் கருதுவார். நமது நாட்டில் நடப்பது இதுதான் என்று அவர்கள் கற்பனை செய்து கொள்வார்களானால், இப்போது வெளிநாடுகளுக்கு ஓடி விட்ட இந்த உயர் கல்வி கற்றோர் எனப்படும் இந்தக் கிழட்டுப்பத்தாம்பசலிகளின் அறிவாற்றலின் தரம் என்ன என்பதை நிர்ணயம் செய்து கொள்ளலாம். நமது அணிகளில் எந்தக் கருத்து வேறுபாடுகளும் இல்லை என்பதை நாம் அறி வோம். இதற்குக் காரணம், சோஷலிஸ்டுப் பொருளாதாரத் தின் அடித்தளங்களை நிர்மாணிக்கும் கடமையில் வேறுபட்ட

அணுகு முறை நடைமுறை அவசியம் என்பது எல்லோருக்கும் துலக்கமாகத் தெரிந்திருந்ததேயாகும்.

விவசாயிப் பொருளாதாரத்துக்கும் நாம் உருவாக்கு வதற்கு முயன்ற புதிய பொருளாதாரத்துக்கும் இடையே இணைப்பு நமது நாட்டில் இருக்கவில்லை. அது இப்போது இருக்கிறதா? இன்னும் இல்லை. நாம் அதை நெருங்கி மட்டுமே வருகிறோம். புதிய பொருளாதாரக் கொள்கையின் முழுமையான உட்பொருள்—இதை நமது பத்திரிகைகள் எங்கு கட்டாயம் தேட வேண்டுமோ அதை மட்டும் விட்டு வேறு எல்லா இடங்களிலும் இன்னும் அடிக்கடி தேடி வரு கின்றன—இந்தக் கொள்கையின் பூரணமான குறிக்கோள் இத்தகைய பேரளவான முயற்சியுடன் நாம் படைத்துரு வாக்கி வரும் புதிய பொருளாதாரத்துக்கும் விவசாயிப் பொருளாதாரத்துக்கும் இடையே ஓர் இணைப்பை நிலைநாட் டும் வழியைக் காண்பதேயாகும். இதுவே நமது மதிப்புக் குரிய அம்சமாகும். இது இல்லாதிருக்குமானால் நாம் கம்யூ னிஸ்டு-புரட்சியாளர்களாக இருக்க மாட்டோம்.

பழையவை அனைத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, முற்றி லும் புதிய வழியில் நாம் புதிய பொருளாதாரத்தை அபி விருத்தி செய்யத் தொடங்கினோம். இதை அபிவிருத்தி செய்யத் தொடங்காமல் இருந்திருப்போமானால் ஆக முதல் மாதங்களிலேயே ஆக முதல் ஆண்டுகளிலேயே நாம் படு மோசமாகத் தோற்கடிக்கப்பட்டிருப்போம். ஆனால் இந்தப் புதிய பொருளாதாரத்தை நாம் இத்தகைய அபாரமான துணிச்சலுடன் அபிவிருத்தி செய்யத் தொடங்கினோம் எனும் மெய்விவரம் காரணமாக நாம் இதே வழியில் கட்டாயம் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பதில்லை. நாம் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? இதற்கு முகாந்தரம் எதுவும் கிடையாது.

நாம் முற்றிலும் புதிய ஒரு பணியினை மேற்கொள்ள வேண்டி இருந்தது எனவும், நமது தோழர்களிடமிருந்து, முதலாளித்துவ முறையில் மேலும் அதிக வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழிலாளர்களிடமிருந்து துரிதமான உதவியைப் பெற்றால் அன்றி, நாம் நம்பற்கரிய இடர்ப்பாடுகளை எதிரிட

நேரும் மற்றும் நிச்சயமாயும் பல பிழைகளைச் செய்யும்படி ஏற்படும் எனவும் வெகு துவக்கத்தில் இருந்தே நாம் கூறினேம். இத்தகைய பிழைகள் எங்கே செய்யப்பட்டன என்பதை நடுநிலை உணர்வுடன் பரிசீலிக்க இயல்வதும், ஆரம்பம் முதலே எல்லாவற்றையும் மீண்டும் துவங்கிச் செயல்படுவதுமே பிரதானமான காரியமாகும். நாம் இரு தடவை அல்ல மாருகப் பல தடவை ஆரம்பத்தில் இருந்து துவங்குவோமானல், அது, நாம் தப்பெண்ணங்களால் கட்டுப்படுத்தப் படவில்லை என்பதையும், உலகம் என்றுமே கண்டிராத அளவுக்கு மகத்தானதான நமது பணியினை நாம் நிதானமான கண்ணேட்டத்துடன் அணுகி வருகிறேம் என்பதையும் புலப்படுத்தும்.

இன்று, புதிய பொருளாதாரக் கொள்கையைப் பொருத்தவரை சென்ற ஆண்டின் அனுபவத்தைச் சரியாகத் தன்மயமாக்குவதே பிரதானமானது. அது செய்யப்பட வேண்டும், அதைச் செய்வதற்கு நாம் விரும்புகிறேம். மற்றும் இதை நாம் செய்ய விரும்புவோமாயின் எது வந்தாலும் சரி, (நாம் இதைச் செய்யவே விரும்புகிறேம், திண்ணமாயும் செய்வோம்!) புதிய பொருளாதாரக் கொள்கையின் பிரச்சினை—அடிப்படையான, தீர்மானகரமான, செல்வாக்கு செலுத்தும் பிரச்சினை—நாம் படைத்துருவாக்கத் தொடங்கியுள்ள(மிகவும் மோசமாக, மிகவும் விகாரமாக இருந்த போதிலும் முற்றிலும் புதியதான சோஷலிஸ்டுப் பொருளாதாரம், புதிய உற்பத்தி மற்றும் வினியோகத்தின் அடிப்படையில் படைத்துருவாக்கத் தொடங்கியுள்ள) இந்தப் புதிய பொருளாதாரத்துக்கும், லட்சோப லட்சம் விவசாயிகள் எதன் மூலம் தமது ஜீவனேபாயத்தினைப் பெறுகிறுர்களோ அந்த விவசாயிப் பொருளாதாரத்துக்கும் இடையிலான இணைப்பை நிலைநாட்டுவதே என்பதை நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்.

இந்த இணைப்பு இல்லாமலிருந்தது, வேறு எதையும் செய்வதற்கு முன்பாக இதை நாம் கட்டாயம் படைத்துருவாக்க வேண்டும். பிற அனைத்தும் இதற்குக் கீழடக்கப்பட வேண்டும். நாம் எதை விகாரமான முறையில் கட்டத்

தொடங்கினேமோ அதை அழிக்காமலே, இந்த இணைப்பைப் படைத்துருவாக்குவதில் புதிய பொருளாதாரக் கொள்கை எந்தளவுக்கு வெற்றியடைந்திருக்கிறது என்பதை நாம் இன்னும் தெளிவுபடுத்த வேண்டி இருக்கிறது.

நாம் நமது பொருளாதாரத்தை விவசாயி மக்களுடன் ஒன்றுசேர்ந்து கட்டிவளர்த்து வருகிறோம். அதை நாம் பல தடவை மாற்றி அமைத்து, அது பெருவீதத் தொழில் துறை மற்றும் விவசாயத்திலான நமது சோஷலிஸ்டு வேலைக்கும், வறுமையுடன் போராடியபடி தத்துவஞானம் பேசிக் கொண்டிராமல் (தனது நிலையில் இருந்து மீட்சி பெறவும் பட்டினியால் ஏற்படும் வேதனைமிக்க மரணத்தின் மெய்யான அபாயத்தில் இருந்து காக்கவும் தத்துவஞானம் எப்படி உதவும்?) தன்னால் இயன்றதனைத்தையும் செய்து வரும் ஒவ்வொரு விவசாயியின் வேலைக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தும் வகையில் இதை ஒழுங்கமைக்க வேண்டும்.

இதனை நாம் தெளிவாகப் பார்க்கலாம் என்றாகும்படி, எல்லா மக்களும் இதைக் காணலாம் எனும்படி, விவசாயி மக்கள் திரளினர் முழுமையும் தமது இன்றைய கடுமையான நம்பற்கரிய முறையில் நாசமடைந்த நம்பற்கரிய முறையில் வறுமைப்படுத்தப்பட்ட வேதனை மிக்க வாழ்வுக்கும் நெடுந்தொலைவிலுள்ள சோஷலிஸ்டு லட்சியங்களுக்காக நடத்தப்பட்டு வரும் வேலைக்கும் இடையில் தொடர்பு இருப்பதைக் காணலாம் என்றாகும்படியும் இந்த இணைப்பை நாம் வெளிப்படுத்த வேண்டும். சாதாரணமான சாமான்ய அணியில் இருக்கும் உழைக்கும் மனிதன் தான் ஒரு சில மேம்பாடுகளை அடைந்திருப்பதாயும் மற்றும் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆட்சியின் கீழ் ஒரு சில விவசாயிகள் மேம்பாடுகளை அடைந்த வழியில் இவற்றை அடையவில்லை எனவும் உணரக் கூடியதான ஒரு நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். நிலப்பிரபுக்கள் முதலாளிகள் ஆட்சியின் போது, ஒவ்வொரு மேம்பாட்டையும் தொடர்ந்து (மேம்பாடுகள், மிகவும் பெரிய மேம்பாடுகள் இருந்தன என்பதில் சந்தேகமில்லை) விவசாயிகள் அவதூறும், ஏளனமும், மானக் கேடும் செய்யப்பட்டனர், மக்கள் திரளினருக்கு எதிராக வன்முறை

தாண்டவமாடியது. இதை தனி ஒரு விவசாயிகூட மறக்க வில்லே, இது ருஷ்யாவில் பல பத்தாண்டுகள் காலம் மறக்கப் பட மாட்டாது. இந்த இணைப்பை மீட்டமைப்பது நமது நோக்கம். விவசாயி வறுமையால் வாடிய போதிலும் நாம் அவனுக்கு எது புரியக் கூடியதாயும், பரிச்சயப்பட்டதாயும் உடனடி எய்தக் கூடியதாயும் இருக்கிறதோ அதனுடன் தொடங்கி, நெடுந்தொலேவில் உள்ளதும் விவசாயியின் கருத்துநிலேயில் இருந்து கற்பனேயானதுமான ஒரு நிலேயில் இல்லாத வகையில் காரியங்களேச் செயல் மூலம் நிரூபித்துக் காட்டுவதும் நமது நோக்கமாகும். நம்மால் அவனுக்கு உதவி செய்ய முடியும் என்பதையும் சிறுதர விவசாயி பயங்கர நாசம், வலுமையுறல் மற்றும் பட்டினியால் வேதனேயுறும் இந்தக் கட்டத்தில் கம்யூனிஸ்டுகள் அவனுக்கு உண்மை யிலேயே உதவி புரிகிருர்கள் என்பதையும் நிரூபித்துக் காட்டுவதும் நமது நோக்கமாகும். ஒன்ரு, இதை நாம் அவனுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும், இல்லேயேல் அவன் நம்மை அழிவில் கொண்டுதள்ளி விடுவான். இது முற்ற முழுமையாயும் தவிர்க்க முடியாதது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் உட்பொருள் இத் தகையதாகும்; இது நமது கொள்கை முழுவதன் அடித்தள மாகும்; புதிய பொருளாதாரக் கொள்கையை அனுசரித்த தில் கடந்த ஆண்டின் அனுபவம் முழுவதாலும் கற்பிக்கப் பட்டதான பிரதான படிப்பினேயாகும், மற்றும் இப்படிச் சொல்லலாம் என்ருல் வரப்போகும் ஆண்டுக்கான நமது முக்கிய அரசியல் விதிமுறையாகும். விவசாயி நம்மிடம் நம்பிக்கை வைத்திருக்கிருன், அவன் பட்டு அனுபவித்த வேதனேக்குப் பிறகு அவன் வேறு எதையும் செய்ய முடி யாது. பெருந்திரளினர் அளவில் எடுத்துக்கொண்டால் விவ சாயி வாழ்ந்தபடி தொடர்ந்து சொல்வான்: ''நல்லது, இதை இன்னும் உங்களால் செய்ய முடியவில்லேயானுல் நாங்கள் காத்திருப்போம்; ஒருவேளே நீங்கள் நிச்சயம் படித்தறிந்து கொள்வீர்கள்''. ஆனுல் இந்த நம்பிக்கை என்றும் நீடிக்க முடியாது.

இதை நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும்; நம்பிக்

கையைப் பெற்றுவிட்டு நாம் வேகமாய்ச் செயல்பட வேண்டும். இந்த விவசாய நாடு, வாணிகத் தொடரைப் பயன்படுத்திச் சொன்னால், நமக்கு இனிமேல் கடன் தராத, ரொக்கப் பணம் கோருகிற ஒரு காலம் நெருங்கி வருகிறது என்பதை நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். அது சொல்லும்: ''நீங்கள் கொடுப்பல்களை மிகப்பல மாதங்களுக்கு, மிகப்பல ஆண்டுகளுக்கு ஒத்திப் போட்டு விட்டீர்கள். ஆனால் அருமை ஆட்சியாளர்களே, இந்த நேரத்துக்குள் நாங்கள் வறுமை, இன்மை, பட்டினி, நாசம் ஆகியவற்றில் இருந்து விடுவித்துக் கொள்ள உதவும் மிகவும் சிறந்த நம்பகமான வழிமுறையினை நீங்கள் கற்றறிந்து இருக்க வேண்டும். உங்களால் இதைச் செய்ய முடியும், இதை நீங்கள் ஏற்கெனவே நிரூபித்து விட்டீர்கள்.'' இதுவே நாம் தவிர்க்க முடியாதபடி எதிரிடப் போகும் சோதனையாகும்; கடைசியாக ஆய்வு செய்து பார்த்தால் இந்தச் சோதனையே எல்லாவற்றையும் கட்டாயம் முடிவு செய்யும்: ருஷ்யாவில் புதிய பொருளாதாரக் கொள்கையின் கதியையும், கம்யூனிஸ்டு ஆட்சியின் கதியையும் முடிவு செய்யும்.

நமது உடனடிப் பணியினை நாம் நிறைவேற்றப் போகிறோமா இல்லையா? இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையால் ஏதேனும் பயன் உண்டா இல்லையா? பின்வாங்கிச் செல்வது சரியான போர்த்தந்திரம் என்று காணப்பட்டால் நாம் பின்வாங்கிச் செல்லும் போது விவசாயி மக்கள் திரளினருடன் கட்டாயம் இணைந்து கொண்டு, உண்மையிலேயே முன்னேக்கி நடைபோடுகிறோம் என்பதை அவர்களுக்கு எப்போதும் தெளிவாக எடுத்துக்காட்டும் வழியில், இதன் பின்னல், அவர்களுடன் சேர்ந்து நூறு தடவை அதிக மெதுவாக ஆனால் உறுதியாகவும், நெறிதிறம்பாமலும் முன்னேறி அணிவகுத்துச் செல்ல வேண்டும். பின்னர், நமது குறிக்கோள் முற்ற முழுமையாயும் வெல்லற்கரியதாகி விடுவது திண்ணம்; உலகின் எந்தச் சக்தியாலும் நம்மைத் தோற்கடிக்க முடியாது. இதை இன்று வரை—முதல் ஆண்டில்—நாம் செய்துநிறைவேற்றவில்லை. இதை வெளிப்படையாகச் சொல்லிவிட வேண்டும். புதிய பொருளாதாரக் கொள்கை

யில் புகுந்துள்ளதான பேரளவான அபாயம் அனைத்தையும் நாம் உணர்ந்தேற்று, அதன் பலவீனமான அம்சங்கள் மீது நமது சக்திகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்துவோமானுல், நாம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது திண்ணம் என்று நான் ஆழமிக்க திடநம்பிக்கை கொள்கிறேன் (மற்றும் நமது புதிய பொருளாதாரக் கொள்கை இந்த முடிவுக்கு முற்றிலும் திட்டவட்டமாயும் உறுதியாகவும் வர வாய்ப்பு தருகிறது).

விவசாயி மக்கள் திரளினருடன் உழைக்கும் விவசாயிகளின் சாமான்ய அணிகளுடன் இணைந்து நின்று, நாம் எதிர்பார்த்ததை விடவும் அளவுக்கு மேல் அதிக மெதுவாக, ஆனுல் மக்கள் திரளினர் முழுமையும் உள்ளபடியே நம்முடன் சேர்ந்து முன்னேறிச் செல்லும் அத்தகைய வழியில் செயல்பட வேண்டும். இதை நாம் செய்யும் பட்சத்தில் இன்று நாம் கனவில் கூடக் காண முடிவதை விடவும் மிகவும் அதிக விரைவாக உரிய காலத்தில் நாம் முன்னேறுவது திண்ணம். என்னுடைய கருத்துப்படி இதுவே புதிய பொருளாதாரக் கொள்கையின் முதல் அடிப்படையான அரசியல் படிப்பினையாகும்.

இரண்டாவதும் மேலும் குறிப்பானதுமான படிப்பினை, அரசு மற்றும் முதலாளித்துவ நிறுவனங்களின் இடையிலான போட்டி மூலமான சோதனையாகும். நாம் இப்போது கலப்புக் கம்பெனிகளை நிறுவி வருகிருேம்—இவை பற்றிப் பின்னுல் சில விவரங்கள் சொல்லப் போகிறேன். இது நமது அரசு வாணிகம் அனைத்தும் மற்றும் நமது ஒட்டுமொத்தமான புதிய பொருளாதாரக் கொள்கையைப் போல கம்யூனிஸ்டுகளான நாம் வாணிக முதலாளித்துவ முறைகளைக் கையாள்கிருேம் என்பதைக் குறிக்கும். இந்தக் கலப்புக் கம்பெனிகளும் முக்கியமானவையே, காரணம் இவற்றின் மூலமாக முதலாளித்துவ முறைகளுக்கும் நமது முறைகளுக்கும் இடையே நடைமுறைப் போட்டி உருவாகிறது. இதை நடைமுறையில் ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டும். இதுவரையில் நாம் வேலைத்திட்டத்தை வரைந்தும் வாக்குறுதிகளை வழங்கியும் வந்திருக்கிருேம். இந்தக் காலகட்டத்தில் இது பரம அவசியமாக இருந்தது. ஒரு வேலைத்திட்டம் இல்லாமல்,

வாக்குறுதிகள் இல்லாமல் ஓர் உலகப் புரட்சியைத் தொடங்குவது சாத்தியமல்ல. இதற்காக மென்ஷிவிக்குகள் உள்ளிட்ட வெண்படையினர்கள் நம்மை ஏளனம் செய்து ஏசினர்கள் என்ருல், அது, மென்ஷிவிக்குகளுக்கும், இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்களின் சோஷலிஸ்டுகளுக்கும் ஒரு புரட்சி எந்த வழியில் வளர்ச்சியுறும் என்பது பற்றிய பொதுவான ஒரு கருத்தே இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. நாம் வேறு வழி எதிலும் முன்செல்ல முடியாது.

ஆனல் இப்போதுள்ள நிலைமையில் நாம் நமது வேலையைக் காரியகரமான சோதனைக்கு உள்ளாக்க வேண்டும். இந்தச் சோதனை கம்யூனிஸ்டுகள் தாமே நிறுவியுள்ள கண்காணிப்பு அமைப்புகள் செய்வது போன்ற வகைப்பட்ட ஒன்ருக இருத்தல் கூடாது. இந்தக் கண்காணிப்பு அமைப்புகள் சிறந்தனவாக இருந்தாலும் கூட, சோவியத் அமைப்பு முறையில் மற்றும் கட்சியில் திகழும் ஏறத்தாழ லட்சியக் கண்காணிப்பு அமைப்புகளாக இருந்தாலும் கூட இந்த வகைப்பட்ட சோதனை கூடாது. விவசாயிப் பொருளாதாரத்தின் மெய்யான தேவைகளின் கருத்துநோக்கில் இருந்து இத்தகைய சோதனை வெறும் கேலிக்கூத்தாக இருக்கலாம். ஆனல் நமது நிர்மாணப் பணியின் கருத்துநோக்கில் இருந்து இது நிச்சயமாயும் ஒரு கேலிக்கூத்து அல்ல. நாம் இப்போது இந்தக் கண்காணிப்பு அமைப்புகளை நிறுவி வருகிருேம். ஆனல் நான் குறிப்பிடுவது இந்தச் சோதனையை அல்ல, மாருக, நாட்டின் பொருளாதாரத்தின் கருத்துநோக்கில் இருந்து செய்யப்படும் சோதனையையே.

முதலாளியால் பொருள்களை சப்ளை செய்ய முடிந்தது. இதை அவன் திறமையற்ற வழியில் செய்தான், மட்டுமீறிய விலைகள் வசூலித்தான், நம்மை அவதூறு செய்து சூறையாடினன். அது என்ன என்பதை அறியாத காரணத்தால் கம்யூனிசம் பற்றி வாதம் செய்யாத சாதாரணத் தொழிலாளர்களும் விவசாயிகளும் இதைப் பற்றி நன்ருக அறிவார்கள்.

''ஆனல் எப்படியும் முதலாளிகளால் பொருள்களை சப்ளை செய்ய முடிந்ததே உங்களால் முடிந்ததா? உங்களால் அதைச் செய்ய இயலவில்லை.'' கடந்த வசந்தத்தில் நாம் இப்படித்

தான் பேசக் கேட்டோம். இது எப்போதும் தெளிவாகக் கேட்காவிடினும், இதுவே கடந்த வசந்தம் முழுதுமான நெருக்கடியின் உள்தொனியாக இருந்தது. ''ஆட்கள் என்ற முறையில் நீங்கள் சீர்சிறப்பு மிக்கவர்கள், ஆனல் நீங்கள் மேற்கொண்டுள்ள பொருளாதாரப் பணியினை உங்களால் தாக்குப்பிடிக்க முடியாது.'' இத்தகைய வெளிப்படையான பொசுக்கும் கண்டன விமர்சனத்தையே விவசாயிகளும்—விவசாயிகள் மூலமாகத் தொழிலாளர்களில் ஒரு சில பகுதியினரும்—சென்ற ஆண்டு கம்யூனிஸ்டுக் கட்சி மீது தொடுத்தார்கள். இதனல்தான் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் பிரச்சினையில் இந்தப் பழைய அம்சம் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

நமக்கு ஓர் உண்மையான சோதனை தேவை. முதலாளி நம்முடன் நெடுகிலும் செயல்பட்டு வருகிருன். அவன் கொள்ளைக்காரனைப் போலச் செயல்பட்டு வருகிருன். அவன் லாபம் திரட்டுகிருன், ஆனல் காரியங்களை எப்படிச் செய்வது என்பது அவனுக்குத் தெரியும். ஆனல் நீங்களோ—நீங்கள் இதைப் புதியதோர் வழியில் செய்ய முயல்கிறீர்கள்: நீங்கள் லாபம் அடிக்கவில்லை, உங்களது கோட்பாடுகள் கம்யூனிஸ்டுக் கோட்பாடுகள், உங்களது லட்சியங்கள் சீர்சிறப்பானவை—நீங்கள் முனிவர்களைப் போலத் தோன்றும் அளவுக்கு, நீங்கள் உயிரோடு இருக்கும் போதே சுவர்க்கத்துக்கு நிச்சயம் போக வேண்டும் என்னும் அளவுக்கு இவை மிகவும் அழகாக எழுதப் பட்டுள்ளன. ஆனல் உங்களால் காரியங்களைச் செய்து முடிக்க முடியுமா? விசாரணை செய்து யாரையேனும் கண்டனம் செய்யும் போது மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் நடத்தும் வகைப்பட்டதோ, ஏதேனும் தண்டனை சுமத்தும் போது அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி செய்வது போன்ருே அல்லாத ஒரு சோதனை வேண்டும், ஒரு மெய்யான சோதனை வேண்டும். ஆம், தேசியப் பொருளாதாரத்தின் கருத்துக் கோணத்தில் இருந்து ஒரு மெய்யான சோதனை வேண்டும்.

கம்யூனிஸ்டுகளுக்கு எண்ணற்ற பல தடவைகள் தாமதங்கள் செய்தாலும் பரவாயில்லை என்று விடப்பட்டோம், வேறு

எந்த ஓர் அரசாங்கத்துக்கும் வழங்கப்படாத அளவு அதிக மான நன்மதிப்பு கம்யூனிஸ்டுகளின் விஷயத்தில் அனுமதிக் கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் முதலாளிகளேயும் நிலப்பிரபுக் களேயும் ஒழித்துக்கட்ட உதவி செய்தார்கள் என்பது மெய்யே. விவசாயிகள் இதை அறிந்தேற்று, கம்யூனிஸ்டு களுக்கு ஒரு கால நீட்டிப்பை, நம் பால் நீடித்த நம்பிக் கையை, ஆனுல் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்கு மட்டுமே வழங்கியிருக்கிருர்கள். இதற்குப் பிறகு வருகிற சோதனே: பொருளாதாரத்தை மற்றவர்களேப் போல நன்ருக உங் களால் நிர்வகிக்க முடியுமா? பழைய முதலாளியால் முடி யும்; உங்களால் முடியாது.

இதுவே முதல் படிப்பினே, மத்தியக் கமிட்டியின் அர சியல் அறிக்கையில் முதலாவது முக்கியப் பகுதி. நம்மால் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாது. இது கடந்த ஆண்டில் நிரூபிக்கப்பட்டது. நாம் பொருளாதாரத்தை எவ் வாறு நிர்வகிக்கிருேம் என்பதைக் காட்டச் சில ''கோஸ் டிரஸ்டுகள்'' (துர்கேனெவால் மிகவும் உயர்வாகப் புகழப் பெற்றதான இந்த அழகான ருஷ்ய மொழியில் நான் வர் ணிக்கக் கூடுமானுல்)* உதாரணத்தை மேற்கோள் காட்ட நான் பெரிதும் விரும்புகிறேன்.

பல காரணங்களால், பெரும்பாலும் உடல்நலம் இல் லாததால் துரதிருஷ்டவசமாக எனது அறிக்கையின் இந்தப் பகுதியை என்னுல் விரிவிளக்கம் செய்ய இயலவில்லே. எனவே என்ன நடக்கிறது என்பது குறித்த எனது அவதானிப்புகளே அடிப்படையாக்கிய எனது திடநம்பிக்கையினே வெளிப்படுத் துவதோடு மட்டுமே நான் அமைந்துவிட வேண்டும். கடந்த ஆண்டின் போது நம்மால் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாது என்பதை நாம் முற்றும் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டோம். அது அடிப்படையான படிப்பினேயாகும். ஒன்ரு, இதற்கு நேர் எதிரான செயலே நாம் வரப்போகும்

* பல்வேறு நிறுவனங்களின் பெயர்களேச் சுருக்கிச் சொல் லும் முறையில் அப்போது தோன்றிய வழக்கம் இங்கு சிலேடையாகக் குறிப்பிடப்படுகிறது. இங்கு இந்தச் சுருக்கத் தொடர் அரசு டிரஸ்டுகளேச் சுட்டுவதாகும்.—ப-ர்.

ஆண்டில் புரிந்து நிரூபிக்க வேண்டும் இல்லையேல் சோவியத் ஆட்சி அதிகாரம் நிலவுவது என்பது இயலாது. மற்றும் இதி லுள்ள ஆகப் பெரிய அபாயம் என்னவென்ருல் இதை எல் லோரும் சரிவர உணர்வதில்லை என்பதே. கம்யூனிஸ்டுகளும் பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுமான நாம் எல்லோரும், பொருளாதாரத்தை நிர்வகிக்கும் ஆற்றல் நம்மிடம் இல்லை எனவும், நாம் துவக்கமுதலே கற்றுப்பயில வேண்டும் எனவும் தெளிவாக உணர்வோமாயின் பின்னர் நாம் வெற்றியடை வது திண்ணம்—இதுவே நாம் வர வேண்டிய அடிப்படை யான வேரான முடிவு என்று நான் கருதுகிறேன். ஆனுல் நம்மில் பலர் இதை அறிந்தேற்றுக் கொள்வதில்லை, மற்றும் இந்த வழியில் சிந்திக்கும் பேர்கள் இருப்பார்களானுல் அவர் கள் கம்யூனிசம் பயிலாத அறியாத பேர்வழிகள் மட்டுமே என்று கருதுகிருேம், ஒருவேளை அவர்கள் என்றேனும் ஒரு நாள் கற்றறிந்து புரிந்து கொள்வார்கள். இல்லை, மன்னிக்க வும், இங்கு சுட்டப்படுவது என்னவெனில் விவசாயியோ அல்லது கட்சி சார்பற்ற தொழிலாளியோ கம்யூனிசத்தைப் பயிலவில்லை என்பதல்ல, மாருக, ஒரு வேலைத்திட்டத்தை வரைவதும் அந்த மகத்தான வேலைத்திட்டத்தை நிறை வேற்றி முடிக்கும்படி மக்களைக் கேட்டுக் கொள்வதுமே நம் அலுவல் என்ற காலம் கடந்து விட்டது என்பதாகும். அந்தக் காலம் கடந்து விட்டது. இன்று நீங்கள், இப்போதைய இடர்ப்பாடான நிலைமைகளின் கீழ் தொழிலாளருக்கும் விவ சாயிகளுக்கும் நடைமுறை சாத்தியமான பொருளாதார உதவியை வழங்க முடியும் என்று நிரூபிக்க வேண்டும், அதன் வழி நீங்கள் போட்டி எனும் சோதனையில் வென்று விட்டீர் கள் என்பதை நிதர்சனப்படுத்திக் காட்ட வேண்டும்.

நாம் நிறுவத் தொடங்கியுள்ளதும், ருஷ்யன் மற்றும் வெளிநாட்டுத் தனியார் முதலாளிகளும் கம்யூனிஸ்டுகளும் பங்கேற்பதுமான கலப்புக் கம்பெனிகள், போட்டியைச் சரிவர ஒழுங்கமைக்கக் கற்றுக்கொள்வதற்கும் உரியதான சாதனங்களில் ஒன்றை நமக்கு வழங்குகின்றன; மற்றும் விவ சாயிப் பொருளாதாரத்துடன் இணைப்பை நிறுவிக் கொள் வதில் நாம் முதலாளிகளை விட எவ்விதத்திலும் ஆற்றல்

குறைந்தவர்களல்ல என்பதையும், அதன் தேவைகளை நம்மால் நிறைவு செய்ய முடியும் என்பதையும், விவசாயி பின்தங்கிய நிலையில் இருந்த போதிலும் கூட, இன்று அவன் இருக்கும் மட்டத்திலும் கூட—ஏனெனில் மிகக் குறுகிய தான கால அளவில் அவனை மாற்றுவது சாத்தியமல்ல—அவன் முன்னேற்றம் அடைவதற்கு நம்மால் உதவ முடியும் என்பதையும் காட்டுவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் உரிய தான சாதனங்களில் ஒன்றை நமக்கு வழங்குகின்றன.

இந்த வகையான போட்டியே நம் முன் பரம அவசரப் பணியாக எதிரிடுகிறது. இதுவே புதிய பொருளாதாரக் கொள்கையின் அச்சாணியாகும், எனது கருத்துப்படி கட்சிக் கொள்கையின் முழுமையான அடிப்படைச் சாரமாகும். முற்றிலும் அரசியல் வகைப்பட்ட மிகப்பல பிரச்சினைகளும் இடர்ப்பாடுகளும் நம் முன் உள்ளன. அவை எவை என்பதை நீங்கள் அறிவீர்கள்: ஜெனோவா, தலையீட்டு அபாயம். இடர்ப்பாடுகள் பேரளவானவை. ஆனால் இந்தப் பொருளாதார இடர்ப்பாடுகளுடன் ஒப்பு நோக்கும் போது அவை ஒரு பொருட்டல்ல. அரசியல் துறையில் காரியங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பதை நாம் ஏற்கெனவே அறிவோம்; நாம் கணிசமான அனுபவம் பெற்று விட்டோம்; முதலாளித்துவ அரசுறவுத் தந்திரம் பற்றி ஏராளமாகத் தெரிந்து கொண்டு விட்டோம். இந்த வகைப்பட்ட விஷயத்தைத்தான் மென்ஷிவிக்குகள் பதினைந்து ஆண்டுகளாக நமக்குக் கற்பித்தார்கள், இதிலிருந்து பயனுள்ள சிலவற்றை நாம் பெற்றோம். இது புதியது அல்ல.

ஆனால் இப்போது நாம் பொருளாதாரத் துறையில் செய்ய வேண்டிய ஒரு காரியம் இருக்கிறது: ஒரு சாதாரண கடைச் சிப்பந்திக்கு எதிராக, சாதாரண முதலாளிக்கு எதிராக, வியாபாரிக்கு எதிராக போட்டியில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அவர்களில் ஒவ்வொருவரும் விவசாயியிடம் சென்று கம்யூனிசம் பற்றி வாதம் புரியத் தொடங்க மாட்டார்—கம்யூனிசம் பற்றி வாதம் புரிய மாட்டார்—என்பதைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஆனால் அவர் பின்வருமாறு வாதிப்பார்: எதையேனும் பெறவோ அல்லது

சரியான முறையில் வர்த்தகம் நடத்தவோ வேண்டி இருந்தால், அல்லது எதையேனும் கட்ட வேண்டி இருந்தால் நான் உயர்ந்த செலவில் கட்டித் தருவேன்; ஆனால் கம்யூனிஸ்டுகள் ஒருவேளை இன்னும் அதிக உயர் விலைக்குக் கட்டித் தருவார்கள்—ஒருவேளை இது பத்து மடங்கு கூட அதிகமாக இருக்கலாம். இத்தகைய கிளர்ச்சிதான் இப்போது இந்த விவகாரத்தின் அறுதிக்கூருக இருக்கிறது; இங்குதான் பொருளாதாரத்தின் வேர்கள் காணக்கிடக்கின்றன.

நமது சரியான கொள்கையின் காரணமாக மக்கள் நமது கொடுப்பல்களை ஒத்திவைக்கவும், கடன் வழங்கவும் அனுமதித்தார்கள். புதிய பொருளாதாரக் கொள்கையின் மொழியில் கூறினுல் இது கடன் சீட்டுக்கள் ஆகும். ஆனுல் இந்தக் கடன் சீட்டுக்களில் தேதி போடப்படவில்லை. இவைகளைத் திருப்பிக் கொடுக்கும்படி என்று கோரப்படும் என்பதை இக்கடன் சீட்டுக்களின் வாசகத்தில் இருந்து அறிந்து கொள்ள முடியாது. இங்குதான் அபாயம் காணக்கிடக்கிறது; இந்தப் பிரத்தியேக அம்சம்தான் இந்த அரசியல் கடன் சீட்டுக்களை சாதாரண வாணிகக் கடன் சீட்டுக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது. இதில் நமது கவனம் முழுவதையும் ஒருமுகப்படுத்த வேண்டும். எல்லா அரசு டிரஸ்டுகளிலும் கலப்புக் கம்பெனிகளிலும் பொறுப்பான நல்ல கம்யூனிஸ்டுகள் இருக்கிருர்கள் என்ற மெய்விவரத்தோடு திருப்தியடைந்து விடக் கூடாது. இதனுல் பயன் ஏதும் இல்லை, காரணம் பொருளாதாரத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பது இந்தக் கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாது, இந்த வகையில் இவர்கள் பெரிய ஆலையிலும் பெரிய நிறுவனத்திலும் பயிற்சி பெற்ற சாதாரண முதலாளித்துவ விற்பனையாளனை விடவும் தரம் குறைந்தவர்கள். ஆனுல் நாம் இதை ஒத்துக் கொள்ள மறுக்கிருேம்; இந்தத் துறையில் கம்யூனிஸ்டு இறுமாப்பு—மாபெரும் ருஷ்ய மொழியைப் பயன்படுத்திச் சொல்லிடில் ''கம்ச்வான்ஸ்த்வோ''—மேலும் பிடிவாதமாக நீடிக்கிறது. பிரச்சினை பின்வருமாறு: பொறுப்பு வாய்ந்த கம்யூனிஸ்ட்—அவர் ஆகச் சிறந்தவர் கூட, கேள்விக்கிடமற்ற நேர்மையும் விசுவாசமும் உள்ளவர், பழைய நாட்

களில் கடும் சிறைத்தண்டனையால் துன்புற்றவர், மரணத்தைக் கண்டஞ்சாதவர்—வாணிகம் செய்வது எப்படி என்பதை அறிய மாட்டார், காரணம் அவர் வர்த்தகர் அல்ல, வர்த்தகம் புரிய அவர் பயிலவில்லை, அதைப் பயில விரும்பவில்லை, இதைத் துவக்கம் முதலாகப் பயிலத் தொடங்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. உலகிலேயே ஆக மகத்தான புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிய கம்யூனிஸ்டாகிய புரட்சியாளர்—முதலாளித்துவத்திடமிருந்து விமோசனம் பெறும் நம்பிக்கையில் நாற்பது கூர்ங் கோபுரங்களின் கண்கள் அல்லாவிடினும், எப்படியும் நாற்பது ஐரோப்பிய நாடுகளின் கண்கள் அவரை நோக்கி நிற்கின்றன—சாதாரண விற்பனையாளனிடமிருந்து படித்தறிந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த சாதாரண விற்பனையாளன் பத்தாண்டுக் கால பண்டகசாலை அனுபவம் உடையவன், இந்த அலுவல் தெரிந்தவன். அப்படியிருக்க, பொறுப்பான கம்யூனிஸ்டும் அர்ப்பணிப்புடைய புரட்சியாளரும் இந்த அலுவலை அறியார், தனக்கு இது தெரியவராது என்பதை உணரவுங்கூட மாட்டார்.

எனவே தோழர்களே, நாம் குறைந்த பட்சம் முதல் அறியாமையையாவது ஒழித்துவிடும் பட்சத்தில், நாம் ஒரு பிரம்மாண்டமான வெற்றியை அடைவது திண்ணம். இந்த அலுவல் பற்றி நமக்குத் தெரியாது என்ற திட நம்பிக்கையோடும், இதை அடி முதல் கற்றுக்கொள்ளத் தொடங்குவோம் எனும் உறுதியோடும் நாம் இந்தக் காங்கிரசிலிருந்து விடை பெற வேண்டும். எப்படியும் நாம் புரட்சியாளர்கள் அல்ல என்பதாக ஆகிவிடவில்லை (நாம் அதிகார வர்க்கப் பேர்வழிகளாக மாறி விட்டோம் என்று பலர் கூறுகிறார்கள்; இதற்கு முற்றிலும் ஆதாரமில்லை என்று சொல்ல முடியாது என்ற போதிலும்). மற்றும் ஒரு புதிய அசாதாரணமாயும் கடினமான ஒரு பொறுப்பான பணியில் நாம் துவக்கம் முதலே மீண்டும் மீண்டும் தொடங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்ற இந்த சாதாரண விஷயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். தொடங்கிய பிறகு நீங்கள் முன் செல்ல முடியாமல் அடைபட்டு நிற்கக் கண்டால் மீண்டும்

துவங்குங்கள். உங்களது குறிக்கோளை எய்தும் வரையில் அவசியமானால் பத்துத் தடவை வேண்டுமாயினும் இவ்வாறு செய்துகொண்டே இருங்கள். நீங்கள் ஒரு கம்யூனிஸ்ட் என்பதால் போலித்தோரணை காட்டாதீர்கள், இறுமாப்புக் கொள்ளாதீர்கள். கட்சி சார்பற்ற ஒரு விற்பனையாளன்—அவன் ஒருவேளை ஒரு வெண்படையினன், அவன் ஒரு வெண்படையினனாக இருப்பது முற்றும் சாத்தியம்—பொருளாதார முறையில் எப்பாடு பட்டும் முடிக்க வேண்டிய காரியங்களைச் செய்ய முடியும், அதே போதில் நீங்கள் அவற்றைச் செய்ய முடியாமல் இருக்கும். பொறுப்பான கம்யூனிஸ்டான நீங்கள், நூற்றுக் கணக்கான பட்டங்களும் பதவிகளும் பெற்ற நீங்கள், கம்யூனிஸ்டு மற்றும் சோவியத் விருதுகளை அணிந்திருக்கும் நீங்கள் இதை உணர்வீர்களானால் நீங்கள் உங்களது குறிக்கோளை அடைவது திண்ணம், காரணம் இது கற்றுத் தெரிந்துகொள்ளக் கூடியதாகும்.

மிகச் சிறியவை என்ற போதிலும் இந்த ஆண்டில் நாம் சில வெற்றிகளை அடைந்தோம். ஆனால் அவை அவ்வளவு முக்கியமானவை அல்ல. இந்த நேரத்தில் பொறுப்புடையவரும் மிகுந்த அர்ப்பணிப்புடையவருமான ஒரு ருஷ்யன் கம்யூனிஸ்ட் இந்தப் பணிகளைப் பழைய பாணியிலான எந்த ஒரு கடைச் சிப்பந்தி அளவுக்கும் கூடப் புரிய முடியவில்லை என்பது குறித்த ஓர் உணர்வோ அல்லது பரவலான, எல்லாக் கம்யூனிஸ்டுகளிலும் காணப்படும் ஒரு திடநம்பிக்கையோ இல்லை என்பதே பிரதான விஷயம். நாம் வெகு தொடக்க முதலே பயிலத் துவங்க வேண்டும் என்று நான் மீண்டும் சொல்கிறேன். இதை நாம் உணருவோமானால், நமது சோதனையில் சித்தி பெறுவோம். இந்தச் சோதனை கடினமான ஒன்று, வரவிருக்கும் நிதி நெருக்கடி இந்தச் சோதனையை முன்வைக்கும் — நாம் எதனால் கீழடக்கப்பட்டிருக்கிறோமோ, எதோடு தொடர்பு கொண்டிருக்கிறோமோ, எதிலிருந்து நாம் தனிப்பிரிந்து நிற்க முடியாதோ அந்த ருஷ்யன் மற்றும் சர்வதேச மார்க்கெட் இந்தச் சோதனையினை முன்வைத்திருக்கிறது. இந்தச் சோதனை சிக்

கலானது; ஏனெனில் இங்கு நாம் பொருளாதார முறையிலும் அரசியல் முறையிலும் முறியடிக்கப்படலாம்.

இந்தப் பிரச்சினை இவ்வாறுதான் நிலை கொண்டிருக்கிறது, இது வேறுவிதமாக இருக்க முடியாது. ஏனெனில் போட்டியானது மிகவும் கடுமையானதாக இருக்கும் மற்றும் தீர்மானகரமானதாகவும் இருக்கும். நமது அரசியல் மற்றும் பொருளாதாரச் சங்கடங்களில் இருந்து தப்புவதற்கு இயலும் வகையில் நம் வசம் பல நுழைவிடங்களும் வடிகால்களும் இருந்தன. பல்வேறுபட்ட புற நிகழ்வுகளுக்கு இணைவான பல்வேறு இணைப்புகளில் இந்த வடிகால்களையும் நுழைவிடங்களையும் இது வரையில் நாம் பயன்படுத்த முடிந்திருக்கிறது என்பதை நாம் பெருமையுடன் கூறலாம். ஆனால் இப்போது நமக்கு வேறு வடிகால்கள் எதுவும் கிடையாது. இதை எவ்விதமான மிகைப்படுத்தலும் இன்றி அவர்களுக்குக் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள், காரணம் இந்தப் பொருளில் இது—சர்வதேச முதலாளித்துவத்துக்கு எதிராக அன்றி—இதை எதிர்த்து நாம் மிகப்பல ''இறுதியும் தீர்மானகரமானதுமான போராட்டங்களை'' இன்னும் நடத்தப் போகிறோம் — ருஷ்யன் முதலாளித்துவத்துக்கு எதிரான, சிறுதர விவசாயிப் பொருளாதாரத்தில் இருந்து வளர்ந்து வரும் முதலாளித்துவத்துக்கு எதிரான, அதனால் ஊட்டி வளர்க்கப்படும் முதலாளித்துவத்துக்கு எதிரான உண்மையிலேயே ''இறுதியும் தீர்மானகரமானதுமான போராட்டம்'' ஆகும். இங்கு உடனடி எதிர்காலத்தில் நம் கரங்களில் ஒரு போராட்டம் இருக்கும், இதன் தேதியைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியாது. இங்கு ''இறுதியும் தீர்மானகரமானதுமான போராட்டம்'' நிகழவிருக்கிறது; இங்கு நாம் அரசியல் அல்லது வேறு இதர பக்கவாட்டு இயக்கங்களை மேற்கொள்ள முடியாது, காரணம் இது தனியார் மூலதனத்துடன் போட்டியிட்டு நடத்தப்படும் சோதனையாகும். ஒன்று, தனியார் மூலதனத்துடன் போட்டியிட்டு இந்தச் சோதனையில் நாம் சித்தி பெற வேண்டும் அல்லது முழுமையாகத் தோல்வியடைய வேண்டும். இந்தச் சோதனையில் நாம் சித்தி பெற உதவும் வகையில் அரசியல் ஆட்சி அதிகாரம் மற்றும்

பல பொருளாதார மற்றும் இதர செல்வாதாரங்கள் நம் வசம் உள்ளன; தனித்திறன் தவிர நீங்கள் விரும்பும் அனைத்தும் உள்ளன. நம்மிடம் தனித்திறன் இல்லை. ஆகவே கடந்த ஆண்டின் அனுபவத்திலிருந்து அதை 1922ஆம் ஆண்டு முழுவதற்கும் நமது வழிகாட்டும் கொள்கையாக ஏற்றுக் கொண்டு இந்த எளிய படிப்பினையைக் கற்றறிவோமானுல், இந்த இடர்ப்பாடு முந்திய இடர்ப்பாட்டைக் காட்டிலும் மிகவும் அதிகமானது—ஏனெனில் இது நம் மீது சார்ந்த ஒன்ருகவே இருக்கிறது—என்ற மெய்நடப்பு இருந்த போதிலும் இந்த இடர்ப்பாட்டையும் கூட நாம் வென்று சமாளிப்பது திண்ணம். இது வெளியிலிருந்து வரும் விரோதி போன்ற ஒன்றல்ல. நம் மீது நிர்ப்பந்தமாக சுமத்தப்பட்ட ஒரு விரசமான உண்மையினை நாமே ஒப்புக் கொள்ள மறுத்ததன் விளைவே இந்த இடர்ப்பாடு; நிலைமை நம்மிடம் அவசியப்படும் விருப்பற்ற கடமையினை மேற்கொள்ள மறுக்கிருேம், அதாவது, துவக்கத்தில் இருந்தே கற்றறிந்து கொள்ளத் துவங்குவதை மறுக்கிருேம் என்பதே இந்த இடர்ப்பாடு. புதிய பொருளாதாரக் கொள்கையிடம் இருந்து நாம் நிச்சயமாகக் கற்றறிந்து கொள்ள வேண்டிய இரண்டாவது படிப்பினை இதுவே என்பது என் கருத்து.

மூன்ருவது, இணை நிறைவான படிப்பினை அரசு முதலாளித்துவம் எனும் பிரச்சினை பற்றியதாகும். தோழர் புஹாரின் இந்தக் காங்கிரசில் கலந்து கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கது. நான் அவருடன் சற்றே வாதிட விரும்பியிருப்பேன். ஆனுல் இதை அடுத்த காங்கிரசுக்கு ஒத்திப் போட்டுவிடலாம். அரசு முதலாளித்துவம் பற்றிய பிரச்சினையில் நமது பத்திரிகைகளும் நமது கட்சியும் அறிவுஜீவிகள் இயல்பிலும் மிதவாதத்திலும் இறங்கிவிடும் பிழையினைப் பொதுவாகச் செய்கின்றன; அரசு முதலாளித்துவத்தை எப்படி வியாக்யானம் செய்வது என்பது பற்றி நாம் தத்துவ இயல் பேசுகிருேம், பழைய நூல்களில் துழாவுகிருேம். ஆனுல் இந்தப் பழைய நூல்களில் நாம் எதை விவாதித்து வருகிருேமோ அதைக் காண முடியாது; அவை முதலாளித்துவத்தின் கீழ் நிலவும் அரசு முதலாளித்து

வத்தைப் பற்றி எடுத்துக் கூறுகின்றன. ஆனால் கம்யூனிசத்தின் கீழிலான அரசு முதலாளித்துவம் பற்றி எழுதியுள்ள நூல் எதுவுமே கிடையாது. இந்தப் பொருள் பற்றி எதாவது எழுத வேண்டும் என்று மார்க்சுக்குக் கூடத் தோன்றவில்லை; இது குறித்த ஒரு துல்லியமான அறிக்கையோ, அல்லது திட்ட வட்டமான நெறிமுறையோ வெளியிடாமலே அவர் காலமானர். இதனுல்தான் இப்போது இந்த இடர்ப்பாட்டை நாமே முற்றும் வென்று சமாளிக்க வேண்டி இருக்கிறது. இந்த அறிக்கையைத் தயார் செய்யும் போது நான் நடத்த முயன்றது போல நமது பத்திரிகைகளைப் பற்றிய பொதுவான ஒரு மானசிக மதிப்பீடு நடத்தி, அரசு முதலாளித்துவம் பற்றி என்ன எழுதப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போமானல், அவை தமது இலக்கைத் தவறவிட்டுவிட்டன, முற்றிலும் தவருன திசையில் கண்ணேட்டுகின்றன என்று திடமாகச் சொல்லலாம்.

பொருளியல் சம்பந்தமான எல்லா நூல்களிலும் விவாதிக்கப்படும் அரசு முதலாளித்துவம் முதலாளித்துவ அமைப்பு முறையின் கீழ் நிலவும் அரசு முதலாளித்துவம் ஆகும், இங்கு அரசு தனது நேரடியான ஆதிக்கத்தில் ஒரு சில முதலாளித்துவ நிறுவனங்களைக் கொண்டு வருகிறது. ஆனல் நம்முடையது ஒரு பாட்டாளி வர்க்க அரசாகும்; அது பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்து நிற்கிறது; அது பாட்டாளி வர்க்கத்துக்கு எல்லா அரசியல் தனியுரிமைகளையும் வழங்குகிறது, பாட்டாளி வர்க்கத்தின் மூலமாக விவசாயிகளின் கீழ்மட்ட அணிகளைத் தன் பக்கம் ஈர்க்கிறது (இந்த வேலையை ஏழை விவசாயிகளின் கமிட்டிகள்[45] மூலம் நாம் தொடங்கியதை நீங்கள் நினைவு கூரலாம்). இதனுல் தான் மிகப் பல பேர் அரசு முதலாளித்துவம் எனும் தொடரால் தப்பாக இட்டுச் செல்லப்படுகிருர்கள். இதைத் தவிர்க்க வேண்டுமாயின், இங்கு நம் முன் இருக்கும் வடிவில் அரசு முதலாளித்துவம் பற்றி எந்த ஒரு தத்துவத்திலும் எந்த நூல்களிலும் விளக்கப்படவில்லை எனும், இதற்கான நேரடிக் காரணம் இந்தத் தொடருடன் சம்பந்தப்பட்ட வழக்கமான எல்லாக் கருத்துக்களும் முதலாளித்துவ சமு

தாயத்தில் நிலவும் முதலாளித்துவ ஆட்சியுடன் தொடர்புடையவை எனும் அடிப்படையான விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். நமது சமுதாய அமைப்பு முதலாளித்துவத் தடங்களை விட்டுவிலகி விட்டது, ஆனால் இன்னும் புதிய தடங்களில் பிரவேசிக்கவில்லை. இந்தச் சமுதாய அமைப்பில் அரசு முதலாளி வர்க்கத்தால் ஆட்சி செய்யப்படவில்லை, மாருக பாட்டாளி வர்க்கத்தால் ஆட்சி செய்யப்படுகிறது. ''அரசு'' எனும் போது நாம் நம்மையே, பாட்டாளி வர்க்கத்தையே, தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையையே பொருள் கொள்கிறோம் எனும் போது அதை நாம் புரிந்துகொள்ள மறுக்கிறோம். அரசு முதலாளித்துவம் என்பது நம்மால் கட்டுப்படுத்த இயலும் முதலாளித்துவம் ஆகும்; இதன் வரம்புகளை நம்மால் நிர்ணயிக்க முடியும். இந்த அரசு முதலாளித்துவம் அரசுடன் தொடர்புடையது. ஆனல் நமது அரசு என்பது தொழிலாளர், தொழிலாளர்களின் முன்னேறிய பகுதி, முன்னணிப்படை ஆகும். நாமே அரசு.

அரசு முதலாளித்துவம் என்பது நாம் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி வைக்க வேண்டிய முதலாளித்துவமாகும்; ஆனல் அதை அந்த எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி வைப்பதை நாம் இன்னும் கற்றறியவில்லை. இதுவே இங்குள்ள முழுப் பிரச்சினையும். இந்த அரசு முதலாளித்துவம் எப்படி இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்வது நம்மைச் சார்ந்திருக்கிறது. நம்மிடம் போதியளவு, முற்றிலும் போதுமான அளவு அரசியல் ஆட்சி அதிகாரம் இருக்கிறது; நம் வசம் நமது தேவைக்குக் கிடைக்கக் கூடிய போதுமான அளவு பொருளாதாரச் செல்வாதாரங்களும் உள்ளன. ஆனல் நேரடியாக மேற்பார்வை செய்யவும், எல்லைகளை நிர்ணயம் செய்யவும், பாகுபாடு செய்யவும், கீழடக்கவும், தன் நிலையில் கீழடங்காமல் இருக்கவும் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையிடம் இதற்கான போதிய ஆற்றல் இல்லை. இங்கு தேவைப்படுவதெல்லாம் ஆற்றலே, அதுதான் நம்மிடம் இல்லை.

பாட்டாளி வர்க்கம், புரட்சிகர முன்னணிப் படை போதியளவு அரசியல் ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்து அதனுடன் ஒருங்கே அரசு முதலாளித்துவமும் நிலவியதான ஒரு நிலைமை வரலாற்றில் முன்பு என்றுமே இருந்ததில்லை. இந்த முதலாளித்துவத்தை நாம் அனுமதிக்க முடியும் அனுமதிக்க வேண்டும், இதை ஒரு சில எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தி வைக்க முடியும் வைக்க வேண்டும் எனும் நமது புரிவின் மீது இந்தப் பிரச்சினை முழுவதும் இயங்குகிறது; ஏனெனில் இந்த முதலாளித்துவம் விவசாயிகளின் விரிவான திரளினருக்கும், விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்யும் அத்தகைய வழியில் கட்டாயம் வாணிகம் நடத்த வேண்டிய தனியார் மூலதனத்துக்கும் அத்தியாவசியமானது. முதலாளித்துவப் பொருளாதாரமும் முதலாளித்துவப் பரிவர்த்தனையும் வழக்கப்படி இயங்குவதை சாத்தியமாக்கும் அத்தகைய வழியில் நாம் காரியங்களை ஒழுங்கமைக்க வேண்டும், காரணம் இது மக்களுக்கு அத்தியாவசியமானது, இதில்லாமல் வாழ முடியாது. மற்றவை யாவும் அவர்களுக்கு—இந்த முகாமுக்கு—பரம ஜீவாதாரமான விவகாரமல்ல. அவர்கள் இவை அனைத்தையும் விட்டுவிட்டுச் சும்மா இருக்கலாம். கம்யூனிஸ்டுகளான நீங்கள், தொழிலாளர்களான நீங்கள், அரசை நிர்வாகம் செய்ய முன்வந்த பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அறிவொளி பெற்ற பகுதியினரான நீங்கள், உங்கள் கரங்களில் எடுத்துக் கொண்டிருக்கும் அரசு நீங்கள் விரும்பும் வழியில் செயல்படக் கூடிய முறையில் அதைச் சீரா அமைக்க இயல வேண்டும். நாம் ஓராண்டு நெடுகிலும் வாழ்ந்து விட்டோம்; அரசு நம் கரங்களில் இருக்கிறது; ஆனல் அது இந்தக் கடந்த ஆண்டில் நாம் விரும்பிய வகையில் புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தியுள்ளதா? இல்லை. ஆனல், நாம் விரும்பிய வழியில் அது செயல்படவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள மறுக்கிறோம். அது எவ்வாறு செயல்பட்டது? வழி காட்டிய கரத்துக்கு இந்த இயந்திரம் பணிய மறுத்தது. இதை இயக்குபவர் ஒருவர் இருக்கிறார், ஆனல் அது நடத்துனர் விரும்பும் திசையில் அன்றி வேறு எவரோ விரும்பிய திசையில் போகும்

ஒரு கார் போல இருந்தது. ஏதோ ஒரு மர்மமான வரம்பு மீறிய கரத்தால், யாருடையது என்பது கடவுளுக்கே வெளிச்சம், ஒருவேளை லாபவேட்டைக்காரர்கள் அல்லது ஒரு தனியார் முதலாளிகள் அல்லது இருசாராரதுமான கரங்களால் இயக்கப்பட்டது போலும். அந்த விதத்தில் இருந்த போதிலும், நடத்துனர் கற்பனை செய்யும் திசையில் அறவே இந்தக் கார் செல்லவில்லை, பெரும்பாலும் முற்றிலும் வேறுபட்ட திசையில் செல்கிறது. அரசு முதலாளித்துவம் சம்பந்தமாக நினைவில் கொள்ள வேண்டிய பிரதான விஷயம் இதுவே. இந்தப் பிரதானமான துறையில் நாம் துவக்க முதலே கற்றறியத் தொடங்க வேண்டும். இதை நாம் முழுதூடாகப் புரிந்துகொண்டு அறிந்தேற்றுக் கொண்டால் மட்டுமே நாம் நிச்சயமாகக் கற்றுக் கொள்வோம் என்பதில் உறுதி ஏற்படும்.

இப்போது நான் பின்வாங்கிச் செல்வதைத் தடுத்து நிறுத்தும் பிரச்சினைக்கு வருகிறேன், இந்தப் பிரச்சினையை உலோகத் தொழிலாளர் காங்கிரசில் நான் ஆற்றிய உரையில் எடுத்துரைக்க நேர்ந்தது. அதன் பின் கட்சிப் பத்திரிகைகளிலோ, அல்லது தோழர்களிடம் இருந்து வந்த தனிப்பட்ட கடிதங்களிலோ, அல்லது மத்தியக் கமிட்டியிலோ நான் எவ்வித ஆட்சேபமும் கேள்விப்படவில்லை. இந்தக் காங்கிரசுக்கு மத்தியக் கமிட்டி சமர்ப்பிக்கும் அறிக்கையில் இந்தப் பின்வாங்கிச் செல்வதை நிறுத்தும்படிக் கோருவது மிகவும் பலமாக வற்புறுத்தப்பட வேண்டும் எனவும் இதற்கேற்பான முறையில் கட்சி முழுவதன் சார்பிலும் இந்தக் காங்கிரஸ் கண்டிப்பான நெறிமுறைகளை வழங்க வேண்டும் எனவும் கோரும் எனது திட்டம் மத்தியக் கமிட்டியால் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஓர் ஆண்டு காலமாக நாம் பின்வாங்கி வருகிறோம். கட்சியின் சார்பில் இதை நிறுத்தும்படி இப்போது நாம் கோர வேண்டும். பின்வாங்குவது மூலம் நாடப் பெற்றதான குறிக்கோள் சாதனையாகி விட்டது. இந்தக் காலப் பகுதி முடிவுக்கு வருகிறது அல்லது முடிவுக்கு வந்து விட்டது. இப்போது நம் வசம் வேறு ஒரு லட்சியம், நமது சக்திகளை மறு இணைப்புச் செய்யும் லட்சியம் உள்ளது.

நாம் ஒரு புதிய இடத்தை எட்டியுள்ளோம். மொத்தத்தில் பின்வாங்குதலை சற்றே நல்ல முறையில் நடத்தி முடித்துள்ளோம். இந்தப் பின்வாங்குதலை ஒரு கிலியோட்டமாக மாற்ற முயன்ற பல்வேறு தரப்பினரிடம் இருந்து பல குரல்களைக் கேட்கிறோம் என்பது மெய்யே. சிலர் — உதாரணமாக, ''தொழிலாளர் எதிர்ப்புக்குழு''[46] (இந்தப் பெயருக்கும் அவர்களுக்கும் எவ்வித அருகதையும் இல்லை என்று கருது கிறேன்) எனும் பெயரிலான பிரிவின் பல உறுப்பினர்கள் ஏதேனும் சில துறைகளில் நாம் சரியாகப் பின்வாங்கவில்லை என்று வாதிட்டார்கள். அவர்களது மிகையான பற்றுர்வத் தின் காரணமாக அவர்கள் தவருன வாயிலில் நிற்கக் கண் டார்கள், இப்போது அதை உணர்கிருர்கள். அவர்களது செயல்கள் நாம் நமது இயக்கத்தைத் திருத்திக் கொள் வதற்கு உதவவில்லை, மாருக உண்மையில் பீதியைப் பரப்ப வும் ஒரு கட்டுப்பாடான பின்வாங்குதலைச் செயல்படுத்து வதற்கான நம் முயற்சிகளுக்குத் தடங்கல் செய்யும் விளை வினை மட்டுமே ஏற்படுத்தின என்பதை அந்தச் சமயம் அவர்கள் பார்க்கவில்லை.

பின்வாங்குவது என்பது குறிப்பாயும் முன்னேறிப் பழகி விட்ட புரட்சியாளர்களுக்கு, குறிப்பாயும் அவர்கள் சில ஆண்டுகளாகப் பிரம்மாண்டமான வெற்றிகளுடன் முன் னேறிப் பழகிவிட்ட பிறகு, குறிப்பாயும் அவர்கள் தாக்கு தல் தொடுப்பதற்கான தருணத்தை ஆர்வமுடன் காத்து நிற்கும் இதர நாடுகளிலுள்ள புரட்சியாளர்களால் சூழ்ப் பட்டிருக்கும் பட்சத்தில், ஒரு சங்கடமான காரியம். நாம் பின்வாங்குகிறோம் என்பதைக் கண்டு அவர்களில் பலர் ஒரு வெட்கக்கேடான குழந்தைத் தனமான பான்மையில் கண்ணீர் விட்டு அழுதார்கள், கடந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர் வாகக் கமிட்டியின் விரிவுபடுத்தப்பட்ட பிளீனம் கூட்டத்தில் இப்படித்தான் நடந்தது.[47] ஆகச் சிறந்த கம்யூனிஸ்டு உணர்வு களாலும் கம்யூனிஸ்டு அபிலாஷைகளாலும் உணர்ச்சி வசப்பட்ட பல தோழர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள்— என்ன பயங்கரம்! சிறந்த ருஷ்யன் கம்யூனிஸ்டுகள் பின் வாங்குகிருர்களே. இந்த அற்புதமான ஜனநாயக நாடுகளில்

நான் நாடுகடத்தப்பட்டு பல ஆண்டுகள் வசித்திருந்த போதிலும் இந்த மேற்கு ஐரோப்பிய மனப்பான்மையைப் புரிந்து கொள்வது இப்போது எனக்குக் கடினமாக இருக்கிறது போலும். ஒருவேளை அவர்களது கருத்துக் கோணத்தில் இருந்து இது புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அத்தகைய சங்கடமான நிகழ்வாக இருந்து, ஒருவர் அழும்படிச் செய்யப் போதுமான ஒரு காரியமாக இருக்கலாம். நமக்கு எப்படியும் உணர்ச்சி வயப்பட நேரமில்லை. பல ஆண்டுகளாக நாம் மிகவும் வெற்றிகரமாக முன்னேறி வந்ததாலும், மிகப் பல அசாதாரணமான வெற்றிகளை அடைந்த காரணத்தாலும் (இவை யாவும் ஒரு திகைப்பூட்டுமளவுக்கு நாசமுற்ற நிலையில் பொருள்வகை ஆதாரங்கள் ஏதுமற்ற ஒரு நாட்டில் நடந்தன) அந்த முன்னேற்றத்தைக் கெட்டிப்படுத்துவதற்கு, நாம் மிகப் பெருமளவு வென்று பெற்றுவிட்டதால், நாம் பின்வாங்க வேண்டுவது பரம அவசியமாகி விட்டது என்பது தெளிவாகிறது. முதல் தாக்குதலில் நாம் கைப்பற்றிய எல்லா வாய்ப்பிடங்களையும் நம்மால் நீடித்து வைத்திருக்க முடியவில்லை. மறு புறம், தொழிலாளர் மற்றும் விவசாயிகள் தோற்றுவித்த உற்சாக அலைவேகத்தின் முகடில் நின்று முதல் தாக்குதலிலேயே மிகப் பெருமளவுக்கு நாம் கைப்பற்றிக் கொண்ட காரணத்தால் மட்டுமே, நமது முக்கியமான அடிப்படையான நிலைகளை இழக்காமலே, மிகவும் நீண்ட தொலைவு பின்வாங்குவதற்கான இடம் நம் வசம் இருந்தது, இப்போது இன்னும் அதிகமாகப் பின்வாங்க முடியும். ''தொழிலாளர் எதிர்ப்புக்குழு'' உள்ளிட்ட ஒரு சில பீதியால் பீடிக்கப்பட்ட குரல்கள் (இது புரிந்த மிகப் பெரும் தீங்கு இதுவே!) நமது அணிகளில் இழப்புக்களை ஏற்படுத்தி, கட்டுப்பாட்டில் தளர்வை உண்டாக்கி, நாம் சரிவரப் பின்வாங்குவதைக் குழப்பி விட்ட போதிலும் ஒட்டு மொத்தத்தில் பின்வாங்கல் ஓரளவுக்கு ஒழுங்காகவே நடந்தது. பின்வாங்குதலின் போது மிகவும் அபாயகரமானதாக இருந்தது பீதியுறலே. ஒரு சேனை முழுவதும் (நான் இங்கு உருவகமாகவே குறிப்பிடுகிறேன்) பின்வாங்கிச் செல்லும் போது அது முன்னேறிச் செல்லும் போது நிலவிய அதே

கட்டுணர்வு இருக்க முடியாது. ஒவ்வொரு படியிலும் சோர்வு வாட்டத்தின் ஒருவகையான மனப்போக்கு இருக்கக் காண லாம். மாஸ்கோவில் மக்கள் குளிராலும் பட்டினியாலும் வாடுகிருர்கள் எனவும், முன்பு எல்லாம் ஒளியும் எழிலும் கொண்டு திகழ்ந்தன, இப்போது வாணிகமும் லாபவேட்டை யும் மலிந்துவிட்டன என்று எழுதிய கவிஞர்களும் கூட நம்மிடை இருந்தார்கள். இந்த வகையான கவிதாமாரிகள் பல பொழிந்தன.

பின்வாங்கல் இவற்றை எல்லாம் தோற்றுவிக்கிறது என் பது தெளிவு. இங்குதான் கடுமையான அபாயம் காணக் கிடக்கிறது: ஒரு மாபெரும் வெற்றிகரமான முன்னேற்றத் துக்குப் பிறகு பின்வாங்குவது என்பது மிகவும் கஷ்டமானது, ஏனெனில் உறவுகள் முற்றிலும் வேறுபட்டவை; ஒரு வெற்றி கரமான முன்னேற்றத்தின் போது கட்டுப்பாடு தளர்த்தப் பட்டாலும் கூட ஒவ்வொருவரும் தமது சொந்த முறையில் வலிந்து முன்செல்வர்; ஆயினும் ஒரு பின்வாங்குதலின் போது கட்டுப்பாடு மேலும் அதிக உணர்வு பூர்வமான தாக இருக்க வேண்டும், நூறு மடங்கு அதிக அவசியமாகும், காரணம் சேனை முழுதும் பின்வாங்கிக் கொண்டிருக்கும் போது அது எங்கே போய் நிற்க வேண்டும் என்பது அதற்குத் தெரியாது, அதனுல் காணவும் இயலாது—அது பின்வாங்கலே மட்டுமே பார்க்கிறது; இத்தகைய புறநிகழ்வு களின் கீழ் ஒரு சில பீதியால் பீடிக்கப்பட்ட குரல்கள் ஒரு கிலியோட்டத்தை உண்டாக்க முடியும். இங்கு அபாயம் பேரளவானது. ஒரு மெய்யான சேனை பின்வாங்கிச் செல்லும் போது பீரங்கிகள் தயார் நிலேயில் வைக்கப்பட்டிருக்கும்; ஒரு ஒழுங்கான பின்வாங்கல் ஒழுங்கு குலேந்த பின்வாங்க லாகச் சீர்கேடுறுமானுல் சுடும்படி முற்றிலும் சரியான முறை யிலே கூட, உத்தரவு தரப்படும்.

நம்ப முடியாத அளவுக்குச் சங்கடமான ஒரு பின்வாங் கலின் போது, சரியான ஒழுங்கைப் பேணி வைத்திருப்பதை சார்ந்து சகலமும் இருக்கும் நிலேயில், ஆகச் சிறந்த உள் நோக்குடன் ஆயினும் சரி, எவரேனும் பீதி பரப்புவார்களா ஞல், கட்டுப்பாடு சொற்ப அளவில் மீறப்பட்டாலும் கூட,

அவர்கள் கடுமையாகவும், கண்டிப்பாகவும், தாட்சண்யம் இன்றியும் தண்டிக்கப்பட வேண்டும். இது நமது உட்கட்சி சில விவகாரங்களுக்கு மட்டுமன்றி மிகப் பெருமளவுக்கு மென்ஷிவிக்குகளின் கனவான்கள் மற்றும் இரண்டரையாவது அகிலத்தின் கனவான்கள் விஷயத்திலும் கூடப் பொருந்தும்.

ஒட்டோ பௌவர் எழுதிய ஒரு புதிய புத்தகம் பற்றி கம்யூனிஸ்டு அகிலம் சஞ்சிகையின் 20ஆம் இதழில் தோழர் ரகோசி எழுதியிருந்த ஒரு கட்டுரையை முன் ஒரு நாள் படித்தேன்.[48] முன் ஒரு காலத்தில் ஒட்டோ பௌவரிடம் இருந்து நாம் எல்லாம் கற்றறிந்து கொண்டதுண்டு. ஆனால் அவர் போருக்குப் பிறகு காவுத்ஸ்கியைப் போலவே ஓர் அவலமான குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டவராகி விட்டார். பௌவர் இப்போது எழுதுகிருர்: ''அங்கே அவர்கள் முதலாளித்துவத்துக்குப் பின்வாங்கி வருகிருர்கள். நாம் இது ஒரு முதலாளித்துவப் புரட்சி என்று எப்போதும் கூறி வந்தோம்.''

இந்த வகைப்பட்ட செய்திகள் எல்லாவற்றையும் பிரசாரம் செய்து வரும் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், இத்தகைய காரியம் செய்வோரைச் சுட்டுத் தள்ளுவோம் என்று நாம் சாற்றும் போது வியப்படைகின்றனர். அவர்கள் மலைப்புறுகிருர்கள்; ஆனால் உறுதியாயும் இது தெட்டத்தெளிவானது: ஒரு சேனை பின்வாங்கிச் செல்லும் போது அது முன்னேறிச் செல்லும் போது இருப்பதை விடவும் நூறு மடங்கு அதிகக் கட்டுப்பாடு அவசியம். காரணம் முன்னேறும் போது எல்லோரும் வலிந்து முன்செல்வர். இப்போது ஒவ்வொருவரும் பின்னால் விரைந்தோடத் தொடங்குவார்களானல் அது உடனடியான தவிர்க்க முடியாத பெரும் விபத்தாகச் சென்று முடியும்.

அத்தகைய தருணத்திலே சரியான ஒழுங்குடன் பின்வாங்குவதும், பின்வாங்குதலின் துல்லியமான வரம்புகளை நிர்ணயம் செய்வதும், பீதிக்கு இடமளியாமல் இருப்பதும் மிகவும் முக்கியமானது. ஒரு மென்ஷிவிக் நம்மிடம் ''நீங்கள் இப்போது பின்வாங்கிச் செல்கிறீர்கள், நான் எப்போதும்

பின்வாங்கலை ஆதரித்து வந்திருக்கிறேன், நான் உங்களுடன் உடன்படுகிறேன், நான் உங்களது ஆள், நாம் சேர்ந்து பின் வாங்குவோம்'' என்று சொல்லும் போது, நாம் கூறும் பதில் ''மென்ஷிவிசத்தின் பகிரங்க வெளிப்பாடுகளுக்கு நமது புரட்சிகர நீதிமன்றங்கள் மரண தண்டனை விதிக்க வேண்டும், இல்லையேல் அவை நமது நீதிமன்றங்கள் அல்ல, ஆனால் அது என்ன என்பது கடவுளுக்கே வெளிச்சம்.''

இதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது ஏன் பதால் ''இந்தப் பேர்வழிகளிடம் எத்தகைய சர்வாதிகார மான நடத்தை!'' என்று அவர்கள் ஆர்த்துரைக்கிறார்கள். ஜெனீவாவில் நம்முடன் போராடிய காரணத்தால்[49] நாம் மென்ஷிவிக்குகளை அடக்குமுறைக்கு ஆளாக்குகிறோம் என் பதாக அவர்கள் இன்னும் கருதுகிறார்கள். ஆனால் அதை நாம் செய்திருந்தோமானால் நாம் இரண்டு மாத காலங்கூட ஆட்சி அதிகாரத்தை நீடித்து வைத்திருக்க இயலாது போ யிருக்கும். ஒட்டோ பௌவர், இரண்டாவது மற்றும் இரண் டரையாவது அகிலங்களின் தலைவர்கள், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் பிரசாரம் செய்யும் விளக்கப் பேருரைகள் அவர்களது மெய்யான இயல்பை வெளிப்படுத்துகின்றன என்பது திண்ணம்: ''புரட்சி அள வுக்கு மேல் சென்று விட்டது. நீங்கள் இப்போது சொல் வதை நாங்கள் காலமெல்லாம் சொல்லி வந்திருக்கிறோம். அதை மீண்டும் கூற அனுமதியுங்கள்.'' ஆனால் நாம் இதற்குக் கூறும் பதிலாவது: ''அதைச் சொன்னதற்காக சுட்டுக் கொல்லும் படை முன் உங்களை நிறுத்த அனுமதி யுங்கள். ஒன்று உங்கள் கருத்துக்களை வெளியிடாது இருங் கள் அல்லது இன்றைய சூழலில் வெண்படையினர்கள் எங் களை நேரடியாகத் தாக்கி வந்த போது இருந்ததை விட நமது நிலை மிக அதிக இடர்ப்பாடானதாக இருக்கும் போது உங்கள் அரசியல் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடப் பிடிவாதம் செய்தீர்களாயின் உங்களை நாங்கள் படுமோச மான பொல்லாத வெண்படையினர் பேர்வழிகளாக நடத்த நேரிடுமானால் இதற்குப் பழி நீங்கள் மட்டுமே.'' இதை நாம் என்றுமே மறந்துவிடக் கூடாது.

பின்வாங்குதலைத் தடுத்து நிறுத்துவது பற்றி நான் குறிப்பிடும் போது, நாம் பேரம் செய்யப் பயின்று விட்டோம் என்று பொருள் கொள்ளவில்லை. இதற்கு மாருக, இதற்கு நேர் எதிரான கருத்தையே கொண்டிருக்கிறேன். எனது உரை இத்தகைய எண்ணத்தை உருவாக்குமாளுல் அது, நான் தவருகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேன் என்பதையும் எனது எண்ணங்களை என்ஞல் சரிவர வெளியிட இயலவில்லை என்பதையும் காட்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கை எல்லாவற்றையும் ஒரு புதிய வழியில் செய்யவும், எல்லாவற்றையும் தகவமைத்துக் கொள்ளவுமான விருப்பம் புகுத்தப்பட்டதோடு எழுந்த அமைதியின்மை மற்றும் களேபரத்திற்கு நாம் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதே இங்குள்ள விஷயம். இப்போது நம்மிடம் சில கலப்புக் கம்பெனிகள் உள்ளன. மிகச் சிலவே நம் வசம் உள்ளன என்பது மெய். வெளிநாட்டு முதலாளிகளுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட, அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தால் அனுமதிக்கப்பட்ட ஒன்பது கம்பெனிகள் இருக்கின்றன; சகோல்னிக்கவ் கமிஷன்[50] ஆறு கம்பெனிகளை அனுமதித்தது; வடக்கு வெட்டுமர டிரஸ்டு[51] இரண்டு கம்பெனிகளை அனுமதித்தது. இவ்வாருக பலவகையான அரசாங்க இலாகாக்களால் அனுமதிக்கப்பட்ட பல கோடி மொத்த மூலதனம் கொண்ட பதினேழு கம்பெனிகள் நம் வசம் உள்ளன. (இந்த இலாகாக்களில் ஏராளமான குழப்பம் இருப்பதால் இங்கு சில பிசகு ஏற்படுவது சாத்தியம் என்பது தெரிந்ததே.) எப்படியும் இப்போது ருஷ்யன் மற்றும் வெளிநாட்டு முதலாளிகள் சேர்ந்த கம்பெனிகள் நமது நாட்டில் உள்ளன. அவை மிகச் சிலவே. ஆனுல் இந்தச் சிறிய ஆனுல் நடைமுறைத் துவக்கம் கம்யூனிஸ்டுகள் மதிப்பிடப்படுவார்கள், அவர்கள் என்ன செய்கிருர்கள் என்பதை வைத்தே மதிப்பிடப்படுவார்கள் என்பதைக் காட்டுகிறது. மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் மற்றும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி போன்ற அத்தகைய உயர் நிலையங்களால் மட்டுமே அவர்கள் மதிப்பிடப்படவில்லை. மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் ஓர் அருமையான அமைப்பு

என்பது திண்ணம், இப்போது நாம் அதற்கு மேலதிகமான அதிகாரம் தருவோம். ஆனல் இந்த அமைப்புகள் கம்யூனிஸ்டு கள் மீது நடத்தும் மதிப்பீடு—சற்றே கற்பனே செய்யுங் கள்—சர்வதேச மார்க்கெட்டில் அங்கீகரிக்கப்படுவதில்லே. (சிரிப்பு.) ஆனல் இப்போது கலப்புக் கம்பெனிகளே நிறுவு வதில் கம்யூனிஸ்டுகளுடன் சாதாரண ருஷ்யன் மற்றும் வெளி நாட்டு முதலாளிகள் சேர்ந்து கொண்டிருக்கும் நிலேயில் ''நாம் எப்படி இருந்தாலும் காரியங்களேச் செய்ய முடியும்; இது மோசமாக இருக்கலாம், மிகவும் அற்பமானதாக இருக் கலாம் ஆரம்பிப்பதற்கு என நம் வசம் சில உள்ளன'' என்று நாம் கூறுகிறேம். இது மிகப் பெருமளவில் இல்லே என்பது மெய்தான். சற்றே எண்ணிப் பாருங்கள்: இந்தக் காரியத்துக் காக நமது சக்தி முழுவதையும் (நம்மிடம் பேரளவிலான சக்தி இருப்பதாகக் கூறப்படுகிறது) அர்ப்பணிப்போம் என்று நாம் சாற்றிய பின் ஓராண்டு கடந்து விட்டது; இந்த ஆண்டில் நாம் பதினேழு கம்பெனிகளே மட்டுமே நிறுவ ஏற்பாடு செய்ய முடிந்தது.

இது நாம் எவ்வளவு படுமோசமான அளவுக்கு விகார மாயும் மடத்தனமாகவும் இருக்கிறேம் என்பதைக் காட்டு கிறது; எந்தளவு ஒப்லோமவ் போக்கு[52] இன்னும் நீடித்து நிலவுகிறது என்பதைக் காட்டுகிறது—இதற்கு நாம் தவிர்க்க முடியாத வகையில் செம்மையாக உதை வாங்கப் போகி றேம். இருப்பினும் ஒரு துவக்கம், ஒரு முன்னீடான ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்று மீண்டும் கூறுகிறேன். அவர்கள் இயங்குவதற்கான ஆரம்ப நிலேமைகள் இல்லாவிட் டால் முதலாளிகள் நம்முடன் பேரம் செய்ய ஒப்ப மாட்டார் கள். அவர்களில் ஒரு மிகச் சிறிய பிரிவினர் மட்டுமே இதற்கு உடன்பட்டுள்ளனர் என்ருலுங்கூட, நாம் ஓரளவுக்கு வெற்றி பெற்றுள்ளோம் என்பதை இது காட்டுகிறது.

இந்தக் கம்பெனிகளில் அவர்கள் நம்மை ஏமாற்றுவார் கள், காரியங்களே நேர் செய்யப் பல ஆண்டுகள் பிடிக்கும் வகையில் நம்மை ஏமாற்றுவார்கள் என்பது நிச்சயம். ஆனல் இது ஒரு பொருட்டல்ல. அது ஒரு வெற்றி என்று நான் கூற வில்லே; இது ஒரு முன்னீடான ஆய்வே; இது நமக்கு ஓர்

அரங்கம் இருக்கிறது, ஒரு களநிலம் இருக்கிறது, இப்போது பின்வாங்கலை நாம் நிறுத்த முடியும் என்பதைக் காட்டு கிறது.

இந்த முன்னீடு ஆய்வு மூலம் நாம் முதலாளிகளுடன் மிகவும் சொற்ப அளவிலான உடன்பாடுகளையே செய்து கொண்டிருக்கிருேம், ஆனுல் எப்படியும் அவற்றைச் செய்து கொண்டு விட்டோம். அதிலிருந்து நாம் பயின்று அறிந்து நமது செயல்பாடுகளைத் தொடர்ந்து நடத்திவர வேண்டும். இந்த அர்த்தத்தில் நாம் அமைதி இழப்பு, அலறுவது மற்றும் களேபரம் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ''இப்போது நம்மிடம் புதிய பொருளாதாரக் கொள்கை இருப்பதால் எங்களையும் கூட மறுசீரமைக்கலாமல்லவா?'' என்று கேட்டு ஒன்றன் பின் ஒன்ருக குறிப்புக்களும் டெலி போன் செய்திகளும் வந்த வண்ணம் உள்ளன. எல்லோ ரும் ஆரவாரம் செய்கின்ருர்கள். நாம் படுமோசமான குழப் பத்தில் இருக்கிருேம். யாரும் எவ்விதமான நடைமுறைப் பணியும் செய்வதில்லை. புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எப்படித் தகவமைத்துக் கொள்வது என்பது பற்றி எல் லோரும் தொடர்ந்து வாதம் செய்கின்ருர்கள். ஆனுல் மெய்யான பலன்கள் எதுவும் வெளிவரக் காணும்.

கம்யூனிஸ்டுகளான நம்மைப் பார்த்து வாணிகர்கள் சிரிக் கிருர்கள், ''முன்நாட்களில் தலைமை வற்புறுத்தாளர்கள்[53] இருந்தார்கள், இப்போது நம் வசம் தலைமை அரட்டை யாளர்கள் இருக்கிருர்கள்'' என்று நம்பக் கூடிய வகையில் கூறுகிருர்கள். நாம் தாமதமாகவே வேலையை ஆரம்பித் தோம் எனும், நாம் போதியளவு விரைவூக்கமாக இருக்க வில்லை எனும் இது குறித்து எள்ளளவும் சந்தேகம் இல்லை— மெய் நடப்புக் கண்டு முதலாளிகள் அவல மகிழ்வு கொள் கிருர்கள். இந்தப் பொருளில் நான் இந்த நெறிமுறைகள் காங்கிரஸ் பெயரால் ஆமோதிக்கப்பட வேண்டும் என் கிறேன்.

பின்வாங்குதல் முடிவடைந்து விட்டது. முதலாளிகளுடன் நாம் எவ்வாறு வேலை செய்வது என்பது குறித்த பிர தானமான செயல் முறைகள் உருவரை செய்யப்பட்டன.

மிகவும் சொற்பமான அளவில் என்றாலும் கூட நம்மிடம் உதாரணங்கள் உள்ளன.

தத்துவஞானம் பேசுவதை மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி வாதிடுவதை நிறுத்துக. கவிஞர்கள் பாடல்கள் எழுதட்டும்—அவர்கள் கவிஞர்களாக இருப்பது அதற்குத் தானே. ஆனால் பொருளியலாளர்களான நீங்கள் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி வாதிடுவதை நிறுத்தி அதிகக் கம்பெனிகள் நிறுவ ஏற்பாடு செய்யுங்கள், முதலாளிகளுடன் வெற்றிகரமான போட்டியை ஏற்பாடு செய்யக் கூடிய எத்தனை கம்யூனிஸ்டுகள் நம் வசம் இருக்கிறார்கள் என்பதைப் பரிசீலனை செய்யுங்கள்.

பின்வாங்குதல் முடிவுக்கு வந்து விட்டது; இப்போதுள்ள பணி நமது சக்திகளை மறுதிரட்டுதல் செய்வதேயாகும். களேபரத்துக்கும் அமளிக்கும் முடிவு கட்டும் பொருட்டு இந்த நெறிமுறைகளை காங்கிரஸ் நிறைவேற்ற வேண்டும். அமைதியாக இருங்கள், தத்துவஞானம் பேச வேண்டாம், இப்படிச் செய்தீர்களானால் அது உங்களுக்கு எதிரான குற்றச் செயலாகக் கருதப்படும். முதலாளிகளை விடவும் எவ்விதத் திறமைக்குறைவும் இன்றி உங்களால் வேலை செய்ய முடியும் என்பதை உங்களது எதார்த்த முயற்சிகள் மூலம் காட்ட வேண்டும். செல்வம் திரட்டும் பொருட்டு முதலாளிகள் விவசாயிகளுடன் ஒரு பொருளாதார இணைப்பை உருவாக்குகிறார்கள்; நமது பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதார வலிமையை உறுதிப்படுத்தும் பொருட்டு நீங்கள் விவசாயிகளின் பொருளாதாரத்துடன் ஓர் இணைப்பை உருவாக்க வேண்டும். அரசியல் ஆட்சி அதிகாரம் உங்கள் கரங்களில் இருப்பதால் முதலாளிகளை விடவும் சாதகமான நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களது தேவைக்குக் கிடைக்கக் கூடியதான பல பொருளாதார ஆயுதங்கள் உங்கள் வசம் இருக்கின்றன, அவற்றை நீங்கள் சரிவரப் பயன்படுத்த முடியாது என்பது மட்டுமே இதிலுள்ள சிக்கல். காரியங்களை அதிக நிதானமுடன் பாருங்கள். அற்பப் பகட்டான கம்யூனிஸ்டு கொண்டாட்ட உடைகளைக் கழற்றி எறியுங்கள், சாதாரண விஷயத்தை சாதாரணமாகக் கற்றுத் தெரிந்து

கொள்ளுங்கள்—அப்போதுதான் நாம் தனியார் முதலாளியைத் தோற்கடிக்க முடியும். நாம் அரசியல் ஆட்சி அதிகாரத்தை உடைமையாக வைத்திருக்கிறேம், பல பொருளாதார ஆயுதங்களே உடைமையாக வைத்திருக்கிறேம். நாம் முதலாளித்துவத்தை முறியடித்து விவசாயிகளின் பண்ணைத் தொழிலுடன் இணைப்பை உருவாக்கும் பட்சத்தில் நாம் முற்று முழுமையாயும் ஒரு வெல்லற்கரிய சக்தியாகி விடுவோம். அதன் பின் சோஷலிசத்தை நிர்மாணிப்பது என்பது கம்யூனிஸ்டுக் கட்சி எனப்படும் கடலில் ஒரு துளியின் பணியாக இராது, மாருக உழைக்கும் மக்கள் திரளினர் அனைவரினதும் பணியாக இருக்கும். அதன் பின் சாதாரணமான விவசாயி நாம் அவருக்கு உதவுகிறேம் என்பதைப் பார்த்து நமது தலைமையைப் பின்பற்றுவார். இதன் பின் விளைவாக, இதன் வேகம் நூறு மடங்கு மெதுவாக இருந்த போதிலும் இது லட்சம் மடங்கு அதிக நிச்சயமானதாயும் அதிக உறுதியானதாயும் இருக்கும்.

இந்த அர்த்தத்தில்தான் நாம் பின்வாங்கலை நிறுத்துவது பற்றிப் பேச வேண்டும். ஒரு வழியில் அல்லது இன்னெரு வழியில் இந்தக் கோஷத்தை காங்கிரசின் முடிவாக ஆக்குவதே நாம் செய்ய வேண்டிய சரியான காரியம் ஆகும்.

போல்ஷிவிக்குகளின் புதிய பொருளாதாரக் கொள்கை என்பது என்ன — பரிணமமா அல்லது போர்த்தந்திரமா? எனும் கேள்வியை இதன் தொடர்பாக நான் எடுத்துக் கவனிக்க விரும்புகிறேன். இந்தக் கேள்வி இந்த வழியில் **ஸ்மேனு** வேஹ்வாதிகளால்[54] எழுப்பப்பட்டிருக்கிறது. இவர்கள் பிரதேசம் போன ருஷ்யர் மத்தியில் ஏற்பட்ட ஒரு போக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறுர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இது மிகவும் பிரபலமான காடேட்டுகள் சிலராலும், முன்னுள் கல்ச்சாக் அரசாங்கத்தின் சில அமைச்சர்களாலும் தலைமை தாங்கப்படும் சமூக-அரசியல் போக்கு ஆகும். சோவியத் ஆட்சியதிகாரம் ருஷ்யன் அரசைக் கட்டி வருகிறது, எனவே அதை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டவர்கள் இந்த நபர்கள். இந்த **ஸ்மேனு** வேஹ்வாதிகள் பின்வருமாறு வாதிக்கிறுர்

கள்:''இந்த சோவியத் ஆட்சியதிகாரம் எத்தகைய அரசைக் கட்டி வருகிறது? ஒரு கம்யூனிஸ்டு அரசைக் கட்டி வருவதாகக் கம்யூனிஸ்டுகள் சொல்கிருர்கள், புதிய கொள்கை ஒரு போர்த்தந்திரம் பற்றிய விஷயமே என்று உறுதி கூறுகிருர்கள்: ஒரு சங்கடமான நிலைமையில் போல்ஷிவிக்குகள் தனியார் முதலாளிகளைப் பயன்படுத்திக் கொள்கிருர்கள், ஆனல் பின்னல் அவர்கள் தலைமை மேலோங்கிவிடும். போல்ஷிவிக்குகள் எதை விரும்புகிருர்களோ அதைச் சொல்ல முடியும்; உண்மையில் இது போர்த்தந்திரம் அல்ல, ஆனல் பரிணமமே, உள் அமைப்பை மேம்படுத்துவதே. அவர்கள் சாதாரண முதலாளித்துவ அரசை வந்து அடைவது திண்ணம்; நாம் அவர்களை ஆதரிக்க வேண்டும். வரலாறு வளைந்து வளைந்து செல்கிறது.''

அவர்களில் சிலர் கம்யூனிஸ்டுகள் என்று பாசாங்கு செய்கிருர்கள். ஆனல் அதிக நேர்மையுள்ள வேறு சிலர் இருக்கிருர்கள், இவர்களில் ஒருவர் உஸ்திரியாலவ். அவர் கல்ச்சாக்கின் அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக இருந்தார் என்று நினைக்கிறேன். அவர் தமது சகதலைவர்களுடன் உடன்படுவதில்லை. அவர் கூறுகிருர்: ''கம்யூனிசம் பற்றி நீங்கள் விரும்பியபடிக் கருதிக் கொள்ள முடியும், ஆனல் நான் இது போர்த்தந்திரம் பற்றிய விஷயம் அல்ல மாருக பரிணமம் பற்றிய விஷயமே என்று உறுதியாக வற்புறுத்துகிறேன்.'' இதைப் போல நேர்மையுடன் இருப்பது மூலம் உஸ்திரியாலவ் நமக்கு மகத்தான சேவை புரிகிருர் என்று நான் நினைக்கிறேன். நாம், எனது பதவி காரணமாகப் பிரத்தியேகமாயும் நான் அன்ருடம் ஏராளமான உணர்ச்சிப் பசப்பான கம்யூனிஸ்டுப் பொய்களை, ''கம்யூனிஸ்டு புளுகுகளைக்'' கேட்க நேருகிறது; சில சமயம் அவற்றைக் கேட்டால் வெறுக்கும் அளவுக்குக் குமட்டல் எடுக்கிறது. இப்போது இந்தக் ''கம்யூனிஸ்டு புளுகுகளுக்குப்'' பதில் **ஸ்மேன வேஹ்** பிரதி ஒன்றைப் பெறுகிறேன். அது முற்றும் நேரிடையாகக் கூறுவதாவது: ''அவற்றை நீங்கள் கற்பனை செய்து கொள்வது போல எவ்வகையிலும் விஷயங்கள் இருப்பதில்லை. எல்லா இடங்களிலும் பலவகையான கோஷங்கள் பொறிக்கப்பட்ட

கம்யூனிஸ்டுக் கொடியுடன் நீங்கள் சாதாரணமான முதலாளித்துவச் சதுப்பு நிலத்திற்குள் சறுக்கிவிழுந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதே உண்மை.'' இது மிகவும் பயனுள்ளது. ஏனெனில் நம்மைச் சுற்றி இடைவிடாது என்ன கூறப்படுகிறதோ அதன் பல்லவி மட்டுமே அல்ல இது, மாருக வர்க்க விரோதியால் எடுத்துச் சொல்லப்பட்ட அப்பட்டமான வர்க்க உண்மை. இதைப் போன்ற ஒன்றைப் படிப்பது மிகவும் பயனுடையது; இது எழுதப்பட்டதற்குக் காரணம் கம்யூனிஸ்டு அரசு இந்த வழியில் எழுத அனுமதிக்கிறது, வேறு வழியில் எழுத அனுமதிப்பதில்லை என்பதல்ல, மாருக இது வர்க்க விரோதியால் மொட்டையாகவும் வெளிப்படையாகவும் கூறப்பட்டதான மெய்யான வர்க்க உண்மையாகும். உஸ்திரியாலவ் ஓர் அரசியல் சட்ட-ஜனநாயகவாதியாக, ஒரு முதலாளித்துவ வகைப்பட்டவராக இருந்த போதிலும், தலையீட்டை ஆதரித்த போதிலும் ''நான் சோவியத் ஆட்சியதிகாரம் ஆதரிக்கப்படுவதற்குச் சாதகமாக இருக்கிறேன்'' என்று கூறுகிருர். ''நான் சோவியத் ஆட்சியதிகாரம் ஆதரிக்கப்படுவதற்குச் சாதகமாக இருக்கிறேன் காரணம் அது சாதாரண முதலாளித்துவ ஆட்சியதிகாரத்துக்குத் தன்னை இட்டுச் செல்லும் பாதையை மேற்கொண்டிருக்கிறது.''

இது மிகவும் பயனுள்ளது; இதை நாம் மனத்தில் இருத்த வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் கடவுள் மீது நம்பிக்கை வைத்திருக்கிருர்களா அல்லது கம்யூனிஸ்டுப் புரட்சி மீது நம்பிக்கை வைத்திருக்கிருர்களா என்று தொலைவில் இருக்கும் ஒருவர் கூற முடியாத அளவுக்கு அவர்களில் சிலர் கிட்டத்தட்ட கம்யூனிஸ்டுகள் என்று பாசாங்கு செய்வதை விடவும் இந்த வகையில் இந்த ஸ்மேனு வேஹ்வாதிகள் எழுதுவது நமக்கு அதிக நன்மையானது. இத்தகைய நேர்மையான விரோதிகள் பயனுடையவர்கள் என்று நாம் வெளிப்படையாகக் கூற வேண்டும். உஸ்திரியாலவ் குறிப்பிடும் காரியங்கள் நடப்பது சாத்தியம் என்று நாம் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். வரலாறு எல்லா வகையான உருமாற்றங்களையும் அறியும். திடநம்பிக்கைகள் மீதான

உறுதி, விசுவாசம் மற்றும் இதர சிறப்பான தார்மிகப் பண்புகளின் பால் சார்ந்து நிற்பது என்பது எதுவாக இருப்பினும் அரசியல் பற்றிய காரியகரமான தோரணையாகாது. ஒரு சிலர் சிறந்த தார்மிகப் பண்புகளைக் கொண்டவர்களாக இருக்கலாம், ஆனால் வரலாற்றுப் பிரச்சினைகள் பேரளவான மக்கள் திரளினரால் முடிவு செய்யப்படுகின்றன. அவர்கள் இந்தச் சிலர் தமக்குப் பொருத்தமாக இல்லாவிடில் அவர்களைச் சில சமயம் அவ்வளவு கண்ணியமாக நடத்தாமல் போகலாம்.

இந்த வகையான பல சம்பவங்கள் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளன. இதனால்தான் நாம் ஸ்மேனு வேஹ்வாதிகளின் இந்த வெளிப்படையான கூற்றைக் கட்டாயம் வரவேற்க வேண்டும். விரோதி வர்க்க உண்மையை வெளியிடுகிறார் மற்றும் நம்மை எதிரிடும் அபாயத்தைச் சுட்டுகிறார்.இதைத் தவிர்க்க முடியாததாக்க விரோதி முயல்கிறார். ஸ்மேனு வேஹ்வாதிகள் ஆயிரம் பதினாயிரக் கணக்கான முதலாளித்துவ வகைப்பட்டோரின், அல்லது நமது புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள சோவியத் அலுவலாளர்களின் உணர்வுகளை வெளியிடுகிறார்கள். இதுவே மெய்யான, பிரதானமான அபாயம் ஆகும். இதனால்தான்—யார் வெற்றியடைவார்கள்? எனும் கேள்வி மீது பிரதானமாயும் கவனம் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். நான் போட்டியைப் பற்றி ஏற்கெனவே பேசியிருக்கிறேன். நம் மீது இப்போது நேரடியான தாக்குதல் தொடுக்கப்படவில்லை, எவரும் நமது மென்னியை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை. நாளை என்ன நடக்கப் போகிறது என்பதை நாம் இனிமேல்தான் பார்க்கப் போகிறோம் என்பது மெய்யே; ஆனால் இன்று நாம் ஆயுதமேந்திய தாக்குதலுக்கு உள்ளாக்கப்படவில்லை. இருந்த போதிலும் முதலாளித்துவ சமுதாயத்தை எதிர்த்த போராட்டம் நூறு மடங்கு அதிக மூர்க்கமானதாயும் இன்னல் விளைப்பதாயும் ஆகி விட்டது; காரணம் நாம் எப்போதும் நண்பர்களிடமிருந்து விரோதிகளை இனங்கண்டு சொல்ல இயல்வதில்லை.

நான் கம்யூனிஸ்டுப் போட்டி பற்றிக் குறிப்பிட்ட போது நான் கம்யூனிஸ்டு அனுதாபங்களே அல்ல, மாருக பொருளா தார வடிவங்கள் மற்றும் சமூக அமைப்பு முறைகளின் வளர்ச் சியை மனத்தில் கொண்டிருந்தேன். இது போட்டியல்ல, மாருக முதலாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடை யிலான ஆகக் கடைசியாகவிட்டாலும்,கிட்டத்தட்ட கடைசி யான, ஆவேசமான, வன்மமான ஜீவமரணப் போராட்ட மாகும்.

இங்கு நாம் இந்தக் கேள்வியை நேர்மையாகக் கேட்டே தீர வேண்டும்: நமது பலம் எங்கே காணக்கிடக்கிறது, நமக்குக் குறைபாடாக இருப்பது எது? நம்மிடம் போதுமான அளவு அரசியல் அதிகாரம் இருக்கிறது. இன்னின்ன நடை முறைப் பிரச்சினேயில், இன்னின்ன வாணிக அலுவல் நிறு வனத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு, கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் போதிய அதிகாரம் இருக்கவில்லே என்று இங்குள்ள எவரும் அடித்துக் கூறுவார்கள் என்று நான் கருதவில்லே. இதைப் பற்றி மட்டுமே நினேத்துக் கொண்டிருக்கும் பேர்வழிகள் இருக்கிருர்கள். ஆனுல் இவர்கள் படுமோசமான முறையில் பின் நோக்கியே பார்க்கிருர்கள், ஒருவர் முன் நோக்கியே பார்க்க வேண்டும் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. பிரதானமான பொருளாதார அதிகாரம் நமது கரங்களில் உள்ளது. ஜீவாதாரமான எல்லாப் பெரிய நிறு வனங்களும், ரயில்வேக்கள், இத்தியாதி நமது கரங்களில் இருக்கின்றன. குத்தகைக்கு விடப்பட்ட நிறுவனங்கள் சில இடங்களில் கணிசமாக இருந்த போதிலும் பொதுவாக மிக வும் சிறியளவே உள்ளன, ஒட்டுமொத்தத்தில் இது மிகமிகத் துச்சமானது. ருஷ்யாவின் பாட்டாளி வர்க்க அரசிடம் இருக் கும் பொருளாதார அதிகாரம் கம்யூனிசத்தை நோக்கி மாறிச் செல்வதை உத்தரவாதம் செய்வதற்கு முற்றும் போதுமானது. அப்படியானுல் குறைபாடுதான் என்ன? குறை பாடு என்னவென்ருல், ஆட்சி நிர்வாகப் பணிகளேப் புரிந்து வரும் கம்யூனிஸ்டுகளின் அடுக்கினர் மத்தியில் கலாசாரம் இல்லாததே என்பது கண்கூடு. பொறுப்பான பதவிகளில் இருக்கும் 4,700 கம்யூனிஸ்டுகள் கொண்ட மாஸ்கோவை

எடுத்துக் கொண்டால், அந்த மிகப் பெரிய அதிகாரவர்க்க இயந்திரத்தை, அந்தப் பிரம்மாண்டமான குவியலை எடுத்துக் கொண்டால்—யார் யாருக்கு நெறியாண்மை செய்கிறார்கள்? என்று கட்டாயம் கேட்கும்படி நேரும். கம்யூனிஸ்டுகள் அந்தக் குவியலை நெறியாண்மை செய்கிறார்கள் என்பதாக உண்மையிலேயே கூற முடியுமா என்பது மிகவும் ஐயப்பாட்டிற்குரியது. உண்மையைக் கூறிடில் அவர்கள் நெறியாண்மை செய்யவில்லை, அவர்கள் நெறியாண்மை செய்யப்படுகிறார்கள். நாம் குழந்தைகளாய் இருந்த போது வரலாற்றுப் பாடங்களில் நம்மிடம் என்ன சொல்லப்பட்டதோ அதற்கு ஒப்புடையதான சில சம்பவங்கள் இங்கு ஏற்பட்டன. நமக்குப் போதிக்கப்பட்டது என்னவெனில், சில சமயம் ஒரு தேசம் இன்னொன்றை வென்று கீழடக்குகிறது; இப்படி வென்று கீழடக்கும் தேசம் வெற்றி பெற்ற தேசம், தோற்கடிக்கப்பட்ட தேசம் வென்று கீழடக்கப்பட்ட தேசம். இது எல்லோருக்கும் எளிதாகத் தெரிவதும் புரிந்து கொள்ளக் கூடியதுமாகும். இந்தத் தேசிய இனங்களின் கலாசாரத்துக்கு என்ன நேரும்? இப்பிரச்சினை அவ்வளவு எளிதானதல்ல. வென்று அடக்கிய தேசம் தோற்கடிக்கப்பட்ட தேசத்தை விடவும் அதிகக் கலாசாரம் கொண்டதாக இருந்தால், முந்தியது பிந்தியதின் மீது தனது கலாசாரத்தை வலுவந்தமாகத் திணிக்கிறது. ஆனால் இதற்கு நேர் எதிர்நிலை ஏற்படுமானால், தோற்கடிக்கப்பட்ட தேசம் வென்றடக்கிய தேசத்தின் மீது தனது கலாசாரத்தைத் திணிக்கிறது, இவ்வாறு நேருவது உண்டு. ரு. சோ. சோ. கூ. குடியரசின் தலைநகரில் இதைப் போன்ற சில காரியங்கள் நிகழ்ந்தனவா? 4,700 கம்யூனிஸ்டுகளும் (கிட்டத்தட்ட ஒரு சேனை டிவிஷன், எல்லோரும் மிகச் சிறந்தவர்கள்) ஓர் அன்னியக் கலாசாரத்தின் செல்வாக்கின் கீழ் வந்தார்களா? தோற்கடிக்கப்பட்டவர்களிடம் மிகவும் உயர் தரமான கலாசாரம் இருந்தது என்பதான கருத்து இங்கு இருந்திருக்கலாம் என்பது மெய்யே. ஆனால் காரியம் அப்படிப்பட்ட எதுவுமல்ல. அவர்களது கலாசாரம் அவலமானது, அற்பமானது. ஆனால் அது இன்னும் நம்முடையதை விடவும் உயர்ந்த தரமுடையது.

அது அவலமானதாயும் தாழ்ந்ததாயும் இருந்த போதிலும் நமது பொறுப்பான கம்யூனிஸ்டு ஆட்சி நிர்வாகிகளுடையதைக் காட்டிலும் உயர் தரமானது. ஏனெனில் பின்னவர்களுக்குப் போதுமான ஆட்சி நிர்வாகத் திறமை இல்லை. இலாகாக்களின் தலைவர்களாகப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்டுகள்—சில சமயம் இவர்களைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கென தந்திரமான சதிகாரர்கள் திட்டமிட்டே இவர்களை இந்தப் பதவிகளில் நியமனம் செய்கின்றனர்—பெரும்பாலும் ஏமாற்றப்படுகிருர்கள். இதை ஒத்துக் கொள்வது மிகவும் விரசமானது, எப்படியும் மிகவும் விரும்பத்தக்க ஒன்றல்ல. ஆனல் நாம் இதைக் கட்டாயம் ஒத்துக் கொண்டே தீர வேண்டும் என்று கருதுகிறேன். ஏனெனில் தற்போது இது முனைப்பான பிரச்சினையாகும். கடந்த ஆண்டின் அரசியல் படிப்பினை இதுவே என்று நான் கருதுகிறேன்; இதைச் சுற்றித்தான் 1922ல் போராட்டம் உச்சமடையப் போகிறது.

ரு. சோ. சோ. கூ. குடியரசின் மற்றும் ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொறுப்பான கம்யூனிஸ்டுகள் தாம் நிர்வாகம் நடத்த முடியாது என்பதையும், தாம் நெறியாக்கம் செய்வதாகக் கற்பனை மட்டுமே செய்கிருர்கள், ஆனல் உண்மையில் நெறியாக்கம் செய்யப்படுகிருர்கள் என்பதையும் உணர முடியுமா? இதை அவர்கள் உணர முடியுமானல் அவர்கள் கற்றறிந்து கொள்வார்கள் என்பது நிச்சயம். ஏனெனில் இந்த விவகாரம் கற்றறிந்து கொள்ளக் கூடியதாகும். ஆனல் இதைக் கற்றறிந்து கொள்ள ஒருவர் கடுமையாகப் பயில வேண்டும். ஆனல் நமது ஆட்கள் இதைச் செய்வதில்லை. அவர்கள் உத்தரவுகளையும் அரசாணைகளையும் அள்ளிவீசுகிருர்கள். ஆனல் இதன் விளைவு அவர்கள் எதை விரும்புகிருர்களோ அதற்கு நேர்மாருக உள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கை பிரகடனம் செய்தது மூலம் நாம் அதிகார பூர்வமான நடப்பில் போட்டியும் எதிர்ப்போட்டியும் இடம் பெறுமாறு செய்திருப்பது ஒரு கடினமான விவகாரமாகும். இது எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் நிகழ்ந்து வருவது போல் தோன்றுகிறது. ஆனல்

உண்மையில் இது சமரசப்படுத்த முடியாத இரண்டு பகைமை வர்க்கங்களின், முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களின் இடையிலான போராட்டத்தின் இன்னொரு வடிவமேயாகும். இது இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படாத ஒரு போராட்டமாகும், கலாசார முறையில் இது மாஸ்கோவில் இருக்கும் மத்திய அரசாங்க இலாகாக்களில் கூட இன்னும் சமாளிக்கப்படவில்லை. பெரும்பாலும் முதலாளித்துவ வகைப் பட்ட அலுவலர்கள், அதிகாரப் பலம் முழுவதையும் வைத்திருந்தும், சகல வாய்ப்புகளையும் பெற்றிருந்தும் ஆனால் தமது உரிமைகளையும் அதிகாரப் பலத்தையும் சிறிதளவும் பயன்படுத்த முடியாதவர்களாக இருந்த நமது ஆகச் சிறந்த கம்யூனிஸ்டுகள் விடவும் நன்ருக இந்த விவகாரம் பற்றி அறிவார்கள்.

அலெக்சாந்தர் ததோர்ஸ்கி எழுதிய சிற்றேட்டில் இருந்து ஒரு வாசகத்தை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். இது வெஸ்யகோன்ஸ்கில் (த்வேர் குபேர்னியாவில் இந்தப் பெயரிலான ஓர் உயெஸ்து நகரம் உள்ளது) 1918 நவம்பர் 7ல் ருஷ்யாவின் சோவியத் புரட்சியின் முதலாவது ஆண்டு விழாவை ஒட்டி நீண்ட காலம் முன்பு வெளியிடப்பட்டது. இந்த வெஸ்யகோன்ஸ்கில் வாழும் தோழர் கட்சி உறுப்பினர் என்று தோன்றுகிறது—இந்தச் சிற்றேட்டை நான் வெகு நாட்களுக்கு முன் படித்தேன், இதை நிச்சயமாக சொல்ல முடியாது. இரண்டு சோவியத் தொழிற்சாலைகளை உருவாக்க அவர் எப்படி வேலை துவங்கினுர் என்பதையும், இந்த நோக்கத் துக்காக இரண்டு முதலாளிகளின் சேவையை எவ்வாறு ஈடுபடுத்தினுர் என்பதையும் அவர் வருணிக்கிருர். இத் தகைய காரியங்கள் அந்தக் காலத்தில் எவ்வாறு செய்யப் பட்டதோ அந்த வழியில் அவர் இதைச் செய்தார்—அவர் களைச் சிறையில் தள்ளப் போவதாயும் அவர்களது சொத் துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்யப் போவதாயும் பயமுறுத்தி இதைச் செய்தார். தொழிற்சாலையை மீட்டு நிறுவும் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். 1918ல் முதலாளித்துவ வகைப்பட்டோர் சேவைகள் எவ்வாறு ஈடு படுத்தப்பட்டன என்பதை நாம் அறிவோம் (சிரிப்பு),

எனவே இது குறித்த விவரங்களைத் தரத் தேவையில்லை. ஆனால் இப்போது முதலாளித்துவ நபர்களை ஈடுபடுத்த நாம் பயன்படுத்தி வரும் முறைகள் வேறு. அவர் எட்டிய முடிவு இதுவே: ''இது பாதி வேலை மட்டுமே—முதலாளி வர்க்கத்தினர்களை முறியடித்தல் மட்டும், அவர்களைக் கீழடக்குதல் மட்டும் போதாது; நமக்காக உழைக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்.''

இவை தனிச் சிறப்பான சொற்கள். வெஸ்யகோன்ஸ்க் நகரில் கூட, 1918லேயே கூட வெற்றிவாகை சூடியதான பாட்டாளி வர்க்கத்துக்கும் முறியடிக்கப்பட்டதான முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான உறவுநிலை குறித்துச் சரியாகப் புரிந்துகொண்டிருந்த நபர்கள் இருந்தார்கள் என்பதையே இந்தத் தனிச் சிறப்பான சொற்கள் காட்டும்.

நாம் சுரண்டலாளரின் முட்டிகளில் அடித்து அவரைத் தீங்கு செய்ய முடியாதபடிச் செய்து கீழடக்குவது பாதி வேலை மட்டுமே ஆகும். எனினும் நமது மாஸ்கோவில் பொறுப்பான அலுவலர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நாம் செய்ய வேண்டுவதெல்லாம் கீழடக்குவது, தீங்கு செய்ய முடியாதபடிச் செய்வது மற்றும் முட்டிகளில் அடிப்பது மட்டுமே என்று கருதுகிறார்கள். மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் வெண்படையினர்கள் பற்றி நான் சொன்னவை எல்லாம் மிக அடிக்கடி தீங்கு செய்ய முடியாதபடிச் செய்வது, முட்டிகளில் அடிப்பது (முட்டிகளில் மட்டும் இன்றி வேறிடங்களிலும் அடிப்பதும் இதிலுட்படும் போலும்) மற்றும் கீழடக்குவது என்பதாக மாத்திரமே அர்த்தப்படுத்தப்படுகின்றன. ஆனால் அது அரைவாசி வேலை மட்டுமே. இதை வெஸ்யகோன்ஸ்க் தோழர் எழுதிய 1918லும் கூட இது அரைவாசி வேலை மட்டுமே; இப்போது இது கால்வாசிக்கும் குறைவானதாகும். இந்த ஆட்களை நமக்காக வேலை செய்ய வைக்க வேண்டும், பொறுப்பான கம்யூனிஸ்டுகள் பட்டமும் பதவியும் அனுபவித்துக் கொண்டும் இலாகாக்களுக்குத் தலைமை வகித்துக் கொண்டும், ஆனால் உள்ளபடியே முதலாளித்துவ வகைப்பட்டோருடன் சேர்ந்து எல்லோரும் செல்லும்

போக்கிலே போகாதபடி நாம் செய்ய வேண்டும். இதுவே முழுதுமான விவகாரம்.

கம்யூனிஸ்டுகளின் கரங்களைக் கொண்டு மட்டுமே கம்யூனிஸ்டுச் சமுதாய அமைப்பை நிர்மாணிப்பது எனும் கருத்து சிறு பிள்ளைத்தனமானது, முற்ற முழுதும் சிறு பிள்ளைத்தனமானது. கம்யூனிஸ்டுகள் கடலில் ஒரு துளி, மக்கள் எனும் கடலில் ஒரு துளி. உலக வரலாற்றிலான அதன் திசைவழியின் நோக்குநிலையில் இருந்து மட்டுமன்றி, அவர்கள் தேர்ந்தெடுத்த பாதையை அவர்கள் முற்றும் சரியாக நிர்ணயம் செய்தால் மட்டுமே அப்பாதையில் மக்களை வழி நடத்திச் செல்ல முடியும். இந்தக் கருத்துக் கோணத்தில் இருந்து நாம் நமது பாதையை முற்றும் சரியாகவே நிர்ணயம் செய்திருக்கிறோம். நாம் இதைச் சரியாகவே நிர்ணயம் செய்தோம் என்பது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள நிலைவரத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. நமது சொந்தப் பிறந்த மண்ணுக்கும் நமது நாட்டுக்கும் இப்பாதையை நாம் சரியான முறையில் நிர்ணயம் செய்ய வேண்டும். உலக வரலாற்றின் திசைவழி மட்டுமே இதற்குக் காரணியாகாது. தலையீடு இருக்குமா இருக்காதா, விவசாயிகளுக்கு அவர்களது தானியத்துக்குப் பரிவர்த்தனையாகப் பண்டங்களை வழங்க நம்மால் இயலுமா இயலாதா எனும் இதர காரணிகளும் உள்ளன. விவசாயிகள் கூறுவார்கள்: ''நீங்கள் மிகச் சிறந்த பேர்வழிகள்தான், நீங்கள் நமது தாய்நாட்டைப் பாதுகாத்தீர்கள்; அதனால்தான் நாங்கள் உங்களுக்குக் கீழ்ப்படிந்தோம்; ஆனால் உங்களால் இந்த அலுவலைச் சரிவர நிர்வகிக்க முடியாது என்றால் வெளியேறுங்கள்!'' ஆம், இதைத்தான் விவசாயிகள் நிச்சயமாயும் கூறுவார்கள்.

நமது இந்தப் பொருளாதாரத்தை நிர்மாணிப்பதில் முதலாளித்துவ வகைப்பட்டோரின் கரங்களைப் பயன்படுத்துவதிலும், இதற்கிடையில் இந்த முதலாளித்துவ நபர்களிடமிருந்து கற்றறிந்து, அவர்கள் எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அந்தப் பாதையில் அவர்களை வழி நடத்திச் செல்வதிலும் நாம் வெற்றி பெறும் பட்சத்தில் கம்யூனிஸ்டுகளாகிய நாம் பொருளாதாரத்தை

நெறியாக்கம் செய்ய முடியும். ஆனுல் ஒரு கம்யூனிஸ்ட் ''நான் ஒரு பொறுப்பான கம்யூனிஸ்ட், எந்த ஒரு விற்பனையாளனையும் விட மிகப் பெருமளவுக்கு வெல்ல முடியாத விரோதிகளை நான் முறியடித்திருக்கிறேன்; நாங்கள் போர் முனையில் சமர் புரிந்துள்ளோம், மற்றும் மிகப் பெருமளவுக்கு வெல்ல முடியாத விரோதிகளை முறியடித்திருக்கிருேம்'' என்று சொல்லும் போது, அந்தக் கம்யூனிஸ்ட் தமக்கு சகலமும் தெரியும் என்பதாகக் கற்பனை செய்து கொள்ளும் போது—இந்த மேலோங்கி நிற்கும் மனப்பாங்குதான் நமக்கு மாபெரும் தீங்கு விளைக்கிறது.

சுரண்டலாளனைத் தீமை செய்ய முடியாதபடிச் செய்வதும், முட்டிகளில் அடிப்பதும், அவனது அணிகளை வெட்டி பலவீனப்படுத்துவதும் இந்த வேலையில் ஆகக் குறைந்த முக்கியத்துவம் உள்ள பகுதியாகும். இது கட்டாயம் செய்யப்பட்ட வேண்டும். நமது அரசின் அரசியல் நிர்வாகமும் நமது நீதிமன்றங்களும் இது வரையில் செய்து வந்ததை விட அதிக ஊக்கத்துடன் இதைச் செய்ய வேண்டும். தாம் உலக முழுதிலுமுள்ள விரோதிகளால் சூழப்பட்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் நீதிமன்றங்கள் என்பதை அவை நினைவில் இருத்த வேண்டும். இது கடினமானதல்ல, பிரதானமாயும் இதைப் புரிவதற்கு நாம் கற்றுக் கொண்டு விட்டோம். இங்கு ஓரளவுக்கு நிர்ப்பந்தம் செயல்படுத்தப்பட வேண்டும், ஆனுல் அது எளிதானதே.

இந்த வெற்றியின் இரண்டாவது பகுதியைச் சாதனையாக்குவதற்கு அதாவது, கம்யூனிஸ்டல்லாதார் கரங்களால் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்கு, பொருளாதார முறையில் எது அவசியமோ அதைச் செய்யும் நடைமுறை ஆற்றலைப் பெறுவதற்கு, நாம் விவசாயிப் பண்ணைத் தொழிலுடன் இணைப்பை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். நாம் விவசாயியை எந்த வகையில் திருப்திப்படுத்த வேண்டுமெனில் அவன் ''பட்டினியால் துன்புறுவது கடினமானது, கசப்பானது, வேதனைமிக்கது என்ற போதிலும் நான் வழக்கத்துக்கு மாருன ஓர் ஆட்சியதிகாரத்தை, சாதாரணம் அல்லாத ஓர் ஆட்சியதிகாரத்தை நான் காண்கிறேன், ஆனுல்

அது நடைமுறையில் பயனுள்ள சிலவற்றை உருப்படியான சிலவற்றைச் செய்து வருகிறது'' என்று கூற வேண்டும். நாம் எவருடன் ஒத்துழைத்து வருகிறோமோ அந்த எண்ணற்ற பேர்களும், எண்ணிக்கையில் நம்மை மிகவும் விஞ்சி நிற்போருமான நபர்கள் நாம் அவர்களை மேற்பார்வை செய்ய இயலும் விதத்தில் வேலை செய்யுமாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்; இந்த வேலையைப் புரிந்து கொள்ளுமாறு நாம் கற்றறிந்தும், மற்றும் அவர்கள் கம்யூனிசத்துக்குப் பயன் தரும் சிலவற்றைச் செய்யும் வகையில் அவர்களது செயல்பாடுகளை நெறியாக்கம் செய்யவும் முனைய வேண்டும். இன்றைய நிலைமையின் முக்கியமான அம்சம் இதுவே. இந்த வேலையில் கட்சி சார்பற்ற பேர்களை ஈடுபடுத்த வேண்டுவதன் அவசியத்தைத் தனிப்பட்ட கம்யூனிஸ்டுகள் புரிந்தும் உணர்ந்தும் இருந்த போதிலும் நமது கட்சியின் விரிவான அணிகள் அவ்வாறு செய்யவில்லை. பல சுற்றறிக்கைகள் எழுதப்பட்டுள்ளன, இதைப் பற்றி வெகுவாகச் சொல்லப்பட்டுள்ளது, ஆனால் கடந்த ஆண்டில் ஏதேனும் சாதிக்கப்பட்டிருக்கிறதா? ஒன்றுமில்லை. நமது கட்சியின் நூறு கமிட்டிகளில் ஐந்து கமிட்டிகள் கூட தமது நடைமுறைப் பலன்களைக் காட்ட முடியவில்லை. இன்றைய காலகட்டத்தின் தேவைகளில் இருந்து நாம் எந்தளவுக்குப் பின்தங்கி நிற்கிறோம், நாம் இன்னமும் எந்த அளவுக்கு 1918 மற்றும் 1919ன் மரபுகளில் வாழ்ந்து வருகிறோம் என்பதை இது புலப்படுத்துகிறது. அந்த ஆண்டுகள் மகத்தானவை, அன்று ஒரு மாபெரும் உலக வரலாற்றுப் பணி நிறைவேற்றப்பட்டது. ஆனால் நாம் அந்த ஆண்டுகளை மட்டும் திரும்பிப் பார்த்தபடி, நம்மை இப்போது எதிரிடும் பணியினைப் பார்க்காமல் இருப்போமானால் நமது கதி நிச்சயமாயும் முற்ற முழுமையாயும் அதோ கதிதான். இதை ஒப்புக் கொள்ள மறுக்கிறோம் என்பதே இங்குள்ள முழு விவகாரமுமாகும்.

நாம் எவ்வாறு நிர்வாகம் நடத்துகிறோம் என்பதைச் சித்திரித்துக் காட்ட இப்போது இரண்டு நடைமுறை உதாரணங்களைத் தர விரும்புகிறேன். அரசு டிரஸ்டுகளில் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்வது மேலும் சரியானதாக

இருக்கும் என்று ஏற்கெனவே நான் கூறியிருக்கிறேன். ஆனால் இந்தச் சரிநேரான முறையினைப் பயன்படுத்த இயலாது இருப்பதற்காக என்னை மன்னிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இதைச் செய்ய வேண்டுமானால் குறைந்த பட்சம் ஓர் அரசு டிரஸ்டு சம்பந்தமான ஸ்தூல மான விவரணங்களை ஆராய வேண்டியது அவசியமாக இருக் கும். துரதிருஷ்டவசமாக இதை என்னால் செய்ய இயல வில்லை, எனவே நான் இரண்டு சிறிய உதாரணங்களை எடுத்துக் கொள்கிறேன். ஓர் உதாரணம் மாஸ்கோ நுகர் வாளர் சங்கத்தால் அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத் தின் மீது தொடுக்கப்பட்ட அதிகாரவர்க்கக் குற்றச்சாட்டு ஆகும். மற்றதோர் உதாரணத்தை நான் தனேத்ஸ்க் நிலக் கரிப் பிரதேசத்தில் இருந்து எடுத்துக் கொள்வேன்.

முதல் உதாரணம் அவ்வளவாகப் பொருத்தமானதல்ல —இதை விடச் சிறந்த ஒன்றை என்னால் தேடிப்பெற முடிய வில்லை. ஆயினும் இது கூட எனது பிரதானமான கருத்தைச் சித்திரிக்கக் கட்டாயம் உதவும். கடந்த சில மாதங்களாக நான் இத்தகைய விவகாரங்களை நேரடியாக எடுத்துக் கவ னிக்க முடியவில்லை என்பதைச் செய்திப் பத்திரிகைகளில் இருந்து தெரிந்து கொண்டிருப்பீர்கள். நான் மக்கள் கமிசார் களின் கவுன்சிலில் வேலை செய்யவில்லை, மற்றும் மத்தியக் கமிட்டிக் கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை.[55] மிகவும் குறுகியதும் அரிதுமான எனது மாஸ்கோ வருகைகளின் போது அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகம் மீது தொடுக் கப்பட்ட மிகவும் மோசமான, பயங்கரப் புகார்களைக் கேட்டு அதிர்ச்சியுற்றேன். அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகம் மோசமாகச் செயல்பட்டு வருகிறது என்பதையும், அது சிவப்பு நாடா பாணியில் சிக்குண்டு கிடக்கிறது என்பதையும் நான் ஒரு கணமும் சந்தேகிக்கவில்லை. ஆனால் புகார்கள் குறிப்பாயும் கடுமையான போது நான் இந்த விவகாரத்தை விசாரணை செய்ய முயன்றேன்: ஒரு ஸ்தூலமான உதார ணத்தை எடுத்துக் கொண்டு இதன் அடியாழத்துக்குச் சென்று பார்க்க முயன்றேன், இதன் காரணத்தைக் கண்டறிய

வும், இந்த இயந்திரம் ஏன் சரியாக வேலை செய்யவில்லை என்பதைக் கண்டறியவும் முயன்றேன்.

மாஸ்கோ நுகர்வாளர் சங்கம் ஓரளவு டப்பாக்களில் அடைத்த பொருள்களை வாங்க விரும்பியது. ஒரு பிரெஞ்சு குடிமகன் முன்வந்து சிலவற்றைத் தர முயன்றார். அவர் இதை சர்வதேசக் கொள்கையின் நலனுக்காகவும், அன்டான்டு நாடுகளின்[56] தலைமைக்குத் தெரிந்தும் செய்தாரா அல்லது சோவியத் ஆட்சியதிகாரத்தின் விரோதிகளான பாயின்கரே மற்றும் பிறரின் ஒப்புதலுடன் செய்தாரா என்பதை நான் அறியேன் (நமது வரலாற்றாளர்கள் ஜெனோவா மாநாட்டுக்குப் பிறகு இதை விசாரணை செய்து தெளிவுபடுத்துவார்கள் என்று கருதுகிறேன்). ஆனால் பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதி ஒருவர் மாஸ்கோவுக்கு வந்து டப்பாக்களில் அடைத்த பொருள்களை வழங்க முன்வந்த போது பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினர் இந்த அலுவலில் தத்துவார்த்த அக்கறை மட்டுமன்றி நடைமுறை அக்கறையும் கூட எடுத்தனர் என்பது உண்மை. மாஸ்கோ பட்டினியால் துன்புறுகிறது, கோடையில் நிலைமை மேலும் மோசமாவது திண்ணம். இறைச்சி எதுவும் வழங்கப்படவில்லை, நமது ரயில்வேத்துறை மக்கள் கமிசாரகத்தின் வள்ளல்கள் தெரிய வந்த நிலையில் எதுவும் வழங்கப்படாது போகலாம்.

சோவியத் செலாவணிக்கு டப்பாவில் அடைத்த இறைச்சி விற்பனை செய்யப்பட்டது (இந்த இறைச்சி முற்றும் மோசமானதா இல்லையா என்பது வருங்கால விசாரணை மூலம் நிறுவப்படும்). இதை விட எளிதாக ஏதேனும் இருக்க முடியுமா? ஆனால் இந்த விவகாரத்தை சோவியத் வழியில் சரிவர அணுகிப் பார்த்தால் இது மொத்தத்தில் அவ்வளவு எளிதானதல்ல என்பது புலனாகும். இந்த விவகாரத்தை நான் நேரிடையாகக் கவனிக்க இயலவில்லை, ஆனால் இதை விசாரணை செய்யும்படி உத்தரவிட்டேன். இப்போது இந்தப் பேர்பெற்ற நிகழ்ச்சி எவ்வாறு ஏற்பட்டது என்பதை எடுத்துக் காட்டும் நோட்டு என்னிடம் இருக்கிறது. வெளி நாட்டில் உணவுப் பண்டங்களை வாங்குவது விரும்பத்தக்கது

என்பது சம்பந்தமாகத் தோழர் காமெனெவ் சமர்ப்பித்த அறிக்கை மீது ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி யின் அரசியல் பியூரோ பிப்ரவரி 11ந் தேதி அங்கீகரித்த முடிவுடன் இது தொடங்கியது. ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோவின் ஒப்புதல் இன்றி நிச்சயமாயும் ருஷ்யக் குடிமக்கள் இத்தகைய பிரச்சினையை எப்படி முடிவு செய்ய முடியும்! இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! 4,700 பொறுப்பான அலுவலர்கள் (இது ஜனத் தொகை கணிப்புப்படி மட்டுமே ஆகும்)[57] மத்தியக் கமிட்டி யின் அரசியல் பியூரோவின் சம்மதம் இன்றி வெளிநாட்டில் உணவுப் பண்டங்களை வாங்குவது போன்ற ஒரு காரியத்தை எவ்வாறு முடிவு செய்ய முடியும்? இது இயற்கைக்கு அப் பாற்பட்ட சிலதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோழர் காமெனெவ் நமது கொள்கையையும் நமது நிலைமை யின் எதார்த்தங்களையும் முற்றும் நன்றாகப் புரிந்து கொள் கிறார், ஆகையால் அவர் எண்ணற்ற பல பொறுப்பான அலு வலர்கள் மீது அளவுக்கு மேல் நம்பிக்கை வைக்கவில்லை என்பது தெளிவு. அவர் இந்த சிக்கலுடன் கடுமையாக மல் லாடி, அரசியல் பியூரோவுடன் மல்லாடி, எவ்வித இடர்ப் பாடும் இன்றி (இந்த விவகாரம் பற்றி எவ்வித விவாதமும் நடந்ததாக நான் கேள்விப்படவில்லை) பின்வருமாறு விளம் பும் ஒரு தீர்மானத்தைப் பெற முடிந்தது: ''வெளிநாட்டி லிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதன் அவசியம் பற்றி அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்; இறக்குமதி வரி கள்...'' இத்தியாதி. அயல்துறை வாணிக மக்கள் கமிசார கத்தின் கவனம் இதன் பால் ஈர்க்கப்பட்டது. காரியங்கள் நடக்கத் தொடங்கின. இது நிகழ்ந்தது பிப்ரவரி 11ந் தேதி. பிப்ரவரி கடை முடிவில் அல்லது கிட்டத்தட்ட அந்தச் சமயம் நான் மாஸ்கோவில் இருக்க நேர்ந்தது என்பதை நினைவு கூருகிறேன். அப்போது நான் கண்டது என்ன? புகார் கள், மாஸ்கோ தோழர்களின் மனக் கசப்புக்கு உள்ளான புகார்கள். இதற்குக் காரணம் என்ன? என்று நான் கேட் கிறேன். ''உணவுப் பொருள்களை நாம் வாங்க எவ்வித

வழியும் இல்லை.'' ''ஏன்?'' ''அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் சிவப்பு நாடா போக்கினுல்.'' விவகாரங் களில் நான் நீண்ட காலமாகக் கலந்து கொள்ளவில்லை, இந்த விஷயம் குறித்து அரசியல் பியூரோ ஒரு முடிவை ஏற்றுள்ளது என்பதும் எனக்கு அப்போது தெரியாது. இதைப் பற்றி விசாரணை செய்யவும், சம்பந்தப்பட்ட ஆவ ணங்களைப் பெறவும், அவற்றை எனக்குக் காட்டும்படியும் நமது கவுன்சிலின் நிர்வாகச் செயலாளருக்கு நான் உத்தர விட மட்டுமே செய்தேன். கிராசின் வந்து சேர்ந்த போது இந்த விவகாரம் தீர்க்கப்பட்டது. காமெனெவ் கிராசினுடன் இந்த விவகாரத்தைப் பற்றி விவாதித்தார். இந்த வாணிக பேரம் ஏற்பாடு செய்யப்பட்டது. டப்பாக்களில் அடைக்கப் பட்ட இறைச்சி வாங்கப்பட்டது. எல்லாம் நன்மைக்கே.

காமெனெவும் கிராசினும் ஓர் இணக்கத்துக்கு வர முடி யும், ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ விரும்பும் அரசியல் கொள்கை வழியைச் சரிவர வரையறுக்க முடியும் என்பதில் எனக்குக் கடுகளவும் சந்தேகம் இல்லை. வாணிக விவகாரங்கள் பற்றிய அரசியல் கொள்கை வழி காமெனெவ் மற்றும் கிராசினுல் முடிவு செய் யப்படுமாயின் நமது குடியரசு உலகிலேயே ஆகச் சிறந்த சோவியத் குடியரசாக விளங்கும். ஆனுல் அரசியல் பியூரோ உறுப்பினர் காமெனெவும், கிராசினும்—பின்னர் ஜெனுேவா வுடன் சம்பந்தப்பட்ட அரசுறவு விவகாரங்களில் மும்முர மாக ஈடுபட்டவர், இந்த விவகாரங்கள் பேரளவான மிகவும் அதிகப்படியான உழைப்பை இன்றியமையாததாக்குவன— எல்லா வாணிக பேரங்களிலும் இழுக்கப்பட முடியாது, பிரெஞ்சு குடிமகனிடமிருந்து டப்பாக்களில் அடைத்த பொருள்களை வாங்கும் அலுவலில் இழுக்கப்பட முடியாது. வேலை செய்யும் வழி இதுவல்ல. இது புதியதும் அல்ல, பொருளாதாரமும் அல்ல, கொள்கையும் அல்ல, மாறுகப் படுமோசமான கேலிக்கூத்தே ஆகும். இப்போது, இந்த விவ காரம் பற்றி நடத்திய விசாரணையின் அறிக்கை என்னிடம் இருக்கிறது. உண்மையில் என்னிடம் இரண்டு அறிக்கைகள் இருக்கின்றன: ஒன்று, மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நிர்

வாகச் செயலாளர் கர்புனேவ் மற்றும் அவரது உதவியாளர் மிரோஷ்னிக்கவ் நடத்திய விசாரணை குறித்த அறிக்கை, மற்றது அரசின் அரசியல் நிர்வாகத்தால் நடத்தப்பட்ட விசாரணை குறித்த அறிக்கை. அரசின் அரசியல் நிர்வாகம் இந்த விவகாரத்தில் ஏன் அக்கறை காட்டியது என்பது எனக்குத் தெரியாது; மற்றும் அது இவ்வாறு செய்வது சரி தாஞ என்பதும் எனக்கு நிச்சயமாகத் தெரியாது. அதற்குள் நான் இப்போது போகவில்லை, காரணம் இது இன்னொரு விசாரணையைத் தவிர்க்க முடியாததாக்கும் என்று அஞ்சு கிறேன். முக்கியமான விஷயம் என்னவென்ருல் இந்த விவ காரம் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன, அவை இப் போது என் முன் உள்ளன என்பதேயாகும்.

லிபாவா எனும் இடத்தில் டப்பாக்களில் அடைத்த பண்டங்களைச் சரக்காக ஏற்றிக்கொண்டு வந்த ஒரு கப்பல் இருந்தது, இதன் உடைமையாளர்கள் சோவியத் செலா வணி பெற்றுக் கொண்டு டப்பாக்களில் அடைத்த பண்டங் களைத் தருவதற்குத் தயாராக இருந்தார்கள் என்ற போதி லும் ''நம்மால் டப்பாக்களில் அடைத்த பொருள்களை வாங்க முடியாது!'' என்ற கடுமையான புகார்களை பிப்ரவரி இறுதி யில் மாஸ்கோ வந்து சேர்ந்தவுடன் நான் கேள்விப்பட்டேன் என்ருல் இது எப்படி நிகழ்ந்தது? (சிரிப்பு.) இந்த டப் பாவில் அடைத்த பொருள்கள் அறவே மோசம் அல்ல எனும் பட்சத்தில் (நான் இப்போது ''பட்சத்தில்'' என்பதை அழுத்தமாகக் கூறுகிறேன், காரணம் இன்னொரு விசாரணை வேண்டும் என்று அப்போது கோர மாட்டேன் என உறுதி யாகச் சொல்ல முடியாது, இதன் விளைவுகளை நாம் அடுத்த காங்கிரசில் அறிக்கை செய்ய வேண்டி இருக்கும்)—இந்தப் பொருள்கள் அறவே மோசம் அல்ல எனும் பட்சத்தில்—இவை ஏற்கெனவே வாங்கப்பட்டு விட்டன—நான் கேட் கிறேன்: விஷயம் என்ன, இந்த விவகாரத்தை காமெனெவும் கிராசினும் இல்லாமல் ஏன் தீர்க்கக் கூடாது? என் முன்னுல் இருக்கும் அறிக்கையில் இருந்து ஒரு பொறுப்பான கம்யூ னிஸ்ட் இன்னொரு பொறுப்பான கம்யூனிஸ்டைத் தொலைந்து போ என்று விரட்டியதாக தகவல் தெரிந்து கொண்டேன்.

ஒரு பொறுப்பான கம்யூனிஸ்ட் இன்னொரு பொறுப்பான கம்யூனிஸ்டிடம் ''இப்போது முதல் உம்மிடம் வழக்குரைஞர் முன்னிலேயில் அன்றி நான் பேசப் போவதில்லே'' என்று கூறியதாக இந்த அறிக்கையில் இருந்து தகவல் தெரிந்து கொண்டேன். இந்த அறிக்கையைப் படித்த பின் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னுல் நான் சைபீரியாவில் நாடு கடத்தப்பட்டு இருந்த நேரத்தை நினேவு கூர்ந்தேன். அங்கு நான் ஒரு வழக்குரைஞர் என்ற ஹோதாவில் செயல்பட வேண்டி இருந்தது. நான் சான்றுப் பத்திரம் பெற்ற வழக்குரைஞர் அல்ல, காரணம் நான் சட்டப்படி நாடு கடத்தப்பட்டவன், எனவே வழக்குரைஞராகத் தொழில் புரிய அனுமதிக்கப்படவில்லே. ஆனுல் அந்தப் பிராந்தியத்தில் வேறு வழக்குரைஞர் எவரும் இல்லாததால், மக்கள் என்னிடம் வந்து தமது சில கஷ்டங்களேத் தெரிவித்தார்கள். சில சமயம் கஷ்டம் என்ன என்பதைப் புரிந்து கொள்வதே எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. ஒரு பெண் வருவாள், தனது உறவினர் பற்றி நீண்ட கதை சொல்லத் தொடங்குவாள், அவள் உண்மையில் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிருள் என்பதை அவளிடமிருந்து கேட்டறிவது நம்பற்கரிய அளவுக்குக் கடினமாக இருக்கும். ''வழக்கின் பிரதி ஒன்றைக் கொண்டுவா'' என்று நான் அவளிடம் சொன்னேன். அவள் தனது வெள்ளேப் பசுவைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனுள். ''வழக்கின் பிரதி ஒன்றைக் கொண்டுவா'' என்று மீண்டும் உரைத்தேன். அப்போது ''நான் வழக்கின் பிரதி ஒன்றைக் கொண்டுவராவிட்டால் நான் வெள்ளேப் பசுவைப் பற்றிச் சொல்ல விரும்புவதை இவர் கேட்க மாட்டார்'' என்று புகார் செய்தபடி அவள் போய் விட்டாள். எங்கள் குடித்தனப் பகுதியில் இந்தப் பிரதியைப் பற்றிச் சொல்லி விழுந்து விழுந்து சிரித்தோம். எனினும் நான் ஓரளவுக்கு முன்னேறிச் செயல்புரிய முடிந்தது: மக்கள் என்னிடம் வந்து அவசியமான தஸ்தவேஜுகளேக் கொண்டுவந்தார்கள். அவர்களது கஷ்டம் என்ன, எதைப் பற்றி புகார் செய்கிருர்கள், அவர்களேப் பாதித்துள்ள துன்பம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள முடிந்தது. இது இருபத்தைந்து ஆண்டு

களுக்கு முன்னுல், சைபீரியாவில், ஆகச் சமீபமான ரயில் நிலையத்தில் இருந்து பல நூறு வெர்ஸ்டாக்கள் தொலைவில் இருந்த இடத்தில் நிகழ்ந்தது.

ஆனுல் புரட்சி நடந்து மூன்ருண்டுகளுக்குப் பிறகு, சோவியத் குடியரசின் தலைநகரில் டப்பாக்களில் அடைத்த பொருள்களை வாங்குவதற்கு இரண்டு விசாரணைகளை நடத்துவதும் காமெனெவ் மற்றும் கிராசினது தலையீடும், அரசியல் பியூரோ உத்தரவிடுவதும் ஏன் அவசியமாக இருந்தது? குறைபாடாக இருந்தது யாது? அரசியல் அதிகாரமா? அல்ல. பணம் வேண்டும் போது கிடைத்தது, எனவே பொருளாதார அதிகாரமும் அரசியல் அதிகாரமும் ஒருங்கே இருந்தன. அவசியமான எல்லா நிறுவனங்களும் உதவிக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்தன. அப்படியானுல் குறையாக இருந்தது என்ன?—கலாசாரமே. மாஸ்கோ நுகர்வாளர் சங்கத்தின் மற்றும் அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் ஒவ்வொரு நூறு அலுவலர்களிலும் தொண்ணுற்று ஒன்பது பேர்—அவர்களுக்கு எதிராக நான் செய்யக் கூடிய புகார்கள் எதுவும் இல்லை, அவர்களை அருமையான கம்யூனிஸ்டுகள் என்றே கருதுகிறேன்—கலாசாரம் இன்றி இருக்கிருர்கள். இந்த விவகாரத்தைக் கலாசாரப் பான்மையில் அணுகுவதற்கு இயலாதவர்களாக இருந்தார்கள்.

இந்த விவகாரம் பற்றி நான் முதலில் கேள்விப்பட்ட போதே நான் மத்தியக் கமிட்டிக்குப் பின்வரும் எழுத்து மூலமான யோசனையை அனுப்பி வைத்தேன்: ''மாஸ்கோ அரசாங்க இலாகாக்களைச் சார்ந்த எல்லா அலுவலர்களும்—அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் நீங்கலாக, இவர்கள் விலக்குரிமை அனுபவித்து வருகிருர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்—மாஸ்கோவில் உள்ள மிகவும் மோசமான சிறையில் ஆறு மணி நேரமும், அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தைச் சார்ந்தவர்கள் முப்பத்தாறு மணி நேரமும் அடைக்கப்பட வேண்டும்.'' அதற்குப் பின்னர் குற்றவாளிகள் யார் என்று எவராலும் சொல்ல முடியாதபடி ஆகி விட்டது. (சிரிப்பு.) குற்றவாளிகளை என்றுமே கண்டுபிடிக்க முடியாது என்பது நான்

உங்களிடம் கூறியதிலிருந்து முற்றிலும் தெளிவாகி விட்டது என்பது உண்மை. அது ருஷ்யன் அறிவுஜீவிகளிடையில் காரியங்களை நடைமுறையில் செய்ய வைக்க இயலாதபடி வழக்கமாக நிலவும் திறமையின்மையும் சோம்பல்தன்மையும் மட்டுமே. முதலில் அவர்கள் ஒரு வேலையை நோக்கி விரைவார்கள், ஒரு சிறிது செய்வார்கள். பிறகு அதைப் பற்றிச் சிந்திப்பார்கள். இதனால் எதுவும் வரவில்லை எனும் போது அவர்கள் புகார் செய்வதற்காக காமெனெவிடம் ஓடுவார்கள். இந்த விவகாரத்தை அரசியல் பியூரோவில் விவாதிக்கும்படிக் கேட்பார்கள். கடினமான எல்லா அரசுப் பிரச்சினைகளும் அரசியல் பியூரோவில் விவாதிக்கப்பட வேண்டும் என்பது திண்ணம்—இது குறித்து நான் பின்னால் சிலவற்றைக் கூற வேண்டி இருக்கிறது. ஆனால் ஒருவர் முதலில் சிந்தித்து பிறகு செயல்பட வேண்டும். ஒரு வழக்கைக் கொண்டுவர நீங்கள் விரும்பினால் தக்கதான தஸ்தவேஜுகளை சமர்ப்பியுங்கள். முதலில் ஒரு தந்தி அடியுங்கள், மாஸ்கோவில் தொலைபேசிகள் இன்னும் இருப்பதால் சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு தொலைபேசி மூலம் செய்தி அனுப்புங்கள், அதன் பிரதி ஒன்றை திசியுருப்பாவுக்கு அனுப்பி ''இந்த அலுவல் அவசரம் என்று கருதுகிறேன், சிவப்பு நாடா பாணியில் குற்றம் இழைத்த எவரையும் எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்றும் சொல்லுங்கள். இந்த சாதாரணப் பண்பாடு பற்றி ஒருவர் சிந்திக்க வேண்டும், காரியங்களை முன் ஆலோசனையுள்ள தன்மையில் அணுக வேண்டும். தொலைபேசி மூலம் சில நிமிஷங்களுக்குள் இந்த அலுவல் உடனே தீரவில்லையானால் தஸ்தவேஜுகளைத் திரட்டிக் கொண்டு உங்களைச் சுற்றிலும் வைத்துக் கொண்டு சொல்லுங்கள்: ''உனது சிவப்பு நாடா வேலையைக் காட்டத் தொடங்குவையானால், உன்னைச் சிறைக்குள் அடைக்கும்படிச் செய்வேன்'' என்று. ஆனால் விவகாரம் பற்றி ஒரு கண நேரச் சிந்தனை கூட இல்லை, தயாரிப்புகள் எதுவும் இல்லை, வழக்கமான சந்தடி, பல கமிஷன்கள், எல்லோரும் களைப்புற்று சோர்ந்து ஒடுங்கிப் போகிறார்கள், வலியிழந்து விடுகிறார்கள். காமெனெவ் கிராசினுடன் தொடர்பு கொண்டால் மட்டுமே

காரியங்கள் நடக்கத் தொடங்குகின்றன. இவை யாவும் தலைநகரமான மாஸ்கோவில் மட்டுமன்றி இதர தலைநகரங்களிலும் எல்லா சுதந்திரக் குடியரசுகள் மற்றும் பிராந்தியங்களின் தலைநகரங்களிலும் என்ன நடைபெற்றுவருகிறது என்பதன் மாதிரியாகும். இதே காரியம், இன்னும் நூறு மடங்கு மோசமானதும் கூட, மாகாண நகரங்களில் இடைவிடாமல் நடக்கிறது.

நமது போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் யுக்தி பூர்வம் வாதிட இயல வேண்டும் என்பதை நாம் கட்டாயம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் புரட்சிகரமான போராட்டம் பற்றியும் உலகம் முழுவதிலுமுள்ளதான புரட்சிகரமான போராட்டத்தின் நிலைவரம் பற்றியும் அவர்கள் மிகவும் நன்ருகச் சொல்ல முடியும். ஆனல் கடைகெட்ட வறுமையில் இருந்தும் இன்மையில் இருந்தும் நம்மை நாமே விடுவித்துக் கொள்ள வேண்டுமானல் நமக்கு கலாசாரம், நேர்மை, யுக்தி பூர்வம் வாதிடும் ஆற்றல் ஆகியவை அவசியம். அவர்களில் பலரிடம் இந்தப் பண்புகள் இல்லை. பொறுப்பான கம்யூனிஸ்டுகள் தமது பணிகளை மனப் பூர்வம் நிறைவேற்றுவதில்லை என்று குற்றம் சொல்வது நியாயமல்ல. அவர்களில் மிகப்பெரும் பெரும்பான்மையினர்—நூறு பேரில் தொண்ணூற்று ஒன்பது பேர் — மனச்சாட்சி பூர்வம் செயல் புரிவோர் என்பது மட்டுமல்ல, ஜாரிசத்தின் வீழ்ச்சிக்கு முன்பு மற்றும் புரட்சிக்குப் பிறகு மிகவும் இடர்ப்பாடான நிலைமைகளில் புரட்சியின் பாலான தமது அர்ப்பணிப்பை நிரூபித்துக் காட்டினர், இன்னுயிரைத்தியாகம் செய்யத் தயாராக இருந்தனர். எனவே, இந்தக் கஷ்டத்துக்குக் காரணம் உணர்வு பற்ருக்குறை என்று சாட்டுவது அடிப்படையிலேயே தவருனதாகும். அரசின் ஆகச் சாமான்யமான விவகாரத்துக்கு ஒரு பண்பாடான அணுகுமுறை தேவை. இது அரசின் விவகாரம், ஒரு வாணிக விவகாரம் என்பதை நாம் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும், முட்டுக்கட்டைகள் எழுமானல் நாம் அவற்றை வென்று சமாளிக்க இயல வேண்டும், சிவப்பு நாடா பாணியில் குற்றம் இழைப்போருக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்

டும். மாஸ்கோவில் நம்மிடம் பாட்டாளி வர்க்க நீதிமன்றம் உள்ளது. பல பத்தாயிரம் பூடுகள் அளவிலான டப்பாக்களில் அடைத்த உணவுப் பொருள்கள் கொள்முதல் செய்யப்படு வதை அமுலாக்கத் தவறிய பழிக்குரிய நபர்கள் மீது நட வடிக்கை இந்த நீதிமன்றத்தால் எடுக்கப்பட வேண்டும். பாட்டாளி வர்க்க நீதிமன்றம் குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை விதிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். ஆனால் தண்டனை அளிப்பதற்கு முன் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த சம்பவத்தில் குற்றவாளிகள் எவரையும் கண்டுபிடிக்க முடியாது என்று உறுதியாகச் சொல்வேன். இந்த அலுவலை நன்றாக ஆராயும்படி உங்களை வேண்டு கிறேன்: குற்றவாளிகள் எவரும் இல்லை, நாம் காண்பதெல் லாம் ஏராளமான களேபரமும் சந்தடியும் முட்டாள்தன முமே. இந்த அலுவலைச் சரிவர அணுகும் ஆற்றல் யாருக்கும் இல்லை; அரசு விவகாரம் இந்த வழியில் சமாளிக்கப்படுதல் கூடாது என்பதை எவரும் புரிந்து கொள்ளவில்லை. இதை எல்லா வெண்படையினர்களும் நாச வேலைக்காரர்களும் தமக்குச் சாதகமாக எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு சமயம் நாச வேலைக்காரர்களை எதிர்த்து மூர்க்கமான போராட்டம் நடத்தினோம்; அந்தப் போராட்டம் இப்போதும் கூட நம்மை எதிரிடுகிறது. இன்றும் நாச வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதும் அவர்களை எதிர்த்துப் போராட வேண்டும் என் பதும் மெய்யே. ஆனால் நிலைமை நான் இப்போது வரு ணித்தபடி இருக்கும் போது அவர்களை எதிர்த்து நாம் போராட முடியுமா? இது எந்த ஒரு நாச வேலையையும் விட மோசம். உணவுப் பொருள்களை வாங்குவது சம்பந்தமான கோட்பாடுகள் பற்றிய நெறிமுறைகள் கேட்டு அரசியல் பியூரோவிடம் எப்போது வேண்டுகோள் விடுவது என்ற பிரச்சினை மீது இரண்டு கம்யூனிஸ்டுகள் தம்முள் வாதிடு வதை விட நல்ல தருணம் நாச வேலைக்காரருக்கு இல்லை. அவர் உடனே இருவருக்கும் இடையில் நுழைந்து அவர்களைத் தூண்டி விடுவது திண்ணம். புத்திசாலியான நாச வேலைக் காரர் எவரேனும் இந்தக் கம்யூனிஸ்டுகளுக்குப் பின்னாலோ, ஒருவர் மாற்றி ஒருவருக்குப் பின்னாலோ நின்று அவர்களை

ஊக்குவித்தாராளுல் அதோடு எல்லாம் முடிந்து போகும். இந்த விவகாரம் என்றென்றைக்குமாக அதோ கதியாகிப் போய்விடும். இதற்குப் பழி யார்? யாரும் இல்லை. காரணம் இரண்டு பொறுப்பான கம்யூனிஸ்டுகள் அர்ப்பணிப்புடைய புரட்சியாளர்கள் கடந்த ஆண்டில் விழுந்த பனியைப் பற்றி வாதிடுகிருர்கள், உணவு வாங்குவது சம்பந்தமான கோட்பாடுகள் குறித்து நெறிமுறைகள் கோரி அரசியல் பியூரோ விடம் எப்போது வேண்டுதல் செய்வது என்ற பிரச்சினை மீது வாதிடுகிருர்கள்.

விவகாரம் இவ்வாறு இருக்கிறது. மற்றும் இந்த இடர்ப் பாடுதான் நம்மை எதிரிடுகிறது. இத்தகைய ஒரு விவகாரத் தை எப்படித் தீர்ப்பது என்பதைப் பெரிய முதலாளித்துவ நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்பட்ட எந்த ஒரு விற்பனையாள னும் அறிவான். ஆனுல் பொறுப்பான கம்யூனிஸ்டுகள் நூறு பேரில் தொண்ணூற்று ஒன்பது பேருக்கு இது தெரியாது. இதை எப்படித் தீர்ப்பது என்பது தமக்குத் தெரியாது என் பதையும் இந்த அலுவலின் அரிச்சுவடியை அவர்கள் பயில வேண்டும் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள மறுக் கிருர்கள். இதை நாம் உணர்ந்தால் அன்றி, பாலர் வகுப்பில் நாம் மீண்டும் அமர்ந்தால் அல்லாமல், நமது கொள்கை முழுவதன் அடித்தளத்தில் இப்போது காணக்கிடக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கு நம்மால் என்றுமே தீர்வு காண முடியாது.

உங்களுக்கு நான் அளிக்க விரும்பிய மற்ற உதாரணம் தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசம் சம்பந்தப்பட்டதாகும். இது ஒரு மையமாக, நமது பொருளாதாரம் முழுவதன் மெய்யான அடித்தளமாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசத்தை மீட்ட மைத்து அதைச் சரியான மட்டத்துக்கு உயர்த்திக் கொண்டு வராத பட்சம், ருஷ்யாவில் பெருவீத தொழில் துறையை மீட்டமைப்பது, மெய்யாகவே சோஷலிசத்தை நிர்மாணிப் பது—இது பெருவீத தொழில் துறையின் அடிப்படையின் மீது மட்டுமே கட்டப்பட முடியும் என்பதால்—அறவே

சாத்தியமல்ல. அங்கு நிகழ்ந்து வரும் மாற்றங்களை மத்தியக் கமிட்டி கவனித்து வருகிறது.

இந்தப் பிராந்தியத்தைப் பொருத்தவரை அரசியல் பியூரோவில் நியாயப்படுத்த முடியாத கேலிக்கூத்தான அல்லது அபத்தமான முறையில் சில்லரைப் பிரச்சினைகள் எதுவும் எழுப்பப்படவில்லை; மெய்யானதும் பரம அவசரமானதுமான அலுவல்களே விவாதிக்கப்பட்டன.

நமது பொருளாதாரம் முழுமையின் இத்தகைய மெய்யான மையங்கள், அடித்தளங்கள் மற்றும் ஆதார இடங்களில் வேலை உண்மையிலேயே காரியகரமான முறையில் செய்து நிறைவேற்றம் பெறும்படி மத்தியக் கமிட்டி கட்டாயம் பார்த்துக் கொள்ள வேண்டும். மத்திய நிலக்கரித் தொழில் துறை போர்டின் தலைமையில் சந்தேகமன்னியில் அர்ப்பணிப்பு உணர்வுடையவர்கள் என்பது மட்டுமல்ல ஆனால் உண்மையில் கல்வி கற்றவர்களும் மிகவும் ஆற்றலுடையவர்களுமான நபர்கள் இருக்கிறார்கள். செயல் திறன் மிகுந்த பேர்கள் என்று நான் சொன்னால் அது தவறாகாது. இதனால்தான் மத்தியக் கமிட்டி அதன் கவனத்தை இதன் மீது ஒருமுகப்படுத்தியுள்ளது. உக்ரைன் ஒரு சுயேச்சைக் குடியரசு ஆகும். அது மிகவும் நல்லது. ஆனால் கட்சி விவகாரங்களில் சில சமயம் அது—இதை மிகவும் கண்ணியமாக எப்படிச் சொல்வது?—சுற்றிவளைத்த போக்கை மேற்கொள்கிறது. நாம் அவர்களைக் கட்டாயம் எட்டியே தீர வேண்டும். ஏனெனில் அங்கே பொறுப்பாக இருக்கும் நபர்கள் தந்திரசாலிகள் மற்றும் அவர்களது மத்தியக் கமிட்டி நம்மை ஏமாற்றுகிறது என்பதாக நான் சொல்ல மாட்டேன், ஆனால் எப்படியோ நம்மிடமிருந்து வெளியே நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்த விவகாரம் முழுவதையும் குறித்த ஒரு பொதுப்படையான கருத்தைப் பெறும் பொருட்டு இங்கு இதை மத்தியக் கமிட்டியில் விவாதித்தோம், பூசலும் வேறுபாடும் இருப்பதாகக் கண்டோம். அங்கு சிறிய சுரங்கங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான ஒரு கமிஷன் இருக்கிறது. அதற்கும் மத்திய நிலக்கரித் தொழில் துறை போர்டுக்கும் இடையே கடுமையான பூசல் இருப்பதும் உண்மை. எனினும்

ஓரளவு அனுபவமுடையவர்களான மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த நாங்கள் தலைமைப் பதவிகளில் இருக்கும் நபர்களை விலக்குவதில்லை என்று ஒருமனதாக முடிவு செய்தோம். ஏதேனும் பூசல் இருக்குமானால் அது பற்றிய சின்னஞ்சிறு விவரமுட்பட நம்மிடம் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானித்தோம். ஏனெனில் இந்தப் பிராந்தியத்தில் அர்ப்பணிப்புடைய நபர்கள் மட்டுமன்றி ஆற்றலும் உடைய நபர்கள் இருப்பதால் நாம் அவர்களை ஆதரிக்க வேண்டும்; அவர்கள் இன்னும் தமது பயிற்சியைப் பூர்த்தி செய்யவில்லை என்ற உத்தேசத்தில் அவர்கள் தமது பயிற்சியைப் பூர்த்தி செய்ய இயலும்படி உதவ வேண்டும். கடைசியில் உக்ரைனில் கட்சிக் காங்கிரஸ் நடந்தது; அங்கு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது — எல்லாவிதமான சம்பவங்களும் நடந்தன. உக்ரேனியன் தோழர்களிடம் நான் தகவல் கேட்டேன், குறிப்பாயும் தோழர் ஓர்த்ஜொனிகீத்ஸேயிடம்—மத்தியக் கமிட்டியும் இதையே செய்தது—அங்கே நேரடியாகப் போய் என்ன நடந்தது என்பதைக் கண்டறியும்படிக் கேட்டேன். அங்கு ஏதோ சில உள் சூழ்ச்சி, படுமோசமான குழப்பம் இருந்தது என்பது போல தோன்றுகிறது. இதைக் கட்சி வரலாறு பற்றிய கட்சிக் கமிஷன்[58] விசாரணை செய்ய முற்படுமானல் பத்தாண்டுகள் செயல்பட்டாலும் இதைத் தெளிவுபடுத்த இயலாது. ஆனல் நடைமுறையில் மத்தியக் கமிட்டியின் ஒருமனதான நெறிமுறைகளுக்கு நேர் மாருக இந்தப் பிரிவு இன்னொரு பிரிவால் ஒதுக்கிவைக்கப்பட்டது. இந்த விவகாரம் என்ன? அதன் எல்லா நல்ல பண்புகளும் இருந்த போதிலும் முக்கியமாக இந்தப் பிரிவின் ஒரு பகுதியினர் பிழை செய்தனர். அவர்கள் நிர்வாக முறைகளில் மிகையான பற்ருர்வம் கொண்ட மக்களின் நிலையில் இருந்தனர்.[59] அங்கு நாம் தொழிலாளருடன் செயல்பட வேண்டியிருந்தது. மிகப் பெரும்பாலும் ''தொழிலாளர்'' எனும் சொல் ஆலைப் பாட்டாளிகளையே குறிப்பதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனல் அதன் அர்த்தம் அது அல்லவே அல்ல. போர்ச் சமயத்தில் எவ்வகையிலும் பாட்டாளிகள் அல்லாத பேர்கள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சேர்ந்தனர்,

போருக்குப் போக்குக் காட்டி ஏமாற்றுவதற்கென அவர்கள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சேர்ந்தார்கள். மெய்யான பாட்டாளிகளை ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சேரும்படி தூண்டும் அளவுக்கு நமது நாட்டில் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் இருக்கின்றனவா? இல்லை. மார்க்சின் கூற்றுப்படி இது மெய்யே. ஆனால் மார்க்ஸ் ருஷ்யாவை பற்றி எழுதவில்லை; அவர் பதினைந்தாம் நூற்றாண்டுடன் தொடங்கியதான முதலாளித்துவம் முழுவதையும் பற்றி எழுதினார். இது அறுநூறு ஆண்டு காலத்துக்கு சரியானதாக இருந்தது, ஆனால் இன்றைய ருஷ்யாவுக்கு இது பொருத்தமானதல்ல. பெரும்பாலும் ஆலைகளுக்குச் செல்வோர் பாட்டாளிகள் அல்ல, அவர்கள் எல்லாவகைப்பட்ட தற்செயலாக வந்த நபர்களாவர்.

இப்போதுள்ள கடமை பின்வாங்கி நிற்பதல்ல, வேலையைச் சரிவர ஒழுங்கமைக்கக் கற்றுக் கொள்வதே, நிர்வாகத்தை அரசியலில் இருந்து தனியே பிரிப்பதல்ல, காலாகாலத்தில் ஏற்பட்ட பூசலை அகற்றுவதாகும். பாட்டாளி மக்கள் திரளினர் முழுவதுடனும், விவசாயி மக்கள் திரளினர் முழுமையுடனும், முன்னணிப் படை முற்றாக தொடர்பைப் பேணி வைத்திருப்பதற்குரிய ஆற்றலையே நமது நிர்வாகமும் அரசியலும் சார்ந்து நிற்கின்றன. இந்தச் சிறு விவரத்தை மறந்து எவரேனும் நிர்வாகத்தில் முழுமையாக மூழ்கிக் கிடப்பாரானால் இதன் விளைவு பேரழிவாகித் தீரும். நமது இதர பிழைகளுடன் ஒப்பிடும்போது தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசத்தின் அலுவலர்கள் செய்த பிழை ஒரு பொருட்டல்ல. ஆனால் இந்த உதாரணம் தனிமாதிரியானது. மத்தியக் கமிட்டி ஏகமனதாகப் பின்வருமாறு உத்தரவிட்டது: ''இந்தக் குழுவை இருக்க அனுமதியுங்கள்; எல்லா மோதல்களையும் மிகச் சிறியவற்றையும் கூட மத்தியக் கமிட்டியின் முன் கொண்டுவாருங்கள்; ஏனெனில் தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசம் ஒரு சமான்ய மாவட்டம் அல்ல, ஆனால் இந்த மாவட்டம் இல்லாவிட்டால் சோஷலிஸ்டு நிர்மாணம் என்பது வெறும் ஆத்மார்த்திக விருப்பமாக மட்டுமே இருக்கும்.'' ஆனால் நமது அரசியல்

அதிகாரம் அனைத்தாலும் மத்தியக் கமிட்டியின் அதிகாரச் செல்வாக்கு அனைத்தாலும் எவ்விதப் பயனுமில்லை என்று நிரூபணம் ஆகி விட்டது.

இந்தத் தடவை ஆட்சி நிர்வாகத்தில் ஒரு பிழை இருந்தது என்பது மெய்யே; இதற்கும் கூடுதலாக இதர பல தவறுகள் செய்யப்பட்டன.

அரசியல் அதிகாரம் வைத்திருப்பதல்ல விஷயம், மாறாக நிர்வாகத் திறமையே முக்கியம், சரியான இடத்தில் சரியான நபரை அமர்த்தும் திறமை, சில்லறை மோதல்களைத் தவிர்க்கும் ஆற்றல்தான் முக்கியம், அதன் மூலம் அரசின் பொருளாதார வேலை குறுக்கீடு எதுவும் இன்றி நிறைவேற்றப்படும் என்பதையே இந்த உதாரணம் புலப்படுத்துகிறது. இதுவே நம்மிடம் பற்றாக்குறையாக உள்ளது; இதுவே பிழைபாட்டின் வேர்.

நமது புரட்சியைப் பற்றிச் சர்ச்சை செய்வதிலும் அதன் எதிர்கால வாய்ப்புகள் பற்றி மதிப்பிடுவதிலும் நாம் புரட்சியால் முழுமையாகத் தீர்க்கப்பட்டு விட்டதும், முதலாளித்துவத்தில் இருந்து ஏற்பட்ட சகாப்தம் விளைக்கும் திரும்புமுனை என்று மறுக்க வொண்ணா வகையில் வரலாற்றில் இடம் பெற்று விட்டதுமான பிரச்சினைகளை நாம் கவனத்துடன் தனிப்படுத்தி ஆராய வேண்டும் என்று நான் கருதுகிறேன். நமது புரட்சி இத்தகைய தீர்வுகளை வழங்கும் பெருமை கொண்டதாகும். ''அவர்களுடைய புரட்சி ஒரு முதலாளித்துவப் புரட்சி'' என்று மென்ஷிவிக்குகளும் இரண்டரையாவது அகிலத்தின் பிரதிநிதியான ஒட்டோ பௌவர்களும் கூக்குரலிடட்டும். நமது பணி முதலாளித்துவப் புரட்சியை நிறை முடிவு செய்வதாகவே இருந்தது என்று நாம் கூறுகிறோம். ஒரு வெண்படையினர் பத்திரிகை கூறியது போல நானூறு ஆண்டுகளாக நமது அரசு நிறுவனங்களில் குப்பை குவிந்து கிடந்தது, நாம் அதை நாலே ஆண்டுகளில் அகற்றித் துப்புரவாக்கினோம். இது நாம் புரிந்த மாபெரும் சேவையாகும். ஆனால் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் என்ன செய்திருக்கிறார்கள்? ஒன்றுமில்லை. இந்த மத்திய காலத்திய குப்பை நமது நாட்டில் மட்டுமன்றி

முன்னேறிய அறிவொளி பெற்ற ஜெர்மனியில் கூட அகற்றி எறியப்படவில்லைதான். இருந்தும் நமக்கு மிகவும் பெருமை தருவதாக உள்ள ஒரு பணியைப் புரிந்ததற்காக அவர்கள் நம்மைக் கடிந்துரைக்கிறார்கள். நாம் புரட்சியின் நிறை முடிவை எய்தி விட்டோம் என்பது நமது சாதனைப் பட்டிய லிலிருந்து நீக்கப்பட முடியாத ஒரு சாதனையாகும்.

போர் குறித்து இப்போது எங்கும் பேசப்படுகிறது. தொழிலாளர்களின் சங்கங்கள், உதாரணமாக சீர்திருத்த வாதச் சங்கங்கள் போரை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறை வேற்றுகின்றன, போருக்கு எதிராக வேலைநிறுத்தங்களை ஏற்பாடு செய்யப் போவதாக அச்சுறுத்துகின்றன. அண்மை யில், நான் கூறுவது தவறல்ல என்று கருதுகிறேன், பிரெஞ்சு பிரதிநிதிகள் அவையில் மிகவும் நல்ல கம்யூனிஸ்ட் ஒருவர் போர் எதிர்ப்பு உரை நிகழ்த்தியதாகவும், அதில் அவர் போருக்குச் செல்வதை விடவும் புரட்சி செய்வதையே தொழிலாளர்கள் விரும்பி மேற்கொள்வர் என்று கூறினார் என்பதாகவும் செய்திப் பத்திரிகைகளில் ஒரு தந்திச் செய் தியைப் படித்தேன்.[60] இந்தப் பிரச்சினையை 1912ல் பாசெல் அறிக்கை வெளியிடப்பட்ட போது இது வகுத்து முன்வைக் கப்பட்டிருந்த வழியில், வகுத்து முன்வைக்க முடியாது. போரில் இருந்து விடுபடுவது எப்படி என்பதையும் இதற்கு என்ன முயற்சிகள் இன்றியமையாதவை என்பதையும் ருஷ்யப் புரட்சி மட்டுமே புலப்படுத்தியுள்ளது. புரட்சிகர முறைகளில் ஒரு பிற்போக்குப் போரில் இருந்து விடுபடுவது என்பதன் பொருள் என்ன என்பதை இது புலப்படுத்தியது. பிற்போக்கான ஏகாதிபத்தியப் போர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் தவிர்க்க முடியாதவை. இந்த வகைப்பட்ட பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் தீர்வு காண்பதில் அன்று கோடிக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதையும் போர் வெடிக்குமானால் மீண்டும் அவ்வாறு படுகொலை செய்யப்படுவார்கள் என்பதையும் மனித குலம் மறந்துவிட முடியாது, நிச்சயம் மறந்து விடாது. நாம் இரு பதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம். ஒரு குறிப்பிட்ட அரசாங் கத்தின் நலனுக்கன்றி மாறாக அதை வீழ்த்தியது மூலம் புரட்சி

கர முறைகளால் ஒரு பிற்போக்கான போரில் இருந்து விடுபட்டதான ஒரே தேசம் ருஷ்ய தேசமாகும், ருஷ்யப் புரட்சிதான் இதை விடுவித்தது. ருஷ்யப் புரட்சியால் வென்று பெறப்பட்ட சாதனை மாற்ற முடியாதபடி நிலையான தாகும். சோவியத் அரசு படைத்துருவாக்கப்பட்டு விட்டது எனும் மெய் நடப்பை உலகிலுள்ள எந்தச் சக்தியாலும் துடைத்தழித்துவிட முடியாது என்பது போல எந்தச் சக்தி யாலும் அதைத் துடைத்தழித்துவிட முடியாது. இது வர லாற்றுச் சிறப்புடைய வெற்றியாகும். பல நூறு ஆண்டு களாக முதலாளித்துவ மாடலில் அரசுகள் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன, முதல் தடவையாக முதலாளித்துவமல் லாத வடிவிலான அரசு முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நமது அரசாங்க யந்திரம் குறை உள்ளதாக இருக்கலாம். முதலில் புனைந்துருவாக்கப்பட்ட நீராவி எஞ்சினும் கூட குறை உள்ளதாகவே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அது வேலை செய்ததா இல்லையா என்பது கூட யாருக்கும் தெரி யாது. ஆனால் அதுவல்ல இங்கு முக்கிய விஷயம்—முக்கிய மான விஷயம் என்னவென்றால் அது புனைந்துருவாக்கப் பட்டது என்பதே. முதல் நீராவியந்திரத்தின் வடிவம் பயன் படுத்தத் தகுதியற்றதாக இருந்த போதிலும் இப்போது நம்மிடம் ரயில்வே எஞ்சின்கள் உள்ளன. நமது அரசாங்க இயந்திரம் குறை உள்ளதாக இருந்த போதிலும் கூட அது படைத்துருவாக்கப்பட்டது எனும் மெய் நடப்பு நிலவுகிறது; வரலாற்றிலேயே ஆக மகத்தான புதுப்புனைவு செய்யப்பட்டு விட்டது, பாட்டாளி வர்க்க மாதிரியிலான அரசு படைத்துரு வாக்கப்பட்டு விட்டது. எனவே, நமது நாட்டில் நிலவும் பயங்கரங்களையும் வறுமையையும் குறித்து, நமது நாட்டில் துன்ப துயரங்களே உழைக்கும் மக்களின் ஒரே கதியாகி விட்டது குறித்து ஐரோப்பா முழுவதும், ஆயிரக் கணக்கான முதலாளித்துவச் செய்திப் பத்திரிகைகள் செய்தி பரப்பட் டும், உலக முழுதும் உள்ள தொழிலாளர்கள் எல்லோரும் இன்னும் சோவியத் அரசின் பால் கவர்ந்திழுக்கப்பட்டே வருகின்றனர். இவையே நாம் அடைந்துள்ள மாபெரும், மாற்ற வொண்ணாதபடி நிலையான சாதனைகள் ஆகும். ஆனால்

கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்களான எங்களுக்கு இது வாயிலைத் திறப்பதாக மட்டுமே பொருள்பட்டது. சோஷலிஸ்டுப் பொருளாதாரத்துக்கான அடித்தளங்களை நிறுவும் பணி இப்போது நம் எதிரே உள்ளது. இது செய்யப்பட்டு விட்டதா? இல்லை, செய்யப்படவில்லை. நம் வசம் இன்னும் சோஷலிஸ்டு அடித்தளம் இல்லை. நம்மிடம் அது இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளும் கம்யூனிஸ்டுகள் மிகவும் தவறு செய்கிறார்கள். ருஷ்யப் புரட்சி புரிந்துள்ள வரலாற்றுச் சிறப்புடைய சேவையாக அமைவது எதுவோ, அதனுடன் நாம் எதைக் கடைசி அளவு வரை மோசமாகச் செய்கிறோமோ, எது இன்னும் படைத்துருவாக்கப்படவில்லையோ, இன்னும் எதை நாம் மீண்டும் பல தடவைகள் புதிதாகச் செய்ய வேண்டியுள்ளதோ, அவற்றை உறுதியாகவும், தெளிவாகவும், பார பட்சம் இன்றியும் வேறுபடுத்திப் பார்ப்பதே இங்குள்ள முழு விவகாரமும் ஆகும்.

அரசியல் நிகழ்ச்சிகள் எப்போதுமே மிகவும் குழப்பமானவை சிக்கலானவை. அவற்றை ஒரு சங்கிலிக்கு ஒப்பிடலாம். சங்கிலி முழுவதையும் பிடியில் வைத்திருக்க நீங்கள் பிரதானக் கண்ணியை இறுகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் பிடியில் வைத்திருக்க விரும்பும் கண்ணியைச் செயற்கையாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது. 1917ல் நடந்த மையமான பிரச்சினை எது? போரில் இருந்து வாபஸ் ஆவதே. தேசம் முழுதும் இதைக் கோரியது, இது மற்ற எல்லாவற்றையும் விஞ்சி ஓங்கி நின்றது. புரட்சிகர ருஷ்யா போரிலிருந்து வாபஸ் பெறும் இதனை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இதற்குப் பிரம்மாண்டமான முயற்சி செய்ய வேண்டி இருந்தது. ஆனால் மக்களின் முக்கியக் கோரிக்கை நிறைவு செய்யப்பட்டது. இது பல ஆண்டுகளுக்கு நமக்கு வெற்றியைக் கொண்டுவந்தது. சோவியத் ஆட்சியதிகாரம் மிகவும் ஜனநாயகமான ஆட்சி என்பதையும் உழைக்கும் மக்களுடன் மிகவும் நெருக்கமாக இருக்கும் ஆட்சி என்பதையும் மக்கள் உணர்ந்தார்கள், விவசாயி கண்டான், போர்முனையில் இருந்து திரும்பிய ஒவ்வொரு படையாளியும் முற்றும் நன்றாகப் புரிந்து கொண்டான். இதர துறைகளில் நாம் எத்தனை

அட்டூழியமான, அபத்தமான காரியங்களைச் செய்திருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல; இந்தப் பிரதானப் பணி என்ன என்பதை நாம் உணர்ந்து கொண்டோம் எனும் மெய் நடப்பு எல்லாம் சரியாகவே இருந்தது என்பதை நிரூபித்து விட்டது.

1919 மற்றும் *1920*ன் முக்கிய அம்சங்கள் யாவை? ராணுவ எதிர்ப்பு. அப்போது சர்வ வல்லமை பெற்ற அன்டான்டு நாடுகள் நமக்கு எதிராக நடை போட்டன, நமது குரல் வளையை நெருக்கின. இங்கு பிரசாரம் எதுவும் தேவையில்லை. கட்சி சார்பற்ற ஒவ்வொரு விவசாயியும் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருந்தான். நிலப்பிரபுக்கள் திரும்பி வந்து கொண்டிருந்தனர். அவர்களை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பது கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியும். இதனால்தான், பேரளவில் எடுத்துக் கொண்டால் விவசாயிகள் கம்யூனிஸ்டுகளின் தலைமையைப் பின்பற்றினார்கள்; இதனால்தான் நாம் வெற்றி பெற்றோம்.

*1921*ல் முக்கியமான அம்சம் ஒழுங்கான முறையில் பின்வாங்குவதாகும். இதற்குக் கண்டிப்பான கட்டுப்பாடு தேவையாக இருந்தது. ''நீங்கள் தொழிலாளர்களைக் குறைத்து மதிப்பிடுகிறீர்கள், தொழிலாளர்கள் மேலதிகமான முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டும்'' என்று ''தொழிலாளர் எதிர்ப்புக்குழு'' கூறியது. ஒழுங்கான முறையில் பின்வாங்குவது மூலமும் கறாரான கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது மூலமும்தான் முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டி இருந்தது. பீதி அல்லது அடங்காத் தன்மை எண்ணத்தை எந்த அளவிலும் புகுத்தும் எவரும் புரட்சியைத் தோல்வியுறும் அதோ கதிக்கே இட்டுச் செல்வர். ஏனெனில் வெற்றிக்குப் பழக்கப்பட்டு விட்டவர்களும், புரட்சிகரக் கருத்துக்கள் மற்றும் லட்சியங்களில் ஊறியவர்களும், ஒவ்வொரு பின்வாங்கலையும் ஒரு மானக்கேடான காரியமாக மனதில் கருதுவோர்களுமான மக்களுடன் சேர்ந்து பின்வாங்குவதை விடவும் அதிகச் சங்கடமானது வேறு எதுவும் இல்லை. சரியான ஒழுங்கை மீறுவதே மிகப் பெரிய அபாயம், சரியான ஒழுங்கை நிலைநிறுத்துவதே மிகப் பெரிய பணி.

இப்போதைய முக்கியமான அம்சம் என்ன? இப்போது முக்கியமான அம்சமாக இருப்பது—இதோடு எனது அறிக்கையைத் தொகுத்துரைக்க விரும்புகிறேன்—அரசியலில் நாம் நமது பாதையை மாற்றிக் கொண்டு விட்டோம் என்ற பொருளில் அல்ல. புதிய பொருளாதாரக் கொள்கையுடனான தொடர்பு சம்பந்தமாக இதைப் பற்றி நம்ப முடியாத அளவுக்கு ஏராளமான முட்டாள் கதை பேசப்படுகிறது. இது எல்லாம் வீண் பேச்சு, பொல்லாத பிதற்றல். புதிய பொருளாதாரக் கொள்கை தொடர்பாக நமது நாட்டில் சில பேர் சுற்றிலும் களேபரம் செய்கிறார்கள், நமது இலாகாக்களை மறுசீரமைக்கவும் புதிய இலாகாக்களை உருவாக்கவும் யோசனை கூறுகிறார்கள். இவையாவும் பொல்லாத பிதற்றலேயாகும். இன்றைய நிலைமையில் முக்கியமான அம்சம் மக்களே, சரியான பேர்களைத் தேர்வு செய்வதே. அற்ப சீர்திருத்தவாதிகளையும், போலிக் கல்வியாளர்களையும் வழக்கமாக எதிர்த்துப் போராடி வரும் ஒரு புரட்சியாளருக்கு இதைப் புரிந்து கொள்வது கடினம். நிதானமாகச் சீர்தூக்கிப் பார்த்தால், இன்றைய நிலைமையில் இருந்து நாம் எடுக்கும் அரசியல் முடிவு இது வரை நாம் நெடுந்தூரம் முன்னேறியுள்ள நிலையில், நாம் எல்லா இடங்களையும் பிடித்து வைத்திருக்க முடியாது என்பதும், அவை எல்லாவற்றையும் பிடித்து வைத்திருக்கத் தேவையில்லை என்பதுமேயாகும்.

சர்வதேசிய ரீதியில் நமது நிலைமை கடந்த சில ஆண்டுகளில் பெரியளவு மேம்பட்டுள்ளது. சோவியத் மாதிரியிலான அரசு நமது சாதனையாகும். இது மனித குலம் முழுவதன் வளர்ச்சியில் ஒரு முன்னேற்றப் படி. ஒவ்வொரு நாளும் எந்தவொரு நாட்டில் இருந்தும் கம்யூனிஸ்டு அகிலத்துக்குக் கிடைத்துவரும் தகவல் இதை உறுதிப்படுத்துகிறது. இதைக் குறித்து எவருக்கும் எள்ளளவும் சந்தேகம் இல்லை. எனினும் நடைமுறை வேலையின் கருத்துக் கோணத்திலிருந்து, கம்யூனிஸ்டுகள் விவசாயி மக்கள் திரளினருக்கு நடைமுறை உதவி வழங்காத பட்சத்தில் அவர்கள் விவசாயி மக்களின் ஆதரவை இழக்க நேரும் என்பதே நிலை. சட்டங்களை நிறைவேற்றுவது, மேலும் சிறந்த அரசாணைகளை நிறை

வேற்றுவது இத்தியாதி இப்போது நமது அக்கறைக்குரிய பிரதான இலக்குகள் அல்ல. அரசாணைகளை நிறைவேற்றுவது ஒரு வடிவிலான பிரசாரமாகக் கருதிய காலம் நம்மிடம் இருந்தது. மக்கள் நம்மைப் பார்த்து சிரித்தபடி போல்ஷிவிக்குகள் தமது அரசாணைகள் அமுல் செய்யப்படுவதில்லை என்பதை உணர்வதில்லை என்று கூறுவது வழக்கம். இந்தக் காரணத்தால் வெண்படையினர் பத்திரிகைகள் அனைத்திலும் ஏளனக் குறிப்புக்கள் மலிந்து காணப்பட்டன. ஆனால் அந்தக் காலகட்டத்தில் இந்த அரசாணைகளை நிறைவேற்றுவது முற்றிலும் சட்டப் பூர்வமாகவே இருந்தது. போல்ஷிவிக்குகள் அப்போதுதான் ஆட்சி அதிகாரம் மேற்கொண்டார்கள் மற்றும் சாதாரண விவசாயியிடமும் சாதாரணத் தொழிலாளியிடமும் சொன்னார்கள். ''இதோ ஓர் அரசாணை; இப்படித்தான் அரசு நிர்வாகம் செய்யப்படுவதை நாங்கள் விரும்புகிறோம்; இதைப் பயன்படுத்திப் பாருங்கள்!'' துவக்கம் முதலே நாம் சாதாரணத் தொழிலாளி மற்றும் விவசாயியிடம் நமது கொள்கை பற்றிய கருத்தை அரசாணைகளின் வடிவில் வழங்கினோம். இதன் விளைவாக மக்கள் திரளினர் மத்தியில் பேரளவான நம்பிக்கையைப் பெற்றோம், இப்போதும் பெற்று வருகிறோம். புரட்சியின் துவக்கத்தில் இது ஓர் அத்தியவசியமான காலகட்டமும் தருணமும் ஆகும்; இது இல்லாமல் நாம் புரட்சி அலையின் உச்சிக்கு உயர்ந்திருக்க முடியாது, இதன் வால் பிடித்துச் செல்ல நேர்ந்திருக்கும். இது இல்லாதிருக்குமானால் தமது வாழ்க்கையைப் புதிய அடிப்படைகளில் நிர்மாணித்துக் கொள்ள விரும்பும் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் அனைவரின் நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியாது. ஆனால் இந்தக் காலகட்டம் கடந்து விட்டது, நாம் இதைப் புரிந்து கொள்ள மறுக்கிறோம். இந்த அல்லது அந்த இலாகா உருவாக்கப்பட வேண்டும் என்றோ அல்லது மறு சீரமைக்கப்பட வேண்டும் என்றோ நாம் உத்தரவிடுவோமானால் இப்போது இந்த விவசாயிகளும் தொழிலாளிகளும் நம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள். சாதாரணத் தொழிலாளியும் விவசாயியும் இப்போது இதில் எவ்வித அக்கறையும் காட்ட மாட்டார்கள்.

அவர்கள் அவ்வாறு செய்வது சரியே, காரணம் இன்று இது முக்கியமான பணி அல்ல. இத்தகைய விஷயங்களை எடுத்துக் கொண்டு கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் மக்களிடம் செல்ல வேண்டுவதில்லை. அரசாங்க இலாகாக்களில் ஈடுபட்டுள்ள நாம் இத்தகைய மிகப்பல சில்லரை விவகாரங்களால் எப் போதும் மூழ்கடிக்கப்பட்ட போதிலும் நாம் பற்றிப் பிடித்து நிற்க வேண்டிய கண்ணி இதுவல்ல, முக்கியமான அம்சமும் இதுவல்ல. நாம் சரியான நபர்களைச் சரியான இடங்களுக்கு அமர்த்தவில்லை என்பதும், புரட்சியின் போது மிகவும் சிறப் பாகச் செயல்பட்ட பொறுப்பான கம்யூனிஸ்ட் அவருக்கு எதுவுமே தெரியாத வாணிக மற்றும் தொழில் துறைப் பணிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார் என்பதும்தான் இங் குள்ள முக்கியமான அம்சம். இவர் நாம் உண்மையைக் கண்டறிய முடியாதபடி தடுக்கிறார். ஏனெனில் இவருக்குப் பின்னால் போக்கிரிகளும் மோசடிக்காரர்களும் நேர்த்தியான முறையில் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். காரியங்கள் எவ் வாறு செய்யப்படுகின்றன என்பது குறித்து நடைமுறையில் கண்காணிப்பது என்பதான அத்தகைய விஷயம் நம் வசம் இல்லை என்பதே இங்குள்ள சிக்கல். இது ஒரு கவர்ச்சியற்ற வேலை, ஒரு சிறிய வேலை; இவை சில்லரையான விவகாரங் கள். ஆனால் வரலாற்றிலேயே மகத்தான அரசியல் மாற்றத் திற்குப் பிறகு, சில காலம் நாம் முதலாளித்துவ அமைப்பின் மத்தியில் கட்டாயம் வாழ வேண்டும் என்ற நிலைமைகள் கீழ் இன்றைய முக்கியமான அம்சம் குறுகிய பொருளிலான அரசியல் அல்ல (நாம் பத்திரிகைகளில் படிப்பதெல்லாம் வெறும் அரசியல் வாண வேடிக்கைகள், இதில் சோஷலிஸ்டுத் தன்மையது எதுவும் இல்லை), முக்கியமான அம்சம் தீர்மானங் கள் அல்ல, இலாகாக்கள் அல்ல மறுசீரமைப்பும் அல்ல. இந்தக் காரியங்கள் நமக்கு அவசியமாக இருப்பதால் நாம் அவற்றைச் செய்வோம். ஆனால் அவற்றை வைத்துக் கொண்டு மக்களிடம் செல்லாதீர்கள். சரியான நபர்களைத் தேர்வு செய்யுங்கள், நடைமுறைக் கண்காணிப்பை ஏற் படுத்துங்கள்—இதையே மக்கள் புரிந்து ஏற்றுக் கொள் வார்கள்.

மக்கள் எனும் கடலில் நாம் எப்படியும் மாகடலில் ஒரு துளி மட்டுமே ஆவோம். மக்கள் எதை உணர்ந்து தெளிந்திருக்கிருர்களோ அதை நாம் சரியானபடி வெளிப்படுத்தும் போது மட்டுமே நாம் ஆட்சி நிர்வாகம் நடத்த முடியும். இதை நாம் செய்யாத வரையில் கம்யூனிஸ்டுக் கட்சி பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கி வழி நடத்தாது; பாட்டாளி வர்க்கம் மக்கள் திரளினருக்குத் தலைமை தாங்கி வழி நடத்தாது; இந்த இயந்திரம் முழுதும் சரிந்து விழும். தமது மிக மோசமான பசி மற்றும் பற்ருக்குறை நிலையில் மக்கள், உழைக்கும் மக்கள் அனைவரும் இன்று வேண்டும் பிரதானத் தேவை நடைமுறை உதவியே—வேறு எதுவும் அல்ல. விவசாயிக்குத் தேவைப்படும் மேம்பாடுகள் அவருக்கு வழக்கமாகிவிட்ட வடிவிலேயே உண்மையில் ஏற்பட்டு வருகின்றன என்று தமக்குப் புலப்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிருர்கள். சந்தை மற்றும் வாணிகம் என்பது பற்றி விவசாயிக்குத் தெரியும். நேரடி கம்யூனிஸ்டு வினியோகத்தை நம்மால் கொண்டுவர இயலவில்லை. இதற்கான ஆலைகள் மற்றும் அவற்றின் சாதனங்கள் நம் வசம் போதிய அளவில் இல்லை. நிலைமை இவ்வாறு இருப்பதால் நாம் விவசாயிக்கு எவை தேவையோ அவற்றை வாணிகம் மூலம் வழங்க வேண்டும், முதலாளி வழங்கியதை விட மோசமாக இல்லாத வகையில் வழங்க வேண்டும். இல்லையேல் மக்கள் இத்தகைய ஆட்சி நிர்வாகத்தை அனுமதிக்க மாட்டார்கள். இதுவே இந்த நிலைமையின் முக்கிய அம்சம். எதிர்பாராத ஏதேனும் நிகழாத பட்சம் இது இந்தக் குறிப்பிடப்பட்ட மூன்று நிபந்தனைகளின் கீழ் 1922 ஆண்டுக்கான நமது செயல்படுகளின் முக்கிய அம்சமாக விளங்க வேண்டும்.

தலையீடு எதுவும் இருத்தல் கூடாது என்பது முதல் நிபந்தனை. இதைத் தவிர்ப்பதற்காக அரசுறவுத் துறையில் நம்மால் இயன்றதனைத்தையும் செய்து வருகிறோம். இருந்த போதிலும் இது எந்த நாளிலும் நிகழலாம். நாம் உண்மையிலேயே விழிப்புடன் இருக்க வேண்டும். செஞ்சேனைக்கு வேண்டி, திட்டவட்டமான வரம்புகளுக்குள், நிச்சயமாயும் ஒரு சில பெரிய தியாகங்களைச் செய்வதற்கு நாம் ஒப்புக்

கொள்ள வேண்டும். முதலாளித்துவ உலகம் முழுதும் நம்மை எதிரிட்டு நிற்கிறது, நம்மை நெரித்தழிப்பதற்குரிய ஒரு வழியை மட்டுமே அது நாடி நிற்கிறது. நமது மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் இந்த முதலாளிகளின் ஏஜெண்டுகள் என்பது தவிர வேறு எவருமல்லர். அவர்களது அரசியல் அந்தஸ்து அத்தகையதே.

நிதி நெருக்கடி மிகவும் கடுமையாக இருத்தல் கூடாது என்பது இரண்டாவது நிபந்தனை. நெருக்கடி நெருங்கி வருகிறது. நாம் நிதிக் கொள்கை பற்றி விவாதிக்கும் போது அதைப் பற்றி நீங்கள் கேள்விப்படுவீர்கள். இது மிகவும் கடுமையானதாயும் துன்பமிழைப்பதாயும் இருக்குமானால் நாம் பலவற்றை மறுபடியும் திருத்தம் செய்ய வேண்டியிருக்கும், ஒரு காரியத்தில் சகல சக்திகளையும் ஒருமுகப்படுத்த நேரும். இது மிகவும் கடுமையானதாக இல்லாத பட்சம், இது பயனுள்ளதாகவும் கூட இருக்கலாம்: பலவகையான அரசு டிரஸ்டுகளிலும் இருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கு நல்லதோர் அதிர்ச்சியை நிச்சயம் தரும். நாம் இதைச் செய்வதற்கு மறந்துவிடக் கூடாது. நிதி நெருக்கடி இலாகாக்கள் மற்றும் தொழில் துறை நிறுவனங்களை ஆட்டிக் குலுக்கும், இவற்றில் எவை சரிவரச் செயல்படவில்லையோ அவைதான் முதலில் தகர்வுறும். பொறுப்பான கம்யூனிஸ்டுகள் மிகவும் நல்லவர்களாக விளங்கியவர்கள், போர்முனைகளில் சமர் புரிந்தவர்கள் மற்றும் எப்போதும் சிறப்பாகப் பணியாற்றியவர்கள் என்பதாகப் பாராட்டப்படும் அதே போதில் இதற்கான பழி முழுவதும் தனித் தேர்ச்சியாளர்கள் மீது சுமத்தப்படாமல் இருக்கும்படி நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறாக, நிதி நெருக்கடி மிகவும் கடுமையானதாக இருக்கவில்லையானால் அதிலிருந்து நாம் சில அனுகூலங்களைப் பெற முடியும் மற்றும், வாணிக அலுவல் இலாகாக்களில் ஈடுபட்டுள்ள பொறுப்பான கம்யூனிஸ்டுகள் எல்லோரின் அணிகளை மத்தியக் கண்காணிப்புக் கமிஷனோ அல்லது மத்திய சரிபார்ப்புக் கமிஷனோ[61] துப்புரவு செய்யும் வழியில் அன்றி மிகவும் முழுநிறைவாகத் துப்புரவு செய்ய முடியும்.

இந்தக் காலகட்டத்தில் நாம் அரசியல் பிழைகள் செய்யக் கூடாது என்பது மூன்றாவது நிபந்தனை. நாம் அரசியல் பிழைகளைப் புரிவோமானால் சகல பொருளாதார நிர்மாணம் சம்பந்தப்பட்ட நமது வேலைகள் யாவும் தகர்வுறும் என்பது நிச்சயம் மற்றும், இந்தப் பிழைகளை நீக்கம் செய்வது எப்படி, எந்தத் திசை வழியைப் பின்பற்றுவது என்பன குறித்த வாதப்பிரதிவாதங்களில் இறங்கிவிடும் நிலைக்கு ஆளாவோம். மாறாக, நாம் இத்தகைய மோசமான பிழைகள் செய்யாத பட்சம், அண்மை எதிர்காலத்தில் முக்கியமான அம்சமாக இருக்கப் போவது அரசாணைகளோ மற்றும் இச்சொல்லின் குறுகிய பொருளிலான அரசியலோ அல்ல, இலாகாக்களோ அவற்றின் அமைப்போ அல்ல—எப்பொழுது தேவையோ அப்போது பொறுப்பான கம்யூனிஸ்டுகளும் சோவியத் இலாகாக்களும் இந்த விஷயங்கள் பற்றிக் கவனம் செலுத்தும்—சரியான நபர்களைத் தேர்வு செய்வதும் முடிவுகள் நிறைவேற்றப்படுவதை உத்தரவாதம் செய்வதுமே நமது செயல்பாடுகள் அனைத்திலுமான பிரதான விஷயம். இதன் தொடர்பாக, நடைமுறையில் சிலதை நாம் படித்தறிந்து கொள்வோமானால், நடைமுறையில் பயனுள்ள சிலவற்றைச் செய்வோமானால், நாம் மறுபடியும் எல்லா இடர்ப்பாடுகளையும் வென்று சமாளிப்பது திண்ணம்.

முடிவாக, நமது சோவியத் நிறுவனங்கள், உயர் அமைப்புகள், அவற்றுடனான கட்சியின் உறவுகள் பற்றிய பிரச்சினையின் நடைமுறை அம்சத்தை நான் கட்டாயம் குறிப்பிட வேண்டும். நமது நாட்டில் கட்சிக்கும் சோவியத் அமைப்புகளுக்கும் இடையிலான உறவுகள் அவை எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இல்லை. இந்தக் கருத்தில் நாம் முற்றும் ஒருமனதினராக இருக்கிறோம். ஸ்தூலமான, சிறு விவகாரம் எவ்வாறு அரசியல் பியூரோவின் முன் இழுக்கப்படுகிறது என்பதற்கு நான் ஏற்கெனவே ஓர் உதாரணம் தந்திருந்தேன். சகஜமான வழிகளில் இதிலிருந்து விடுபடுவது மிகவும் கடினம். ஏனெனில் நமது நாட்டில் ஒரே ஓர் ஆளும் கட்சியே உள்ளது மற்றும் ஒரு கட்சி உறுப்பினர் புகார் செய்வதைத் தடை செய்ய முடியாது. இதனால்தான் மக்கள்

கமிசார்களின் கவுன்சிலின் முன் வரும் சகலமும் அரசியல் பியூரோவின் முன் இழுக்கப்படுகின்றன. நானும் கூட இதற்காக மிகவும் குற்றம் சாட்டப்பட வேண்டியவனே, ஏனெனில் மக்கள் கமிசார்களின் கவுன்சிலுக்கும் அரசியல் பியூரோவுக்கும் இடையிலான தொடர்பு பெரும் அளவுக்கு நேராக என் மூலமாகவே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்த வேலையில் இருந்து நான் ஒய்வு பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது இரு அமைப்புகளும் இசைவுடன் வேலை செய்யவில்லை என்று காணப்பட்டது, இந்தத் தொடர்ப்பை நீடித்து நிலைநிறுத்த காமெனெவ் மும்மடங்கு வேலைச் சுமையினை ஏற்க வேண்டியிருந்தது. அண்மை எதிர்காலத்தில் நான் இந்த வேலைக்கு மறுபடியும் வருவேன் என்பதன் சாத்தியப்பாடு அரிதாக இருக்கும் நிலையில் சகல நம்பிக்கையும் இப்போது இன்னும் இரண்டு உதவியாளர்கள் இருக்கிறார்கள் எனும் மெய் நடப்பைப் பொறுப்பாக்கி ஒப்படைக்கப்பட்டுள்ளது: ஜெர்மானியரால் தூய்மையாக்கப்பட்ட தோழர் திசியுருப்பா, மற்றும் அவர்களால் மிகவும் அருமையாகத் தூய்மையாக்கப்பட்ட தோழர் ரீக்கவ். ஜெர்மன் சக்கரவர்த்தியான வில்ஹெல்ம் கூட நமக்கு நலன் செய்துள்ளார் என்று தோன்றுகிறது. இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. அவரிடம் இருந்த அறுவை மருத்துவர் தோழர் ரீக்கவுக்கு சிகிச்சை செய்ய நேர்ந்துள்ளது, ரீக்கவின் மோசமான உடற்பகுதியை அறுத்து, இதை ஜெர்மனியிலேயே வைத்துக் கொண்டு, தோழர் ரீக்கவின் நல்ல பகுதியை அவரிடம் விட்டு வைத்து, அதை முற்றும் தூய்மைப்படுத்தி நமக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த முறை தொடர்ந்து பயன்படுத்தப்படுமானால் அது உண்மையிலேயே நல்லது.

வேடிக்கை பேசுவது ஒரு புறமிருக்க, பிரதான நெறிமுறைகள் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள். இந்த அம்சத்தின் மீது மத்தியக் கமிட்டியில் பூரண ஒருமைப்பாடு இருக்கிறது. காங்கிரஸ் இந்தப் பிரச்சினையின் பால் மிகவும் நெருக்கமான கவனம் செலுத்தி அரசியல் பியூரோவும் மத்தியக் கமிட்டியும் சில்லரை விவகாரங்களில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும், அதிகமான வேலைகள் பொறுப்பான அலுவலர்

களிடம் மாற்றி ஒப்படைக்கப்பட வேண்டும் எனும் நெறி முறைகளை காங்கிரஸ் ஊர்ஜிதம் செய்யும் எனவும் நான் எதிர் பார்க்கிறேன். மக்கள் கமிசார்கள் தமது வேலைகளுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் — இந்த விவகாரங்களை முதலில் மக்கள் கமிசார்களின் கவுன்சிலிலும், பின்னர் அரசியல் பியூரோவிலும் கொண்டுவரக் கூடாது. மத்தியக் கமிட்டியிடம் புகார் செய்யும் உரிமையை சம்பிரதாயமாக நாம் நீக்கம் செய்ய முடியாது, ஏனெனில் நமது கட்சிதான் நாட்டிலுள்ள ஒரே ஆளும் கட்சியாகும். ஆனால் ஒவ்வொரு சிறிய விவகாரத்தையும் மத்தியக் கமிட்டி முன் கொண்டு வரும் வழக்கத்தை நிறுத்த வேண்டும். மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் செல்வாக்கை உயர்த்த வேண்டும். கவுன்சில் கூட்டங்களில் பிரதானமாயும் கமிசார்கள் கலந்து கொள்ள வேண்டும்—உதவிக் கமிசார்கள் அல்ல. கவுன்சிலின் பணிகளின் தன்மையைக் கடந்த ஆண்டில் அவற்றை எந்தத் திசையில் மாற்றியமைக்க என்னால் இயலாது போயிற்றோ, அந்தத் திசையில் மாற்றியமைக்கப்பட வேண்டும், அதாவது அது நிர்வாகத்தின் கண்காணிப்பு விஷயத்தில் மேலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நம்மிடம் மேலும் இரண்டு உதவியாளர்கள் ரீக்கவ் மற்றும் திசியுரூப்பா இருப்பார்கள். செஞ்சேனை மற்றும் கடற்படைக்கான சப்ளை சம்பந்தமான தொழிலாளர், விவசாயிகளின் தற்காப்புக் கவுன்சிலில் விசேஷ அதிகாரம் பெற்றவராக[62] ரீக்கவ் இருந்த போது அவர் காரியங்களை இறுக்கி முடுக்கியதால் வேலைகள் நல்ல முறையில் நடந்தன. திசியுரூப்பா மிகவும் திறன் படைத்த மக்கள் கமிசாரகங்களில் ஒன்றை நிறுவினார். செயல்திறன் மற்றும் பொறுப்பு எனும் பொருளில் அவர்கள் இருவரும் ஒன்றுசேர்ந்து மக்கள் கமிசாரகங்களை மேம்படுத்த உச்சபட்ச முயற்சி புரிகிறார்கள் என்றால், நாம் அங்கு ஓரளவுக்கு, சிறியளவே என்றாலும் கூட, முன்னேற்றத்தைக் கொண்டுவருவோம். நம்மிடம் பதினெட்டு மக்கள் கமிசாரகங்கள் உள்ளன. இவற்றில் குறைந்தது பதினைந்து எவ்விதப் பயனும் இல்லாதவை. திறன் மிகுந்த மக்கள் கமிசார்களை எல்லா இடங்களிலும் காண முடியாது, இந்த

விஷயத்தில் மக்கள் அதிக கவனம் செலுத்துவார்கள் என்ருல் அது மிகவும் நல்லது. தோழர் ரீக்கவ் மத்தியக் கமிட்டி பியூரோ மற்றும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழுவின் உறுப்பினராகக் கட்டாயம் இருக்க வேண்டும், காரணம் இந்த இரு அமைப்புகளிடையே இணைப்பு வேண்டும், ஏனெனில் இந்த இணைப்பு இல்லாவிடில் பிரதான இயக்கு சக்கரங்கள் சில வேளை இலக்கின்றிச் சுழன்று கொண்டிருக்கும்.

இதன் தொடர்பாக, மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் கமிஷன்கள் மற்றும் உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலில்[63] வேலை செய்வோர் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும், இந்த அமைப்புகள் தமது சொந்த விவகாரங்களை அறிந்து அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும், எண்ணற்ற பல கமிஷன்களாகப் பிளவுறுதல் கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். சில நாட்களுக்கு முன்பாக கமிஷன்கள் செப்பனிடப்பட்டன. நூற்று இருபது கமிஷன்கள் இருப்பதாகத் தெரிய வந்தது. அவசியமானவை எத்தனை? பதினறு. இது முதல் செப்பனீடு அல்ல. தமது வேலைக்குப் பொறுப்பேற்காமல், மக்கள் கமிசார்களின் கவுன்சிலுக்கு ஒரு முடிவைத் தயார் செய்யாமல், இந்த முடிவுக்குத் தாம் பொறுப்பு என்பதை அறியாமல் கமிஷன்கள் பின்னல் புகலடையும் ஒரு போக்கு நிலவுகிறது. இந்தக் கமிஷன்களின் சிக்கலான வலைப்பின்னலில் ஒரு பேயும் வழிதவறிப் போகும். என்ன நடக்கிறது, யார் பொறுப்பாளி என்பது யாருக்கும் தெரியாது; எல்லாம் போட்டுக்குழப்பப்பட்டுள்ளது, இறுதியாக ஒரு முடிவு நிறைவேற்றப்படுகிறது, இதற்கு எல்லோரும் பொறுப்பாக்கப்படுகின்றனர்.

இதன் தொடர்பாக, பிராந்தியப் பொருளாதார மாநாடுகளின்[64] சுயநிர்வாகத்தையும், செயல்பாடுகளையும் விரிவாக்கி அபிவிருத்தி செய்வதன் அவசியம் பற்றிக் கட்டாயம் குறிப்பிட வேண்டும். இப்போது ருஷ்யாவின் ஆட்சி நிர்வாக மண்டலப் பிரிப்பு விஞ்ஞான வழிகளில் வகுக்கப்பட்டுள்ளது, பொருளாதார மற்றும் தட்ப வெப்ப நிலைமைகள், வாழ்க்கை முறை, எரி பொருள் பெறுவதற்கான

நிலைமைகள், ஸ்தல தொழில் துறை இத்தியாதி யாவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பிரிவின் அடிப்படையில் மாவட்ட மற்றும் பிராந்தியப் பொருளாதார மாநாடுகள் நிறுவப்பட்டுள்ளன. இங்குமங்கும் மாற்றங்கள் செய்யப்படலாம் என்பது மெய்யே, ஆனால் இந்தப் பொருளாதார மாநாடுகளின் செல்வாக்கு உயர்த்தப்பட வேண்டும்.

பின்னர், அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மேலும் அதிக ஊக்கமுடன் செயல்படுமாறும், அதன் அமர்வுகள் அதிக முறையாகவும் நீடித்த காலத்துக்கும் நடத்தப் பெறுமாறும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வுகள் மசோதாக்களை விவாதிக்க வேண்டும்; இவ்வாறு செய்ய வேண்டிய தேவை இல்லாத போது, இவை சில சமயம் அவசர அவசரமாக மக்கள் கமிசார்களின் கவுன்சில் முன் கொண்டு வரப்படுகின்றன. இத்தகைய மசோதாக்களை ஒத்திப்போடுவதும், ஸ்தல ஊழியாளர்கள் இவற்றைக் கவனமாக ஆராய்வதற்கு ஒரு வாய்ப்புத் தருவதும் நல்லது. இந்த மசோதாக்களை உருவரை செய்பவர்களிடம் மேலும் கண்டிப்பான கோரிக்கைகள் செய்யப்பட வேண்டும். இது நமது நாட்டில் செய்யப்படுவதில்லை.

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வுகள் நீடித்து நடைபெறுமானால் அவை பகுதிகள் மற்றும் உப கமிஷன்களாகப் பிரிக்கப்பட முடியும். இவ்வாறாக, வேலையை மேலும் கறாராக சரிபார்க்க முடியும், எனது கருத்துப்படி இன்றைய அரசியல் நிலைமையின் மையக் கருத்தினை அடிப்படைச் சாரத்தை அடைவதற்கு முயல முடியும்: சரியான நபர்களைத் தேர்வு செய்வது மற்றும் முடிவுகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதைச் சரிபார்ப்பது என்பதன் மீது கவனத்தை ஒருமுகப்படுத்த முடியும்.

நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது இடங்களில் பொறுப்பான கம்யூனிஸ்டுகள் இப்போது எந்த வேலைக்குத் தகுதியானவர்களோ அந்த வேலையில் இல்லை என்பதையும், அவர்களால் தமது கடமைகளைப் புரிய முடியவில்லை என்பதையும்,

அவர்கள் ஆற அமர்ந்து கற்றறிந்து கொள்ள வேண்டும் எனவும் கட்டாயம் ஒப்புக் கொள்ள வேண்டும், நாம் ஒப்புக் கொள்ளப் பயப்படக் கூடாது. இது ஒப்புக் கொள்ளப் பட்டால், நாம் கற்றறிந்து கொள்ளப் போதுமான வாய்ப்பு இருப்பதன் காரணமாக,—பொதுவான சர்வதேச நிலையை வைத்து நிர்ணயிக்கும் போது அவ்வாறு செய்ய நமக்கு அவ காசம் இருக்கும் என்பதால்—என்ன நேரினும் சரி நாம் இதைச் செய்தே தீர வேண்டும். *(ஆ ர வா ர மா ன க ர வொ லி.)*

ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.)யின் பதினொன்றாவது காங்கிரஸ் செய்தி வெளியீடு, இதழ் *1ல், மார்ச் 28, 1922ல் முழுமையாக வெளியிடப்பட்டது*

நூல் திரட்டு, *தொகுதி 45, பக்கங்கள் 69-116*

2

காங்கிரசின் முடிவில் ஆற்றிய உரை ஏப்ரல் 2

தோழர்களே! நாம் காங்கிரசின் முடிவை நோக்கி வந்துள்ளோம்.

இந்தக் காங்கிரசை இதற்கு முந்தியவற்றோடு ஒப்பிடும் போது எடுப்பாகத் தெரியும் முதல் வேறுபாடு இதில் தோற்றுவிக்கப்பட்ட மேலதிகமான ஒருமைப்பாடு, மேலதிக மான ஒருமுகத்தன்மை, மேலதிகமான அமைப்புத் துறை ஒற்றுமை ஆகியனவாகும்.

கடந்த காங்கிரசின் போது நிலவிய எதிர்ப்பாளர் பிரிவு களில் ஒரு சிறு பகுதி மட்டுமே கட்சிக்கு வெளியே நிற் கிறது.[65]

தொழிற்சங்கங்கள் பற்றிய பிரச்சினை மற்றும் புதிய பொருளாதாரக் கொள்கை மீது நமது கட்சியில் எவ்வித

வேறுபாடும் இல்லை அல்லது மிகவும் அரிதான வேறுபாடு களே நமது கட்சியில் வெளிப்பட்டன.

நமது கட்சிக்குக் கிழடு தட்டி விட்டது, அது தனது சிந்தனையிலும் முழு அமைப்பிலுமான அதன் நெகிழ்திறனை இழந்து வருகிறது என்பதாக இடைவிடாமல் வற்புறுத்திக் கூறி வந்த, கூறி வருகிற நமது விரோதிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்கான தெட்டத்தெளிவான நிருபணத்தை வழங்கியதே இந்தக் காங்கிரசில் நாம் பெற்ற தீவிரமான, அடிப்படையான ''புதிய'' சாதனையாகும்.

இல்லை. நாம் இந்த நெகிழ்திறனை இழந்துவிடவில்லை.

ருஷ்யாவிலும் உலகம் முழுவதிலும் எதார்த்த எல்லா நிலைமைகளும், ஒரு முன்னேற்றத்தையும், விரோதியின் மீது மிகவும் அர்ப்பணிப்பான, வேகமான மற்றும் வைராக்கிய மான தாக்குதலையும் கோரிய போது நாம் அந்தத் தாக்கு தலைத் தொடுத்தோம். அவசியமானால் அதை மீண்டும் மீண் டும் பல முறை செய்ய முடியும்.

இதன் மூலம் உலகில் இது வரை இணைவரையில்லாத ஒரு சிகரத்துக்கு நாம் நமது புரட்சியை உயர்த்தினோம். உலகில் உள்ள எந்தச் சக்தியும் சரி, லட்சோப லட்சம் மற்றும் கோடானு கோடி மக்களுக்கு இது இன்னும் எவ்வளவு தீமையை, இடரை, துயரத்தை உண்டாக்க முடியினும் அது பொருட்டல்ல, அதனால் நமது புரட்சியின் முக்கிய சாதனை களை ஒழித்துவிட முடியாது, ஏனெனில் இவை இனிமேலால் ''நமது'' சாதனைகள் அல்ல வரலாற்றுச் சிறப்புடைய சாதனைகளாகும்.

1921 வசந்தத்தில் நமது புரட்சியின் முன்னணிப் படை மக்கள் திரளினரிடமிருந்து, அது திறமையுடன் முன்னோக்கி இட்டுச் செல்ல வேண்டிய விவசாயி மக்கள் திரளினரிட மிருந்தும் தனிப்பட்டுப் போகும் அபாயம் இருக்கிறது என்று தெரிந்த போது, நாம் ஒருமனதாகவும் உறுதியாயும் பின் வாங்குவது என்று தீர்மானித்தோம். ஒட்டுமொத்தத்தில் கடந்த ஆண்டில் நாம் நல்ல புரட்சிகர ஒழுங்குடன் பின் வாங்கினோம்.

உலகின் முன்னேறிய நாடுகள் எல்லாவற்றிலும் முதிர்ச்சி

யடைந்து வரும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் அர்ப் பணிப்பான வீரத்துடன் போராடவும் தாக்கவுமான தமது ஆற்றலை நல்ல புரட்சிகர ஒழுங்குடன் பின்வாங்குவதற் கான ஆற்றலுடன் இணைத்தால் அன்றி தமது பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியாது. நமது போராட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் அனுபவம், அதாவது பின்வாங்கும் அனுபவம், நமது புரட்சியின் முதல் கட்டத்தின் அனுபவம், அதாவது அர்ப்பணிப்பான துணிச்சலுடனான தாக்குதலின் அனுபவம், எவ்வாறு எல்லா நாடுகளிலுமுள்ள தொழி லாளர்களுக்கும் சந்தேகமின்றி பயனுள்ளது என்று நிரு பிக்கப்பட்டதோ அது போல, எதிர் காலத்தில் ஒருவேளை சில நாடுகளின் தொழிலாளர்களுக்காவது பயனுள்ளதாக இருக்கும்.

இப்போது நாம் பின்வாங்குவதை நிறுத்திவிட முடிவு செய்துள்ளோம்.

இதன் பொருள், நமது கொள்கையின் குறிக்கோள் முழு வதும் ஒரு புதிய வழியில் முறையாக வரையறுக்கப்படுகிறது. முன்னணிப் படை தன்னைத் தானே பயிற்றுவித்துக் கொள்ளும் வேலையை, தன்னைத் தானே மறுவார்ப்புச் செய்து கொள்ளும் வேலையைத் தட்டிக் கழிக்கக் கூடாது என்பதும், தான் இன்னும் போதுமான அளவு பயிற்சி பெற வில்லை மற்றும் அவசியமான தேர்ச்சி பற்றுக்குறையாக இருக்கிறது என்பதை வெளிப்படையாக ஒத்துக் கொள்ளப் பயப்படக் கூடாது என்பதும், இப்போதைய நிலைமையின் முக்கிய அம்சமாகும். அளப்பரிய வகையில் விரிவான, மேலும் பேரளவான மக்கள் திரளாய் விவசாயிகளுடன் சேர்ந்து மட்டுமே முன்னேற வேண்டுவது இப்போது முக்கிய மான காரியம். நாம் கற்று வருகிறோம் எனவும், அவர்களுக்கு உதவவும் அவர்களை முன்னேக்கி இட்டுச் செல்லவும் நாம் கற்றுத் தெரிந்து கொள்வோம் எனவும் செயல்கள் மூலம் நடைமுறை மற்றும் அனுபவம் வாயிலாக விவசாயி மக் களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். இன்றைய சர்வதேச நிலைமையில், ருஷ்யாவில் உற்பத்தி சக்திகள் நிலவும் இன்றைய நிலையில் இந்தப் பிரச்சினைக்கு, மிகவும் மெது

வாக, எச்சரிக்கையுடன், காரியகரமான வழியில், எடுக்கப் பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் நடைமுறைப் பாணி யில் ஆயிரம் தடவை சோதித்துப் பார்த்து மட்டுமே தீர்வு காண முடியும்.

இந்த மிகவும் மெதுவான, மிகவும் எச்சரிக்கையான முன்னேற்றத்தை எதிர்த்துக் குரல்கள் நமது கட்சியில் எழுப்பப்படுமானல் இந்தக் குரல்கள் தனிமைப்பட்டவை யாகவே இருக்கும்.

இன்றைய கட்டத்தில் அதன் வேலைகள் சரிநுட்பமாயும் இந்த வழிகளில்தான் இந்த வழிகளில் மட்டுமே ஒழுங்கமைக் கப்பட வேண்டும் என்பதை கட்சி ஒட்டுமொத்தமாகப் புரிந்து கொண்டிருக்கிறது—தான் புரிந்து கொண்டு விட்டதைச் செயல் மூலம் இப்போது நிரூபித்துக் காட்டும். இதை நாம் புரிந்து கொண்டு விட்டதால் நாம் நமது லட்சி யத்தை நிச்சயம் சாதிப்போம்!

ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பதினொன்ருவது காங் கிரஸ் முடிவுற்றது என அறிவிக்கிறேன்.

பிராவ்தா, இதழ் *76*,
ஏப்ரல் 4, 1922

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 136-138

"பிராவ்தாவின்" பத்தாவது ஆண்டு விழா

சட்டபூர்வமான போல்ஷிவிக்கு நாளேடு பிராவ்தா—ஜாரிஸ்டு சட்டங்கள் படியும் கூட சட்டபூர்வமானது—ஆரம்பமாகிப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. இந்தப் பத்தாண்டுக்கு முன்பு கடக்கப்பட்டது ஏறத்தாழ இன்னொரு பத்தாண்டு: போல்ஷிவிசத்தின் உதயத்திலிருந்து கணக்கிடுகையில் ஒன்பது ஆண்டு (1903—1912), முற்றிலும் "போல்ஷிவிக்குத் திசைவழியிலான" பழைய இஸ்க்ரா[66] 1900ல் ஆரம்பமானதிலிருந்து கணக்கிட்டால் பதின்மூன்று ஆண்டு (1900—1912).

ருஷ்யாவில் வெளிவரும் போல்ஷிவிக்கு நாளேட்டின் பத்தாவது ஆண்டு விழா.... அன்று முதல் பத்து ஆண்டுகளே கழிந்துள்ளன! ஆனல் நமது போராட்டத்தின், இயக்கத்தின் உள்ளடக்கத்தைக் கொண்டு அளவிட்டோமாயின் அவை நூறு ஆண்டுகளுக்குச் சமமாகும். ஏனெனில் இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்களின் தீரர்களைப் போன்ற ஐரோப்பிய அற்பர்களது பழைய அளவுகோலைக் கொண்டு அளவிட்டோமாயின், கடந்த ஐந்து ஆண்டுகள் கண்டிருக்கும் சமுதாய வளர்ச்சியின் வீச்சு மெய்யாகவே மலைக்கத்தக்கது. இந்த நாகரீக அற்பர்கள் "இயற்கையான" நிலைமையாகக் கருதப் பழகிக் கொண்டு விட்டது எதுவெனில்: காலனிகளையும் அரைச்சார்பு நிலையிலுள்ள நாடுகளையும் அறவே ஏழ்மையான நாடுகளையும் சேர்ந்த கோடானு கோடியான மக்கள் (கறாராகச் சொல்வதெனில் நூறு கோடிக்கும் அதிகமான மக்கள்), இந்தியர்களுக்கோ, சீனர்களுக்கோ இழைக்கப்படுவதைப் போன்றதைப்

பொறுத்துக் கொண்டும், நம்பவே முடியாத சுரண்டலையும் அப்பட்டமான கொள்ளையையும் பட்டினியையும் வன்முறையையும் மானபங்கத்தையும் சகித்துக் கொண்டும் இருக்கும் படியான ஒரு நிலைமையே; கொள்ளைப் பொருள் சமாதான வழியில் பாகப் பிரிவினை செய்யப்பட வேண்டுமா, அல்லது ஒரு கோடிக்கு அதிகமானேரையோ, குறைவானேரையோ சாகடித்து இந்த ஏகாதிபத்தியக் கொள்ளையானது—நேற்று ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்கும் இடையிலும், நாளைக்கு (பிரான்சும் பிரிட்டனும் ஏதேனும் ஒரு வகையில் பங்கெடுத்துக் கொள்ள) ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலும்—பாகப் பிரிவினை செய்யப்பட வேண்டுமா என்று, ''நாகரீகமடைந்த'' ஆட்கள் ''சுதந்திரமாய்'', ''ஜனநாயக வழியில்,'' ''நாடாளுமன்ற நடைமுறைக்கு'' ஏற்ப தீர்மானம் செய்யும் பொருட்டு, இம்மக்கள் இவ்வளவையும் சகித்துக் கொண்டிருக்கும்படியான ஒரு நிலைமையே.

உலக வளர்ச்சியின் வேகம் இப்படி அபாரமாய் அதிகரித்திருக்கிறது, கோடானு கோடியான புதிய மக்கள் இந்த வளர்ச்சியினுள் ஈர்க்கப்பட்டிருப்பதுதான் இந்த அதிகரிப்புக்குரிய அடிப்படைக் காரணம். பிரபஞ்சத்துக்கே தானேதான் மையமெனக் கருதப் பழகிக் கொண்டுவிட்ட பழைய முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஐரோப்பா கெட்டழிந்து போய், அழுகிய சீழ்க் கட்டி போல முதல் ஏகாதிபத்தியம் கொலைத்தாண்டவத்தில் வெடித்தது. பழைய ஐரோப்பாவின் இந்த நசிவு—ஷ்பெங்கிளர்களும், ஷ்பெங்கிளரைப் மெச்சிப் புகழக் கூடியோராகிய (அல்லது படிக்கவுங் கூடியோராகிய) அறிவார்ந்த அற்பர்கள் எல்லோரும் எவ்வளவுதான் அழுது புலம்பினுலும் உலக முதலாளித்துவ வர்க்கத்தினுடைய வீழ்ச்சி வரலாற்றின் பல நிகழ்ச்சிகளில் ஒன்றே அன்றி வேறல்ல. இந்த உலக முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியக் கொள்ளையிலும் உலகோரில் பெருவாரியானேர் மீதான ஒடுக்குமுறையிலும் மிதமிஞ்சி ஊறி நலிவுற்றுவிட்டது.

இந்தப் பெருவாரியினர் இப்போது விழித்தெழுந்து விட்டனர், ''வலியவற்றிலும் வலிய'' வல்லரசுகளாலும்

தடுத்து நிறுத்த முடியாத இயக்கத்தை இவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இந்த வல்லரசுகளுக்கு இனி வாய்ப்பு இல்லை. முதல் ஏகாதிபத்திய யுத்தக் களரியில் ''வெற்றியாளர்களாய்த்'' தற்போது வெளிவந்திருப்பவையும் சிறிய—சின்னஞ்சிறிய என்றே சொல்வேன்—அயர்லாந்தைத் தோற்கடிப்பதற்குக் கூட திராணியற்றனவாய் இருக்கின்றன; செலாவணி, நிதி விவகாரங்களில் இவற்றினிடம் நிலவும் குழப்படியிலிருந்தும் இவற்றால் வெற்றிகரமாய் வெளிவர முடியப் போவதில்லை. இதற்கிடையில் இந்தியாவும் சீனாவும் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. இவை 70 கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்டவை. எல்லா வழிகளிலும் இவற்றை ஒத்தவையான அக்கம்பக்கத்து ஆசிய நாடுகளையும் சேர்த்துக் கொண்டால், உலகில் வாழ்வோரில் பாதிக்கும் மேற்பட்டோரைக் கொண்டவை இவை. தவிர்க்கவொண்ணாத முறையில், மேன்மேலும் கூடுதலான வேகத்தில் இவை தமது 1905ஆம் ஆண்டினை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன; சாரம்சமான பேரளவான வேறுபாடு என்னவெனில், 1905ல் ருஷ்யாவின் புரட்சி (எப்படியும் ஆரம்பத்திலேனும்) தனித்த ஒன்றாய், அதாவது ஏனைய நாடுகளும் உடனே புரட்சியினுள் ஈர்க்கப்படாமல், நடைபெற முடிந்தது. ஆனால் இந்தியாவிலும் சீனாவிலும் முதிர்ச்சியடைந்து வரும் புரட்சிகள், புரட்சிப் போராட்டத்துள், புரட்சி இயக்கத்துள், உலகப் புரட்சியினுள் இப்போது ஈர்க்கப்பட்டு வருகின்றன, ஏற்கெனவே ஈர்க்கப்பட்டும் உள்ளன.

புரட்சிகள் யாவற்றிலும் பெரிதான இந்த உலகப் புரட்சி கண்டிருக்கும் இந்த அபார வேக அதிகரிப்பின் மைல்கல்களில் ஒன்றைச் சட்டபூர்வமான போல்ஷிவிக்கு நாளேடு **பிராவ்தாவின்** பத்தாவது ஆண்டு விழா மிகத் தெளிவாகக் குறியிட்டுக் காட்டுகிறது. 1905—1907ல் ஜாரிஸ்டு அரசாங்கம் புரட்சியை அறவே நசுக்கி விட்டது என்பதாகவே தோன்றியது. ஆனால் சில ஆண்டுகளுக்கு உள்ளாக போல்ஷிவிக்குகளின் கட்சியால்—வேறொரு வடிவில், வேறொரு வழியில்—பகைவனது கோட்டைக்குள் ஊடுருவிச் சென்று, கேடுகெட்ட ஜாரிஸ்டு மற்றும் நிலப்பிரபுத்துவ எதேச்சாதிகாரத்துக்குக்

குழி பறித்திடும் தனது பணியை உள்ளிருந்தபடி நாள் தோறும் ''சட்டபூர்வமாய்'' நடத்திச் செல்ல முடிந்தது. மேலும் சில ஆண்டுகள் கழிந்தன, போல்ஷிவிசம் ஏற்பாடு செய்த பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி வாகை சூடியது.

பழைய இஸ்க்ரா 1900ல் ஆரம்பிக்கப்பட்ட போது, அதில் பத்துப்பன்னிரண்டு புரட்சியாளர்களே பங்கெடுத்துக் கொண்டார்கள். போல்ஷிவிசம் பிறப்பெடுத்த அந்த சட்ட விரோதக் காங்கிரசுகள் 1903ல் பிரஸ்ஸெல்சிலும் லண்டனிலும் கூடிய போது, சுமார் நாற்பது புரட்சியாளர்கள்தான் அவற்றில் கலந்து கொண்டார்கள்.[67]

1912—1913ல் லட்சக் கணக்கான தொழிலாளர்களது ஆதரவைப் பெற்று, சட்டபூர்வமான போல்ஷிவிக்குப் பிராவ்தா உதித்தெழுந்தது. இந்தத் தொழிலாளர்கள் சிறு சிறு தொகைகளாக வசூலித்துத் திரட்டியதன் மூலம், ஜாரிசத்தின் ஒடுக்குமுறையையும் சோஷலிசத்துக்கு வஞ்சகம் புரிந்து குட்டிமுதலாளித்துவ துரோகிகளாகிய மென்ஷிவிக்குகளின் போட்டியையும் அவர்கள் வெற்றி கொள்ள முடிந்தது.

1917 நவம்பரில் அரசியல் நிர்ணயச் சபைத் தேர்தல்களில் மொத்தம் 3 கோடி 60 லட்சம் வாக்காளர்களில் 90 லட்சம் பேர் போல்ஷிவிக்குகளுக்கு ஓட்டளித்தார்கள். உண்மையில்—தேர்தல்களில் அல்ல—போராட்டத்தின் நடப்பில், 1917 அக்டோபர் முடிவிலும் நவம்பரிலும் போல்ஷிவிக்குகள் பாட்டாளி வர்க்கத்தாரிலும் வர்க்க உணர்வு கொண்ட விவசாயிகளிலும் பெரும்பான்மையினரது ஆதரவையும் (சோவியத்துக்களின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினரால் இது பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது), மற்றும் உழைப்பாளி மக்களில் மிகுந்த செயல் முனைப்பும் அரசியல் உணர்வும் கொண்டதான பகுதியில் (அதாவது 1 கோடி 20 லட்சம் பேர் கொண்ட அன்றைய சேனையில்) பெரும்பான்மையோரின் ஆதரவையும் பெற்றிருந்தார்கள்.

கடந்த இருபது ஆண்டுகளில் உலகப் புரட்சி இயக்கம் கண்டிருக்கும் ''வேக அதிகரிப்புக்கு'' எடுத்துக்காட்டான

இந்தச் சிறிய புள்ளிவிவர சித்திரம். இது பெரிதும் அரை குறையான மிகச் சிறிய சித்திரமாகும். 15 கோடிக்கு மேற் படாத மக்களது வரலாறு குறித்துப் பெரிதும் குத்துமதிப் பான கருத்தினை மட்டுமே இவை நமக்கு அளிக்கின்றன. ஆனால் இதே இருபது ஆண்டுகளில் புரட்சியானது துவங்கி, 100 கோடி வரையும் 100 கோடிக்கும் அதிகமாயும் மக்களைக் கொண்ட நாடுகளில் வெல்லற்கரிய சக்தியாய் வளர்ந்திருக் கிறது (அனைத்து ஆசியாவிலும் மட்டுமல்ல, தென் ஆப்பிரிக் காவையும் மறக்கலாகாது—அடிமை வாழ்வு அல்ல, மனித வாழ்வு வாழத் தனக்கு உரிமை உண்டு என்பதைத் தென் ஆப்பிரிக்கா அண்மையில் உலகுக்கு நினைவுபடுத்திக் காட் டிற்று, அதுவும் முழு அளவுக்கு ''நாடாளுமன்ற முறையில்'' அல்லாத வழிகளில் நினைவுபடுத்திக் காட்டிற்று)[68].

''வக்கிரப் பிறவிகளான ஷ்பெங்கிளர்கள் சிலர்''—இப் படிச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும்—புரட்சி சக்தி கள் பற்றிய இந்த மதிப்பீடு ஐரோப்பிய, அமெரிக்கப் பாட் டாளி வர்க்கத்தைக் கணக்கில் எடுக்கத் தவறுவதாகக் கூறு வார்களானால் (இரண்டாவது, இரண்டரையாவது அகிலங் களின் ''கெட்டிக்காரத்'' தலைவர்களிடமிருந்து எல்லா விதமான அபத்தங்களும் எதிர்பார்க்கக் கூடியவைதானே), நாம் அவர்களுக்குப் பதிலளிப்போம்; கருத்தரித்த பின் ஒன்பது மாதம் கழித்து குழந்தை பிறக்கும் என்பதால், பிர சவம் நடைபெறப் போகும் மணியையும் நிமிடத்தையும் முன்கூட்டியே நிச்சயித்துச் சொல்லிவிட முடியும்; அதோடு பிரசவத்தின் போது சிசுவின் இருக்கை நிலை, மகப்பேறின் போது தாயின் உடல் நிலைமை, தாய்-சேய் இருவருக்கும் ஏற்படப் போகும் வலியின், அபாயத்தின் சரியான அளவு ஆகியவற்றை எல்லாம் நிர்ணயித்துவிட முடியும் என்பதாக மேற்குறித்த இந்தக் ''கெட்டிக்காரத்'' தலைவர்கள் எப் போதும் வாதாடுகிறவர்கள். ரொம்ப ரொம்பக் ''கெட்டிக் காரர்கள்''! சர்வதேசப் புரட்சியினது வளர்ச்சியின் கண் ணோட்டத்தில், சார்ட்டிசத்திலிருந்து[69] மாறி, முதலாளித் துவ வர்க்கத்துக்கு அடிபணியும் ஹெண்டர்சனது அடிவருடித் தனத்துக்குச் செல்வதையும், வர்லேனிலிருந்து மாறி

ரெனெடேலுக்கும், வில்ஹெல்ம் லீப்க்னெஹ்டிலிருந்தும் பெபெலிலிருந்தும் ஸூடேகுமுக்கும் ஷெய்டெமனுக்கும் நோஸ்கேக்கும் செல்வதையும், நூற்றுக் கணக்கான மைல் களுக்கு நீண்டு செல்லும் மேடுபள்ளம் அற்ற அருமையான நெடுஞ்சாலையிலிருந்து மோட்டார் வண்டி ஒன்று ஒரு சில கஜ தூரத்துக்கு இருக்கும் நாற்றம் வீசும் சகதிக்கு ‘‘செல் வதற்கு’’ ஒப்பானதே ஆகும்—இதை இந்தக் கனவான் களால் எந்த வழியிலும் புரிந்து கொள்ள முடிவதே இல்லை.

மனிதர்கள்தாம் தமது வரலாற்றைப் படைக்கிறார்கள். இதில் சார்ட்டிஸ்டுகளும் வர்லேன்களும் லீப்க்னெஹ்டுகளும் தமது மனத்தையும் இதயத்தையும் ஈடுபடுத்தினர். ஆனால் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களது தலைவர் கள் உடற்கூற்றின் பிற பகுதிகளை ஈடுபடுத்துகிறார்கள்: புதிய சார்ட்டிஸ்டுகளும் புதிய வர்லேன்களும் புதிய லீப்க்னெஹ்டு களும் தளிர்த்தெழுவதற்காக இவர்கள் உரமிட்டு நிலத்தை வளம் பெறச் செய்கிறார்கள்.

மெத்தக் கடினமான இத்தருணத்தில் புரட்சியாளர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ள முற்படுவது பெருங் கேடு விளைவிப்பதாகும். போல்ஷிவிசமானது சர்வதேச சக்தி ஆகியிருப்பது மெய்தான்; நாகரீக வளர்ச்சியடைந்து முன் னேறியுள்ள எல்லா நாடுகளிலும் புதிய சார்ட்டிஸ்டுகளும் புதிய வர்லேன்களும் புதிய லீப்க்னெஹ்டுகளும் தோன்றி யிருப்பதும், சட்டபூர்வமான கம்யூனிஸ்டுக் கட்சிகளாய் (பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஜாராட்சியில் நமது பிராவ்தா எந்த அளவுக்கு இருந்ததோ அதே அளவுக்குச் சட்டபூர்வ மானவை) வளர்ந்து வருவதும் மெய்தான். ஆயினும் தற் போதைக்குச் சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் அதன் வர்க்கப் பகைவனை விட ஒப்பிடற்கரிய அளவுக்குப் பல முடையதாகவே இருக்கிறது. ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரம் உதித்தெழுவதைத் தடுப்பதற்காகவும், இதன் உதயத்துடன் கூடவே வரும் படியான அபாயங்களை யும் துன்பங்களையும் பத்து மடங்கு அதிகமாக்குவதற்காக வும் தன்னால் இயன்றது அனைத்தும் செய்திருக்கும் இந்த முதலாளித்துவ வர்க்கம், தனது வெண்படை மூலமான

போர்களையும் ஏகாதிபத்தியப் போர்களையும் பிறவற்றை யும் கொண்டு பத்து லட்சக் கணக்காஞேரையும் கோடிக் கணக்காஞேரையும் வதைபட வைக்கவும், செத்து மடியச் செய்யவும் முடியும் படியானதாகவே இன்னமும் இருக்கிறது. இதை நாம் மறக்கலாகாது. இந்தக் குறிப்பிட்ட இன்றைய நிலைமைக்கு ஏற்றவாறு நாம் நமது போர்த்தந்திரத்தைச் சாமர்த்தியமாகத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். முத லாளித்துவ வர்க்கம் தங்குதடையின்றி தொடர்ந்து வதைப் பதற்கும் சித்திரவதை செய்வதற்கும் கொல்வதற்கும் பலம் படைத்ததாகவே இருக்கிறது. ஆனல் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் முழுமையான வெற்றியை—தவிர்க்க வொண் ணுததும், உலக வரலாற்றுக் கண்ஞேட்டத்தில் அதிக தொலை வில் இல்லாததுமாகிய இந்த வெற்றியை—அதஞல் தடுத்து நிறுத்திவிட முடியாது.

மே 2, 1922

பிராவ்தா, இதழ் *98*,
மே 5, 1922

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் *173-177*

சோ. சோ. கு. ஒன்றியம் நிறுவப்படுவது பற்றி

ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ உறுப்பினர்களுக்கு வேண்டி லே. ப. காமெனெவுக்கு எழுதிய கடிதம்[70]

செப்டம்பர் 26

தோழர் காமெனெவ்! ரு. சோ. சோ. கூ. குடியரசுக்குள் சுயேச்சையான குடியரசுகள் சேருவது சம்பந்தமான தனது கமிஷனின் தீர்மானத்தை ஸ்தாலின் ஏற்கெனவே உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கலாம்.

அவர் அனுப்பியிராவிடில், உடனே செயலாளரிடமிருந்து தயவு செய்து ஒரு பிரதியைப் பெற்று அதைப் படிக்கவும். அதைப் பற்றி நேற்று சகோல்னிக்கவுடனும் இன்று ஸ்தாலினுடனும் நான் பேசினேன். நாளை நான் மிதிவானியை (''சுயேச்சையான'' கருத்துப்போக்கு கொண்டதாக சமுசயிக்கப்படும் ஜார்ஜியன் கம்யூனிஸ்ட்) பார்ப்பேன்.

இந்த விஷயம் உச்சபட்சமான முக்கியத்துவமுடையது என்று நான் கருதுகிறேன். ஸ்தாலின் ஓரளவுக்கு அவசரப்படுபவராகக் காணப்படுகிறார். இந்த விஷயம் குறித்து நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் (முன்பு ஒரு முறை இதை எடுத்துக் கவனிக்க உத்தேசித்திருந்தீர்கள், இது சம்பந்தமாக சிறிது செயல்படத் துவங்கினீர்கள்); ஸினேவியெவும் கூடத்தான்.

ஸ்தாலின் ஒரு விஷயத்தில் விட்டுக்கொடுக்க ஏற்கெனவே இசைவு தெரிவித்துள்ளார்: பாரா 1ல் ரு. சோ. சோ. கூ. குடியரசில் ''சேருவது'' என்பதற்குப் பதில்

> *''ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்தில், ரு. சோ. சோ. கூ. குடியரசுடன்*

முறைப்படி ஒன்றிணைதல்''

என்று போட இசைந்துள்ளார்.

இந்த விட்டுக்கொடுத்தலின் செயல் நோக்கம் தெளிவானது என்று நான் கருதுகிறேன். நம்மை நாமே, உக்ரேனியன் சோ. சோ. கு. மற்றும் இதர குடியரசுகளுடன் சமத்துவமாக இருப்பதாகக் கருதுகிறோம், அவற்றுடன் ஒரு சமத்துவமான அடிப்படையில் ஒரு புதிய ஒன்றியத்தில், ஒரு புதிய கூட்டாட்சியில் ''ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்தில்'' சேருகிறோம்.

அப்படியானல் பாரா 2ம் கூடத் திருத்தப்பட வேண்டும். ரு. சோ. சோ. கூ. குடியரசின் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வுகளுக்குப் புறம்பாகத் தேவைப்படுவது என்னவெனில் ஒரு

> ''ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்தின் கூட்டாட்சி அகில யூனியன் மத்திய நிர்வாகக் கமிட்டி.''

முன்னது வாரம் ஒரு முறையும், பின்னது வாரம் ஒரு முறை (அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறையும்) அமர்வுகள் நடத்தும் பட்சத்தில் இதை சுலபமாக ஏற்பாடு செய்யலாம்.

இதில் முக்கியமானது என்னவெனில், ''சுயேச்சையாளர்களுக்கு'' சாதனங்களை வழங்குவதல்ல, அவர்களது சுயேச்சையை அழிப்பதல்ல, மாருக இன்னொரு புதிய தட்டை, சமத்துவமான குடியரசுகளின் ஒரு கூட்டாட்சியைப் படைத்துருவாக்குவதேயாகும்.

2ஆம் பாராவின் இரண்டாவது பகுதி அப்படியே இருக்கலாம்: திருப்தி இல்லாதவர்கள் (ரு. சோ. சோ. கூ. குடியரசில் போல) அமலாக்கத்தை இதன் மூலம் நிறுத்தி வைக்காத வகையில் (உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சில் மற்றும் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் முடிவுகளுக்கு எதிராக) கூட்டாட்சி அகில யூனியன் மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு மனுச்செய்துகொள்வார்.

3ஆம் பாரா அப்படியே இருக்கலாம், ஆனால் அதன் வாசகம் பின்வருமாறு இருக்க வேண்டும்: ''அகிலக் கூட்டாட்சி மக்கள் கமிசாரகங்களுடன் இணைந்து கொள்ள வேண்டும், அவற்றின் தலைமையகம் மாஸ்கோவில் இருக்க வேண்டும், அதோடு ரு. சோ. சோ. கூ. குடியரசின் சம்பந்தப்பட்ட மக்கள் கமிசாரகங்கள், ஐரோப்பா மற்றும் ஆசியாவின் குடியரசுகளின் ஒன்றியத்தில் சேர்ந்துவிட்ட எல்லாக் குடியரசுகளிலும் ஒரு சிறு அலுவலர் குழுவுடன் கூடிய தமது அதிகார பூர்வமான பிரதிநிதிகளை வைத்திருக்க வேண்டும் எனும் ஒரு நிபந்தனையும் சேர்க்கப்பட வேண்டும்.''

3ஆம் பாராவின் 2ஆம் பகுதி அப்படியே இருக்கும், கூடுதல் சமத்துவத்தை வலியுறுத்துவதற்காக பின்வருமாறு கூறலாம்: ''ஐரோப்பா மற்றும் ஆசியாவின் சோவியத் குடியரசுகளின் ஒன்றியத்தின் உறுப்புக் குடியரசுகளின் மத்திய நிர்வாகக் கமிட்டிகளின் ஒப்புதல் மூலம்.''

3ஆம் பகுதி பற்றி யோசிப்போம்: ஒருவேளை ''விரும்பத்தக்கது'' என்பதற்குப் பதில் ''கட்டளை பூர்வமான'' என மாற்றீடு செய்யலாமா? அல்லது உத்தரவுகளைக் கோருவது மற்றும் ''விசேஷ அவசர முக்கியத்துவமுள்ள'' காரியங்களில் மட்டும் இத்தகைய உத்தரவுகளைக் கோருவது முடிவு செய்வதை அனுமதிப்பது எனும் வடிவில் குறைந்தபட்சம் நிபந்தனையுடனான கட்டளை பூர்வம் எனும் சொற்களைப் போடலாமா?

4ஆம் பாராவும் கூட ''மத்திய நிர்வாகக் கமிட்டிகளின் ஒப்புதலுடன் இணைவது'' என்பதாக இருக்கலாமா?

5ஆம் பாராவுடன் ''முற்றிலும் கலந்தாலோசனைத் தன்மையதான (அல்லது ஒருவேளை கலந்தாலோசனைத் தன்மை மட்டுமே கொண்ட) கூட்டு (அல்லது பொது) மாநாடுகள் மற்றும் காங்கிரசுகள் நிறுவப்படுவதுடன்'' என்பதை சேர்க்கலாமா?

1 மற்றும் 2ஆம் கருத்துரைகளில் பொருத்தமான மாற்றங்கள்.

நான் திரும்பி வரும் வரையில் மத்தியக் கமிட்டியின்

அரசியல் பியூரோவிடம் இத்தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதைத் தாமதிக்க ஸ்தாலின் ஒத்துக் கொண்டிருக்கிறார். நான் அக்டோபர் 2, திங்கட்கிழமை வந்து சேருவேன். உங்களையும் ரீக்கவையும் சுமார் இரண்டு மணி நேரத்துக்கு பகல் 12 முதல் 2 வரை மற்றும் தேவைப்பட்டால் மாலை 5—7 அல்லது 6—8 வரை சந்திக்க விரும்புகிறேன்.

இது எனது தற்காலிகமான நகல். மிதிவானி மற்றும் இதரத் தோழர்களுடனுன உரையாடல்கள் அடிப்படையில் நான் சேர்ப்புக்களையோ திருத்தங்களையோ செய்வேன். இதையே செய்யுமாறும் எனக்குப் பதில் எழுதும்படியும் உங்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் லெனின்

பி. கு. அரசியல் பியூரோவின் எல்லா உறுப்பினர்களுக்கும் இதன் பிரதிகளை அனுப்புக.

செப்டம்பர் 26, 1922ல் எழுதப்பட்டது

லெனின் தொகுப்பு, நூல் 36ல்,
1959ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 211-213

அயல்துறை வாணிகத்தின் ஏகபோகம் பற்றி[71]

1

மத்தியக் கமிட்டியின் செயலாளரான
தோழர் ஸ் தா லி னு க் கு

அக்டோபர் 13, 1922

அக்டோபர் 6ந் தேதிய மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டத்தின் முடிவு (குறிப்பேடுகள் எண் 7, பாரா 3) ஒரு முக்கியத்துவமல்லாத ஒரளவேயான சீர்திருத்தம் எனத் தோற்றமளிக்கும் ஒன்றைத் தொடங்கி வைக்கிறது: ''தனிப்பட்ட பொருள் வகைகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான தற்காலிக அனுமதி பற்றி அல்லது பிரத்தியேக எல்லைகளுக்கு அனுமதி வழங்குதல் பற்றி உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சில் எடுத்த பல தனிப்பட்ட முடிவுகளை அமுல் நடத்துவது.''

ஆனல் மெய் நடப்பில் இது அயல்துறை வாணிக ஏகபோகத்தைத் தகர்க்கிறது. தோழர் சகோல்னிக்கவ் இதைச் செய்ய முயன்று வந்துள்ளார், வெற்றியடைந்துள்ளார் என்றல் அதில் வியப்பேது. அவர் எப்போதும் இதைச் செய்ய விரும்பியுள்ளார். அவருக்கு முரண்மெய்கள் மிகவும் விருப்பமானவை, ஏகபோகம் நமக்கே அனுகூலமல்ல என்று நிரூபிப்பதற்கு எப்போதும் முன்வந்திருக்கிருர். ஆனல் கோட்பாடுரீதியாக ஏகபோகத்தை ஆதரிக்கும் நபர்கள் எந்த ஒரு பொருளாதாரத் துறை நிர்வாகிகளிடம் இருந்தும் விவரமான தகவல்களைக் கேட்டறியாமலே இதற்கு வாக்களித்திருக்கிருர்கள் என்பது வியப்புக்குரியது.

ஏற்கப்பட்ட முடிவின் உட்பொருள் என்ன?

இறக்குமதி ஏற்றுமதி வாணிகத்துக்காக கொள்முதல் அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய அலு

வலகத்தின் உடைமையாளருக்கு விசேஷமாகப் பட்டியலிடப் பட்ட பொருள்களை மட்டுமே வாங்கவும் விற்கவும் உரிமை யுண்டு.

இதன் மீது கண்காணிப்பு எங்கே? கண்காணிப்புக்கான சாதனங்கள் எங்கே?

ருஷ்யாவில் மென்சணலின் விலை 4 ரூபிள் 50 கோப்பெக்கு கள், பிரிட்டனில் இதன் விலை 14 ரூபிள். வட்டி விகிதங்களும் லாபங்களும் துரிதமாக ஏறும் போது மூலதனம் எவ்வாறு உள்ளுக்குள் மாற்றமடைகிறது மற்றும் மேலும் அதிகத் துணிச்சல் பெறுகிறது என்பதை நாம் எல்லோரும் மூலதனம் நூலில் படித்திருக்கிறோம். மூலதனம் கொடிய இடர்களைத் துணிந்தேற்கும் ஆற்றலுடையது என்பதை நாம் அனைவரும் நினைவு கூருகிறோம். மார்க்ஸ், இதைப் போருக்கு வெகு முன்பே அது தனது ''பாய்ச்சல்களைத்'' தொடங்குவதற்கு முன்னரே கண்டுணர்ந்தார்.

இப்போதைய நிலைமை என்ன? மிகவும் லாபகரமான பேரங்களில் இருந்து விவசாயிகளையும் வாணிகர்களையும் தடுத்து நிறுத்தும் ஆற்றல் படைத்த சக்தி யாது? ருஷ்யாவை மேலாளர்களின் வலைப்பின்னல் கொண்டு மூடி நிரப்புவதா? கொள்முதல் அலுவலகத்தில் அண்டை வாசியைப் பிடித்து, அவரது மென்சணல் நாட்டிலிருந்து கள்ளத்தனமாகக் கடத் தப்படுவதாக விற்பனை செய்யப்பட்டதாக நிரூபிப்பதா?

தோழர் சகோல்னிக்கவின் முரண்மெய்கள் எப்போதும் சூழ்ச்சி நயமுள்ளவை, ஆனால் ஒருவர் முரண்மெய்களுக்கும் கடுமையான உண்மைக்கும் இடையே இனங்காண வேண் டும்.

இத்தகைய பிரச்சினை மீது ''சட்ட சம்மதம்'' என்பது ருஷ்யாவின் நாட்டுப்புறப் பகுதிகளில் முற்றிலும் சாத்தியமே அல்ல. பொதுப்பட கள்ளக் கடத்தலுடன் ஒப்பு நோக்குவது என்பது எந்த வழியிலும் சரியல்ல (''ஆயினும் ஏகபோகம் இருந்த போதிலும் கள்ளக் கடத்தலும் பெருகியே வரு கிறது'' என்று அவர்கள் கூறுகிறார்கள்): எல்லையில் கள்ளக் கடத்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஒரு விஷயம், ''தமக்கு உரியதான'' லாபத்தை,

ஆட்சி அதிகாரிகள் பறிக்க முயலும் போது தம்மைத் தற்காத்துக் கொண்டு போராடும் விவசாயிகள் அனைவரையும் எதிர்த்துச் சமாளிப்பது இன்னொரு விஷயம்.

நமக்கு இப்போதுதான் லட்சக் கணக்கில் வருவாய் கொண்டுவரத் துவங்கியிருக்கும் (இது கோடியும் அதற்கு மேல் அதிகமாயும் அளிக்கும்) ஏகபோக அமைப்பு முறையைச் சோதித்துப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுவதற்கு முன்பாகவே நாம் முழுமையான குழப்பத்தை ஏற்படுத்துகிறோம், இப்போதுதான் நாம் வலுப்படுத்தத் துவங்கியுள்ள அதே ஆதாரத் தூண்களை நாம் ஆட்டிக் குலுக்குகிறோம்.

நாம் ஓர் அமைப்பு முறையைக் கட்டத் துவங்கியுள்ளோம்: அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் ஏகபோகமும் கூட்டுறவுகளும் ஒருங்கே இப்போதுதான் கட்டப்படும் நடைமுறையில் உள்ளன. ஒன்றிரண்டு ஆண்டுகளில் சில பலன்கள் கிட்டப் பெறும். அயல்துறை வாணிகத்தில் இருந்து வரும் லாபம் நூறு சதவிகிதமாக உள்ளது. நாம் லட்சக் கணக்கில் கோடிக் கணக்கில் பணம் பெறத் துவங்கியுள்ளோம். நாம் கலப்புக் கம்பெனிகளை நிர்மாணிக்கத் துவங்கி விட்டோம், அவற்றின் (மிகப்பெரிய) லாபங்களில் பாதியைப் பெறத் தொடங்கி விட்டோம். மிகவும் கணிசமான அரசு லாபங்களைப் பெறுவதற்கான சில அடையாளங்களை நாம் ஏற்கெனவே காண முடியும். இதற்கு ஒப்பான லாபம் எதையும் தர முடியாத சுங்கவரிகளை எதிர்பார்த்து இதை நாம் கைவிடுகிறோம். நாம் எல்லாவற்றையும் கைவிட்டு ஒரு பூதத்தைத் துரத்திக் கொண்டிருக்கிறோம்!

இந்தப் பிரச்சினை பிளீனம் கூட்டத்தில் மெத்த அவசரமாகக் கொண்டுவரப்பட்டது. குறிப்பிடத்தக்க காரியகரமான விவாதம் எதுவும் நடக்கவில்லை. நாம் அவசரப்பட எவ்வித முகாந்தரமும் இல்லை. நமது பொருளாதாரத் துறை நிர்வாகிகள் இப்போதுதான் காரியங்கள் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். வாணிகக் கொள்கை பற்றிய பிரதான பிரச்சினைகள் பற்றி, பொருத்தமான விவரங்களைத் திரட்டாமலும், ஆவணங்கள் மற்றும் புள்ளிவிவரங்களை வைத்து

சாதகபாதகங்களை எடை போட்டுப் பார்க்காமலும் கண்ட கண்டபடி முடிவு செய்யும் போது இந்த விஷயம் பற்றிய சரியான அணுகு முறை எனக் கூறத்தக்க எதையேனும் அடைய முடியுமா? சோர்வடைந்துவிட்ட பேர்கள் சில நிமிஷங்களில் ஓட்டளித்து விடுகிறார்கள், இதோடு எல்லாம் முடிந்து போகிறது. இதை விடக் குறைந்தளவே சிக்கலான அரசியல் பிரச்சினைகளை நாம் மீண்டும் மீண்டும் மதிப்பீடு செய்திருக்கிறோம், ஒரு முடிவை எடுப்பதற்கு அடிக்கடி நமக்குப் பல மாதங்கள் எடுத்துள்ளன.

உடல் நலமின்மை காரணமாக அந்த நாள் கூட்டத்தில் நான் கலந்து கொள்ள முடியாது போனது குறித்தும் இப்போது பொது விதியில் இருந்து ஒரு விலக்கை நாடுவதற்காகவும் நான் மிகவும் வருந்துகிறேன்.

இந்தப் பிரச்சினையை சீர்தூக்கிப் பார்த்து ஆராய வேண்டும், அவசரப்படுவது தீங்கு விளைக்கும் என்று நான் கருதுகிறேன்.

இந்தப் பிரச்சினை மீது முடிவு எடுப்பதை இரண்டு மாதங்களுக்கு, அதாவது அடுத்த பிளீனம் கூட்டம் வரை ஒத்திப் போடலாம் என்று பிரேரேபிக்கிறேன்; இடைக் காலத்தில் நமது வாணிகக் கொள்கையின் அனுபவம் மீதான சேகரிக்கப்பட்ட சரிபார்க்கப்பட்ட ஆவணங்கள் திரட்டப்பட வேண்டும்.

வி. உலியானவ் (லெனின்)

பி. கு. நேற்று ஸ்தாலினுடன் நான் நடத்திய உரையாடலில் (நான் பிளீனம் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை, அங்கு இருந்த தோழர்களிடமிருந்து தகவல் பெற முயன்றேன்) பெத்ரோகிராத் மற்றும் நவரஸ்ஸீய்ஸ்க் துறைமுகங்களைத் தற்காலிகமாகத் திறப்பது பற்றிய யோசனையைப் பற்றி இடையில் பேசினோம். பொருள்களின் மிகவும் வரையறுக்கப்பட்ட பட்டியல் விஷயத்தில் கூட இத்தகைய சோதனைகள் மிகவும் அபாயகரமானவை என்பதாக இரண்டு உதாரணங்களும் காட்டுகின்றன என்று எனக்குத் தோன்றுகிறது. பெத்ரோகிராத் துறைமுகம் திறக்கப்படுவதன் விளை

வாக, பின்லாந்தின் எல்லைகளைத் தாண்டி மிகவும் பேரள வான விகிதத்தில் மென்சணல் கள்ளக் கடத்தல் செய்யப்படு வது முனைப்படையும். கள்ளக் கடத்தலைத் தொழிலாகக் கொண்டவர்களை எதிர்த்துப் போராடுவதற்குப் பதில் நாம் மென்சணல் விளையும் பிராந்தியத்தில் உள்ள விவசாயிகள் எல்லோரையும் எதிர்த்துப் போராட வேண்டி வரும். இந்தப் போராட்டத்தில் நாம் முறியடிக்கப்படுவோம் என்பது கிட் டத்தட்ட உறுதியானது, மீண்டும் சீர்பட முடியாதபடி தோற்கடிக்கப்படுவோம். நவரஸ்ஸீய்ஸ்க் துறைமுகம் திறக் கப்பட்டால் நமது உபரி தானியம் வேகமாக இழப்புக்குள் ளாகும். போருக்குரிய நமது சேமங்கள் மிகவும் சிறியளவில் இருக்கும் ஒரு நேரத்தில் இது எச்சரிக்கையான ஒரு கொள் கையாகுமா? அவற்றை அதிகரிப்பதற்கான முறையான பல நடவடிக்கைகள் மூலம் பலன்களைக் காண்பதற்கான போதிய காலாவகாசம் இல்லாத நிலையில் இது சரியா?

பின்னர், பின்வரும் விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அயல்துறை வாணிக மக்கள் கமிசார கத்தின் ஏகபோகம் ருஷ்யாவுக்குள் ஒரு தங்க ஊற்றைத் தொடங்கி வைத்துள்ளது. இப்போது மட்டுமே இதைக் கணக்கிட முடிந்துள்ளது: ருஷ்யாவுக்கு ஆறு மாதம் வந்த இந்திந்த வியாபாரியின் முதல் பயணம் அவனுக்குச் சுமார் பல நூறுகள் சதவிகித லாபத்தை அளித்துள்ளது என்று சொல்லலாம்; இந்த உரிமையை வாங்குவதற்காக அவன் அயல்துறை வாணிக கமிசாரகத்துக்கு சாதகமாகத் தனது விலையை 25 முதல் 50 சதவிகிதம் அதிகரித்திருக்கிறான். இதற்கும் மேல் இந்த லாபம் பற்றிக் கற்றுத் தெரிந்து கொள்ளவும், இதை அதிகரித்துக் கொள்ளவும் நமக்குச் சாத்தியமாகியுள்ளது. இங்கும் அங்குமாக பல்வேறு துறை முகங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் திறக்கப்படு மானால் எல்லாம் உடனே சரிந்துவிடும், வேலை முழுதும் நின்று விடும், இந்த வகையான ''ஏகபோகத்துக்கு'' எந்த ஒரு வியாபாரியும் ஒரு காசுகூடச் செலுத்த மாட்டான். இது கண் கூடானது. இத்தகைய வருமிடரை ஏற்பதற்கு முன்னால் காரியங்களை நன்றாகச் சிந்தித்து பல தடவை சீர்தூக்கிப்

பார்க்க வேண்டும். இதுவும் தவிர, நாம் சோதனை செய்து பெயர் மூலம் அன்னிய வியாபாரிகள் வர அனுமதிப்பதில் அன்றி, பொதுப்பட குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டோர் அனைவரையும் வர அனுமதிக்கும் அரசியல் அபாயம் இருக்கிறது.

அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தோடு சேர்ந்து, நாம் தங்கத்தின் பெருக்கைப் பற்றிக் கணக்கிடத் துவங்கி விட்டோம். மது வகை ஏகபோகம் தவிர வேறு எந்த ஒரு தீர்வையும் என்னுல் காண முடியவில்லை. ஆனுல் இங்கு மிகவும் கடுமையான தார்மிகக் காரணங்கள் உள்ளன, மற்றும் சகோல்னிக்கவிடமிருந்து காரியகரமான சில ஆட்சேபணைகளும் கூட இருக்கின்றன.

லெனின்

பி. பி. கு. சில பொருளாதாரத் துறை நிர்வாகிகள் ஒத்திப் போடும்படி மனுச் செய்து கொண்டிருப்பதாக இப்போதுதான் *(1-30 மணி)* எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த மனுவை நான் இன்னும் படிக்கவில்லை, ஆனுல் இதை மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன். இது இரண்டு மாதத்திய விவகாரம் மட்டுமே.

லெனின்

நாலாவது ருஷ்யப் பதிப்பின் நூல் திரட்டு, தொகுதி 33ல், 1950ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 45, பக்கங்கள் 220-223

2

தோழர் ஸ்தாலினுக்கு மத்தியக் கமிட்டி பிளீனம் கூட்டத்திற்காக[72]

தோழர் புஹாரினது கடிதத்தை விவாதிப்பது மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகிறேன். ''அது எந்தக் 'கோட்பாடுகளின்' மீது நிறுவப்பட்டிருக்கிறதோ அதன் காரணமாக, அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் திறமையின்மையின் பின்விளைவாக நாட்டின் பொருளாதாரம்

தாங்க வேண்டி நேர்ந்துள்ளதான கணிக்க முடியாத இழப்புக்கள் குறித்து லெனினே அல்லது கிராசினே ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை; விவசாயிகளின் பண்டங்களின் இருப்புக்களைத் திரட்டி சர்வதேச வாணிகத்துக்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு நமக்கு நாமே இயலவில்லை (முற்றும் புரிந்து கொள்ளத்தக்கதான ஏதுக்களால் நீண்ட காலம் நம்மால் இது இயலாது) என்ற காரணத்தால் விளைந்த இழப்புக்கள் குறித்து அவர்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை'' என்று அவரது முதல் குறிப்புக் கூறுகிறது.

அவரது இந்த அறிவிப்பு நிச்சயமாயும் பொய்யாகும். ஏனெனில் தமது 2ஆம் பாராவில் கிராசின் முதலாவதாக, விவசாயிகளின் பண்டங்களின் இருப்புக்களை ஒன்றுதிரட்டவும், இரண்டாவதாக, இந்த ஒன்றுதிரட்டலில் இருந்து சேகரமாகும் லாபத்தில் பாதிக்கும் குறையாத தொகை நமது அரசின் கருவூலத்துக்குக் கிடைக்கவும் உதவும் ஒரு சாதனம் என்ற முறையில் கலப்புக் கம்பெனிகள் உருவாக்கம் பற்றி தெளிவாக விவாதிக்கிறார். இவ்வாறாக, புஹாரின்தான் இந்தப் பிரச்சினையைத் தட்டிக் கழிக்க முயல்கிறார், காரணம் ''விவசாயிகளின் பண்டங்களின் இருப்புக்களை ஒன்றுதிரட்டுவதில் இருந்து'' சேகரமாகும் லாபங்கள் முற்றும் முழுமையாயும் புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் ஏற்பட்ட சிறு முதலாளிகளுக்குப் போகும் என்பதை அவர் காண மறுக்கிறார். நமது அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகம் புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் ஏற்பட்ட சிறு முதலாளிகளின் நலனுக்காகச் செயல்படுமா அல்லது நமது பாட்டாளி வர்க்க அரசின் நலன்களுக்காகச் செயல்படுமா என்பதே இங்குள்ள கேள்வி. இது ஓர் அடிப்படையான பிரச்சினை. இதன் மீது கட்சிக் காங்கிரசில் ஒரு போராட்டம் நடத்தப்பட முடியும், நடத்தப்பட வேண்டும்.

இந்த முதன்மையானதும் அடிப்படையானதுமான கோட்பாட்டுப் பிரச்சினையுடன் ஒப்பிடும் போது அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் திறமையின்மை பற்றிய பிரச்சினை முற்றிலும் சிறுதரமான ஒன்றே. ஏனெனில் இந்தத்

திறமையின்மை நமது எல்லா மக்கள் கமிசாரகங்களின் திற மையின்மையின் இன்றியமையாப் பகுதியே, மற்றும் இதற்குக் காரணம் அவற்றின் பொதுவான சமுதாயக் கட் டமைப்பே, இதை அகற்ற வேண்டுமானல் கல்வியை மேம்படுத்தவும் பொதுவான தரங்களை உயர்த்தவும் பல ஆண்டுக் கால விடாப்பிடியான முயற்சிகள் அவசியமாகும்.

''உதாரணமாக, கிராசினது ஆய்வுரைகளின் 5ஆம் பாராவின் அம்சங்கள் பொதுவான சலுகைகளுக்கு முற்றும் பொருந்தக் கூடியவை'' என்று புஹாரினது ஆய்வுரைகளின் இரண்டாவது அம்சம் கூறுகிறது. இதுவும் பச்சைப் பொய் ஆகும். ஏனெனில் கிராசினது 5ஆம் ஆய்வுரை ''மிகவும் பொல்லாத சுரண்டலாளர், வியாபாரி, கொள்ளைலாபக் காரர் மற்றும் அன்னிய மூலதனத்தின் ஏஜெண்டு, டாலர் கள், பவுண்டுகள் மற்றும் ஸ்வீடிஷ் கிரௌன்களை வைத்து செயல்பட்டு வரும் இவர் நாட்டுப்புற மாவட்டங்களில் செயற்கையாகப் புகுத்தப்படுவார்'' என்று சாற்றுகிறது. சலு கைகள் விஷயத்தில் இந்த வகையான எதுவுமே நடக்காது. இவை பிரதேசத்தை முன்வரை செய்வது மட்டுமன்றி குறிப் பிட்ட பொருள்களை வாணிகம் செய்வதற்கான விசேஷ அனு மதியையும் எதிர்நோக்குகிறது; மேலும் இதில் ஆக முக்கிய மானது இந்தச் சலுகை ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களிலான வாணிகத்தை நாம் கட்டுப்படுத்துகிறோம். அக்டோபர் 6ந் தேதிய பிளீனம் கூட்டத்தின் முடிவின் மூலம் வகுக்கப்பட்டதான வரம்புகளுக்குக் கட்டற்ற வாணிகத்தை நம்மால் அடக்கி வைக்க இயலாது எனவும், கள்ளக் கடத்தலைத் தொழிலாகக் கொண்டவர்களால் மட்டுமன்றி விவசாயி மக்கள் அனைவராலும் கூட கொண்டுவரப்படும் நிர்ப்பந்தமூலம் வாணிகம் நமது கரங்களிலிருந்து பறித்துக் கொள்ளப்படும் எனவும் சாற்றும் கிராசினது வாதத்துக்கு எதிராக ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல்—இந்த அடிப் படையான பொருளாதார மற்றும் வர்க்க வாதத்திற்கு விடையாக ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல்—புஹாரின் கிராசினுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை வாரி வீசுகிறார். இவை வியப்பூட்டும் வகையில் ஆதாரமற்றவை.

தமது கடிதத்தின் மூன்ருவது குறிப்பில் புஹாரின் ''கிராசினது ஆய்வுரைகளின் 3ஆவது பாரா'' என எழுதுகிருர். (4ஆவது பாராவுக்குப் பதிலாக அவர் தவருக 3ஆவது பாராவைக் குறிப்பிடுகிருர்.) ''நாம் நமது எல்லேகளேக் கட்டிக்காத்து வருகிருேம்'' மற்றும் அவர் கேட்கிருர்: ''இதன் பொருள் என்ன? உண்மையில் இதன் பொருள் நாம் ஒன்றுமே செய்யவில்லே என்பதே. இது துல்லியமாயும் ஒரு பகட்டான காட்சிப் பலகணியைக் கொண்ட, ஆனுல் அதன் படித்தட்டுகளில் எவ்விதச் சரக்கும் இல்லாத ஒரு கடை போன்றதாகும் ('கடைகளே மூடும் அமைப்பு முறை')''. நமது எல்லேகளே அயல்துறை வாணிகத்திலான ஏகபோகத்தின் வழியில் போன்று, அந்தளவுக்கு அதிகமாக சுங்கவரிகள் மற்றும் எல்லேக் காவலர் மூலம் கட்டிக்காக்கவில்லே என்று கிராசின் மிகவும் திட்டவட்டமாகக் கூறுகிருர். இந்தக் கண்கூடான, நேர்படியான, மறுக்க முடியாத மெய்விவரத்தை மறுத்து ஒரு வார்த்தை கூடச் சொல்வதில்லே புஹாரின், அவரால் அவ்வாறு செய்யவும் முடியாது. ''கடைகளே மூடும் அமைப்பு முறை'' பற்றிய அவரது ஏளனமான குறிப்பு மார்க்ஸ் தமது காலத்தில் ''கட்டற்ற வாணிகரின் கொச்சைத்தனம்''[73] எனும் தொடர் கொண்டு பதிலடி கொடுத்த தொடர்களின் வகை இனத்தைச் சேர்ந்ததாகும். ஏனெனில், இது முற்றிலும் கொச்சையான கட்டற்ற வாணிகரின் ஒரு கவர்ச்சித் தொடர் தவிர வேறு எதுவுமல்ல.

இதற்கும் மேல் தமது நாலாவது குறிப்பில் புஹாரின் நாம் நமது சுங்கவரி அமைப்பு முறையை மேம்படுத்த வேண்டும் என்பதை கிராசின் உணரத் தவறி விட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டுகிருர். அதே சமயம், ஏற்றுமதி இறக்குமதி தளங்கள் மட்டுமே விவாதத்தின் கீழ் இருக்கும் விஷயமாக இருப்பதன் காரணமாக நாடு முழுவதும் மேற்பார்வையாளர்களே வைத்திருப்பது பற்றிப் பேசுவதில் நான் தவறு செய்கிறேன் என்றும் அவர் கூறுகிருர். இங்கும் கூட புஹாரினது ஆட்சேபணேகள் வியப்பூட்டும் வகையில் சிந்தனேயற்றவை மற்றும் முற்றிலும் இந்த விஷயத்துக்கு புறம்பானவை. ஏனெனில் நாம் நமது சுங்கவரி அமைப்பு

முறையை மேம்படுத்த வேண்டும் என்று கிராசின் உணர்கிருர் என்பது மட்டுமல்ல, ஏற்றுக் கொள்கிருர் என்பது மட்டுமல்ல, அதோடு எள்ளளவும் சந்தேகத்துக்குஇடமில்லாத வகையில் அவ்வாறு திட்டவட்டமாகக் கூறவும் செய்கிருர். அதாவது, இந்த மேம்பாட்டு நடவடிக்கையில், முதலாவதாக நாம் அயல்துறை வாணிகத்தில் ஏகபோகத்தை அங்கீகரிப்பதும், இரண்டாவதாக கலப்புக் கம்பெனிகளை நிறுவுவதும் அடங்கும்.

ஒட்டாண்டி நாடுகளுக்கும் அளப்பரிய செல்வம் படைத்த நாடுகளுக்கும் இடையே கோரமான முரண்பாடுகள் இருக்கும் போது, ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்தில் எந்த ஒரு சுங்கவரி அமைப்பு முறையும் திறனுள்ளதாக இருக்காது என்பதை புஹாரின் காண்பதில்லை—இது அவரது மிகவும் வியப்பூட்டும் பிழையாகும், முற்றிலும் தத்துவார்த்த வகைப்பட்ட ஒரு பிழையாகும். சுட்டப்படும் புற நிகழ்ச்சிகளின் கீழ், செல்வந்த தொழில்வள நாடுகள் எதுவும் இத்தகைய சுங்கவரித் தடைகளை முழுமையாகத் தகர்த்துவிட முடியும் என்பதை உணர்ந்து கொள்ளத் தவறும் புஹாரின் பல தடவைகள் சுங்கவரித் தடைகளைப் பற்றிக் குறிப்பிடுகிருர். இதைச் செய்வதற்கு அது, நாம் உயர் இறக்குமதித் தீர்வைகள் விதித்துள்ளதான பொருள்களை ருஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதற்கான ஓர் ஏற்றுமதி பணக்கொடையினைக் கொண்டுவந்தாலே போதும். எல்லாத் தொழில்வள நாடுகளும் இந்த நோக்கத்திற்காக தேவைக்கும் அதிகமாகவே பணம் வைத்திருக்கின்றன. இத்தகைய ஒரு நடவடிக்கை மூலம் அவற்றுள் ஏதேனும் ஒன்று நமது உள்நாட்டுத் தொழில் துறையினை எளிதில் நாசமாக்கிவிட முடியும்.

இதன் பின்விளைவாக, சுங்கவரி அமைப்பு முறை பற்றிய புஹாரினின் வாதங்கள் யாவும் நடைமுறையில் ருஷ்யாவின் தொழில் துறையை முற்றும் பாதுகாப்பற்றதாக விட்டுவிட மட்டுமே செய்யும் மற்றும் மிகவும் அற்பமான சாக்குப் போக்கின் கீழ் கட்டற்ற வாணிகத்தை ஏற்பதற்கே இட்டுச் செல்லும். நாம் நமது சர்வ வல்லமை கொண்டும் இதைக்

கட்டாயம் எதிர்த்தாக வேண்டும், ஒரு கட்சிக் காங்கிரஸ் வரை நேரடியாக நமது எதிர்ப்பைக் கொண்டு செல்ல வேண்டும். ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் இன்றைய சகாப்தத்தில் கருதிப் பார்க்கும் தகுதியுள்ள ஒரே பாதுகாப்பு அமைப்பு முறை அயல்துறை வாணிகத்திலான ஏகபோகம் ஆகும்.

புழக்கத்தை அதிகரிப்பதன் முழு முக்கியத்துவத்தை கிராசின் அறிந்தேற்றுக் கொள்ளத் தவறுகிறார் எனும் புஹாரினது குற்றச்சாட்டு (அவரது ஐந்தாம் குறிப்பில் உள்ளது) கலப்புக் கம்பெனிகள் பற்றி கிராசின் கூறும் கருத்தால் அற முழுமையாயும் மறுதலிக்கப்படுகிறது. காரணம் இந்தக் கலப்புக் கம்பெனிகளுக்குப் புழக்கத்தை அதிகரிப்பது மற்றும் சுங்கவரித் தடைகளின் கற்பனையான பாதுகாப்புப் போலல்லாமல், நமது ருஷ்யன் தொழில் துறைக்கு மெய்யான பாதுகாப்பை வழங்குவது எனும் குறிக்கோள் தவிர வேறு எதுவும் கிடையாது.

மேலும் தமது ஆறுவது குறிப்பில் புஹாரின் எனக்குப் பதில் தரும் முறையில, விவசாயி லாபகரமான வர்த்தக பேரங்களில் இறங்குவான் எனும், இந்தப் போராட்டம் விவசாயிக்கும் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் இடையில் அல்ல மாறாக சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் ஏற்றுமதியாளனுக்கும் இடையே தொடரும் எனும் மெய் நடப்புக்குத் தாம் எவ்வித முக்கியத்துவமும் அளிக்கவில்லை என்பதாக அவர் எழுதுகிறார். இங்கும் கூட அவர் முற்ற முழுமையாயும் தவறு செய்கிறார். காரணம் நான் உதாரணமாகச் சுட்டிக் காட்டியுள்ள விலைகளிலான வித்தியாசத்தை வைத்துக் கொண்டு (ருஷ்யாவில் மென்சணலின் விலை 4 ரூபிள் 50 கோப்பெக்குகளாக இருக்க அதே போதில் பிரிட்டனில் இது 14 ரூபிளாக உள்ளது) ஏற்றுமதியாளன் மிகவும் துரிதமான, சரியான மற்றும் மிகவும் நிச்சயமான முறையில் விவசாயிகள் எல்லோரையும் தன்னைச் சுற்றிலும் ஒன்று திரட்டிவிட இயலும். நடைமுறையில் புஹாரின் கொள்ளை லாபக்காரர், குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டவர் மற்றும் விவசாயிகளின் உயர் அடுக்கினருக்கு ஆதரவாளராக தொழில் துறைப் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகச்

செயல்படுகிருர். இந்தப் பாட்டாளி வர்க்கத்துக்கு, சுங்க வரி அமைப்பு முறை அல்ல மாருக குறிப்பாக அயல்துறை வாணிக ஏகபோகத்தின் பாதுகாப்புக் கிடைத்தால் அன்றி, அது தனது சொந்தத் தொழில் துறையைக் கட்டுவது என்பதும் ருஷ்யாவை ஒரு தொழில்வள நாடாக மாற்றுவது என்பதும் முற்றும் இயலாத காரியம். ருஷ்யாவில் இப்போது மேலோங்கி நிற்கும் நிலைமைகளை வைத்துப் பார்க்கும் போது வேறு எந்த வடிவிலான பாதுகாப்பும் அறவே கற்பனை யானது; இது வெறும் காகிதப் பாதுகாப்பாகவே இருக்கும்; இதனிடமிருந்து பாட்டாளி வர்க்கம் எவ்வித நன்மையையும் அடையாது. எனவே பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் தொழில் துறையின் கருத்துக் கோணத்தில் இருந்து பார்த்தால் இன்றைய போராட்டம் மிகவும் அடிப்படைக் கோட்பாடுகளைச் சுற்றி நடப்பது தெரிய வரும். அயல்துறை வாணிக மக்கள் கமிசாரகத்தின் குறைபாடுள்ள இயந்திரத்தை மேம்படுத்துவதற்கு உண்மையில் செயல் திட்பம் வாய்ந்த ஒரே அமைப்பு முறை கலப்புக் கம்பெனிகள் அமைப்பு முறையே. ஏனெனில், இந்த அமைப்பு முறையின் கீழ் அயல் நாட்டு மற்றும் ருஷ்யாவின் வியாபாரிகள் அக்கம் பக்கமாகச் செயல் புரிந்து வருவார்கள். இத்தகைய புற நிகழ்ச்சிகளின் கீழும் கூட நாம் இந்த வாணிக அலுவலை படித்தறிந்து, தீர்க்கமாகப் படித்தறிந்து, முழுமையாகப் படித்தறிந்து கொள்ளத் தவறுவோமானல், நமது தேசம் முற்றிலும் கவைக்குதவாத முட்டாள்களின் தேசம் என்பது நிரூபணமாகும்.

''சுங்கவரித் தடைகள்'' பற்றிப் பேசுவது மூலம் நாம், கிராசின் முற்றும் தெளிவாகச் சுட்டிக் காட்டியதும், புஹாரின் சிறிதளவு கூட மறுத்து நிரூபிக்கத் தவறி விட்டதுமான அபாயங்களை நம்மிடமிருந்து மறைத்து வைக்க மட்டுமே செயல்பட்டவர்களாவோம்.

எல்லைகளை ஓரளவுக்குத் திறந்து விடுவதென்பது படு மோசமான செலாவணி அபாயங்களை விளைப்பதாகும்— காரணம் நடைமுறையில் நாம் ஜெர்மனியின் நிலைக்குத் தாழ்த்தப்படுவோம்; குட்டிமுதலாளித்துவ வகைப்பட்

டோரும் ருஷ்யாவில் இருந்து நாடு கடந்து வாழ்வோரின் எல்லா வகையான ஏஜெண்டுகளும் ருஷ்யாவுக்குள் ஊடுருவுவதோடு அவர்கள் மீது கண்காணிப்பை அமுலாக்கும் சாத்தியப்பாடு அறவே இருக்காத ஒரு படுமோசமான அபாயம் ஏற்படும்.

காரியகரமானதும் நீடித்ததுமான தனிப் பயிற்சி பெறுவதற்கான ஒரு சாதனம் என்ற முறையில் கலப்புக் கம்பெனிகளைப் பயன்படுத்துவது என்பது நமது தொழில் துறையை மீட்டமைப்பதற்கு உரியதான ஒரே பாதையாகும்.

லெனின்

டிசம்பர் 13, 1922ல்
தொலை பேசி மூலம் எழுதக் கூறியது

புரொலித்தார்ஸ்கயா ரெவலூத்சியா சஞ்சிகையின் இதழ் 2—3ல், 1930ல் முதலில் முழுமையாக வெளியிடப் பட்டது

நூல் திரட்டு, தொகுதி 45, பக்கங்கள் 333-337

கம்யூனிஸ்டு அகிலத்தின் நாலாவது காங்கிரஸ்[74]

நவம்பர் 5—டிசம்பர் 5, 1922

ருஷ்யப் புரட்சியின் ஐந்தாண்டுகளும் உலகப் புரட்சிக்கான சாத்தியக்கூறுகளும்

கம்யூனிஸ்டு அகிலத்தின்
நாலாவது காங்கிரசுக்கு அறிக்கை
நவம்பர் 13, 1922

(தோழர் லெனின் ஆரவாரமான நீண்ட கரவொலியாலும் பொதுவான மகிழ்ச்சி முழக்கங்களாலும் வரவேற்கப் படுகிறார். எல்லோரும் எழுந்து ''இன்டர்நேஷனல்'' கீதத்தைச் சேர்ந்து பாடுகின்றனர்.) தோழர்களே! என்னைப் பிரதானப் பேச்சாளராகப் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள், ஆனால் எனது நீடித்த உடல்நலமின்மைக்குப் பிறகு ஒரு நீண்ட அறிக்கையை சமர்ப்பிக்க என்னால் இயலாது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். முக்கியமான பிரச்சினைகள் குறித்து ஒரு சில அறிமுகக் கருத்துக்களை மட்டுமே நான் கூற முடியும். எனது கருப்பொருள் மிகவும் வரம்புக்குட்பட்டதாக இருக்கும். ''ருஷ்யப் புரட்சியின் ஐந்தாண்டுகளும் உலகப் புரட்சிக்கான சாத்தியக்கூறுகளும்'' எனும் கருப்பொருள் ஒரு பேச்சாளர் ஓர் உரையில் முழுமை செய்ய இயலாத மிகவும் விரிவான, மிகவும் பெரிதான ஒன்று. இதனால்தான் நான் இந்தக் கருப்பொருளில் ஒரு சிறிய பகுதியை, அதாவது, ''புதிய பொருளாதாரக் கொள்கையைப்'' பற்றிய பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். இப்போது எது ஆக முக்கியமான விஷயமாக இருக்கிறதோ அதை உங்

களுக்குப் பரிச்சயப்படுத்தும் பொருட்டு வேண்டுமென்றே இந்தச் சிறு பகுதியை மட்டும் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்—எப்படி இருந்தாலும் அது குறித்து நான் இப்போது ஆராய்ந்து வருவது காரணமாக, இந்த விஷயம் எனக்கு மிகவும் முக்கியமானது.

எனவே, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை நாம் எப்படித் தொடங்கினோம், இந்தக் கொள்கையின் துணைகொண்டு என்ன பலன்களை நாம் அடைந்தோம் என்பது குறித்து நான் உங்களுக்குக் கூறுவேன். இந்த விஷயத்தோடு நான் அமைந்து விடுவேனாகில், உங்களுக்கு அது குறித்த ஒரு பொது மதிப்பாய்வையும் ஒரு பொதுவான கருத்தையும் வழங்குவதில் நான் வெற்றியடையலாம்.

இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையை நாம் எவ்வாறு வந்தடைந்தோம் என்பதை விளக்க நான் *1918*ல் எழுதிய ஒரு கட்டுரையில் இருந்து மேற்கோள் தர வேண்டும்.* *1918* துவக்கத்தில் ஒரு சுருக்கமான விவாதக் கட்டுரையில் அரசு முதலாளித்துவத்தின் பால் நாம் ஏற்க வேண்டிய தோரணை பற்றிய பிரச்சினையை நான் எடுத்துரைத்தேன். நான் அப்போது எழுதினேன்:

''நமது சோவியத் குடியரசில் உள்ள இன்றைய நிலவரங்களுடன் (அதாவது, அந்த சமயம் இருந்த நிலவரங்களுடன்) ஒப்பிடும் போது அரசு முதலாளித்துவம் ஒரு முன்னேற்றப் படியாக விளங்குவது திண்ணம். குத்துமதிப்பாய் ஆறுமாத காலத்தில் அரசு முதலாளித்துவம் நமது குடியரசில் நிலைநாட்டப்படுமானால், அது ஒரு மாபெரும் வெற்றியாக இருக்கும், மற்றும் நமது நாட்டில் ஓர் ஆண்டுக்குள் சோஷலிசம் நிரந்தரமாக உறுதியான இடத்தைப் பெற்று வெல்லற்கரியதாக விளங்குவதை நிச்சயமாக உத்தரவாதம் செய்யும்.''**

நாம் இப்போது இருப்பதை விட அதிக முட்டாள்களாக,

---

* இப்பதிப்பின் தொகுதி 8, பக்கங்கள் 123—171 பார்க்க.—ப-ர்.

** இப்பதிப்பின் தொகுதி 8, பக்கம் 139 பார்க்க.—ப-ர்.

ஆனல் இத்தகைய விவகாரங்களை எடுத்துக் கவனிக்க இய லாத அளவுக்கு முட்டாள்களாக இருக்காத ஒரு சமயத்தில் இது கூறப்பட்டது என்பது மெய்யே.

இவ்வாருக 1918ல், சோவியத் குடியரசில் அன்று நடப் பில் இருந்த பொருளாதார நிலைமையைப் பொருத்த வரை, அரசு முதலாளித்துவம் நிச்சயமாயும் ஒரு முன்னேற்றப் படியே என்று நான் கருதினேன். இது மிகவும் விந்தையாயும் ஒருவேளை அபத்தமாயும் கூடத் தொனிக்கிறது, காரணம் அந்த நேரத்தில் நமது குடியரசு ஏற்கெனவே ஒரு சோஷ லிஸ்டுக் குடியரசாக இருந்தது; மற்றும் நாம் ஒவ்வொரு நாளும் மிகவும் அவசரமாக—ஒருவேளை மிகையான அவசரத் துடன்—பல்வேறு புதிய பொருளாதார நடவடிக்கைகளைக் கையாண்டு வந்தோம்—இவற்றை சோஷலிஸ்டு நடவடிக் கைகள் என்றல்லாது வேறு எதாகவும் சித்திரிக்க முடியாது. இருந்த போதிலும் சோவியத் குடியரசில் அன்று நடப்பில் இருந்த பொருளாதார நிலைமையுடன் பொருத்திப் பார்க்கும் போது அரசு முதலாளித்துவம் ஒரு முன்னேற்றப் படியாக இருக்கும் என்ற கருத்தை நான் கொண்டிருந்தேன், அதோடு ருஷ்யாவின் பொருளாதார அமைப்பு முறையின் கூறுகளை நேரிடையாக கணக்கிடுவது மூலம் நான் எனது கருத்தை மேலும் விளக்கினேன். எனது கருத்துப்படி இந்தக் கூறுகள் பின்வருவனவாகும்: *''1) தந்தை வழி, அதாவது, மிகவும் புராதன வடிவிலான விவசாயம்; 2) சிறுதர பண்ட உற்பத்தி (இதில் தானிய வாணிகம் நடத்தும் பெரும்பான்மை விவ சாயிகள் உட்படுவர்); 3) தனியார் முதலாளித்துவம்; 4) அரசு முதலாளித்துவம், மற்றும் 5) சோஷலிசம்.''** இந்தப் பொருளாதாரக் கூறுகள் யாவும் அந்த நேரத்தில் ருஷ்யா வில் இருந்தன. இந்தக் கூறுகள் ஒன்றுக்கொன்று கொண் டிருந்த உறவு குறித்தும், சோஷலிஸ்டல்லாத ஒரு கூறுன, அதாவது, அரசு முதலாளித்துவம் சோஷலிசத்தைக் காட்டி லும் உயர்வாக மதிக்கப்படக் கூடியதா இல்லையா என்பதைக் குறித்தும் விளக்கம் தரும் பணியை எனக்கு நானே வகுத்துக்

* இப்பதிப்பின் தொகுதி 8, பக்கம் 141 பார்க்க.—ப-ர்.

கொண்டேன். மீண்டும் சொல்கிறேன்: தன்னைத் தானே ஒரு சோஷலிஸ்டு குடியரசு என்று சாற்றிக் கொள்ளும் ஒரு குடியரசில் ஒரு சோஷலிஸ்டல்லாத கூறு சோஷலிசத்தை விடவும் உயர்வாக மதிக்கப்படுவது, மேலானதாகக் கருதப்படுவது எல்லோருக்கும் மிகவும் விந்தையாகத் தோன்றலாம். ஆனால், நாம் ருஷ்யாவின் பொருளாதார அமைப்பு முறையை ஒரு படித்தான மற்றும் உயர் வளர்ச்சியடைந்த சிலவாக நாம் திட்டவட்டமாயும் கருதவில்லை என்பதை நீங்கள் நினைவு கூர்வீர்களானால் இந்த மெய்விவரம் தெளிவாகப் புலப்படக் கூடும்; ருஷ்யாவில் நம் வசம் தந்தை வழி விவசாயம், அதாவது மிகவும் புராதனமான வடிவிலான விவசாயம், சோஷலிஸ்டு வடிவத்துடன் அக்கம் பக்கமாகவே இருந்து வந்தது என்பதை நாம் முற்றாக அறிவோம். இந்தப் புற நிகழ்வுகளில் அரசு முதலாளித்துவம் என்ன பாத்திரம் வகிக்க முடியும்?

இந்தக் கூறுகளில் எது பேராதிக்கம் செலுத்தியது? என்று பின்னர் என்னை நானே கேட்டுக் கொண்டேன். ஒரு குட்டிமுதலாளித்துவச் சுற்றுச் சூழலில் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட கூறு பேராதிக்கம் செலுத்தும் என்பது வெள்ளிடைமலை. குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட கூறு பேராதிக்கம் செலுத்தியது என்று நான் அப்போது உணர்ந்தேன்; வேறு ஒரு கருத்தை மேற்கொள்வது சாத்தியமல்ல. அப்போது என்னை நானே கேட்டுக் கொண்ட கேள்வி—இது பிரத்தியேகமான ஒரு வாக்குவாதம் சம்பந்தப்பட்டது, இன்றைய பிரச்சினையுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாதது யாதெனில்: அரசு முதலாளித்துவத்தின் பால் நமது தோரணை என்ன? மற்றும் நான் பதிலளித்தேன்: அது சோஷலிஸ்டு வடிவம் அல்ல என்ற போதிலும் அரசு முதலாளித்துவம் நமக்கும் ருஷ்யாவுக்கும் இப்போது நிலவும் ஒன்றைக் காட்டிலும் அதிக சாதகமான வடிவம். இது எதைக் காட்டுகிறது? நாம் ஏற்கெனவே சமுதாயப் புரட்சியை நிறைவேற்றி முடித்துவிட்ட போதிலும் சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கூறுகளையோ அல்லது கோட்பாடுகளையோ நாம் மிகையாக மதிப்பிடவில்லை

என்பதையே இது காட்டுகிறது. இதற்கு மாருக, நாம் முத லில் அரசு முதலாளித்துவத்தை வந்தடைந்து, அதற்குப் பிறகு மட்டுமே சோஷலிசத்தை வந்தடைவோமாஞல் அது நல்லது என்பதை அந்த நேரத்தில் நாம் ஏற்கெனவே ஓரள வுக்கு உணர்ந்திருந்தோம்.

இதை நான் விசேஷமாக வலியுறுத்த வேண்டும் காரணம் முதலாவதாக இன்றைய பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை விளக்கவும், இரண்டாவதாக கம்யூனிஸ்டு அகிலத் திற்குரிய மிகவும் முக்கியமான நடைமுறை முடிவுகளுக்கு வருவதற்கும் நாம் மேற்கொள்ளக் கூடிய ஒரே பிரிநிலை இதுவே என்று நான் கருதுகிறேன். அன்று நம் வசம் பின் வாங்குவதற்கான முன்னேற்பாடான திட்டம் இருந்தது என் பதாக நான் அபிப்பிராயம் கூற விரும்பவில்லை. அவ்வாறு எது வும் இருக்கவில்லை. ஒரு விவாதக் கட்டுரையில் முன்வைக்கப் பட்டதான இந்தச் சுருக்கமான வாசகங்கள் அப்போது எவ்வழியிலும் பின்வாங்குவதற்குரிய ஒரு திட்டம் ஆக மாட்டா. உதாரணமாக, அரசு முதலாளித்துவத்துக்கு அடிப்படையான உட்பொருளுடைய வாணிகம் செய்யும் சுதந்திரம் எனும் அந்த வெகு முக்கியமான அம்சம் பற்றி அவை எவ்விதத்திலும் குறிப்பிடவில்லை. இருப்பினும் அவற் றில் ஒரு பொதுவான, திட்டவட்டமற்றது எனினும் கூட, பின்வாங்குதல் பற்றிய ஒரு கருத்து இடம் பெற்றிருந்தது. தனது பொருளாதார அமைப்பு முறை சென்ற காலத்திலும் மற்றும் இன்று வரையும் கூட மிகவும் பின்தங்கிக் கிடக்கும் ஒரு நாட்டின் கருத்து நிலையில் இருந்து மட்டுமன்றி, கம்யூ னிஸ்டு அகிலம் மற்றும் முன்னேறிய மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நோக்குநிலையில் இருந்தும் கூட, இதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கருது கிறேன். உதாரணமாக, இப்போதுதான் நாம் ஒரு வேலைத் திட்டத்தை உருவரை செய்வதில் ஈடுபட்டிருக்கிருேம். எல்லா வேலைத்திட்டங்களையும் பற்றி ஒரு பொதுவான விவாதத்தை மட்டும் நடத்துவது, இப்படிச் சொல்லலா மென்ருல் முதல் வாசகத்தைத் தயாரிப்பது, மற்றும் அவற்றை அச்சடிப்பது, ஆனுல் இப்போது இந்த ஆண்டில்

இறுதி முடிவு எடுக்காதிருப்பது மிகவும் நல்லது என்று சொந்த முறையில் நான் கருதுகிறேன். ஏன்? காரணம், முதன் முதலாக நாம் இவை எல்லாவற்றையும் போதுமான அளவு விவரமாக சிந்தித்துப் பார்த்தோம் என்று நான் கருத வில்லை, மற்றும் நடக்கக் கூடியதான பின்வாங்குதல் பற்றியும் மற்றும் அதற்கான தயாரிப்புகள் குறித்தும் நாம் கிஞ்சிற்றும் எண்ணிப்பார்க்கவில்லை. எனினும் இது, முதலாளித்துவத்தை வீழ்த்துவது, அதன் பேரளவான இடர்ப்பாடுகளுடன் கூடவே சோஷலிசத்தை நிர்மாணிப்பது என்பதான உலகில் ஏற்பட்ட இத்தகைய அடிப்படையான மாற்றங்கள் காரணமாக இந்தப் பிரச்சினை மீது நாம் கவனம் செலுத்துவது பரம அவசியமாகும். நாம் நேரடியாக எதிர்த்தாக்குதலுக்குக் கடந்து சென்று வெற்றி வாகை சூடும் போது எப்படிச் செயல்படுவது என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது. புரட்சிகர கட்டங்களில் இது அவ்வளவு கஷ்டமானதல்ல, அவ்வளவு முக்கியமானதல்ல; குறைந்தபட்சம் இது ஆகத் தீர்மானகரமான காரியம் அல்ல. எதிராளி குழப்பமடையும் நேரங்கள் புரட்சியில் எப்போதும் உண்டு, அத்தகைய நேரத்தில் நாம் அவனைத் தாக்குவோமானுல் நாம் எளிதில் வெற்றி பெறலாம். ஆனுல் இது அற்பமானது, காரணம் அவனிடம் போதிய தாங்கும் ஆற்றல் இருக்குமானுல் அவன் தனது சக்திகளை முன்கூட்டியே திரட்டுதல் போன்றவற்றைச் செய்ய முடியும். தன்னைத் தாக்கும்படி எளிதில் ஆத்திரமூட்டவும் பிறகு நம்மைப் பல ஆண்டுகளுக்குப் பின்னுல் தள்ளவும் அவனுல் முடியும். இந்தக் காரணத்தால், பின்வாங்குதல் சாத்தியம் என்பதறிந்து நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமானது, இது தத்துவார்த்த நோக்குநிலையில் இருந்து மட்டுமல்ல என்று நான் கருதுகிறேன். நடைமுறை நோக்குநிலையில் இருந்தும் முதலாளித்துவத்தை எதிர்த்து அண்மை எதிர்காலத்தில் நேரடித் தாக்குதல் தொடுக்கத் தயாராகி வரும் எல்லாக் கட்சிகளும் பின்வாங்குதல் சாத்தியம் என்பதறிந்து அதற்கான தயாரிப்புகள் செய்யும் பிரச்சினை பற்றி இப்போது சிந்தனை செலுத்த வேண்டும். நமது புரட்சியின்

அனுபவம் வழங்கும் எல்லா இதரப் படிப்பினைகளுடன் சேர்த்து இந்தப் படிப்பினையையும் பயில்வதால் நமக்கு எந்தத் தீமையும் ஏற்படாது என்று நான் கருதுகிறேன். மாருக இது பல காரியங்களில் அனுகூலமானதாக இருக்கும்.

1918 துவக்கத்திலேயே நாம் அரசு முதலாளித்துவத்தை ஒரு சாத்தியமான பின்வாங்கல் கொள்கை என்பதாகக் கருதினேம் எனும் மெய்விவரத்தை நான் வலியுறுத்தி விட்டதால், இப்போது நான் நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகள் பற்றி விளக்க முயல்வேன். நான் மீண்டும் கூறுகிறேன்: அந்த சமயத்தில் அது இன்னமும் ஒரு மிகவும் தெளிவற்றதான கருத்தாகவே இருந்தது, ஆனுல் 1921ல் உள்நாட்டுப் போரின் ஆக முக்கியமான கட்டத்தை நாம் கடந்து சென்ற பின்னர் மற்றும் இதை வெற்றிகரமாகக் கடந்து சென்ற பின் நாம் சோவியத் ருஷ்யாவில் ஒரு மோசமான—ஆக மோசமான என்று நான் கருதுகிறேன்—உள்நாட்டு அரசியல் நெருக்கடியின் தாக்கத்தை நாம் உணர்ந்தோம். இந்த உள்நாட்டு நெருக்கடி விவசாயிகளில் கணிசமான பகுதியினரிடை மட்டுமன்றி தொழிலாளர்கள் மத்தியிலும் கூட அதிருப்தி நிலவுவதை வெளிப்படுத்தியது. பேரளவான விவசாயி மக்கள் திரளினர் மத்தியில் உணர்வு பூர்வமாக அல்ல மாருக அகத் தூண்டலால் நமக்கு எதிரான உணர்வு பெருக்கெடுத்தது சோவியத் ருஷ்யாவின் வரலாற்றிலேயே முதல் தடவையாகும், இதுவே கடைசித் தடவையும் என்று நான் நம்புகிறேன். இந்தத் தனியியல்பான, நம்மைப் பொருத்தவரை நிச்சயமாயும் மிகவும் விரசமான நிலைமைக்குக் காரணம் என்ன? நமது பொருளாதார எதிர்த்தாக்குதலில் நாம் அளவுக்கு மேல் முன்னே சென்று விட்டோம் என்பதும், நமக்கு நாமே போதுமான வள ஆதாரங்களுக்கு வகை செய்து கொள்ளவில்லை என்பதும், எதை நாம் அன்று உணர்வு பூர்வமாக வகைப்படுத்தி முன்னவைக்க இயலாது போனதோ, எதைப் பின்னுல் விரைவில் சில வாரங்களுக்குப் பிறகு நாமே ஒப்புக் கொண்டோமோ அதை—அதாவது, முற்றிலும் சோஷலிஸ்டு வடிவங்களுக்கு, முற்றிலும் சோஷலிஸ்டு வினியோகத்துக்கு நேரடியாக

மாறிச் செல்வது நம் வசம் இருக்கக் கூடிய வலிமைக்கு அப்பாற்பட்டது எனவும், நாம் எளிதான பணிகளின் அளவோடு நின்றுவிட வகை செய்யும் முறையில் நாம் ஒரு பின்வாங்கலைச் செயல்படுத்த இயலாத பட்சம் நாம் ஒரு பேரழிவை எதிரிட நேரும் எனவும் உள்ள நடப்பினை—மக்கள் திரளினர் உணர்ந்திருந்தார்கள் என்பதும் இதற்கான காரணமாகும். இந்த நெருக்கடி 1921 பிப்ரவரியில் ஆரம்பமாயிற்று என்று நினைக்கிறேன். அந்த ஆண்டு வசந்தத்தில், புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொள்வதென்று நாம் ஒருமுகமாக முடிவு செய்தோம். இந்த விஷயத்தில் நம் மத்தியில் கணிசமான வேறுபாடு எதையும் நான் காணவில்லை. இப்போது, பதினெட்டு மாதங்கள் கடந்த பின்பு, 1922ன் இறுதியில் நாம் ஒரு சில ஒப்புநோக்குகளைச் செய்ய முடிகிறது. என்ன நிகழ்ந்தது? இநதப் பதினெட்டு மாதங்களுக்கும் அதிகமான இந்தக் கட்டத்தில் நாம் எவ்வாறு செயல் புரிந்துள்ளோம்? இதன் விளைவு என்ன? இந்தப் பின்வாங்குதல் நமக்கு ஏதேனும் அனுகூலத்தைத் தந்திருக்கிறதா? இது உண்மையில் நம்மைக் காப்பற்றியுள்ளதா அல்லது இதன் விளைவு இன்னும் தெளிவாகவில்லையா? என்னை நானே கேட்டுக் கொண்ட பிரதானக் கேள்வி இதுவே. இந்தப் பிரதானக் கேள்வி எல்லாக் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் முதல்தரமான முக்கியத்துவம் உடையது என்றும் நான் கருதுகிறேன். காரணம் இதற்கான விடை எதிர்மறையில் இருக்குமானல் நம் அனைவர் பாடும் அதோ கதிதான். நாம் எல்லோரும் தெளிந்த மனச்சாட்சியுடன் இந்தக் கேள்விக்கு ஆம் எனும் உடன்பாடான பதிலை—அதாவது, கடந்த பதினெட்டு மாதங்கள் நாம் இந்தச் சோதனையில் சித்தி பெற்றுவிட்டோம் என்பதற்கான நேரடியான, முற்ற முழுமையான நிரூபணத்தை வழங்குகின்றன எனும் பதிலை—தர முடியும்.

இப்போது நான் இதை நிரூபித்துக் காட்ட முயல்கிறேன். இதைச் செய்வதற்கு நமது பொருளாதாரத்தின் ஆக்கக்கூறன எல்லாப் பகுதிகளையும் சுருக்கமாக விவரிக்க வேண்டும்.

முதன்முதலாக நான் நமது நிதி அமைப்பு முறை மற்றும் நமது புகழார்ந்த ருஷ்யன் ரூபிள் பற்றி விளக்குகிறேன். புழக்

கத்திலுள்ள அவற்றின் தொகை இப்போது ஒரு குவாட்ரில் லியனே விஞ்சி விட்டது என்ற காரணத்தால் மட்டுமே ருஷ்யன் ரூபிள்கள் புகழார்ந்தவை என்று நாம் கூறலாம் என்று கருதுகிறேன். (சிரிப்பு.) அது பாராட்டத்தக்க செய்தி! இது ஒரு கற்பனுதீதமான எண் இலக்கம். இந்த இலக்கம் எதைக் குறிக்கிறது என்பதை இங்குள்ள எல்லோரும் தெரிந்திருப்பதாகக் கொள்ள முடியாது என்று உறுதியாகச் சொல்வேன். (பொதுவான சிரிப்பு.) ஆனல் பொருளியல் விஞ்ஞானத்தின் கருத்துநிலையில் இருந்தும்கூட இந்த இலக்கம் அவ்வளவு அதிக முக்கிய மானது என்பதாக நாம் கருதவில்லை, காரணம் பூச்சியங் களை எப்பொழுது வேண்டுமாயினும் அடித்து விடலாம். (சிரிப்பு.) இந்தக் கலையில் நாம் ஓரிரண்டு காரியங்களை சாதித்திருக்கிறோம், இதுவும் அதே போன்று பொருளாதார நோக்குநிலையில் இருநது முக்கியமானது அல்ல. நிகழ்ச்சி களின் இன்மேற்பட்ட செல்வழியில் நாம் மேலும் அதிக மான பலவற்றைச் சாதிக்கப் போகிறோம் என்று உறுதியாக நம்புகிறேன். ஆனல் உண்மையிலேயே முக்கியமானது ரூபிளை ஸ்திரப்படுத்துவது பற்றிய பிரச்சினையாகும். இப் போது இந்தப் பிரச்சினையுடன் போராடி வெல்ல முயன்று வருகிறோம்; நமது ஆகச் சிறந்த நபர்கள் இதில் செயலாற்றி வருகின்றனர்; இதற்கு நாம் தீர்மானகரமான முக்கியத்து வம் அளிக்கிறோம். ஒரு நீண்ட காலப் பகுதிக்கும்—பிறகு எல்லாக் காலத்துக்குமாக—ரூபிளை ஸ்திரப்படுத்துவதில் நாம் வெற்றியடைந்தோமானல், நாம் வென்று விட்டோம் என்பது நிரூபணமாகி விடும். அப்படி நேருமானல், இந்தக் கற்பனுதீதமான இலக்கங்கள், இந்த டிரில்லியன்கள் குவாட் ரில்லியன்கள் யாவும் சற்றும் ஒரு பொருட்டல்ல. அப்போது நாம் நமது பொருளாதாரத்தை ஓர் உறுதியான அடித் தளத்தில் நிறுவி அதை ஓர் உறுதியான அடிப்படையில் மேலும் வளப்படுத்தவும் இயலும். இந்த விஷயத்தின் மீது நான் ஓரளவு முக்கியமான மற்றும் தீர்மானகரமான புள்ளி விவரங்களைச் சுட்ட முடியும் என்று கருதுகிறேன். 1921ல் காகித ரூபிளின் பரிவர்த்தனை விகிதம் மூன்று மாதங்களுக்

கும் குறைவான காலத்துக்கே ஸ்திரமாக இருந்தது. இன்னும் முடிவடைந்து விடாத இந்த 1922ஆம் ஆண்டில் இந்த விகிதம் ஐந்து மாதங்களுக்கும் அதிகமான காலத்துக்கு ஸ்திரமாக இருந்தது. இந்த நிரூபணம் போதுமானது என்று நான் கருதுகிறேன். எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைக்குத் திட்டவட்டமாயும் தீர்வு கண்டு விடுவோம் என்பதற்கு விஞ்ஞான பூர்வமான நிரூபணத்தை நீங்கள் கோரும் பட்சத்தில், இது நிச்சயமாயும் போதுமானதல்ல; ஆனால் பொதுவாக, இதை முழுமையாயும் முடிவாகவும் நிரூபிப்பது என்பது சாத்திய மல்ல என்று நான் கருதுகிறேன். நாம் நமது புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கிய கடந்த ஆண்டுக்கும் மற்றும் இன்றைய நாளுக்கும் இடையே நாம் முன்னேற்றம் காண ஏற்கெனவே பயின்று கொண்டு விட்டோம் என்பதை நான் சுட்டிக் காட்டியுள்ள புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன. இதைப் புரிவதற்கு நாம் கற்றுக் கொண்டுவிட்டதால், நாம் மிகவும் முட்டாள் தனமான எதையும் செய்யாது தவிர்க்கும் பட்சத்தில் இந்த வழியில் மேலும் பல வெற்றிகளை அடைவதற்கு நாம் கற்றுக் கொண்டு விடுவோம் என்பது உறுதி. ஆயினும் ஆக முக்கிய மான விஷயம் வாணிகம், அதாவது நமக்கு அத்தியாவசிய மாக இருக்கும் பண்டங்களின் புழக்கமாகும். நாம் போர் நிலையில் இருந்து வந்திருக்கிறோம் (விளாதிவஸ்தோக் சில வாரங்களுக்கு முன்புதான் திரும்பப் பிடிக்கப்பட்டது என் பதை நீங்கள் அறிவீர்கள்) என்ற போதிலும், காகித ரூபி ளின் விகிதத்தை மூன்று மாதங்களுக்கு மட்டுமே அல் லாமல் ஐந்து மாதங்கள் ஸ்திரமாக வைத்திருப்பதில் வெற்றி பெற்றதன் விளைவாக இப்போதுதான் நாம் நமது பொருளா தாரச் செயல்பாடுகளை உண்மையிலேயே முறையான வழி யில் கொண்டு செல்ல முடிந்திருக்கிறது என்ற போதிலும், நாம் இரண்டாண்டுகளாக இந்தப் பிரச்சினையுடன் வெற்றி கரமாகத் தாக்குப்பிடித்து வந்திருப்பதால் நாம் மகிழ்ச்சி யுறுவதற்கான முகாந்தரங்கள் உள்ளன என்று நான் கூற முடியும் என்று கருதுகிறேன். எப்படியிருந்தாலும் நாம் தனியாக நிற்கிறோம். நாம் கடன்தொகைகள் எதையும்

பெற்றுவிடவில்லை, இப்போதும் எதையும் பெறவில்லை. வலிமை வாய்ந்த எந்த ஒரு முதலாளித்துவ நாடும் நமக்கு உதவி வழங்கவில்லை. அவை தமது முதலாளித்துவப் பொருளாதாரத்தை ''மிகவும் நேர்த்தியாக'' ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பதால், இன்று வரை அவை எந்த வழியில் செல்கின்றன என்பதை அறியாதனவாக இருக்கின்றன. வெர்சேய் சமாதான ஒப்பந்தம் மூலம் அவை உருவாக்கியுள்ள நிதி அமைப்பு முறை குறித்து அவற்றுக்கே அதன் தலையும் வாலும் தெரியாது. இந்த மாபெரும் முதலாளித்துவ நாடுகள் விவகாரங்களை இநத வழியில் நிர்வகித்து வருமானல், பின்தங்கிய நிலையிலும கல்வியறிவு இன்றியும் இருக்கும் நாம், ரூபிளை ஸ்திரப்படுத்துவதற்கான நிபந்தனைகள் எனும் மிகவும் முக்கியமான விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டோம் எனும் மெய்நடப்பு பற்றி மகிழ்ச்சி அடையவே வேண்டும் என்று நான் கருதுகிறேன். இது தத்துவார்த்தப் பகுப்பாய்வால் அல்ல மாறுக நடைமுறை அனுபவத்தால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இது உலகிலுள்ள எல்லா தத்துவார்த்த விவாதங்களையும் விட அதிக முக்கியமானது என்பது எனது கருத்து. இத்துறையில் நாம் நிர்ணயகரமான பலன்களைச் சாதித்து விட்டோம் என்பதை நடைமுறை காட்டுகிறது, அதாவது நாம் நமது பொருளாதாரத்தை ரூபிளை ஸ்திரப்படுத்தும் திசையில் முடுக்கத் தொடங்கியுள்ளோம். இது வாணிகம், பண்டங்களின் கட்டற்ற புழக்கம், விவசாயிகள் மற்றும் பெருந்திரளான சிறுதர உற்பத்தியாளர்களுக்கு மிக்குயர் முக்கியத்துவமுடையதாகும்.

இப்போது நான் நமது சமுதாய லட்சியங்களுக்கு வருகிறேன். இதில் மிகவும் முக்கியமான காரணி விவசாயி மக்கள் என்பது திண்ணம். 1921ல் பரவலான விவசாயிப் பகுதிகள் மத்தியில் அதிருப்தி மேலோங்கியிருந்தது என்பதில் ஐயமில்லை. பிறகு பஞ்சம் ஏற்பட்டது. இது விவசாயிகளுக்கு ஆகக் கடுமையான சோதனையாக இருந்தது. ''அங்கே பாருங்கள்! அதுவே சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தின் விளைவு!'' என்று இயல்பாகவே வெளிநாடுகளில் இருந்த நமது விரோதிகள் எல்லோரும் கூவினர்கள். உள்ளபடியே இந்தப் பஞ்சம்

உள்நாட்டுப் போரின் பயங்கர விளைவாகவே ஏற்பட்டது என்று அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. இது முற்றும் இயல்பானது என்பது திண்ணம். 1918ல் நமக்கு எதிராக தமது எதிர்த்தாக்குதலைத் தொடங்கிய எல்லா நிலப்பிரபுக் களும் முதலாளிகளும் இந்தப் பஞ்சம் சோஷலிஸ்டுப் பொரு ளாதாரத்தின் விளைவே என்று எண்பித்துக் காட்ட முயன்றார் கள். இந்தப் பஞ்சம் உண்மையிலேயே ஒரு மிகப் பெரிய படுமோசமான பேரழிவாகும்; இது நமது அமைப்புத் துறை மற்றும் புரட்சிகர முயற்சிகள் அனைத்தின் பலன்களையும் பாழ்படுத்துவதாக அச்சுறுத்தியது.

ஆகவே, நான் இப்போது கேட்கிறேன்: இந்த முன் என்றும் கண்டிராத மற்றும் எதிர்பாராத பேரழிவுக்குப் பிறகு, நாம் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வந்த பிற்பாடு, விவசாயிகளுக்கு நாம் வாணிகம் செய்யும் சுதந்திரத்தை வழங்கிய பின்னர் இன்று நிலைமை என்ன? இதற்கான விடை தெளிவானது, எல்லோருக்கும் கண் கூடாகத் தெரிவது: ஓராண்டில் விவசாயிகள் பஞ்சத்தை அகற்றி விட்டார்கள் என்பது மட்டுமல்ல மாறாக பெருமள வில் பண்ட வரியும் செலுத்தியிருக்கிறார்கள். இதனால், கிட்டத் தட்ட எவ்வித பலவந்த நடவடிக்கைகளையும் பிரயோகிக் காமலே நாம் ஏற்கெனவே கோடிக் கணக்கான பூடுகள் தானியத்தைப் பெற்றுள்ளோம். 1921க்கு முன்பாக, முன் நாட்களில் ருஷ்யாவில் ஒரு பொதுவான நிகழ்ச்சி என்று கூறுமளவில் ஏற்பட்ட விவசாயிகளின் புரட்சிக் கிளர்ச்சி கள் கிட்டத்தட்ட முழுமையாயும் இல்லாததாகி விட்டன. விவசாயிகள் தமது இன்றைய நிலைமையுடன் திருப்தி கொண் டிருக்கிறார்கள். இதை நாம் நம்பிக்கையுடன் உறுதியாகக் கூறலாம். இந்தச் சான்று எந்த அளவிலான புள்ளிவிவர நிரூபணத்தை விடவும் அதிக முக்கியமானது என்று நாம் கருதுகிறோம். நமது நாட்டில் விவசாயிகள் ஒரு நிர்ணயகர மான காரணி எனும் மெய்விவரத்தை யாரும் மறுக்கவில்லை. இப்போது விவசாயிகள் வாழும் இத்தகைய நிலைமையில் அவர்களது வட்டாரத்தில் இருந்து நமக்கு எதிராக எந்த ஓர் இயக்கமும் வரும் என்று நாம் அஞ்சக் காரணம் இல்லை.

இதை நாம் முற்றும் மனப்பூர்வமாகவும், மிகப்படுத்தல் எதுவும் இன்றியும் கூறுகிறேம். இதை நாம் ஏற்கெனவே சாதித்து விட்டோம். நமது அதிகாரிகளின் வேலையில் ஏதேனும் ஓர் அம்சம் அல்லது இன்னெரு அம்சம் பற்றி விவசாயிகள் அதிருப்தியுறலாம். இது பற்றி அவர்கள் புகார் செய்யலாம். இது சாத்தியமே, உண்மையில் தவிர்க்க முடியாததே, காரணம் நமது அரசு யந்திரமும் அரசு இயக்கி வரும் பொருளாதாரமும் இதைத் தவிர்க்க இயலாத வகையில் இன்னமும் அதிகத் திறமையற்ற நிலையில் இருக்கின்றன. ஆனல் ஒட்டுமொத்தமாக விவசாயிகளுக்கு நம்மிடம் கடுமையான அதிருப்தி எதுவும் ஏற்பட இடமே இல்லை. இது ஓராண்டின் இடையே சாதிக்கப்பட்டு விட்டது. இது ஏற்கெனவே பெருமளவிலான சாதனை என்று நான் கருதுகிறேன்.

இப்போது நமது மென்ரகத் தொழில்களுக்கு வருகிறேன். தொழில் துறையில் நாம் கனரகத் தொழிலுக்கும் மென்ரகத் தொழிலுக்கும் இடையே அவற்றின் நிலைமை வேறுபட்டிருக்கும் காரணத்தால் நாம் அவற்றின் தனித்தன்மையைக் கருதிப் பார்க்க வேண்டியிருக்கிறது. மென்ரகத் தொழிலைப் பொருத்தவரை அதில் ஒரு பொதுவான புத்தாக்கம் நிகழ்ந்திருக்கிறது என்று நான் நம்பகமாகக் கூற முடியும். நான் விவரங்களுக்குப் போக மாட்டேன். ஏராளமான புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டவும் முனையவில்லை. ஆனல் இந்தப் பொதுவான கருத்துப்பதிவு மெய்விவரங்களை அடிப்படையாக்கியது, பொய்யானதோ துல்லியமற்றதோ ஆன எதையும் அடிப்படையாக்கியதல்ல என்று நான் உங்களுக்கு உறுதியாகக் கூற முடியும். மென்ரகத் தொழிலில் ஒரு பொதுவான புத்தாக்கம் ஏற்பட்டிருப்பதையும் அதன் விளைவாக பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோவில் இருக்கும் தொழிலாளர்களின் நிலைமைகளில் ஒரு திட்டவட்டமான மேம்பாடு உண்டாயிருப்பதையும் நாம் குறிப்பிட முடியும். இதர மாவட்டங்களில் இது சற்றே குறைந்த அளவில் காணப்படுகிறது, காரணம் அவற்றில் கனரகத் தொழில் பேராதிக்கம் வகிக்கிறது. எனவே இது பொதுவாகப் பொருந்

தும் அம்சமல்ல. இருந்த போதிலும் மென்ரகத் தொழில் ஐயத்திற்கிடமின்றி முன்னேறியுள்ளது மற்றும் பெத்ரோ கிராத் மற்றும் மாஸ்கோ தொழிலாளர்களின் நிலைமை கேள்விக்கிடமின்றி மேம்பட்டுள்ளது என்பதை நான் மீண்டும் கூறுகிறேன். 1921 வசந்தத்தில் இந்த இரு நகரங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தியில் அதிருப்தி இருந்தது. இப்போது நிச்சயமாயும் அத்தகைய நிலைமை இல்லை. நாளுக்கு நாள் தொழிலாளர்களின் நிலைமைகள் மற்றும் மனப்போக்கைக் கவனித்து வரும் நாம் இந்த விஷயத்தில் தவறு செய்ய மாட்டோம்.

மூன்றாவது விஷயம் கனரகத் தொழில் பற்றியதாகும். இங்கு நிலைமை இன்னமும் படுமோசமாகவே இருக்கிறது என்றுதான் நான் கூற வேண்டும். 1921—1922ல் நல்ல நிலைமைக்கான ஒருவிதத் திருப்பம் நிகழ்ந்தது. எனவே அண்மை எதிர்காலத்தில் நிலைமை மேம்பாடுறும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இதற்கு அவசியமான சில வகைதுறை ஆதாரங்களை நாம் ஏற்கெனவே திரட்டியுள்ளோம். ஒரு முதலாளித்துவ நாட்டில் கனரகத் தொழிலில் நிலவும் நிலைமையினை மேம்படுத்தக் கோடிக் கணக்கான பணம் கடனாகப் பெற வேண்டுவது அவசியம். இது இல்லாமல் மேம்பாடு எதுவும் சாத்தியமல்ல. பின்தங்கிய நாடுகளில் கோடிக் கணக்கான டாலர்கள் அல்லது தங்க ரூபிள்கள் கொண்டதான நீண்ட காலக் கடனுதவி மூலம் மட்டுமே கனரகத் தொழிலை வளப்படுத்த முடியும் என்பதை முதலாளித்துவ நாடுகளின் பொருளியல் வரலாறு புலப்படுத்துகிறது. இத்தகைய கடன்களை நாம் பெறவில்லை, இது வரையில் எதையும் வாங்கவில்லை. சலுகைகள் இத்தியாதி பற்றி இப்போது எழுதப்பட்டு வருவது எல்லாம் அவை எழுதப்பட்டுள்ள காகிதத்தின் மதிப்பைக் கூடப் பெறாதவை. இது குறித்து அண்மையில் பெருமளவு எழுதியுள்ளோம், பிரத்தியேகமாயும் உர்கார்ட் சலுகை[75] பற்றி எழுதியுள்ளோம். இருப்பினும் நமது சலுகைகள் பற்றிய கொள்கை மிகவும் நல்லது எனறே நான் கருதுகிறேன். எனினும் இது வரையில் தனியொரு லாபகரமான சலுகை உடன்படிக்கையைக் கூட நாம் செய்து கொள்ள

வில்லை. இதை மனத்தில் இருத்தும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறாக கனரகத் தொழிலில் காணப்படும் நிலைமை நமது பின்தங்கிய நாட்டுக்கு உண்மையிலேயே மிகவும் இடரார்ந்த பிரச்சினையாகும், காரணம் நாம் செல்வந்த நாடுகளிடமிருந்து கடனுதவி எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு இருப்பினும் நாம் உருப்படியான ஒரு மேம்பாட்டைக் காண்கிறோம்; நமது வாணிகம் நமக்கு ஓரளவு மூலதனம் கொண்டுவந்திருப்பதையும் கூடப் பார்க்கிறோம். இது இன்னும் மிகவும் மிதமான ஒரு தொகை மட்டுமே என்பது உண்மை—இரண்டு கோடி தங்க ரூபிள்களுக்கும் சற்றே அதிகம். எப்படியும் ஒரு துவக்கம் செய்யப்பட்டு விட்டது; நமது வாணிகம் நமக்கு நிதிகளை வழங்குகிறது, இதை நாம் கனரகத் தொழிலின் நிலைமையை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தலாம். எனினும் இன்றைய தருணத்தில் நமது கனரகத் தொழில் இன்னும் மிகப் பெரும் இடர்ப்பாட்டில்தான் இருக்கிறது. நாம் சிறிது சேமித்து வைக்கும் நிலைமையில் ஏற்கெனவே இருக்கிறோம் என்பது தீர்மானகரமான உடன் நிகழ்வு என்று நான் கருதுகிறேன். நாம் தொடர்ந்து சேமித்து வருவோம். பெரும்பாலும் இது மக்களுக்குப் பிரதிகூலமாக இருந்தாலும் கூட நாம் இப்போது கட்டாயம் சிக்கனம் செய்ய வேண்டும். இப்போது அரசு பட்ஜெட் செலவினத்தைக் குறைக்க நாம் முயல்கிறோம், நமது அரசாங்கச் செயலகங்களில் இருக்கும் அலுவலர்களைக் குறைக்க முயல்கிறோம். பின்னுல் நமது அரசுப் பொறியமைவு பற்றிச் சில வார்த்தைகள் கூற வேண்டியுள்ளது. எப்படியும் இதை நாம் குறைத்தே தீர வேண்டும். சாத்தியமான அளவு அதிகமாகச் சிக்கனம் செய்ய வேண்டும். நாம் எல்லாவற்றிலும், பள்ளிக்கூடங்களில் கூடச் சிக்கனம் செய்து வருகிறோம். நாம் இதைச் செய்தே தீர வேண்டும், காரணம் நாம் கனரகத் தொழிலைக் காப்பாற்ருவிட்டால், அதை நாம் மீட்டமைக்காவிட்டால் நம்மால் ஒரு தொழில் துறையைக் கட்டி வளர்க்கவே முடியாது என்பதை நாம் அறிவோம். ஒரு தொழில் துறை இல்லையேல் ஒரு சுதந்திர நாடு என்ற

முறையில் நாம் அழிவுக்கு ஆளாவோம். இதை நாம் மிகவும் நன்ருக உணர்ந்திருக்கிருேம்.

ருஷ்யாவின் கடைத்தேற்றம் விவசாயிப் பண்ணைகளின் நல்ல மகசூலில் மட்டும் காணக்கிடக்கவில்லை—அது போது மானதல்ல; விவசாயிகளுக்கு நுகர்வாளர் பண்டங்களை வழங் கும் மென்ரக தொழிலின் நல்ல நிலைமையில் மட்டும் காணக் கிடக்கவில்லை—இதுவும் போதுமானதல்ல; நமக்குக் கனரகத் தொழிலும் கூடத் தேவை. இதை நல்ல நிலைமையில் வைப் பதற்குப் பல்லாண்டுக்கால உழைப்பு அவசியம்.

கனரகத் தொழிலுக்கு அரசுப் பண உதவி தேவை. இதை நாம் வழங்க இயலாவிட்டால் சோஷலிஸ்டு அரசு என்பது ஒரு புறமிருக்க நாகரிகமுள்ள அரசு என்ற அளவில் கூட நம் பாடு அதோ கதிதான். எனவே இந்தத் துறையில் நாம் உறுதியான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிருேம். கனரகத் தொழிலை வலுப்படுத்தி நிலைநாட்டத் தேவைப் படும் நிதிகளை நாம் சேகரிக்கத் தொடங்கி விட்டோம். நாம் இது வரை பெற்றுள்ள தொகை இரண்டு கோடி தங்க ரூபிள் கள் அளவுக்கே உள்ளது என்பது மெய்யே. ஆனுல் எப்படி யும் இந்தத் தொகை கிடைக்கக் கூடியதாக இருக்கிறது, மற்றும் நமது கனரகத் தொழிலைப் புத்தாக்கம் செய்யும் நோக்கத்திற்காகத் தனிமுழுமையாயும் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் நான் வாக்களித்தது போலவே, நமது பொருளாதாரத்தின் பிரதானக் கூறுகளை நான் சுருக்கமாக உருவரை செய்து காட்டியுள்ளேன் என்று நான் கருதுகிறேன். இவை அனைத்தில் இருந்தும், புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்கெனவே பலன் அளித்து விட்டது எனும் முடிவுக்கு நாம் வரலாம் என நான் உணர்கிறேன். ஓர் அரசு என்ற முறையில், நாம் வாணிகம் செய்யவும், விவசாயம் மற்றும் தொழில் துறையில் நமது பலமான நிலைகளைக் கட்டிக்காக்கவும், முன்னேற்றம் காணவும் வல்லமை இருக் கிறது என்பதற்கு நம் வசம் ஏற்கெனவே சான்று இருக் கிறது. நடைமுறைச் செயல்கள் இதை நிரூபித்துக் காட்டி யுள்ளன. தற்போதைக்கு இது நமக்குப் போதுமானது என்று

நினைக்கிறேன். நாம் பெருமளவு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இன்னும் பெருமளவு கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துள்ளோம். நாம் ஐந்தாண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்துள்ளோம். இந்த ஐந்தாண்டுகளின் போது நாம் போர் நிலையில் இருந்து வந்துள்ளோம். எனவே, நாம் வெற்றி யடைந்துள்ளோம்.

இது புரிந்து கொள்ளக் கூடியதே, காரணம் விவசாயிகள் நம் பக்கம் இருந்தார்கள். அவர்கள் நம்மை ஆதரித்ததை விடவும் அதிகமாக உண்மையிலேயே வேறு யாரும் நம்மை ஆதரித்திருக்க முடியாது. வெண்படையினர்களுக்கு நிலப்பிர புக்கள் ஆதரவாக இருந்தார்கள் என்பதை அவர்கள் உணர்ந் திருந்தார்கள். நிலப்பிரபுக்களை அவர்கள் உலகிலுள்ள வேறு எதைக் காட்டிலும் அதிகமாக வெறுத்தார்கள். இதனுல் தான் விவசாயி மக்கள் தமது சகல உற்சாகமும் விசுவாச மும் கொண்டு நம்மை ஆதரித்தார்கள். வெண்படையினர் களை எதிர்த்து நம்மைத் தாங்கி ஆதரிக்கும்படி விவசாயிகளை இயக்குவிப்பது கஷ்டமல்ல. போரை எப்போதும் வெறுத்து வந்த விவசாயிகள், வெண்படையினர்களை எதிர்த்த போரில், நிலப்பிரபுக்களை எதிர்த்த உள்நாட்டுப் போரில் தம்மால் செய்யக் கூடியதாக இருந்த சகலத்தையும் செய்தார்கள். ஆனுல் இதோடு எல்லாம் தீர்ந்து விடவில்லை, காரணம் சாரத்தில் இது, ஆட்சி அதிகாரம் நிலப்பிரபுக்கள் கரங் களிலா அல்லது விவசாயிகள் கரங்களிலா எதில் நீடித்து நிலவும் என்னும் விவகாரம் மட்டுமேயாகும். இது நமக்குப் போதுமானதல்ல. நாம் தொழிலாளர்களுக்காக ஆட்சி அதி காரத்தைக் கைப்பற்றி இருக்கிருேம் என்பதை, நமது நோக் கம் இந்த ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி சோஷலிஸ்டு அமைப்பு முறையை நிறுவுவதே என்பதை விவசாயிகள் அறிவார்கள். எனவே, சோஷலிஸ்டுப் பொருளாதாரத்துக் கான பொருளாதார அடித்தளங்களை நிறுவுவதே நமக்கு ஆக முக்கியமானதாக இருந்தது. இதை நாம் நேரடியாகச் செய்ய முடியவில்லை. நாம் இதைச் சுற்றிவளைத்த வழியில் செய்ய வேண்டி இருந்தது. நமது நாட்டில் நாம் கொண்டு

வந்துள்ள அரசு முதலாளித்துவம் தனி வகைப்பட்ட ஒன்றாகும். அது அரசு முதலாளித்துவம் பற்றிய வழக்கமான கருத்துருவுடன் ஒத்துப்போவதில்லை. எல்லா முக்கியமான தலைமைப் பதவிகளையும் நாம் நமது கரங்களில் வைத்திருக்கிறோம்; நாம் நிலத்தை வைத்திருக்கிறோம்; அது அரசுக்குச் சொந்தமானது. இது முக்கியமானதல்ல என்று சாதிக்க நமது எதிராளிகள் முயன்ற போதிலும் இது மிகவும் முக்கியமானது. முக்கியமல்ல என்பது பொய். நிலம் அரசுக்குச் சொந்தம் எனும் மெய்விவரம் மிகமிக முக்கியமானது, மற்றும் பொருளாதார ரீதியிலும் இது மாபெரும் நடைமுறை செயல் நோக்கம் கொண்டதாகும். இதை நாம் அடைந்து விட்டோம், மற்றும் நமது எதிர்காலச் செயல்பாடுகள் யாவும் அந்தக் கட்டமைப்புக்கு உள்ளேதான் நிகழ வேண்டும் என்பதை நான் கட்டாயம் கூற வேண்டும். விவசாயி மக்களைத் திருப்தியுறச் செய்வதிலும், தொழில் துறை மற்றும் வாணிகத்தைப் புத்தாக்கம் செய்வதிலும் நாம் ஏற்கெனவே வெற்றி கண்டு விட்டோம். நமது பாட்டாளி வர்க்க அரசு நிலத்தை மட்டும் அன்றி தொழில் துறையின் ஜீவாதாரமான எல்லாப் பிரிவுகளையும் உடைமையாக வைத்திருக்கிறது என்ற முறையில் நமது அரசு முதலாளித்துவம், இந்தத் தொடரின் சொல்வகை நேர்பொருளில் இருந்து வேறுபடுகிறது என்பதை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். துவக்கம் என்ற முறையில் நாம் ஒரு சில சிறுதர மற்றும் நடுத்தர ஆலைகளை மட்டுமே கட்டுக் குத்தகைக்கு விட்டிருக்கிறோம், மீதமுள்ளவை அனைத்தும் நமது கரங்களில் நீடிக்கின்றன. வாணிகத்தைப் பொருத்தவரை நாம் கலப்புக் கம்பெனிகள் நிறுவ முயல்கிறோம், நாம் அவற்றை ஏற்கெனவே நிறுவி வருகிறோம் என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தக் கம்பெனிகளின் மூலதனத்தில் ஒரு பகுதி தனியார் முதலாளிகளுக்கு—அதுவும் அன்னிய முதலாளிகளுக்கு சொந்தமானது—மற்ற பகுதி அரசுக்குச் சொந்தமானது. முதலில் இந்த வழியில் நாம் எப்படி வாணிகம் செய்வது என்பதைக் கற்றுக் கொள்கிறோம். இதுவே நமக்குத் தேவை. இரண்டாவதாக நாம்

அவசியம் என்று கருதும் பட்சத்தில் இந்தக் கம்பெனிகளைக் கலைத்துவிடக் கூடிய நிலையில் நாம் எப்போதும் இருக்கிறோம். எனவே அந்த அளவுக்கு நாம் எவ்வித ஊறுபாட்டுக்கும் இடமளிப்பதில்லை. நாம் தனியார் முதலாளியிடமிருந்து கற்றுக் கொள்கிறோம்; எவ்வாறு நாம் முன்னேறுவது, நாம் செய்யும் பிழைகள் என்ன என்பதை வருநிலை கண்டு மதிப்பிடுகிறோம். இதற்கு மேல் அதிகமாக நான் எதுவும் சொல்லத் தேவையில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்னும் சில சிறிய அம்சங்கள் குறித்து விளக்க விரும்புகிறேன். நாம் மிகப் பல முட்டாள் தனமான காரியங்களைச் செய்திருக்கிறோம், இன்னமும் செய்வோம் என்பதில் சந்தேகமில்லை. இதை என்னை விட வேறு யாரும் இதை விட நன்றாக மதிப்பிட்டுப் பார்க்க முடியாது. (சிரிப்பு.) இந்த முட்டாள் தனமான காரியங்களை நாம் ஏன் செய்கிறோம்? இதற்கான காரணம் தெளிவானது: முதலாவது காரணம் நாம் ஒரு பின்தங்கிய நாடு என்பது, இரண்டாவது காரணம் நமது நாட்டில் கல்வித் தரம் மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பது, மூன்றாவது காரணம் நமக்கு வெளியில் இருந்து எவ்வித உதவியும் கிடைக்கவில்லை என்பதாகும். நாகரிகம் படைத்த ஒரு நாடு கூட நமக்கு உதவவில்லை. இதற்கு நேர் மாறாக அவை யாவும் நமக்கு எதிராகச் செயல்பட்டு வருகின்றன. நாலாவதாக, நமது அரசு யந்திரத்தின் மீதுதான் இதற்கான பழி சுமத்தப்பட வேண்டும். நாம் அரசின் பழைய யந்திரத்தை எடுத்து மேற்கொண்டோம். அதுவே நமது துரதிருஷ்டத்துக்கு ஏதுவாகும். மிக அடிக்கடி இந்த இயந்திரம் நமக்கு எதிராக இயங்குகிறது. 1917ல் நாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு அரசாங்க அலுவலாளர்கள் நமக்கு எதிராக நாசவேலை செய்தார்கள். இதனால் நாம் அப்போது மிகவும் பீதியடைந்து ''தயவு செய்து, திரும்பி வாருங்கள்'' என்று கெஞ்சினோம். அவர்கள் எல்லோரும் திரும்பி வந்தார்கள்—அதுவே நமது துரதிருஷ்டம் ஆயிற்று. நம்மிடம் இப்போது அரசாங்க அலுவலர்களின் பெரிய படையே இருக்கிறது. ஆனால் அவர்கள் மீது மெய்யான கண்காணிப்பைச் செயல்படுத்துவதற்கான

போதியளவு கல்விகற்ற சக்திகள் பற்றுக்குறையாக உள்ளன. நாம் எங்கு அரசியல் அதிகாரத்தை அமுல் செய்கிறோமோ அங்கு உயர் மட்டத்தில் இந்த யந்திரம் எப்படியோ இயங்கு கிறது. ஆனால் நேர் கீழ் மட்டத்தில் அரசாங்க அலுவலர் கள் தன்னிச்சையாகக் கண்காணிப்புச் செய்கின்றனர்; நமது நடவடிக்கைகளை எதிர்த்துத் தடை செய்யும் அத்தகைய வகையில் இதை அவர்கள் அடிக்கடி செயல்படுத்துகிறார் கள். நடைமுறையில் இது அடிக்கடி நேருகிறது. உயர் மட் டத்தில் நமது ஆட்கள் எனப்படுவோர் எத்தனை பேர் இருக் கிறார்கள் என்று எனக்குத் தெரியாது, எப்படியும் ஒரு சில ஆயிரம் பேர் அதிகமாகப் போனால் சில பத்தாயிரம் பேர்கள் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் நேர் கீழ் மட்டத் தில் ஜாரிடமிருந்தும், முதலாளித்துவ சமுதாயத்திடமிருந் தும் நாம் பெற்ற நூறாயிரக் கணக்கான பழைய அலுவலர் கள் இருக்கிறார்கள். இவர்கள் ஓரளவு வேண்டுமென்றே திட்டமிட்டும் ஓரளவுக்கு அறியாமலும் நமக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். இந்த விஷயத்தில் ஒரே நொடியில் எதுவும் செய்ய முடியாது என்பது தெளிவு. இந்த இயந் திரத்தை மேம்படுத்தி, அதை மாற்றி அமைத்து, புதிய சக்திகளை அதில் ஈடுபடுத்த பல ஆண்டுக்கால நமது கடின உழைப்பு தேவை. இதை நாம் ஓரளவு வேகமாக, ஒருவேளை மிகவும் வேகமாகச் செய்து வருகிறோம். சோவியத் பள்ளிக் கூடங்கள் மற்றும் தொழிலாளர் பயில் துறைகள் நிறுவப் பட்டு விட்டன. ஒரு சில நூறாயிரம் இளம் மக்கள் இவற்றில் படிக்கிறார்கள். அவர்கள் மிகவும் வேகமாகக் கற்றறிந்து வருகிறார்கள் போலும். ஆனால் எப்படியும் வேலை துவங்கி விட்டது. இந்தப் பணி பயன் தருவதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நாம் அளவுக்கு மீறி அவசரப்பட்டு வேலை செய்யாமல் இருப்போமானால் ஒரு சில ஆண்டு களுக்குள் நமது அரசுப் பொறியமைவை முழுநிறைவாகச் செப்பனிடும் திறனுடைய பெருமளவிலான இளம் பேர்வழி கள் நம் வசம் இருப்பது திண்ணம்.

நாம் பல முட்டாள் தனமான காரியங்களைச் செய்திருக் கிறோம் என்பதாக நான் கூறியிருந்தேன். ஆனால் இந்த விஷ

யத்தில் நமது விரோதிகள் பற்றியும் ஒன்றிரண்டு வார்த்தைகளை நான் கட்டாயம் சொல்ல வேண்டும். நமது விரோதிகள் நம் மீது பழி சாட்டி, போல்ஷிவிக்குகள் பல முட்டாள் தனமான காரியங்களைச் செய்திருப்பதாக லெனினே ஒத்துக் கொள்கிருரே என்பதாகக் கூறுவார்களாஞல் நான் இதற்குப் பதிலளிக்க விரும்புகிறேன்: ஆமாம், ஆனுல் நாங்கள் புரிந்துள்ள முட்டாள் தனமான காரியங்கள் எப்படியும் உங்கள் செயல்களில் இருந்து மிகவும் வேருனவை என்பது உங்களுக்குத் தெரியாதா. நாங்கள் இப்போதுதான் கற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளோம். ஆனுல் மிகவும் முறையாகக் கற்றுக் கொண்டு வருவதால் நிச்சயமாயும் நல்ல பலன்களை அடைவோம் என்பது உறுதி. ஆனுல் நமது விரோதிகள், அதாவது முதலாளிகளும், இரண்டாம் அகிலத்தின் வீரர்களும் நாங்கள் புரிந்துள்ள முட்டாள் தனமான காரியங்களைப் பற்றி வற்புறுத்தி வருவதால் ஒப்புநோக்கின் பொருட்டு புகழ் பெற்ற ருஷ்ய நூலாசிரியரின் சொற்களை சுட்டிக் காட்ட முன்வருகிறேன். அவற்றை நான் திருத்தம் செய்து பின்வருமாறு கூறுவேன்: போல்ஷிவிக்குகள் முட்டாள் தனமான காரியங்களைச் செய்கிருர்கள் என்ருல் போல்ஷிவிக் ''இரண்டு தடவை இரண்டு ஐந்து'' என்று சொல்லுவான்; ஆனுல் அவனது விரோதிகள், அதாவது முதலாளிகளும் இரண்டாம் அகிலத்தின் வீரர்களும் முட்டாள் தனமான காரியங்கள் செய்யும் போது அவர்களுக்கு ''இரண்டு தடவை இரண்டு கொழுப்பாலான ஒரு மெழுகுதிரி'' என்ற விடை கிடைக்கிறது.[76] அது எளிதில் நிரூபிக்கப்படுகிறது. உதாரணமாக, கல்ச்சாக்குடன் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் செய்து கொண்ட உடன்படிக்கையை எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றை விட அதிக அறிவொளி படைத்த, அதிக வலிமை வாய்ந்த நாடுகள் இந்த உலகில் வேறு ஏதேனும் இருக்கின்றனவா? என்று நான் உங்களைக் கேட்கிறேன். ஆனுல் என்ன நடந்தது? அவை சரியான கணிப்பின்றி, சிந்தித்துப் பாராமல், எச்சரிக்கை உணர்வு இல்லாமல் கல்ச்சாக்குக்கு உதவுவதாக வாக்களித்தன. அது ஒரு தோல்வியில் போய் முடிந்தது.

இதைப் புரிந்து கொள்வது மனித மூளைக்குக் கடினம் என்று எனக்குத் தோன்றுகிறது.

அல்லது இன்னொரு உதாரணத்தை ஒரு முடிவுற்றதான, மேலும் முக்கியமான ஒன்றை—வெர்சேய் சமாதான ஒப்பந்தத்தை—எடுத்துக் கொள்வோம். ''புகழ் தேடிக் கொண்ட'' ''மகா'' வல்லரசுகள் செய்தது என்ன? என்று நான் உங்களிடம் கேட்கிறேன். இந்தக் குழப்பம் மற்றும் அலங்கோலத்தில் இருந்து மீள அவற்ருல் எப்படி முடியும்? முதலாளித்துவ நாடுகள், முதலாளித்துவ உலகம் மற்றும் இரண்டாம் அகிலம் ஒன்றுசேர்ந்து புரிந்த முட்டாள் தனமான காரியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போதில் நாம் புரிந்த முட்டாள் தனமான செயல்கள் அற்பமே என்று திரும்பவும் கூறுவது மிகையாகாது என நான் கருதுகிறேன். இதனுல் தான் உலகப் புரட்சிக்கான எதிர்கால வாய்ப்பு—இந்த விஷயத்தை நான் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்—சாதகமானதாக இருக்கிறது என நான் கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட திட்டவட்டமான நிலைமை ஏற்படுமானுல் இந்த வாய்ப்பு இன்னும் சிறந்ததாக இருக்கும். இதைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

1921ல் மூன்ருவது காங்கிரசில், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அமைப்புத்துறைக் கட்டுமானம் பற்றியும், அவற்றின் செயல்பாடுகளின் முறைகள் மற்றும் உள்ளடக்கம் பற்றியும் ஒரு தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொண்டோம்.[77] இந்தத் தீர்மானம் மிகவும் அருமையான ஒன்று, ஆனுல் கிட்டத்தட்ட முழுதும் ருஷ்யத் தன்மை கொண்டது, அதாவது அதில் உள்ளவை அனைத்தும் ருஷ்யன் நிலைமைகளை அடிப்படையாக்கியவை. இது இதன் சிறந்த அம்சம், ஆனுல் இதுவே இதன் குறைபாடும் ஆகும். இது இதன் குறைபாடு காரணம் இதை வெளிநாட்டவர் யாரும் படிக்க முடியாது என்பது திண்ணம். இதைக் கூறுவதற்கு முன்பாக இதை நான் மீண்டும் படித்தேன். முதலாவதாயும், இது மிகவும் நீளமானது, இதில் ஐம்பது அல்லது அதற்கும் அதிகமான குறிப்புக்கள் உள்ளன. வெளிநாட்டவர்களால் இத்தகையவற்றை வழக்கமாகப் படிக்க இயலாது. இரண்டாவதாக, அவர்கள் இதைப் படித்

தாலும் கூட அவர்கள் இதைப் புரிந்து கொள்ள மாட்டார்கள், காரணம் இது மிகவும் ருஷ்யத் தன்மை கொண்டது. இது ருஷ்ய மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்பதல்ல காரணம் — இது எல்லா மொழிகளிலும் அருமையாகப் பெயர்க்கப்பட்டுள்ளது; ஆனால் இது முழு நிறைவாயும் ருஷ்ய உணர்வில் ஊறிக்கிடப்பதே இதற்குக் காரணம். மற்றும் மூன்றுவதாக, விதிவிலக்கு என்ற முறையில் ஏதேனும் ஒரு வெளிநாட்டார் இதைப் புரிந்து கொண்டு விட்டாலோ, அவரால் இதைச் செய்து நிறைவேற்ற முடியாது. இதுவே இதன் மூன்றுவது குறைபாடு. நான் இங்கு வந்துள்ள வெளி நாட்டுப் பிரதிநிதிகள் சிலருடன் உரையாடினேன், காங்கிரசின் போது பல்வேறு நாடுகளில் இருந்து வந்துள்ள பல பிரதிநிதிகளுடன் இந்த விவகாரங்களை விரிவாக விவாதிக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன். இருப்பினும் இதன் நடவடிக்கைகளில் நான் பங்கெடுக்க மாட்டேன், ஏனெனில் துரதிருஷ்டவசமாக அவ்வாறு பங்கேற்பது எனக்கு சாத்தியமல்ல. இந்தத் தீர்மானம் மூலம் நாம் ஒரு பெரிய பிழை செய்துவிட்டோம் என்று எனக்குப் படுகிறது—அதாவது, இனிமேற்பட்ட வெற்றிகளுக்குரிய நமது சொந்தப் பாதையை நாம் தடைப்படுத்தியுள்ளோம். நான் ஏற்கெனவே சொன்னது போல இந்தத் தீர்மானம் மிகவும் அருமையாக வரைவு செய்யப்பட்டுள்ளது; இதன் ஐம்பது அல்லது அதற்கும் அதிகமான குறிப்புக்களை ஒவ்வொன்றையும் நான் அதரிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நமது ருஷ்ய அனுபவத்தை வெளிநாட்டவருக்கு எப்படி வழங்குவது என்பதை நாம் கற்றுத் தெரிந்து கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள சகலமும் நடைமுறைப்படுத்த முடியாதபடி நின்று விட்டன. இதை நாம் உணரவில்லையானால் நம்மால் முன்னேறிச் செல்ல இயலாது. ருஷ்யப் புரட்சி நடந்து முடிந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, ருஷ்யன் மற்றும் வெளிநாட்டுத் தோழர்களான நாம் எல்லோரும் ஒரே மாதிரி ஆற அமர்ந்து படித்தாராய வேண்டுவதே ஆக முக்கியமான காரியம் என்று நான் கருதுகிறேன். அவ்வாறு செய்வதற்குரிய வாய்ப்பை நாம் இப்போது

மட்டுமே பெற்றிருக்கிறோம். இந்த வாய்ப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை நான் அறியேன். அமைதியாகப் படித்து ஆராய்வதற்கான வாய்ப்பினை முதலாளித்துவ வல்லரசுகள் எவ்வளவு காலம் நமக்கு அளிக்கப் போகின்றன என்பதையும் நான் அறியேன். ஆனால் போரிடுவதில் இருந்து போரில் இருந்து கிட்டும் ஓய்வின் ஒவ்வொரு நொடியையும் சாதகமாகப் பயன்படுத்தி ஆரம்ப முதலே படித்தாராய நாம் முற்பட வேண்டும்.

தமது அறிவுத் தாகத்தின் மூலம் கட்சி முழுவதும், ருஷ்யாவின் மக்கள் தொகையில் காணப்படும் எல்லா அடுக்கினரும் இதை நிரூபிக்கின்றனர். பயில்வதற்கான இந்த நாட்டம் இன்றைய நமது ஆக முக்கியமான பணி பயில்வது, கடுமையாகப் பயில்வது என்பதைப் புலப்படுத்துகிறது. ஆனால் நமது வெளிநாட்டுத் தோழர்களும் கட்டாயம் பயில வேண்டும். நாம் இன்னமும் செய்ய வேண்டி இருப்பது போல அவர்கள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், படிப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற பொருளில் நான் இதைக் கூறவில்லை. இது பாட்டாளி வர்க்கக் கலாசாரம் சம்பந்தப்பட்டதா, அல்லது முதலாளித்துவ கலாசாரம் சம்பந்தப்பட்டதா எனும் தர்க்கம் இருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றி முடிவு கூருமலே விட்டுவிடுகிறேன். ஆனல் ஒரு காரியம் நிச்சயம்: முதலில் நாம் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ளத் தொடங்க வேண்டும், நாம் படிப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வெளிநாட்டார் விஷயத்தில் இது தேவையில்லை. அவர்களுக்கு இன்னும் அதிக உயர் தரமான சில தேவை: முதலாவதாக, மற்ற காரியங்களுக்கு மத்தியில் அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அமைப்புத் துறைக் கட்டுமானம் பற்றி நாம் என்ன எழுதியிருக்கிறோம் என்பதையும், படிக்காமலும் புரிந்து கொள்ளாமலும் வெளிநாட்டுத் தோழர்கள் இதில் கையொப்பம் போட்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் புரிந்து கொள்ளக், கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே அவர்களது முதல் பணியாகும். அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். இதை ஒரு நொடியில் நிறைவேற்ற முடியாது. அது அறவே சாத்தியம்

அல்ல. இந்தத் தீர்மானம் மிகவும் ருஷ்யத் தன்மை கொண்டது, இது ருஷ்யன் அனுபவத்தைப் பிரதிபலிக்கிறது. இதனுல்தான் அது வெளிநாட்டவருக்குப் புரிந்து கொள்ள இயலாததாக இருக்கிறது. அதை ஒரு மூலையில் சாமிபடம் போல மாட்டி வைத்து அதற்குப் பிரார்த்தனை செய்வதோடு அவர்கள் திருப்தியடைய முடியாது. அந்த வழியில் எதையும் அடைய முடியாது. அவர்கள் ருஷ்யாவின் அனுபவத்தில் ஒரு பகுதியைத் தன்மயமாக்க வேண்டும். அதை எவ்வாறு செய்வது என்பது பற்றி நான் அறியேன். தாம் இன்னும் போதுமான அளவுக்கு அறிவொளி பெறவில்லை என்பதையும், அவர்களது நாடு இன்னும் கறுப்பு நூற்றுவர்களுக்கு[78] எதிராகப் பாதுகாப்பாக வைக்கப்படவில்லை என்பதையும் புலப்படுத்துவது மூலம் இத்தாலியிலுள்ள பாசிஸ்டுகள் உதாரணமாக நமக்கு மாபெரும் சேவை புரிகிறுர்கள். ஒருவேளை இது மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம். இந்தத் தீர்மானத்தின் கோட்பாடுகளை வெளிநாட்டவருக்கு விளக்கிக் கூறுவதற்கான வழிகளையும் முறைகளையும் ருஷ்யர்களான நாம் கண்டறிந்து கொள்ள வேண்டும். இதை நாம் செய்யாத வரை, இதை நிறைவேற்றுவது என்பது அவர்களுக்கு அறவே சாத்தியமற்றது. நாம் இப்போது பிரவேசித்துள்ள காலகட்டத்தில் ஆக முக்கியமான காரியம் படிப்பது என்பதை இதன் தொடர்பாக நாம் ருஷ்யர்களுக்கு மட்டும் அன்றி, வெளிநாட்டுத் தோழர்களுக்கும் கூட எடுத்துக் கூற வேண்டுவது அவசியம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நாம் பொதுவான பொருளில் படித்துக் கொண்டுதான் இருக்கிறேம். ஆயினும் புரட்சி வேலையின் அமைப்புத்துறை, கட்டமைப்பு, முறை மற்றும் உள்ளடக்கத்தை உண்மையிலேயே புரிந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் தனிப் பொருளில் படிக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்வார்களானுல் உலகப் புரட்சிக்கான எதிர்கால வாய்ப்புகள் மிகவும் நல்லதாக மட்டும் அன்றி அருமையானதாகவும் இருக்கும் என்று நான் உறுதியாகக் கூறுவேன். (ஆரவாரமான நீடித்த கரவொலி. ''நமது தோழர் லெனின் நீடூழி வாழ்க!'' எனும் முழக்கங்கள் மேலும் ஆர

வாரமான ஓயாத கரவொலியை ஊக்குவிக்கின்றன.)

பிராவ்தா, இதழ் 258,
நவம்பர் 15, 1922

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 278-294

மாஸ்கோ சோவியத்தின் முழுநிறைக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு நவம்பர் 20, 1922

(ஆரவாரமான கரவொலி. "இன்டர்னுஷனல்" கீதம் பாடப்படுகிறது.) தோழர்களே! உங்களுடைய கூட்டத்துக்கு நான் முன்னரே வர முடியாமற் போனதற்காகப் பெரிதும் வருந்துகிறேன், மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நான் அறிந்த வரை சில வாரங்களுக்கு முன்பே, மாஸ்கோ சோவியத்துக்கு வந்து கலந்து கொள்ள நீங்கள் எனக்கு வாய்ப்பளிக்க நினைத்தீர்கள். எனது உடல்நலக் குறைவுக்குப் பிற்பாடு, டிசம்பர் முதலாய் நீண்டதொரு காலத்துக்கு—ஊழியத் துறைக்குரிய பதத்தை உபயோகிப்பதெனில்—நான் ஏலாத நிலையில் இருந்ததால், என்னுல் வர முடியவில்லை. வேலை ஆற்றல் இவ்விதம் குறைந்து போய், நான் எனது தற்போதைய உரையினை ஒவ்வொரு வாரமாய் ஒத்திப் போட்டு வர நேர்ந்தது. உங்களுக்கு நினைவிருக்கும், எனது வேலையில் மிகக் கணிச பகுதியை முதலில் தோழர் திசியுரூப்பா மீதும், பிறகு தோழர் ரீக்கவ் மீதும் நான் குவியச் செய்து வந்தேன். தோழர் காமெனெவ் மீதும் கூடுதலாகக் குவியச் செய்ய வேண்டியிருந்தது. ஏற்கெனவே நான் உபயோகித்த உவமையிலேயே சொல்வதெனில், திடுமென இரு சுமைகளை இவர் இழுக்க வேண்டியிருந்ததைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆயினும்—தொடர்ந்து உவமையைக் கையாளுவதெனில்—குதிரை அளவு கடந்த ஆற்றல் வாய்ந்ததாகவும் ஆர்வமிக்கதாகவும் அமைந்து விட்டதை எடுத்துரைக்க வேண்டும். (கரவொலி.) இருப்பினும் எவரும் இரு சுமைகளை இழுக்

கலாகாது. பொறுமையிழந்தவனுய் இப்போது நான், தோழர்கள் திசியுரூப்பாவும் ரீக்கவும் திரும்பி வருவதற்காகக் காத்திருக்கிறேன். சிறிதளவேனும் நல்ல முறையில் வேலையினை நாங்கள் பகிர்ந்து கொண்டாக வேண்டும். என்னைப் பொறுத்த வரை எனது வேலை ஆற்றல் குறைந்திருப்பதால், விவகாரங்களைக் கவனிப்பதற்கு நான் விரும்புவதைக் காட்டிலும் எனக்கு மிக அதிக நேரமாகி விடுகிறது.

1921 டிசம்பரில், வேலை செய்வதை நான் அறவே நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. அப்போது ஆண்டின் இறுதி. அப்போது புதிய பொருளாதாரக் கொள்கைக்கான மாற்றத்தை நாம் செயல்படுத்திக் கொண்டிருந்தோம். 1921ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நாம் இந்த மாற்றத்தை மேற்கொண்டிருந்தும், இது மிகக் கடினமான— மிகமிகக் கடினமானதெனக் கூறுவேன்—மாற்றம் என்பது அப்போதே தெரிய வந்தது. இப்போது நாம் பதினெட்டு மாதங்களுக்கு அதிகமாய் இந்த மாற்றத்தைச் செயல்படுத்தி வந்துள்ளோம். புதிய நிலைமைகளுக்கு ஏற்ப, குறிப்பாய்ப் புதிய பொருளாதாரக் கொள்கைக்குரிய நிலைமைகளுக்கு ஏற்ப, பெரும்பான்மையோர் புதிய இடங்களை ஏற்றுத் தம்மை ஒழுங்கு செய்து கொள்ள இது போதுமான நேரம் என்பதாகவே எவரும் நினைப்பார்.

அயல்துறைக் கொள்கையைப் பொறுத்த வரை, இங்கே நாம் மிகச் சொற்ப மாற்றங்களையே செய்ய வேண்டியிருந்தது. இங்கு முன்பே நாம் ஏற்றிருந்த கொள்கை வழியையே கடைப்பிடித்தோம். சிறிதும் முரணின்றியும் பெரிய அளவிலான வெற்றியோடும் நாம் இவ்வழியைக் கடைப்பிடித்தோம் என்று மனத்துள் மாசின்றிக் கூற முடியுமென நினைக்கிறேன். அதைப் பற்றி உங்களுக்கு விவரமாய் விரித்துரைக்கத் தேவையில்லை என்பதே என் கருத்து. விளாதிவஸ்தோக் பிடிக்கப்பட்டிருப்பதும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டமும் கூட்டரசு பிரகடனம் செய்யப்பட்டதும்[79]—சில தினங்களுக்கு முன்புதான் இது குறித்து நீங்கள் பத்திரிகைகளில் படித்தீர்கள்—இத்துறையில் எவ்வித மாறுதல்களும் தேவையில்லை என்பதை நிரூபித்துக்

காட்டியும், தெட்டத்தெளிவாகப் புலப்படுத்தியும் உள்ளன. நாம் செல்லும் பாதை முற்றும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறை செய்யப்பட்டதாகும். உலகின் எல்லா நாடுகளுக்கும் எதிரே நமக்கு இந்தப் பாதை வெற்றி கிட்டும்படி உறுதி செய்துள்ளது. ஆயினும் இந்நாடுகளில் சில, நம்முடன் ஒரே மேசையின் முன் அமர மறுப்பதாகத் தயங்காமல் இன்னமும் அறிவிக்கின்றன. இருந்த போதிலும் பொருளாதார உறவுகளும் அவற்றைத் தொடர்ந்து அரசுத் தூது உறவுகளும் மேம்பட்டு வருகின்றன, மேம்படத்தான் வேண்டும், நிச்சயம் மேம்படவும் செய்யும். இதனை எதிர்க்கும் ஒவ்வொரு நாடும் தாமதத்துக்கு உள்ளாகிவிடும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும், ஒருவேளை குறிப்பிடத்தக்க முக்கிய விவகாரங்களில் பிரதிகூலமடையும்படி நேரலாம். இப்போது நாம் எல்லோருமே இதைக் காண முடிகிறது—சஞ்சிகைகளிலும் செய்தியேடுகளிலும் மட்டுமல்ல. ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் எவ்வளவு பெரியவை என்பதை வெளிநாடுகளுக்குச் சென்று வரும் தோழர்களும் காண்கிறார்கள் என்று நினைக்கிறேன். பழைய உவமை ஒன்றை எடுத்தாளலாமெனில், இங்கே நாம் பிற ரயில்வண்டிகளுக்கோ, பிற வாகனுதிகளுக்கோ மாறிச் சென்று விடவில்லை.

ஆனல் நமது உள்நாட்டுக் கொள்கையில், 1921 வசந்தத்தில் நாம் செய்த மாற்றம்—நம்மிடையே இது குறித்து எவ்வித சர்ச்சைகளோ, கருத்துவேறுபாடுகளோ எழ வழியில்லாதபடி அப்படி அளவு மீறி வலுவாய்ந்த, ஐயமற அறிவுறுத்தும்படியான சூழ்நிலைமைகளால் அவசியமாக்கப்பட்டுவிட்ட இந்த மாற்றம்—தொடர்ந்து நமக்குச் சில இன்னல்களை—பெரிய இன்னல்களை என்றே சொல்வேன்—உண்டாக்கி வருகிறது. இந்த மாற்றம் அவசியமே என்பது குறித்து நமக்கு எந்தச் சந்தேகமும் இருப்பதல்ல இதற்குக் காரணம்—அது குறித்து எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. நமது இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் சோதனை நாம் எதிர்பார்த்த வெற்றிகளை அளித்திருக்கிறது என்பது குறித்து நமக்கு எந்தச் சந்தேகமும் இருப்பதல்ல காரணம்.

அது சம்பந்தமாய் எந்தச் சந்தேகமும் இல்லை—இதை நான் முற்றிலும் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்—நமது கட்சி அணிகளிலும் சரி, கட்சி சார்பில்லாத தொழிலாளர்களும் விவசாயிகளுமான பெருந்திரள் மக்களது அணிகளிலும் சரி எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை.

இந்த அர்த்தத்தில் இப்பிரச்சினை எந்த இன்னலையும் உண்டாக்கிவிடவில்லை. நமக்குள்ள இன்னல்கள் நம்மை எதிர்நோக்கும் பணியிலிருந்து எழுகிறவை; அதன் நிறைவேற்றத்துக்குப் புதிய ஆட்களது சேவைகளும் அசாதாரண நடவடிக்கைகளும் அசாதாரண முறைகளும் அடிக்கடி தேவைப்படும் ஒரு பணியை நாம் எதிர்நோக்குவதிலிருந்து எழுகிறவை. இது சரியா, அல்லது அது சரியா என்பது பற்றி இன்னமும் நம்மிடையே சந்தேகங்கள் இருந்து வருகின்றன. ஒரு திசையிலோ, இன்னொன்றிலோ மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஆனல் இவை இரண்டும் நீண்டதொரு காலத்துக்குத் தொடர்ந்து இருக்கவே செய்யும் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். ''புதிய பொருளாதாரக் கொள்கை!'' விபரீதமான பெயர்தான். இக்கொள்கை நம்மைத் திரும்பிச் செல்ல வைப்பதால் இது புதிய பொருளாதாரக் கொள்கை என்று அழைக்கப்பட்டது. இப்போது நாம் ஒருவிதத்தில் பின்வாங்கிச் செல்கிறோம், திரும்பிச் செல்கிறோம். ஆனல் முதலில் பின்வாங்கிய பின் ஓடி வந்து தாவி முன்னிலும் பெரிய அளவில் முன்னல் பாயும் பொருட்டு நாம் இதைச் செய்கிறோம். இந்த நிபந்தனையின் பேரிலேதான் நாம் பின்வாங்கிச் சென்று நமது புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம். இப்படிப் பின்வாங்கிய பின், மிகவும் பிடிவாதமாகத் தாக்குதல் ஆரம்பிப்பதற்காக நாம் எவ்விடத்தில், எப்படித் திரும்பவும் சக்திகளை ஒன்றுதிரட்டித் தக்கபடி திருத்தி மாற்றமைவு செய்ய வேண்டும் என்பதைத் தற்போது நாம் அறியோம். இந்தச் செயல்கள் யாவற்றையும் செவ்வனே செய்யும் பொருட்டு—பழமொழி கூறுவது போல்—பத்து தரமல்ல, நூறு தரம் பார்த்து விட்டுப் பாய வேண்டும். நமது பணிகள், பிரச்சினைகள் யாவற்றையும் சமாளிக்கையில் எதிர்ப்பட வேண்டியிருக்கும் நம்புதற்

கரிய இன்னல்களை வென்று முன்செல்லும் பொருட்டு நாம் இவ்வாறு செய்தாக வேண்டும். சாதிக்கப் பெற்றுள்ளவற்றைச் சாதிப்பதற்காக எப்படிப்பட்ட தியாகங்கள் புரிய வேண்டியிருந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். உள்நாட்டுப் போர் எப்படி நீடித்துச் சென்றது. எவ்வளவு முயற்சி அதற்காகச் செலவிட நேர்ந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். சரி, இப்போது விளாதிவஸ்தோக் பிடிக்கப்பட்டு விட்டது (நெடுந்தொலைவுக்கு அப்பால் இருப்பினும் விளாதிவஸ்தோக் எப்படியும் நம்முடைய நகர்களில் ஒன்றுகும்). (நீடித்த கரவொலி.) எல்லாரும் நம்முடன் சேர்ந்து கொள்ள, நம்முடைய சாதனைகளில் சேர்ந்து கொள்ள விரும்புவதை இது நம் எல்லோருக்கும் தெரியப்படுத்துகிறது. ரு. சோ. சோ. கூ. குடியரசு இப்போது இங்கிருந்து அங்கு வரை விரிந்து பரந்து செல்கிறது. நம்முடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற இந்த விருப்பமானது நமது உள்நாட்டுப் பகைவர்களிடமிருந்து மட்டுமல்லாமல், நம்மைத் தாக்கிய அன்னியப் பகைவர்களிடமிருந்தும் நம்மை விடுவித்திருக்கிறது. ஜப்பானை மனதிற் கொண்டு நான் இதைச் சொல்கிறேன்.

அரசுறவுத் துறையில் அனைத்து உலகும் அங்கீகரிக்கும் திட்டவட்டமான ஒரு நிலையை நாம் வென்று கொண்டு விட்டோம். நீங்கள் எல்லோருமே இதைக் காண்கிறீர்கள். இதன் விளைவுகளைக் காண்கிறீர்கள். ஆனால் இதைப் பெறுவதற்கு எவ்வளவு காலமாகியுள்ளது! இப்போது பொருளாதாரக் கொள்கைத் துறையிலும் மற்றும் வாணிபக் கொள்கைத் துறையிலும் நமது உரிமைகளுக்கு நமது பகைவர்களிடமிருந்தும் அங்கீகாரம் வென்று கொண்டு விட்டோம். வாணிப ஒப்பந்தங்கள் முடிவாகியுள்ளதானது இதை நிரூபிக்கிறது.

புதிய பொருளாதாரக் கொள்கை எனப்படும் பாதையைப் பதினெட்டு மாதங்களுக்கு முன்பு மேற்கொண்ட நாம் அந்தப் பாதையிலே முன்னேறுவது நம்புதற்கு இயலாதபடி இவ்வளவு கடினமாயிருக்கக் காரணம் என்னவென்பது புரிகிறது. நாம் வாழும் இந்நாடு போரால் அப்படிக் கடுமை

யாகப் பாழ்படுத்தப்பட்டிருக்கிறது, முறையான வாழ்க் கைக்கு வழியில்லாதபடி அடித்துச் சாய்க்கப்பட்டிருக்கிறது; அந்த அளவுக்குத் துன்பப்பட்டு, அந்த அளவுக்குச் சகித்துக் கொள்ள வேண்டியிருந்ததால், வேறு வழியின்றி நாம் நமது கணக்கீடுகள் யாவற்றையும் மிகமிகச் சிறிய சதவிகிதத்தி லிருந்து — போர்முற்காலச் சதவிகிதத்திலிருந்து—ஆரம்பிக் கிறோம். நமது வாழ்க்கை நிலைமைகளுக்கு இந்த அளவு கோலையே நாம் அனுசரிக்க வேண்டியிருக்கிறது. இதைச் செய்கையில் சில சமயம் நாம் பொறுமையிழந்து கொதிப் படைகிறோம், இன்னல்கள் பிரம்மாண்டமானவை என்ற முடி வுக்கே எப்போதும் வந்தடைகிறோம். இத்துறையில் நமக்கு நாம் வகுத்துக் கொண்டுள்ள பணியினை சாதாரணமான முத லாளித்துவ நாடு ஒன்றில் இருந்து வரும் நிலைமைகளுடன் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதால், இது மேலும் பிரம்மாண்ட மானதாகத் தெரிகிறது. நமக்கு நாம் இந்தப் பணியை வகுத்துக் கொண்டோம், ஏனெனில் வழக்கமாய் இம்மாதிரி யான நிலைமைகளில் அளிக்கப்படக் கூடிய உதவியைச் செல் வம் படைத்த வல்லரசுகள் நமக்கு அளிக்குமென எதிர் பார்க்க முடியாதென்பதைப் புரிந்து கொண்டோம்.* உள் நாட்டுப் போருக்குப் பிற்பாடு அனேகமாய் முழு அளவுக்கு நம்மை எதிர்த்து மறியல் நடத்தினர், அதாவது முதலா ளித்துவ உலகில் வழக்கமாகவும் முறையாகவும் இருக்கும் படியான பொருளாதாரத் தொடர்புகளை நம் சம்பந்தமாய் நிறுவிக் கொள்ளப் போவதில்லையென்று கூறுகிறார்கள்.

---

* சுருக்கெழுத்து மூலம் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த வாசகம் மேலும் கூறுவதாவது: ''உதவி வழங்கப் பட்ட நாடு என்று ஏற்கப்பட்ட தொடரினையே பயன்படுத்தி அதன் மீது இந்த சுற்றுச் சூழல்களில் மிகவும் உயர்ந்ததான இன்னின்ன விகிதத்திலான வட்டி சுமத்தப்பட்டது என்று நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டாலுங்கூட. சரியாகக் கூறினால் இந்த வட்டி விகிதங்கள் எவ்வகையிலும் உதவியாக இரா. மொட்டையாகக் கூறினால் அதற்கு உதவி என்னும் கண்யமான சொல்லை விட வேறு ஒரு சொல்லே தகுதியாக இருக்கும், ஆனால் இந்த வழக்கமான நிபந்தனைகளும் கூட நமக்குக் கடினமானதாக இருந்திருக்கும்.''—ப-ர்.

நாம் புதிய பொருளாதாரக் கொள்கையின் பாதையை மேற்கொண்டு பதினெட்டு மாதங்களுக்கு மேலாகின்றன, நமது முதலாவது சர்வதேச உடன்படிக்கையைச் செய்து கொண்டு அதற்கும் அதிகமான காலமாகிறது. அப்படியும் முதலாளித்துவ வர்க்கத்தார் எல்லோரும், அரசாங்கங்கள் யாவும், நம்மை எதிர்த்து நடத்தும் இந்த மறியல் ஓய வில்லை, தொடர்ந்து நம்மைப் பாதித்து வருகிறது. புதிய பொருளாதார நிலைமைகளை நாம் கைக்கொண்ட போது, இதன்றி வேறு எதையும் நாம் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் நாம் மாற்றத்தைச் செய்தே ஆக வேண்டும், தன்னந்தனியே நின்று வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்பதில் நமக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. நமக்கு அளிக்கப்படக் கூடிய எந்த உதவியும், முதலாளித்துவ வல்லரசுகள் நமக்கு அளிக்கப் போகும் எந்த உதவியும், இந்த நிலைமையை அகற்றுவதற்குப் பதில், சாத்தியமாயும் மிகப் பெருவாரி யான சந்தர்ப்பங்களில், இதை மேலும் கடுமையாக்கும், உக்கிரமடையச் செய்யும் என்பதாகவே தெரிகிறது—நாம் தொடர்ந்து முன்செல்லச் செல்ல இது மேலும் மேலும் தெளிவாகி வருகிறது. ''தன்னந்தனியே''—என்று நாம் நமக்குக் கூறிக் கொண்டோம். ''தன்னந்தனியேதான்'' என்றே கூறுகிறது அனேகமாய் ஒவ்வொரு முதலாளித்துவ நாடும்—நாம் எந்த உடன்பாடும் செய்து கொண்ட, எந்தக் காரியத்தையும் மேற்கொண்ட, எந்தப் பேச்சுவார்த்தை களும் தொடங்கியுள்ள ஒவ்வொரு முதலாளித்துவ நாடும். விசேஷ இன்னல் இங்கேதான் காணக் கிடக்கிறது. இந்த இன்னலை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். நமக்குரிய அரசியல் அமைப்பை நாம் மூன்று ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்து கட்டி எழுப்பியுள்ளோம். நம்புதற்கரிய வீரம் நிறைந்த, நம்புதற்கரிய கடுமை வாய்ந்த வேலை அது. இது காறும் நாம் வேலை செய்து வந்த நிலையில், அநாவசியமாய் எதையும் உடைத்தெறிகிறோமா என்று பார்ப்பதற்கு நமக்கு அவகாசம் இருக்கவில்லை; தியாகங்கள் மிகுதியாகி விடுமோ என்று கவனிக்க அவகாசம் இருக்கவில்லை. ஏனெனில் தியாகங் கள் நிறைவே புரிய வேண்டியிருந்தது, ஏனெனில் அப்போது

நாம் தொடங்கிய போராட்டம் பழைய சமுதாய அமைப்புக்கு எதிரான ஜீவமரணப் போராட்டமாகும் (நீங்கள் இதை நன்கு அறிவீர்கள், இதை விவரிக்கத் தேவையில்லை). வாழ்வதற்கான, சமாதான வழியில் வளர்ச்சி காண்பதற்கான உரிமை நமக்கு வரப் பெறுவதற்காக அவ்வமைப்பை எதிர்த்து நாம் போராடினோம். இந்த உரிமையைப் பெறுவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். இதைச் சொல்வது நாமல்ல; நம் பால் பாரபட்சம் கொண்டவர்களாகக் குற்றம் சாட்டப்படக் கூடிய சாட்சிகள் அளித்திடும் சாட்சியமல்ல இது. நமது பகைவர்களது முகாமில் இருப்போரும், ஆகவே இயல்பாகவே பாரபட்சம் கொண்டோருமான—நமக்கு ஆதரவாக அல்ல, எதிராகப் பாரபட்சம் கொண்டோருமான—சாட்சிகள் அளித்திடும் சாட்சியம் இது. இந்த சாட்சிகள் தெனீக்கினது முகாமில் இருந்தவர்கள், கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலான ஆட்சியை நெறியாண்மை புரிந்தவர்கள். இவர்களது பாரபட்சம் நமக்குப் பெருத்த சேதம் விளைவித்ததை, பிரம்மாண்ட நாசத்தை உண்டாக்கியதை நாம் அறிவோம். இவர்களால் நாம் எல்லா வகையான நஷ்டங்களுக்கும் ஆட்பட்டோம்; எல்லா விதமான செல்வங்களையும், செல்வத்துக்கு எல்லாம் செல்வமான மனித உயிர்களும் உட்பட யாவற்றையும் நம்புதற்கரிய பெரிய அளவில் இழந்தோம். இப்போது நாம் நமது பணிகளை மிகவும் கவனமாக அலசி ஆராய்ந்தாக வேண்டும்; நமது முந்திய ஆதாயங்களைக் கைவிடாதிருப்பதே பிரதான பணியாய் இருக்குமென்பதைப் புரிந்து கொண்டாக வேண்டும். நமது பழைய ஆதாயங்களில் ஒன்றையேனும் நாம் கைவிட மாட்டோம். (க ர வொ லி.) ஆயினும் முற்றிலும் புதியதான பணி ஒன்று நம்மை எதிர்நோக்குகிறது; பழையது மிகத் தெளிவான முட்டுக்கட்டையாகிவிடலாம். இந்தப் பணியைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாகவே இருக்கும். எனினும் இது புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அப்போதுதான், நம்மை வெகுவாக மாற்றிக் கொள்வது அவசியமாய் இருக்கும் ஒரு நேரத்தில், நாம் எப்படி வேலை செய்வதென்று கற்றுக் கொள்ள முடியும். தோழர்களே, இந்தச் சொற்

களும் கோஷங்களும் புரியும்படியானவையே என்று நினைக் கிறேன். ஏனெனில், கட்டாயத்தின் காரணமாய் நான் ஏறத் தாழ ஓராண்டாய் இங்கில்லாமற் போக நேர்ந்த இக்காலத் தில், நடப்பு வேலைகளை நீங்கள் நடைமுறையில் நிறைவேற்றி வந்திருக்கிறீர்கள்; பல்வேறு வழிகளிலும் நூற்றுக் கணக் கான சந்தர்ப்பங்களிலும் இது பற்றிப் பேசியும் ஆலோசித் தும் வந்திருக்கிறீர்கள். இது சம்பந்தமான உங்களது சிந்தனை கள் ஒரேயொரு முடிவுக்கே—அதாவது, இதுகாறும் உள் நாட்டுப் போரில் நாம் கையாண்ட நெகிழ்வினை மேலும் அதிக அளவுக்கு இப்போது வெளிப்படுத்தியாக வேண்டு மென்ற ஒரேயொரு முடிவுக்கே—இட்டுச் செல்ல முடியும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

பழையதை நாம் கைவிடலாகாது. முதலாளித்துவ வல் லரசுகளுக்கு நம்மைத் தகவமைக்கும் வரிசையான பல சலு கைகள், அவற்றை நம்முடன் தொடர்பு கொள்ளச் செய்து அவற்றின் இலாபத்துக்கு உறுதியளிக்கும் சலுகைகளாகும். இந்த இலாபம் சில நேரங்களில் அதற்குரிய அளவை விட அதிகமானதாய் இருந்தாலும் இருக்கலாம். அதே போது உற்பத்திச் சாதனங்களில் ஒரு சொற்ப அளவையே நாம் விட்டுக்கொடுக்கிறோம், அனேகமாய் முழு அளவுக்கு உற் பத்திச் சாதனங்கள் அரசின் வசமே இருந்து வருகின்றன. ஆங்கிலேயர் உர்கார்ட் முன்மொழிந்த சலுகை குறித்து சில நாட்களுக்கு முன்பு பத்திரிகைகள் விவாதித்தன.[80] இது காறும் இவர் அனேகமாய் உள்நாட்டுப் போரின் காலம் முழுதும் நமக்கு எதிராய் இருந்துள்ளவர். ''உள்நாட்டுப் போரில் ருஷ்யாவுக்கு எதிராய், இப்படியும் அப்படியும் நமக்கு இழப்பு உண்டாக்கத் துணிந்த இந்த ருஷ்யாவுக்கு எதிராய், நமது குறிக்கோளை நாம் ஈடேற்றிக் கொள்வோம்'' என்று இவர் கூறுவது வழக்கம். அதற்கெல்லாம் பிற்பாடும் நாம் அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டிய தாயிற்று. பேச்சுவார்த்தைகள் நடத்த முடியாதென நாங்கள் மறுக்கவில்லை, மிகுந்த மகிழ்ச்சியுடன் நாம் இவற்றை ஆரம் பித்தோம். ஆனால் நாங்கள் சொன்னோம்: ''மன்னிக்க வேண் டும், நாங்கள் வென்று பெற்றுக் கொண்டதை நாங்கள்

கைவிடப் போவதில்லை. எங்கள் ருஷ்யா மிகப் பெரியது, எங்கள் பொருளாதார உள்ளாற்றல்கள் அளவு கடந்தவை. ஆகவே உங்களது அன்பான முன்மொழியை நிராகரிக்கா திருப்பதே நியாயமென எங்களுக்குப் படுகிறது. இந்த முன் மொழியை நிதானமாய், தொழில்-வாணிகத் துறையினருக்கு உரிய முறையில் விவாதிப்போம்.'' மெய்தான், எங்களிடை யிலான முதலாவது பேச்சு பயன் தரவில்லை. ஏனெனில் அரசியல் காரணங்களை முன்னிட்டு நாம் அவருடைய முன் மொழியை ஒத்துக் கொள்ள முடியாமற் போயிற்று. நாம் அதை நிராகரிக்க வேண்டியிருந்தது. ஜலசந்திகள் பற்றிய, டார்டனல்ஸ் ஜலசந்தி பற்றிய பேச்சுவார்த்தைகளில்[81] நாம் பங்கு கொள்ளும் சாத்தியப்பாட்டிற்குப் பிரிட்டிஷார் இடம் தராமல் இருந்த வரை, நாம் அதை நிராகரிக்க வேண்டி யிருந்தது. ஆனால் இவ்வாறு நிராகரித்ததும் உடனே நாம் இந்த விவகாரத்தின் கருப்பொருள் குறித்து பரிசீலனை செய்ய வேண்டியதாயிற்று. இதனால் நமக்கு அனுகூலம் உண்டா, இல்லையா என்றும், இந்தச் சலுகை உடன் பாட்டைச் செய்து கொள்வதால் நாம் இலாபமடைவோமா, எந்நிலைமைகளில் இலாபகரமாக இருக்கும் என்றும் நாங் கள் விவாதித்தோம். இதற்கான விலை குறித்து நாங்கள் பேச வேண்டியதாயிற்று. தோழர்களே, பிரச்சினைகளைத் தற் போது நாம் அணுகும் முறை முன்பு நாம் அணுகி வந்த முறையிலிருந்து எந்த அளவுக்கு மாறுபாடானது என்பதை இது உங்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்துகிறது. முன் பெல்லாம், ''எனது உயிரைத் தருகிறேன்'' என்பதாகக் கம்யூனிஸ்ட் கூறினார். அது அவருக்கு மிக எளியதாகத் தோன்றியது, ஆயினும் உண்மையில் எப்போதும் அது அவ் வளவு எளியதாக இருக்கவில்லை. ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நாம் தற்போது அறவே வேறொரு விதமான பணியை எதிர்நோக்குகிறோம். தற்போது நாம் யாவற்றையும் கணக் கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். காரியக் கண்ணோட்ட முடையவராகச் செயல்பட நீங்கள் ஒவ்வொருவரும் கற்றுக் கொண்டாக வேண்டும். முதலாளித்துவச் சுற்றுச்சார்பில் நாம் அழிந்துவிடாமல் நிலைத்திருக்க எப்படி உறுதி தேடிக்

கொள்ள முடியும், நமது பகைவர்கள் மூலம் நாம் எப்படி இலாபமடைய முடியும் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமது பகைவர்கள் பேரம் பண்ணும் பேர்வழிகளே. எப்படிப் பேரம் பண்ணுவது என்பதை அவர்கள் எப்போதும் மறந்துவிடவில்லை. நம் செலவிலே பேரம் பண்ணப் பார்ப்பவர்கள் அவர்கள். அதையும் நாம் மறந்துவிடவில்லை. வாணிகப் பிரமுகர்கள் எங்கெனும் சாதுவான பிராணிகளாக மாறி வருவதாகவோ, அவர்கள் இப்படி மாற்றமடைந்து, பயன் கருதாமலே எல்லா வகையான பேறுகளையும் நமக்கு அளிக்க முன்வருவதாகவோ நாம் கற்பனை செய்து கொள்ளவில்லை, இல்லவே இல்லை. அப்படி ஒன்றும் நடைபெறாது, நாம் அப்படி ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எதிர்த்து நின்று போராடப் பழகிக் கொண்டவர்களாகிய நாம் தீர்வுக்கான வழியைக் கண்டறிந்து கொள்வோம், வாணிகம் புரியவும் இலாபமடையவும் கடினமான பொருளாதார சூழ்நிலைமைகளிலிருந்து தீங்கின்றி வெளிப்படவும் வல்லவர்களாக இருப்போம் என்பதன் அடிப்படையிலே செயல்படுகிறோம். அது மிகவும் கடினமான பணி. தற்போது நாம் அந்தப் பணியில்தான் ஈடுபட்டுள்ளோம். பழைய பணிக்கும் புதிய பணிக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமுள்ள பெரிய வேறுபாட்டை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். இந்த வேறுபாடு எவ்வளவுதான் பெரிதாய் இருப்பினும், போரின் போது நாம் தந்திரயுத்தியைக் கையாளக் கற்றுக் கொண்டோம். இப்போது நாம் செய்ய வேண்டியிருக்கும், செய்து கொண்டிருக்கும் தந்திரயுத்தி மிகமிகக் கடினமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இதுவே நமது கடைசித் தந்திரயுத்தி என்பதாகத் தெரிகிறது. இத்துறையிலே நமது வலிமையை நாம் சோதித்துப் பார்த்தாக வேண்டும்; நேற்றைய படிப்பினைகளை மட்டுமல்லாது அவற்றுக்கு மேலும் கற்றுக் கொண்டு விட்டோம், அடிப்படைகளைத் திருப்பிச் சொல்வதுடன் நின்றுவிடவில்லை என்பதை நிரூபித்தாக வேண்டும். மன்னிக்க வேண்டும், நாம் மேலும் மறுபடியும் கற்க ஆரம்பித்துள்ளோம். திட்டவட்டமாகவும் எல்லோருக்கும்

தெட்டத்தெளிவாகவும் வெற்றி பெறும் வண்ணம் மேலும் மறுபடியும் நாம் கற்றுக் கொள்வோம். இப்படி மேலும் மறுபடியும் கற்கும் பொருட்டு, ஒருவருக்கொருவர் திரும்பவும் திடமான வாக்குறுதி அளித்துக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன்: புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாம் திரும்பிச் செல்கிறோம் என்றாலும், புதியவற்றில் எதையும் சரணடைக்காமல், அதே போது எந்த அரசையும்—எவ்வளவுதான் அது நமக்குப் பகையாய் இருப்பினும்—நம்முடன் தொடர்புகள் நிறுவி நம்முடன் கொள்வினை கொடுப்பனை கொள்ளும்படிக் கட்டாயப்படுத்தக் கூடிய அனுகூலங்களை முதலாளிகளுக்கு அளித்திடும்படியான முறையில் திரும்பிச் செல்கிறோமென வாக்குறுதி அளித்துக் கொள்ள வேண்டும். தலையீடு அனைத்துக்கும் தலைமையானவரும் முதுகெலும்பாகவும் இருந்தவரான உர்கார்ட்டுடன் தோழர் கிராசின் பல தரம் பேசிவிட்டு வந்திருக்கிறார். இந்த உர்கார்ட் ருஷ்யா எங்கிலும் பழைய அமைப்பை எப்படியாவது நம் மீது திணித்திட எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், தம்முடன், அதாவது கிராசினுடன் அதே மேசையின் எதிரே அமர்ந்து கொண்டாரென்றும், ''விலை என்ன? எவ்வளவு? எத்தனை ஆண்டுகளுக்கு?'' என்று கேட்க முற்பட்டாரென்றும் தோழர் கிராசின் கூறுகிறார். (கர வொலி.) சில சலுகை ஒப்பந்தங்கள் முடித்துக் கொண்டு, உடன்படிக்கை உறவுகள் கொள்வதிலிருந்து இன்னும் இது நெடுந்தொலைவிலே இருப்பதுதான்—இந்த உடன்படிக்கை உறவுகள் முதலாளித்துவச் சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் முற்றிலும் கறாராகவும் கட்டுப்படுத்துகின்றவையாகவும் இருப்பவை. ஆயினும் அந்த நிலையை நாம் வந்தடையப் போகிறோம், அனேகமாய் வந்தடைந்து விட்டோம் என்பதை இப்போது காண முடிகிறது. ஆனால் முழு அளவுக்கு இன்னும் நாம் வந்தடைந்தாகவில்லை. தோழர்களே, அதை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும், தலைக்கனம் கொண்டு விடலாகாது. நம்மை வலிமையும் சொந்த காலில் நிற்கும்படியான உறுதியும் பெறச் செய்யக் கூடியவற்றை—எந்த முதலாளித்துவ ஒப்பந்தங்களும் நம்மை மிரள வைத்துவிட

முடியாது, ஒப்பந்தம் எவ்வளவுதான் கடினமானதாய் இருப்பினும் நாம் அதைச் செய்து முடிப்போமென்றும் முழு ஆழத்துக்கும் அதைப் பரிசீலித்துத் தீர்வு காண்போமென்றும் அசங்காத திடநம்பிக்கை அளிக்கக் கூடியவற்றை—முழு அளவுக்குச் சாதித்துக் கொள்ளும் நிலையிலிருந்து இன்னும் நாம் தொலைவிலேதான் இருக்கிறோம். எனவேதான, இத்துறையில் நாம் ஆரம்பித்திருக்கும் வேலை—அரசியல் வேலையும் கட்சி வேலையும்—தொடர்ந்து செய்யப்பட்டாக வேண்டும். எனவேதான் நாம் பழைய முறைகளிலிருந்து முற்றும் புதியனவற்றுக்கு மாறிச் சென்றாக வேண்டும்.

பழைய பொறியமைவுதான் இன்னமும் நம்மிடம் இருந்து வருகிறது. இதனைப் புதிய வழிகளுக்கு ஏற்றதாகத் திருத்தியமைப்பதே இப்போது நம் முன்னுள்ள பணி. உடனே நாம் இதைச் செய்துவிட முடியாது. ஆனால் நம்மிடம் உள்ள கம்யூனிஸ்டுகள் தக்க இடங்களில் அமர்த்தப்படும்படி நாம் கவனித்தாக வேண்டும். நமக்கு வேண்டியது என்னவென்றால், அவர்கள் — இந்தக் கம்யூனிஸ்டுகள் — தமக்கு ஒதுக்கப்படும் பொறியமைவைக் கட்டுப்பாடு செய்தாக வேண்டும், நம்மிடையே அடிக்கடி நிகழ்வது போல் அந்தப் பொறியமைவு அவர்களைக் கட்டுப்பாடு செய்வதாகிவிடக் கூடாது. இதை நாம் மூடிமறைக்கலாகாது, ஒளிவு மறைவின்றி இதைப் பற்றிப் பேச வேண்டும். நம்மை எதிர்நோக்கும் பணிகளும் இன்னல்களும் இவையே. நாம் நமது நடைமுறைப் பாதையிலே நடைபோட ஆரம்பித்திருக்கும் இத்தருணத்தில், சோஷலிசத்தை விழாக் கோலம் பூண்டு தகதகக்கும் உற்சவமூர்த்தியாகப் பாவித்து அவனை நாம் அணுகலாகாது என்னும்படியான இத்தருணத்தில், நம்மை எதிர்நோக்குகின்றவை இவை. நாம் சரியான திசையில் சென்றாக வேண்டும், யாவும் சரிபார்க்கப்படும்படிக் கவனித்துக் கொண்டாக வேண்டும்; பெருந்திரளினர், நாட்டு மக்கள் அனைவரும் நாம் பின்பற்றும் பாதையினைச் சரிபார்த்து ''ஆம், பழைய அமைப்பை விட இது சிறப்பானது'' என்று சொல்லும்படி நாம் செயல்பட்டாக வேண்டும். இதுதான் நாம் நமக்கு வகுத்து அமைத்துக் கொண்டுள்ள பணி. நாட்

டின் மக்களது மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் மிகச் சிறியதேயான நமது கட்சி இந்தப் பணியைச் சமாளித்து வந்திருக்கிறது. இந்தச் சின்னஞ் சிறிய உட்கருவானது யாவற்றையும் திருத்தியமைத்திடும் பணி யினைத் தனக்கு வகுத்துக் கொண்டுள்ளது, இந்தப் பணியை அது செய்து முடிக்கவே போகிறது. மக்களது ஜீவிதத்துக் கான ஓர் இலட்சியமே அன்றி இது கற்பனுவாதப் படைப் பல்ல என்பதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். நாம் எல்லோரும் இதனைக் கண்ணுற்றோம். ஏற்கெனவே இது செய்யப்பட்டிருக்கும் ஒன்று. யாவற்றையும் நாம் திருத்தி யமைத்தாக வேண்டும்; மிகப் பெருவாரியான தொழிலாளர் களும் விவசாயிகளும் கொண்ட பெருந்திரள் உழைக்கும் மக்கள் நம்மைப் பார்த்து ''உங்களைப் போற்றிப் புகழ்வது நாங்களே அன்றி நீங்களல்ல; பிரமாத பலன்கள் தந்திருக் கும் சாதனைகளை நீங்கள் சாதித்திருக்கிறீர்கள்; அறிவுடைய வர் எவரும் இனி எந்நாளும் பழைய நிலைமைகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமெனக் கனவிலும் நினைக்க மாட் டார்'' என்று சொல்லும் விதத்தில் நாம் திருத்தியமைத் தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலையை இன்னும் நாம் வந்தடைந்தாகவில்லை. எனவேதான் **புதிய பொருளாதாரக் கொள்கை நடப்புக் காலத்துக்குரிய பிரதான கோஷமாய், அனைத்தும் தழுவிய இன்றையக் கோஷமாய் இருந்து வருகிறது.** நேற்று நாம் கற்றுக் கொண்ட கோஷங்களில் எந்த ஒன்றை யும் நாம் மறந்துவிடப் போவதில்லை. மிகவும் அமைதியாக, கிஞ்சித்தும் தயக்கமின்றி நாம் இதைச் சொல்ல முடியும், எவரிடத்தும் சொல்ல முடியும். நாம் மேற்கொள்ளும் ஒவ் வொரு நடவடிக்கையும் இதைத் தெளிவுபடுத்திக் காட்டு கிறது. ஆனல் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு இனி மேல்தான் நம்மை நாம் தகவமைத்துக் கொண்டாக வேண் டும். அதன் பாதகக் கூறுகளை எப்படி வென்று முன்செல் வதென, குறைந்தபட்சத் திட்டவட்ட அளவுக்கு எப்படி அவற்றைக் குறையச் செய்வதென நாம் தெரிந்து கொண் டாக வேண்டும். இந்தப் பாதகக் கூறுகளைப் பட்டியலிட்டுக் கூறத் தேவையில்லை, நீங்கள் நன்கு அறிந்தவையே இவை.

யாவற்றுக்கும் சாமர்த்தியமாக எப்படி ஏற்பாடு செய்வதென்று நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். இதைச் செய்ய நமது சட்டங்கள் நமக்கு எல்லா வாய்ப்பும் அளிக்கின்றன. எல்லாவற்றையும் ஒழுங்காய் நம்மால் நடந்தேறச் செய்ய முடியுமா? இன்னமும் அது தீர்வுக்குரிய நிலையிலிருந்து தொலைவிலேதான் இருக்கிறது. விவகாரங்களை நாம் ஆய்ந்தறிந்து வருகிறோம். இன்னாரது உடைமையாக இருக்கும் இப்படிப்பட்ட ஆலையில் வாடகை நிபந்தனைகள் இப்படியிப்படி இருக்க, நமது கம்யூனிஸ்டுத் தோழர் நிர்வாகியாக இருக்கும் இன்னொரு ஆலையில் நிபந்தனைகள் இப்படியிப்படி இருப்பதாய் உங்களுக்குத் தெரியப்படுத்தும் பத்துப்பன்னிரண்டு கட்டுரைகளை நமது கட்சிச் செய்தியேட்டின் ஒவ்வோர் இதழும் உங்களுக்கு அளிக்கிறது. அது இலாபம் தருவதாய் இருக்கிறதா, இல்லையா? செலவுகளுக்கு ஈடு செய்யும் அளவில் அது வருமானம் பெறுகிறதா, இல்லையா? அன்றாடப் பிரச்சினைகளின் மையக் கூறினை நாம் அணுகிச் சென்றுள்ளோம். இது பிரம்மாண்டமான சாதனையாகும். சோஷலிசமானது இப்போது தொலை நெடுங் காலத்துக்குரிய விவகாரமாய் இருக்கவில்லை, அல்லது கருத்தியலான ஒரு சித்திரமாகவோ, புனிதத் தேவ உருவமாகவோ இருக்கவில்லை. தேவ உருவங்களைப் பற்றிய நமது கருத்து மாற்றமின்றி அப்படியேதான் — படுமோசமானதாகவே — இருக்கிறது. சோஷலிசத்தை நாம் அன்றாட வாழ்க்கையாகப் பரிமளிக்கச் செய்கிறோம், இங்கே விவகாரங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்று நாம் கவனித்துக் கொண்டாக வேண்டும். இதுதான் நமது இந்நாளையப் பணி, நமது சகாப்தத்துக்குரிய பணி. இந்தப் பணி கடினமானதுதான் என்றாலும், நமது முந்திய பணியுடன் ஒப்பிடுகையில் புதுமையானதே என்றாலும், இதை நிறைவேற்றுகையில் எதிர்ப்பட வேண்டியுள்ள இடர்கள் எண்ணற்றவை எனினும், நாம் எல்லோருமாய் ஒன்றுசேர்ந்து, என்னதான் விலை கொடுக்க நேர்வதாயினும்—ஒரே நாளில் அல்ல, ஒரு சில ஆண்டுகளில்—இப்பணியை நிறைவேற்றுவோம்; புதிய பொருளாதாரக் கொள்கைக்குரிய ருஷ்யா இவ்வழியில் சோஷலிச

ருஷ்யாவாக மாற்றமடையும் என்ற திடநம்பிக்கையைத் தெரிவித்து எனது உரையை முடிப்பதற்கு அனுமதியுங்கள். (நீடித்த ஆரவாரமான கரவொலி.)

பிராவ்தா, இதழ் 263,
நவம்பர் 21, 1922

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 300-309

வி. இ. லெனினுடைய
கடைசிக் கடிதங்களும் கட்டுரைகளும்

டிசம்பர் 23, 1922 — மார்ச் 2, 1923

1

காங்கிரசுக்குக் கடிதம்[82]

இந்தக் காங்கிரசில் நமது அரசியல் கட்டமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கூற நினைக்கிறேன்.

நான் மிகுந்த முக்கியத்துவம் அளித்திடும் எண்ணங்களை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இவற்றில் முதல் இடத்துக்கு உரியதாய் நான் கருதுவது என்னவெனில், மத்தியக் கமிட்டி உறுப்பினர்களது எண்ணிக்கையைச் சில பத்துகளாக, அல்லது ஒரு நூருகவுங்கூட அதிகமாக்க வேண்டும். இந்தச் சீர்திருத்தம் செய்யப்படாத வரை, நிகழ்ச்சிகளின் போக்கு நமக்கு அதிகம் சாதகமாய் இல்லாமற் போகுமாயின் (சாதகமாய் இருக்குமென நிச்சயமாகச் சொல்ல முடியாது) நமது மத்தியக் கமிட்டி பெரிய அபாயத்துக்கு உள்ளாக நேரலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

பிறகு, இந்தக் காங்கிரஸ் சிற்சில நிபந்தனைகளின் பேரில் அரசுத் திட்டக் கமிஷனின் தீர்மானங்களுக்கு, சட்டங்களுக்கு உரித்தான செயல் வலிமை அளித்திட வேண்டுமென்றும், இவ்விதத்தில் தோழர் திரோத்ஸ்கியின் விருப்பங்கள்—குறிப்பிட்ட ஓர் அளவுக்கு, குறிப்பிட்ட சில நிபந்தனைகளுடன்—ஈடேற்றப்பட வேண்டுமென்றும் முன்மொழிய விரும்புகிறேன்.

முதலாவது விவகாரத்தை, அதாவது மத்தியக் கமிட்டி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதைப்

பொறுத்த வரை, மத்தியக் கமிட்டிக்குள்ள செல்வாக்கை உயர்த்தும் பொருட்டும், நமது நிர்வாகப் பொறியமைவை முழு முனைப்புடன் செம்மை செய்திடும் பொருட்டும், மத்தியக் கமிட்டியின் சிறு பிரிவுகளிடையே எழக் கூடிய மோதல்கள் கட்சியின் எதிர்காலத்துக்கு மிதமிஞ்சிய முக்கியத்துவம் அடைந்துவிடாதபடித் தடுக்கும் பொருட்டும் இது அவசியமென்று நினைக்கிறேன்.

தொழிலாளி வர்க்கத்திடமிருந்து 50லிருந்து 100 வரையிலான மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் வேண்டுமெனக் கோருவதற்கு நமது கட்சிக்கு முழு உரிமை உண்டென்றும், அந்த வர்க்கத்தின் சக்திகளை மட்டுமீறிய சுமைக்கு உட்படுத்தாமல் இவர்களை அதனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென்றும் எனக்குப் படுகிறது.

இத்தகைய ஒரு சீர்திருத்தம் நமது கட்சியின் நிலைப்பாட்டை வெகுவாய் அதிகரிக்கச் செய்யும்; பகை அரசுகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் நிலையில் அது புரிய வேண்டியிருக்கும் போராட்டத்தின் கடுமையைத் தணியச் செய்வதாய் இருக்கும்—வருகிற சில ஆண்டுகளில் இந்தப் போராட்டம் என் அபிப்பிராயத்தில் மேலும் உக்கிரமடையக் கூடும், உக்கிரமடையவும் செய்யும். நமது கட்சியின் நிலைப்பாடு இத்தகைய ஒரு நடவடிக்கையால் ஆயிரம் மடங்கு உறுதியடையும் என்று நினைக்கிறேன்.

லெனின்

டிசம்பர் 23, 1922.
எழுதிக் கொண்டவர்: ம. வ.*

2

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 24, 1922

மேலே நான் மத்தியக் கமிட்டியின் நிலைப்பாடு என்று சொன்னேன். இதன் மூலம் பிளவுக்கு எதிரான நடவடிக்கை

* ம. வ.—மரீயா வலோதிச்செவா, லெனினது செயலாளர்.—ப-ர்.

களைக் குறிப்பிடுகிறேன் — இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குச் சிறிதேனும் சாத்தியப்பாடு இருக்கும் அளவுக்கு. ஏனெனில் ருஸ்கயா மீசில்[83] ஏட்டில் வெண்படையாள் (எஸ். எஸ். ஓல்டன்புர்காகவே இருக்கும் போல் தெரிகிறது) கூறியது சரியானதே: முதலாவதாக, சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான வெண்படையினர் போராட்டத்தில் அவர், நமது கட்சியில் ஏற்படக் கூடிய பிளவை நம்பியிருந்தார்; இரண்டாவதாக, நமது கட்சியில் எழக் கூடிய கடுமையான கருத்துவேறுபாடுகள் இந்தப் பிளவை ஏற்படுத்துமென நம்பியிருந்தார்.

நமது கட்சி இரண்டு வர்க்கங்களைத் தனக்கு ஆதாரமாகக் கொண்டு செயல்படுகிறது. ஆகவே அதன் நிலைப்பாட்டின்மை சாத்தியமானதே. இந்த இரு வர்க்கங்களிடையே உடன்பாடு இல்லையெனில், அதன் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகிவிடும். அப்படி நேர்ந்திடுமாயின் இந்த அல்லது அந்த நடவடிக்கையும், பொதுவாக நமது மத்தியக் கமிட்டியின் நிலைப்பாடு பற்றி எல்லாப் பேச்சுமே வீண்தான். அந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் எவ்வகையான நடவடிக்கைகளாலும் பிளவைத் தடுக்க முடியாது. ஆனால் அதைப் பற்றி விவாதிக்கத் தேவையில்லாதபடி அது அவ்வளவு தொலைவான எதிர்காலத்துக்கு உரியது, அரிதிலும் அரிதாகவே நிகழக் கூடியது என்பதே எனது நம்பிக்கை.

உடனடி எதிர்காலத்தில் பிளவு ஏற்பட்டுவிடாதபடி உறுதி செய்யும்படியான நிலைப்பாட்டையே நான் மனதிற் கொண்டுள்ளேன். தனிப்பட்டோரது சொந்த இயல்புகள் குறித்துச் சில கருத்துக்களை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

இந்த நோக்குநிலையிலிருந்து நிலைப்பாட்டுப் பிரச்சினையில் ஸ்தாலினையும் திரோத்ஸ்கியையும் போன்ற மத்தியக் கமிட்டி உறுப்பினர்களே பிரதான காரணக் கூறுகளாய் இருப்பதாய் நான் நினைக்கிறேன். பிளவு ஏற்படும்படியான அபாயத்தில் பெரும் பகுதி இவர்கள் இடையிலான உறவுகளிலிருந்தே எழுகிறதென்று நினைக்கிறேன். இந்தப் பிளவு தவிர்க்கப்படக் கூடியதே. ஏனைய பலவற்றுடன்கூட மத்-

தியக் கமிட்டி உறுப்பினர்களது எண்ணிக்கையை 50 அல்லது 100ஆக அதிகமாக்குவதானது என் அபிப்பிராயத்தில், இந்த நோக்கம் ஈடேற உதவியாய் இருக்கும்.

தோழர் ஸ்தாலின் பொதுச் செயலாளராகி விட்டதால் அவர் கையில் வரம்பு கடந்த அதிகாரம் குவிந்திருக்கிறது. இந்த அதிகாரத்தை எப்போதும் அவர் போதுமான எச்சரிக்கை உணர்வுடன் பயன்படுத்தக் கூடியவரா என்பது குறித்து நான் உறுதியாகச் சொல்வதற்கில்லை. மறு புறத்தில், தோழர் திரோத்ஸ்கி தனிப்பட வேறுபடுத்திக் காட்டப்படுவது—போக்குவரவு மக்கள் கமிசாரகம் பற்றிய பிரச்சினையில், மத்தியக் கமிட்டியை எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் நிரூபித்திருப்பது போல்—உன்னதச் செயலாற்றலால் மட்டுமல்ல. தற்போதைய மத்தியக் கமிட்டியில் தனிப்பட்ட முறையில் அவரே யாவரிலும் வல்லமை வாய்ந்தவர் எனலாம். ஆனுல் அவர் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிருர், பணியின் முழுக்க முழுக்க நிர்வாகத் தன்மையதான தரப்பில் அளவு மீறி மூழ்கிவிடுகிறவராகவும் தம்மைக் காட்டிக் கொண்டிருக்கிருர்.

தற்போதைய மத்தியக் கமிட்டியின் இரண்டு சிறந்த தலைவர்களது இவ்விரு இயல்புகளும் மனமறியாத முறையில் பிளவுக்கு இட்டுச் சென்றுவிட முடியும். நம் கட்சி இதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாவிடில், இந்தப் பிளவு எதிர்பாராத விதத்தில் வந்து நேரலாம்.

மத்தியக் கமிட்டியின் ஏனைய உறுப்பினர்களது தனிப்பட்ட சொந்த இயல்புகள் குறித்து மேலும் தொடர்ந்து நான் மதிப்பீடுகள் அளிக்க வேண்டாம். ஸினேவியெவ், காமெனெவ் இவர்களது அக்டோபர் சம்பவம்[84] அகஸ்மாத்தாய் நிகழ்ந்ததல்ல என்பதை மட்டும் நினைவூட்டுகிறேன். ஆனுல் அதற்குரிய குற்றம் தனிப்பட்ட முறையில் அவர்களுக்கே உரியதாய் அவர்கள் மீது சுமத்தப்படலாகாது, போல்ஷிவிசமல்லாத நிலையை அனுசரித்ததற்கான குற்றம் எப்படி திரோத்ஸ்கியின் மீது சுமத்தப்படக் கூடாதோ அதே போல.

மத்தியக் கமிட்டியின் இளம் உறுப்பினர்கள் குறித்துப் பேசுகையில், புஹாரினேயும் பியத்தக்கோவையும் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என் கருத்துப்படி அவர்கள் (யாவரிலும் இளையவர்களில்) தலைசிறந்தவர்கள். அவர்கள் குறித்து, பின்வருவதை மனதில் கொண்டாக வேண்டும்: புஹாரின் கட்சியினது மதிப்பு மிக்க ஒரு பிரதான தத்துவார்த்தி மட்டுமன்றி, கட்சி அனைத்தின் அபிமானத்துக்கு உரியவராய் நியாயமாகவே கருதப்படுகிறவரும் ஆவார்; ஆனால் அவரது தத்துவார்த்தக் கருத்தோட்டங்களைப் பெரிய நிபந்தனை வரையறைகளுக்கு உட்பட்டே முழு அளவுக்கு மார்க்சியக் கருத்தோட்டங்களாக வகைப்படுத்த முடியும், ஏனெனில் பண்டிதப் புலமைவாதம் வாய்ந்த ஏதோ ஒன்று அவரிடம் காணப்படுகிறது (இயக்கவியலை அவர் எந்நாளும் ஆய்ந்தறிந்ததில்லை, எந்நாளும் அதைப் பூரணமாக உணர்ந்தவரல்ல என்று நினைக்கிறேன்).

டிசம்பர் 25. பியத்தக்கோவைப் பொறுத்த வரை, சந்தேகத்துக்கு இடமின்றி அவர் உன்னதமான திடச் சித்தம் கொண்டவர்தான், உன்னதமான செயலாற்றல் படைத்தவர்தான். ஆனால் பொறுப்பான அரசியல் விவகாரத்தில் அவரை நம்பிச் செயல்பட முடியாதபடி அப்படி அவர் நிர்வாகம் புரிவதிலும் பணியின் நிர்வாகத் தன்மையதான தரப்பிலும் அளவு மீறிய ஆர்வம் கொண்டு விடுகிறார்.

இந்த இரு குறிப்புரைகளும், தலைசிறந்த, பற்றுறுதி வாய்ந்த கட்சி ஊழியர்களான இவர்கள் இருவரும் தமது அறிவை உயர்த்திக் கொள்வதற்கும் தமது ஒருச்சார்பினைத் திருத்திக் கொள்வதற்குமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறுகிறவர்கள் என்கிற அனுமானத்தின் பேரில் தற்போதைக்கு மட்டுமே தரப்படுகிறவை.

லெனின்

டிசம்பர் 25, 1922.
எழுதிக் கொண்டவர்: ம. வ.

1922 டிசம்பர் 24ஆம் தேதிக்
கடிதத்துடன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது

ஸ்தாலின் பெரிதும் முரட்டுச் சுபாவமுடையவராய் இருக்கிறார். இந்தக் குறைபாடு நம் மத்தியிலும் கம்யூனிஸ்டுகளாகிய நம்மிடையிலான விவகாரங்களிலும் சகித்துக் கொள்ளக் கூடியதே என்றாலும், பொதுச் செயலாளராய் இருக்கும் ஒருவரிடம் சகிக்க முடியாததாகி விடுகிறது. எனவேதான் ஸ்தாலினை அந்தப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு அவருக்குப் பதில் வேறொருவரை நியமிப்பதற்கான வழி குறித்துத் தோழர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன். இந்த வேறொருவர் ஏனைய எல்லா விதத்திலும் தோழர் ஸ்தாலினிடமிருந்து, ஒரேயொரு அனுகூலமுடையவராய் இருப்பதில் மட்டுமே—அதாவது, அதிகச் சகிப்புத் தன்மையும், அதிக விசுவாசமும், தோழர்கள் பால் அதிக நன்னயப் பாங்கும் அதிகப் பரிவுணர்வும், குறைவான தான்தோன்றிப் போக்கும், இன்ன பிறவும் உடையவராய் இருப்பதில் மட்டுமே—வேறுபடுகிறவராக இருத்தல் வேண்டும். இந்த விவரம் கவனியாது ஒதுக்கப்பட வேண்டிய சிறு விவரமாகத் தோன்றலாம். ஆனால் பிளவுக்கு எதிரான காப்பு நடவடிக்கைகளின் கண்ணோட்டத்திலும், ஸ்தாலினுக்கும் திரோத்ஸ்கிக்கும் இடையிலான உறவுநிலை குறித்து மேலே நான் எழுதியதன் கண்ணோட்டத்திலும் இது சிறு விவரமல்ல, தீர்மானகரமான முக்கியத்துவம் பெறக் கூடிய சிறு விவரமாகும்.

லெனின்

*எழுதிக் கொண்டவர்: லீ. ஃபோ.**
ஜனவரி 4, 1923

---

* லீ. ஃபோ.—லீதியா ஃபோத்தியெவா, லெனினது செயலாளர்.—ப-ர்.

3

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 26, 1922

மத்தியக் கமிட்டி உறுப்பினர்களது எண்ணிக்கை 50ஆக, அல்லது 100ஆகவுங்கூட அதிகமாக்கப்பட வேண்டுமென்பது, என் அபிப்பிராயத்தில், இரட்டை நோக்கங்களுக்கு, அல்லது மும்மடி நோக்கங்களுக்குங்கூட பயன்பட வேண்டும்: மத்தியக் கமிட்டியில் உறுப்பினர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமானோர் மத்தியக் கமிட்டியின் வேலைகளில் பயிற்சி பெறுவார்கள், தெரியாத் தனமாய் இழைக்கப்படும் தவறுகள் காரணமாகப் பிளவு ஏற்படும் அபாயம் அவ்வளவுக்கு அவ்வளவு குறைவாகிவிடும். மத்தியக் கமிட்டியினுள் தொழிலாளர்கள் பலரும் திரட்டப்படுவதானது, நமது நிர்வாகப் பொறியமைவை மேம்படுத்துவதற்குத் தொழிலாளர்களுக்கு உதவுவதாய் இருக்கும். நமது நிர்வாகப் பொறியமைவு மிக மோசமாகவே இருக்கிறது. நடைமுறையில் இது பழைய ஆட்சியிடமிருந்து நாம் வரித்துக் கொண்ட ஒன்று. ஏனெனில் இவ்வளவு குறுகிய காலத்துக்குள், அதுவும் போருக்கும் பஞ்சத்துக்கும் பிறவற்றுக்குமான நிலைமைகளில் அதைத் திருத்தியமைப்பது அறவே முடியாத காரியமாய் இருந்தது. எனவே நமது பொறியமைவின் குறைபாடுகளை ஏளனத்துடனே, காழ்ப்புடனே சுட்டிக் காட்டும் அந்த ''விமர்சகர்களைப்'' பார்த்து, நாம் இன்று புரட்சி எந்நிலைமைகளில் நடைபெறுகிறது என்பதை அவர்கள் கிஞ்சித்தும் புரிந்து கொள்ளவில்லையென அமைதியாகவே பதிலளிக்கலாம். இந்தப் பொறிமைவை ஐந்தே ஆண்டுகளில், முக்கியமாய் நமது புரட்சி நடைபெற்ற அந்த நிலைமைகளில், போதிய அளவுக்குத் திருத்தியமைத்திடுவது சிறிதும் சாத்தியமன்று. முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துத் தொழிலாளர்கள் விவசாயிகளுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்வதற்குரிய ஒரு புதுவகை அரசை ஐந்து ஆண்டுகளில் நாம் தோற்றுவித்திருக்கிறோமே, இதுவே போதுமானது. பகைமை

கொண்ட சர்வதேசச் சுற்றுச்சார்பில் இது பிரம்மாண்ட மான சாதனேயாகும். ஆனுல் இது பற்றிய அறிவு எவ்விதத் திலும் நம் பார்வையை மறைத்துவிடக் கூடாது: நடைமுறை யில் நாம் ஜாரிடமிருந்தும் முதலாளித்துவ வர்க்கத்தாரிட மிருந்தும் அரசின் பழைய பொறியமைவை வரித்துக் கொண் டோம் என்பதும், சமாதானம் ஆரம்பமாகிப் பஞ்சத் துக்கு எதிராய்க் குறைந்தபட்சத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள இத்தருணத்தில் நமது பணி அனேத்தும் நிர்வாகப் பொறியமைவை செம்மை செய்வதை நோக்கி நெறிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் தெரியாதபடி இந்த அறிவு நம் பார்வையை மறைத்துவிடக் கூடாது.

மத்தியக் கமிட்டி உறுப்பினர்களாய் இருக்கும் பத்து, இருபது தொழிலாளர்கள், ஏனைய எவரையும் விடச் சிறப் பான முறையில் நமது அரசு பொறியமைவைச் சரிபார்த்திட வும், செம்மை செய்யவும், திருத்தியமைக்கவும் முடியுமென நினேக்கிறேன். தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பிடம் ஆரம்பத்தில் இந்தப் பணி ஒப்படைக்கப்பட் டிருந்தது. இந்த அமைப்பால் இப்பணியைச் சமாளிக்க முடிய வில்லே என்பதும், மத்தியக் கமிட்டியின் இந்த உறுப்பினர் களுக்குரிய ''துணேயமைப்பு'' அல்லது சிற்சில நிபந்தனே களின் பேரில் உதவியாளராக மட்டுமே இந்த அமைப்பு பயன்படுத்தப்பட முடியும் என்பதும் தெரியலாயிற்று. மத் தியக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும் தொழி லாளர்கள் சோவியத் அலுவலகங்களில் நீண்ட காலமாகச் சேவை புரிந்திருப்போர் மத்தியிலிருந்து வராதிருப்பது எனது அபிப்பிராயத்தில் நல்லது, ஏனென்ருல் இப்படிச் சேவையாற்றியுள்ள தொழிலாளர்கள், எவற்றை எதிர்த்துப் போராடுவது விரும்பத் தக்கதோ அதே மரபுகளேயும் அதே தப்பெண்ணங்களேயும் ஏற்கெனவே தாமே பெற்றுக் கொண்டு விட்டவர்கள் (எனது கடிதத்தின் இந்தப் பகுதியில் தொழிலாளர்கள் என்னும் சொல், எங்கும் விவசாயிகளே யும் சேர்த்துக் குறிப்பதாகும்).

தொழிலாளி வர்க்கத்தவரான மத்தியக் கமிட்டி உறுப் பினர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் சோவியத் உறுப்பு

களில் சேவையாற்றுவதற்காக உயர்த்தப்பட்டவர்களைக் காட்டிலும் கீழ் அடுக்கைச் சேர்ந்த தொழிலாளர்களாகவே பிரதானமாய் இருத்தல் வேண்டும். அவர்கள் சாமான்யத் தொழிலாளர்கள், விவசாயிகளது நிலைக்கு நெருங்கியோராய் இருத்தல் வேண்டும், ஆனல் அதேபோது நேரடியாகவோ மறைமுகமாகவோ சுரண்டுவோரது இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாகாது. மத்தியக் கமிட்டியின் எல்லா அமர்வுகளிலும் அரசியல் பியூரோவின் எல்லா அமர்வுகளிலும் கலந்து கொள்வதன் மூலமும், மத்தியக் கமிட்டியின் எல்லா ஆவணங்களையும் படிப்பதன் மூலமும், இம்மாதிரியான தொழிலாளர்கள் சோவியத் அமைப்பின் பற்றுறுதி வாய்ந்த ஆதரவாளர்களாக விளங்கும் ஊழியர்களாய் அமைய முடியுமென்றும், முதலாவதாக மத்தியக் கமிட்டிக்கு நிலைப்பாடு அளிப்போராகவும், இரண்டாவதாக அரசு இயந்திரத்தைப் புதுப்பிப்பதற்காகவும் செம்மை செய்வதற்காகவும் பயனுள்ள முறையில் பணியாற்றுவோராகவும் இருப்பார்களென்றும் நினைக்கிறேன்.

லெனின்

எழுதிக் கொண்டவர்: லீ. ஃபோ.
டிசம்பர் 26, 1922

கம்யூனிஸ்ட் சஞ்சிகை, இதழ் 9ல், 1956ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 45, பக்கங்கள் 343-348

4

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 27, 1922

அரசுத் திட்டக் கமிஷனுக்கு சட்டமியற்றும் பணிகளை வழங்குதல்[85]

மிகவும் நீண்ட காலத்துக்கு முன் திரோத்ஸ்கி இந்தக் கருத்தை முன்வைத்தார் என்று தோன்றுகிறது. அப்போது நான் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தேன். காரணம் நமது

சட்டமியற்றும் நிறுவனங்களின் அமைப்பு முறையில் அடிப் படையான ஒருங்கிணைப்பு இல்லாது போய்விடும் என்று நான் நினைத்தேன். ஆனால் இந்த விவகாரத்தை மேலும் நெருக்கமாகச் சிந்தித்துப் பார்த்த பிறகு சாராம்சத்தில் இதில் ஒரு நல்ல கருத்து இருக்கிறது என்பதைக் காண்கிறேன், அதாவது: அரசுத் திட்டக் கமிஷன் நமது சட்டமியற்றும் அமைப்புகளிடமிருந்து சற்றே அப்பால் நிற்கிறது; இருப் பினும் அனுபவமுள்ள நபர்கள், நிபுணர்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் பிரதிநிதிகள் கொண்ட ஓர் உறுப்பு என்ற முறையில் உள்ளபடியே இது விவகாரங்களைப் பற்றிய சரியான நிர்ணயிப்புக்கு வருவதற்கான சிறந்த நிலை யில் இருக்கிறது.

இருப்பினும், அரசுத் திட்டக் கமிஷன் அரசுக்கு விமர் சன பூர்வம் பகுப்பாய்வு செய்யப்பட்ட விவரப் பொருள்களை வழங்க வேண்டும், மற்றும் அரசு அமைப்புகள் அரசு விவ காரங்களை முடிவு செய்ய வேண்டும், எனும் கோட்பாட்டில் இருந்தே இதுகாறும் நாம் இயங்கி வந்திருக்கிறோம். இன் றுள்ள நிலைமையில், அரசு விவகாரங்கள் வழக்கத்துக்கு மாறாகச் சிக்கலாகவிட்ட போது, அரசுத் திட்டக் கமிஷன் உறுப்பினர்களின் திறமை வாய்ந்த கருத்துத் தேவைப்படும் சிலவும் தேவைப்படாத சிலவுமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அடிக்கடி அவசியமாகியுள்ள போது, இதற்கும் மேல் சில அம்சங்களில் அரசுத் திட்டக் கமிஷன் உறுப்பினர் களின் திறமை வாய்ந்த கருத்து தேவைப்பட்டும், சில அம் சங்களில் தேவைப்படாமலும் இருக்கும் விவகாரங்களுக்குத் தீர்வு காண வேண்டியுள்ள நிலையில்—நாம் அரசுத் திட்டக் கமிஷனின் அதிகாரத் தகுதியை விஸ்தரிக்கும் திசையில் இப்போது ஒரு படி முன்னே செல்ல வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அரசுத் திட்டக் கமிஷனின் முடிவுகளை சோவியத் உறுப்பு களின் சாதாரணமான நடைமுறை மூலம் நிராகரிக்க முடி யாது, மாறாக மறு பரிசீலனை செய்வதற்கு ஒரு தனி நடை முறை தேவைப்படும் என்று கோரும் அத்தகைய நடவடிக்கை யாக இது இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உதாரணமாக, இந்தப் பிரச்சினை விசேஷ நெறிமுறைகளுக்கு ஏற்ப மறு பரிசீலனைக்குத் தயார் செய்யப்பட்டு அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அமர்வுக்குச் சமர்ப்பிக்கப் பட வேண்டும். இதில் அரசுத் திட்டக் கமிஷனின் முடிவு தள்ளுபடிச் செய்யக் கூடியதா இல்லையா என்பதைப் பரிசீலிக்க விசேஷ விதிகளின் கீழ் ஒரு மகஜர் தயாரிக்கப்படுவதும் அடங்கும். கடைசியாக அரசுத் திட்டக் கமிஷன் முடிவுகள் இத்தியாதிகளை மறு சிந்தனை செய்வதற்கான விசேஷக் கால வரையறைகள் வகுக்கப்பட வேண்டும்.

இந்த விஷயத்தில் நாம் தோழர் திரோத்ஸ்கியின் விருப்பங்களை ஏற்றுக் கொள்ள முடியும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால் நமது அரசியல் தலைவர்களில் தனிப்பட்ட ஒருவர் அல்லது உயர் பொருளாதாரக் கவுன்சிலின் தலைவர் கட்டாயம் அரசுத் திட்டக் கமிஷன் தலைவராக இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல. சொந்த விவகாரங்கள் இப்போது கோட்பாடு பற்றிய பிரச்சினையுடன் மிகவும் நெருக்கமாக இணைத்துப் பின்னப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அரசுத் திட்டக் கமிஷன் தலைவர் தோழர் கிரிழிழனோவ்ஸ்கி மற்றும் அவரது உதவியாளர் தோழர் பியத்தக்கோவ் மீது இப்போது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. இது இரண்டு வழிகளில் நடைபெறுகிறது. எனவே ஒரு புறத்தில் நாம் மிகவும் இளக்காரமான தன்மை, சுயேச்சையான மதிப்பீடு செய்ய இயலாமை, உறுதி இன்மை என்பதான குற்றச்சாட்டுகளையும், மறு புறம் அளவு மீறிய முரட்டுத்தனம், படைப் பயிற்சியாளர் நடைமுறைகள், உறுதியான விஞ்ஞான பூர்வப் பின்னணி இல்லாமை இத்தியாதி குற்றச்சாட்டுகளையும் கேட்கிறோம். இந்தத் தாக்குதல்கள் பிரச்சினையின் இரு பக்கங்களையும் வெளியிடுகின்றன, அவற்றை கடைகோடி வரை மிகைப் படுத்துகின்றன என்று நான் கருதுகிறேன். மற்றும் அரசுத் திட்டக் கமிஷனில் இருவகையான தன்மைகளின் திறமையான ஓர் இணைப்பு உண்மையிலேயே நமக்குத் தேவை. இதில் ஒன்றுக்குத் தோழர் பியத்தக்கோவும் இன்னொன்றுக்குத்

தோழர் கிரிழிழனேவ்ஸ்கியும் எடுத்துக்காட்டாக விளங்க முடியும்.

ஒரு புறம் விஞ்ஞானக் கல்வி, அதாவது தொழில்நுட்பக் கல்வி அல்லது விவசாய விஞ்ஞானக் கல்வி கற்றவரும் தொழில்நுட்பத் துறை அல்லது விவசாய விஞ்ஞானத் துறையில் பல பத்தாண்டுக் கால பேரளவான அனுபவம் உடையவருமான ஒருவர் அரசுத் திட்டக் கமிஷனுக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த நபர் மாறாக விரிவான அனுபவம், இதர ஆட்களின் சேவைகளை ஈடுபடுத்தும் ஆற்றல் ஆகியவற்றை—அந்தளவுக்கு ஒரு நிர்வாகியின் தன்மைகளை அல்ல—பெற்றிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

லெனின்

டிசம்பர் 27, 1922.
எழுதிக் கொண்டவர்: ம.வ.

5

அரசுத் திட்டக் கமிஷன் முடிவுகளின்
சட்டத் தன்மை பற்றிய
கடிதத்தின் தொடர்ச்சி.
டிசம்பர் 28, 1922

அரசு விவகாரங்களின் நெறியாக்கம் மீது நிர்ணயகரமான செல்வாக்கைச் செலுத்த இயலும் நமது தோழர்களில் சிலர் ஆட்சி நிர்வாக அம்சத்தை மிகைப்படுத்துகிறார்கள் என்பதை நான் கவனித்திருக்கிறேன். அது அதனதன் காலம் மற்றும் இடத்துக்கு அவசியமானது என்பது மெய்யே. ஆனால் இதை விஞ்ஞான அம்சத்துடன், விரிவான மெய்விவரங்களைப் புரிந்து கொள்வது, ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் திறமை இத்தியாதிகளுடன் போட்டுக் குழப்பக் கூடாது.

ஒவ்வொரு அரசு அமைப்பிலும், சிறப்பாக அரசுத் திட்டக் கமிஷனில், இந்த இரண்டு தன்மைகளின் இணைப்பு

அத்தியாவசியம். தோழர் பியத்தக்கோவை கமிஷனின் சேவைகளில் ஈடுபடுத்தியிருப்பதாயும் இந்த வேலை குறித்து அவருடன் உடன்பாட்டுக்கு வந்திருப்பதாயும் தோழர் கிரிழி ழனேவ்ஸ்கி என்னிடம் கூறிய போது நான் ஒப்புதல் தெரிவித்த சமயம் ஒரு புறம் ஒரு சில ஐயப்பாடுகளை கொண்டிருந்தேன், மறு புறம் இதன் வழி இருவகைப்பட்ட அரசறிஞர்களின் இணைப்பை பெறுவோம் என்று சில சமயம் எதிர்பார்த்தேன். இந்த எதிர்பார்ப்புகள் நியாயமானவையா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு நாம் இப்போது காத்திருந்து ஓரளவு நீடித்த அனுபவத்தின் அடிப்படையில் இந்த விஷயத்தை ஆராய வேண்டும். ஆனால் கோட்பாட்டளவில் (மனிதர்கள் மற்றும் தன்மைகளின்) மனப்போக்குகள் மற்றும் மாதிரிகளின் இத்தகைய இணைப்பு, அரசு அமைப்புகள் சரியாகப் பணியாற்றுவதற்குப் பரம அவசியம் என்பதில் ஐயத்திற்கே இடமில்லை என்று நான் கருதுகிறேன். இந்த இடத்தில் வேறு எதையும் மிகைப்படுத்துவது எப்படிக் கேடு விளைக்குமோ அது போலவே ''நிர்வாகம் நடத்தல்'' பற்றி மிகைப்படுத்துவதும் கேடு விளைக்கும் என்று நான் கருதுகிறேன். ஓர் அரசு அமைப்பின் தலைவர் உயர் அளவிலான சொந்தக் கவர்ச்சிப் பண்பும், மக்களது வேலைகளைச் சரிபார்க்க இயலும் அளவுக்குப் போதுமான திண்ணிய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவும் கொண்டவராக விளங்க வேண்டும். இந்தளவு அடிப்படையானது. இதில்லாமல் சரிவர வேலை செய்ய முடியாது. மறு புறம் அவர் நிர்வாகம் நடத்துவதில் ஆற்றலுடையவராக இருப்பதும் மிகவும் முக்கியமானது. அதோடு இந்தப் பணியில் திறமையுள்ள உதவியாளர் அல்லது உதவியாளர்களையும் அவர் பெற்றிருக்க வேண்டும். ஒரு நபரில் இந்த இரு தன்மைகளும் இணைந்திருப்பதைக் காண்பது அரிது, அது அவசியமும் அல்ல.

லெனின்

எழுதிக் கொண்டவர்: லீ. ஃபோ.
டிசம்பர் 28, 1922

6

அரசுத் திட்டக் கமிஷன் பற்றிய
குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 29, 1922

அரசுத் திட்டக் கமிஷன் எல்லா வழிகளிலும் ஒரு நிபுணர்கள் கமிஷனுக வளர்ந்து வருவதாகத் தோன்றுகிறது. அத்தகைய அமைப்புக்கு மாபெரும் அனுபவமும் தொழில் நுட்பத்தில் சர்வாம்ச விஞ்ஞானக் கல்வியும் பெற்றுள்ள ஒரு நபர் தவிர வேறு எவரும் தலைமை தாங்க முடியாது. இந்த நபரின் நிர்வாகப் பணி சாரத்தில் உதவிப் பணியாகவே இருக்க வேண்டும். இந்த விஞ்ஞான அமைப்பின் செல்வாக்கு காரணமாக அரசுத் திட்டக் கமிஷன் ஓரளவு சுயாதீனமும் சுயநிர்வாகமும் கொண்டதாக இருத்தல் வேண்டும். அது ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே, அதாவது அதன் ஊழியர்களின் கடமை உணர்ச்சி மற்றும் நமது பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சித் திட்டத்தை ஒரு எதார்த்த சாதனையாக்கும் அவர்களது மனப்பூர்வமான விருப்பத்தையும் மட்டுமே சார்ந்திருக்க வேண்டும்.

கடைசியாகக் குறிப்பிடப்பட்டதான இப்பண்பு இப்போது ஒரு விதிவிலக்காக மட்டுமே காணப்படுகிறது என்பது திண்ணம். ஏனெனில் இந்தக் கமிஷனில் இயல்பாகவே உறுப்பு வகிக்கும் பெரும்பான்மை விஞ்ஞானிகள், தவிர்க்க முடியாத வகையில் முதலாளித்துவ கருத்துக்கள் மற்றும் முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் நச்சுப்படுத்தப்பட்டிருக்கிருர்கள். இந்த நோக்குநிலையில் இருந்து அவர்கள் மீது தணிக்கை செய்யும் பொறுப்பு கமிஷனின் தலைமைக் குழுவாக அமையக் கூடிய குறிப்பிட்ட சில நபர்களின் வேலையாகும். இவர்கள் கம்யூனிஸ்டுகளாக இருக்க வேண்டும்; இந்த வேலை நடைமுறை முழுதிலுமாக வெளிக்காட்டப்படும், நமது லட்சியத்தின் மீதான முதலாளித்துவ விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை

நாள்தோறும் அவர்கள் பரிசீலிக்க வேண்டும்; அந்த விஞ்ஞானிகள் முதலாளித்துவத் தப்பெண்ணங்களைக் கைவிட்டு படிப்படியாக சோஷலிஸ்டு நோக்குநிலையை மேற்கொள்ளும் படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞான பூர்வமான சரிபார்த்தல் மற்றும் தூய நிர்வாகம் எனும் இரட்டைப் பாதையிலான இந்த வேலை நமது குடியரசில் அரசுத் திட்டக் கமிஷனை நடத்தி வரும் நபர்களின் லட்சியமாக இருக்க வேண்டும்.

லெனின்

எழுதிக் கொண்டவர்: ம. வ.
டிசம்பர் 29, 1922

அரசுத் திட்டக் கமிஷனின் பணிகளை தனித்தனி வேலைகளாகப் பிரிப்பது அறிவு பூர்வமானதா? இதற்கு நேர் மாறாக, கமிஷனின் தலைமைக் குழுவால் முறையாக தணிக்கை செய்யப்பட்டு அதன் சுற்றெல்லைக்கு உள்ளடங்கிய பிரச்சினைகள் முழுவதற்கும் தீர்வு காணக் கூடிய நிரந்தர நிபுணர்களின் ஒரு குழுவை உருவாக்க நாம் முயல வேண்டாமா? பிந்தியது அதிகளவு நியாயமானதாக இருக்கும் எனவும், நாம் தற்காலிகமான மற்றும் அவசரமான பணிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு முயல வேண்டும் எனவும் நான் கருதுகிறேன்.

லெனின்

டிசம்பர் 29, 1922.
எழுதிக் கொண்டவர்: ம. வ.

கம்யூனிஸ்ட் சஞ்சிகை,
இதழ் 9ல், 1956ல்
முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 349-353

7

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 29, 1922

(மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் தொகையை அதிகரிப்பது சம்பந்தமான பிரிவுக்குச் சேர்ப்பு)

தனது உறுப்பினர் தொகையை அதிகரிக்கும் விஷயத்தில் மத்தியக் கமிட்டி எவ்வகையிலும் நல்ல முறையில் இல்லாத நமது நிர்வாக இயந்திரத்தைச் சரிபார்த்து மேம்படுத்துவதில் ஒருவேளை பிரதானமாயும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த வேலையில் உயர் தகுதி பெற்ற நிபுணர்களை ஈடுபடுத்த வேண்டும், இந்த நிபுணர்களை வழங்கும் கடமை தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பிடம் கட்டாயம் ஒப்படைக்கப்படும்.

போதிய அறிவு படைத்த இந்தத் தணிக்கை செய்யும் நிபுணர்களையும் மத்தியக் கமிட்டியின் புதிய உறுப்பினர்களையும் நாம் எப்படி இணைப்பது? இந்தப் பிரச்சினை அனுபவம் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு (இதன் வளர்ச்சியின் விளைவாயும் இதன் வளர்ச்சி சம்பந்தமான நமது மனக்குழப்பம் காரணமாயும்) முழு நிறைவாயும், நாம் இப்போது அவதானம் செய்யும், அதாவது விசேஷ மக்கள் கமிசாரகம் மற்றும் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களின் விசேஷ செயற்பணிக்கும் மத்தியிலான ஓர் இடைப்பட்ட நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது; எதையும் எல்லாவற்றையும் மேற்பார்வை செய்யும் ஓர் அமைப்புக்கும் மிகவும் பெருமளவில் இல்லாத ஆனால் முதல் தரமான, நல்ல ஊதியம் அளிக்கப்பட வேண்டிய மேற்பார்வையாளர் திரளுக்கும் மத்தியிலான ஓர் இடைப்பட்ட நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது (இது, எல்லாவற்றுக்கும் பணம் செலுத்தப்பட வேண்டியதும், எந்த அமைப்புகள்

மேலும் நல்ல ஊதியம் தருகின்றனவோ அவற்ருல் மேற்பார்வையாளர்கள் நேரடியாக அமர்த்தப்படுவதுமான நமது காலத்தில் இது சிறப்பாயும் இன்றியமையாததாகும்).

மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் தொகை பொருத்தமான முறையில் அதிகரிக்கப்பட்டு, அவர்கள் எல்லாத் துறைகளிலும் உயர் நிபுணத்துவம் படைத்த நிபுணர்கள் மற்றும் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் உயர் தகுதியுள்ள உறுப்பினர்களின் உதவியுடன் ஆண்டு தோறும் அரசு நிர்வாகம் பற்றிய பயிற்சியைப் பெற்று முடிக்கும் பட்சத்தில்—அதன் பின், இத்தனை நீண்ட காலமாக நம்மால் செயற்படுத்த இயலாது போன இந்தப் பிரச்சினைக்கு வெற்றிகரமாகத் தீர்வு காண்போம் என்று கருதுகிறேன்.

மொத்தத்தில் *100* மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்கள், அதிகப்பட்சம் *400—500*க்கு மேற்படாத அவர்களது உதவியாளர்கள்—அவர்களது நெறியாண்மையின் கீழ் மேற்பார்வையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு உறுப்பினர்கள்.

லெனின்

டிசம்பர் 29, 1922.
எழுதிக் கொண்டவர்: ம.வ.

கம்யூனிஸ்ட் *சஞ்சிகை,*	**நூல் திரட்டு,**
இதழ் 9ல், 1956ல்	*தொகுதி 45,*
முதலில் வெளியிடப்பட்டது	*பக்கங்கள் 354-355*

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 30, 1922

தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது "தன்னுட்சிமயமாக்கல்"[86]

அதிகார பூர்வமாக சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியம் என அழைக்கப்படும் தன்னுட்சிமயமாக்கல் எனும் இகழார்ந்த பிரச்சினையில் நான் போதுமான அளவுக்கு

ஊக்கத்துடனும் தீர்மானகரமாகவும் தலையிடாமல் இருந்தது மூலம் ருஷ்யத் தொழிலாளர்களின் விஷயமாக நான் மிகவும் உதாசீனமாக இருந்து வந்திருப்பது போலத் தோன்றுகிறது.

கடந்த கோடையில் இந்தப் பிரச்சினை உதித்தெழுந்த போது நான் உடல்நலமின்றி இருந்தேன். மற்றும் பின்னர் இலையுதிர் காலத்தில் நான் மீண்டும் உடல்நலம் பெறுவதிலும், இந்தப் பிரச்சினையில் தலையிடுவதற்கு அக்டோபர் மற்றும் டிசம்பர் பிளீனம் கூட்டங்கள்[87] எனக்கு ஒரு வாய்ப்பைத் தரும் என்பதிலும் அளவுக்கு மீறி நம்பிக்கை வைத்திருந்தேன். எனினும் அக்டோபர் பிளீனம் கூட்டத்திலோ (அப்போது இந்தப் பிரச்சினை வந்தது) அல்லது டிசம்பர் பிளீனம் கூட்டத்திலோ என்னால் கலந்து கொள்ள இயலவில்லை. ஆகவே, இப்பிரச்சினை எனது கவனத்தில் இருந்து முற்றிலும் விலகிப் போய் விட்டது.

இதைப் பற்றி தோழர் த்ஸெர்ழீன்ஸ்கியுடன் சற்றே உரையாட மட்டுமே முடிந்தது. காக்கஸசில் இருந்து வந்த அவர் இந்த விவகாரம் ஜார்ஜியாவில் எவ்வாறு இருக்கிறது என்பது பற்றி எனக்குக் கூறினார். மற்றும் தோழர் ஸினோவியெவிடம் சில கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், இந்த விவகாரம் பற்றிய எனது அச்சத்தை வெளியிடவும் முடிந்தது. ஜார்ஜியன் சம்பவத்தைப் பற்றி ''விசாரணை நடத்த'' மத்தியக் கமிட்டி அனுப்பி வைத்த கமிஷனின் தலைவராக இருந்த தோழர் த்ஸெர்ழீன்ஸ்கி என்னிடம் கூறிய தகவல்களில் இருந்து நான் ஆகப் பெரிய அம்சங்களை ஊகிக்க மட்டுமே முடிந்தது. தோழர் த்ஸெர்ழீன்ஸ்கி என்னிடம் தெரிவித்த வகையில் ஓர்த்ஜொனிகீத்ஸே நேரடி வன்முறையைப் பிரயோகிக்கும் கடைக்கோடிக்குப் போகும் அளவுக்கு காரியங்கள் நடந்திருக்கும் பட்சத்தில் நாம் எத்தகைய குழப்பத்தில் சிக்குண்டிருக்கிறோம் என்பதை நாம் கற்பனை செய்துகொள்ள முடியும். ''தன்னாட்சிமயமாக்கல்'' பற்றிய இந்த முழு விவகாரமும் அடிப்படையிலேயே தவறானது, மோசமான வேளையில் மேற்கொள்ளப்பட்டது என்பது கண்கூடு.

ஒன்றிணைந்த பொறியமைவு அவசியம் என்று கூறப்

பட்டது. ஆனால் இதற்கான உத்தரவாதங்கள் எங்கிருந்து வந்தன? எனது நாட்குறிப்பின் முந்திய பகுதிகள் ஒன்றில் நான் சுட்டிக் காட்டியிருந்தது போல இது சோவியத் எண்ணெய் கொண்டு சற்றே அபிஷேகம் செய்யப்பட்ட ஜாராட்சியிடமிருந்து நாம் எடுத்துக் கொண்ட அதே ருஷ்யன் பொறியமைவில் இருந்து வந்ததல்லவா?*

இது நமக்குச் சொந்தமானது என்பதாக நமது பொறியமைவை உறுதி செய்கிறோம் என்று நாம் சொல்லக் கூடிய வரையிலாவது ஓரளவுக்கு அந்த நடவடிக்கையைத் தாமதப் படுத்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்போது நாம் மனச்சாட்சி பூர்வம் இதற்கு நேர் எதிரானதை ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது. நம்முடையது என்று நாம் அழைக்கும் இந்தப் பொறியமைவு உண்மையில் இன்னமும் கூட நமக்கு அறவே அன்னியமானதாக உள்ளது, இது முதலாளித்துவ வர்க்கம் மற்றும் ஜாராட்சியின் கதம்பக் கலவையே. இதர நாடுகளின் உதவி இல்லாமல் இதைக் கடந்த ஐந்தாண்டுகளுக்கிடையே தொலைத்தொழிக்க முடியவில்லை. காரணம் நாம் மிகப் பெரும்பாலான நேரம் ராணுவ நடவடிக்கைகள் மற்றும் பஞ்சத்தை எதிர்த்த போராட்டத்தில் ''மும்முரமாக'' இருந்தோம்.

இத்தகைய புற நிகழ்வுகளில், எதனால் நம்மை நாமே நியாயப்படுத்திக் கொள்கிறோமோ அந்த ''ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்லும் உரிமை'' என்பது வெறும் ஒரு காகிதத் துண்டே என்பது முற்றும் இயல்பான உண்மை. ருஷ்யன் அல்லாதவர்களை, அந்த உண்மையான ருஷ்ய மனிதனிடமிருந்து, மகாருஷ்ய தேசியவெறியனிடமிருந்து, தனி மாதிரி ருஷ்ய அதிகாரவர்க்கப் பேர்வழி போன்ற சாரத்தில் ஒரு கயவன் மற்றும் கொடுங்கோலனாக இருப்பவனிடமிருந்து இந்த உரிமையால் பாதுகாக்க முடியாது. தேசியவெறி மகாருஷ்ய இழிஞர் இந்தக் கும்பல் எனும் அலை வெள்ளத்தில் பாலில் விழுந்த ஈயினைப் போல மிகமிகக் குறைந்த சதவிகிதமேயான சோவியத் மற்றும் சோவியத் மயமாக்கப்பட்ட

* இத்தொகுதியின் பக்கங்கள் 264—272 பார்க்க.—ப-ர்.

தொழிலாளர்கள் மூழ்கடிக்கப்படுவார்கள் என்பதில் ஐய மில்லை.

தேசிய உளவியல் மற்றும் தேசியக் கல்வியுடன் நேரடி சம்பந்தப்பட்ட மக்கள் கமிசாரகங்கள் தனி அமைப்புகளாக நிறுவப்பட்டன என்று இந்த நடவடிக்கையைத் தாங்கி ஆத ரிக்கும் முறையில் சொல்லப்படுகிறது. ஆனால் அங்கு இந்தக் கேள்வி எழுகிறது: இந்த மக்கள் கமிசாரகங்களை முற்றும் சுயேச்சையானவையாக மாற்ற முடியுமா? மற்றும் இரண்ட வதாக: உண்மையான ருஷ்யன் கொடுமைக்காரனுக்கு எதி ராக ருஷ்யன் அல்லாதவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் நாம் போதிய கவனம் செலுத்தியிருக்கிறோமா? நாம் அப்படிச் செய்திருக்க முடியும், கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்ற போதிலும் நாம் அத்தகைய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று நான் கருதுகிறேன்.

ஸ்தாலினது அவசரமும் மற்றும் தூய நிர்வாகத்துடனான அவரது மோகமும் பகிரங்கமான ''சோஷலிஸ்டு-தேசிய வாதத்தினை'' எதிர்த்த அவரது வன்மமும் சேர்ந்து இங்கு பேராபத்தான ஒரு பாத்திரத்தை வகித்துள்ளன என்று நான் கருதுகிறேன். அரசியலில் வன்மம் பொதுவாக மிக வும் இழிந்ததான பாத்திரமே வகிக்கிறது.

அந்த ''சோஷலிஸ்டு-தேசியவாதிகளின் குற்றச் செயல் கள்'' பற்றி விசாரணை நடத்தக் காக்கஸசுக்குச் சென்ற தோழர் த்ஸெர்ழீன்ஸ்கி தமது மெய்யான ருஷ்யன் மனோநிலை மூலம் மட்டுமே அங்கு தம்மைத் தாமே வேறுபடுத்திக் காட்டிக் கொண்டார் (ருஷ்யமயமாக்கப்பட்ட இதர தேசிய இனங்களைச் சார்ந்த பேர்கள் எப்போதும் இந்த மெய்யான ருஷ்ய மனோநிலையை மிகையாகத் தோற்றுவிப்பது பொது வாகத் தெரிந்ததே). மற்றும் அவரது கமிஷன் முழுவதன் பாரபட்சமற்ற தன்மை ஓர்த்ஜொனிகீத்ஸேயின் ''முரட்டுச் செயலால்'' போதியளவு தனிமாதிரியாக்கப்பட்டது எனவும் நான் அஞ்சுகிறேன். எந்த ஓர் ஆத்திரமூட்டலோ அல்லது அவதூறுபடுத்தலும் கூட இத்தகைய ருஷ்யன் முரட்டுச் செயலை நியாயப்படுத்த முடியாது என்றும் இது சம்பந்த

மாக கவலையற்ற ஒரு தோரணை மேற்கொண்டது மூலம் தோழர் த்ஸெர்ழீன்ஸ்கி மன்னிக்க முடியாத குற்றம் புரிந்த வராகிருர் என்றும் நான் கருதுகிறேன்.

காக்கஸஸ் குடிமக்கள் எல்லோருக்கும் ஓர்த்ஜொனி கீத்ஸே அதிகாரப் பலமாக இருந்தார். அவரும் த்ஸெர்ழீன்ஸ் கியும் குறிப்பிட்ட அந்த முன்கோபத்தை வெளிக்காட்ட ஓர்த்ஜொனிகீத்ஸேக்கு உரிமை இல்லை. இதற்கு நேர் மாருக ஓர்த்ஜொனிகீத்ஸே சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொண் டிருக்க வேண்டும். இதை ஒரு சாமான்யக் குடிமகனிடமோ அதை விடவும் ''அரசியல்'' குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரிடமோ கோர முடியாது. உண்மையைக் கூறப்போனல், அந்த சோஷலிஸ்டு-தேசியவாதிகள் அரசியல் குற்றம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட குடிமக்கள் மற்றும் இந்தக் குற்றச்சாட்டின் எல்லா வாசகங்களும் வேறு வழியில் வருணிக்க முடியாத அத்தகையவை.

இங்கு கோட்பாடு பற்றிய ஒரு முக்கியமான கேள்வி உள்ளது: சர்வதேசியவாதத்தை எப்படிப் புரிந்து கொள் வது?*

லெனின்

டிசம்பர் 30, 1922.
எழுதிக் கொண்டவர்: ம. வ.

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 31, 1922

தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது ''தன்னுட்சிமயமாக்கல்''

(தொடர்ச்சி)

பொதுவாக தேசியம் பற்றிய பிரச்சினையை கருத்திய லாக முன்வைப்பதால் எவ்விதப் பயனும் இல்லை என்பதைத்

* இதற்குப் பின் சுருக்கெழுத்து வாசகத்தில் பின்வரும் தொடர்கள் அடிக்கப்பட்டுள்ளன: ''கோட்பாடு சம்பந்த மான இந்த முக்கியமான விஷயத்தை நமது தோழர்கள் போதியளவுக்கு ஆராயவில்லை என்று எனக்குத் தோன்று கிறது.''—ப-ர்.

தேசியப் பிரச்சினை பற்றிய எனது கட்டுரைகளில் நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். ஒடுக்கும் தேசிய இனத்தின் தேசியத்துக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசியத்துக்கும் இடையே, ஒரு பெரிய தேசிய இனத்தின் தேசியத்துக்கும் ஒரு சிறிய தேசிய இனத்தின் தேசியத்துக்கும் இடையே வேறுபாடு காண வேண்டுவது கட்டாய அவசியம்.

இரண்டாவது வகைப்பட்ட தேசியத்தைப் பொருத்தவரை பெரிய தேசத்தின் தேசிய இனத்தவர்களான நாம் வரலாற்று நடைமுறையில் எண்ணற்ற பல வன்முறை சம்பவங்களைப் புரிந்த குற்றத்துக்குக் கிட்டத்தட்ட எப்போதும் பொறுப்பானவர்கள். இதற்கும் மேலாக இதைக் காணுமலே நாம் பல தடவை வன்செயல்களையும் அவதூறுகளையும் புரிந்திருக்கிறோம். நமது நாட்டில் ருஷ்யரல்லாதார் எப்படி நடத்தப்படுகிறார்கள், போலந்து நாட்டவர் எப்படி ''பலியாச் சிஷ்கா'' என்பது தவிர வேறு பெயரில் அழைக்கப்படுவதில்லை, எப்படி தர்த்தாரியர் ''இளவரசர்'' என்று கேலிப் பெயர் சூட்டப்படுகிறார், எப்படி உக்ரேனியர் எப்போதும் ''கோகோல்'' என்று அழைக்கப்படுகிறார், ஜார்ஜியரும் இதர காக்கேசிய தேசிய இனத்தவரும் எப்படி ''கப்காசியர்'' எனப்படுகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள எனது வோல்கா நினைவுக் குறிப்புக்களை நினைவு கூர்ந்தால் போதுமானது.

இதனால்தான் ஒடுக்குவோர் அல்லது ''மாபெரும்'' தேசிய இனத்தவர் எனப்படுவோர் (இவர்கள் தமது வன்முறையில் மட்டுமே மாபெரும் பேர்வழிகள், கொடுமைக்காரர்கள் என்ற முறையில் மட்டுமே மாபெரும் பேர்வழிகள்) பொருத்த வரை சர்வதேசியம் என்பது தேசங்களின் சம்பிரதாயமான சமத்துவத்தைக் கடைப்பிடிப்பது மட்டுமன்றி, ஒடுக்கும் தேசத்தின் மாபெரும் தேசத்தின் சமத்துவமின்மையையும் கூடக் கொண்டதாக இருக்க வேண்டும்—இது மெய்யான நடைமுறையில் காணப்படும் அசமத்துவத்தை அகற்றுவதாக இருக்க வேண்டும். இதைப் புரிந்து கொள்ளாத எவரும் தேசிய இனங்களின் பிரச்சினை பற்றிய மெய்யான பாட்டாளி வர்க்க தோரணையைப் புரிந்து கொள்ள

வில்லே, அவர் இன்னமும் சாரத்தில் தமது கருத்துநிலேயில் ஒரு குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டவராகவே இருப்பார், எனவே முதலாளித்துவ கருத்துநிலேக்கு ஒவ்வொரு தருண மும் நிச்சயமாயும் இறங்கி விடுவார்.

பாட்டாளிக்கு முக்கியமானது என்ன? ருஷ்யரல்லாதவர் கள் பாட்டாளிகளது வர்க்கப் போராட்டத்தில் ஆக சாத் தியமான அளவுக்கு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என் பது பாட்டாளிக்கு முக்கியமானது மட்டும் அல்ல, இவ் வாருக உத்தரவாதம் அளிக்கப்படுவதும் பரம அத்தியா வசியமானது. இதை உத்தரவாதம் செய்யத் தேவைப்படு வது என்ன? சம்பிரதாயமான சமத்துவம் மட்டும் அல்ல. கடந்த காலங்களில் ''ஆதிக்க தேசிய இனத்தின்'' அரசாங்கம் ருஷ்யரல்லாதாரை இலக்காக்கியிருந்த நம்பிக்கையின்மை, சந்தேகம் மற்றும் அவதூறுகளுக்கு இழப்பீடு என்ற முறையில் ஏதாவது ஒரு வழியில் ஒருவர் தமது தோரணே மூலம் அல்லது சலுகைகள் மூலம் பரிகாரம் செய்ய வேண்டு வது இதற்கு அவசியம்.

இதை இன்னும் அதிக விவரமாக போல்ஷிவிக்குகளுக்கு, கம்யூனிஸ்டுகளுக்கு விளக்க வேண்டியது அவசியமில்லே என்று கருதுகிறேன். இன்றைய எடுத்துக்காட்டில் ஜார்ஜியத் தேசிய இனத்தைப் பொருத்த வரை அது ஒரு தனிமாதிரி விவகாரமாகும். இதில் உண்மையான பாட்டாளி வர்க்க தோரணே என்பது ஆழ்ந்த எச்சரிக்கை, முன்சிந்தனே மற்றும் இணக்கம் செய்து கொள்வதற்கான தயார்நிலே ஆகியவற்றை நமக்கு அத்தியாவசிய விஷயமாக்கி விட்டது. இந்தப் பிரச் சினேயின் இந்த அம்சத்தை அசட்டை செய்யும் அல்லது ''சோஷலிஸ்டு-தேசியவாதம்'' பற்றிய குற்றச்சாட்டுகளேக் கவனமின்றி வீசிடும் ஒரு ஜார்ஜியன் (தானே ஒரு அப்பட்ட மாயும் மெய்யான ''சோஷலிஸ்டு-தேசியவாதியாக'' மற்றும் ஒரு கொச்சையான மகாருஷ்ய கொடுமைக்காரனுகவும் கூட இருக்கும் நிலேயில்) சாரத்தில் பாட்டாளி வர்க்க ஒருமைப் பாட்டின் நலன்களேக் குலேக்கிருர். ஏனெனில் தேசிய அநீ தியைப் போன்று அந்த அளவுக்குப் பாட்டாளி வர்க்க ஒரு மைப்பாடு வளமுறுவதையும் வலுப்படுவதையும் தடை

செய்யும் வேறு எதுவும் கிடையாது. ''புண்படுத்தப்பட்ட'' தேசிய இனத்தவர் சமத்துவ உணர்வு மற்றும் இந்த சமத்துவம் குலேக்கப்படுதல் மீது உணர்ச்சி வசப்படுவது போன்று—இந்த சமத்துவம் அவர்களது பாட்டாளி வர்க்கத் தோழர்களால் அசட்டையாலோ அல்லது வேடிக்கைக்காகவோ குலேக்கப்படுமாயின்—வேறு எதிலும் உணர்ச்சி வசப்பட மாட்டார்கள். இதனுல்தான் இந்த விஷயத்தில் தேசியச் சிறுபான்மையினருக்குச் சலுகைகள் வழங்கல், தாராளமனப் பான்மை காட்டுதல் ஆகியவற்றைக் குறைவாகச் செய்வதை விட மிகையாகச் செய்வது நல்லது. இதனுல்தான் இந்த இடத்தில் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டின் அடிப்படை நலனும், இதன் பின்விளேவாக பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அடிப்படை நலனும், நாம் என்றுமே தேசிய இனங்களின் பிரச்சினே குறித்து ஒரு சம்பிரதாய தோரணே மேற்கொள்ளலாகாது எனவும் மாருக ஒடுக்கப்பட்ட (அல்லது சிறிய) தேசிய இனத்தின் பாட்டாளி ஒடுக்கும் (அல்லது பெரிய) தேசிய இனத்தின் பால் மேற்கொள்ளும் பிரத்தியேக தோரணேயை என்றுமே கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் கோருகின்றன.

லெனின்

எழுதிக் கொண்டவர்: ம. வ.
டிசம்பர் 31, 1922

குறிப்புக்களின் தொடர்ச்சி.
டிசம்பர் 31, 1922

இன்றைய நிலேமையில் எடுக்கப்பட வேண்டிய காரிய சாத்தியமான நடவடிக்கைகள் எவை?

முதலாவதாக, நாம் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியத்தைக் கட்டிக் காத்து வலுப்படுத்த வேண்டும். இதைப் பற்றி ஐயத்திற்கே இடமில்லே. இந்த நடவடிக்கை நமக்கு அவசியம்; மற்றும் உலக கம்யூனிஸ்டுப் பாட்டாளி வர்க்கத்திற்கு—அது உலக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து

நடத்தும் போராட்டத்தில், முதலாளித்துவச் சதிகளை எதிர்த்து அது தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கு—இது அவசியம்.

இரண்டாவதாக, சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியத்தை அதன் அரசுறவுத் துறைப் பொறியமைவுக்காக முறையாக வைத்திருக்க வேண்டும். இதற்கிடையில் இந்தப் பொறியமைவு நமது அரசுப் பொறியமைவின் தனிச்சிறப்பான கூறுகும். பழைய ஜாராட்சிப் பொறியமைவில் இருந்து சிறிது அளவு செல்வாக்குள்ள தனி ஒரு நபரைக் கூட நாம் இதனுள் அனுமதிக்கவில்லை. இதில் அதிகாரப் பலமுடைய எல்லாப் பிரிவுகளும் கம்யூனிஸ்டுகளால் உருவாக்கப்பட்டவை. இதனுல்தான் அது இதர மக்கள் கமிசாரகங்கள் விஷயத்தில் செய்ய முடிந்ததை விடவும் ஒப்பிடற்கரிய மாபெரும் அளவுக்குப் பழைய ஜாராட்சி, முதலாளித்துவ மற்றும் குட்டிமுதலாளித்துவ நபர்களைக் களையெடுத்து நம்பகமான கம்யூனிஸ்டுப் பொறியமைவு எனும் பெயரை ஏற்கெனவே வென்றடைந்துள்ளது (இதைத் துணிந்து கூறலாம்).

மூன்ருவதாக, தோழர் ஓர்த்ஜொனிகீத்ஸேக்கு எச்சரிக்கையாகப் பயன்படும் விதத்தில் தண்டனை வழங்கப்பட வேண்டும் (நான் அவரது சொந்த நண்பர்களில் ஒருவன் மற்றும் வெளிநாடுகளில் அவருடன் சேர்ந்து வேலை செய்திருந்தேன் என்பதால் முற்றும் அதிக வருத்தத்தோடு இதைக் கூறுகிறேன்), மற்றும் த்ஸெர்ழீன்ஸ்கி கமிஷனின் விவரப் பொருள்களில் சந்தேகமின்றி இடம் பெற்றுவிட்ட பேரளவான தவறுகள் மற்றும் பாரபட்சமான தீர்ப்புக்களைத் திருத்துவதற்காக இக்கமிஷன் திரட்டியுள்ள எல்லா விவரப் பொருள்களையும் பற்றிய விசாரணை பூர்த்தி செய்யப்பட வேண்டும் அல்லது மீண்டும் புதிதாகத் துவங்கப்பட வேண்டும். இந்த உண்மையான மகாருஷ்ய தேசியவாத சம்பவங்கள் எல்லாவற்றுக்குமான அரசியல் பொறுப்பு நிச்சயமாயும் ஸ்தாலின் மற்றும் த்ஸெர்ழீன்ஸ்கி மீது சுமத்தப்பட வேண்டும்.

நாலாவதாக, நமது ஒன்றியத்தில் உள்ள ருஷ்யனல்லாத

குடியரசுகளில் தேசிய மொழிகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாக கறாரான விதிகள் கொண்டுவரப்பட வேண்டும். இந்த விதிகளை விசேஷ கவனத்துடன் சரிபார்க்க வேண்டும். நமது பொறியமைவு இப்போது இருக்கும் நிலையில், ரயில்வே சேவையில் ஒற்றுமை, நிதித்துறை சேவையில் ஒற்றுமை எனும் சாக்குப்போக்கில் பெருமளவில் மெய்யான ருஷ்யன் நடை கேடுகள் கட்டாயம் ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நடை கேடுகளை எதிர்த்த போராட்டத்தில் விசேஷ நயத்திறன் அவசியம், இந்தப் போராட்டத்தை மேற்கொண்டிருப்பவர்களின் பிரத்தியேக நேர்மை பற்றியோ கூறத் தேவையில்லை. இங்கு ஒரு விவரமான சட்டத் தொகுப்பு அவசியம். இதைச் சம்பந்தப்பட்ட குடியரசில் வாழும் தேசிய இனத்தவர் மட்டுமே முற்றும் வெற்றிகரமான முறையில் வகுத்திட முடியும். இந்த வேலை முழுவதன் விளைவாக நாம் நமது சோவியத்துக்களின் அடுத்த காங்கிரசில் ஓரடி பின்னே செல்ல மாட்டோம்—அதாவது, சோவியத் சோஷலிஸ்டு குடியரசுகளின் ஒன்றியத்தை ராணுவ மற்றும் அரசுறவுத் துறை விவகாரங்களுக்கு மட்டுமே வைத்துக் கொண்டு, இதர துறைகள் அனைத்திலும் தனிப்பட்ட மக்கள் கமிசாரகங்களுக்கு முழுச் சுயேச்சையை மீட்டளிக்க மாட்டோம்—என்பதை முன்கூட்டியே எவ்வகையிலும் உறுதிப்படுத்த முடியாது.

மக்கள் கமிசாரகங்களைப் பரவலாக்குவதும், மாஸ்கோ மற்றும் இதர மையங்களைப் பொருத்த வரை அவற்றின் வேலையில் ஒருங்கிணைப்பு இல்லாதிருப்பதும் கட்சி அதிகாரப் பலத்தால்—இந்த அதிகாரப் பலம் போதிய வகைதிரிவுடனும் பாரபட்சம் இல்லாமலும் அமுலாக்கப்படுமானால்—போதியளவுக்கு ஈடு செய்யப்பட முடியும் என்பதையும், தேசியப் பொறியமைவுகளுக்கும் ருஷ்யன் பொறியமைவுக்கும் இடையிலான ஒருமைப்பாடு இன்மை காரணமாக விளையக் கூடும் கேடு, நமக்கு மட்டுமன்றி, அகிலம் முழுவதற்கும் மற்றும் ஆசியாவிலுள்ள கோடிக் கணக்கான மக்களுக்கும்—இந்த மக்கள் அண்மை எதிர்காலத்தில் வரலாற்று அரங்கத்தில் நம்மைப் பின்தொடர்வார்கள்—விளை

யும் கேடை விடவும் எல்லையில்லாத அளவுக்கு மிகவும் குறைவானதே என்பதையும் மனத்தில் இருத்த வேண்டும். கீழ்த்திசை நாடுகள் விழிப்புற்று எழுந்து முதல் முயற்சியைத் தொடங்கும் தருணத்தில் நாம், நமது சொந்த ருஷ்யரல்லாத தேசிய இனங்களின் பால் ஆகச் சொற்பமான பக்குவமின்மை அல்லது அநீதி மூலம் மட்டுமே எனினும் அதன் மக்களிடமான நமது செல்வாக்கைச் சீர்குலைப்போமானால் அது மன்னிக்க முடியாத சந்தர்ப்பவாதமாகிவிடும். முதலாளித்துவ உலகைத் தாங்கி ஆதரித்து வரும் மேலை ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து ஒன்றுசேர வேண்டுவது அவசியம் என்பது ஒரு விஷயம். இதைப் பற்றி எவ்வித ஐயப்பாடும் கிடையாது, இதை நிபந்தனை இன்றி நான் ஒப்புக்கொள்வது குறித்து நான் பேசத் தேவையில்லை. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பால் சொற்ப அளவிலேயே எனினும் ஏகாதிபத்தியத் தோரணைகளில் நாமே இறங்கி, அவ்வாறாக நமது கோட்பாடு பூர்வமான நேர்மை முழுவதையும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தை நாம் கோட்பாடு பூர்வம் ஆதரிப்பது முழுவதையும் குலைத்துக் கொள்வது என்பது இன்னொரு விஷயம். ஆனால் உலக வரலாற்றின் நாளைய தினம், ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்டு வரும் விழிப்படைந்த மக்கள் இறுதியாக எழுச்சியூட்டப்பட்டு, அவர்களது விமோசனத்திற்கான நிர்ணயகரமான நீடித்த கடுமையான போராட்டம் துவங்கும் தினமாகக் கட்டாயம் திகழும்.

லெனின்

டிசம்பர் 31, 1922.
எழுதிக் கொண்டவர்: ம. வ.

கம்யூனிஸ்ட் சஞ்சிகை,
இதழ் 9ல், 1956ல்
முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 356-362

நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள்[88]

ருஷ்யாவின் மக்களிடத்தான எழுத்தறிவு பற்றிய விவர அறிக்கை, 1920ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாய்க் கொண்டது, அண்மையில் வெளிவந்திருப்பதானது (ருஷ்யாவில் எழுத்தறிவு, மாஸ்கோ, 1922, மத்தியப் புள்ளிவிவர வாரியத்தின் பொதுக்கல்விப் பிரிவால் வெளியிடப்பட்டது) மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

1897ஆம் ஆண்டிலும் 1920ஆம் ஆண்டிலும் ருஷ்யாவின் மக்களிடத்தான எழுத்தறிவு நிலை பற்றிய ஓர் அட்டவணையை இந்த விவர அறிக்கையிலிருந்து எடுத்து அடியில் தருகிறேன்:

	ஆயிரம் ஆடவர்களில் எழுத்தறிந்தோர்		ஆயிரம் பெண்களில் எழுத்தறிந்தோர்		மக்களில் ஆயிரம் பேரில் எழுத்தறிந்தோர்	
	1897	1920	1897	1920	1897	1920
1. ஐரோப்பிய ருஷ்யா .	326	422	136	255	229	330
2. வட காக்கஸஸ் . . .	241	357	56	215	150	281
3. சைபீரியா(மேற்கு) .	170	307	46	134	108	218
ஒட்டுமொத்த சராசரி	318	409	131	244	223	319

பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்தும் அதற்கும் முதலாளித்துவக் கலாசாரத்திற்கும் இடையே இருக்கும் உறவு குறித்தும் நாம் பொழிந்து தள்ளி கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், உண்மைகளும் புள்ளிவிவரங்களும் நாம் முதலாளித்துவக் கலாசாரம் பொறுத்த அளவிலுங்கூட மிகவும் மோசமான பின்னிலேயில் இருக்கிறோம் என்பதைப் புலப்படுத்துகின்றன. எதிர்பார்க்கக் கூடியது போலவே நாம் அனைத்து மக்கள் எழுத்தறிவு நிலையை அடைவதி லிருந்து இன்னும் நெடுந்தொலைவிலே இருக்கிறோம் என்றும், ஜார் காலத்துடன் (1897) ஒப்பிடுகையிலுங்கூட நமது முன் னேற்றம் மிகமிக மெதுவாகவே இருக்கிறது என்றும் தெரி கிறது. ''பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தின்''[89] வானுச்சி யில் கற்பனைச் சிறகடித்துப் பறப்போருக்கு இது ஒரு கடும் எச்சரிக்கையாகவும் கண்டனமாகவும் அமைதல் வேண்டும். சாதாரண மேற்கு ஐரோப்பிய நாகரிக நாட்டின் தரத்தை வந்தடைவதற்குக்கூட இன்னும் நாம் எவ்வளவு பிரம்மாண்ட அளவில் அவசரத் தயாரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருக் கிறது என்பதை இது காட்டுகிறது. மேலும், நாம் வென்றி ருக்கும் பாட்டாளி வர்க்க ஆதாயங்களின் அடிப்படையிலே மெய்யான கலாசாரத் தரம் என்பதாய்க் கூறக் கூடிய ஒரு தரத்தை அடைய இன்று நாம் எவ்வளவு பெரிய அளவில் வேலை செய்தாக வேண்டும் என்பதையும் இது காட்டுகிறது.

மறுக்க முடியாததாயினும், பெரிதும் தத்துவார்த்த முறையிலே அமைந்த இந்த முடிவின் வரம்புக்குள் நாம் நின்றுவிடக் கூடாது. நமது காலாண்டுப் பட்ஜெட்டை நாம் திருத்தியமைக்கும் அடுத்த சந்தர்ப்பத்திலேயே, இந்த விவ காரத்தை நடைமுறை வழியிலும் கருதியாக வேண்டும். முதலாவதாக, கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தைத் தவிர ஏனைய அரசாங்க இலாக்காக்களின் செலவுகளைக் குறைத்து, இவ்வாறு கிடைக்கப் பெறும் தொகைகளை முன்னதன் தேவை களுக்காக ஒதுக்க வேண்டுமென்பது தெளிவு. பண்ட வழங் கீடு ஒப்பளவில் நல்லபடியாய் இருக்கும் இவ்வாண்டைப் போன்ற ஓர் ஆண்டில் பள்ளி ஆசிரியர்களுக்கு ரொட்டிப்

பங்கீட்டை அதிகமாக்குவதில் நாம் தயக்கம் காட்டக் கூடாது.

பொதுவாய்ப் பேசுமிடத்து, பொதுக் கல்வித் துறையில் தற்போது செய்யப்பட்டு வரும் வேலை மிகக் குறுகலாய் இருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. பழங்காலத்திய ஆசிரியர் களை அவர்களுக்குப் பழக்கப்பட்டு போன அந்த மாருத பாதையிலிருந்து வெளிப்படுத்தி விலகி வரச் செய்யவும், புதிய பிரச்சினைகளில் அவர்களைக் கருத்துக் கொள்ளும்படி ஈர்க்கவும், புதிய கல்வி முறைகளிலும் மதத்தைப் போன்ற பிரச்சினைகளிலும் அவர்களுடைய அக்கறையைத் தூண்டவும் நிறைய முயற்சிகள் எடுத்து வரப்படுகின்றன.

ஆனால் பிரதான காரியத்தை நாம் செய்தாகவில்லை. எந்த விதமான கலாசாரமும்—பாட்டாளி வர்க்கத்தினுடை யதோ, அல்லது முதலாளித்துவ வர்க்கத்தினுடையதோ ஆயினுங்கூட—பெற விரும்புவோமாயின், அதற்கு அத்தியா வசியமான உரிய நிலைக்குப் பள்ளியாசிரியரை உயர்த்த நாம் ஏதும் செய்யவில்லை, அல்லது தேவையானதிலிருந்து மிகமிகக் குறைவாகவே செய்து வருகிறோம். இன்னமும் நாம் நம்மை விடுவித்துக் கொண்டுவிடாத அரை ஆசிய அறியாமை இருளை நினைவில் கொண்டிருக்க வேண்டும். அரும் பெரும் முயற்சிகள் இல்லாமல் நாம் நம்மை இதி லிருந்து விடுவித்துக் கொண்டுவிட முடியாது. ஆயினும் இப்படி விடுவித்துக் கொள்வதற்கு நாம் எல்லா வாய்ப்பு களையும் பெற்றிருக்கிறோம். எப்படியெனில், பெருந்திரளின ரான மக்கள் நம் நாட்டில் இருப்பதைப் போல் வேறு எங்கும் மெய்யான கலாசாரத்தில் இவ்வளவு அக்கறை கொண்டோராய் இருக்கவில்லை; இந்தக் கலாசாரத்தின் பிரச் சினைகள் நம் நாட்டைப் போல்வேறு எங்கும் இவ்வளவு தீர்க்க மாகவும் முரணின்றியும் முன்வைக்கப்படவில்லை; வேறு எந்த நாட்டிலும் அரசு அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைகளில் இருக்கவில்லை, இந்தத் தொழிலாளி வர்க்கத்தின் பெருந்திரளினர், தமது கலாசார நிலையின் குறைபாடுகளை என்று சொல்ல மாட்டேன், ஆனால் தமது எழுத்தறிவு நிலை யின் குறைபாடுகளை முழு அளவுக்கு உணர்ந்திருக்கின்றனர்;

நம் நாட்டில் போல் வேறு எங்கும் தொழிலாளி வர்க்கம் இத்துறையில் தனது நிலையை மேம்படுத்திக் கொள்ள இப்படித் தியாகங்கள் புரிய இந்த அளவுக்குத் தயாராய் இருக்கவும் இல்லை, வேறு எங்கும் மெய்யாகவே இப்படித் தியாகங்கள் புரிந்து வரவும் இல்லை.

ஆரம்பப் பொதுக் கல்வியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, முதல் நடவடிக்கையாய், நமது அரசு பட்ஜெட் முழுவதையும் திருத்தியமைக்க இன்னமும் நாம் மிகச் சொற்பமாகவே, மிகமிகச் சொற்பமாகவே முயற்சிகள் எடுத்து வருகிறோம். நமது கல்வித்துறை மக்கள் கமிசாரகத்திலுங் கூட அரசுப் பதிப்பகம் ஏதேனும் ஒன்றில் வெட்ககரமான அளவுக்கு எல்லை மீறி பெரிய எண்ணிக்கையிலான அலுவலர்கள் இருப்பதை அடிக்கடி காண்கிறோம். அரசு முதலாவதாய்க் கவலைப்பட வேண்டியது பதிப்பகங்களைப் பற்றியல்ல, படிக்கத் தெரிந்த மக்கள் இருக்க வேண்டுமென்பது பற்றியே யாவற்றுக்கும் முதலாய்க் கவலைப்பட வேண்டும். படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தாக வேண்டும், அப்பொழுதுதான் புத்தக வெளியீட்டுக்கு வருங்கால ருஷ்யாவில் விரிந்த அரசியல் அரங்கு கிடைக்கும் என்னும் கருத்துக்கு நேர் முரணான ஒரு நிலைமை இது. பழைய (மற்றும் மோசமான)பழக்கம் காரணமாய் இன்னமும் நாம், மக்களிடையிலான எழுத்தறிவு என்னும் பொது அரசியல் பிரச்சினையைக் காட்டிலும் புத்தக வெளியீட்டுப் பிரச்சினை போன்ற நுட்பவியல் பிரச்சினைகளில் தான் மிகவும் அதிக நேரமும் முயற்சியும் செலவிட்டு வருகிறோம்.

மத்தியத் தொழிற்பயிற்சிக் கல்வி வாரியத்தை[90] எடுத்துக் கொள்வோமானால், அங்கும் இலாகா நலன்களை முன்னிட்டு வேண்டாத அளவுக்கு ஊதிப்பெருத்து உபரியாகி விட்டவை பலவும், விரிவான பொதுக் கல்வியின் தேவைகளுக்கு உகந்தவாறு அமையாத பலவும் நிறைய இருக்கின்றன என்று நிச்சயமாய்க் கூறலாம். மத்தியத் தொழிற்பயிற்சிக் கல்வி வாரியத்தில் நாம் காண்பவற்றுள் பலவும் நியாயமுடைத்தவையே, முதற்கண் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் நமது இளம் தொழிலாளர்

களுடைய கல்வியை மேம்படச் செய்ய வேண்டும், அதை நடைமுறை சார்ந்த போக்குடைய தாக்க வேண்டும் என்னும் நேர்மையான விருப்பத்துக்கு இணங்க அமைந்தவையே என்பதாய்க் கூற முடியாது. மத்தியத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியத்தின் அலுவலர் தொகுதியைக் கவனமாய்ப் பரிசீலித்தால், ஊதிப்பெருத்து உபரியாகி விட்டதும், இந்த விதத்தில் கற்பனையானதும், கழித்துக் கட்டப் பட வேண்டியதும் ஆகியவை நிறைய இருக்க காண்போம். மக்களிடையே எழுத்தறிவை ஓங்கச் செய்யும் பொருட்டு, பாட்டாளி வர்க்க மற்றும் விவசாயிகளது அரசில் செலவுச் சிக்கனத்துக்காகச் செய்யப்படக் கூடியவையும் செய்யப்பட வேண்டியவையும் இன்னமும் நிறையவே இருக்கின்றன. பாதியளவுக்குப் பிரபுக் குலத்து ரகத்தைச் சேர்ந்த விளையாட்டு நிலையங்களானவற்றை, அல்லது இன்னமும் நமக்குத் தேவையில்லாத, இவை இல்லாமலே நம்மால் இருக்க முடியும்படியான, புள்ளிவிவரங்கள் புலப்படுத்துவது போல மக்களிடையிலே நிலவும் எழுத்தறிவின் நிலையைக் கருதுகையில் நீண்ட காலத்துக்கு இவை இல்லாமலே நாம் சாமாளிக்க வேண்டியவையான நிலையங்களை மூடுவதன் மூலம் நாம் செலவுச் சிக்கனம் செய்ய முடியும்.

நமது பள்ளியாசிரியர், முதலாளித்துவச் சமுதாயத்தில் எந்நாளும் அவர் அடைந்திராத, அடையவும் முடியாத ஒரு தரநிலைக்கு உயர்த்தப்பட்டாக வேண்டும். இது யாவரும் அறிந்ததே, இதற்கு நிரூபணம் தேவையில்லை. ஆசிரியரை ஓர் உயர்ந்த கலாசார நிலைக்கு உயர்த்தவும், மெய்யாகவே உன்னதமான அவரது பணித் துறைக்கு ஏற்றவாறு அவருக்கு முழு அளவில் பயிற்சி அளிக்கவும், மற்றும்—பிரதானமாய், மிகவும் பிரதானமாய், மிகமிகப் பிரதானமாய்—அவருடைய நிலையைப் பொருளாயத வழியில் மேம்படுத்தவும் இடைவிடாமலும் முறையாகவும் விடா முயற்சியோடும் பாடுபட்டு இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்க வேண்டும்.

பள்ளியாசிரியர்கள் விதிவிலக்கின்றி எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் இன்னமும் முதலாளித்துவ அமைப்பின்

ஆதாரத் தூண்களாகவே இருந்து வரும் நிலையிலிருந்து அவர்களை மாற்றி, சோவியத் அமைப்பின் ஆதாரத் தூண்களாக்குவதற்காக, இவ்விதம் அவர்களுடைய பணியின் மூலமாய் விவசாயிகளை முதலாளித்துவ வர்க்கத்தாருடனான கூட்டணியை விட்டு விலகிப் பாட்டாளி வர்க்கத்துடனான கூட்டணிக்கு வந்து சேரச் செய்வதற்காக, பள்ளி ஆசிரியர்களை ஒழுங்கமைத்திடுவதற்கான நமது முயற்சிகளை நாம் முறையாய் மும்முரமாக்கிச் செல்ல வேண்டும்.

இத்துறையில், கிராமங்களுக்கு முறைபடச் சென்று செயலாற்றுவோரின் விஜயங்களுக்குள்ள தனி முக்கியத்துவத்தைச் சுருக்கமாய்க் குறிப்பிட்டு வலியுறுத்த விரும்புகிறேன். இத்தகைய விஜயங்கள் நமது நாட்டில் ஏற்கெனவே நடைபெற்று வருவது மெய்தான். இவை முறைபட ஊக்குவிக்கப்பட வேண்டும். கிராமங்களுக்கான இந்த விஜயங்களைப் போன்ற நடவடிக்கைகளுக்காக நாம் பணம் செலவிடத் தயங்கக் கூடாது — அரசு இயந்திரத்துக்காக, அனேகமாய் முழு அளவில் வரலாற்றின் கடந்த சகாப்தத்தின் விளைவாகிய இந்த இயந்திரத்துக்காகத் தாராளமாய் நாம் அடிக்கடி விரயம் செய்யும் பணத்தை இந்நடவடிக்கைகளுக்காகச் செலவிடத் தயங்கக் கூடாது.

கிராமங்களின் காப்பு ஆதரவாளர்களாய் நகரத் தொழிலாளர்கள் ஆற்றும் பணிகள் குறித்து, 1922 டிசம்பரில் சோவியத்துக்களின் காங்கிரசில் நான் நிகழ்த்துவதாயிருந்த சொற்பொழிவுக்காகப் புள்ளிவிவரங்கள் சேகரித்தேன். இந்தப் புள்ளிவிவரங்களில் ஒரு பகுதி தோழர் ஹதரோவ்ஸ்கி எனக்காகத் திரட்டியது. இந்த விவகாரத்தை எடுத்துரைத்து, சோவியத்துக்களின் காங்கிரசின் மூலம் இதை விளம்பரப்படுத்த முடியாமற்போய் விட்டதால், இப்பொழுது விவாதத்துக்காகத் தோழர்களுக்கு இதைச் சமர்ப்பிக்கிறேன்.

இங்கு நம் முன்னே இருப்பது ஓர் அடிப்படை அரசியல் பிரச்சினை—நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய பிரச்சினை. நமது புரட்சி அனைத்துக்கும் தீர்மானகரமான முக்கியத்துவமுடைய பிரச்சினை இது. முதலா

ளித்துவ அரசு நகரத் தொழிலாளர்களை மயக்கி ஏமாற்று வதற்காகத் தனது எல்லா முயற்சிகளையும் திட்டமிட்டு ஒன்று குவியச் செய்கிறது; இதன் பொருட்டு அரசாங்கச் செலவிலும் ஜாரிஸ்டுக் கட்சிகள், முதலாளித்துவக் கட்சிகளின் செலவிலும் வெளியிடப்படும் எல்லா வெளியீடுகளையும் ஒழுங்கு செய்து கொள்கிறது. ஆனால் நாம் நகரத் தொழிலாளியைக் கம்யூனிசக் கருத்துக்களைக் கிராமத்துப் பாட்டாளி வர்க்கத்திடம் எடுத்துச் செல்லும் பயனுள்ள தூதுவனாக்குவதற்காக நமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும், பயன்படுத்தவும் வேண்டும்.

''கம்யூனிசக் கருத்துக்கள்'' என்று சொன்னேன்; இதனால் தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டு விடலாம், அல்லது சொல்லின் நேர்பொருளில் அப்படியே அர்த்தப்படுத்தப் பட்டுவிடலாம் என்று அஞ்சி அவசரமாய் நிபந்தனை வரம்பிடுகிறேன். கலப்பற்ற, கறாரான கம்யூனிசக் கருத்துக்களை உடனடியாகவே நாம் கிராமப்புறங்களில் பரப்ப வேண்டும் என்பதாய் எந்நிலைமையிலும் இதை அர்த்தப்படுத்திவிடக் கூடாது. கம்யூனிசத்துக்குத் தேவையான பொருளாயத அடித்தளம் நமது கிராமப்புறங்களில் இல்லாதவரை, இதைச் செய்வது கம்யூனிசத்துக்குத் தீங்கிழைப்பதாகவே இருக்கும், உண்மையில் பேராபத்து விளைவிப்பதாகவே இருக்கும் என்றே கூற வேண்டும்.

அதுதான் உண்மை. கிராமப் பகுதிகளில் கம்யூனிசத்தைப் புகுத்துவதென்று முன்கூட்டியே புனைந்தமைந்த நோக்கம் இல்லாமலே, நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையே நாம் தொடர்புகளை அமைத்திட முற்பட்டாக வேண்டும். கம்யூனிசத்தைப் புகுத்துவதென்ற நோக்கம் தற்போது சாதிக்கப் படக் கூடியதல்ல. இது காலத்துக்கு உகந்ததல்ல. இது போன்ற ஒரு நோக்கத்தைத் தற்போது ஏற்பது இலட்சியத் துக்குச் சேவை புரிவதற்குப் பதிலாய்த் தீங்கே இழைக்கும்.

ஆனால் நகரத் தொழிலாளர்களுக்கும் கிராமத் தொழிலாளி மக்களுக்குமிடையே தொடர்புகளை நிறுவுதல், அவர்களிடையே ஒருவகைத் தோழமையுறவை நிறுவுதல் நமது கடமையாகும். இந்தத் தோழமையுறவை எளிதில் ஏற்படுத்த

முடியும். ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னுள்ள அடிப்படைப் பணிகளில் ஒன்று இது. இதை நிறைவேற்ற ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களது கழகங்கள் பலவற்றையும் (கட்சி, தொழிற்சங்க மற்றும் தனியார் கழகங்களை) நாம் நிறுவ வேண்டும்; கிராமங்கள் கலாசார வளர்ச்சி பெற அவற்றுக்கு முறைபட தொண்டாற்றுவதற்கு இக்கழகங்கள் தம்மைப் பணித்துக் கொள்ள வேண்டும்.

எல்லா நகரக் குழுக்களையும் கிராமக் குழுக்களுடன் ''இணைத்து'', இதன் மூலம் தொழிலாளி வர்க்கக் குழு ஒவ்வொன்றும் அது ''இணைக்கப்பட்டிருக்கும்'' கிராமக் குழுவின் கலாசாரத் தேவைகளுக்குப் பணி புரிவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் முறையாய்ப் பயன்படுத்திக் கொள்ளும்படிச் செய்ய முடியுமா? அல்லது தொடர்புகளுக்கான இதர முறைகளைக் கண்டு பிடிக்க வேண்டுமா? இங்கு நான் இக்கேள்வியைக் குறிப்பிடுவதுடன் மட்டுமே நிறுத்திக் கொள்கிறேன். இதைத் தோழர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதும், மேற்கு சைபீரியாவிலிருந்து கிடைத்திருக்கும் அனுபவத்தை (தோழர் ஹதரோவ்ஸ்கி இதை என் கவனத்துக்குக் கொண்டுவந்தார்) சுட்டிக் காட்டுவதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரம்மாண்ட கலாசாரப் பணியை அதன் முழுப் பரிமாணத்திலும் எடுத்துரைப்பதும்தான் எனது நோக்கம்.

கிராமப் பகுதிகளுக்காக நமது அரசாங்கப் பட்ஜெட்டுக்கு வெளியே, அல்லது அரசாங்க மார்க்கங்களுக்கு வெளியே அனேகமாய் எதுவுமே நாம் செய்யவில்லை. நமது நாட்டில் நகருக்கும் கிராமத்துக்கும் இடையிலான கலாசார உறவுகளின் தன்மையானது தாமாகவே, தவிர்க்க முடியாத வழியில் மாறி வருவது மெய்தான். முதலாளித்துவத்தில் நகரமானது அரசியல், பொருளாதார, ஒழுக்க நெறி, பௌதிக, இன்ன பிற முறைகளிலான ஊழலைக் கிராமப் புறத்தில் புகுத்திற்று. நம்முடைய விவகாரத்தில், இவற்றுக்கு நேர்மாறானவற்றை நகரம் கிராமப்புறத்தில் புகுத்து

வதற்குத் தாமாகவே முற்பட்டிருக்கிறது. ஆனால் இவை யாவும் தாமாகவே, தன்முனைப்பாகவே நடைபெற்று வருகின்றன. உணர்வு பூர்வமாகவும், திட்ட வழியிலும், முறையாகவும் இப்பணியைச் செய்வதன் மூலம் இவற்றை எல்லாம் மேம்படச் செய்ய முடியும் (பிற்பாடு நூறு மடங்கு கூடுதலாக்கவும் முடியும்).

இந்தப் பிரச்சினையை நாம் ஆராய்வோமாயின், இந்தப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவும், இதை விவாதிக்கவும், அமுல் செய்யவும் எல்லாவகையான தொழிலாளர் நிறுவனங்களையும் அமைத்துக் கொள்வோமாயின்—இந்நிறுவனங்கள் அதிகாரவர்க்கத் தன்மை பெறாதபடித் தடுப்பதற்கு யாவும் செய்வோமாயின்—அதன் பின் மட்டுமே நாம் முன்னேறத் தொடங்குவோம் (அதற்குப் பிற்பாடு இன்னும் நூறு மடங்கு அதிக வேகத்தில் நிச்சயம் முன்னேறுவோம்).

ஜனவரி 2, 1923

பிராவ்தா, இதழ் 2,
ஜனவரி 4, 1923

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 363-368

கூட்டுறவு குறித்து[91]

1

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தற்போது, அக்டோபர் புரட்சி நடைபெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள்கையையும் அன்னியில் (இதற்கு மாறுய்ப் புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச்சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), கூட்டுறவு இயக்கம் நம் நாட்டில் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற்கில்லை. பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனைப் புனைவுகள் மிகுதியாய் உள்ளன. அடிக்கடி அவை நகைக்கத்தக்க அளவுக்குக் கற்பனைப் புனைவுகளாய் அமைந்து விடுகின்றன. அவை நம்ப முடியாது கற்பனைகளாய் இருக்கக் காரணம் என்ன? காரணம் என்னவெனில், சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக நடைபெறும் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அடிப்படையான, ஆழ்மட்டத்து முக்கியத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. நாம் சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்தி விட்டோம், ஆகவே பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனையாகவும், ஏன் புத்தார்வ மனப்பாங்காகவும், கொச்சையாகவும் கூட இருந்தவை பலவும் இப்பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வருகின்றன.

அரசின் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு வந்து விட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும்

இந்த அரசின் ஆட்சியதிகாரத்துக்குச் சொந்தமாகி விட்ட தால், இனி மக்கள் எல்லோரையும் கூட்டுறவுக் கழகங்களில் ஒன்றுதிரளச் செய்வதுதான் நமக்குள்ள ஒரே பணி என்ருகி விட்டது. வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும், அர சியல் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுவதும், இன்ன பிறவும் அவசியமென்று பிழையற்ற முறையில் கருதியோர், நியாயமாகவே நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும் உரியதாய்க் கொண்ட அந்த சோஷலிசம், இப்பொழுது மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானோர் கூட்டுறவு களில் ஒன்றுதிரட்டப்பட்டதும் தானுகவே தனது குறிக் கோளை நிறைவேற்றிக் கொண்டுவிடும். ஆனுல் இப்பொழுது ருஷ்யாவின் மக்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வது எவ்வளவு பிரம்மாண்ட, எண்ணில டங்கா மடங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதை எல்லாத் தோழர்களும் உணர்வதில்லை. புதிய பொருளா தாரக் கொள்கையை ஏற்றதன் மூலம் நாம், வியாபாரி யாய்ச் செயல்படும் விவசாயிக்கு, தனியார் வர்த்தகமெனும் கோட்பாட்டுக்கு ஓரளவு விட்டுக்கொடுத்தோம். இதே காரணத்தால் (சிலர் நினைப்பதற்கு நேர்மாருய்), கூட்டுறவு இயக்கம் இன்று இந்தப் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெறு கிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் நாம் செய்ய வேண்டியதெல்லாம் போதுமான அளவுக்கு விரி வாயும் ஆழமாயும் ருஷ்யாவின் மக்களைக் கூட்டுறவுச் சங் கங்களில் ஒன்றுதிரட்டுவதுதான். ஏனெனில் இப்பொழுது நாம் தனியார் நலத்தை, தனியார் வர்த்தக நலத்தை அந்த நலத்தின் மீதான அரசு மேற்பார்வையுடன், கண்காணிப் புடன் எந்த அளவுக்கு இணைக்க வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; அதைப் பொது நலன்களுக்கு எந்த அளவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; பல சோஷலிஸ்டுகளுக்கும் முன்பு முட்டுக்கட்டையாய் இருந்த இதனை நாம் கண்டு கொண்டு விட்டோம். உள்ளப்படியே, எல்லாப் பெருவீத உற்பத்திச் சாதனங்களும் அரசின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருத்தல், அரசியல் ஆட்சியதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில்

இருந்தால், இந்தப் பாட்டாளி வர்க்கம் கோடிக் கணக்கான சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடன் கூட்டணி கொண்டிருத்தல், பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுக்குத் தலைமை தாங்குதல் உறுதி பெற்றிருத்தல் முதலான இவைதானே கூட்டுறவுகளைக் கொண்டு — கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு—முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவைப்படுகிறவை. முன்பு நாம் இந்தக் கூட்டுறவுகளை லாப வேட்டை அடிப்படையாய் இழித்துக் கூறினோம், இப்பொழுதுங்கூட புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இவற்றை ஓரளவுக்கு இவ்வாறு இழித்துக் கூற நமக்கு உரிமை உண்டு. இந்தக் கூட்டுறவுகளிலிருந்து முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதெல்லாம் மேற்கூறியவைதானே? இன்னும் இது சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது ஆகிவிடாது என்றாலுங்கூட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவையானதும் போதுமானதுமான அனைத்தும் இதுதானே.

இதைத்தான் நமது செய்முறை ஊழியர்கள் பலரும் குறைத்து மதிப்பிட்டு விடுகிறார்கள். நமது கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் ஏளனமாய்க் கருதுகிறார்கள். அவற்றின் தனி முக்கியத்துவத்தை—முதலாவதாய், கோட்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்தும் (உற்பத்திச் சாதனங்கள் அரசுக்குச் சொந்தமாயிருக்கின்றன), இரண்டாவதாய், சாத்தியமான அளவில் மிகவும் எளிய, சுலபமான, விவசாயிக்கு மிகவும் ஏற்புடையதான வழியில் புதிய அமைப்புக்கு மாறிச் செல்லும் கண்ணோட்டத்திலிருந்தும் அவற்றுக்குள்ள தனி முக்கியத்துவத்தை—அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷலிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங்களை வகுப்பது ஒன்று; ஆனால் நடைமுறையில் சோஷலிசத்தைக் கட்டப் பயில்வது, ஒவ்வொரு சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷலிசத்தைக் கட்டப்பயில்வது முற்றிலும் வேறொன்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப்பது இதே கட்டத்தைத்தான். இதை வந்

தடைந்த பின், நாம் இதைச் சொற்ப அளவுக்கே பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்ட போது நாம் அளவு மீறிச் சென்று விட்டோம்; தடையில்லாத் தனியார் தொழில், தடையில்லா வாணிபம் என்னும் கோட்பாட்டுக்கு மிதமிஞ்சிய இடம் அளித்தோம் என்பதாலல்ல, கூட்டுறவுகளைக் கருதத் தவறி விட்டோம், இப்போது கூட்டுறவுகளைக் குறைத்து மதிப்பிட்டோம்; மேற்கூறிய இரு கண்ணோட்டங்களிலும் கூட்டுறவுகளுக்குள்ள மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்கெனவே மறக்கத் தொடங்கி விட்டோம் என்பதால் நாம் அளவு மீறிச் சென்றோம்.

இந்தக் ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இப்பொழுது வாசகருடன் விவாதிக்கப் போகிறேன். ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் சோஷலிசப் பொருள் எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படும் வண்ணம் உடனடியாய் இக்கோட்பாட்டை நாம் எவ்வழிகளில் வளர்க்க முற்படலாம், முற்படவும் வேண்டும்?

கூட்டுறவானது பொதுவாகவும் எப்பொழுதும் சில தனிச் சலுகைகள் பெற்றிருப்பதோடன்றி, இந்தத் தனிச் சலுகைகள் முற்றிலும் பொருளாயதத் தன்மையனவாகவும் (சலுகைக்குரிய வங்கி வட்டி விகிதம் முதலானவை) இருக்கும்படியான அரசியல் வழியில் அது ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தனியார் தொழில் நிலையங்களுக்கு நாம் அளிக்கும் கடன்களைக் காட்டிலும், கனரகத் தொழிலுக்கும் பிறவற்றுக்கும் அளிப்பதையும் காட்டிலும் அதிகமான, சிறிதளவேனும் அதிகமான, அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால்தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். ''தடையில்லா'' முதலாளித்துவம் பிறப்பதற்கு நூறு கோடிக் கணக்கான ரூபிள் தொகை செலவிட வேண்டியிருந்ததைக் குறிப்பிடத் தேவையில்லை. தற்போது நாம் வழக்கத்தை விட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்

டுறவு அமைப்பே என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். மெய்யாகவே நாம் இந்த உதவியை அளித்தாக வேண்டும். அச்சொல்லின் மெய்ப் பொருளில் அது உதவியாய் இருத்தல் வேண்டும். அதாவது எந்த வகையான கூட்டுறவு வர்த்தகத்துக்கும் அளிக்கப்படும் உதவியாய் அதை அர்த்தப்படுத்தினுல் போதாது; உதவி அளிக்க வேண்டும் என்று கூறும் போது, மெய்யாகவே பெருந்திரளான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும் கூட்டுறவு வர்த்தகத்துக்கு உதவுவதையே அது குறிக்க வேண்டும். கூட்டுறவு வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியானதோர் உதவி முறைதான், ஆனுல் பிரதான விவகாரம் என்னவெனில் விவசாயி எடுத்துக் கொள்ளும் இந்தப் பங்கின் இயல்பையும், அதில் அடங்கியுள்ள உணர்வையும், அதன் தன்மையையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். சுருராய்ச் சொல்வதெனில், கூட்டுறவாளர் ஒருவர் கிராமத்துக்குச் சென்று அங்கு கூட்டுறவுப் பண்டகசாலை திறந்தால், மக்கள் அதில் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்வதில்லை. ஆயினும் அதே சமயம் தமது சொந்த நலன்களால் உந்தப்பட்டு அதில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள முன்வரவே செய்வர்.

இந்தப் பிரச்சினைக்கு மற்ருேர் அம்சமும் இருக்கிறது. ''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணேட்டத்தின்படி கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் தன்முனைப்பில்லாத முறையிலல்ல, முழுமுனைப்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படித் தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. சுருராய்க் கூறுகையில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது ''ஒன்றே ஒன்றுதான்'': கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும்படியும், இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யும்படியும் அவர்களை ''அறிவொளி பெறச் செய்வதுதான்'' அது. இந்த ''ஒன்றே ஒன்றுதான்''. சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள்

நமக்குத் தேவைப்படவில்லை. ஆனல் இந்த ''ஒன்றே ஒன் றைச்'' செய்து முடிப்பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந் தேறியாக வேண்டும்—மக்கள் அனைவரும் கலாசார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த்தம் பேசுவதையும் கரணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு முன் னேற்றமாகும். ஏனெனில் இது சர்வ சாதாரண விவ சாயியின் நிலைக்கு ஏற்றதாகக் கூடியதாய் இருக்கிறது, இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயியிடமிருந்து கோரவில்லை. ஆனல் மக்கள் தொகையினர் அனைவரையும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவு களில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டியிருக்கும். யாவும் நன்கு அமையின் இதைச் சாதிப்பதற்குப் பத்து, இருபது ஆண்டுகளாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வரலாற்றுச் சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெருமல், போதிய அளவு விவேக முடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற் படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெருமல், இதற் குரிய பொருளாயத அடித்தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகிவிடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிட மிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலை இல்லாமல்—இவையாவும் இன்றி நாம் நமது குறிக்கோளை அடைய முடியாது. செயல்களில் விரிவான புரட்சிகர வீச்சை நாம் வெளிப்படுத்திக் காட்டி—மிகுதி யாய் வெளிப்படுத்திக் காட்டி—முழு அளவில் வெற்றி ஈட்டி யுள்ள புரட்சிகர ஆர்வத்தை விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறனுடன் இணைக்கத் தெரிந்து கொள் வதுதான் இப்பொழுது தலையாயதாகும். சிறந்த கூட்டுற வாளராவதற்கு விவேகமும் அறிவுமுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடு

டைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலேயே குறிப்பிடுகிறேன். ''வர்த்தகம் புரிகிருர் என்பதால் அவர் நல்ல வர்த்தகரே '' என்பதாய்க் கற்பனே செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டாக வேண்டும். இது முற்றிலும் சரியானதல்ல. அவர் வர்த்தகம் புரிவது மெய்தான், ஆனல் பண்பாடுடைய வர்த்தகராய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந்தூரம். இப்பொழுது அவர் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகிருர், ஆனல் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டுமாயின் ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்டும். அந்த நிலேயிலிருந்து அவர் ஒரு முழுச் சகாப்தம் பின்தங்கியோராய் இருக்கிருர்.

முடிவுரையாய்க் கூற வேண்டியது: சோஷலிசக் கூட்டுறவுகளுக்குப் பலவும் பொருளாதார, நிதித் துறை, வங்கித் துறை சலுகைகள் வழங்க வேண்டும்—மக்களே ஒன்றுதிரட்டுவதற்குரிய புதிய கோட்பாட்டுக்கு ஆதரவளிக்க இதுவே வழி. ஆனல் இது இப்பணியின் பொது உருவரையே தவிர, நடைமுறைப் பணியின் முழு உள்ளடக்கத்தையும் வரையறுத்து விவரமாய் எடுத்துரைக்கவில்லே. அதாவது கூட்டுறவுகளில் சேருவதற்காகத் தர வேண்டிய ''போனசின்'' வடிவம் என்ன (இதை நாம் எந்த நிபந்தனேகளின் பேரில் தருவது), கூட்டுறவுகளுக்கு நாம் போதுமான அளவில் உதவுவதற்கு வேண்டிய போனசின் வடிவம் என்ன, பண்பாடுடைய கூட்டுறவாளரை உருவாக்கக் கூடிய போனசின் வடிவம் என்ன என்பதை நாம் கண்டறிந்து கொண்டாக வேண்டும். உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை இருக்குமாயின், பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வர்க்க வெற்றி பெற்று விடுமாயின், பண்பாடுடைய கூட்டுறவாளர்களது அமைப்புதான் சோஷலிச அமைப்பு.

ஜனவரி 4, 1923

2

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நான் எழுதிய போதெல்லாம், 1918ல் அரசு முதலாளித்துவத்தைப் பற்றி

நான் எழுதிய கட்டுரையை எப்பொழுதுமே மேற்கோளாய்க் குறிப்பிட்டேன்.* பன்முறை இது சில இளந்தோழர்களது மனதில் சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. ஆனால் இவர்களுடைய சந்தேகங்கள் பிரதானமாய்க் கருத்தியலான அரசியல் விவகாரங்களைப் பற்றியவையே.

அரசு முதலாளித்துவம் என்னும் தொடரை உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளி வர்க்கத்தின், அரசியல் ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதற்கு உபயோகிக்கக் கூடாதென இவர்கள் நினைத்தனர். ஆனால் ''அரசு முதலாளித்துவம்'' என்னும் தொடரை நான் முதலாவதாக, நமது தற்போதைய நிலையை இடதுசாரி கம்யூனிஸ்டுகள் என்போருடன் நடைபெற்ற எனது வாக்குவாதத்தில் ஏற்கப்பட்ட நிலையுடன் வரலாற்று வழியில் இணைத்துக் காட்டுவதற்காக உபயோகித்தேன் என்பதை இவர்கள் கவனிக்கவில்லை. தவிரவும் அப்பொழுது நான் அரசு முதலாளித்துவம் தற்போதுள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டிலும் மேம்பட்டதாய் இருக்கும் என்று வாதாடினேன். சாதாரண அரசு முதலாளித்துவத்துக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையை வாசகருக்கு அறிமுகம் செய்கையில் நான் குறிப்பிட்ட அசாதாரணமான—மிகமிக அசாதாரணமான என்றுகூட சொல்ல வேண்டும்—அரசு முதலாளித்துவத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்டுவது எனக்கு முக்கியமானதாய் இருந்தது. இரண்டாவதாக, நடைமுறைக் குறிக்கோள் எப்பொழுதுமே எனக்கு முக்கியமானதாய் இருந்தது. சலுகை உரிமைக் குத்தகைகள் தருவதே நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைக் குறிக்கோள். நடப்பிலுள்ள சூழ்நிலையில் நமது நாட்டில் சலுகை உரிமைகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரசு முதலாளித்துவத்தின் கலப்பற்ற சுத்தமான ஒரு வடிவமாகவே இருக்கும். அரசு முதலாளித்துவம் குறித்து இப்படித்தான் நான் வாதாடினேன்.

* இப்பதிப்பின் தொகுதி *8*, பக்கங்கள் *123—171* பார்க்க.—ப-ர்.

ஆனல் இந்த விவகாரத்தின் மற்ருேர் அம்சமும் இருக்கிறது. இதற்கு அரசு முதலாளித்துவம் தேவைப்படலாம்; அல்லது குறைந்தது அதனுடனை ஒப்பிடலாவது தேவைப்படலாம். கூட்டுறவுகள் பற்றிய பிரச்சினேயே இந்த அம்சம்.

முதலாளித்துவ அரசில், கூட்டுறவுகள் கூட்டு முதலாளித்துவ நிலையங்களாகும் என்பதில் ஐயமில்லை. நமது தற்போதைய பொருளாதார நிலைமைகளில், தனியார் முதலாளித்துவத் தொழில் நிலையங்களை—தேசவுடைமையாக்கப்பட்ட நிலத்தில் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல், தொழிலாளி வர்க்க அரசின் கண்காணிப்பின் கீழ் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல்—முழுக்க முழுக்க சோஷலிச வகையிலான தொழில் நிலையங்களுடன் (உற்பத்திச் சாதனங்களும் இந்நிலையங்கள் அமைந்திருக்கும் நிலமும் மற்றும் இந்நிலையங்கள் பூராவும் அரசின் உடைமையாய் இருப்பவை) இணைத்திடும் போது மூன்ருவது வகையிலான நிலையங்களைப் பற்றிய பிரச்சினை, அதாவது கூட்டுறவு நிலையங்களைப் பற்றிய பிரச்சினை எழுவதிலும் ஐயமில்லை. முன்பெல்லாம் கூட்டுறவு நிலையங்கள் ஏனைய நிலையங்களிலிருந்து அடிப்படையாகவே மாறுபடும் சுயேச்சையான ஒரு தனி வகை நிலையங்களாய்க் கருதப்படவில்லை. கூட்டுத் தொழில் நிலையங்கள் எப்படித் தனியார் தொழில் நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றனவோ அதே போல தனியார் முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் அரசு முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில் முதலாவதாக, அவை தனியார் நிலையங்கள், இரண்டாவதாக, அவை கூட்டு நிலையங்கள். நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலையங்கள் தனியார் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன, ஏனெனில் அவை கூட்டு நிலையங்கள்; ஆனல் அவை அமைந்துள்ள நிலமும் அவற்றின் உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலையங்களிலிருந்து மாறுபடுகிறவை அல்ல.

கூட்டுறவுகள் குறித்து விவாதிக்கையில் இந்த நிலைமை போதிய அளவுக்குக் கவனிக்கப்படுவதில்லை. நமது அரசியல் அமைப்பினுடைய தனி இயல்புகளின் காரணமாய் நமது கூட்டுறவுகள் முற்றிலும் தனிவகைப்பட்ட முக்கியத்துவம் பெறுவது மறக்கப்பட்டு விடுகிறது. சலுகை உரிமைகளை நாம் ஒதுக்கி விடுவோமாயின்—எவ்விதத்திலும் இவை கணிச அளவில் வளர்ந்து விடவில்லை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்—நமது நிலைமைகளில் கூட்டுறவானது அனேகமாய் எப்பொழுதும் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகி விடுகிறது.

நான் நினைப்பதை விளக்கமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். ராபர்ட் ஓவன் போன்ற பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக் ''கூட்டுறவு'' சோஷலிசத்தை முற்றிலும் கற்பனைமயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப் போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றிவிடலாம் என்ற கனவைப் புத்தார்வ மனப்பாங்காகவும் கொச்சையானதாகவுங்கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத்தின் படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே. ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போராட்டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாறியதால், சுரண்டலாளர்களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால்,

உற்பத்திச் சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசுதானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டலாளர்களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால், நிலைமை எப்படி மாறி விட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் சாமான்ய வளர்ச்சியே முற்றிலும் சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகி விட்டது (மேற் கூறிய ''சிறிய'' விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத்தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலியுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட ''கலாசாரப்'' பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும், உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாசாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூறத் தயாராயிருக்கிறேன். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கிவிட்டு, உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில் வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாசாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்குகின்றன. இந்தச் சகாப்தமே இவ்விரு பணிகளாலுமானதுதான். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தியமைத்தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்றதாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ்வியந்திரத்தை நாம் பெற்றுக் கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிரமாய்த்

திருத்தியமைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரளச் செய்வதே, விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட்டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரியான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாசார நிலையை உயர்த்தியாக வேண்டும். கலாசாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாசார வளர்ச்சி பெறாத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்சலான காரியமாகுமென நமது எதிராளிகள் திரும்பத் திரும்ப நமக்குக் கூறினர். தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப்பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கி விட்டோம் என்பதையும், நமது நாட்டில் அரசியல் மற்றும் சமுதாயப் புரட்சி கலாசார மாற்றங்களுக்கும் இப்பொழுது நம்மை எதிர்நோக்கும் கலாசாரப் புரட்சிக்கும் முன்னதாகவே நடைபெற்றது என்பதையும் கூறி அவர்கள் தவறு செய்தார்கள்.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனால் இந்தக் கலாசாரப் புரட்சி முற்றிலும் கலாசாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்), முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றாக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

ஜனவரி 6, 1923

பிராவ்தா, இதழ்கள் 115 மற்றும் 116ல்,
மே 26 மற்றும் 27, 1923ல்
முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 369-377

நமது புரட்சி

(நி. சுஹானவின் குறிப்புக்கள் சம்பந்தமாய்)[92]

1

புரட்சியைப் பற்றிய சுஹானவின் குறிப்புக்களை அண்மையில் படித்துப் பார்த்தேன். நமது குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் எல்லோருக்கும், இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் எல்லோருக்கும் உரியதாயிருக்கும் பகட்டுப் புலமைதான் யாவற்றையும் விட எடுப்பாய்த் தெரிகின்றது. இவர்கள் எல்லோருமே நெஞ்சுத் துணிவு சிறிதும் இல்லாதவர்கள், ஜெர்மன் முன்மாதிரியிலிருந்து இம்மியளவு விலகிச் செல்வதென்றாலும் இவர்களில் மிகச் சிறந்தோருங்கூட வரம்புகள் இட்டு அரண்கள் அமைத்துக் கொள்கிறார்கள் என்பது அன்னியில்—குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் எல்லோருக்குமே பொதுவானதாய் அமைந்து, புரட்சிக் காலம் முழுதும் இவர்கள் வெகுவாய் வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் இந்தக் குணாதிசயத்தை அன்னியில்—மிகவும் எடுப்பாய்த் தெரிவது என்னவெனில் கடந்த காலத்தை அப்படியே காப்பியடிக்கும் இவர்களுடைய அடிமைப் புத்திதான்.

இவர்கள் எல்லோரும் தம்மை மார்க்சியவாதிகளாய் அழைத்துக் கொண்ட போதிலும், மார்க்சியம் குறித்து இவர்களுக்குள்ள கருத்தோட்டம் முழுக்க முழுக்க பகட்டுப் புலமையின் பாணியிலேதான் இருக்கிறது. மார்க்சியத்தில் தீர்மானகரமாய் இருப்பது எதுவோ அதை—அதாவது, மார்க்சியத்தின் புரட்சிகர இயக்கவியலை—புரிந்து கொள்ள இவர்கள் அறவே தவறி விடுகின்றனர். புரட்சிக் காலங்களில் உச்ச அளவுக்கு வளைந்து கொடுக்கும்படியான நெகிழ்வான

போக்கு தேவைப்படுகிறதென்று மார்க்ஸ் வெளிப்படையாகவே கூறியவற்றையுங்கூட[93] இவர்கள் புரிந்து கொள்ள அறவே தவறி விடுகின்றனர். உதாரணமாய், ஜெர்மனியில் புரட்சிகர நிலைமையைத் தோற்றுவிக்கக் கூடிய விவசாயிப் போர் ஒன்றைத் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைந்து நடைபெறச் செய்யலாம் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்து மார்க்ஸ் தமது கடிதங்களில்—1856ல் என்று நினைக்கிறேன்—எழுதியவற்றையுங்கூட[94] இவர்கள் கவனிக்கத் தவறி விடுகின்றனர்—வெளிப்படையான இந்தக் கருத்துரையையுங்கூட நெருங்கி வராமல், சூடான பால் சட்டியைச் சுற்றிக் கொண்டிருக்கும் பூனையைப் போல, தொலைவிலிருந்தபடி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து முறித்துக் கொள்வது போகட்டும், அதனிடமிருந்து சற்றே தடம் புரள்வதற்குங்கூட துணிவில்லாத கோழைகளான சீர்திருத்தவாதிகளே ஆவோம் என்று தம்மைத் தாமே இவர்கள் தம் நடத்தையின் மூலம் அம்பலப்படுத்திக் கொள்கின்றனர். அதே போது அடாபிடியான வாய்வீச்சையும் வீம்புப் பேச்சையும் கொண்டு தமது கோழைத்தனத்தை மூடிமறைத்துக் கொள்கிறார்கள். ஆனால் முற்றிலும் தத்துவார்த்த கண்ணோட்டத்திலுங்கூட இவர்கள் எல்லோரும் பின்வரும் மார்க்சிய ஆய்வுநிலைகளைப் புரிந்து கொள்ளச் சிறிதும் இயலாதோராய் இருப்பது எடுப்பாய்த் தெரிகிறது: இது காறும் முதலாளித்துவமும் முதலாளித்துவ ஜனநாயகமும் மேலைய ஐரோப்பாவில் குறிப்பிட்டதொரு வளர்ச்சிப் பாதையில் சென்றுள்ளதை இவர்கள் கண்டிருக்கிறார்கள்; இந்தப் பாதையைத் தக்க மாற்றங்களுடன்தான், சிற்சில திருத்தங்களுடன் மட்டுந்தான் (உலக வரலாற்றின் பொதுவான வளர்ச்சியினது கண்ணோட்டத்தில் சிறிதும் குறிப்பிடத்தக்கவை அல்லாத சில திருத்தங்களுடன் மட்டுந்தான்) ஒரு முன்மாதிரியாய்க் கொள்ள முடியுமென்பது இவர்களுடைய சிந்தனைக்கு எட்டாத ஒன்றாய் இருக்கிறது.

முதலாவதாக,—ஏகாதிபத்திய முதலாம் உலகப் போருடன் இணைந்த புரட்சி. இத்தகைய ஒரு புரட்சி இந்தப்

போரின் விளைவாய் எழும் புதிய இயல்புகளை அல்லது உருத் திரிபுகளை வெளிக்காட்டவே செய்யும், ஏனெனில் உலகம் இத்தகைய ஒரு போரை இத்தகைய ஒரு சூழ்நிலையில் ஒரு போதும் கண்டதில்லை. இப்போருக்குப் பிற்பாடு மிகவும் செல்வந்த நாடுகளானவற்றின் முதலாளித்துவ வர்க்கத்தார் இது நாள் வரை ''முறையான'' முதலாளித்துவ உறவுகளை மீட்டமைக்க முடியாதோராய் இருப்பதைக் காண்கிறோம். ஆயினும் நமது சீர்திருத்தவாதிகள்—புரட்சியாளர்களாய் வேடம் பூண்டுள்ள குட்டிமுதலாளித்துவப் பகுதியினர்—முறையான முதலாளித்துவ உறவுகளே இறுதி வரம்பென (இவ்வளவுதான், இதற்கு மேல் ஓரடியும் போகலாகாது) நம்பினர், இனியும் நம்பி வருகின்றனர். ''முறையான'' உறவுகளைப் பற்றிய இவர்களுடைய கருத்தோட்டமுங்கூட அளவு மீறி ஒரே மாதிரியான வார்ப்பாகவும், அளவு மீறி குறுகியதாகவும் இருக்கிறது.

இரண்டாவதாக,—ஒட்டுமொத்தமாய் உலக வரலாற்றின் வளர்ச்சியானது பொது விதிகளுக்கு ஏற்பவே நடைபெறுகிறது என்றாலும், வளர்ச்சியின் குறிப்பிட்ட சில கால கட்டங்களில் இந்த வளர்ச்சி அதன் வடிவத்திலோ, வரிசைக் கிரமத்திலோ சில தனி இயல்புகளை வெளிப்படுத்துவது எவ்வகையிலும் தடுக்கப்பட்டுவிடவில்லை, மாறாக எதிர்பார்க்கக் கூடியதே என்னும் கருத்து இவர்களுக்கு முற்றிலும் அன்னியமானதாய் இருக்கிறது. உதாரணமாய், ருஷ்யாவானது, நாகரிக நாடுகளுக்கும் இந்தப் போரால் முதன்முதல் நாகரிகத்தின் செயல் வட்டத்தினுள் திட்டவட்டமாய்க் கொண்டு வரப்பட்டிருக்கும் நாடுகளுக்கும்—அதாவது, ஐரோப்பிய நாடுகளல்லாத எல்லாக் கிழக்குலக நாடுகளுக்கும்—எல்லைக் கோட்டில் அமைந்திருப்பதால், அது சிற்சில தனி இயல்புகளை வெளிப்படுத்தக் கூடும், நிச்சயம் வெளிப்படுத்தவும் செய்யும் என்பது குறித்து இவர்கள் நினைத்தே பார்ப்பதில்லை. இந்தத் தனி இயல்புகள் உலக வளர்ச்சியின் பொது வழிக்கு ஒப்பவே அமைந்திருப்பினுங்கூட, இவை ருஷ்யாவின் புரட்சியை மேற்கு ஐரோப்பிய எல்லா நாடுகளிலும் நடைபெற்றவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன; புரட்சியானது

கிழக்குலக நாடுகளை நோக்கி நகர்ந்து செல்லுகையில் குறிப்பிட்ட சில அரைகுறைப் புது முறைகளைப் புகுத்துகின்றன.

சிறிதும் மாற்றமின்றி அளவு கடந்து ஒரு மாதிரியாய் அமைந்த வார்ப்பாகவே இருக்கிறது, உதாரணமாய் இன்னும் நாம் சோஷலிசத்துக்குப் பக்குவமடைந்தாகவில்லை என்கிற இவர்களது வாதம்; இவர்களிடையிலுள்ள ''மெத்தப் படித்த'' கனவான்கள் சிலர் சொல்லி வரும் சொற்களில் கூறுவதெனில், சோஷலிசத்துக்கு வேண்டிய எதார்த்தப் புறநிலைப் பொருளாதார முதற்கூறுகள் நம் நாட்டில் இருக்கவில்லை என்கிற வாதம். மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகத்தின் வளர்ச்சியின் போது இவர்கள் பொட்ட நெட்டுரு போட்டு மனப்பாடம் செய்து கொண்ட வாதம் இது. முதலாவது ஏகாதிபத்தியப் போரின் போது உருவானது போன்ற ஒரு புரட்சிகர நிலைமையிலுள்ள மக்கள், வேறு வழி ஏதுமில்லாத தமது இந்த நிலைமையால் உந்தப்பட்டு, நாகரிகம் மேலும் வளர்வதற்குரிய நிலைமைகளை—ஓரளவு அசாதாரணமான நிலைமைகளை—உண்டாக்கிக் கொள்ளச் சிறிதளவேனும் வாய்ப்பளிப்பதாய் இருக்கும் ஒரு போராட்டத்தில் குதிக்கலாம் அல்லவா?—இப்படி ஒரு கேள்வி இவர்களில் யாருடைய சிந்தனையிலும் எழுவதே இல்லை.

''ருஷ்யாவில் உற்பத்திச் சக்திகளது வளர்ச்சி சோஷலிசத்தைச் சாத்தியமாக்குபடியான உயர் நிலையை அடைந்தாகவில்லை.'' இரண்டாவது அகிலத்தின் எல்லா வீரர்களும்—சுஹானவும் அடங்கலாய்த்தான்—இந்த முடிவினை எடுத்துரைத்து முழக்கமிடுகிறார்கள். மறுக்க முடியாத இந்த முடிவினை விதம்விதமான ஆயிரம் வழிகளில் ஓயாமல் டமாரமடிக்கின்றனர், நமது புரட்சிக்கு இதுதான் தீர்மானகரமான உரைகல் என்பதாய் நினைக்கின்றனர்.

ஆனால், அதிகமாகவோ குறைவாகவோ செல்வாக்குடைய மேற்கு ஐரோப்பிய நாடு ஒவ்வொன்றும் ஈடுபட்டிருக்கும்படியான ஏகாதிபத்திய உலகப் போரில் ருஷ்யாவை இழுத்துவிட்ட அந்தச் சூழ்நிலை—மற்றும் கிழக்குலகில் முற்றி வந்த, அல்லது ஏற்கெனவே ஓரளவுக்குத் தொடங்கிவிட்ட புரட்சிகளது முன்னறிவிப்பை ருஷ்யா கண்டு கொள்ளும்

படிச் செய்த அந்தச் சூழ்நிலை—''விவசாயிப் போர்'' ஒன்றை தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைத்துக் கொள்ளும் சாத்தியப்பாடு பிரஷ்யாவுக்குக் கைவரப் பெறலாமென்று மாபெரும் ''மார்க்சியவாதியான'' மார்க்சே 1856ல் ஆலோசனை கூறிய அதே இணைப்பை நாம் சாதித்துக் கொள்ளும்படியான ஒரு நிலைக்கு ருஷ்யாவையும் ருஷ்ய வளர்ச்சியையும் கொண்டுவந்த நிலைமைகளைத் தோற்றுவிக்குமாயின் என்ன செய்வதாம்?

வேறு வழி ஏதும் இல்லாத அந்தத் திக்கற்ற சூழ்நிலை, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது முயற்சிகளைப் பத்து மடங்காய் உயரும்படித் தூண்டிவிட்டு, நாகரிகத்துக்கு வேண்டிய அடிப்படை முன்தேவைகளை மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வழியிலிருந்து மாறான ஒரு வழியில் தோற்றுவித்துக் கொள்ளும் வாய்ப்பினை நமக்கு அளிக்குமாயின் என்ன செய்வதாம்? உலக வரலாற்று வளர்ச்சியின் பொதுவான நெறி இதனால் மாற்றப்பட்டு விட்டதா, என்ன? உலக வரலாற்றின் பொதுவான வளர்ச்சிப் போக்கினுள் ஈர்க்கப்படும், அல்லது ஏற்கெனவே ஈர்க்கப்பட்டுள்ள எல்லா நாடுகளின் அடிப்படை வர்க்கங்களுக்கு இடையிலான அடிப்படை உறவுகள் இதனால் மாற்றப்பட்டுவிட்டதா, என்ன?

சோஷலிசத்தைக் கட்டியமைத்திடக் குறிப்பிட்ட கலாசார நிலை தேவையெனில் (ஆனால் இந்தக் குறிப்பிட்ட ''கலாசார நிலை'' என்னவென்பதை யாராலும் கூற முடியவில்லை, ஏனென்றால் மேற்கு ஐரோப்பிய நாடு ஒவ்வொன்றிலும் இது வெவ்வேறு விதமாய் இருக்கிறது), இந்தக் குறிப்பிட்ட ''கலாசார நிலைக்கு'' அவசியமான முன்தேவைகளை ஏன் நாம் புரட்சிகர வழியில் முதற்கண் சாதித்துக் கொள்ள முற்பட்டு, பிற்பாடு தொழிலாளர்கள், விவசாயிகளது ஆட்சியதிகாரத்தின் துணை கொண்டும் சோவியத் அமைப்பின் துணை கொண்டும் ஏனைய தேசங்களை எட்டிப்பிடிக்கத் தொடங்கக் கூடாது?

ஜனவரி 16, 1923

2

சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கு நாகரிகம் அவசியம் என்கிறீர்கள். மிக்க நல்லது. ஆனால் நாகரிகத்துக்கு வேண்டிய முன்தேவைகளை, நிலப்பிரபுக்களையும் ருஷ்ய முதலாளிகளையும் வெளியேற்றுவது போன்ற இந்த முன்தேவைகளை, ஏன் நாம் முதலில் தோற்றுவித்துக் கொண்டு, அதன் பிறகு சோஷலிசத்தை நோக்கி முன்செல்லக் கூடாது? நிகழ்ச்சிகளின் வழக்கமான வரலாற்று வரிசைக் கிரமத்தில் இப்படிப்பட்ட உருத்திரிபுகள் அனுமதிக்கப்படுவதில்லை என்றோ, சாத்தியமற்றவை என்றோ எங்கே, எந்தப் புத்தகத்தில் படித்தீர்கள்?

நெப்போலியன் என்று நினைக்கிறேன், ''On s'engage et puis... on voit'' என்றெழுதினர். சரளமாய் மொழிபெயர்த்தால் இதன் பொருள்: ''மெய்யான போர் ஒன்றில் முதலில் ஈடுபடு, பிறகு என்ன நடைபெறுகிறதென்று பார்.'' நல்லது, 1917 அக்டோபரில் நாம் மெய்யான போர் ஒன்றில் முதலில் ஈடுபட்டோம், பிறகு பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை, புதிய பொருளாதாரக் கொள்கை முதலானவை போன்ற வளர்ச்சியின் விவரங்களை (உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் இவை நிச்சயமாயும் சிறு விவரங்களே) பார்த்தோம். பிரதானமாய் நாம் வெற்றி ஈட்டியுள்ளோம் என்பதில் இப்பொழுது சந்தேகம் இருக்க முடியாது.

வேறு எவ்வழியிலும் புரட்சிகள் நடத்த முடியாது என்பது நமது சுஹானவ்களுக்கு—இன்னும் வலப் புறத்தே இருக்கும் சமூக-ஜனநாயகவாதிகளைப் பற்றி சொல்லவே வேண்டாம்—கனவிலுங்கூட கருத முடியாத ஒன்று. கிழக்குலக நாடுகளில், மக்கள் தொகையில் இன்னும் மிகப் பெரிய, சமூக நிலைமைகளில் மேலும் பெரிய அளவுக்குப் பல்வேறுபட்ட இந்நாடுகளில், இனி நடைபெறப் போகும் புரட்சிகள் ருஷ்யப் புரட்சியைக் காட்டிலும் இன்னும் கூட அதிகமாய்த் தனி இயல்புகளை நிச்சயம் வெளிப்படுத்திக் காட்டும் என்பது நமது ஐரோப்பிய அற்பவாதச் சிறுமதியினருக்கும் கனவிலும் கருத முடியாத ஒன்றுதான்.

காவுத்ஸ்கி வழிகளில் எழுதப்பட்ட பாடப் புத்தகம் அதன் காலத்தில் மிகவும் பயனுடையதாகவே இருந்ததென் பதைக் கூறத் தேவையில்லை. எவ்வளவுதான் அது பய னுடையதாய் இருந்திருப்பினும், அதற்குப் பிற்பட்ட உலக வரலாற்றின் வளர்ச்சியினுடைய எல்லா வடிவங்களையும் அது முன்னறிந்து கூறிவிட்டதாய்க் கொள்ளும் கருத்து விட் டொழிக்கப்பட வேண்டிய காலம் வந்து விட்டது. இப்படி அது முன்னறிந்து கூறிவிட்டதாய் நினைப்போர் அடி முட்டாள் களே என்று சொல்வது காலத்துக்கு உகந்ததாய் இருக்கும்.

ஜனவரி *17, 1923*

பிராவ்தா, இதழ் *117*ல்,
மே *30, 1923*ல்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் *378-382*

தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும்

(பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரசுக்குப் பரிந்துரை)[95]

தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு நமக்குப் பேரளவு கடினமானது என்பதும், இது வரையில் இந்தக் கஷ்டம் சமாளிக்கப்படவில்லை என்பதும் கேள்விக்கே இடமற்ற விவரங்களாகும். தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு பயனுள்ளது மற்றும் அவசியமானது என்பதை மறுப்பது மூலம் இந்தக் கஷ்டத்தை சமாளிக்க முயலும் தோழர்கள் தவறு செய்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் நமது அரசுப் பொறியமைவு முன்வைத்துள்ள இந்தப் பிரச்சினையும் இதை மேம்படுத்தும் பணியும் மிகவும் கடினமானவை என்பதையும் இதற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை என்பதையும், இது மிகவும் அவசரமானது என்பதையும் நான் மறுக்கவில்லை.

அயல்துறை விவகார மக்கள் கமிசாரகம் நீங்கலாக நமது அரசுப் பொறியமைவு பெருமளவுக்குக் கடந்த காலத்தின் எச்சமிச்சமே, அது காரியகரமான எவ்வித மாறுதலுக்கும் சிறிதும் ஆளாகவில்லை. அது மேற்பரப்பில் சற்றே திருத்தப்பட்டது தவிர மற்ற அம்சங்களில் எல்லாம் நமது பழைய அரசுப் பொறியமைவின் மிகவும் தனிமாதிரிச் சின்னமாகவே இருக்கிறது. எனவே, இதை மெய்யாகவே புதுப்பிப்பதற்கு ஒரு வழிமுறையைக் காண வேண்டுமானால் நமது உள்நாட்டுப் போரிடமிருந்து அனுபவம் பெற வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

உள்நாட்டுப் போரின் அதிக நெருக்கடியான தருணங்களில் நாம் எப்படிச் செயல்பட்டோம்?

நமது கட்சியின் ஆகச் சிறந்த சக்திகளை செஞ்சேனையில் ஒருமுனைப்படுத்தினேம்; நமது ஆகச் சிறந்த தொழிலாளர்களை ஒன்றுதிரட்டினேம்; நமது சர்வாதிகாரத்தின் அடியாழத்தில் புதிய சக்திகளைத் தேடினேம்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பைப் புனரமைப்பதற்கான சாதனங்களைக் காண நாம் அதே ஆதாரத்திடம்தான் செல்ல வேண்டும் என்பதை நான் நம்பகமாக அறிகிறேன். நமது மத்தியக் கண்காணிப்புக் கமிஷனை ஒரளவுக்கு விரிவுபடுத்தும் அடிப்படையில் பின்வரும் புனரமைப்புத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி நமது பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரசுக்கு நான் பரிந்துரைக்கிறேன்.

நமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங்கள் ஒரு வகைப்பட்ட உயர் கட்சி மாநாடாக வளர்ச்சியுறுவதற்கான ஒரு போக்கை ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளன. இவை சராசரி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைக்கு அதிகப்படாமல் நடந்து வருகின்றன. அதே போதில் மாமூல் வேலை மத்தியக் கமிட்டியின் சார்பில் நமது அரசியல் பியூரோ, அமைப்புத்துறை பியூரோ, நமது செயற்குழு இத்தியாதிகளால் நடத்தப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பாதையை நாம் இறுதி வரையில் பின்பற்ற வேண்டும் எனவும், மற்றும் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங்களை, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் சேர்த்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படும் உயர் கட்சி மாநாடுகளாக நிச்சயமாயும் மாற்ற வேண்டும் எனவும் நான் கருதுகிறேன். மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் பின்வரும் வழிகளில் மறுசீரமைக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் பிரதான பகுதியுடன் இணைக்கப்பட வேண்டும்.

காங்கிரஸ் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுக்கு 75 முதல் 100 வரை (இங்கு நிச்சயமாயும் எண்ணிக்கைகள்

எல்லாம் சுமாராகவே தரப்பட்டுள்ளன) புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நான் பிரேரேபிக்கிறேன். அவர்கள் தொழிலாளர் மற்றும் விவசாயிகளாக இருக்க வேண்டும். மத்தியக் கமிட்டியின் சாதாரண உறுப்பினர்களைப் போலவே அதே கட்சித் தகுதித் தேர்வுக்கு அவர்கள் ஆளாக்கப்பட வேண்டும், காரணம் அவர்கள் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களைப் போல அதே உரிமைகளை அனுபவிக்கப் போகிறவர்கள்.

மறு புறத்தில், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் அலுவலர் தொகை, கடமையுணர்ச்சி மற்றும் நமது அரசுப் பொறியமைவு பற்றிய அறிவுக்காக விசேஷமாகத் தகுதித் தேர்வு செய்யப்பட்ட முன்னூறு அல்லது நானூறு பேர்கள் அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும். அதோடு, உழைப்பின் விஞ்ஞான பூர்வமான ஒழுங்கமைப்பின் கோட்பாடுகள் பற்றிப் பொதுவாகவும், நிர்வாக வேலை, அலுவலக வேலை இத்தியாதிகள் பற்றிக் குறிப்பாகவும் அவர்களுக்குள்ள ஞானம் சம்பந்தமான ஒரு விசேஷத் தேர்வுக்கும் அவர்கள் ஆளாக்கப்பட வேண்டும்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு இத்தகைய முறையில் இணைக்கப்படுவதானது இந்த இரு அமைப்புகளுக்கும் நலம்பயப்பதாகும் என்று நான் கருதுகிறேன். ஒரு புறத்தில், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு இத்தகைய உயர் அதிகாரப் பலம் பெறுவதன் விளைவாக, அது அயல்துறை விவகார மக்கள் கமிசாரகத்தைவிட நிச்சயமாயும் எவ்வகையிலும் மட்டமானதாக இருக்காது. மறு புறத்தில், நமது மத்தியக் கமிட்டி மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் சேர்ந்து உயர் கட்சி மாநாடாக மாறிவரும் பாதையை நிச்சயமாக மேற்கொள்ளும். உண்மையில் அது இப்பாதையை ஏற்கெனவே மேற்கொண்டுவிட்டது. இந்தப் பாதையில் நெடுகிலும் கடைசி வரை அது தொடர்ந்து செல்ல வேண்டும். அதன் மூலம் அது இரு வகைகளில் தனது செயற்பணிகளைச் சரிவர நிறைவேற்ற இயலும்: தனது சொந்த முறைமையான, காலோசிதமான,

திட்டப்படியான அமைப்பு மற்றும் வேலே விஷயத்திலும், மற்றும் நமது தொழிலாளர் மற்றும் விவசாயிகளில் ஆகச் சிறந்தவர்கள் மூலம் உண்மையிலேயே விரிவான மக்கள் திரளினருடன் தொடர்புகளைப் பேணி வைத்திருக்கும் விஷயத்திலும் இது சாத்தியமாகும்.

நமது அரசுப் பொறியமைவை காலம் கடந்ததாகச் செய்யும் அந்தத் துறையினரிடம் இருந்து, அதாவது இன்றைய அறவே சாத்தியமற்றதான, மிகவும் கேவலமான முறையில் புரட்சிக்கு முற்பட்டதான வடிவம் அப்படியே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவோரிடமிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆட்சேபணை வரலாம் என்பதை நான் முன்னுணர்கிறேன் (இதற்கிடையில், அடிப்படையான சமுதாய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அவசியமான காலகட்டத்தை உறுதிப்படுத்துவதற்கான, வரலாற்றில் மிக அரிதாகவே தோன்றுகிற வாய்ப்பு இப்போது நம் வசம் இருக்கிறது; ஐந்தாண்டுகளில் என்ன செய்ய முடியும், எதற்கு மேலும் அதிகக் காலாவகாசம் தேவை என்பதை நாம் இப்போது தெளிவாகக் காண்கிறோம்).

நான் முன்மொழியும் மாற்றம் குழப்பத்தைத் தவிர வேறு எதற்கும் இட்டுச் செல்லாது என்பதே நான் முன்னுணருகிற ஓர் ஆட்சேபணையாகும். எங்கே, ஏன், யாரிடம் கேட்பது என்பது தெரியாமல் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்கள் எல்லா அமைப்புகளையும் சுற்றித் திரிவார்கள், எல்லா இடங்களிலும் ஒழுங்குக் குலைவை ஏற்படுத்துவார்கள், ஊழியர்களைத் தமது மாமூல் வேலைகளில் இருந்து திசை திருப்புவார்கள், இத்தியாதி.

இந்த ஆட்சேபணையின் கெடு நோக்கான ஆதாரம் மிகவும் வெளிப்படையானது, எனவே அதற்குப் பதிலிறுக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். கமிசாரகத்தை சரியான முறையில் ஒழுங்கமைக்கவும், மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் சேர்ந்து அதைச் சுமுகமாக இயங்கும்படிச் செய்யவும், மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் மக்கள் கமிசாரும் அதன்

கூட்டுச் செயற்குழுவும் (உரிய இடங்களில் நமது மத்தியக் கமிட்டியின் செயற்குழுவும்) பல ஆண்டுகளுக்கு விடாது தொடர்ந்து முயற்சி புரிதல் வேண்டும் என்பதைக் கூறத் தேவையில்லை. தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற் பார்வை அமைப்பின் மக்கள் கமிசாரும் முழுமையான கூட்டுச் செயற்குழுவும், ''அவரது தலைமையின் கீழ் வைக் கப்படும்'' மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர் களின் வேலை உள்ளிட்டு தொழிலாளர் மற்றும் விவசாயி களது மேற்பார்வை அமைப்பு முழுவதன் வேலையையும் வழி நடத்த முடியும் (தொடர்ந்து வழி நடத்த வேண்டும்) என்று கருதுகிறேன். எனது திட்டப்படி நீடித்து இருக்கப் போகும் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் முன்னூறு அல்லது நானூறு ஊழியர்கள் ஒரு புறம் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் இதர உறுப்பினர்களுக்கும், மத்தியக் கண் காணிப்புக் கமிஷனின் கூடுதல் உறுப்பினர்களுக்கும் வேண்டி முற்றிலும் செயலகம் சார்ந்த பணிகளைச் செய்ய வேண்டும், மறு புறம் அவர்கள் உயர் தேர்ச்சியுள்ளவர்களாக, விசேஷ மாயும் தகுதித் தேர்வு செய்யப்பட்டவர்களாக, பிரத்தியேக மாயும் நம்பகமானவர்களாக, உயர் ஊதியம் பெறுபவர் களாக இருக்க வேண்டும். இந்த வழியில் அவர்கள் தமது இன்றைய மெய்யாகவே (குறைந்த பட்சம் சொன்னல்) துரதிருஷ்டமான தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற் பார்வை அமைப்பின் அலுவலர்கள் எனும் நிலையில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்படலாம்.

நான் சுட்டிக் காட்டிய எண்ணிக்கை அளவுக்கு அலுவலர் தொகையைக் குறைப்பது தொழிலாளர் மற்றும் விவசாயி களது மேற்பார்வை அமைப்பின் ஊழியர்கள் திறனையும், அதன் வேலை அனைத்தின் தரத்தையும் வெகுவாக உயர்த்த வும், மற்றும் அமைப்புத் துறைப் பணிகளிலும், அதன் திறனைத் திடமாக மேம்படுத்திக் கொள்வதிலும் மக்கள் கமிசார்களும் கூட்டுச் செயற்குழு உறுப்பினர்களும் தமது முயற்சிகளை முற்றுக ஒருமுனைப்படுத்தவும் இயலுமாறு உதவும் என்பது உறுதி. இது நமது தொழிலாளரின் மற்றும்

விவசாயிகளின் ஆட்சியதிகாரத்துக்கும் நமது சோவியத் அமைப்புக்கும் பரம அத்தியாவசியமானது.

மறு புறம், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற் பார்வை அமைப்பின் மக்கள் கமிசார் உழைப்பை ஒழுங் கமைப்பதற்காக உயர் நிலையங்களை (மத்திய உழைப்பு நிலையம், உழைப்பின் விஞ்ஞான ஒழுங்கமைப்புக்கான நிலை யம் இத்தியாதி) ஓரளவுக்கு இணைப்பதற்கும் ஓரளவுக்கு ஒத்திசைவாக்கவும் பணியாற்ற வேண்டும் எனவும் நான் கருதுகிறேன். இத்தகைய நிலையங்கள் நமது குடியரசில் இப்போது பன்னிரண்டுக்குக் குறைவின்றி இருக்கின்றன. மிகையான ஒருப்படுத்தலும் இதன் பின் விளைவான இணைப் பதற்கான விருப்பமும் கேடு விளைப்பனவாகும். இதற்கு மாறாக, இங்கு தேவையாக இருப்பது என்னவெனில், இந்த நிலையங்கள் அனைத்தையும் இணைப்பதற்கும் அவற்றைச் சரிவர வரையறை செய்வதற்கும் இடையிலான ஒரு நியாய மான காலத்துக்கேற்ற நடுப்பாதையும், அவை ஒவ்வொன்றுக் கும் ஓரளவு சுயேச்சையை அனுமதிப்பதுமே ஆகும்.

இந்தப் புனரமைப்பில் இருந்து நமது சொந்த மத்தியக் கமிட்டி பெறக் கூடிய நன்மை, தொழிலாளர் மற்றும் விவ சாயிகளது மேற்பார்வை அமைப்பு பெறக் கூடிய நன்மையை விடக் குறைந்ததல்ல என்பது நிச்சயம். மக்கள் திரளின ருடனான அதன் தொடர்புகள் மேலதிகமாகும் என்பதாலும், அதன் வேலையின் ஒரு சீரான தன்மையும், திறனும் மேம் படும் என்பதாலும் இது கட்டாயம் நன்மை அடையும். இதன் பின் அரசியல் பியூரோவின் கூட்டங்களுக்குத் தயார் செய்வதற்கான மேலும் கறாரான அதிகப் பொறுப்புவாய்ந்த செயல்முறையினை நிறுவுவது சாத்தியமாகும் (நிறுவ வேண் டும்). இந்தக் கூட்டங்களில் ஒன்று ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது குறிப்பிட்ட அமைப்புத் துறைத் திட்டத்தால் நிர் ணயிக்கப்படும் திட்டவட்டமான தொகையிலான மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களுக்கு வேலையைப் பகிர்ந்தளிக்கும் போது, தொழிலாளர் மற்றும்

விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் மக்கள் கமிசார் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவுடன் சேர்ந்து அவர்களிடம் ஒன்று, அதன் முன் ஏதேனும் ஒரு வழியில் வரும் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் பரிசீலிக்கும் நோக்கமுடன் அரசியல் பியூரோ கூட்டங்களில் கலந்து கொள்வதையோ, அல்லது அவர்களது வேலை நேரத்தைத் தத்துவார்த்த ஆய்வு, உழைப்பை ஒழுங்கமைப்பதற்கான விஞ்ஞான முறைகளைப் பயிலுதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்துவதையோ, அல்லது உயர் அரசு நிறுவனங்களில் இருந்து கீழ் மட்ட வட்டார அமைப்புகள் வரை நமது அரசு யந்திரத்தை மேற்பார்வை செய்து மேம்படுத்தும் வேலையில் காரிய சாத்தியமான பங்கு வகிப்பதையோ கடமையாக ஒப்படைக்க வேண்டும்.

இந்தச் சீர்திருத்தத்தின் பின்விளைவாக மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் மேலும் நல்ல முறையில் தகவல்களைப் பெறுவர், அரசியல் பியூரோ சட்டங்களுக்கு மேலும் நல்ல முறையில் தயார் செய்து கொள்வர் எனும் மெய்விவரத்தில் இருந்து பெறப்படும் அரசியல் சாதகங்களுக்கும் கூடுதலாக (பரம அவசரமான சம்பவங்கள் நீங்கலாக—இந்தச் சம்பவங்களுக்காக மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களுக்கு தகவல் தரவும் இந்த விவகாரங்களுக்குத் தீர்வு காணவுமான விசேஷ முறைகள் வகுக்கப்பட வேண்டும்—அரசியல் பியூரோவின் கூட்டத்துக்கு முந்திய தினத்துக்குப் பிற்பட்டுவிடாத முறையில் இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் அலுவல் சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களும் மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்) நமது மத்தியக் கமிட்டியில் முற்றிலும் சொந்த வகைப்பட்ட இடைக்கால காரணிகளின் செல்வாக்கும் குறையும் சாதக நிலையும் ஏற்படும், இது ஒரு பிளவுக்கான அபாயத்தை குறைக்கும் என்று நான் கருதுகிறேன்.

நமது மத்தியக் கமிட்டியானது கறாராயும் மத்தியப்படுத்தப்பட்ட மற்றும் உயர் அதிகாரப் பலமுள்ள பிரிவாக

வளர்ந்து விட்டது, ஆனால் இந்தப் பிரிவு செயல்பட்டு வரும் நிலைமைகள் அதனுடைய அதிகாரப் பலத்துக்குச் சரியான அளவில் இல்லை. நான் பரிந்துரைக்கும் சீர்திருத்தம் இந்தக் குறைபாட்டை அகற்ற உதவ வேண்டும், மற்றும் திட்ட வட்டமான எண்ணிக்கையிலான அரசியல் பியூரோவின் கூட்டங்கள் அனைத்திலும் கலந்து கொள்ளும் கடமை கொண்ட மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் ஒரு கச்சிதமான பிரிவாக அமைய வேண்டும். இந்தப் பிரிவு பொதுச் செயலாளர் அல்லது மத்தியக் கமிட்டியின் எந்த வொரு உறுப்பினரும் கேள்விகள் கேட்பதையோ, ஆவணங் களைச் சரிபார்ப்பதையோ, எல்லா விஷயங்கள் குறித்தும் முழுமையான தகவல் பெறுவதையோ, விவகாரங்களை சரி வர நடத்துவதில் கறாரான கண்காணிப்புச் செலுத்து வதையோ தடுக்கும் விதத்தில் விதிவிலக்கின்றி எவருக்கும் அதிகாரம் அளிக்க இடந்தரக் கூடாது.

நமது சோவியத் குடியரசில் சமுதாய அமைப்பு இரண்டு வர்க்கங்களின் ஒத்துழைப்பை அடிப்படையாக்கியதாகும்: தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள், இப்போது இதில் புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் ஏற்பட்ட சிறு முதலாளிகள், அதாவது முதலாளித்துவ வர்க்கத்தினர் கள் ஒரு சில நிபந்தனைகளின் கீழ் பங்கேற்பதற்கு அனு மதிக்கப்படுகிறார்கள் என்பது தெரிந்ததே. இந்த வர்க்கங் களுக்கு இடையே கடுமையான வர்க்க வேறுபாடுகள் உதித் தெழுமானால் ஒரு பிளவு தவிர்க்க முடியாததாகும். ஆனால் நமது சமுதாய அமைப்பில் இத்தகைய பிளவுக்கான அடிப்படை கள் தவிர்க்க முடியாதபடி இல்லை. ஒரு பிளவை ஏற்படுத்தக் கூடிய அத்தகைய புற நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து அவற்றை முன்னுணர்ந்து தடுப்பது நமது மத் தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன், நமது கட்சி முழுவதன் முக்கிய கடமையாகும். ஏனெனில் இறுதியாக ஆய்வு செய்து பார்க்கும் போதில் நமது குடியர சின் கதி விவசாயி மக்கள் திரளினர் தமது கூட்டணிக்கு விசு வாசமுடன் தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவாக நிற்பார் களா, அல்லது அவர்கள் புதிய பொருளாதாரக் கொள்கைக்

காலத்தில் ஏற்பட்ட சிறிய முதலாளிகள், அதாவது புதிய முதலாளித்துவ வர்க்கத்தினர் தமக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையில் பிளவை உண்டாக்கவும், தொழிலாளி வர்க்கத்திடமிருந்து அவர்களைப் பிரிக்கவும் இடமளிப்பார்களா என்பதையே சார்ந்து இருக்கும். இந்த மாற்று நிலையினை எவ்வளவு அதிகத் துலக்கமாக நாம் பார்க்கிறோமோ, நமது தொழிலாளர்களும் விவசாயிகளும் எல்லாம் எந்தளவு அதிகமாக இதைத் துலக்கமாகப் புரிந்து கொள்ளுகிறார்களோ அந்தளவு அதிகமாக நாம் சோவியத் குடியரசுக்குப் படுநாசமான ஒரு பிளவைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஜனவரி 23, 1923

பிராவ்தா, இதழ் *16*,
ஜனவரி *25, 1923*

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் *383-388*

சொற்பமாயினும் சிறந்ததே நன்று

நமது அரசுப் பொறியமைவை மேம்படச் செய்யும் பிரச்சினையில், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பானது எனது அபிப்பிராயத்தில், அளவை அதிகமாக்குவதில் முனைந்துவிடக் கூடாது, அவசரப்படவும் கூடாது. நமது அரசுப் பொறியமைவின் தரத்தில் இது காறும் நாம் மிகச் சொற்ப சிந்தனையும் கவனமுமே செலுத்த முடிந்திருக்கிறது. ஆகவே இப்போது நாம் முழு அளவுக்கு இந்தப் பொறியமைவை ஒழுங்கு செய்வதிலும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பில் மெய்யாகவே தற்காலத் தரத்துக்கு உகந்த ஊழியர்களை, அதாவது சிறந்த மேற்கு ஐரோப்பியத் தரங்களுக்குக் குறைவில்லாத ஊழியர்களை ஒருசேரத் திரட்டுவதிலும் விசேஷக் கவனம் செலுத்துவது முற்றிலும் நியாயமே. சோஷலிசக் குடியரசுக்கு இந்த நிலைமை கொஞ்சம் தன்னடக்கமானதுதான் என்பது நிச்சயம். ஆனால் முதல் ஐந்து ஆண்டுகளிலான நமது அனுபவம் நம் தலையில் அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் அப்படி நிரம்பச் செய்து விட்டது. உதாரணமாக, ''பாட்டாளி வர்க்கக்'' கலாசாரம் குறித்து மிதமிஞ்சிய அளவிலும் மிதமிஞ்சிய அலட்சிய மனோபாவத்துடனும் வாய்வீச்சடிப்பதைக் கேட்கும் போது நம்மையும் மீறி இந்த அவநம்பிக்கையும் சந்தேகமும்தான் நம்மை ஆட்கொள்கின்றன. ஆரம்ப நிலையாய், மெய்யான முதலாளித்துவக் கலாசாரமே போதும், நாம் மனநிறைவு அடைவோம்; ஆரம்ப நிலையாய், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட கலாசாரத்தின் நயமற்ற வகைகளிலிருந்து, அதாவது அதிகார வர்க்கக் கலாசாரம் அல்லது பண்ணையடிமைக் கலாசாரம் போன்றவற்றைக் கைவிடுவோமாயின் நாம் மகிழ்ச்சியுறுவோம். கலாசார விவகாரங்களில் அவசரமும் மட்டுமீறிய

நடவடிக்கைகளும் பெருங்கேடு விளைவிக்கிறவை. நமது இளம் எழுத்தாளர்களிலும் கம்யூனிஸ்டுகளிலும் பலரும் இதனை மனதில் நன்கு பதியச் செய்து கொண்டாக வேண்டும்.

இவ்வாறு, நமது அரசுப் பொறியமைவு பற்றிய பிரச்சினையில், மேலும் மெதுவாகச் செல்வதே நல்லது என்கிற முடிவினை நமது கடந்த ஆண்டுகளது அனுபவத்திலிருந்து இப்போது நாம் வந்தடைந்தாக வேண்டும்.

நமது அரசுப் பொறியமைவு படுமோசமாய் இருப்பதாகச் சொல்லக் கூடாதெனில், எப்படியும் பரிதாபகரமானதாகவே இருக்கிறது. இதனால் முதலில் நாம் இதன் குறைபாடுகளை எதிர்த்து எப்படிப் போராடுவதென்று ஆழ்ந்த ஆலோசனை செய்தாக வேண்டும். இந்தக் குறைபாடுகள் கடந்த காலத்தில் வேர் கொண்டவை என்பதை நாம் மனதிற் கொண்டாக வேண்டும். இந்தக் கடந்த காலம் வீழ்த்தப் பட்டிருக்கிறது என்ற போதிலும், இன்னும் இது தொன்மைக் காலத்துக்கு உரிய ஒரு கலாசாரத்துக்கான கட்டத்தை அடையும்படிப் பழங்கதையாகி விடவில்லை. வேண்டுமென்றேதான் கலாசாரம் என்கிறேன், ஏனெனில் இந்த விவகாரங்களில் நமது கலாசாரத்தின், நமது சமுதாய வாழ்வின், நமது பழக்கவழக்கங்களின் இன்றியமையாக் கூறு ஆகி விட்டதை மட்டுமே சாதிக்கப்பட்டுவிட்ட ஒன்றாய் நாம் கருத முடியும். ஆனால் நமது சமூகக் கட்டமைப்பின் நல்ல அம்சங்கள் சரிவர ஆராய்ந்து அறியப்படவில்லை, புரிந்து கொள்ளப்படவில்லை, உணர்ந்து கிரகிக்கப்படவில்லை எனலாம். அவை அவசரமாகப் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கின்றன, சரிபார்க்கப்படவோ, சோதிக்கப்படவோ இல்லை என்றும், அனுபவத்தால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், நீடித்து நிலவும்படி ஆக்கப்படவில்லை என்றும் இன்ன பல வாறாகவும் கூறலாம். மெய்தான், புரட்சிகரமான சகாப்தத்தில், வளர்ச்சியானது தலை தெறிக்கும் வேகத்தில் நடந்தேறி, ஐந்தே ஆண்டுகளில் நாம் ஜாரிசத்திலிருந்து சோவியத் அமைப்புக்கு வந்துவிட்ட ஒரு காலத்தில் இவ்வாறன்றி வேறு எவ்வாறும் இருக்க முடியாதுதான்.

நிதான நிலையை அடைய வேண்டிய நேரம் வந்து விட்டது. மிதமிஞ்சிய வேகத்தில் முன்னேறிச் செல்வது குறித்தும், எல்லா விதமான வீம்புப் பேச்சு குறித்தும் இன்ன பலவும் குறித்தும் நாம் பாதுகாப்புக்குரிய அவநம்பிக்கை கொண்டாக வேண்டும். முன்னால் நாம் அடி எடுத்து வைத்துச் செல்வதாய் மணிதோறும் பறைசாற்றி, நிமிடம் தோறும் எடுத்து வைத்து, பிறகு வினாடி தோறும் அந்த அடிகள் நிலையற்றவை என்றும் உறுதியில்லாதவை என்றும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவை என்றும் நிரூபிக் கிறோமே, அவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டியது குறித்து நாம் சிந்தனை செய்தாக வேண்டும். அவசரப்படு வதுதான் இங்கு யாவற்றிலும் அதிக தீமை பயப்பதாய் இருக்கிறது. நாம் ஏதோ சிலவற்றையேனும் அறிவோம், அல்லது மெய்யாகவே புதியதான அரசுப் பொறியமைவு ஒன்றை, சோஷலிஸ்டு என்றும் சோவியத் என்றும் இன்ன பலவாறும் அழைக்கப்படுவதற்கு மெய்யாகவே தகுதி வாய்ந்ததான ஒன்றைக் கட்டியமைப்பதற்கு அவசிய மானவற்றுள் கணிசமான பலவும் நம்மிடம் இருக்கின் றன என்பதாகக் கற்பித்துக் கொண்டு அதை ஆதார மாகக் கொள்வது மிகவும் அதிகக் கேடு பயப்ப தாகும்.

இல்லை, இம்மாதிரியான பொறியமைவும், இதற்குரிய கூறுகளுங்கூட நகைக்கத்தக்கவாறு மிக சொற்ப அளவில் தான் நம்மிடம் உள்ளன. இதைக் கட்டியமைத்திட காலச் செலவு ஆவது குறித்துக் கவலைப்படலாகாது என்பதையும், பல, மிகப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தப் பொறியமைவை அமைத்திட நம்மிடம் இருக் கும் கூறுகள் யாவை? இரண்டே இரண்டு மட்டுமே இருக் கின்றன. முதலாவதாக, தொழிலாளர்கள்—சோஷலிசத்துக் கான போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர் கள் போதிய அளவுக்குக் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. அவர்கள் நமக்குச் சிறந்த பொறியமைவை அமைத்துத் தர விரும்புகிறார்கள். ஆனால் இதை எப்படிச் செய்வதென்று

அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களால் இந்தப் பொறியமைவை அமைத்திட இயலாது. இதற்குத் தேவையான கலாசாரத்தை இன்னும் அவர்கள் வளர்த்துக் கொண்டாகவில்லை. இதற்குத் தேவையானது கலாசாரமேதான். இங்கே பரபரத்துக் கொண்டு செயல்படுவதாலோ, தாக்குதல் தொடுப்பதாலோ, ஊக்கத்தாலோ, விறுவிறுப்பாலோ, அல்லது பொதுவாக மனித குலத்தின் மிகச் சிறந்த பண்புகளில் எதனுலுமோ எதையும் சாதித்து விட முடியாது. இரண்டாவதாக, அறிவு, கல்வி, பயிற்சி இவற்றின் கூறுகள்—ஏனைய எல்லா அரசுகளுடன் ஒப்பிடுகையில் நம்மிடம் இவை நகைக்கத்தக்கவாறு சொற்ப அளவுக்கே இருக்கின்றன.

இங்கே அறிவின் பற்ருக்குறையை ஆர்வத்தாலும் அவசரத்தாலும் பிறவற்ருலும் ஈடு செய்து கொள்ளும் (அல்லது ஈடு செய்து கொண்டுவிடலாமென கற்பனை செய்து கொள்ளும்) போக்கு நம்மிடம் மிகுதியாகவே இருப்பதை நாம் மறக்கலாகாது.

நமது அரசுப் பொறியமைவைப் புத்தமைக்கும் பொருட்டு, எப்பாடுபட்டேனும் நாம் மேற்கொண்டாக வேண்டிய பணி என்னவெனில்: முதலாவதாக—கற்றறிதல், இரண்டாவதாக—கற்றறிதல், மூன்ருவதாக—கற்றறிதல்; கற்ற பின் அந்த விஞ்ஞான அறிவு பயனில்லாப் பண்டமாகவோ, ஆடம்பரமான வாய்ப் பேச்சாகவோ அமைந்து விடாதபடி (அடிக்கடி நம்மிடையே இப்படி நேர்ந்து விடுவதை மறைக்காமல் ஒப்புக் கொள்ளவே வேண்டும்), விஞ்ஞான அறிவு மெய்யாகவே நமது ஊனும் இரத்தமும் ஆகிவிடும்படி, முழுமையாகவும் மெய்யாகவும் நமது அன்ருட வாழ்க்கையின் உள்ளடக்கக் கூருகிவிடும்படி உறுதி செய்து கொள்ளுதல். சுருங்கக் கூறுமிடத்து, முதலாளித்துவ மேற்கு ஐரோப்பா எழுப்பும் கோரிக்கைகளை நாம் எழுப்பலாகாது, சோஷலிச நாடாக வளர முற்பட்டிருக்கும் ஒரு நாட்டுக்கு ஏற்புடைத்த பொருத்தமான கோரிக்கைகளையே நாம் கோர வேண்டும்.

மேற்கூறியவற்றிலிருந்து பெறப்படும் முடிவு என்ன

வெனில்: தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை நாம் மெய்யாகவே முன்மாதிரியான அமைப் பாக, நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற் குரிய கருவியாக ஆக்க வேண்டும்.

அது தேவையான உயர் நிலையை அடையும் பொருட்டு நாம் பின்பற்ற வேண்டிய விதி வருமாறு: ''துணியை ஏழு தரம் அளந்து பார்த்து விட்டு அதன் பிறகு மட்டுமே வெட் டுங்கள்.''

நமது சமுதாய அமைப்பில் இருப்பவற்றுள் மிகச் சிறந்த வற்றை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அவற்றை மிகுந்த எச்சரிக்கையோடும் ஆலோசனையோடும் விவர அறிவோடும் பயன்படுத்திப் புதிய மக்கள் கமிசார கத்தைக் கட்டியமைத்தாக வேண்டும்.

இதன் பொருட்டு, நமது சமுதாய அமைப்பில் இருக்கும் சிறந்த கூறினர்—முதலாவதாக, முன்னேறியத் தொழிலா ளர்களையும், இரண்டாவதாக, சொன்ன சொல் தவறுதவர் கள் என்றும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத வர்கள் என்றும் சொல்லத் தக்கவர்களாய் அமைந்து மெய் யாகவே அறிவொளி பெற்றவர்களாய் இருப்போரையும் போன்ற கூறினர்—முழு மனத்துடன் தாம் வகுத்துக் கொண்ட குறிக்கோளை அடையும் பொருட்டு, எந்த இன்னலை யும் ஏற்கத் தயங்கவோ, எந்தப் போராட்டத்தையும் கண்டு அஞ்சவோ கூடாது.

ஓடியாடிச் சந்தடி செய்து ஐந்து ஆண்டுகளாய் நாம் நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்ய முயன்றுள் ளோம். ஆனல் இது வெறும் சந்தடியாகவே இருந்துள்ளது. இந்த ஐந்து ஆண்டுகளில் இது பலன் ஏதும் அளித்ததாகத் தெரியவில்லை, அல்லது தகாததாகவுங்கூட, அல்லது தீமை பயப்பதாகவுங்கூட இருந்திருக்கிறது. இந்தச் சந்தடி நாம் ஏதோ செய்து வந்தோமென்ற தோற்றத்தை உண்டாக்கு கிறது, ஆனல் நடைமுறையில் இச்சந்தடி நமது அலுவலகங் களையும் மூளையையும் திணறடித்து வந்தது.

முடிவில் இப்போது இவை எல்லாம் மாற்றப்படுவதற் குரிய நேரம் வந்து விட்டது.

எண்ணிக்கையில் சொற்பமாயினும் தரத்தில் உயர்ந்ததே நன்று என்னும் விதியை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு நம்பகமான ஆட் செல்வம் கொஞ்சமும் இல்லாமற்போவதை விட, இரண்டு ஆண்டோ, மூன்று ஆண்டோகூட ஆவதாயினும் இச்செல்வத்தைப் பெறுவதே நன்று என்கிற விதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த விதியைக் கடைப்பிடிப்பதும் நமது நிலைமைகளில் இதனைச் செயல்படுத்துவதும் கடினமாகவே இருக்கும், நான் இதை அறிவேன். நமது நாட்டில் இதற்கு நேர் எதிரான விதி ஆயிரம் இடுக்குகள் வழியே பலவந்தமாய் உள்ளே நுழைந்து விடும் என்பதை அறிவேன். இதற்கு நாம் பிரம்மாண்ட அளவிலான எதிர்ப்பு காட்ட வேண்டியிருக்கும் என்பதையும், விடாப்பிடியான அசுரப் பிரயத்தனம் தேவையாய் இருக்கும் என்பதையும், எப்படியும் முதல் சில ஆண்டுகளுக்கு இத்துறையில் செய்தாக வேண்டிய வேலை மெத்தக் கடினமாகவே இருக்கும் என்பதையும் நான் அறிவேன். ஆனாலும் இம்மாதிரியான பிரயத்தனத்தால் மட்டும்தான் நாம் நமது குறிக்கோளை அடைய முடியும் என்பதிலும், இந்தக் குறிக்கோளை அடையும் போது மட்டும்தான் சோவியத் குடியரசு என்றும் சோஷலிசக் குடியரசு என்றும் பெயர் சூட்டிக் கொள்வதற்கு மெய்யாகவே தகுதி வாய்ந்த ஒரு குடியரசை நாம் தோற்றுவிக்க முடியும் என்பதிலும் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

எனது முதல் கட்டுரையில்* எடுத்துக்காட்டாய் நான் தந்த புள்ளிவிவரங்கள் பெரிதும் குறைத்துக் காட்டுவதாகப் பல வாசகர்களும் நினைத்திருப்பார்கள் என்பது இயல்பு. அந்தப் புள்ளி விவரங்கள் குறைத்துக் கூறுகிறவையே என்பதை நிரூபிப்பதற்குப் பல கணக்கீடுகளும் செய்து காட்டலாம் என்றே நம்புகிறேன். ஆனால் இம்மாதிரியான கணக்கீடுகளுக்கும் பிறவற்றுக்கும் மேலானதாய் ஒன்றை,

---

* இத்தொகுதியின் பக்கங்கள் *312—320* பார்க்க.—ப-ர்.

அதாவது மெய்யாகவே முன்மாதிரியாக இருக்கும்படியான தர நிலையை அடைவதில் நமக்குள்ள ஆர்வத்தை, நாம் அமர்த்திட வேண்டுமென நினைக்கிறேன்.

நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்காக முழு முனைப்புடன் வேலை செய்ய வேண்டிய தருணம் முடிவில் இப்பொழுது வந்து விட்டது என்று கருதுகிறேன். இந்த வேலையில் அவசரத்தைக் காட்டிலும் அதிக தீமை பயப்பது எதுவும் இருக்க முடியாது எனலாம். எனவேதான் புள்ளிவிவரங்களை ஊதிப் பருக்க வைப்பதை எதிர்த்து எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இதற்கு மாறாய், எனது கருத்துப்படி புள்ளிவிவரங்கள் குறித்து இங்கே நாம் குறிப்பிடத்தக்க அளவுக்குச் செட்டாய் இருத்தல் வேண்டும். ஒளிவு மறைவின்றி நாம் இதனைச் சொல்லியாக வேண்டும்: தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் மக்கள் கமிசாரகம் தற்போது கொஞ்சமும் செல்வாக்கற்றதாய் இருக்கிறது. நமது தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் அலுவலகங்களைக் காட்டிலும் மோசமாய் அமைந்த அலுவலகங்கள் எவையும் இல்லை, தற்போதுள்ள நிலைமைகளில் இந்த மக்கள் கமிசாரகத்திடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதை யாவரும் அறிவர். முதலாவதாக, முன்மாதிரியான அலுவலகமாய் இருக்கக் கூடியதும், இரண்டாவதாக, எல்லாரது முழு நம்பிக்கைக்கும் உரியதாகக் கூடியதும், மூன்றுவதாக, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனைப் போல் உயர் நிலைக்கு உரியதான ஓர் அமைப்பு ஆற்றும் பணியின் பயனுடைமையை நாம் மெய்ப்பித்துள்ளதை எல்லாருக்கும் நிரூபித்துக் காட்டக் கூடியதுமாகிய ஓர் அலுவலகத்தை ஒரு சில ஆண்டுகளுக்குள் தோற்றுவிப்பதற்கு மெய்யாகவே விரும்புவோமாயின், மேற்கூறிய உண்மையை நாம் உறுதியாக நினைவில் இருத்திக் கொண்டாக வேண்டும். என் அபிப்பிராயத்தில் அலுவலகங்களது ஊழியர்களின் எண்ணிக்கை பற்றிய பொதுவான எல்லா நியமங்களும் உடனடியாகவும் இறுதியாகவும் நிராகரிக்கப்பட வேண்டும். தொழிலாளர் மற்றும் விவசாயி

களது மேற்பார்வை அமைப்புக்குரிய ஊழியர்களை நாம் முழுக் கவனம் செலுத்தி மிகக் கண்டிப்பான சோதனையின் அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும், வேறு எவ்விதத்திலும் தேர்வு செய்யலாகாது. ஏனோதானோவென செயல்படுவதும், கிஞ்சித்தும் நம்பிக்கை ஊட்டாததும், தன் சொல்லுக்கு அதிக மதிப்பில்லாததுமான மக்கள் கமிசாரகம் ஒன்றை அமைத்து என்ன பயன்? இவற்றை எல்லாம் தவிர்க்க வேண்டுமென்பதே, தற்போது நாம் மனதிற்கொண்டுள்ள புத்தமைப்புப் பணியின் பிரதான குறிக்கோள் என்று நினைக்கிறேன்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களாக நாம் சேர்த்து வரும் தொழிலாளர்கள் குற்றங்குறை இல்லாக் கம்யூனிஸ்டுகளாய் இருக்க வேண்டும். அவர்களது வேலைகளுக்குரிய வழிமுறைகளையும் இவ்வேலைகளின் நோக்கங்களையும் அவர்களுக்குக் கற்று தருவதற்கான பணியில் மிகப் பெரும் பகுதி இனிமேல்தான் செய்யப்பட வேண்டுமென நினைக்கிறேன். மேலும், இந்த வேலைகளில் துணை புரிவதற்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான செயலாளர்கள் இருந்தாக வேண்டும், இந்தப் பதவிகளில் அமர்த்தப்படும் முன் இவர்கள் மும்மடங்கான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். முடிவில், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் நேரடியாகத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் சிப்பந்திகளாக நாம் அமர்த்திக் கொள்ளத் தீர்மானிக்கும் பிரமுகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோராய் இருக்க வேண்டும்:

முதலாவதாக, இவர்கள் கம்யூனிஸ்டுகள் சிலரால் சிபார்சு செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும்;

இரண்டாவதாக, நமது அரசுப் பொறியமைவு குறித்து அறிந்தவர்கள்தானு என்பதற்கான பரீட்சையில் தேர்வு பெற்றாக வேண்டும்;

மூன்றாவதாக, நமது அரசுப் பொறியமைவுத் தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள், நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகள், அலுவலக நடைமுறையின் அடிப்படைக் கூறுகள்

முதலானவற்றிலான பரீட்சையில் தேர்வு பெற்றாக வேண்டும்;

நான்காவதாக, இந்தப் பொறியமைவு அனைத்தின் செயற்பாட்டுக்கும் ஒட்டுமொத்தமாய் நாம் உறுதிமொழி அளிக்க முடியும்படியான விதத்தில் இவர்கள் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களோடும், தமது செயலாளர்களோடும் இசைவாய் வேலை செய்ய வேண்டும்.

இந்த நிபந்தனைகள் மிதமிஞ்சிய அளவுக்குக் கண்டிப்பானவை என்பது எனக்குத் தெரிந்ததுதான். தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் பெருவாரியான ''காரிய சாத்தியக் கண்ணோட்டம் கொண்ட'' ஊழியர்கள் இந்த நிபந்தனைகள் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்பார்கள், அல்லது இவற்றை எள்ளி நகையாடுவர்கள் என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பைப் போன்றதொரு மக்கள் கமிசாரகத்தின் நடைமுறை நோக்கம் என்னவென்பதை இந்த மேற்பார்வை அமைப்பின் தற்போதைய தலைவர்களில் யாரேனும், அல்லது இந்த அமைப்புடன் இணைவு கொண்டோரில் யாரேனும் நேர்மையுடன் எனக்குச் சொல்வார்களா என்று கேட்கிறேன். பொருத்தமானதுதானா என்பதை உணரும் ஆற்றலைத் திரும்பவும் பெறுவதற்கு, இவர்களுக்கு இந்தக் கேள்வி துணை புரியுமென நினைக்கிறேன். நம்பிக்கைக்கு இடமில்லாததாகிவிட்ட இந்தத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு சம்பந்தமாக எத்தனையோ தரம் நாம் செய்திருக்கும் திருத்தமைவுகளில் மேலும் ஒன்றைச் செய்து பயனில்லையென விட வேண்டும், அல்லது மெள்ளச் செயல்படும்படியான, கடினமான, வழக்கத்துக்கு மாறான வழிகளில் சென்று, சரிதானா என்று திரும்பத் திரும்பச் சோதித்துப் பார்த்துக் கொண்டு, மெய்யாகவே முன்மாதிரியாகத் திகழக் கூடியதான ஒன்றை, தனது பட்டத்தாலும் பதவியாலும் மட்டுமின்றி தனது செயல்திறனாலும் எல்லோரது மதிப்புக்கும் உரியதாகக் கூடியதான ஒன்றைத் தோற்றுவிக்க

மெய்யாகவே நாம் வேலை தொடங்கியாக வேண்டும்.

நாம் பொறுமையுடன் செயல்படத் தயாராயில்லை எனில், இப்பணிக்குச் சில ஆண்டுகளைச் செலவிட விரும்ப வில்லை எனில், இதில் நாம் இறங்காமல் இருப்பதே உத்தமம்.

அவசர அவசரமாய் ஏற்கெனவே நாம் அமைத்திருக் கும் நிலையங்களில்—அதாவது, உழைப்பு ஆராய்ச்சி உயர் நிலையங்களிலும் பிறவற்றிலும்—குறைந்தபட்சமாகச் சில வற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இவை முழு அள வுக்குத் தக்கவாறு அமைந்தவைதானு என்று சரிபார்த்திட வேண்டும், நவீன விஞ்ஞானத்தின் உயர் தரங்களுக்கு மெய்யாகவே உகந்தவாறு அமைந்து நமக்கு இவ்விஞ்ஞானத் தின் அனுகூலங்கள் அனைத்தும் கிடைக்கச் செய்யும் விதத் தில் மட்டுமே இவை தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். இதை நாம் செய்வோமாயின், தனக்குரிய பணிகளைச் செவ்வனே செய்து, நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்காக ஒழுங்காகவும் இடைவிடாமலும் செயலாற்றவல்லதாகிய ஒரு நிலையத்தை—தொழிலாளி வர்க்கத்தின், ருஷ்யாவினது கம்யூனிஸ்டுக் கட்சியின், நமது குடியரசின் பெருந்திரள் மக்கள் அனைவரின் முழு நம்பிக்கைக்கும் உரித்தான ஒரு நிலையத்தை—ஒரு சில ஆண்டுகளில் பெற்று விடலாமென எதிர்பார்ப்பது கற்பனுவாதமாய் இராது.

இந்தப் பணிக்கான தயாரிப்பு வேலைகளை இப்போதே ஆரம்பிக்கலாம். திருத்தியமைப்பதற்கான தற்போதைய திட்டத்தைத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற் பார்வை அமைப்பின் மக்கள் கமிசாரகம் ஏற்றுக் கொள்ளு மாயின், இப்போதே அது தயாரிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்; பணி முழுமையாக நிறைவேற்றப்படும் பொருட்டு அவசரப்படாமலும், ஏற்கெனவே செய்யப் பட்டதை மாற்றுவதற்குத் தயங்காமலும் இடையருது ஒழுங்காய் வேலை செய்யலாம்.

இந்த விவகாரத்தில் அரைமனதான தீர்வு எதுவும் பெருந் தீங்கிழைப்பதாகவே இருக்கும். தொழிலாளர் மற் றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் ஊழியர்

களது எண் அளவுக்கான எந்தவொரு நடவடிக்கையும் வேறு எந்தக் கருத்தின் அடிப்படையிலும் அமையுமாயின், உண்மையில் அது பழைய அதிகாரவர்க்கக் கருத்துக்களின், பழைய தப்பெண்ணங்களின் அடிப்படையில்தான், ஏற்கெனவே நிந்திக்கப்பட்டவையும் பொதுவாக எல்லோராலும் ஏளனம் செய்யப்பட்டவையும் இன்ன பிறவும் ஆகியவற்றின் அடிப்படையில்தான் அமைந்திருக்கும்.

சாராம்சத்தில், இங்குள்ள பிரச்சினை பின்வருமாறே இருக்கிறது:

அரசுக் கட்டுமானப் பணியில் மெய்யாகவே ஏதேனும் ஓரளவுக்கு நாம் கற்றுக் கொண்டுவிட்டோம் (ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் ஓரளவுக்கு நாம் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்) என்று இப்போது நிரூபித்துக் காட்ட வேண்டும்; இல்லையேல், இதற்கு இன்னும் நாம் போதிய முதிர்ச்சி அடைந்தாகவில்லை என்று நிரூபிப்போர் ஆவோம். பின் கூறியதே உண்மையெனில், இப்பணியில் நாம் இறங்காமல் இருப்பதே நல்லது.

நம்மிடம் இருக்கும் ஆட் செல்வத்தைக் கொண்டு பார்க்கையில், குறைந்தது ஒரேயொரு மக்கள் கமிசாரகத்தையாவது முறைப்படித் திருத்தியமைக்கப் போதுமான அளவுக்குக் கற்றுக் கொண்டு விட்டோமெனக் கொள்வது வீண் பெருமையாகாதென நினைக்கிறேன். மெய்தான், இந்த ஒரு மக்கள் கமிசாரகம், நமது அரசுப் பொறியமைவு அனைத்துக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தாக வேண்டும்.

பொதுவாக உழைப்பின் ஒழுங்கமைப்பு குறித்தும், குறிப்பாக நிர்வாகம் குறித்தும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்படுவதற்காக உடனே நாம் போட்டியை அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே எர்மான்ஸ்கி வெளியிட்டிருக்கும் புத்தகத்தை நாம் ஓர் அடிப்படையாகக் கொள்ளலாம், எனினும் இவர் மென்ஷிவிசத்திடம் அனுதாபம் கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிவதையும், சோவியத் அமைப்புக்குப் பாடப் புத்தகம் தயாரிப்பதற்கு இவர் தகுதியுடையவரல்ல என்பதையும் இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிட வேண்டும். அண்மையில்

கோர்ழென்த்செவ் எழுதியிருக்கும் புத்தகத்தையும் நாம் அடிப்படையாகக் கொள்ளலாம்.[96] கடைசியாக, பகுதியள வில் பாடப் புத்தகமாய் இருக்கும்படியான ஏனைய புத்தகங் களிலும் சில நமக்கு உபயோகமாய் இருக்கலாம்.

தகுதியும் கடமை உணர்ச்சியும் கொண்டவர்கள் சிலரை இலக்கியங்களைச் சேகரிப்பதற்காகவும், இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அறிவதற்காகவும் நாம் ஜெர்மனிக்கோ, பிரிட் டனுக்கோ அனுப்பி வைக்கலாம். அமெரிக்காவுக்கோ கன டாவுக்கோ அனுப்ப முடியாமற்போகலாம் என்பதால் பிரிட் டனைக் குறிப்பிடுகிறேன்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பில் வேலை ஏற்கக் கூடிய ஊழியர்களுக்கான பரீட் சைகளுக்காகப் பூர்வாங்கப் பாடத்திட்டத்தை வகுத்திடு வதற்காக நாம் ஓர் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுக்கான வேட்பாளர்களுக் கும் இவ்வாறே செய்ய வேண்டும்.

இவற்றையும் இவற்றையொத்த பிற நடவடிக்கைகளை யும் எடுப்பதில் மக்கள் கமிசாருக்கோ, தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் கூட்டுச் செயற் குழுவின் உறுப்பினர்களுக்கோ, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவுக்கோ எந்தச் சள்ளையும் ஏற் பட்டுவிடாது என்பது தெளிவு.

இவற்றுடன் கூடவே, மத்தியக் கண்காணிப்புக் கமிஷ னின் உறுப்பினர்களுக்கான வேட்பாளர்களைத் தேர்வு செய் வதற்காகத் தயாரிப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண் டும். இந்தப் பதவிக்குப் போதுமான அளவிற்கும் அதிக மாகவே இப்போது நாம் எல்லாத் துறைகளிலுமான அனு பவம் வாய்ந்த தொழிலாளர்களிடமிருந்தும், மற்றும் நமது சோவியத் மேற்கல்விக் கூடங்களின் மாணவர்களிடமிருந்தும் தேர்வு செய்ய முடியுமென நம்புகிறேன். எந்தவொரு வகை யினரையும் முன்கூட்டியே வேண்டாமென ஒதுக்குவது சரி யல்ல. பல இயல்புகளும் வேறுபாடான சிறப்புத் தகுதிகளும் ஒருசேர இணையும்படிக் கண்காணிப்புக் கமிஷன் கலப்பான இயைபுடையதாய் அமைவதற்கு உசிதமான சலுகை காட்ட

வேண்டியிருக்கலாம். ஆகவே வேட்பாளர் பட்டியலை வகுத்திடுவதற்குக் கணிச அளவிலான வேலை தேவையாய் இருக்கும். உதாரணமாய், புதிய மக்கள் கமிசாரகத்தின் ஊழியர்கள் ஒரே ரகத்தினராய் இருப்பது, எடுத்துக்காட்டாய் முற்றிலும் அதிகாரிகளாகவே இருப்பது, அல்லது கிளர்ச்சிப் பிரசார ரகத்தினரையோ, எல்லாரோடும் நெருங்கிச் சுமுகமாகப் பழகும் தன்மையையோ, இத்துறையிலான ஊழியர்கள் அதிகம் பழக்கப்படாத வட்டாரங்களுக்குள் ஊடுருவிச் செல்லும் திறனையோ தமது முக்கிய பண்பாகக் கொண்டவர்களையோ விலக்கி ஒதுக்குவது விரும்பத்தக்கதல்ல.

* * *

தனது திட்டத்தைக் கல்வி நிலையங்களது திட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் எனது கருத்தைச் சிறந்த முறையில் தெளிவுபடுத்த முடியுமென நினைக்கிறேன். மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் அவர்களது தலைமைக் குழுவின் வழிகாட்டலில் அரசியல் பியூரோவின் எல்லாக் கோப்புகளையும் ஆவணங்களையும் முறையாய்ப் பரிசீலித்து வர வேண்டும். மிகச் சிறியவற்றிலிருந்தும் தனியார் உடைமையில் இருப்பவற்றிலிருந்தும் மிக உயர்ந்த அரசு அலுவலகங்கள் வரையிலான நமது அலுவலகங்களின் வேலை ஒழுங்கை புலனாய்வு செய்வது சம்பந்தமான பல்வேறு வேலைகளிடையிலும் இவர்கள் தமது நேரத்தைச் சரிவர பங்கீடு செய்து கொண்டாக வேண்டும். முடிவில், இவர்களது பணி தத்துவார்த்த ஆய்வும், அதாவது தாம் ஈடுபடத் திட்டமிடும் வேலைகளின் ஒழுங்கமைப்புத் தத்துவத்தைப் பற்றிய ஆய்வும், பழைய தோழர்களின் வழிகாட்டலிலோ, உழைப்பின் ஒழுங்கமைப்புக்கான உயர் நிலைக் கல்விக் கூடங்களது ஆசிரியர்களின் வழிகாட்டலிலோ அமைந்த நடைமுறை வேலைகளும் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும்.

ஆனால் இவ்விதமான கல்வித் துறைப் பணியுடன் மட்டும் இவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிட முடியுமென நான் நினைக்கவில்லை. இதனுடன் கூட, போக்கிரி

களெனச் சொல்ல மட்டேன், ஆனுல் ஓரளவுக்கு அவர்களை ஒத்த ஆட்களைப் பிடிப்பதற்கான பயிற்சி என்றும், தமது நடமாட்டத்தையும் அணுகு வழிகளையும் பிறவற்றையும் மறைப்பதற்கான தனி வகை உத்திகளை வகுத்திடுதல் என்றும் தயங்காது கூற வேண்டியிருக்கும் ஒரு வேலைக்கும் இவர்கள் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

மேற்கு ஐரோப்பிய அலுவலகங்களில் இத்தகைய பிரேரணைகள் முன்வைக்கப்படுமானுல், அவை பயங்கரக் கோபக் கனலையும் ஒழுக்க நெறியின் பாற்பட்ட ஆத்திர உணர்ச்சியையும் பிறவற்றையும் கிளர்ந்தெழச் செய்யும். ஆனுல் நம்மிடையிலும் இப்படி எழத்தக்கவாறு அந்த அளவுக்கு நாம் அதிகாரவர்க்கப் பாங்கினராய் ஆகிவிடவில்லை என்றே நான் நம்புகிறேன். யாரேனும் பிடிக்கப்பட்டு விடலாம் என்கிற கருத்து நம்மில் எவரையும் அதிர்ச்சியடையச் செய்யும்படியான அளவுக்குப் புதிய பொருளாதாரக் கொள்கை மதிப்பும் மரியாதையும் பெறுவதில் இன்னமும் வெற்றி பெற்றுவிடவில்லை. நமது சோவியத் குடியரசு மிகவும் அண்மையிலேதான் அமைக்கப்பட்டது, பழைய குப்பைக் கூளம் இன்னமும் குவியல்களாய்ச் சுற்றிலும் குவிந்து கிடக்கிறது, தந்திர உத்திகள் மூலமும் சில நேரம் தொலைவிடங்களிலுள்ள ஆதாரங்களை நோக்கிச் செல்லும்படியான அல்லது சுற்றி வளைத்துச் செல்லும்படியான புலன் விசாரணைகள் மூலமும் நாம் இந்தக் குப்பைகளைக் கிளற வேண்டி வருவது குறித்து அதிர்ச்சியடைய வேண்டுமென யாரும் நினைக்க மாட்டார். ஆனுல் அப்படி அதிர்ச்சியடைய வேண்டுமென யாராவது நினைப்பாராயின், அம்மாதிரியான ஆள் நிச்சயம் தம்மைக் கேலிக்குரியவராகவே ஆக்கிக் கொள்வார் என்பதில் ஐயமில்லை.

நமது புதிய தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பானது, பிரெஞ்சுக்காரர்கள் பகட்டான நாணம் என்கிருர்களே, அதனை விட்டொழித்துவிடுமென நம்புவோமாக. இதை நாம் நகைக்கத்தக்க ஆசாரப் பற்று என்ரே, நகைக்கத்தக்க பித்தலாட்டம் என்ரே சொல்லலாம்.

முற்றிலும் நமது சோவியத்துக்களையும் நமது கட்சியையும் சேர்ந்த அதிகாரவர்க்கத்துக்குத்தான் இது ஆதாயமானது. நமது சோவியத் அலுவலகங்களில் மட்டுமின்றி நமது கட்சி அலுவலகங்களிலும் அதிகாரவர்க்கத்தினர் இருக்கவே செய்கிறார்கள் என்பதை இடைக்குறிப்பாய் இங்கு கூறுவோமாக.

நாம் கற்க வேண்டுமென்றும், உழைப்பின் உயர் நிலை ஒழுங்கமைப்புக் கல்விக் கூடங்களிலும் பிறவற்றிலும் கற்க வேண்டுமென்றும் நான் மேலே கூறிய போது, எவ்விதத்திலும் நான் வகுப்பறை மூலமான ''கற்றறிதலைக்'' குறிப்பிடவோ, வகுப்பறை மூலமாய் மட்டுமே கற்றறிய வேண்டும் என்ற கருத்துடன் என்னை கட்டுப்படுத்திக் கொள்ளவோ இல்லை. இந்த விவகாரத்தில் ''கற்றறிதல்'' என்பது ஓரளவு தமாஷான சூழ்ச்சியும் தந்திரமும் ஏமாற்று வித்தையும் இவ்வகைப்பட்ட பிறவும் உள்ளடங்கியதே என்பதை நான் ஒத்துக் கொள்ள மறுப்பதாக மெய்யான புரட்சியாளர் யாரும் சந்தேகிக்க மாட்டாரென நம்புகிறேன். பகட்டான ஒழுங்கும் காரிய தோரணையும் மிகுந்த மேற்கு ஐரோப்பிய அரசுகளில் ஒன்றில் இம்மாதிரியான ஒரு கருத்து எவரையும் உண்மையில் மிரளச் செய்வதாய் இருக்கும், மதிப்புக்குரிய எந்த அதிகாரியும் இது குறித்து நினைத்துப் பார்க்கவுங்கூட சம்மதிக்க மாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நாம் அந்த அளவுக்கு அதிகாரவர்க்க மனப்பாங்கு கொண்டோராகி விடவில்லை, நம்மிடையே இந்தக் கருத்து பற்றிய விவாதம் வேடிக்கையான சிரிப்பையே தவிர வேறு எந்த விளைவையும் உண்டாக்கி விடாது என்று நான் நம்புகிறேன்.

பயனுடைமையையும் கேளிக்கையையும் ஒன்றுசேரச் செய்தால் என்னவாம்? எள்ளி நகையாடத்தக்கதான ஒன்றை, தீமையான ஒன்றை, ஓரளவு நகைக்கத்தக்கதும் ஓரளவு தீமையானதுமான ஒன்றை, இன்ன பிறவற்றை அம்பலப்படுத்துவதற்காக வேடிக்கையான, அல்லது ஓரளவு வேடிக்கையான தந்திரத்தைக் கையாண்டால் என்னவாம்?

நமது தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு இந்தக் கருத்துக்களைப் பரிசீலிக்க முற்

படுமாயின், அது பெருமளவில் நன்மையடையும் என்பதாய் எனக்குத் தோன்றுகிறது. நமது மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களும் தொழிலாளர் மற்றும் விவசாயி களது மேற்பார்வை அமைப்பைச் சேர்ந்த அவர்களது கூட் டாளிகளும் சிக்கலான வழியில் மிகச் சிறந்த வெற்றிகள் சிலவற்றைக் கண்டிருக்கிறூர்கள். இவ்வழியிலான வெற்றி களின் பட்டியலானது, நமது வருங்காலத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பினராலும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களாலும், பகட்டான நாணமும் ஆசாரப் பற்றும் மிகுந்த பாடப் புத்த கங்களில் குறிக்கப்படத்தகாத பல இடங்களிலும் நிகழ்த் தும் மிகப் பல தீரச் செயல்களாலும் வளம் பெறுமென நினைக்கிறேன்.

* * *

கட்சி அலுவலகத்தை சோவியத் அலுவலகத்துடன் இணைப்பதாவது, எப்படி அது? அனுமதிக்கத்தகாதது அல் லவா அது?

நான் இந்தக் கேள்வியை எழுப்புவது என் சார்பில் அல்ல; சோவியத் அலுவலகங்களில் மட்டுமின்றி நமது கட்சி அலு வலகங்களிலும் அதிகாரவர்க்கத்தினர் இருப்பதாய் மேலே கூறினேனே, அவர்களைச் சுட்டி அவர்களது சார்பில் இதை எழுப்புகிறேன்.

இந்த இணைவு நமது பணியின் நலன்களுக்கு உகந்ததாய் இருக்குமாயின், ஒன்றை மற்றொன்றுடன் ஏன் இணைக்கக் கூடாதாம்? அயல்துறை விவகார மக்கள் கமிசாரகத்தைப் போன்ற ஒன்றில் ஆரம்ப நாட்களிலேயே இம்மாதிரியான இணைவு நடைமுறைக்கு வந்து, பெரிய பயன் அளித்திருக்கக் காண்கிறோமா, இல்லையா? அயல் அரசுகளது தந்திரத்தை எனலாம்—இதனிலும் கண்யக் குறைவான பதத்தை உப யோகிக்க வேண்டாமெனில் — முன்னறிந்து தடுக்கும் பொருட்டு, அவற்றின் ''ஆட்டத்துக்குப்'' பதிலளிக்கும் முறையில் நாம் மேற்கொள்ளும் ''ஆட்டத்தைப்'' பற்றிய சிறிதும் பெரிதுமான பல பிரச்சினைகள் குறித்தும் கட்சியின்

கண்ணோட்டத்திலிருந்து அரசியல் பியூரோ விவாதிக்க வில்லையா? கட்சி உறுப்பு ஒன்றுடன் சோவியத் உறுப்பு ஒன்று கொண்டுள்ள நெகிழ்வான இந்த இணைவு பெரும் பலத்துக் குரிய ஆதாரமாய் நமது அரசியலில் இருக்கவில்லையா? தனது பயனுடைமையை நிரூபித்துக் காட்டியிருக்கும் ஒன்று, நமது அயல்துறை அரசியலில் திட்டவட்டமாய் ஏற்கப்பட்டு இனி இத்துறையில் இது குறித்து ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்னும்படி அந்த அளவுக்குப் பழக்கமானதாகிவிட்ட ஒன்று, நமது அரசுப் பொறியமைவு அனைத்தும் பொறுத்த வரை குறைந்தது அதே அளவுக்கேனும் பொருத்தமானதாகவே இருக்குமென நினைக்கிறேன் (உண்மையில் மேலும் அதிக அளவுக்குப் பொருத்தமானதாய் இருக்குமென நினைக் கிறேன்). தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற் பார்வை அமைப்பின் பணிகள் நமது அரசுப் பொறியமைவு அனைத்தும் அடங்கும்படி வியாபகமானவை. இத்துறையின் செயற்பாடானது, அரசு அலுவலகங்களில் ஒன்று விடாமல் யாவற்றையும் — ஊராட்சியைச் சேர்ந்தவை, மத்திய அமைப்புகளைச் சேர்ந்தவை, வாணிபத் துறையிலானவை, முற்றிலும் நிர்வாகத் துறையிலானவை, கல்வி சம்பந்த மானவை, ஆவணக் காப்புக்கானவை, நாடகத் துறை யிலானவை முதலான பலவற்றையும்—சுருக்கமாய், மிகச் சிறிய விதிவிலக்கின்றி எல்லாவற்றையும்—கட்டுப்படுத்துவ தாய் இருக்க வேண்டும்.

ஆகவே, இத்தகைய விரிவும் வீச்சும் வாய்ந்த செயற் பாட்டுக்குரிய ஓர் அலுவலகம், தவிரவும் செயற்பாட்டின் வடிவங்களில் இப்படி அதிவிசேஷ நெகிழ்வு தேவைப்படும் அலுவலகம், கட்சிக் கண்காணிப்பு அலுவலகத்துக்கும் சோவியத் கண்காணிப்பு அலுவலகத்துக்கும் இடையிலான இந்தத் தனி வகை இணைவைக் கொள்வதற்கு ஏன் அனு மதிக்கலாகாது?

இப்படி இணைவு கொள்வதற்கு எந்தத் தடங்கலும் இருப் பதாக எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, இம்மாதிரி யான இணைவு நமது பணியின் வெற்றிக்கான ஒரே உத்தர வாதமாகும் என்றும் நான் கருதுகிறேன். இது சம்பந்தமான

எல்லா ஐயங்களும் நமது அரசுப் பொறியமைவைச் சேர்ந்த படுமோசமாய் அழுக்கேறி நலமிழந்த முடுக்குகளிலிருந்து எழுகிறவை என்றும், ஏளனச் சிரிப்பு ஒன்றே இவற்றுக்கு ஏற்ற பதில் என்றும் நினைக்கிறேன்.

* * *

மற்றெரு சந்தேகம்: கல்வித் துறைச் செயற்பாட்டை அதிகாரச் செயற்பாட்டுடன் இணைப்பது உகந்ததுதாஞ? உகந்தது மட்டுமல்ல, அவசியமானதுங்கூட—என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. பொதுவாகப் பேசுமிடத்து, மேற்கு ஐரோப்பிய அரசு வடிவம் குறித்து நாம் புரட்சிகரமான போக்குடையவர்கள்தான் என்றுலும், பெருந்தீங்கிழைக்கும் அதனுடைய நகைக்கத்தக்கத் தப்பெண்ணங்களால் நாமும் பீடிக்கப்படுவதற்கு நாம் இடமளித்து விட்டோம். நமது அருமை அதிகாரவர்க்கத்தினர் வேண்டுமென்றே நாம் இவற்ருல் பீடிக்கப்படும்படி ஓரளவுக்குச் செய்திருக்கிருர் கள். இந்தத் தப்பெண்ணங்களால் குழம்பிய நீரில் அடிக்கடி மீன் பிடித்துத் தமது சொந்த நலன்களை ஈடேற்றிக் கொள்ள வேண்டுமென்று செயல்பட்டவர்கள் இந்த அதிகாரவர்க்கத் தினர். இந்தக் குழம்பிய நீரில் அவர்கள் நிறையவே மீன் பிடித்தார்கள், எவ்வளவு விரிவான அளவுக்கு அவர்கள் இப்படி மீன் பிடித்தார்கள் என்பதை நம்மிடையே உள்ள குருடர்களால் மட்டும்தான் கவனியாது இருக்க முடிந்தது.

சமுதாய, பொருளாதார, அரசியல் உறவு நிலைகளின் எல்லாத் துறைகளிலும் நாம் ''பயங்கரமான'' அளவுக்குப் புரட்சி மனப்பாங்கு உடையவர்கள்தாம். ஆஞல் பதவிப்படி நிலைகளுக்கு அளிக்க வேண்டிய மதிப்பு குறித்தும், அலுவலக வேலைகளுக்குரிய வடிவங்கள், சடங்குகள் குறித்தும் நமது ''புரட்சி மனப்பாங்கு'', ஊசிப் போன மாமூல் முறைகளுக்கு அடிக்கடி அடிபணிந்து விடுகிறது. சமுதாய வாழ்வில் முன் ஞேக்கிப் பெரும் பாய்ச்சல் நடந்தேறும் அதே நேரத்தில், கடுகளவே ஆன மாற்றங்களைச் செய்வதற்கும் வியக்கத்தக்க வாறு அச்சம் தெரிவிக்கப்படும் இந்தச் சுவையான நிகழ்வை நாம் பல தரம் பார்த்திருக்கிருேம்.

இது புரிந்து கொள்ளக் கூடியதே. ஏனென்ருல் மிகவும் துணிச்சல் வாய்ந்த முன்னேற்றப் பாய்ச்சல்கள் யாவும், நெடுங்காலமாகத் தத்துவார்த்த ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு துறையில்தான், பிரதானமாகத் தத்துவ அளவிலும் இதன்றி அனேகமாய் வேறு எதற்கும் இடமில்லாத நிலைமையிலும் வளர்க்கப்பட்டு வந்த ஒரு துறையில்தான் நடந்தேறின. ருஷ்யர்கள் வேலை நேரம் முடிந்த பின், அசாதாரணத் துணிச்சல் வாய்ந்த தத்துவார்த்தக் கட்டமைவுகளில் ஈடுபட்டு, வெட்ககரமான அதிகாரவர்க்க அலுவலக எதார்த்த உண்மைகளிலிருந்து மனச் சாந்தி கண்டனர். எனவேதான் நமது நாட்டில் இந்த அசாதாரண துணிச்சல் வாய்ந்த தத்துவார்த்தக் கட்டமைவுகள் அசாதாரண ஏறுமாறுத் தன்மை பெறலாயின. பொதுவான கட்டமைவுகளில் வெளியான தத்துவார்த்தத் துணிகரப் போக்குடன் கூடவே, அலுவலக மாமூலில் சின்னஞ்சிறு சீர்திருத்தங்கள் சம்பந்தமான வியக்கத்தக்க பதற்றமும் வெளிப்பட்டு வந்தது. நிலவுடைமையில் உலக அளவிலான ஒரு மாபெரும் புரட்சிக்கு வேறு எந்நாட்டிலும் கண்டிருக்க முடியாத துணிவுடன் திட்டம் வகுக்கப்பட்டது. அதே போது அலுவலக மாமூல் முறைகளில் அற்பத்தனமான சீர்திருத்தம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்றதும் கற்பனையானது இல்லாதொழிந்து விட்டது. பொதுப் பிரச்சினைகளில் அப்படி "அற்புத" பலன்கள் கிடைக்கும்படி கையாளப்பட்ட அந்தப் பொதுவான விதிகளை, இந்தச் சீர்திருத்தத்துக்காகக் கையாளுவதற்கு வேண்டிய கற்பனை அல்லது பொறுமை இல்லாமற்போய் விட்டது.

ஆதலால்தான், நமது இன்றைய வாழ்வில், ஒரு புறத்தில் எதற்கும் கலங்காத துணிச்சல், மறு புறத்தில் சின்னஞ்சிறு மாற்றங்களே என்ருலும் சிந்தனையானது மிரண்டுவிடும் அந்தக் கலவரம் ஆகிய இரண்டும் இப்படி வியக்கத்தக்க விதத்தில் கைகோத்துச் செல்கின்றன.

மெய்யாகவே மகத்தான எல்லாப் புரட்சிகளிலும் இவ்வாறே நிகழ்ந்திருப்பதாய் நினைக்கிறேன். ஏனென்ருல், மெய்யாகவே மகத்தான புரட்சிகள் யாவும், பழையனவற்றுக்

கும்—அதாவது, பழையனவற்றை வளர்த்திடும் போக்குடையவற்றுக்கும் — புதியனவற்றுக்காகிய — அதாவது, பழையனவற்றில் இம்மியளவும் இல்லாத அளவுக்குப் புதியனவாய் இருக்க வேண்டிய இவற்றுக்காகிய—கருத்தியலான பிரயத்தனத்துக்கும் இடையிலான முரண்பாடுகளிலிருந்து எழுகின்றவை.

புரட்சி எவ்வளவுக்கு எவ்வளவு திடுதிப்பென எழுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான காலத்துக்கு இந்த முரண்பாடுகள் பலவும் நீடிக்கின்றன.

* * *

நமது தற்போதைய வாழ்வின் பொதுவான இயல்பு வருமாறு: முதலாளித்துவத் தொழில் துறையை நாம் ஒழித்திருக்கிறோம், மத்திய காலத்திய அமைப்புகளையும் நிலப்பிரபுக்களுடைய நிலவுடைமையையும் தகர்த்துத் தரை மட்டமாக்குவதற்காக இயன்றது அனைத்தும் செய்திருக்கிறோம்; இவ்விதம் நாம் சிறிய, மிகச் சிறிய விவசாயிகளைத் தோன்றச் செய்திருக்கிறோம்; இந்த விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்று அதைப் பின்தொடர்கின்றனர், ஏனெனில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பணியால் விளைந்திருக்கும் பலன்களில் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால், அதிக வளர்ச்சி பெற்ற நாடுகளில் சோஷலிசப் புரட்சி வெற்றியடையும் வரையில், நாம் இந்தத் திடநம்பிக்கையை மட்டும் துணையாகக் கொண்டு தொடர்ந்து இயங்கி வருவது நமக்கு எளிதான காரியமன்று. ஏனெனில் பொருளாதார இன்றியமையாமை, முக்கியமாய் புதிய பொருளாதாரக் கொள்கைக்குரிய நிலைமைகளில், சிறிய, மிகச் சிறிய விவசாயிகளது உழைப்பின் உற்பத்தித் திறனை மிதமிஞ்சிய அளவுக்குக் கீழ்நிலையில் இருத்தி வைக்கின்றது. தவிரவும், சர்வதேசச் சூழ்நிலையுங்கூட ருஷ்யாவைப் பின்னேக்கித் தள்ளியது, மொத்தத்தில் மக்களது உழைப்பின் உற்பத்தித் திறனைக் குறையச் செய்து போர்முற்கால நிலைக்கும் கீழே செல்லும்படிச் செய்தது. நம்மைப் பின்னேக்கித் தள்ளிவிடுவதற்கும், கூடுமான அளவுக்கு நாட்டில் அழிவை

யும் சிதைவையும் பரவச் செய்யும் பொருட்டு உள்நாட்டுப் போருக்கான கூறுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ வல்லரசுகள் ஓரளவுக்கு வேண்டு மென்றும், ஓரளவுக்கு உணர்வின்றியும், தம்மால் இயன்றது அனைத்தும் செய்தன. ஏகாதிபத்தியப் போரிலிருந்து இவ்வழி யில் வெளி வருவதுதான் பல அனுகூலங்களையும் உடைய ஒன்ருய் அவற்றுக்குத் தோன்றியது. அவை ஏறத்தாழ இவ் வாறு வாதாடின: ''ருஷ்யாவில் புரட்சிகர அமைப்பை நாம் வீழ்த்தத் தவறினுலும், எப்படியும் சோஷலிசத்தை நோக்கி அது முன்னேருதபடி தடுப்போம்.'' அவற்றின் நோக்குநிலையிலிருந்து அவை இதன்றி வேறு எவ்விதத்திலும் வாதாடுவதற்கில்லை. முடிவில் அவற்றின் பிரச்சினை பாதியள வுக்குத் தீர்வு பெற்றது. புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட புதிய அமைப்பை அவை வீழ்த்த முடியவில்லை. ஆனுல் சோஷ லிஸ்டுகள் முன்னறிந்து கூறியவை முற்றும் சரியே என்று நிரு பித்துக் காட்டியிருக்கக் கூடிய முன்னேற்ற அடியினை இந்த அமைப்பு உடனே எடுத்து வைக்காதபடி அவற்ருல் தடுத்திட முடிந்தது. அந்த முன்னேற்ற அடி எடுத்து வைக்கப்பட்டிருந் தால், இந்த அமைப்பு தனது உற்பத்திச் சக்திகளைப் பிர மாதமான வேகத்தில் வளர்த்துச் செல்ல முடிந்திருக்கும்; தனது உள்ளாற்றல்கள் யாவற்றையும் வளர்க்க முடிந்திருக் கும்; இந்த உள்ளாற்றல்கள் எல்லாமாகச் சேர்ந்து சோஷ லிசத்தை மலரச் செய்திருக்கும்; சோஷலிசமானது பிரம் மாண்டமான சக்திகளைத் தன் அகத்தே கொண்டதாகும் என்றும் அளவு கடந்த ஒளி படைத்த வளர்ச்சி வாய்ப்பு களுக்குரிய ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்துள் மனித குலம் தற்போது பிரவேசித்து விட்டது என்றும் எல்லார்க்கும் சோஷலிஸ்டுகள் இவ்விதம் கண்கூடாக நிரூபித்துக் காட்டி யிருப்பார்கள்.

தற்போது உருவாகியிருக்கும் சர்வதேச உறவுநிலைகளது அமைப்பானது, ஓர் ஐரோப்பிய அரசு—ஜெர்மனியானது —வெற்றி நாடுகளால் அடிமை செய்யப்பட்டிருக்கும் அமைப் பாகும். தவிரவும், மேற்குலகின் மிகப் பழைய அரசுகளான பலவும் போரில் தமது வெற்றியின் காரணமாய், மிகச்

சொற்ப அளவிலான சில சலுகைகளைத் தமது ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கு அளிக்க முடியும்படியான நிலையில் இருக்கின்றன. மிகச் சொற்ப அளவிலான சலுகைகளே என்றாலுங்கூட இவை அந்த நாடுகளின் புரட்சி இயக்கத்தின் வேகத்தை மட்டுப்படுத்தி, ஓரளவுக்கு ''வர்க்கப் போர் நிறுத்தம்'' ஏற்பட்டிருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்குகின்றன.

அதே நேரத்தில், கடந்த ஏகாதிபத்தியப் போரின் விளைவாய், கிழக்குலக நாடுகள் பலவும்—இந்தியாவும் சீனாவும் பிறவும்—அவற்றின் பழைய தடத்திலிருந்து புரண்டுவிடும்படிக் குலுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் வளர்ச்சியானது பொதுவான ஐரோப்பிய முதலாளித்துவ வழிகளை நோக்கித் திட்டவட்டமாகப் பெயர்ந்திருக்கிறது. பொதுவான ஐரோப்பிய கொந்தளிப்பு அவற்றின் மீது பாதிப்பு செலுத்த முற்பட்டிருக்கிறது. உலக முதலாளித்துவம் அனைத்திலுமான நெருக்கடிக்கே இட்டுச் செல்ல வேண்டிய வளர்ச்சிப் போக்கினுள் அவை ஈர்க்கப்பட்டிருப்பது இப்பொழுது உலக முழுதிலும் தெளிவாகவே தெரிகிறது.

இவ்வாறு, தற்போது நம் எதிரே பின்வரும் கேள்வி எழுகிறது: நமது சிறிய, மிகச் சிறிய விவசாயிகள் வழியிலான உற்பத்தியையும், தகர்ந்து கிடக்கும் நமது தற்போதைய நிலைமையையும் கொண்டு நம்மால்—மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் சோஷலிசத்தை நோக்கியமைந்த அவற்றின் வளர்ச்சியை நிறைவு பெறச் செய்யும் வரை—அழியாது நீடித்திருக்க முடியுமா? ஆனால் இந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் அவற்றின் வளர்ச்சியை, முன்பெல்லாம் நாம் எதிர்பார்த்த விதத்தில் நிறைவு பெறச் செய்யவில்லை. படிப்படியாக சோஷலிசம் உள்ளூர ''முதிர்ச்சி'' பெறுவதன் மூலம் அல்லாமல், சில நாடுகளை ஏனையவை சுரண்டுவதன் மூலம், ஏகாதிபத்தியப் போரில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் முதன்மையானதன் மீதான சுரண்டல் மூலமும், அதனுடன் சேர்ந்து கிழக்குலகம் அனைத்தின் மீதான சுரண்டல் மூலமும் அவை இவ்வளர்ச்சியை நிறைவு பெறச் செய்கின்றன. மறு புறத்தில், இந்த முதலாவது ஏகாதிபத்தியப் போரின் விளைவாய், கிழக்குலகு திட்டவட்டமான

முறையில் புரட்சி இயக்கத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கிறது, உலகப் புரட்சி இயக்கத்தின் பொதுவான சூறுவளியினுள் திட்டவட்டமான முறையில் ஈர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலைமை நமது நாட்டுக்கு வரையறுக்கும் போர்த்தந்திரம் என்ன? பின்வருவதே என்பது வெளிப்படையாகத் தெரிகிறது: நமது தொழிலாளர் ஆட்சியதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், நமது சிறிய, மிகச் சிறிய விவசாயிகளைத் தொடர்ந்து அதன் தலைமையிலும் செல்வாக்கிலும் இருக்கச் செய்வதற்காகவும் நாம் அளவு கடந்த எச்சரிக்கை உணர்வு வெளிப்படுத்தியாக வேண்டும். அனைத்து உலக சோஷலிசப் புரட்சியை எழவே செய்தாக வேண்டிய ஓர் இயக்கத்துள் உலகம் முழுமையும் இப்போது சென்று கொண்டிருக்கும் அனுகூலத்தை நமது நாடு பெற்றிருக்கிறது. ஆனல் உலகை இரு முகாம்களாகப் பிளப்பதில் ஏகாதிபத்திய வாதிகள் வெற்றி கண்டிருக்கும் பிரதிகூலத்தையும் நமது நாடு எதிர்நோக்குகிறது. கலாசார வளர்ச்சியும் முதலாளித்துவ வளர்ச்சியும் பெற்ற, மெய்யாகவே முன்னேறிய நாடான ஜெர்மனி காலூன்றி எழுந்து நிற்பது மிகவும் கடினமாகியிருக்கும் நிலைமையால் இந்தப் பிளவு மேலும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது. மேற்குலகு எனப்படுவதன் முதலாளித்துவ அரசுகள் எல்லாம் அதைக் கொத்திக் கொண்டிருக்கின்றன, எழுந்து நிற்க முடியாதபடி அதைத் தடுத்து வருகின்றன. மறு புறத்தில், கிழக்குலகு அனைத்தும், சுரண்டப்படும் உழைப்பாளர்களாகிய அதன் கோடானு கோடியானோர் மனித குலத் துன்பத்தின் கொடிய வரம்புக்குத் தள்ளப்பட்டு, அதன் இயல் வலிவும் பொருளாயத வலிவும் அதனிலும் மிகச் சிறியவையான மேற்கு ஐரோப்பிய அரசுகளில் எதனுடைய இயல் வலிவோடும் பொருளாயத, இராணுவ வலிவோடும் எவ்விதத்திலும் ஒப்பிடத்தகாத ஒரு நிலையில் பலவந்தமாய் இருத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

வருங்காலத்தில் இந்த ஏகாதிபத்திய அரசுகளுடனை மோதலிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமா? வெற்றி பெற்ற மேற்றிசை ஏகாதிபத்திய அரசுகளுக்கும் வெற்றி பெற்ற கீழ்த்திசை ஏகாதிபத்திய அரசு

களுக்கும் இடையிலான உள் முரண்பாடுகளும் மோதல்களும் நமக்கு இரண்டாம் முறையும் ஒய்வு இடைநேரம் தருமென —முன்பு ருஷ்ய எதிர்ப்புரட்சிக்கு ஆதரவாக மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி நடத்திய படையெடுப்பு, மேற்கையும் கிழக்கையும் சேர்ந்த எதிர்ப்புரட்சியாளர்களது முகாமினுள், கிழக்கத்திய, மேற்கத்தியச் சுரண்டலாளர்களது முகாமினுள், ஜப்பான் மற்றும் அமெரிக்கா முகாமினுள் எழுந்த முரண்பாடுகளின் விளைவாகத் தகர்ந்த போது முதல் முறை நமக்குக் கிடைத்தது போல் திரும்பவும் ஒய்வு இடைநேரம் கிடைக்குமென—நாம் நம்பலாமா?

இந்தக் கேள்விக்குப் பின்வரும் விதத்தில் பதிலளிக்க வேண்டுமென நினைக்கிறேன்: இங்கு பிரச்சினையானது மிகப் பல காரணக் கூறுகளைப் பொறுத்திருக்கிறது; பொதுவாகவும் ஒட்டுமொத்தமாகவும் போராட்டத்தின் இறுதி முடிவை முன்னறிந்து கூற முடிகிறதென்றால், உலகில் வாழ்வோரில் மிதமிஞ்சிய பெருவாரியானோருக்குப் போராட்டத்துக்கான பயிற்சியையும் கல்வியையும் முடிவில் முதலாளித்துவமே அளித்திடுகிறது என்பதே காரணம்.

இறுதியாகப் பார்க்கும் போது போராட்டத்தின் முடிவானது, உலகோரில் மிதமிஞ்சிய பெருவாரியானோர் ருஷ்யா, இந்தியா, சீனா முதலானவற்றில் இருப்பவர்கள் என்பதால் தீர்மானிக்கப்படும். உலகோரில் பெருவாரியானோராய் இருக்கும் இவர்கள் கடந்த சில ஆண்டுகளில் அசாதாரண வேகத்தில் விடுதலைப் போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த விதத்தில், உலகப் போராட்டத்தின் இறுதி முடிவு எப்படி இருக்கும் என்பது குறித்து இம்மியளவும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. இந்த அர்த்தத்தில் சோஷலிசத்தின் இறுதி வெற்றி எந்த நிபந்தனையும் இன்றி முற்றும் உறுதியானது.

ஆனால் நமது அக்கறைக்குரியது சோஷலிசத்தின் இந்தத் தவிர்க்க வொண்ணாத இறுதி வெற்றி அல்ல; நாம் கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரமே நமது அக்கறைக்குரியது. மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி அரசுகளால் நாம் நசுக்கப்படுவதைத் தடுப்பதற்காக, ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக்

கட்சியாகிய நாம், ருஷ்யாவின் சோவியத் ஆட்சியதிகார மாகிய நாம், கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரம் தான் நமது அக்கறைக்குரியது. எதிர்ப்புரட்சி ஏகாதிபத்திய மேற்குக்கும், புரட்சிகர தேசியவாதக் கிழக்குக்கும் இடையே—உலகிலே நாகரிக வளர்ச்சி மிகுந்த அரசுகளுக்கும், கிழக்கத்திய பாணியிலான பிற்பட்ட அரசுகளாயினும் உலகோரில் பெருவாரியானேரைக் கொண்டவைகளுக்கும் இடையே—எழும் அடுத்த இராணுவ மோதல் வரை நாம் அழியாமல் நிலைத்திருப்பது உறுதி செய்யப்பட வேண்டுமாயின், இந்தப் பெருவாரியானேர் நாகரிக வளர்ச்சி பெற்ருக வேண்டும். உடனே சோஷலிசத்தை அடைவதற்கு நம்மிடமும் போதிய நாகரிக வளர்ச்சி இருக்கவில்லை, ஆனால் அதற்கு வேண்டிய அரசியல் முன்தேவைகள் நம்மிடம் இருக்கின்றன. நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் கீழ்க்கண்ட போர்த்தந்திரத்தை அல்லது கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

தொழிலாளர்கள் தொடர்ந்து விவசாயிகளுக்குத் தலைமை தாங்கும்படியாகவும், தொடர்ந்து அவர்கள் விவசாயிகளது நம்பிக்கைக்கு உரியோராய் இருக்கும்படியாகவும், அவர்கள் மிகுந்த அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடித்து நமது சமூக உறவுகளில் ஊதாரித்தனத்தின் சாயல் என்பதே இல்லாதவாறு அகற்றும்படியாகவும் அமைந்த ஓர் அரசை நாம் கட்டியமைத்திட வேண்டும்.

அதிகபட்ச சிக்கனம் கைகூடும் அளவுக்கு நாம் நமது அரசுப் பொறியமைவைச் சிறிதாக்கிக் கொள்ள வேண்டும். ஜாரிஸ்டு ருஷ்யாவால், அதன் அதிகாரவர்க்க முதலாளித்துவப் பொறியமைவால் அவ்வளவு பெரிய அளவில் விட்டுச் செல்லப்பட்டிருக்கும் ஊதாரித்தனத்தில் இம்மியளவும் எஞ்சாதவாறு அறவே ஒழித்தாக வேண்டும்.

இது விவசாயிகளது குறுகிய வரம்புகளுக்குள் அமைந்த ஆட்சியாகி விடாதா?

இல்லை. விவசாயிகள் மீதான தலைமை தொடர்ந்து தொழிலாளி வர்க்கத்திடமே இருக்கும்படி நாம் பாதுகாத்துக் கொண்டோமாயின், நமது அரசின் பொருளாதாரத்தில் சாத்

தியமான முழு அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் மிச்சப்படுத்துவதை எல்லாம் நமது பெருவீத இயந்திரத் தொழிலை வளர்த்திடவும், மின்மயமாக்குதலேயும் நீரியல் முறையிலான புல்கரி உற்பத்தியையும் வளர்த்திடவும், வோல்ஹவ் நீர்மின்விசைத் திட்டத்தை[97] நிறைவேற்றி முடிக்கவும், இன்ன பலவும் செய்யவும் உபயோகிப்போம்.

இதுதான், இது மட்டுமேதான் நமது நம்பிக்கைக்குரிய ஆதாரமாகும். இதை நாம் செய்திடும் போதுதான், உருவகமாகப் பேசுமிடத்து நாம் குதிரையை மாற்றிக் கொள்ள முடியும், விவசாயினுடைய, குடியானவனுடைய ஏழ்மைக் குதிரையிலிருந்து, நாசமாகிவிட்ட விவசாயி நாட்டுக்காக அமைந்த சிக்கனத்துக்கான குதிரையிலிருந்து, பாட்டாளி வர்க்கம் தேடி வரும், அவசியம் தேடவே வேண்டிய, குதிரைக்கு—பெருவீத இயந்திரத் தொழிலுக்கும் மின்மயமாக்கலுக்கும் வோல்ஹவ் மின்விசை நிலையத்துக்கும் பிறவற்றுக்குமான குதிரைக்கு—மாறிச் செல்ல முடியும்.

இப்படித்தான் நான் என் மனத்துள் நமது பணிக்கு, நமது கொள்கைக்கு, நமது போர்த்தந்திரத்துக்கு, நமது ஆதார நெறிக்கு உரிய பொதுத் திட்டத்தைத் திருத்தியமைக்கப் பெற்ற தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் செயற்பாடுகளுடன் இணைத்திடுகிறேன். தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பைத் தனிச்சிறப்பு வாய்ந்த உயர் நிலைக்கு உயர்த்தியும், மத்தியக் கமிட்டியின் உரிமைகளுடன் கூடிய முதன்மையை அதற்கு அளித்தும், இப்படி இன்னும் பலவும் செய்தும் நாம் இத்துறையில் தனிக் கருத்தும் கவனமும் செலுத்த வேண்டும் என்பதற்கான நியாயவிளக்கம், என் அபிப்பிராயத்தில், இதில்தான் காணக் கிடக்கிறது.

நமது பொறியமைவை முழு அளவுக்குக் களையெடுத்துச் சுத்தம் செய்வதன் மூலமும், அதற்கு இன்றியமையாத் தேவையாய் இல்லாதவை யாவற்றையும் கூடுமான அளவுக்குக் கழித்துக் கட்டுவதன் மூலமும் தான் நாம் சமாளிக்க முடியுமென உறுதியாய் இருக்கலாம் என்பதே இந்த நியாயவிளக்கம். அதோடு, சிறு விவசாயிகளது நாட்டுக்குரிய நிலையில்

அல்ல, சகலமும் குறுகிய வரம்புகளுக்குள் இருக்கும்படியான நிலையில் அல்ல, மாறாக பெருவீத இயந்திரத் தொழிலை நோக்கி இடையறாது முன்னேறும்படியான நிலையில் நாம் சமாளிக்க முடியும்.

நமது தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பானது இத்தகைய மகோன்னத பணிகளைக் கொண்டதாக வேண்டுமென நான் கனவு காண்கிறேன். எனவேதான் இதற்காக மிக உயர்ந்த அதிகாரம் வகிக்கும் கட்சி உறுப்பைச் ''சாதாரண'' மக்கள் கமிசாரகத்துடன் இணைத்திடுவதற்கு நான் திட்டமிடுகிறேன்.

மார்ச் 2, 1923

பிராவ்தா, இதழ் *49*,
மார்ச் 4, 1923

நூல் திரட்டு,
தொகுதி *45*,
பக்கங்கள் *389-406*

பதிப்பாளர் குறிப்புக்கள்

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரஸ் *1921 ஜூன் 22 முதல் ஜூலை 12 வரையில் மாஸ்கோவில் நடைபெற்றது. இந்தக் காங்கிரசின் பணிகளில் 605 பிரதிநிதிகள் பங்கேற்ருர்கள் (291 பேர் நிர்ணயகரமான வோட்டுரிமையுடனும் 314 பேர் விவாதங்களில் கலந்து கொள்ளும் உரிமையுடனும்). 52 நாடுகளைச் சேர்ந்த 103 அமைப்புகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள். இதில் 48 கம்யூனிஸ்டுக் கட்சிகள், 8 சோஷலிஸ்டுக் கட்சிகள், 28 இளைஞர் கழகங்கள், 4 சிண்டிக்கலிஸ்டு அமைப்புகள், 2 எதிர்ப்பணி கம்யூனிஸ்டுக் கட்சிகள் (ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி, ஸ்பெயின் நாட்டுத் தொழிலாளர் கம்யூனிஸ்டுக் கட்சி), 13 இதர அமைப்புகள் உட்படும். ருஷ்யன் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.)இன் சார்பில் 72 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இந்தப் பிரதிநிதிகள் குழுவுக்கு வி. இ. லெனின் தலைமை தாங்கினுர்.*

இந்தக் காங்கிரஸ் உலகப் பொருளாதார நெருக்கடி மற்றும் கம்யூனிஸ்டு அகிலத்தின் புதிய பணிகள், கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை, ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி, இத்தாலியப் பிரச்சினை, கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்கள், கம்யூனிஸ்டு அகிலத்துடனுன தொழிற்சங்கங்களின் சிவப்பு சர்வதேசக் கவுன்சிலின் உறவுமுறை, ஆம்ஸ்டர்டாம் அகிலத்தை எதிர்த்த போராட்டம், ரு. க. க. (போ.)இன் போர்த்தந்திரங்கள், கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டு இளைஞர் இயக்கமும், மாதர் இயக்கம், ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி இத்தியாதிகள் பற்றி விவாதித்தது.

இந்தக் காங்கிரசுக்கான தயாரிப்புகளையும் காங்கிரசின் வேலைகளையும் வி. இ. லெனின் நெறியாக்கம் செய்தார்.

இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சி சம்பந்தமாக கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் பெரும் பங்கு வகித்தது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் வளர்ச்சியடைந்து வரும் புதிய நிலைமைகளின் காரணமாக இக்காங்கிரசின் பிரதான கவனம் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஸ்தாபனம் மற்றும் போர்த்தந்திரங்கள் மீது ஒருமுனைப்படுத்தப்பட்டது. மையவாதத் திரிபின் அபாயத்தை எதிர்த்துப் போராடுவதன் கூடவே லெனின் ''இடதுசாரி'' வறட்டுச் சூத்திரவாதம், போலிப் புரட்சிகர இடதுசாரிப் பகட்டுரை மற்றும் செக்டேரியன் போக்கை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. ''இடதுசாரி'' அபாயத்தை எதிர்த்துக் காங்கிரசில் லெனின் விடாப்பிடியாக நடத்திய போராட்டத்தின் விளைவாக புரட்சிகர மார்க்சியம் மேலோங்கி நின்றது.—*9*.

[2] **இரண்டரையாவது அகிலம் அல்லது வியன்னா அகிலம்** (அதிகார பூர்வமான பெயர்: ''சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேச அமைப்பு'') என்பது மையவாத சோஷலிஸ்டுக் கட்சிகள் மற்றும் புரட்சிகர மக்கள் திரளினரின் நிர்ப்பந்தத்தின் கீழ் இரண்டாம் அகிலத்திடமிருந்து முறித்துக் கொண்ட பிரிவினரின் சர்வதேச அமைப்பாகும். இது *1921* பிப்ரவரியில் வியன்னாவில் நடைபெற்ற மாநாட்டில் நிறுவப்பட்டது. இரண்டாவது அகிலத்தைச் சொல்லளவில் மட்டுமே விமர்சித்த இந்த இரண்டரையாவது அகிலத்தின் தலைவர்கள் உள்ளபடியே, பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மிகவும் முக்கியமான பிரச்சினைகள் அனைத்திலும் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தும் சந்தர்ப்பவாதக் கொள்கைகளையே பின்பற்றினார்கள்; இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பை உழைக்கும் மக்கள் திரளினர் மத்தியில் பெருகி வரும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கை எதிர்க்கவே பயன்படுத்த முயன்றார்கள்.

1923 மே மாதம் இரண்டாவது மற்றும் இரண்டரையாவது அகிலங்கள் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் எனப்படும் அமைப்பில் ஒன்றிணைந்தன.—*11*.

[3] *1919* ஏப்ரல் *13*ந் தேதி இந்தியாவில் பஞ்சாபைச் சேர்ந்த அமிருதசரஸ் எனும் முக்கியமான தொழில் துறை மையத்தில், காலனியாதிக்கவாதிகளின் பயங்கர அடக்குமுறை

களைக் கண்டித்து நடந்த ஆயிரக் கணக்கானத் தொழிலாளர் கூட்டத்தில் பிரிட்டிஷ் படைகள் சுட்டன. சுமார் ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர், 2,000 பேர் காயமடைந்தனர். இந்தப் படுகொலையின் விளைவாக பஞ்சாபிலும் இதர மாகாணங்களிலும் மக்கள் கிளர்ச்சி எழுச்சிகள் வெடித்தன. இவை பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளால் கொடுமையாக அடக்கப்பட்டன.—12.

4 **சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்**—1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் தோன்றிய ஒரு குட்டி முதலாளித்துவக் கட்சி.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் பிரதானத் தூண்களாய்ச் செயல்பட்டனர், இக்கட்சியின் தலைவர்கள் அவ்வரசாங்கத்தில் பதவி வகித்தனர்.

மென்ஷிவிக்குகள்—ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் நிலவிய குட்டிமுதலாளித்துவ சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். 1903ல் ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கட்சியின் மத்திய உறுப்புகளுக்கான தேர்தலின் போது வி. இ. லெனின் தலைமையிலான புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளுக்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன; சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையினராக இருந்தனர். இதிலிருந்தே ''போல்ஷிவிக்குகள்'' (பெரும்பான்மையோர்) ''மென்ஷிவிக்குகள்'' (சிறுபான்மையோர்) எனும் பெயர்கள் தோன்றின.

மென்ஷிவிக்குகள் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் விவசாயி மக்களுடனை அதன் கூட்டணியையும் எதிர்த்தார்கள்; மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினருடன் உடன்பாடு வேண்டும் என்று கோரினார்கள். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவிகள் வகித்தார்கள், அதன் ஏகாதிபத்தியக் கொள்கையினை ஆதரித்தார்கள் மற்றும் ஆயத்தம் செய்யப்பட்டு வந்த சோஷலிஸ்டுப் புரட்சியை எதிர்த்தார்கள்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் சோவியத் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்க

முடன் சதிகளையும் கலகங்களையும் ஏற்பாடு செய்தார்கள், அவற்றில் பங்கு பற்றினர்கள்.—14.

5 **குலாக்குகள்** — ''ஊழியர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டோ அல்லது வட்டிக்குப் பணம் தந்தோ பிறர் உழைப்பைச் சுரண்டும் பணக்கார விவசாயிகள்'' (வி. இ. லெனின்).—15.

6 மின்பொறியாளர்களது எட்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் மாஸ்கோவில் 1921 அக்டோபர் 1—9 தேதி களில் நடைபெற்றது.—19.

7 **காடேட்டுகள் (அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சியினர்)**—ருஷ்யாவில் இருந்த மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க் கத்தினரின் முதன்மையான கட்சியினர். இக்கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சியின் இணக்கப்படுத்த முடியாத விரோதிகளாக முன்வந்தனர், ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் மற்றும் தலையீட்டாளர் கள் படையெடுப்புக்கள் அனைத்திலும் பங்கு பற்றினர் கள்.—21.

8 **க்ரன்ஷ்தாத் கலகம்**—இங்குகுறிப்பிடப்படுவது1921 பிப்ரவரி 28ல் க்ரன்ஷ்தாத் எனும் நகரத்தில் சோவியத் ஆட்சிக்கு எதிராகத் துவங்கிய எதிர்ப்புரட்சிக் கலகம். இதை வெண்படையினர்கள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகள், அராஜகவாதிகள் மற்றும் ஏகாதி பத்திய வல்லரசுகளின் கையாட்கள் ஏற்பாடு செய்தார் கள். இந்தக் கலகம் வர்க்க விரோதிகளின் புதிய போர்த் தந்திரத்தை வெளிப்படுத்தியது. ''கம்யூனிஸ்டுகள் இல்லாத சோவியத்துக்கள்'' என்ற கோஷத்தை வைத்து மக்கள் திரளை ஏமாற்றி ருஷ்யாவில் முதலாளித்துவத்தை மீட்டமைக்கும் தமது முயற்சியை இவர்கள் மூடிமறைக்க முயன்றார்கள். எதிர்ப்புரட்சியாளர்கள் கம்யூனிஸ்டுகளை சோவியத்துக்களின் தலைமையில் இருந்து அகற்றி, முதலாளித்துவ சர்வாதிகாரத்தையும் முதலாளித்துவ அமைப்பையும் மீண்டும் நிலைநாட்ட விரும்பினர்கள். மார்ச் 18ல் இக்கலகம் முற்றாக ஒடுக்கப்பட்டது.—21.

9 **பஸ்லேத்னியே நோவஸ்தி** (''கடைசிச் செய்தி'')—வெள்ளை

வெளியேறிகளின் தினசரி, எதிர்ப்புரட்சி அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சியின் ஏடு. *1920* ஏப்ரல் முதல் *1940* ஜூலை வரையில் பாரிசில் வெளிவந்தது. இதன் ஆசிரியர் பா. நி. மில்யுக்கோவ்.—*22*.

10 **கம்யூனிஸ்தீச்செஸ்கி த்ரூத்** (''கம்யூனிஸ்டு உழைப்பு'') —*1918* மார்ச் முதல் ரு. க. க. (போ.)இன் மாஸ்கோ கமிட்டி மற்றும் தொழிலாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத்தால் வெளியிடப்பட்டு வந்த தினசரி செய்திப் பத்திரிகை. இப்போது இது ''மாஸ்கோவ்ஸ்கயா பிராவ்தா'' (''மாஸ்கோ உண்மை'') எனும் பெயரில் வெளிவருகிறது.—*22*.

11 ஔ. பெபெலுக்கு பி. எங்கெல்ஸ் *1884* டிசம்பர் *11*ந் தேதி எழுதிய கடிதத்தை இங்கு வி. இ. லெனின் மனதிற் கொண்டிருந்தார்.—*23*.

12 கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசுக்கான போர்த்தந்திரங்கள் பற்றிய ஆய்வுரைகளை உருவரை செய்யும் பணி ரு. க. க. (போ.)இன் பிரதிநிதிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. *1921* ஜூன் *1*ந் தேதி கா. பெ. ராதெக், ஔ. தால்கெய்மர் மற்றும் பே. கூன் முன்மொழிந்த திருத்தங்களுடன் போர்த்தந்திரங்கள் பற்றிய ஆய்வுரைகளின் நகலையும் அவர்களால் எழுதிய ஆய்வுரைகளின் நகலையும் வி. இ. லெனினுக்கு அனுப்பி வைத்தார். இந்த நகல்களுக்கு லெனின் எழுதிய குறிப்புக்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

வி. இ. லெனினது நெறிமுறைகளுக்கு ஏற்ப கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்கள் பற்றிய இந்த நகல் ஆய்வுரைகள் திருத்தப்பட்டு, பல பிரதிநிதிக் குழுக்களுடன் பூர்வாங்கக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு, ருஷ்யப் பிரதிநிதிக் குழுவின் பேரால் மூன்றுவது காங்கிரசில் விவாதத்துக்கு வைக்கப்பட்டன. கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்களைத் தாங்கி ஆதரிக்கும் முகமாக வி. இ. லெனின் ஜூலை *1*ந் தேதி காங்கிரசில் உரையாற்றினர் (இத்தொகுதியின் பக்கங்கள் *31—48* பார்க்க).—*23*.

13 இங்கு குறிப்பிடப்படும் **பகிரங்கக் கடிதம்** (*Offener Brief*) ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சி, ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி, ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி மற்றும் எல்லாத் தொழிற்சங்கங்களுக்குமாக

ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியால் *1921* ஜனவரி *8*ந் தேதி *Die Rote Fahne* (''செங்கொடி'') எனும் பத்திரிகையில் வெளியிடப் பட்டது. பெருகி வரும் பிற்போக்கையும், உழைக்கும் மக் களின் ஜீவாதார உரிமைகளை எதிர்த்த மூலதனத்தின் தாக்குதலையும் எதிர்த்துப் போராடுவதற்குத் தமது சக்தி களை ஒன்றுசேர்க்கும்படி ஜெ. ஐ. க. க. இக்கடிதத்தில் எல்லா தொழிலாளர், தொழிற்சங்க மற்றும் சோஷலிஸ்டு அமைப்புகளையும் கேட்டுக்கொண்டது.—*26*.

14 ஜெ. க. தொ. க. (*Kommunistische Arbeiter Partei Deutschlands*) — ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி; *1919*ல் ஹெய்டல்பர்க் காங்கிரசில் ஜெர்மன் கம்யூ னிஸ்டுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ''இடது சாரி'' கம்யூனிஸ்டுகளைக் கொண்டு *1920* ஏப்ரலில் நிறுவப்பட்டது. *1920* நவம்பரில், ஜெர்மனியில் இருந்த எல்லாக் கம்யூனிஸ்டுச் சக்திகளையும் ஒன்றிணைப்பதை எளிதாக்கும் பொருட்டும் ஜெ. க. தொ. க. சிறந்த பாட்டாளிவர்க்க நபர்களின் நலன்களை காக்கவும் வேண்டி அது அனுதாப உறுப்பினர் உரிமைகளுடன் தற்காலிக மாக கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டது. ஆனால் ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமே அதிகார பூர்வமான பிரிவாக கம்யூனிஸ்டு அகி லத்தின் நிர்வாகக் கமிட்டியால் கருதப்பட்டது. ஜெ. க. தொ. க. கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்ட போது, ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர வேண்டும், அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆதரிக்க வேண்டும் எனும் நிபந்தனைகள் ஜெ. க. தொ. க. பிரதிநிதிகளிடம் முன்வைக்கப்பட்டன. ஜெ. க. தொ. க.இன் தலைமை கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் நெறிமுறைகளைப் பின்பற்றி நடக்கவில்லை. ஜெ. க. தொ. கட்சியை இன்னும் பின்பற்றி வந்த தொழிலாளர்களுக்கு வேண்டி கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் அதற்கு *2—3* மாதகால அவகாசம் அளித்து இந்தக் காலப்பகுதிக்குள் இது கட்சியின் காங் கிரசைக் கூட்டி ஒன்றிணைப்பது பற்றிய முடிவை எடுக்கும் படிக் கோரியது. ஜெ. க. தொ. க.இன் தலைமை மூன் றாவது காங்கிரசின் முடிவுகளைக் கடைப்பிடிக்கவில்லை, தொடர்ந்து பிளவுறுத்தும் செயல்களில் ஈடுபட்டிருந்தது. ஆகவே கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி அத

னுடனான தனது உறவுகளை முறித்துக் கொள்ள நேர்ந்தது. ஜெ. க. தொ. க. அகிலத்திலிருந்து வெளியில் விலகி இருந்தது. பின்னால் இக்கட்சி முக்கியத்துவம் இல்லாத ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்துக்கு விரோதமான ஒரு செக்டேரியன் பிரிவாகச் சீரழிந்தது, தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவை இழந்தது.—27.

15 இத்தாலியப் பிரச்சினை கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசின் முன் கொண்டுவரப்பட்டது. இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சியைக் கம்யூனிஸ்டு அகிலத்தில் இருந்து விலக்கியும், இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியை இத்தாலியில் நிலவும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏக பிரிவாக அங்கீகரித்தும், கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி எடுத்த முடிவை எதிர்த்து இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சி எழுப்பிய ஆட்சேபத்தைத் தொடர்ந்து இப்பிரச்சினை எழுந்தது. இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சியைப் பற்றி கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் பின்வரும் தீர்மானத்தை 1921 ஜூன் 29ந் தேதி நிறைவேற்றியது: ''ரெஜியோ-எமிலியாவில் நடைபெற்ற தான சீர்திருத்தவாதிகள் மாநாட்டில் கலந்து கொண்டவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் இக்கட்சியில் இருந்து விலக்கப்படாத வரை இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் பகுதியாக இருக்க முடியாது. இந்தப் பூர்வாங்க நிபந்தனை பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில், இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சி அதன் அணிகளில் இருந்து எல்லா சீர்திருத்தவாத மற்றும் மையவாத நபர்களையும் அகற்றிய பின்னால், இ. சோ. கட்சிக்கும் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும், இரு அமைப்புகளையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒற்றைப் பிரிவாக மாற்றவும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்படி அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியை அதிகாரப்படுத்தும்.'' கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசின் இந்த முடிவு அமுல்படுத்தப்படவில்லை.

1923 வசந்தத்தில் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் இணைந்து கொள்வதை ஆதரிக்கும் ''மூன்றாம் அகிலவாதிகளின்'' (ஜி. மெ. செராட்டி, மாஃபி மற்றும் பலர்) இடதுசாரிப் பிரிவு இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சிக்குள் உருவாயிற்று. 1924 ஆகஸ்டில் ''மூன்றாம் அகிலவாதிகள்'' இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இணைந்தனர்.—28.

16 இங்கு குறிப்பிடப்படுவது 1921 மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதமேந்திய போராட்டம் ஆகும்.

மக்கள் திரளினர் மத்தியில் பெருகி வரும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைக் கண்டு பீதியடைந்த ஜெர்மன் முதலாளி வக்ககம் புரட்சிகரப் பாட்டாளிகளின் முன்னணிப் படையினை ஓர் உரிய காலத்துக்கு முந்திய ஆயத்தங்கள் இல்லாத ஓர் ஆயுதமேந்திய போராட்டத்துக்குள் ஆத்திரமூட்டி இறங்கச் செய்யவும் அதன் வழி புரட்சிகரத் தொழிலாளி வர்க்க அமைப்புகளைத் தகர்த்தெறியவும் முடிவு செய்தது. மார்ச் 16ந் தேதி வேலைநிறுத்தங்களைத் தூண்டுவதாகச் சொல்லப்படும் குற்றவாளி நபர்களை எதிர்த்துப் போராடும் சாக்குப் போக்கில் சமூக-ஜனநாயகவாதியான பிரஷ்யன் போலீஸ் தலைமை அதிகாரி ஹோர்ஸிங் மத்திய ஜெர்மனியிலுள்ள ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் போலீஸ் பிரிவுகளை அனுப்பும்படி உத்தரவு பிறப்பித்தார். அரசாங்கத்தின் இந்த ஆத்திரமூட்டும் செயல் தொழிலாளர் மத்தியில் கோபாவேசத்தை ஏற்படுத்தியது, போலீசாருடன் மோதல்கள் நிகழ்ந்தன. ஜெர்மன் ஐக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியில் இருந்த இடதுசாரிப் பெரும்பான்மை, ''தாக்குதல் தத்துவம்'' (குறிப்பு 20 பார்க்க) எனப்படுவதில் இருந்து இயங்கத் தொடங்கி, தொழிலாளர்களை ஓர் அகாலப் புரட்சி எழுச்சியைத் தொடங்குமாறு தூண்டிவிட்டது. மார்ச் 17ந் தேதி ஜெ. ஐ. க. கட்சியின் மத்தியக் கமிட்டி ''பாட்டாளி வர்க்கம் போராட்டத்தை ஒத்துக்கொள்ள வேண்டும்'' எனும் முடிவை ஏற்று மத்திய ஜெர்மனி தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஒரு பொது வேலைநிறுத்தத்தைப் பிரகடனம் செய்யும்படி ஜெர்மன் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டது. இருப்பினும் பெரும்பான்மை தொழிலாளர்கள் போராட்டத்துக்கு ஆயத்தம் இன்றி இருந்தபடியால் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. மத்திய ஜெர்மனியில் மட்டுமே இந்தப் போராட்டம் ஓர் ஆயுதமேந்திய போராட்டமாக வளர்ந்தது. மார்ச் போராட்டத்தின் போது இளம் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி பல பிழைகளைப் புரிந்தது.

தொழிலாளர்கள் வீரஞ்செறிந்த முறையில் போராடிய போதிலும் மார்ச் எழுச்சி அடக்கப்பட்டது; கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிலாளி வர்க்கமும் கடும் தோல்விக்கு ஆளாயின. இந்தத் தோல்விக்கு ஒரு பிரதான

காரணம் சமூக-ஜனநாயகவாதிகளும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களின் தலைவர்களும் சக்திகளைப் பிளவு படுத்தவும் சிதறடிக்கவும் வேண்டிப் பின்பற்றி வந்த வஞ்சகமான கொள்கையாகும். பா. லெவீயின் சந்தர்ப்பவாதச் செயல்கள் மூலமும் இந்த எழுச்சிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் பெரும் அளவு பாதிப்பு ஏற்பட்டது. —*28.*

17 பெத்ரோகிராதில் *1917* ஜூலை *2—4 (16—17)* தேதிகளில் நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டங்களை லெனின் மனத்தில் கொண்டிருந்தார். போரில் தோல்வி கிடைக்கும் என்று தெரிந்தும் படைகளை அனுப்பிய இடைக்கால அரசாங்கத்தின் கொள்கையால் ஆத்திரமடைந்த படையாளிகள் கடற்படையினர் மற்றும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நாட்டில் புரட்சிகர நெருக்கடி இன்னும் முதிர்ச்சி அடையவில்லை என்று போல்ஷிவிக்குகளின் கட்சி கருதியதால் அச்சமயம் அது ஆயுதமேந்திய போராட்டத்தை எதிர்த்தது. இருப்பினும் போராட்டம் துவங்கி விட்டது; அதைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமல்ல. இடைக்கால அரசாங்கம் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்குத் தெரிந்தே அவர்களது ஒப்புதலுடன் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகத் துருப்புக்களை ஏவியது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஸ்தாபன ரீதியாக முறைப்படுத்தி நிறுத்த போல்ஷிவிக்குகளின் கட்சி முடிவு செய்தது. இது கட்சி எடுத்த விவேகமான முடிவு. இதன் மூலம் தக்க காலத்தில் பின்வாங்கிச் செல்வதற்கும் புரட்சியின் பிரதான சக்திகள் தோல்வியுருது பாதுகாக்கப்படவும் ஆவன செய்யக் கட்சிக்கு இயன்றது.—*30.*

18 கா. பெ. ராதெக்கால் முன்வைக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினை மீதான முதல் நகல் ஆய்வுரைகளின் பின்வரும் வாசகத்தை வி. இ. லெனின் மனத்தில் கொண்டிருந்தார் என்று தோன்றுகிறது: ''உண்மையிலேயே புரட்சிகரமான வெகுஜனக் கட்சிகளை மட்டுமே படைத்துருவாக்கக் கம்யூனிஸ்டு அகிலம் விரும்புகிறது என்று கண்ட அவை (பல நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருக்கும் மையவாதப் பிரிவுகள் என்று ராதெக் குறிப்பிடுபவை.—ப-ர்.) கம்யூனிஸ்டு அகிலம் செக்டேரியன் போக்கில் விழுந்து வருவதாக கூக்குரல் போடுகின்றன. இதையே ஜெர்மனி

யில் லெவீ கும்பலும், செக்கோஸ்லோவாகியாவில் ஷ்மெரால் கும்பலும் செய்து வருகின்றன. இந்தக் கும்பல்களின் தன்மை முற்றும் தெளிவானது. புரட்சியை நோக்கி செயலற்றுக் காத்துக் கிடக்கும் கொள்கையைக் கம்யூனிஸ்டு தொடர்கள் மற்றும் தத்துவங்கள் மூலம் திரையிட்டு மறைக்கும் மையவாதக் கும்பல்கள் இவை. பெரும்பான்மை செக்கோஸ்லோவாகியாவிலுள்ள தொழிலாளர்கள் ஒரு கம்யூனிஸ்டு நிலையை மேற்கொண்டுவிட்ட ஒரு சமயத்தில் ஷ்மெரால் கும்பல் செக்கோஸ்லோவாகியாவில் ஒரு கம்யூனிஸ்டுச் கட்சியை நிறுவும் வேலையை ஒத்திப் போட்டது'' (சோ. யூ. க. க. மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகத்தின் மத்தியக் கட்சி ஆவணக்கூடம்).—*30*.

19 இங்கு குறிப்பிடப்படுவது கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் ருஷ்யன் பிரதிநிதிக் குழு பிரேரேபித்த போர்த்தந்திரங்கள் மீதான நகல் ஆய்வுரைகளுக்கு ஜெர்மன், இத்தாலியன் மற்றும் ஆஸ்திரியன் பிரதிநிதிக் குழுக்கள் சமர்ப்பித்த திருத்தங்கள் ஆகும்.—*31*.

20 **தாக்குதல் போராட்டத் தத்துவம் அல்லது தாக்குதல் தத்துவம்** *1920* டிசம்பரில் நடைபெற்ற ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரிப் பிரிவின் ஒற்றுமைக் காங்கிரசில் பிரகடனம் செய்யப்பட்டது. புரட்சிகர நடவடிக்கைக்கு உரிய புறவய நிலைமைகள் இருக்கின்றனவா இல்லையா அல்லது தொழிலாளி வர்க்கத்தின் பெருந்திரள் கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிக்கிறதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் கட்சி தாக்குதல் போர்த்தந்திரங்களை நடத்திச் செல்ல வேண்டும் என்பதை முன் அனுமானித்தது. இந்தத் தத்துவத்துக்கு ஹங்கேரியா, செக்கோஸ்லோவாகியா, இத்தாலி, ஆஸ்திரியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்த ''இடதுசாரிகள்'' மத்தியில் ஆதரவாளர்கள் இருந்தார்கள் மற்றும் *1921* மார்ச்சில் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சி எழுச்சியின் தோல்விக்குரிய காரணங்களில் ஒன்ருகவும் இந்தத் தத்துவம் நிலவியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் இந்தத் ''தத்துவத்தின்'' ஆதரவாளர்கள், கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்கள் குறித்த தீர்மானங்களுக்கு இதை அடித்தளம் ஆக்குவதற்காகப் போராடி

ஞர்கள். இந்தத் ''தத்துவம்'' தவறனது சாகசத்தன்மை வாய்ந்தது என்று காங்கிரசில் தமது உரைகளில் நிரூபித்துக் காட்டினர் லெனின். பொறுமையாகத் தயாரிப்புகள் செய்து கொள்வது மற்றும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை கம்யூனிஸ்டு இயக்கத்தினை ஆதரிக்குமாறு செய்வது எனும் அவரது கொள்கை வழியைக் காங்கிரஸ் ஒப்புக் கொண்டது.—*38.*

21 **இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கட்சி** *1917* நவம்பர் *19—28* (டிசம்பர் *2—11*) தேதிகளில் நடைபெற்ற அதன் முதல் அகில ருஷ்யக் காங்கிரசில் ஸ்தாபன ரீதியாக நிறுவப்பட்டது. இதற்கு முன்னல் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் களது கட்சியின் இடதுசாரிப் பிரிவாக இருந்து வந்தார் கள். சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மிகப்பல முக்கியமான பிரச்சினைகளில் போல்ஷிவிக்கு களுடன் சேர்ந்து வாக்களித்தார்கள். இருப்பினும் சோவியத் அரசாங்கத்தில் அவர்களும் பங்கு பற்ற வேண் டும் எனும் போல்ஷிவிக்குகளின் யோசனையை நிராகரித் தார்கள். நீண்ட காலத் தயக்கத்துக்குப் பிறகு விவசாயி கள் மத்தியில் தமக்கிருந்த செல்வாக்கைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் போல்ஷிவிக்குகளுடன் உடன்பாட்டுக்கு வந்தார்கள். மக் கள் கமிசாரகங்களின் பல கூட்டுச் செயற்குழுக்களில் பொறுப்பேற்றுர்கள். போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைத்து வந்த அதேபோதில் சோஷலிஸ்டு நிர்மாணம் பற்றிய பெரும்பாலான பிரதான பிரச்சினைகளில் அவர்கள் வேறு பட்டதோடு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் எதிர்த்தார்கள். *1918* ஜனவரி மற்றும் பிப்ரவரியில் இடது சாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதை எதிர்த்துப் போராட்டம் துவங்கியது. *1918* மார்ச்சில் சோவியத்துக்களின் நாலாவது காங்கிரஸ் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டதை ஊர் ஜிதம் செய்த பின்னர் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சி யாளர்கள் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் இருந்து வெளியேறினர், ஆனல் மக்கள் கமிசாரகங்களின் கூட்டுச் செயற்குழுக்களிலும் வட்டார ஆட்சி உறுப்புகளிலும் தொடர்ந்து இருந்து வந்தார்கள்.

கிராமப் புறங்களில் சோஷலிஸ்டுப் புரட்சி பரவிய

தும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மத்தியில் சோவியத்-எதிர்ப்பு மனப்பாங்கு வளரத் தொடங்கியது. 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையைச் செயல் குலைக்கவும் சோவியத் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே ஒரு போரைத் தூண்டவும் கருதி மாஸ்கோவில் இருந்த ஜெர்மன் தூதரின் கொலைக்கு ஏற்பாடு செய்தது. அதோடு சோவியத் ஆட்சியை எதிர்த்து ஆயுதமேந்திய கலகம் தொடங்கியது. இந்தக் கலகம் அடக்கப்பட்ட பிறகு நடைபெற்ற சோவியத்துக்களின் ஐந்தாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் சோவியத்துக்களில் இருந்து தமது தலைவர்களின் கருத்துக்களை ஆதரித்து வந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களை விலக்க முடிவு செய்தது. மக்கள் திரளினரிடையே எவ்வித ஆதரவும் இல்லாத நிலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் சோவியத் ஆட்சிக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் பாதையை மேற்கொண்டனர்.—38.

22 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, நிர்ணயிக்கப்பட்ட தேதியில்—1917 நவம்பர் 12 (25)ல் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் நடைபெற்றன. அக்டோபர் புரட்சிக்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்ட பட்டியல்களுக்கு ஏற்பவும் இடைக்கால அரசாங்கம் ஏற்றுக்கொண்ட விதிமுறைகளுக்கு இணங்கவும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சோஷலிஸ்டுப் புரட்சியின் முக்கியத்துவத்தைப் பெருந்திரளான மக்கள் இன்னும் அறிந்தேற்றுக் கொண்டிராத ஒரு நேரத்தில் இத்தேர்தல்கள் நடந்தன. வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தலைநகர் மற்றும் தொழில் துறை மையங்களில் இருந்து தொலைவில் இருந்த பிரதேசங்களில் பெரும்பான்மை வோட்டுக்களைப் பெற்றுச் சமாளிக்க முடிந்தது. இந்த அரசியல் நிர்ணய சபை சோவியத் அரசாங்கத்தால் கூட்டப்பட்டு 1918 ஜனவரி 5 (18)ல் பெத்ரோகிராதில் ஆரம்பமாயிற்று. இந்த சபையின் எதிர்ப்புரட்சி பெரும்பான்மை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்ட ''உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' நிராகரித்ததாலும், சமாதானம், நிலம் மற்றும் சோவியத்துக்களுக்கு ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குதல் குறித்து சோவி

யத்துக்களின் இரண்டாவது காங்கிரசின் அரசாணைகளை ஏற்க மறுத்ததாலும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி ஜனவரி 6 (19) தேதிய அதன் அரசாணை மூலம் இந்த சபையைக் கலைத்து விட்டது.—*41.*

23 இங்கு குறிப்பிடப்படுவது, *1905* முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சி, *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சி மற்றும் *1917* அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி ஆகியவையாகும்.—*44.*

24 இங்கு குறிப்பிடப்படுவது *1921* ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை நடைபெற்ற ஆங்கிலச் சுரங்கத் தொழிலா ளர்களின் வேலைநிறுத்தமாகும். சுரங்க உடைமையாளர் கள் தொழிலாளர் கூலிகளைக் கணிசமாக வெட்டிக் குறைக்க முடிவு செய்ததைக் கண்டித்து இந்த வேலைநிறுத் தம் நடந்தது. பத்து லட்சம் பேருக்கு மேல் பங்கு பற்றிய இந்த வேலைநிறுத்தம் சுரங்கத் தொழிலாளர் அனைவரின் சர்வப்பொது வேலைநிறுத்தமாக இருந்தது. சுரங்கத் தொழிலாளர் சம்மேளனம் ஒருமைப்பாட்டைப் பிரகட னம் செய்து வேலைநிறுத்தம் செய்யும்படி போக்குவரத்து மற்றும் ரயில்வே தொழிலாளர் தொழிற்சங்கங்களின் நிர்வாகக் கமிட்டிகளுக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆனால் அவற்றின் சீர்திருத்தவாதத் தலைவர்கள் சுரங்கத் தொழிலாளர்களை ஆதரிக்கவில்லை. சமரசம் செய்து கொள்ள வேண்டி வேலைநிறுத்தத்தை உடைப்பதற்காக அவர்கள் அரசாங்கத்துடனும் சுரங்க உடைமையாளர் களுடனும் இரகசியமாகச் சமரசப் பேச்சுக்கள் நடத் தினர். மூன்று மாத கால வீரஞ்செறிந்த போராட்டத் துக்குப் பின் ஆங்கிலச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டியிருந்தது.—*45.*

25 **அவுகியஸ் லாயங்கள்**—கிரேக்கப் புராணக் கதையின் படி எலீஸ் மன்னனை அவுகியசின் குதிரை லாயங்கள் மிகப் பல ஆண்டுகளாகச் சுத்தம் செய்யப்படாமல் கிடந்த பின் முடிவில் ஹெர்க்குலஸ் வீரனால் சடுதியில் சுத்தம் செய்யப் பட்டன.

குப்பை சேர்ந்து அழுக்கடைந்துவிட்ட எதையுமோ, கவனியாது விடப்பட்டுக் கெட்டுப்போன காரியத்தையோ குறிக்கும் தொடர்.—*51.*

26 **நார்ட்ஸீஸ்**—கிரேக்கப் புராணக் கதையின் படி மிகவும் அழகான ஓர் இளைஞன். தனது சொந்த உருவத்தைக்

கண்டு அதன் மேல் காதலுற்ருன். இந்த உவமை தம்மை தாமே அளவுக்கு மேல் நேசிக்கும் நபர்களைக் குறிப்பிடுகிறது.

ஹாம்லெட்—பழங்கதை நாயகன். டேனிஷ் மன்னனின் புதல்வன், பைத்தியக்காரன் போல பாவனை செய்து தனது தந்தையான மன்னனைக் கொலை செய்து அரச பதவியைப் பறித்துக் கொண்டவனைப் பழிவாங்குகிருன். இதே பெயரிலான விலியம் ஷேக்ஸ்பியரின் பிரசித்திபெற்ற துன்பியல் நாடகத்தின் கதாநாயகன் என்ற முறையில் இவனது சித்திரம் உலகமெங்கும் தெரியவந்தது.

இந்தப் பெயர் உள் முரண்பாடுகளும் சமுசயங்களும் நிரம்பிய, தீர்மானகரமான செயல்களில் இறங்கும் திறனற்ற ஒரு நபரைக் குறிப்பிடும் பொதுத் தொடராகி விட்டது.—52.

27 இங்கு குறிப்பிடப்படுவது 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி முதல் 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி வரையிலான காலகட்டமாகும்.—52.

28 **பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை** சோவியத் ருஷ்யாவுக்கும் ஜெர்மன் கூட்டணி நாடுகளுக்கும் (ஜெர்மன், ஆஸ்திரோ-ஹங்கேரியா, பல்கேரியா, துருக்கி) இடையே 1918 மார்ச் 3ந் தேதி சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் கடுமையான நிபந்தனைகளின் கீழ் பிரேஸ்த்-லித்தோவ்ஸ்கில் செய்து கொள்ளப்பட்டது.—57.

29 **வெர்சேய் சமாதான ஒப்பந்தம்**—1914-18ல் நடைபெற்ற முதல் ஏகாதிபத்திய உலகப் போருக்கு முடிவு கட்டிய இந்த ஒப்பந்தம் ஒரு புறம் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் இவற்றுக்கும் போரின் போது இவற்றுடன் கூட்டு கொண்ட அரசுகளுக்கும், மறு புறம் ஜெர்மனிக்கும் இடையே 1919 ஜூன் 28ல் கையொப்பமிடப்பட்டது.

வெர்சேய் சமாதான ஒப்பந்தம் முதலாளித்துவ உலகு வெற்றி பெற்ற நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டதற்குச் சட்ட அந்தஸ்து அளிப்பதற்காகவும், சோவியத் ருஷ்யாவை நசுக்குவதற்கும் உலகெங்கும் புரட்சி இயக்கத்தைத் தோற்கடிப்பதற்கும் ஏற்றவாறு சர்வதேச உறவுகளின் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமே ஆகும் இது.—57.

30 **பாசெல் அறிக்கை** — 1912 நவம்பர் 24 — 25ல் பாசெல்

நகரில் நடைபெற்ற விசேஷ சர்வதேசச் சோஷலிஸ்டுக் காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் பற்றிய அறிக்கையாகும். இந்த அறிக்கை வரவிருக்கும் உலக ஏகாதிபத்தியப் போர் அபாயம் குறித்து மக்களை எச்சரித்தது, இந்தப் போரின் கொள்ளைக்கார நோக்கங்களை அம்பலப் படுத்தியது, மற்றும் சமாதானத்துக்காக வைராக்கிய முடன் போராடும்படியும், ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்திற்கு எதிராய்ப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாட்டின் வலிமையைச் செயல்படுத்தும்படியும்'' எல்லா நாடுகளின் தொழிலாளர்களையும் கேட்டுக் கொண்டது.—*60*.

31 *1875* மார்ச் *18—28*லும் *1884* டிசம்பர் *11*லும் பி. எங்கெல்ஸ் ஒள. பெபெலுக்கு எழுதிய கடிதங்கள்.—*66*.

32 பி. எங்கெல்ஸ், ''வெளியேறியோர் இலக்கியம்.''—*69*.

33 *1922* ஜனவரி *6*ந் தேதி, அன்டான்டு நாடுகளின் தலைமைக் கவுன்சில் மார்ச் மாதத் துவக்கத்தில் ஜெனோவாவில் (இத்தாலி) சோவியத் ருஷ்யாவின் பங்கேற்புடன் ஒரு சர்வதேச பொருளாதார மற்றும் நிதித்துறை மாநாட்டைக் கூட்ட முடிவு செய்தது. அன்டான்டு நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் ருஷ்யாவைப் பல அரசியல் மற்றும் பொருளாதாரச் சலுகைகளை வழங்கும் படி கட்டாயப்படுத்தலாம் என்றும் அதே சமயம் அதனுடன் பொருளாதார உறவுகளை நிறுவிக் கொள்ளலாம் என்றும் எதிர்பார்த்தனர். சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டால் வழிநடத்தப்பட்டும், முதலாளித்துவ நாடுகளுடன் அரசுறவுத்துறை மற்றும் பொருளாதார உறவுகளை நிறுவிக் கொள்வது அவசியம் என்று கருதியும் சோவியத் அரசாங்கம் இந்த மாநாட்டில் பங்கு கொள்ள ஒப்புக் கொண்டது.

ஜெனோவா மாநாடு *1922* ஏப்ரல் *10* முதல் மே *19* வரை நடைபெற்றது. கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், ஜப்பான், ஜெர்மனி மற்றும் சோவியத் ருஷ்யா உள்ளிட்ட *29* நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள். அமெரிக்கப் பிரதிநிதி ''பார்வையாளராக'' வந்திருந்தார்.

சமாதானத்தை வலுப்படுத்துவது, நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பு, சோவியத் ருஷ்யாவுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையே காரியகரமான

வாணிக உறவுகளை நிறுவிக் கொள்வது எனும் நோக்கமுடன் ஒரு விரிவான வேலைத்திட்டத்தை சோவியத் பிரதிநிதிக் குழு முன்வைத்தது. இந்த வேலைத்திட்டத்தில் ஒரு முக்கியமான இனம் சர்வப்பொதுவான படைக்கலக் குறைப்புப் பற்றிய பிரச்சினையாகும்.

மாநாட்டில் ஏகாதிபத்திய வல்லரசுகள் சோவியத் ருஷ்யாவின் பொருளாதார இடர்ப்பாடுகளைப் பயன்படுத்தி அதன் மீது ஒருதலைப்பட்சமான உடன்பாட்டைத் திணிக்க முயன்றன. போருக்கு முற்பட்ட காலத்திய கடன்கள் உட்பட ஜார் ஆட்சி கடன்கள் அனைத்தையும் திருப்பிச் செலுத்தும்படியும், தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களை அன்னிய உடைமையாளர்களுக்குத் திருப்பித்தரும்படியும் கோரின.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் நெறியாணைகளையும் லெனினிடமிருந்து வந்த நெறியுரைகளையும் கடைப்பிடித்து வந்த சோவியத் பிரதிநிதிக் குழு ஏகாதிபத்தியவாதிகளின் அட்டூழியத்தன்மை வாய்ந்த கோரிக்கைகளை ஆணித்தரமாக நிராகரித்ததோடு, சோவியத் அரசின் அரசுரிமை மீதான அவற்றின் அத்துமீறல்களுக்குப் பதிலடியும் கொடுத்தது. சோவியத் ருஷ்யா மீதான பிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் பகைமைப் போக்குக் காரணமாக இந்த மாநாடு தகர்வுற்றது. மே 19ந் தேதி அதன் கடைசி பிளீனம் அமர்வில் இந்த மாநாடு (சோவியத் ருஷ்யா மற்றும் மேலை வல்லரசுகளில் இருந்து) இரு நிபுணர் கமிஷன்களை நிறுவுவதென்றும் இக்கமிஷன்கள் 1922 ஜூன் மாதத்தில் ஹேக்கில் கூடி ஜெனோவா மாநாட்டில் தீர்வு காணப்படாத பிரச்சினைகளை மேலும் விவாதிக்கும் எனவும் முடிவு செய்தது.—79.

34 அயர்லாந்தின் புரட்சிகர தேசவிடுதலை இயக்கத்தை அடக்கும் நோக்குடன் லாயிட் ஜார்ஜ் தலைமையில் பிரிட்டிஷ் அரசாங்கம் 1920ஐ ஒட்டிய ஆரம்ப ஆண்டுகளில் பின்பற்றி வந்த ஒரு சில சலுகைகளை வழங்கும் கொள்கையை இங்கு வி. இ. லெனின் குறிப்பிடுகிறார். தேசவிடுதலைக்கான அயர்லாந்து மக்களின் நீண்டதும் பிடிவாதமானதுமான போராட்டம் 1920 டிசம்பர் 6ல் ஆங்கில-ஐரிஷ் உடன்படிக்கை ஏற்பட்டதோடு முடிவுற்றது. இந்த உடன்படிக்கை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் ஐரிஷ் டொமினியன் ஆட்சி நிறுவப்பட வகை செய்தது. அயர்லாந்தின் மிகவும் தொழில் வளர்ச்சி பெற்ற பகுதியான (அல்ஸ்டர்) ஆறு வடகிழக்கு மாவட்டங்கள் இந்த நாட்டிடமிருந்து

துண்டாடப்பட்டு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வைக்கப் பட்டன.—*80*.

35 *1922* பிப்ரவரி *15*ந் தேதிய கி. வ. சிச்சேரின் கடிதத்தின் வாசகத்திற்குக் கீழே இந்த தஸ்தாவேஜு எழுதப்பட் டிருக்கிறது. ஜெனேவா மாநாட்டுக்கு வரும் சோவியத் பிரதிநிதிக் குழு முன்வைக்கவிருந்த வேலைத்திட்டத்தின் தன்மை சம்பந்தமான ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் நெறியாண்மைகளையும், வி. இ. லெனினது நெறியுரைகளையும் மனதிற்கொண்டு சிச்சேரின் எழுதிய தாவது: '' 'ஆகவிரிவான வேலைத்திட்டத்துடன்' நாம் எப்படித் தாக்குப் பிடிக்கப் போகிறோம் என்பதை நான் அறியேன். எனது வாழ் நாள் முழுவதும் நான் குட்டிமுத லாளித்துவப் பிரமைகளைப் பழித்தே வந்திருக்கிறேன், இங்கு எனது வயதான காலத்தில் குட்டிமுதலாளித்துவப் பிரமைகளைப் புனையும்படி வைக்கிறது அரசியல் பியூரோ. அத்தகையவற்றை எப்படி உருவாக்குவது என்பதை நாம் எவருமே அறியோம், எந்த ஆதாரங்களை சார்ந்து நிற்பது என்பதைக் கூட நாம் அறியோம். நீங்கள் மேலும் விவர மான நெறிமுறைகளை வழங்குவீர்கள் என்று எதிர்பார்க் கிறோம்.''—*83*.

36 இங்கு குறிப்பிடப்படுவது, *1922* ஜனவரி *6—13* தேதி களில் நடைபெற்ற அன்டான்டு நாடுகளின் தலைமைக் கவுன்சிலின் கான் மாநாட்டுத் தீர்மானத்தில் அடங்கி யிருந்த நிபந்தனைகளாகும். இந்தத் தீர்மானத்தில் கூறப் பட்டபடி இவை நடைபெறவிருக்கும் ஜெனேவா சர்வ தேச பொருளாதார மற்றும் நிதித்துறை மாநாட்டின் வெற்றியை உத்தரவாதம் செய்வதற்குரிய நிபந்தனை களாகும். அன்னிய மூலதனம் ஏதேனும் ஒரு நாட்டுக்கு உதவி புரியும் போது அதன் முழுநிறைக் காப்பும் லாபங் களும் உத்தரவாதம் செய்யப்படுவதையும், சம்பந்தப் பட்ட நாட்டின் அரசாங்கத்தால் ஒப்பந்தம் செய்யப்படும் அல்லது உத்தரவாதம் செய்யப்படும் எல்லாக் கடன் களும் கடப்பாடுகளும் அங்கீகரிக்கப்படும், சொத்துப் பறி முதல் அல்லது கைப்பற்றல் மூலம் அன்னிய நலவுரிமை களுக்கு ஏற்படும் எல்லா நஷ்டங்களும் சேதங்களும் திருப்பித் தர, மீட்டளிக்க அல்லது ஈடு செய்யப்பட வேண்டும் எனும் கடப்பாடு அங்கீகரிக்கப்படுதல் இத் தியாதி இந்த நிபந்தனைகளால் முன் அனுமானிக்கப் பட்டது. இறுதியாக இந்த நிபந்தனைகள் அனைத்தையும்

சோவியத் அரசாங்கம் ஏற்றுக் கொண்ட பிறகு மட்டுமே அதை அங்கீகரிக்க முடியும் எனவும் இந்த நேசநாட்டு வல்லரசுகள் சாற்றின.—*84*.

37 பத் ஸ்னுமினெம் மார்க்சிஸ்மா (''மார்க்சியத்தின் கொடிக் கீழ்'')—ஒரு தத்துவவியல் மற்றும் சமூக-பொருளாதார சஞ்சிகை; 1922 ஜனவரி முதல் 1944 ஜூன் வரை மாத இதழாயும் (1933-35ல் இரண்டு மாதத்திற்கு ஒரு முறையும்) மாஸ்கோவில் வெளியிடப்பட்டது.—*88*.

38 மக்கள் சோஷலிஸ்டுகள் — துருதொவிக்கு மக்கள்-சோஷலிஸ்டுக் கட்சி என்கிற குட்டிமுதலாளித்துவக் கட்சியின் உறுப்பினர்கள். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் வலதுசாரியிடமிருந்து கிளைத்த கட்சி இது. 1906ல் மக்கள் சோஷலிஸ்டுகள் காடேட்டுகளுடன் கூட்டணி வேண்டும் என்றனர்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிற்பாடு இவர்கள் துருதொவிக்குகளுடன் சேர்ந்து முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை முனைப்புடன் ஆதரித்தனர், அதில் பதவிகள் வகித்தனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு எதிரான எதிர்ப்புரட்சி சதிகளிலும் ஆயுதமேந்திய நடவடிக்கைகளிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.—*89*.

39 இங்கு வி. இ. லெனின் இ. டித்ஸ்கென் எழுதிய பின்வரும் சொற்களைக் குறிப்பிடுகிறார்: '''கல்வி மற்றும் விஞ்ஞானம்' பற்றிய பகட்டோசையுடைய தொடர்களை மற்றும் முன்னாட்களில் சமயப்பற்றற்ற பாதிரிமார் அந்தக் காலத்தில் இயற்கை பற்றிக் கிட்டிய முதல் தகவலை வைத்துக் கொண்டு மக்களை ஏமாளிகளாக்கியது போன்று, இன்று போலி லட்சியவாதம் கொண்டு மக்களை ஏமாற்றி வரும் பட்டம் பெற்ற அடிவருடிகள் சாற்றி வரும் 'லட்சிய நன்மைகள்' பற்றிய உரைகளையும் நமது இதயங்களின் அடியாழத்தில் இருந்து வெறுக்கிறோம்.''—*90*.

40 பி. எங்கெல்ஸ், ''வெளியேறியோர் இலக்கியம்.''—*92*.

41 ருஷ்ய எழுத்தாளர் மி. யெ. சல்திக்கோவ்-ஷெத்ரீன் எழுதியுள்ள ''ஒரு நகரத்தின் கதை'' என்பதில் இருந்து வி. இ. லெனின் இந்தத் தொடரை எடுத்தாள்கிறார்.—*100*.

42 **எக்கனமீஸ்ட்** *(''பொருளியலாளன்'')—சோவியத் ஆட்சியதிகாரத்துக்குப் பகைமையாக இருந்த முன்னாள் ஆலை உடைமையாளர்கள், முதலாளித்துவத் தொழில்நுட்ப அறிவுத்துறையினர்களைக் கொண்டதான ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தின் தொழில் துறை, பொருளாதாரப் பிரிவால் வெளியிடப்பட்டு வந்த ஒரு சஞ்சிகை. இது 1921 டிசம்பர் முதல் 1922 ஜூன் வரையில் பெத்ரோகிராதில் வெளியிடப்பட்டது (முதல் இதழின் அட்டையில் 1922ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது).—101.*

43 *குறிப்பு 33 பார்க்க.—106.*

44 **இடதுசாரி கம்யூனிஸ்டுகள்**—*1918ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை (பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை) செய்து கொள்வது சம்பந்தமாய்த் தோன்றிய கட்சி-எதிர்ப்புக் கோஷ்டி. புரட்சி போர் என்பதான இடதுசாரிச் சொல்வீச்சுகளின் திரைமறைவில், இன்னும் ஒரு சேனையைப் பெற்றிராத இளம் சோவியத் குடியரசை ஏகாதிபத்திய ஜெர்மனியுடன் போரில் இழுத்துவிட்டு, நாசமடைந்துவிடும் அபாயத்துக்கு அதை உட்படுத்திய சாகசவாதக் கொள்கையை அவர்கள் கடைப்பிடித்தனர்.*

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஓராள் நிர்வாக முறையையும் தொழிலாளர் கட்டுப்பாட்டையும் எதிர்த்தார்கள்; தொழில் துறையில் முதலாளித்துவத் தொழில் நிபுணர்கள் உபயோகித்துக் கொள்ளப்படுவதை எதிர்த்தார்கள். லெனின் தலைமையில் இருந்த கட்சியானது இடதுசாரி கம்யூனிஸ்டுகளுடைய கொள்கைக்கு வைராக்கியமான எதிரடி கொடுத்தது.—115.

45 **ஏழை விவசாயிகளின் கமிட்டிகள்**—*1918 ஜூன் 11ந் தேதிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணையின் படி நிறுவப்பட்டன. இந்த ஏழை விவசாயிகளின் கமிட்டிகள் விவசாயிப் பண்ணைகள் உணவுப் பொருள் சப்ளையைக் கணக்கிடுதல், குலாக்குகள் உணவு சப்ளை மற்றும் உபரிகளை அம்பலப்படுத்தல், இந்த உபரிகளை எடுத்துக் கொள்ள சோவியத் உணவு அமைப்புகளுக்கு உதவுதல், இவ்வாறு எடுத்துக் கொள்ளப்பட்ட தானியத்தைப் பாதுகாத்து அனுப்பிவைத்தல், குலாக்குகள் பண்ணைகளில் இருந்து ஏழை மக்களுக்கு உணவு*

வழங்க ஏற்பாடு செய்தல், விவசாயப் பொருள் மற்றும் தொழில் துறைப் பண்டங்களை வினியோகித்தல் ஆகிய கடமைகளை நிர்வகித்து வந்தன. ஏழை விவசாயிகளின் கமிட்டிகளின் நடைமுறைப் பணிகள் கிராமப்புற வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் தழுவியதாக இருந்தன. —*132*.

46 தொழிலாளர் எதிர்ப்புக்குழு—ஒரு கட்சி-விரோத அராஜக-சிண்டிக்கலிஸ்டுத் தனிக் கோஷ்டி. இதற்கு அ. க. ஷ்லியாப்னிக்கவ், மெத்வேதெவ், அ. கொல்லந்தாய் ஆகியோர் தலைமை தாங்கினர். 1920 செப்டம்பரில் ரு. க. க. (போ.)இன் ஒன்பதாவது அகில ருஷ்ய மாநாட்டின் போது இது இந்த வாய்வீச்சுப் பெயருடன் முதலில் தோற்றமளித்தது. 1920-21ல் தொழிற்சங்கங்கள் பற்றிய விவாதம் நடைபெற்ற தருணத்தில் இந்தக் கோஷ்டி தனது இறுதி வடிவை மேற்கொண்டது. இதன் கருத்துக்கள் கட்சியில் நிலவிய அராஜக-சிண்டிக்கலிஸ்டுப் போக்கின் வெளியீடே. இக்கருத்துக்கள் ''தொழிலாளர் எதிர்ப்புக் குழு'' எனும் அ. கொல்லந்தாயின் சிற்றேட்டில் முழுமையாக விளக்கப்பட்டிருந்தன. இந்த சிற்றேடு ரு. க. க. (போ.)இன் பத்தாவது காங்கிரசின் போது பிரசுரிக்கப் பட்டது. இந்தத் ''தொழிலாளர் எதிர்ப்புக்குழு'' தேசப் பொருளாதாரம் அனைத்தின் நிர்வாகத்தையும் ''உற்பத்தியாளரின் அகில ருஷ்யக் காங்கிரசிடம்'' ஒப்படைத்துவிட வேண்டும் என யோசனை முன்வைத்தது. தொழிற்சங்கங்கள் நியமனம் செய்யும் வேட்பாளர்களை நிராகரிக்கும் அதிகாரம் கட்சி மற்றும் சோவியத் அமைப்புகளுக்கு இல்லாத வகையில் தேசப் பொருளாதாரத்தின் நிர்வாகத்திற்கான எல்லா அமைப்புகளும் முறையே பொருத்தமான தொழிற்சங்கங்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று இக்கோஷ்டி கோரியது. இந்தக் கோரிக்கைகள் உள்ளபடியே கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் சோஷலிஸ்டு நிர்மாணத்தின் பிரதான செயற்கருவி என்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் மறுதலிப்பதற்கு இட்டுச் சென்றன. ''தொழிலாளர் எதிர்ப்புக்குழு'' தொழிலாளி வர்க்கத்துக்குரிய ஆக உயர்ந்த நிறுவன ஒழுங்கமைப்பு வடிவம் தொழிற்சங்கங்களே அன்றி கட்சியல்ல என்பதாகக் கருதி இத் தொழிற்சங்கங்களை சோவியத் அரசுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் எதிர்ப்பாக வைத்தன.

''தொழிலாளர் எதிர்ப்புக்குழுவின்'' கருத்துக்களைப்

பிரசாரம் செய்வது கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினராக இருப்பதற்கு முற்றும் ஒவ்வாதது என்பதாக பத்தாவது கட்சிக் காங்கிரஸ் முடிவு செய்தது.—*136*.

47 கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் முதலாவது விரிவுபடுத்தப்பட்ட பிளீனம் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிக் குழுவின் பகுதி இங்கு குறிப்பிடப்படுகிறது என்று தோன்றுகிறது. இது ரு. க. க. (போ.)இன் புதிய பொருளாதாரக் கொள்கையின் சாரத்தையும் உட்பொருளேயும் புரிந்து கொள்ளத் தவறி புதிய பொருளாதாரக் கொள்கை ருஷ்யாவில் முதலாளித்துவத்தை மீட்டமைக்கவும், சர்வதேசப் புரட்சிகர இயக்கத்தைப் பலவீனப்படுத்தவும் இட்டுச் செல்வதாகக் குற்றம் சாட்டியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் முதலாவது விரிவுபடுத்தப்பட்ட பிளீனம் கூட்டம் *1922* பிப்ரவரி *21* முதல் மார்ச் *4* வரை மாஸ்கோவில் நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் பிரதான அம்சம் ஐக்கிய முன்னணிப் போர்த்தந்திரங்கள். ''சோவியத் ருஷ்யாவின் புதிய பொருளாதாரக் கொள்கை'' எனும் ஆய்வுரைகள் புதிய பொருளாதாரக் கொள்கையின் சரியான தன்மையையும் அதன் சர்வதேச முக்கியத்துவத்தையும் உறுதிப்படுத்தின. —*136*.

48 ''சோவியத் ருஷ்யாவில் புதிய பொருளாதாரக் கொள்கை'' எனும் ம. ரகோசியின் கட்டுரையினே இங்கு லெனின் குறிப்பிடுகிருர். இக்கட்டுரை *1921*ல் வியன்னுவில் வெளியிடப்பட்ட ஒட்டோ பௌவரின் *"Der neue Kurs" in Sowjetrussland* (''சோவியத் ருஷ்யாவில் 'புதிய பாதை' '') எனும் சிற்றேட்டைப் பகுப்பாய்வு செய்தது. ரகோசியின் கட்டுரை ''கம்யூனிஸ்டு அகிலம்'' சஞ்சிகையில் (இதழ் *20*ல்) *1922* மார்ச்சில் வெளிவந்தது.

கம்யூனிஸ்டு அகிலம் சஞ்சிகை—கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் ஏடு. இது ருஷ்யன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிஷ் மற்றும் சீன மொழியில் வெளிவந்தது. முதல் இதழ் *1919* மே *1*ந் தேதி பிரசுரமாயிற்று. கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலேத்து விடுவது என்று *1943*மே *15*ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு எடுத்த முடிவின் தொடர்பாக இதன் வெளியீடு *1943* ஜூன் முதல் நிறுத்தப்பட்டது.—*139*.

49 வெளியேறிய போல்ஷிவிக்குகள் மற்றும் மென்ஷிவிக்குகளுக்கு இடையிலான போராட்டம் இங்கு குறிப்பிடப்பட்டது.—*140*.

50 கலப்புக் கம்பெனிகள் பற்றிய கமிஷன் இங்கு குறிப்பிடப்பட்டது. இது உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலின் கீழ் கி. யா. சகோல்னிக்கவ் தலைமையில் *1922* பிப்ரவரியில் நிறுவப்பட்டது.—*141*.

51 வடக்கு வெட்டுமர டிரஸ்டு (Severoles) என்பது வடக்கு வெண்கடல் பகுதியில் வெட்டுமரத் தொழிலில் நிறுவப்பட்ட விசேஷ நிர்வாக அமைப்பாகும். இது *1921*ல் ஸ்தாபிக்கப்பட்டது.—*141*.

52 ஒப்லோமவ் போக்கு—ருஷ்ய எழுத்தாளர் இ. அ. கன்சரோவ் எழுதியுள்ள நவீனத்தில் வரும் ஒப்லோமவ் எனும் நிலப்பிரபுவின் பாத்திரத்தில் இருந்து பெறப்பட்டது. ஒப்லோமவ் எனும் பெயர் மடிமை, தேக்கம் மற்றும் செயலின்மையைக் குறிக்கும் சொல்லாகி விட்டது.—*142*.

53 தலைமை வற்புறுத்தாளர்—*1917* கோடையில் போர்முனையில் பயணம் செய்த போது எதிர்த்தாக்கு தொடங்கும்படி படையாளிகளைத் தூண்ட முயன்றதற்காக இடைக்கால அரசாங்கத்தின் ராணுவ மற்றும் கடற்படை அமைச்சர் அ. ஃபி. கேரென்ஸ்கிக்குப் படையாளிகள் கொடுத்த கேலிப் பெயர்.—*143*.

54 ஸ்மேனு வேஹ்வாதிகள்—வெளியேறிச் சென்ற ருஷ்யன் வெள்ளை (பிற்போக்கு) அறிவுஜீவிகள் மத்தியில் *1921*ல் எழுந்த சமூக-அரசியல் போக்கின் பிரதிநிதிகள். சோவியத் ருஷ்யாவில் தங்கிவிட்ட பழைய முதலாளித்துவ அறிவுஜீவிகளில் சிலரும் இவர்களுக்கு ஆதரவளித்தனர். இந்தப் பெயரை அவர்கள் ''ஸ்மேனு வேஹ்'' (''யுக மாற்றம்'') எனும் தலைப்பில் வெளியான கட்டுரைத் தொகுப்பில் இருந்து பெற்றார்கள். இத்தொகுப்பு *1921*ல் பிராகில் வெளியிடப்பட்டது. இந்த ''ஸ்மேனு வேஹ்''வாதிகளின் சித்தாந்தவாதிகள் அரசியல் சட்ட-ஜனநாயகவாதப் போக்குடைய வெள்ளை வெளியேறிகள் ஆவர். அவர்கள் பாரிசில் *1921* அக்டோபர் முதல் *1922* மார்ச் வரையில் ''ஸ்மேனு வேஹ்'' எனும் சஞ்சிகையைப் பிரசுரம் செய்தார்கள். இந்த ''ஸ்மேனு வேஹ்''வாதிகள் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு மாறிச் செல்வதை சோவியத்

ஆட்சியின் முதலாளித்துவ மீட்டமைப்புக்கான பரிணமம் என்று கருதி, சோவியத் அரசு ஒரு முதலாளித்துவக் குடியரசாகச் சீரழியும் என்ற நம்பிக்கையில் அதனுடனை தமது ஒத்துழைப்பை வழங்கினர்கள். எனினும் அவர்களில் சிலர் சோவியத் ஆட்சியதிகாரத்துடன் விசுவாசமாக ஒத்துழைக்க முன்வந்தனர்.

பின்னட்களில் அவர்களில் பெரும்பாலோர் எதிர்ப்புரட்சியாளர்களுடன் பகிரங்கமாகச் சேர்ந்து கொண்டார்கள்.—**145.**

55 வி. இ. லெனினது உடல்நலம் மோசமானதை ஒட்டி அவருக்கு **1921** டிசம்பர் முதல் ஓய்வு தரப்பட்டது.—**157.**

56 **அன்டான்ட்** (''முக்கூட்டு கூட்டணி'') — பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜாராட்சி ருஷ்யாவின் ஏகாதிபத்தியக் கூட்டு. முதல் உலகப் போரின் போது அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி மற்றும் இதர பல அரசுகள் இந்தக் கூட்டணியில் சேர்ந்து கொண்டன.—**158.**

57 இங்கு குறிப்பிடப்படுவது பொறுப்பான அலுவலர்களின் ஜனக் கணிப்புப் பற்றிய தகவல். இது **1921** ஜூலையில் நடத்தப்பட்டது. குபேர்னியா, உயெஸ்து மையங்களில் இருக்கும் கட்சி பொறுப்பான ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் திறனைக் கண்டறியவும், அவர்களது பிரதேச வாரி வினியோகம் மற்றும் அவர்களது வேலைக்குரிய தகுதி பற்றி அறிந்து கொள்ளவும் இது நடத்தப்பட்டது.—**159.**

58 **கட்சி வரலாறு பற்றிய கட்சிக் கமிஷன்**—அக்டோபர் புரட்சியின் வரலாறு மற்றும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு குறித்த விவரப் பொருள்களைத் திரட்டி ஆராய்வதற்கான கமிஷன். இது **1920** செப்டம்பர் **21**ல் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் அரசாணை மூலம் கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தில் நிறுவப்பட்டது.—**169.**

59 இங்கு குறிப்பிடப்படுவது தனேத்ஸ்க் பிரதேசத்திலுள்ள மத்திய நிலக்கரித் தொழில் துறை போர்ட். இந்த போர்டின் தலைவரான கி. லி. பியத்தக்கோவ் வெறும் கட்டாய உத்தரவுகள் கொண்ட நிர்வாகக் கொள்கையினைக் கையாண்டார், இந்தத் தொழில் துறையை நிர்வகிப்பதில் இராணுவ-அதிகாரவர்க்கப் பாணி முறைகளைப் பயன்படுத்

தினர். இவையாவும் தலைமைப் பொருளாதார அலுவலர்கள் இடையிலும் மத்திய நிலக்கரித் தொழில் துறை போர்ட் மற்றும் ஸ்தல ஊழியர்கள் இடையேயும் வேறுபாடுகளுக்கு இட்டுச் சென்றன. 1921 டிசம்பர் 9 முதல் 13 வரை நடைபெற்ற உக்ரேன் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) இன் ஆறும் மாநாட்டில் தனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசம் மற்றும் இதர அமைப்புகளின் பிரதிநிதிகள் பியத்தக்கோவின் வேலை முறைகளை உறுதியுடன் கண்டனம் செய்தனர்.—169.

60 இராணுவ சேவைக்கான காலத்தை வரையறுக்கும் சட்டம் பற்றிய விவாதத்தின் தொடர்பாக ழான் ரெனுல்ட் (Renault) ஆற்றிய உரை இங்கு குறிப்பிடப்படுகிறது.—172.

61 மத்திய சரிபார்ப்புக் கமிஷன் 1921 ஜூலை 25ந் தேதி, கட்சி களையெடுப்புக் காலகட்டத்தில் ஸ்தல சரிபார்ப்புக் கமிஷன்களின் வேலையை நெறியாக்கம் செய்வதற்காக ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியால் நிறுவப்பட்டது.—180.

62 செஞ்சேனை மற்றும் கடற்படைக்கான சப்ளை சம்பந்தமான தொழிலாளர், விவசாயிகளின் தற்காப்புக் கவுன்சிலில் விசேஷ அதிகாரம் பெற்றவர் என்ற பதவி 1919 ஜூலை 8ந் தேதிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணையால் நிறுவப்பட்டது. 1921 ஆகஸ்ட் 16ந் தேதிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி அரசாணையால் இந்த நிர்வாக இயந்திரம் கலைக்கப்பட்டது. இதன் அலுவலர்கள் மற்றும் சொத்துக்கள் உயர் பொருளாதாரக் கவுன்சில் அமைப்புகள் வசம் ஒப்படைக்கப்பட்டன.—183.

63 உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சில் 1918 நவம்பர் முதல் இயங்கி வந்த பாதுகாப்புக் கவுன்சிலில் இருந்து ஏப்ரல் 1920 உருவாக்கப்பட்டது. சோவியத்துக்களின் எட்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் (டிசம்பர் 1920) முடிவின்படி இந்தக் கவுன்சில் மக்கள் கமிசார்களின் கவுன்சில் கமிஷனின் உரிமைகளுடன் செயல்படத் தொடங்கியது. இதன் பிரதான பணி பொருளாதார நிர்மாணம் சம்பந்தமான வாரியங்கள் அனைத்தின் வேலைகளையும் ஒருமுகப்படுத்துவதாகவும். இது 1937 வரை நிலவியது.—184.

64 பிராந்தியப் பொருளாதார மாநாடுகள் (அல்லது கவுன்சில்கள்)—*1921 துவக்கத்தில் நிறுவப்பட்ட உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலின் உள்ளூர் அமைப்புகள். எல்லா உள்ளூர் பொருளாதார அமைப்புகளையும் பிராந்தியப் பொருளாதார மாநாடுகளையும் ஒருமுகப்படுத்தி வலுப் படுத்தும் நோக்கத்துடன் இவை நிறுவப்பட்டன. இந்தப் பொருளாதாரக் கவுன்சில்களின் பிரதான பணிகள் பின்வருமாறு: எல்லா உயர் அமைப்புகளின் பொருளா தாரப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட முடிவுகள் காலா காலத்தில் திட்டவட்டமாக நிறைவேற்றப்படுவதைக் கண் காணிப்பது, பிரதேசப் பொருளாதாரத் திட்டங்களை உரு வாக்கி ஒருமுகப்படுத்தி அவற்றின் நிறைவேற்றத்தைக் கண்காணித்தல், பொருளாயத வளங்களைச் சரியானபடிப் பயன்படுத்தல், ஸ்தல முன்முயற்சியை ஊக்குவித்தல்.—184.*

65 *லெனின் ஒருவேளை 1922 பிப்ரவரி 20ல் ரு. க. க. (போ.) இன் மத்தியக் கமிட்டியால் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்ட மியஸ்னிக்கோவ் மற்றும் ரு. க. க. (போ.)இன் பதினொன்றாவது காங்கிரசால் கட்சியில் இருந்து விலக்கப் பட்ட மீத்தின் மற்றும் குஸ்நெத்சோவை மனத்திற் கொண்டிருந்தார் போலும்.—186.*

66 (பழைய) இஸ்க்ரா *(''தீப்பொறி'') — 1900ஆம் ஆண்டில் வி. இ. லெனினால் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது அகில ருஷ்ய சட்டவிரோத மார்க்சியச் செய்திப் பத்திரிகை. இது ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மார்க்சியக் கட்சியைப் படைத்துருவாக்குவதில் தீர்மான கரமான பங்கு வகித்தது.*

1903 ஜுலை—ஆகஸ்டில் நடந்த கட்சியின் இரண் டாவது காங்கிரசுக்குப் பிறகு உடனடியாக கி. வ. பிளெ ஹானவ் ஆதரவுடன் மென்ஷிவிக்குகள் ''இஸ்க்ராவைக்'' கைப்பற்றிக் கொண்டார்கள். ''இஸ்க்ராவின்'' 52ஆம் இதழ் தொட்டு அது புரட்சிகர மார்க்சியத்தின் ஏடாக இருப்பதும் முடிவடைந்தது.—190.

67 *இங்கு குறிப்பிடப்படுவது 1903 ஜுலை 17 முதல் ஆகஸ்டு 10 (ஜுலை 30 முதல் ஆகஸ்டு 23 வரை) வரையில் நடை பெற்ற ரு. ச. ஜ. தொ. க. இரண்டாவது காங்கிரசாகும். இந்தக் காங்கிரசின் முதல் 13 அமர்வுகள் பிரஸ்ஸெல்சில் நடைபெற்றன. பிறகு போலீஸ் அடக்குமுறை வேட்டை* காரணமாக காங்கிரஸ் அமர்வுகள் லண்டனுக்கு மாற்றப்

பட்டன. 26 அமைப்புகளைச் சார்ந்த 43 பிரதிநிதிகள் காங்கிரஸ் பணிகளில் கலந்து கொண்டார்கள்.—*193*.

68 இங்கு குறிப்பிடப்படுவது தென்னுப்பிரிக்கத் தொழிலாளர்கள் எழுச்சியாகும். இது 1922 மார்ச் மாதம் ஜோகான்ஸ்பர்க், பெனேனி மற்றும் பிரான்பான் நகரங்களில் நடைபெற்றது.

உலக மார்க்கெட்டில் தங்கத்தின் விலை வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து சுரங்க உடைமையாளர்கள் தமது லாபங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஐரோப்பாவிலிருந்து வந்த தொழிலாளர் சம்பளங்களை வெட்டிக் குறைத்தார்கள். திரளான தொழிலாளர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டனர். இதன் தொடர்பாக ஜனவரி 9, 1922ல் தங்கவயல் பகுதிகளில் வேலைநிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டது. மார்ச் மாதத்தில் இந்த வேலைநிறுத்தம் ஓர் எழுச்சியாகப் பொங்கி வளர்ந்தது. பெனேனி மற்றும் பிரான்பான் நகர்களும் ஜோகான்ஸ்பர்க் நகரின் தொழிலாளர் வட்டாரங்களும் தொழிலாளர் கரங்களில் இருந்தன. தென்னுப்பிரிக்காவின் இளம் கம்யூனிஸ்டுக் கட்சி இந்த எழுச்சியில் தீவிரமான பங்கு பற்றியது. வேலைநிறுத்தத் தலைவர்களான ஃபிஷர் மற்றும் ஸ்பெண்டிஃப் உள்ளிட்ட பல கம்யூனிஸ்டுகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் வீரமுடன் போராடி உயிர்த் தியாகம் செய்தனர். மார்ச் 10ந் தேதி ஜெனரல் ஸ்மட்சின் பிற்போக்கு அரசாங்கம் இந்த நகரங்களில் இராணுவச் சட்டம் போட்டு எழுச்சியாளர்களுக்கு எதிராக படைகளை அனுப்பியது, பீரங்கிகள் மற்றும் போர் விமானங்களையும் ஏவியது. மார்ச் 14ல் இந்த எழுச்சி அடக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட பேர் அரசாங்கத்தால் கொடுமையாக நடத்தப்பட்டனர்: 10,000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர், ஆயிரக் கணக்கான தொழிலாளர் மீது இராணுவ வழக்குத் தொடுக்கப்பட்டது.—*194*.

69 சார்ட்டிசம் (Chartism) — வரலாற்றில் முதல் தடவையாக 19ஆம் நூற்ருண்டின் 30 மற்றும் 40 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் தோன்றிய வெகுஜன இயக்கம். இந்த இயக்கத்தில் பங்கு பற்றியவர்கள் மக்கள் உரிமைகள் பற்றிய ஒரு சாசனத்தை (charter) வெளியிட்டார்கள் (இதிலிருந்தே ''சார்ட்டிஸ்டுகள்'' எனும் பெயர் ஏற்பட்டது). சர்வஜன வாக்குரிமை, நாடாளுமன்றப் பிரதிநிதிகளாவதற்கு நிலச் சொத்து

யோக்கியதாம்சத்தை ரத்துச் செய்தல் ஆகிய கோரிக்கைகள் இதிலடங்கும். இந்த இயக்கத்தின் சார்பில் நாடு முழுவதும் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன, பல லட்சக் கணக்கான தொழிலாளர், கைவினைஞர் இவற்றில் கலந்து கொண்டார்கள்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்த மக்கள் உரிமை சாசனத்தை ஏற்க மறுத்தது, சார்ட்டிஸ்டுகள் விண்ணப்பத்தை நிராகரித்தது. சார்ட்டிஸ்டுகள் மீது கடுமையான அடக்கு முறையை அரசாங்கம் ஏவி விட்டது, இதன் தலைவர்களைக் கைது செய்தது. இயக்கம் ஒடுக்கப்பட்டது. ஆனால் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியில் சார்ட்டிசத்தின் செல்வாக்கு மகத்தானதாக விளங்கியது.—*194*.

70 ரு. சோ. சோ. கூ. கு., உக்ரேனியன் சோ. சோ. கு., பெலோருஷ்யன் சோ. சோ. கு., அஸர்பெய்ஜான் சோ. சோ. கு., ஜார்ஜிய சோ. சோ. கு. மற்றும் அர்மீனிய சோ. சோ. கு. ஆகியவற்றிடையே பரஸ்பர உறவுகளை மேலும் வளர்த்துக் கொள்வது பற்றிய பிரச்சினை குறித்து மத்தியக் கமிட்டியின் ஒரு பிளீனம் கூட்டத்துக்குத் தயாரிப்புகள் செய்ய வேண்டிய ஒரு கமிஷனை 1922 ஆகஸ்டு 10ந் தேதி ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ நிறுவியது. ''ரு. சோ. சோ. கூ. கு. மற்றும் சுயேச்சைக் குடியரசுகளின் பரஸ்பர உறவுகள் பற்றிய'' ஆரம்ப நகல் தீர்மானம் இ. வி. ஸ்தாலினால் உருவரை செய்யப்பட்டது. அது ''தன்னாட்சிமயமாக்கல்'' எனும் கருத்தை, அதாவது சோவியத் தேசியக் குடியரசுகள் ரு. சோ. சோ. கூ. கு.இல் தன்னாட்சிக் கூறுகளின் உரிமைகளுடன் ஒன்றுசேருவது எனும் கருத்தை வைத்துச் செயல்பட்டது. செப்டம்பர் 23—24ல் இந்தக் கமிஷன் இ. வி. ஸ்தாலினது தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.

செப்டம்பர் 25ந் தேதி இந்தக் கமிஷனின் விவரங்கள் யாவும் கோர்க்கியில் இருந்த வி. இ. லெனினுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றைப் படித்தறிந்து கொண்ட பின்னர் லெனின் செப்டம்பர் 26ல் ஸ்தாலினுடன் உரையாடினார், அதன் பின் அவர் அரசியல் பியூரோ உறுப்பினர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதம் இங்கு வெளியிடப்பட்டுள்ளது.

வி. இ. லெனினது நெறிமுறைகளின்படிச் செயல்பட்ட இந்தக் கமிஷன் சோவியத் குடியரசுகளின் ஒன்றியம் குறித்த ஒரு புதிய நகல் தீர்மானத்தை வகுத்தது.

இந்த நகல் தீர்மானம் 1922 அக்டோபர் 6ல் ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டத்தில் விவாதிப்பதற்கென சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நகலை ஒரு நெறியாணையாக ஏற்றுக் கொண்ட இந்தப் பிளீனம் கூட்டம் ரு. சோ. சோ. கூ. கு. மற்றும் உக்ரைன், பெலோருஷ்யா, அஸர்பெய்ஜான், ஜார்ஜியா மற்றும் அர்மீனிய சோவியத் குடியரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்டதான கமிஷனை நிறுவி, இந்த நகல் அடிப்படையில் ஒரு மசோதாவை உருவரை செய்து சோவியத்துக்களின் காங்கிரசுகளால் இது அங்கீகரிக்கப்படுவதை உத்தரவாதம் செய்வதற்கான பொறுப்பை அதனிடம் ஒப்படைத்தது.

1922 டிசம்பர் 30ல் நடைபெற்ற சோவியத் யூனியன் சோவியத்துக்களின் முதல் காங்கிரஸ், மக்களினங்களின் சமத்துவம் மற்றும் சகோதர ஒத்துழைப்பு ஆகிய லெனினது கருத்துக்கள் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் எனும் கருத்தை அடிப்படையாக்கிய பிரகடனத்தையும், சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசுகளின் ஒன்றியத்தின் உருவாக்கம் மீதான ஒன்றிய உடன்படிக்கையையும் ஒருமுகமாக அங்கீகரித்தது (மேலும் ''தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது 'தன்னாட்சிமயமாக்கல்' '' எனும் லெனின் கடிதத்தைப் பார்க்க: இத்தொகுதியின் பக்கங்கள் 272-282).—197.

71 அயல் துறை வாணிகத்தில் அரசு ஏகபோகம் 1918 ஏப்ரல் 22ல் மக்கள் கமிசார்களின் கவுன்சில் அரசாணை வாயிலாக நிலைநாட்டப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கைக்கு மாறிச் செல்வது மற்றும் அயல் நாடுகளுடன் வாணிக உறவுகளை விரிவாக்குதல் தொடர்பாக கட்சியின் சில தலைவர்கள் அயல் துறை வாணிகத்திலான அரசு ஏகபோகத்தை ஒழிப்பது அல்லது பலவீனப்படுத்துவது என்னும் நிலையை மேற்கொண்டார்கள். வி. இ. லெனின் இத்தகைய யோசனைகளை உறுதியாக எதிர்த்தார்.

1922 அக்டோபர் 5—6ல் நடந்த ரு. க. க. (போ.) இன் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டம்—இதில் லெனின் கலந்து கொள்ளவில்லை—தனது அக்டோபர் 6ந் தேதி அமர்வில் அயல் துறை வாணிகத்தில் அரசு ஏகபோகத்தைப் பலவீனப்படுத்துவது குறித்த ஒரு முடிவை கி. யா. சகோல்னிக்கவ் அறிக்கை மீது எடுத்தது. இது அயல்துறை வாணிபத்திலான அரசு ஏகபோகத்தைத் தடங்கல் செய்து பாதிக்கும் என்று கருதி வி. இ. லெனின்

பிளீனம் கூட்டத்தின் முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. தமது கடிதத்தில், இது இங்கு வெளியிடப்பட்டுள்ளது, கட்சி மத்தியக் கமிட்டியின் அடுத்த பிளீனம் கூட்டம் வரை இரண்டு மாதங்கள் இப்பிரச்சினையை முடிவு செய்வதை ஒத்திவைக்கும்படி லெனின் பிரேரேபித்தார். மத்தியக் கமிட்டி இந்த யோசனையை ஏற்றுக் கொண்டது. —*201*.

72 அக்டோபரில் நடைபெற்ற முந்திய பிளீனம் கூட்டத்தின் முடிவைத் தள்ளுபடிச் செய்தும், ''அயல்துறை வாணிகத்தில் அரசு ஏகபோகத்தைப் பேணிக்காத்து அதை ஸ்தாபன ரீதியாக வலுப்படுத்துவது நிச்சயமாயும் அவசியம்'' என்பதை ஊர்ஜிதம் செய்தும், மத்தியக் கமிட்டியின் டிசம்பர் பிளீனம் கூட்டம் ஒருமனதான முடிவை நிறைவேற்றியது. இருந்த போதிலும் அயல்துறை வாணிகத்தில் அரசு ஏகபோகம் சம்பந்தமான பிரச்சினைக்கு லெனின் மிகவும் முக்கியத்துவம் அளித்திருந்தபடியால், நடைபெறவிருக்கும் சோவியத்துக்களின் பத்தாவது அகில ருஷ்யக் காங்கிரசின் போது கம்யூனிஸ்டுப் பிரிவுக்கு இது பற்றிய தகவல் அளிக்கப்பட வேண்டும் எனவும், இது பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரசில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் யோசனை கூறினர். லெனினது நெறிமுறைகளுக்கு ஏற்பச் செயல்பட்ட, 1923 ஏப்ரல் 17 முதல் 25ந் தேதி வரை நடைபெற்ற பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரஸ் இப்பிரச்சினையைப் பரிசீலனை செய்தது. ரு. க. க. (போ.) இன் மத்தியக் கமிட்டியின் அறிக்கை மீது நிறைவேற்றப்பட்ட இக்காங்கிரசின் தீர்மானம் கூறியதாவது: ''அயல்துறை வாணிபத்திலான அரசு ஏகபோகம் மாற்றவொண்ணுதது எனவும், இதைப் புறக்கணிப்புச் செய்யவோ அல்லது இதை அமுல்படுத்துவதில் தடுமாற்றம் காட்டவோ எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் இந்தக் காங்கிரஸ் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. அயல்துறை வாணிகத்திலான அரசு ஏகபோகத்தை வலுப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் முறையான நடவடிக்கைகளை எடுக்கும்படி புதிய மத்தியக் கமிட்டிக்கு நெறியுரை வழங்கப்படும்.''—*206*.

73 **கட்டற்ற வாணிகம்,** அதாவது கட்டற்ற வாணிகம், நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் அரசின் தலையீடின்மை எனும் கோரிக்கைகளை முன்வைத்த முதலாளித்துவ வர்க்

கத்தின் பொருளாதாரக் கொள்கையாகும். 19ஆம் நூற்ருண்டில் இந்தக் கோஷத்தை சமூக வாய்ச்சவடால் என்ற முறையில் ஆங்கில நாட்டு கட்டற்ற வாணிகர்கள் பயன் பரவலாகப் படுத்திஞர்கள். பெரிய நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளர் பெருந்திரளினர் ஆதரவைப் பெறும் முயற்சியில் கட்டற்ற வாணிகம் எனும் கோஷத்தின் ஆதரவாளர்கள் கட்டற்ற வாணிகம் உழைக்கும் மக்களின் நிலைமைகளை மேம்படுத்தும் என்று வலியுறுத்தினர். இந்தத் துணிபுரைகள் முற்றிலும் ஆதாரமற்றவை எனவும் ''கட்டற்ற வாணிகம் எனும் கோஷத்தின் சாதாரண ஆதரவாளர் தமது எல்லா கருத்துக்களையும் எண்ணங்களையும், மூலதனம் மற்றும் கூலி உழைப்பு என்பதை அடிப்படையாக்கிய ஒரு சமுதாயத்தை நிர்ணயம் செய்யும் தன் அளவுகோலையும் சாமான்யப் புழக்கம் அல்லது பண்டங்களின் பரிவர்த்தனை எனும் துறையிலிருந்தே பெறுகிருர்'' எனும் மெய் நடப்பில் இருந்தே இந்தத் துணிபுரை கிளைத்துள்ளது என்பதையும் கார்ல் மார்க்ஸ் புலப்படுத்திஞர் (கார்ல் மார்க்ஸ், ''மூலதனம்'', தொகுதி 1).—209.

74 **கம்யூனிஸ்டு அகிலத்தின் நாலாவது காங்கிரஸ்** *1922* நவம்பர் 5 முதல் டிசம்பர் 5 வரை நடைபெற்றது. இது பெத்ரோகிராதில் ஆரம்பமாயிற்று, பிறகு நவம்பர் 9 முதல் கொண்டு இதன் அமர்வுகள் மாஸ்கோவில் நடந்தன. இந்தக் காங்கிரசில் 58 கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அதோடு இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சி, ஐஸ்லாந்து தொழிலாளர் கட்சி, மங்கோலிய மக்கள்-புரட்சிக் கட்சி, இளங்கம்யூனிஸ்டு அகிலம், சர்வதேசத் தொழிற்சங்கம், சர்வதேச மாதர் செயற்குழு, அ. ஐ. நா. நீக்ரோ மக்கள் ஸ்தாபனம், சர்வதேசத் தொழிலாளர் உதவி அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். இந்தக் காங்கிரஸ் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் அறிக்கையையும் மற்றும் பின்வரும் விஷயங்களையும் விவாதித்தது: ருஷ்யப் புரட்சியின் ஐந்தாண்டுகளும் உலகப் புரட்சிக்கான சாத்தியக்கூறுகளும், மூலதனத்தின் தாக்குதல், கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலைத்திட்டம், தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் கடமைகள், கீழ்த்திசை பிரச்சினை, நிலப் பிரச்சினை மற்றும் இதர விஷயங்கள்.

ரு. க. க. (போ.)இன் பிரதிநிதிக் குழு பியூரோவின் தலைவர் என்ற முறையில் லெனின் ருஷ்யப் பிரதிநிதிக்

குழுவின் வேலைகளைப் பொதுவாக நெறியாண்மை செய்தார், மற்றும் காங்கிரசின் பிரதானத் தீர்மானங்களை உருவரை செய்வதில் செயலூக்கமான பங்கு வகித்தார். லெனின் ''ருஷ்யப் புரட்சியின் ஐந்தாண்டுகளும் உலகப் புரட்சிக்கான சாத்தியக்கூறுகளும்'' எனும் அறிக்கையை நவம்பர் 13ந் தேதி காலை அமர்வில் ஜெர்மன் மொழியில் ஆற்றினர். இதுவே காங்கிரசின் பிரதான நிகழ்ச்சியாக இருந்தது.

இந்தக் காங்கிரஸ் தொழிலாளர் ஐக்கிய முன்னணி பற்றிய ஆய்வுரைகளை ஏற்று ஆதரித்தது; கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரங்கள் பற்றிய ஆய்வுரைகளை அங்கீகரித்தது; மற்றும் தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் கடமைகள், கீழ்த்திசை பிரச்சினை, ருஷ்யாவில் சோஷலிஸ்டுப் புரட்சி, இளங்கம்யூனிஸ்டு அகிலம் மற்றும் இதர பிரச்சினைகள் குறித்துத் தீர்மானங்களை நிறைவேற்றியது.—*214*.

75 இங்கு குறிப்பிடப்படுவது அக்டோபர் புரட்சிக்கு முன்பு ருஷ்ய-ஆசியக் கூட்டு சங்கத்தின் தலைவராயும், ருஷ்யாவின் பெரிய சுரங்கத் தொழில் நிறுவனத்தின் உடைமையாளராகவும் இருந்த பிரிட்டிஷ் தொழிலதிபரும், நிதியதிபருமான ஜான் லெஸ்லி உர்கார்ட்டுக்குச் சுரங்கத் தொழில் சலுகைகளைக் குத்தகைக்கு விடுவது பற்றி நடந்த பேச்சுக்களாகும். 1922 செப்டம்பர் 9ல் அயல்துறை வாணிக மக்கள் கமிசார் லி. ப. கிராசின் உர்கார்ட்டுடன் ஒரு நகல் உடன்பாட்டில் கையொப்பமிட்டார். இதன்படி உர்கார்ட் உரால் மற்றும் சைபீரியாவில் இருந்த ருஷ்ய-ஆசியக் கூட்டு சங்கத்தின் முன்னுள் நிறுவனங்களை 99 ஆண்டுக் காலத்துக்கு ஒரு சலுகையாகப் பெறுவார் எனவும், 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சலுகையாகத் தந்த நிறுவனங்களை காலவரையரைக்கு முன்னதாகவே விலைக்கு வாங்கிக் கொள்ள சோவியத் அரசாங்கத்துக்கு உரிமை உண்டு எனவும் முடிவு செய்யப்பட்டது. இந்த உடன்பாட்டின் நிபந்தனைகளின்படி சலுகையாளருக்கு அவரது புரள்வு மூலதனத்தையும், உரிய நிறுவனங்களையும் சோவியத் அரசாங்கத்தின் அரசாணையின் விளைவாக எந்த அளவுக்குச் சலுகையாளர் பாதிக்கப்பட்டாரோ அந்த அளவுக்கு மீட்டமைத்துக் கொள்ள சோவியத் தரப்பு பொருள்வகை உதவி வழங்க வேண்டும்.

லெனின் கிராசினுல் கையொப்பமிடப்பட்ட இந்த நகல் உடன்பாட்டைப் படித்துப் பார்த்து இது சோவியத்

அரசுக்குப் பாதகமாக இருப்பதைப் கண்டார். எனவே இது அங்கீகரிக்கப்படுவதை எதிர்த்தார். 1922 அக்டோபர் 5ல் நடந்த ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டமும் அக்டோபர் 6ல் நடந்த மக்கள் கமிசார்களின் கவுன்சில் கூட்டமும் உர்கார்ட்டுடனை இந்த உடன்பாட்டை நிராகரித்தன.

இவ்வாருக இந்தச் சலுகை வழங்கப்படவில்லை.—227.

76 ''இரண்டு தடவை இரண்டு கொழுப்பாலான ஒரு மெழுகு திரி'' எனும் தொடர் ''ரூதின்'' எனும் இ. செ. துர்கேனெவின் நவீனத்தில் வரும் பாத்திரங்களில் ஒன்றைக் குறிப்பது.—234.

77 இங்கு வி. இ. லெனின் குறிப்பிடுவது, கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ''கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அமைப்புத்துறைக் கட்டமைப்பு, வேலையின் முறைகள் மற்றும் அதன் உள்ளடக்கம்'' எனும் ஆய்வுரைகளையாகும்.—235.

78 **கறுப்பு நூற்றுவர்** — புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாராட்சிப் போலீசால் உருவாக்கப்பட்ட முடியாட்சி ஆதரிப்புக் கும்பல்கள். கறுப்பு நூற்றுவர்கள் புரட்சியாளர்களைக் கொலை புரிந்தனர்; முற்போக்கான அறிவுத்துறையினரைத் தாக்கினர்; யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தினர்.—238.

79 இங்கு குறிப்பிடப்படுவது, ரு. சோ. சோ. கூ. குடியரசில் சேருவதென 1922 நவம்பர் 14ல் தூரக்கிழக்கு குடியரசின் மக்கள் சட்டமன்றம் ஏற்றுக் கொண்ட முடிவாகும். இது நவம்பர் 15ல் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.—241.

80 1922 அக்டோபர் கடைசியிலும் நவம்பர் துவக்கத்திலும் ''பிராவ்தா'' பத்திரிகை லெஸ்லி உர்கார்ட்டுடன் செய்து கொண்ட உடன்பாடு குறித்த சில விவாதக் கட்டுரைகளை வெளியிட்டது. இந்த விவாதம் வி. இ. லெனினது யோசனையின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டது.—248.

81 துருக்கியில் ஆங்கில-கிரீக் தலையீடு தோல்வியடைந்ததன் தொடர்பாக மத்தியக் கிழக்குப் பிரச்சினைகள் பற்றி பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் இத்தாலி தயார் செய்து வந்த

மாநாடு (லாசேன் மாநாடு) இங்கு குறிப்பிடப்படுகிறது. —*249*.

82 *1922* டிசம்பர் *16*ல் வி. இ. லெனின் நோயின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானர். பிந்திய நாட்களில் அவரது நிலைமை மேலும் மோசமாயிற்று. அவரது வலது கை பாரிசவாதத்தால் செயலிழந்து விட்டதால் லெனினல் எழுத முடியவில்லை. சுருக்கெழுத்தாளரிடம் தமது குறிப்புக்களை எழுதிக் கொள்ளும்படிக் கூற வேண்டியிருந்தது. இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ள கடிதங்கள் மற்றும் கட்டுரைகள் *1922* டிசம்பர் கடைசி முதல் *1923* மார்ச் ஆரம்பம் வரை அவர் எழுதிக் கொள்ளும்படிக் கூறப்பட்டவை.

காங்கிரசுக்குக் கடிதம் *1922* டிசம்பர் *23*, *24*, *25* மற்றும் *26*ந் தேதிகளிலும் மற்றும் டிசம்பர் *29*லும் (''மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் தொகையை அதிகரிப்பது சம்பந்தமான பிரிவுக்குச் சேர்ப்பு'') மற்றும் *1923* ஜனவரி *4*லும் (''*1922* டிசம்பர் *24*ஆம் தேதிக் கடிதத்துடன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது'') அவர் எழுதிக் கொள்ளும்படிக் கூறிய குறிப்புக்களை உள்ளடக்கியது.

வி. இ. லெனின் விருப்பியபடி, மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களின் தன்மைக் குறிப்புக்கள் அடங்கிய அவரது *1922* டிசம்பர் *24—25* மற்றும் *1923* ஜனவரி *4*ந் தேதிய குறிப்புக்கள், லெனின் மறைவுக்குப் பின் அவரது மனைவி ந. க. குரூப்ஸ்கயாவால் கட்சியின் மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டன. *1924* மேயில் அவரது ''காங்கிரசுக்குக் கடிதம்'' பதின்மூன்ருவது கட்சிக் காங்கிரஸ் பிரதிநிதிக் குழுக்களுக்குப் படித்துக் காட்டப்பட்டது.

1927 டிசம்பரில், ரு. க. க. (போ.)இன் பதினைந்தாவது காங்கிரஸ் ''காங்கிரசுக்குக் கடிதத்தை'' (*1922* டிசம்பர் *24—25* மற்றும் *1923* ஜனவரி *4*ந் தேதிய குறிப்புக்கள்) காங்கிரசின் விவரமான அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரம் செய்யவும், இக்குறிப்புக்களையும் உட்கட்சிப் பிரச்சினைகள் சம்பந்தமான லெனினது இதர கடிதங்களையும் ''லெனின் தொகுப்பில்'' வெளியிடவும் முடிவு செய்தது. இந்த முடிவின்படி *1922* டிசம்பர் *24—25* மற்றும் *1923* ஜனவரி *4*ந் தேதிய குறிப்புக்கள் ரு. க. க. (போ.) இன் பதினைந்தாவது காங்கிரசின் செய்தி வெளியீடு இதழ் *30*ல் வெளியிடப்பட்டன. இந்த முடிவின் இரண்டாம்

பகுதி நீண்ட காலமாக நிறைவேற்றவில்லை. 1956ல் சோ. யூ. க. க. மத்தியக் கமிட்டியின் முடிவுப்படி இந்தக் கடிதங்கள் கட்சியின் இருபதாம் காங்கிரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன, கட்சி அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விரிவாக வெளியிடப்பட்டன.—256.

83 **ரூஸ்கயா மீசில்** (''ருஷ்யன் சிந்தனை'')—1922ல் பிராகில் பி. பெ. ஸ்துரூவேயால் வெளியிடப்பட்ட ஒரு சஞ்சிகை.—258.

84 இங்கு குறிப்பிடப்படுவது 1917 அக்டோபர் 10(23) மற்றும் 16(29) தேதிகளில் நடந்த கட்சியின் மத்தியக் கமிட்டி அமர்வுகளில் ஸினேவியெவும் காமெனெவும் மேற்கொண்டு விட்டுக்கொடுக்கும் நிலையாகும். ஆயுதமேந்திய புரட்சிக்கான உடனடித் தயாரிப்பு பற்றிய லெனினது தீர்மானத்தை எதிர்த்து அவர்கள் பேசியும் வோட்டளித்தும் செயல்பட்டனர். இரு அமர்வுகளிலும் அவர்களுக்கு வன்மையான பதிலடி கொடுக்கப்பட்ட போதிலும் உடனடி எதிர்காலத்திற்கான எழுச்சிக்குரிய போல்ஷிவிக்குகளின் தயாரிப்புகள் பற்றி அரை மென்ஷிவிக்கு ஏடான ''நோவயா ழீஸ்னில்'' (''புதிய வாழ்வு'') அக்டோபர் 18ல் அறிக்கை விட்டார்கள், இது ஒரு சூதாட்டம் என்று சாற்றினார்கள். இவ்வாறு அவர்கள் மாபெரும் கட்சி இரகசியத்தை இடைக்கால அரசாங்கத்துக்குக் காட்டிக்கொடுத்தார்கள். அதே நாள் வி. இ. லெனின் ''போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர்களுக்குக் கடிதம்'' மூலம் இந்த நடத்தையைக் கண்டித்து, இது என்றும் கண்டிராத கருங்காலிச் செயல் என்றார்.—259.

85 **அரசுத் திட்டக் கமிஷனுக்கு சட்டமியற்றும் பணிகளை வழங்குதல்** பற்றியதான இந்தக் கடிதம் ந. க. குரூப்ஸ்கயாவால் 1923 ஜூன் மாதத் துவக்கத்தில் கட்சியின் மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜூன் 14ந் தேதி ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ ''அரசுத் திட்டக் கமிஷன் பற்றிய தோழர் லெனினது குறிப்புக்களை மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்கள் மற்றும் காண்டிடேட் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதென்று'' முடிவு எடுத்தது. ''பொருளாதாரக் கொள்கையின் உடனடிப் பணிகள்'' (பகுதி 8: ''திட்டமிடல் கோட்பாட்டை வலுப்படுத்துவதன் அவசியம் பற்றி'') எனும் தலைப்பிலான ரு. க. க. (போ.)இன் பதின்

மூன்ருவது மாநாட்டுத் தீர்மானத்தில் லெனினது நெறி முறைகள் வெளியீடாயின.—264.

86 லெனின் இந்தக் கடிதத்தை எழுதுவதற்கு உடனடி ஏதுவாக இருந்தது ஜார்ஜியன் கம்யூனிஸ்டுக் கட்சியில் கி. க. ஓர்த்ஜொனிகீத்ஸே தலைமையிலான ரு. க. க. (போ.)இன் டிரான்ஸ் காகேஷியன் பிரதேசக் கமிட்டிக்கும் மிதிவானி பிரிவுக்கும் இடையிலான மோதலே. மிதிவானி பிரிவு உள்ளபடியே டிரான்ஸ் காகேஷியன் குடியரசுகளின் பொருளாதார மற்றும் அரசியல் ஒற்றுமையைத் தடங்கல் செய்தது, உண்மையில் ஜார்ஜியாவின் ஒதுக்கநிலை நீடித்து நிலவுவதை ஆதரித்தது, இதன் மூலம் முதலாளித்துவத் தேசியவாதிகளான ஜார்ஜியன் மென்ஷிவிக்குகளின் கைகளில் சென்று சிக்கியது. மறு புறத்தில் ஓர்த்ஜொனிகீத்ஸேயும் பல கடுமையான பிழைகளைச் செய்தார்: ஜார்ஜியாவில் கட்சியின் தேசிய இனக் கொள்கையை அமுலாக்குவதில் போதிய நெகிழ்திறனையும் எச்சரிக்கையையும் தோற்றுவிக்கத் தவறினர்; முற்றும் நிர்வாக வகைப்பட்ட அணுகுமுறையினையும், சில நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் அவசரத்தையும் காட்டினர்; ஜார்ஜியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கருத்துக்களையும் உரிமைகளையும் அடிக்கடி அசட்டை செய்தார். மிதிவானி பிரிவு சம்பந்தமாகப் போதிய பொறுமையையும் அவர் காட்டவில்லை.

''தேசிய இனங்களின் பிரச்சினை அல்லது 'தன்னாட்சிமயமாக்கல்' '' எனும் இந்தக் கடிதத்தில் லெனின் கட்சியின் தேசிய இனங்கள் கொள்கையின் பிரதானப் பிரச்சினைகளை விளக்கினர். தமது கடிதத்தை ஒரு வழிகாட்டியாகக் கருதினர், அதற்குப் பெரிய முக்கியத்துவம் அளித்தார், பின்னால் ஒரு கட்டுரையாக வெளியிட எண்ணியிருந்தார். ஆயினும் 1923 மார்ச் 6க்குப் பின் அவரது உடல்நிலை திடீர் என்று மோசமாக மாறியதால் வி. இ. லெனின் இந்தக் கடிதம் சம்பந்தமான தமது இறுதி நெறிமுறைகளை வகுத்தளிக்க இயலாது போயிற்று. 1923 ஏப்ரல் 16ந் தேதி லீ. ஃபோத்தியெவா வி. இ. லெனினது கடிதத்தை ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோவுக்கு அனுப்பி வைத்தார். இது பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரஸ் பிரதிநிதிக் குழுக்களுக்குப் படித்துக் காட்டப்பட்டது. லெனினது நெறிமுறைகளை அனுசரித்து இந்தக் காங்கிரஸ் தேசிய இனங்கள் பிரச்சினை

மீதான அதன் நகல் தீர்மானத்தில் பல முக்கியமான திருத்தங்களையும் சேர்ப்புக்களையும் கொண்டுவந்தது.—*272.*

87 இங்கு குறிப்பிடப்படுவது சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கம் பற்றிய பிரச்சினையை விவாதித்த ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் *1922* அக்டோபர் மற்றும் டிசம்பரில் நடைபெற்ற இரண்டு பிளீனம் கூட்டங்களுமாகும்.—*273.*

88 தட்டெழுத்துப் பிரதியில் தலைப்பு எதுவும் தரப்படவில்லை. ''பிராவ்தா'' ''நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள்'' என்ற தலைப்பில் இக்கட்டுரையை வெளியிட்டது.

வி. இ. லெனினது இக்கட்டுரை சோவியத் கல்வி மீது நேரடியான செல்வாக்குச் செலுத்தியது. ''நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள்'' எனும் கட்டுரையை விரிவாகப் பிரசுரம் செய்யவும் அதில் அடங்கியுள்ள லெனினது நெறிமுறைகளை அமுலாக்க ஸ்தூலமான நடவடிக்கைகளை வகுக்கவும் யோசனை கூறி கல்வித்துறை மக்கள் கமிசாரகம் *1923* ஜனவரி *10*ல் கல்வித்துறை இலாகாக்களுக்கு ரேடியோ மூலம் தந்தி செய்தி அனுப்பியது.—*283.*

89 ''பாட்டாளி வர்க்கக் கலாசாரம்'' எனும் பெயரில் மார்க்சியத்துக்கு விரோதமான கருத்துக்களை **புரொலெட்குல்ட்** எனும் ஒரு கலாசார, கல்வித்துறை நிறுவனம் நடப்புச் செய்து வந்ததை வி. இ. லெனின் இங்கு குறிப்பிடுகிறார். இந்த நிறுவனம் *1917* செப்டம்பரில் ஒரு சுயேச்சை அமைப்பாகத் தோன்றியது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகும் புரொலெட்குல்ட் தொடர்ந்து அதன் ''சுயேச்சையை'' பாட்டாளி வர்க்க அரசுக்கு எதிர்ப்பாக நின்று ஆதரித்தது. இந்த அமைப்பு கடந்த காலத்திய கலாசாரச் செல்வங்களை மறுத்து, வாழ்க்கையிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட விசேஷ ''பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தை'' ''ஆய்வுக்கூட முறையில்'' உருவாக்க முயன்றது. இந்த புரொலெட்குல்ட் சித்தாந்தவாதிகளில் முக்கியஸ்தரான அ. அ. பக்தானவ் சொல்லளவில் மார்க்சியத்தை ஒப்புக் கொண்டு செயலில் அகவயப்பட்ட கருத்துமுதல்வாத, மாஹியவாதத் தத்துவ இயலைப் பிரசாரம் செய்தார். இந்த புரொலெட்குல்டின் ஆக உயர்ந்த வளர்ச்சி *1919*ல் எட்டப்பட்டது. *20*ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் இது சீரழியத் தொடங்கி, *1932*ல் அறவே இல்லாதாகி விட்டது.—*284.*

90 மத்தியத் தொழிற்பயிற்சிக் கல்வி வாரியம்—கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தின் தொழிற்பள்ளிகள் மற்றும் உயர் கல்வி நிலையங்களின் மத்திய போர்ட்.—286.

91 ''கூட்டுறவு குறித்து'' மற்றும் ''நமது புரட்சி (நி. சுஹானவின் குறிப்புக்கள் சம்பந்தமாய்)'' எனும் கட்டுரைகள் ந. க. குரூப்ஸ்கயாவால் 1923 மே மாதம் கட்சியின் மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டன. மே 24ல் இக்கட்டுரைகளில் தரப்பட்டுள்ள தேதிகளுடன் இக்கட்டுரைகளைக் கூடிய சீக்கிரம் வெளியிடுவது அவசியம் எனக் கண்டது அரசியல் பியூரோ. ஜூன் 26ல் அரசியல் பியூரோ வி. இ. லெனினது கட்டுரைகளில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய அடிப்படையில் கூட்டுறவுப் பிரச்சினையை விவாதித்தது.

விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டுவது குறித்த லெனினது கருத்துக்கள் ''கூட்டுறவு பற்றி'' மற்றும் ''நாட்டுப்புறத்தில் வேலைகள்'' பற்றியும் பதின்மூன்றாவது காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட தீர்மானங்களுக்கு அடிப்படையினை வழங்கின.—292.

92 ''நமது புரட்சி'' எனும் வி. இ. லெனினது கட்டுரை மென்ஷிவிக் நி. சுஹானவின் ''புரட்சி பற்றிய குறிப்புக்களின்'' மூன்றாவது மற்றும் நாலாவது புத்தகம் தொடர்பாக எழுதப்பட்டதாகும்.

இது தலைப்பு எதுவும் இன்றி ந. க. குரூப்ஸ்கயாவால் ''பிராவ்தா'' ஆசிரியர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆசிரியர்கள் இதற்குத் தலைப்பிட்டனர்.—305.

93 கா. மார்க்ஸ் எழுதிய ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' எனும் நூலில் ''ஒரு மிகவும் நெகிழ்திறனுள்ள அரசியல் வடிவம்'' என்ற முறையில் தரப்பட்டுள்ள பாரிஸ் கம்யூனின் குணும்சமும், 1871 ஏப்ரல் 12ல் லு. கூகல்மனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் வழங்கியுள்ள ''பாரிஸ்வாசியின் நெகிழ்திறன்'' பற்றிய உயர் மதிப்பீடு ஆகியவை இங்கு குறிப்பிடப்படுகின்றன போலும்.—306.

94 1856 ஏப்ரல் 16ந் தேதி பி. எங்கெல்சுக்கு கா. மார்க்ஸ் எழுதிய கடிதத்தின் பின்வரும் பகுதியை வி. இ. லெனின் நினைவில் கொண்டிருந்தார்: ''பாட்டாளி வர்க்கப் புரட்சியை விவசாயிப் போரின் இரண்டாம் நடப்புப் போன்ற ஒன்றைக் கொண்டு ஆதரிக்கும் சாத்தியக்கூறையே ஜெர்

மனியில் உள்ள சகல காரியங்களும் சார்ந்திருக்கின்றன. பிறகு விவகாரம் அற்புதமாக இருக்கும்.''—*306.*

95 **தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும்** என்ற கட்டுரை லெனின் ''காங்கிரசுக்குக் கடிதத்தை'' உடன் நேரடித் தொடர்புடையது, அதில் அடங்கியுள்ள கருத்தை விவரிப்பது. சொற்பமாயினும் சிறந்த்தே நன்று'' எனும் லெனினது கட்டுரை ''தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும்'' எனும் கட்டுரையை விரித்துரைக்கிறது.

லெனினது நெறிமுறைகள் மீது செயல்படத் தொடங்கிய கட்சியின் மத்தியக் கமிட்டி, கட்சியின் மத்திய அமைப்புகளைப் புனரமைப்பது மற்றும் மேம்படுத்துவது பற்றிய ஆய்வுரைகளையும், தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனை புனரமைப்பது பற்றிய காங்கிரசின் நகல் தீர்மானத்தையும், ரு. க. க. (போ.)இன் பன்னிரண்டாவது காங்கிரசுக்காக உருவரை செய்தது.

கட்சியின் பன்னிரண்டாவது காங்கிரஸ், மத்தியக் கமிட்டியால் உருவரை செய்யப்பட்ட ஸ்தாபனப் பிரச்சினை பற்றிய தீர்மானத்தையும், ''தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் பணிகள் பற்றிய'' தீர்மானத்தையும் ஏற்றுக் கொண்டது. வி. இ. லெனினது ஆலோசனைக்கு ஏற்ப இந்தக் காங்கிரஸ் மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர் தொகையை அதிகரித்து, மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் மற்றும் தொழிலாளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் அடிப்படையில் கூட்டு அமைப்பை நிறுவியது.—*312.*

96 ''உழைப்பு மற்றும் உற்பத்தியின் விஞ்ஞானரீதி அமைப்பும் டெய்லர் முறையும்'' எனும் யெர்மான்ஸ்கியின் நூலையும், ''அமைப்புத் துறைக் கோட்பாடுகள்'' எனும் கேர்ஜென்ட்ஸெவ் நூலையும் வி. இ. லெனின் மனதில் கொண்டிருந்தார் (இவை இரண்டும் 1922ல் அரசு வெளியீட்டகத்தால் பிரசுரிக்கப்பட்டன).—*332.*

97 **வோல்ஹவ் நீர்மின்விசைத் திட்டம்** — பெத்ரோகிராதில்

(இப்போது லெனின்கிராத்) இருந்து *120* கிலோமீட்டர் தொலேவில் வோல்ஹவ் நதி மீது நீர்மின்விசை நிலேயத்தின் நிர்மாணம் பற்றிய திட்டம். இந்த நிலேயம் சோவியத் ருஷ்யாவின் முதலாவது பெரிய நீர்மின்விசை நிலேயமாகும். இதன் நிர்மாணம் *1918*ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் *1921*ல் மட்டுமே உள்நாட்டுப் போருக்குப் பிறகே வேலே சரிவர இயங்கத் தொடங்கியது.—*346.*

பெயர்க் குறிப்பகராதி

அதராத்ஸ்கி [Adoratsky], **விளதீமிர் வீக்தரவிச்** *(1878—1945)*—மார்க்சியத்தின் பிரபல பிரசாரகர், அறிஞர்; 1904 முதல் கட்சி உறுப்பினர். 1918ல் கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தில் பணி புரிந்தார். 1920 முதல் மத்திய ஆவணக்கூடத்தின் உதவி நிர்வாகி, லெனின் கழகத்தின் துணை இயக்குனர், பின்னர் மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனின் கழகத்தினது—இது ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியுடன் இணைக்கப்பட்டது—இயக்குனர், சோவியத் யூனியன் விஞ்ஞான அகாதெமியின் தத்துவவியல் கழகத்தின் இயக்குனர்.—*22.*

இயோஃபெ [Ioffe], **அடோல்ஃப் அப்ராமவிச்** *(1883—1927)*—பிரபல சோவியத் அரசுறவாளர்; பல முதலாளித்துவ நாடுகளுடன் சோவியத் ருஷ்யாவின் சார்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தியவர்.—*83.*

உர்கார்ட் [Urquhart], **லெஸ்லி** *(1874—1933)* — பிரிட்டிஷ் நிதியதிபர், தொழிலதிபர்; ஜார் கால ருஷ்யாவில் பெரிய சுரங்க நிறுவனங்களின் உரிமையாளர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை ஏற்பாடு செய்தவருள் ஒருவர். 1922ல் ஜெனோவா மற்றும் ஹேக் மாநாடுகளில் பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடன் நிபுணராகச் சேர்ந்து கலந்து கொண்டார். 1921-22ல் ருஷ்யாவில் இருந்த தமது முன்னாள் சொத்துக்கள் மீது சலுகைகள் பெறுவதற்காக சோவியத் அரசாங்கத்திடம் பேச்சு நடத்தினர்.—*84, 227, 248, 249, 251.*

உஸ்திரியாலவ் [Ustryalov], **நி. வி.** *(பிறப்பு: 1890)* — வழக்கறிஞர், பொது விவகார எழுத்தாளர், காடேட்டுகளின் கட்சிப் பிரமுகர். 1918ல் கல்ச்சாக் அரசாங்கத்தில்

பத்திரிகை பியூரோ தலைவர். கல்சாக் தோல்வியுற்ற பின் வெளிநாட்டுக்கு ஓடினர். *1921-22*ல் பிராகிலும் பாரிசிலும் வெளியிடப்பட்டதான "ஸ்மேனு வேஹ்" எனும் திரட்டு மற்றும் சஞ்சிகைக்கு விஷயதானம் செய்தார். இந்த "ஸ்மேனு வேஹ்" போக்கின் சித்தாந்த வாதிகளில் ஒருவர்.—*146, 147.*

எங்கெல்ஸ் [Engels], **பிரெடெரிக்** *(1820—1895)—23, 66, 69, 92, 94.*

எர்மான்ஸ்கி (கோகன், ஓசிப் அர்காதியெவிச்) [Yermansky], **அ.** *(1866—1941)*—சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக்; முதல் உலகப் போரின் போது மையவாதி. *1918*ல் மென்ஷிவிக்குகளின் கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினர். *1921*ல் மென்ஷிவிக்குகளின் கட்சியில் இருந்து விலகி மாஸ்கோவில் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டார்.—*331.*

ஐன்ஷ்டைன் [Einstein], **ஆல்பர்ட்** *(1879—1955)*—மாபெரும் விஞ்ஞானி, பௌதிக அறிஞர், சார்பியல் தத்துவத்தை உருவாக்கி முன்வைத்து ஒளி பற்றிய குவாண்டம் தத்துவத் துறையில் புதுமைகளைக் கண்டு பிடித்தவர். அணு பௌதிகம் மற்றும் குவாண்டம் தத்துவத்திற்காக நோபள் பரிசு வழங்கப் பெற்றார்.—*91, 98.*

ஓர்த்ஜொனிகித்ஸே [Orjonikidze], **கிரிகோரி கன்ஸ்தன்தினவிச்** *(1886—1937)*—கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசின் தலை சிறந்த பிரமுகர். *1903* முதல் ரு. ச. ஜ. தொ. கட்சி உறுப்பினர், போல்ஷிவிக்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொறுப்பான கட்சி மற்றும் அரசுப் பணிகளில் ஈடுபட்டார். *1921-26*ல் மத்தியக் கமிட்டியின் காக்கஸஸ் பியூரோ தலைவர். *1921* முதல் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்.—*169, 273, 276, 280.*

ஓல்டன்புர்க் [Oldenburg], **எஸ். எஸ்.** *(மறைவு: 1940)* — அரசியல் பார்வையாளர், பிராகில் *1922*ல் வெளிவந்த வெள்ளைப் படையினரது "ரூஸ்கயா மீசில்" ("ருஷ்யன் சிந்தனை") சஞ்சிகையில் முறையாக எழுதி வந்தவர்.—*258.*

ஓவன் [Owen], **ராபர்ட்** *(1771—1858)* — மாபெரும் ஆங்கில சோஷலிஸ்டு-கற்பனாவாதி.—*301.*

கர்புனேவ் [Gorbunov], **நிக்கலாய் பெத்ரோவிச்** *(1892—1938)* —*1917* முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொறுப்பான நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டார்.—*161.*

கல்ச்சாக் [Kolchak], **அலெக்சாந்தர் வசிலியெவிச்** *(1873—1920)* —ஜாராட்சிக் கப்பற்படைத் தலைவர், முடியாட்சிவாதி; *1918-19*ல் ருஷ்யாவின் எதிர்ப்புரட்சியின் முக்கிய தலைவருள் ஒருவர், அன்டான்டின் கையாள். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் தன்னை ருஷ்யாவின் உயர் ஆட்சித்தலைவனுகப் பிரகடனம் செய்து கொண்டு, சைபீரியாவில் மற்றும் உரால் பிரதேசத்திலும் தொலைகிழக்கிலும் இராணுவ முதலாளித்துவ-நிலவுடைமையாளர் சர்வாதிகாரத்துக்குத் தலைமை தாங்கினர். செஞ்சேனையின் தாக்கடியும் புரட்சிகர கொரிலாப் படையின் இயக்கமும் கல்ச்சாக் ஆட்சியைக் குலைத்தொழித்தன; கல்ச்சாக் கைதுசெய்யப்பட்டுச் சுடப்பட்டார்.—*77, 146, 234.*

காமெனெவ் (ரோசன்ஃபெல்ட்) [Kamenev], **லேவ் பரீசவிச்** *(1883—1936)*—*1901* முதல் போல்ஷிவிக்குகளின் கட்சியில் இருந்தார். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டுப் புரட்சித் திசையிலான கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். *1917* அக்டோபரில் அரை மென்ஷிவிக்குச் செய்திப் பத்திரிகை ''நோவயா ழீஸ்ன்''இல் ஆயுதமேந்திய புரட்சி பற்றிய மத்தியக் கமிட்டியின் தீர்மானத்துடனன எதிர்ப்பை வெளிப்படுத்தி தன் சார்பிலும் ஸினேவியெவின் சார்பிலும் அறிக்கை வெளியிட்டார். இது கட்சியின் இரகசிய முடிவை வெளியிடும் செயல், புரட்சிக்குத் துரோகம் விளைக்கும் செயலாகும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு—முக்கியமான கட்சி மற்றும் சோவியத் பணிகளில் ஈடுபட்டார். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்து வந்தார். அவரது கட்சி-விரோதச் செயல்களுக்காகக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*159, 160, 163, 164, 182, 197, 200, 240, 259.*

காவுத்ஸ்கி [Kautsky], **கார்ல்** *(1854—1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கம் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதலில் மார்க்சியவாதியாக இருந்

தார், பிறகு மார்க்சியத்தைத் துறந்து மையவாதியானார். இது மிகவும் அபாயகரமான, பாதகமான சந்தர்ப்ப வாதத்தின் வகைப்பட்ட சித்தாந்தமாகும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பாட்டாளி வர்க்கப் புரட்சியை, தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை, போல்ஷிவிக்குகளின் கட்சியை மற்றும் சோவியத் அரசைப் பகிரங்கமாக எதிர்த்தார்.—*54, 139, 311.*

கிராசின் [Krasin], **லியனீத் பரீசவிச்** *(1870—1926)*—பிரபல சோவியத் அரசறிஞர். *1890* முதல் சமூக-ஜனநாயக இயக்கத்தில் இருந்தவர், போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல பொறுப்பான பதவிகள் வகித்தார்; *1919* முதல் தூதுத் துறை வேலைகளில் ஈடுபட்டார். *1920* முதல் அயல்துறை வாணிக மக்கள் கமிசார்; *1924* முதல் பிரான்சிலும், *1925* முதல் பிரிட்டனிலும் சோவியத் ஒன்றியத்தின் அதிகார பூர்வமான தூதுத் துறைப் பிரதிநிதியாக இருந்தார்.—*84, 160, 163, 164, 207, 208, 211, 212, 251.*

கிரிழிழனேவ்ஸ்கி [Krzhizhanovsky], **கிளெப் மக்சிமிலியானவிச்** *(1872—1959)*—கம்யூனிஸ்டுக் கட்சியின் பழம்பெரும் உறுப்பினர், பிரசித்திபெற்ற சோவியத் விஞ்ஞானி, மின் துறை நிபுணர். *1920*ல் ருஷ்யாவை மின்மயமாக்கும் துறையின் அரசுக் கமிஷன் (Goelro) தலைவராக இருந்தார். *1921-30*ல் அரசுத் திட்டக் கமிஷன் தலைவர்.—*266, 268.*

கீன்ஸ் [Keynes], **ஜான் மேனார்ட்** *(1883—1946)*—பிரிட்டிஷ் பொருளியல் நிபுணர், அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் ஆதரவாளர். *1915* முதல் பிரிட்டிஷ் கஜானாவில் பதவி வகித்தார். *1919*ல் ஓய்வு பெற்ற பின் வெர்சேய் ஏகாதிபத்திய சமாதான ஒப்பந்தத்தால் நிறுவப்பட்ட அமைப்பின் பொருளாதாரத் திறமின்மை பற்றிக் கண்டித்துப் பல நூல்களை எழுதினார். *1921*க்குப் பிறகு பெரிய பிரிட்டிஷ் இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர்.—*85.*

கூன் [Kun], **பேலா** *(1886—1939)*—ஹங்கேரிய மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியத் தலைவருள் ஒருவர்; ஹங்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்கள், தலைவர்களில் ஒருவர். *1919* மார்ச்சில் நிறுவப்பட்ட ஹங்கேரிய சோவியத் குடியரசில் அயல்துறை மக்கள் கமிசார் மற்றும் இராணுவ விவகார மக்கள் கமிசாரகக் கூட்டுச் செயற்குழுவில் பதவிகள் வகித்து, நடைமுறை

யில் ஹங்கேரிய சோவியத் அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். ஹங்கேரியாவில் சோவியத் ஆட்சி அதிகாரம் நசுக்கப்பட்ட பின் ஆஸ்திரியாவுக்கும் பிறகு ருஷ்யாவுக்கும் சென்ருர்.—*23, 24.*

கேர்ழென்த்செவ் (லேபெதெவ்) [Kerzhentsev], **பிளாட்டோன் மிஹாய்லவிச்** *(1881—1940)—1904* முதல் ரு. ச. ஜ. தொ. கட்சி உறுப்பினர், போல்ஷிவிக்; சோவியத் அரசு மற்றும் கட்சிப் பிரமுகர், வரலாற்ருசிரியர், அரசியல் பத்திரிகையாளர்.—*332.*

சகோல்னிக்கவ் (பிரில்லியன்த்) [Sokolnikov], **கிரிகோரி யாக்கவ்லெவிச்** *(1888—1939)—1905* முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சி மற்றும் அரசாங்கத்தில் பதவிகள் வகித்தார். மத்தியக் கமிட்டி உறுப்பினர், காண்டிடேட் உறுப்பினர். பின்னல் கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—*141, 197, 201, 202, 206.*

சரோக்கின் [Sorokin], **பித்திரீம் அலெக்சாந்தரவிச்** *(1889—1968)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர். *1917* வரை பெத்ரோகிராத் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியர். *1919-22*ல் பெத்ரோகிராத் உயர் கல்வி நிலையங்களில் சமூகவியல் போதித்தார். எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்காக நாடு கடத்தப்பட்டார்.—*101, 103.*

சிச்சேரின் [Chicherin], **கியோர்கி வசீலியெவிச்** *(1872—1936)*—சோவியத் அரசறிஞர், தூதுத் துறையாளர். *1918* முதல் *1930* வரை அயல்துறை விவகார மக்கள் கமிசார், ஜெனேவா மற்றும் லாசேன் சர்வதேச மாநாடுகளில் சோவியத் பிரதிநிதிக் குழுவின் தலைவர்.—*83.*

சுஹானவ் (கிம்மெர், நிக்கலாய் நிக்கலாயெவிச்) [Sukhanov], **நி.** *(பிறப்பு: 1882)*—குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட பொருளியலாளர், பத்திரிகையாளர், மென்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் பொருளாதார இலாகாக்களிலும் நிலையங்களிலும் பதவிகள் வகித்தார்.—*305, 308, 310.*

செராட்டி [Serrati], **ஜியாச்சீன்டோ மெனேட்டி** *(1872—1926)*—இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் பிரமுகர்,

இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவருள் ஒரு வர். முதல் உலகப் போரின் போது சர்வதேசியவாதி. ஸிம்மர்வால்ட் மற்றும் கீந்தால் மாநாடுகளில் கலந்து கொண்டார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாம் காங் கிரசில் இத்தாலியப் பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமை வகித்தார், சீர்திருத்தவாதிகளுடன் நிபந்தனை இன்றி முறித்துக் கொள்வதை எதிர்த்தார். *1924*ல் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்.—*28*.

செர்னிஷேவ்ஸ்கி [Chernyshevsky], **நிக்கலாய் கவ்ரீலவிச்** *(1828—1889)*—ருஷ்யாவின் புரட்சிகர ஜனநாயகவாதி, விஞ்ஞானி, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர். ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தின் தலைசிறந்த முன்னோடிகளில் ஒருவர்.—*89*.

செர்னோவ் [Chernov], **விக்தர் மிஹாய்லவிச்** *(1876—1952)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்கள், தத்து வாளருள் ஒருவர். *1917* மே—ஆகஸ்டில் இடைக்கால முதலாளித்துவ அரசாங்கத்தில் விவசாயத்துறை அமைச் சர். நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறித்துக் கொண்ட விவசாயிகளை எதிர்த்து மிருகத்தனமான அடக்குமுறைக் கொள்கையைப் பின்பற்றினார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத்-எதிர்ப்பு கலகங்களை ஏற் பாடு செய்தவருள் ஒருவர். *1920* முதல் வெள்ளை வெளி யேறியானார்.—*54*.

டித்ஸ்கென் [Dietzgen], **இயோசிப்** *(1828—1888)*—தலைசிறந்த ஜெர்மன் தத்துவஞானி, சுயேச்சையாக இயக்க இயல் பொருள்முதல்வாதத்துக்கு வந்து சேர்ந்தவர்; சமூக-ஜனநாயகவாதி.—*90*.

டித்ஸ்கென் [Dietzgen], **ஒய்கென்** *(1862—1930)*—யோ. டித்ஸ் கென்னின் புதல்வர், அவரது நூல்களின் வெளியீட் டாளர். அவரது தத்துவஞானக் கருத்துக்களின் பலவீன அம்சங்களைப் பரமமாக்கி மார்க்சியத்தை அவற்றால் ''குறைநிரப்ப'' முயன்றார். பொருள்முதல்வாதம் மற்றும் இயக்கவியல் இரண்டையும் மறுதலிக்கும் நிலைமை வந் தடைந்தார்.—*90*.

டிரேவ்ஸ் [Drews], **அர்த்தூர்** *(1865—1935)*—ஆதிக் கிறித்து வத்தின் வரலாறு குறித்து எழுதிய பிற்போக்கு ஜெர்மன் வரலாற்றியலாளர். கிறிஸ்து இருந்தது வரலாற்று உண்மை அல்ல என்று இவர் தமது நூல்களில் உரைத்

தார்; ஆனால் சமயச் சபையின் கோட்பாடுகளையும் மதத்தின் தப்பெண்ணங்களையும் கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து விமர்சனம் செய்தார்.—*95, 96*.

டூராட்டி [Turati], **ஃபிலீப்பொ** *(1857—1932)*—இத்தாலியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பிரமுகர், இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவக உறுப்பினர், அதன் வலதுசாரி சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர். முதல் உலகப் போரின் போது மையவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் பால் பகைமைப் போக்கு மேற்கொண்டார். இத்தாலியன் சோஷலிஸ்டுக் கட்சி *(1922)* பிளவுற்றதன் பின்னர் சீர்திருத்தவாத தனி சோஷலிஸ்டுக் கட்சிக்குத் தலைமை வகித்தார்.—*28, 54*.

டெராச்சினி [Terracini], **உம்பர்ட்டோ** *(பிறப்பு: 1895)*—இத்தாலியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பிரமுகர். இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகரில் ஒருவர், அதன் மத்தியக் கமிட்டி உறுப்பினர். சீர்திருத்தவாதிகளை எதிர்த்து சமரசப்படுத்தவியலா நிலை மேற்கொண்டார். இடதுசாரி செக்டேரியன் பிழைகளைப் புரிந்தார். இவற்றை வி. இ. லெனின் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசில் கண்டித்தார்.—*31, 32, 34, 35, 36, 43, 44 46*.

ததோர்ஸ்கி [Todorsky], **அலெக்சாந்தர் இவானவிச்** *(1894—1965)*—*1918* முதல் கம்யூனிஸ்டுகளின் கட்சி உறுப்பினர். *1918-19*ல் த்வேர் குபேர்னியாவின் வெஸ்யகோன்ஸ்க் உயெஸ்து நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்; வெஸ்யகோன்ஸ்க் பிரதிநிதிகளது சோவியத்தின் ''இஸ்வேஸ்தியா'' (''செய்திகள்'') மற்றும் ''கிராஸ்னி வெஸ்யகோன்ஸ்க்'' (''சிவப்பு வெஸ்யகோன்ஸ்க்'') எனும் பத்திரிகைகளின் ஆசிரியர்; வி. இ. லெனினால் பாராட்டப்பட்ட ''ஏரும் துப்பாக்கியும் கொண்ட ஓர் ஆண்டு'' எனும் நூலின் ஆசிரியர்.—*152*.

தால்கெய்மர் [Thalheimer], **ஔகுஸ்ட்** *(1884—1948)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, அரசியல் பத்திரிகையாளர். *1918-23*ல் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர். கட்சியின் மத்திய ஏடான *Die Rote Fahne* (''செங்கொடி'') ஆசிரியர். *1921*ல் ''இடதுசாரி'' நிலை மேற்கொண்டார்.—*23, 25*.

திசியுரூப்பா [Tsyurupa], **அலெக்சாந்தர் திமீத்ரியெவிச்** *(1870—1928)*—கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத்

அரசின் பிரமுகர்; *1898* முதல் ரு. ச. ஜ. தொ. கட்சி உறுப்பினர், போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு உதவி மக்கள் கமிசார், *1918* துவக்க முதல் ரு. சோ. சோ. கூ. குடியரசின் உணவுத்துறை மக்கள் கமிசார். *1921* கடைசியில் இருந்து மக்கள் கமிசார்களின் கவுன்சில் மற்றும் உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலின் துணைத்தலைவர்.—*164, 182, 183, 240.*

திமிர்யாஸெவ் [Timiryazev], அர்க்காதி கிலிமேன்தியெவிச் *(1880—1955)* — பௌதிக-கணிதப் பேராசிரியர், *1921* முதல் ரு. க. க. (போ.)இன் உறுப்பினர். பௌதிக தத்துவம் மற்றும் பௌதிகத்தின் வரலாறு,முறைமை இயல் பற்றி நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். இளம் விஞ்ஞானிகளின் வளர்ச்சிக்காக மாபெரும் சேவை செய்தார்.—*97.*

திரோத்ஸ்கி (பிரான்ஷ்டைன்) [Trotsky], லேவ் தவீதவிச்*(1879—1940)* — ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். *1905-07* புரட்சியின் தோல்விக்குப் பின் கலைப்புவாதி; போர், சமாதானம் மற்றும் புரட்சி சம்பந்தமாய் லெனினையும் போல்ஷிவிக்குகளையும் எதிர்த்துப் போராடியவர். முதல் உலகப் போரின் போது மையவாதி நிலை மேற்கொண்டார். *1917*ல் போல்ஷிவிக்குகளின் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனால் திரோத்ஸ்கி போல்ஷிவிசத்தின் நிலை மேற்கொள்ளாமல் லெனினியத்தை எதிர்த்து, கட்சியின் கொள்கையை எதிர்த்துப் பகிரங்கமாயும் இரகசியமாயும் போராடினார்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல பொறுப்பான பதவிகள் வகித்தார்; கட்சியின் பொதுக் கொள்கைக்கு எதிராகவும் சோவியத் யூனியனில் சோஷலிஸ்டு நிர்மாணத்தின் வேலைத்திட்டத்துக்கு எதிராகவும் மீண்டும் போராடினார். *1927*ல் கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்; *1929*ல் சோவியத் நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார், *1932*ல் சோவியத் குடியுரிமையை இழந்தார்.—*88, 256, 258, 259, 264, 266.*

துர்கேனெவ் [Turgenev], இவான் செர்கேயெவிச் *(1818—1883)* —ருஷ்ய எழுத்தாளர்.—*124, 234.*

தெனிக்கின் [Denikin], அந்தோன் இவானவிச் *(1872—1947)* —ஜாராட்சி இராணுவ ஜெனரல். வெளிநாடுகளின்

இராணுவத் தலையீடு மற்றும் உள்நாட்டுப் போரின் போது (1918-20ல்) ருஷ்யாவின் தெற்குப் பகுதியில் வெண்காவலர் படைகளின் தலைமைத் தளபதி. சோவியத் துருப்புக்கள் அப்படைகளை முறியடித்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறினர்.—77, 247.

த்ஸெர்ழின்ஸ்கி [Dzerzhinsky], ஃபேலிக்ஸ் எட்மூண்டவிச் (1877—1926) — கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசின் தலைசிறந்த பிரமுகர்; 1895 முதல் கட்சி உறுப்பினர். போலந்திலும் ருஷ்யாவிலும் கட்சி வேலை செய்து வந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றி அடைந்த பிறகு எதிர்ப்புரட்சி மற்றும் சீர்குலைவை எதிர்த்துப் போராடிய அகில ருஷ்ய விசேஷக் கமிஷன் தலைவராகப் பணியாற்றினர்.—273, 275, 276, 280.

நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்) [Napoleon I (Bonaparte)] (1769—1821) — 1804-14 மற்றும் 1815ல் பிரெஞ்சு பேரரசர்.—310.

நோஸ்கே [Noske], குஸ்தாவ் (1868—1946)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவரில் ஒருவர். 1918ல் ஜெர்மனியில் நவம்பர் புரட்சி நடந்த சமயம் கீலில் நிகழ்ந்த கப்பற்படையினர் புரட்சி எழுச்சியை ஒடுக்கியவருள் ஒருவர். 1919-20ல் இராணுவத் துறை அமைச்சர்; பெர்லின் தொழிலாளர்களைக் கொன்று பழி வாங்குவதையும், கா. லீப்க்னெஹ்ட், ரோ. லுக்சம்புர்க் படுகொலையையும் திட்டமிட்டவர்.—195.

பக்கூனின் [Bakunin], மிஹயீல் அலெக்சாந்தரவிச் (1814—1876) —நரோதியம் மற்றும் அராஜகவாதத்தின் சித்தாந்திகளில் ஒருவர். 1840 முதல் வெளிநாடுகளில் வாழ்ந்தார். முதலாம் அகிலத்தில் மார்க்சியத்தின் கடும் விரோதியாக முன்வந்தார். அவரது பிளவு நடவடிக்கைகளுக்காக 1872ல் பக்கூனின் அகிலத்தில் இருந்து நீக்கப்பட்டார். —29, 30.

பாயின்கரே [Poincaré], ரெய்மன் (1860—1934)—பிரெஞ்சு முதலாளித்துவ அரசியலாளர், அரசறிஞர். பல தடவை பிரெஞ்சு அரசாங்கத்தில் பதவிகள் வகித்தார். பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த பகுதிகளின் நலன்களை வெளிப்படுத்தினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான அன்னிய ராணுவத்

தலையீட்டை ஏற்பாடு செய்தவருள் ஒருவர். 1922-24 மற்றும் 1926-29ல் பிரான்சின் பிரதம மந்திரி. அவர் தீவிரமாயும் சோவியத்-எதிர்ப்பு, கம்யூனிஸ்டு-எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றினுர்.—158.

பியத்தக்கோவ் [Pyatakov], **கியோர்கி லியனிதவிச்** *(1890—1937)—ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதி, போல்ஷிவிக்.*

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு உக்ரேனியன் சோவியத் அரசாங்கத்தில் பதவி வகித்தார். 1920 முதல் பொருளாதார மற்றும் சோவியத் பணிகளில் ஈடுபட்டார். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்து வந்தார். இதனுல் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.—260, 266, 268.

பிராண்ட்லர் [Brandler], **ஹென்ரிஹ்** *(பிறப்பு: 1881)—1898 முதல் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி உறுப்பினர். முதல் உலகப் போரின் போது ''ஸ்பார்ட்டகஸ் கழகத்தில்'' சேர்ந்தார். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பட்ட (1919) பிறகு அதன் உறுப்பினரானுர். 1919-23ல் இதன் மத்தியக் கமிட்டி உறுப்பினர். 1921ல் ''இடதுசாரி'' நிலே மேற்கொண்டார். 1922-23ல் சில வலதுசாரி சந்தர்ப்பவாதத் தவறுகள் புரிந்ததால் மத்தியக் கமிட்டியில் இருந்து விலக்கப்பட்டு, 1929ல் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.—29.*

பில்சூட்ஸ்கி [Pilsudski], **யோசப்** *(1867—1935)—போலந்தின் பிற்போக்கு அரசறிஞர். போலந்தின் முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ அரசின் தலேவர் (1918-22). தொழிலாளர்களின் புரட்சிகர இயக்கத்தை மிருகத்தனமாக அடக்கியவர். 1920ல் சோவியத் அரசுக்கு எதிரான போலந்துப் போரை ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—77.*

பிளெஹானவ் [Plekhanov], **கியோர்கி வலென்தீனவிச்** *(1856—1918)—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலேசிறந்த பிரதிநிதி; ருஷ்யாவில் முதன்முதல் மார்க்சியத்தைப் பரப்பியவர். ரு. ச. ஜ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு (1903) சந்தர்ப்பவாதத்துடன் இணக்கமான நிலேமை அனுசரித்தார், பிற்பாடு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். முதலாவது உலகப் போரின் போது சமூக-தேசியவெறியராக இருந்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு ''எதீன்ஸ்த்வோ'' எனும் மென்ஷிவிக்கு*

களின் தீவிர வலதுசாரி தற்காப்புவாதப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார். போல்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டுப் புரட்சியையும் எதிர்த்தார், ருஷ்யா இன்னும் புரட்சிக்குரிய பக்குவம் பெறவில்லை என்று சாதித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியை ஏற்க மறுத்தார், ஆயினும் சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான போராட்டத்தில் பங்கு பெறவில்லை.—*89*.

புஹாரின் [Bukharin], **நிக்கலாய் இவானவிச்** *(1888—1938)*—*1906* முதல் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி உறுப்பினர், அரசியல் பத்திரிகையாளர், பொருளியலாளர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு ''பிராவ்தா'' பத்திரிகையின் ஆசிரியர், மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ உறுப்பினர், கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார்: *1918*ல் கட்சி-விரோத ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளின்'' பிரிவுக்குத் தலைமை தாங்கினார்; தொழிற்சங்கங்கள் பற்றிய விவாதத்தில்(*1920-21*ல்)முதலில்''இடைத்தட்டு''நிலை மேற்கொண்டார், பிறகு திரோத்ஸ்கியின் கோஷ்டியில் சேர்ந்து கொண்டார்; *1928* முதல் கட்சியில் ''வலதுசாரி எதிர்ப்புக்கு'' தலைமை தாங்கினார். கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காக *1937*ல் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.—*25, 131, 207, 209, 210, 211, 212, 260*.

பெபெல் [Bebel], **ஔகுஸ்ட்** *(1840—1913)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் இரண்டாம் அகிலத்தின் பிரமுகருள் ஒருவர். இருபதாம் நூற்றுண்டின் திருப்பத்தில் ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தில் நிலவிய சீர்திருத்தவாதம் மற்றும் திருத்தல்வாதத்தை எதிர்த்தார். திறமை மிகு அமைப்பாளர், அரசியல் பத்திரிகையாளர். ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்க வளர்ச்சி மீது பெரும் செல்வாக்குச் செலுத்தினார்.— *22, 66, 195*.

பௌவர் [Bauer], **ஓட்டோ** *(1882—1938)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். ''ஆஸ்திரோ-மார்க்சியம்'' எனப்படுவதன் சித்தாந்தவாதி. இது மார்க்சியத் தொடர்களின் திரைமறைவில் புரட்சிகர மார்க்சியம் மற்றும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் ஆகியவற்றுடனான தனது எதிர்ப்பை மூடிமறைத்தது.—*139, 140, 171*.

மாக்டானல்ட் [MacDonald], **ஜேம்ஸ் ராம்ஸே** *(1866—1937)—பிரிட்டிஷ் அரசியலாளர், சுயேச்சை தொழிற்கட்சி மற்றும் தொழிற்கட்சியின் நிறுவகர் மற்றும் தலைவர்களில் ஒருவர். கடைக்கோடி சந்தர்ப்பவாதக் கொள்கையைப் பின்பற்றினர், வர்க்க ஒத்துழைப்பு மற்றும் முதலாளித்துவத்தில் இருந்து படிப்படியாக சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது எனும் தத்துவத்தைப் பிரசாரம் செய்தார். 1918-20ல் சோவியத்-எதிர்ப்புத் தலையீட்டை எதிர்த்த பிரிட்டிஷ் தொழிலாளர் போராட்டத்தைத் தடங்கல் செய்ய முயன்ருர். 1924, 1929-31ல் பிரதம மந்திரியாக இருந்தார்.—54.*

மார்க்ஸ் [Marx], **கார்ல்** *(1818—1883)—22, 76, 94, 99, 100, 132, 170, 202, 209, 306, 309.*

மார்த்தவ் (ஸெதர்பாவும், யூலி ஓசிப்பவிச்) [Martov], **லி.** *(1873—1923)—மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர், முதல் உலகப் போரின் போது மையவாதி. 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தொழிலாளர்கள், படையாளிகள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியை எதிர்த்தார். 1920ல் ஜெர்மனிக்குச் சென்ருர்.—54.*

மிதிவானி [Mdivani], **பலிகார்ப் குர்கேஞெவிச்** *(1877—1937)—1903 முதல் ரு. ச. ஜ. தொ. கட்சி உறுப்பினர். 1920-21ல் ரு. க. க. (போ.)இன் மத்தியக் கமிட்டியின் காக்கஸஸ் பியூரோ உறுப்பினர். 1921 ஜூனில் ஜார்ஜியப் புரட்சிக் கமிட்டியின் தலைவர். டிரான்ஸ் காகேஷியன் கூட்டாட்சி மற்றும் சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கம் பற்றி தவருன நிலைகளை மேற்கொண்டார், ஜார்ஜியாவின் தனிமை நிலையை கட்டிக் காக்க முயன்ருர். அவரும் அவரது ஆதரவாளர்களும் பின்பற்றிய போக்கு தேசிய வாதத்தை நோக்கிய திரிபு என்று ஜார்ஜியக் கட்சி அமைப்பு வரையறுத்தது.—197, 200.*

மிரோஷ்னிக்கவ் [Miroshnikov], **இவான் இவானவிச்** *(1894—1939)—1917 மார்ச் முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். 1921 முதல் 1937 வரை மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் உதவி நிர்வாகியாகவும் பின்னர் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் நிர்வாகியாகவும் பணி புரிந்தார்.—161.*

மில்யுக்கோவ் [Milyukov], **பாவெல் நிக்கலாயெவிச்** *(1859—1943)* —*காடேட்டுகளின் கட்சியின் நிறுவகர் மற்றும் தலைவர்களில் ஒருவர். 1917ல் முதலில் அமைந்த முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் அயல்துறை அமைச்சர்; ஏகாதிபத்தியப் போரை ''வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவரும்'' கொள்கையைப் பின்பற்றினர். 1917 ஆகஸ்டில் கர்னீலவ் கலகத்தை ஊக்குவித்தவருள் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான இராணுவ அன்னியத் தலையீட்டை ஏற்பாடு செய்ய உதவினர்.—21.*

யுதேனிச் [Yudenich], **நிக்கலாய் நிக்கலாயெவிச்** *(1862—1933)* —*ஜாராட்சியில் ஜெனரல். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சி ''வடமேற்குப் பகுதி அரசாங்கத்தின்'' உறுப்பினர். வடமேற்கு வெண்காவலர் படையின் தலைமைத் தளபதி. அன்டான்டு ஏகாதிபத்திய வாதிகளால் வெகுவாக ஆதரிக்கப்பட்டார். 1919 நவம்பரில் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டு எஸ்தோனியாவுக்குப் பின்வாங்கிச் சென்ருர், பிறகு இங்கிலாந்துக்குப் போய்விட்டார்.—77.*

ரகோசி [Rákosi], **மத்யாஸ்** *(1892—1971) — 1918 முதல் ஹங்கேரியாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர், ஹங்கேரியாவில் சோவியத் ஆட்சி நிர்வாகம் நிலைநாட்டப்பட்ட பின் (1919 மார்ச் 21—ஆகஸ்டு 1) புரட்சிகர அரசாங்கத்தில் பதவி வகித்தார். 1920 முதல் 1924 வரை கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர், 1921ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.—139.*

ரகோவ்ஸ்கி [Rakovsky], **கிரிஸ்தியன் கியோர்கியெவிச்** *(1873—1941)* —*1890ஆம் ஆண்டு முதல் பல்கேரியா, ருமேனியா, சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்சின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கேற்றவர். 1917 முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின்னர் கட்சி மற்றும் சோவியத் பணிகளில் ஈடுபட்டார்.—83.*

ராதெக் [Radek], **கார்ல் பெர்ன்கார்தவிச்** *(1885—1939)—கலிஷியா, போலந்து மற்றும் ஜெர்மனியின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கேற்றவர். முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது (1914-18ல்) சர்வதேசியவாதி.*

1917 முதல் போல்ஷிவிக். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார். பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட சமயம் ''இடதுசாரி கம்யூனிஸ்ட்''. *1923* முதல் திரோத்ஸ்கியின் எதிர்ப்பணியில் தீவிர உறுப்பினரானார். கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காக கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.—*23, 24, 25, 27, 30, 38, 40, 45.*

ரீக்கவ் [Rykov], **அலெக்சேய் இவானவிச்** *(1881—1938)—1899* முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொறுப்பான அரசுப் பதவிகள் வகித்தார், மத்தியக் கமிட்டியின் அரசியல் பியூரோ உறுப்பினர். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்தார். *1937*ல் அவரது கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.—*182, 183, 200, 240.*

ரெனொடேல் [Renaudel], **பியேர்** *(1871—1935)* — பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் *(1914-18)* போது சோஷலிஸ்டு-தேசியவெறியர். *1914-20*ல் *L'Humanité* (''மனித குலம்'') பத்திரிகையின் ஆசிரியர். *1914-19* மற்றும் *1924*ல் பிரெஞ்சு நாடாளுமன்ற உறுப்பினர்—*195.*

லித்வீனவ் [Litvinov], **மக்சீம் மக்சீமவிச்** *(1876—1951)*—கட்சி மற்றும் அரசுப் பிரமுகர், பிரபல சோவியத் அரசுறவாளர். *1898* முதல் ரு. ச. ஜ. தொ. கட்சி உறுப்பினர்; போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அரசுறவுத்துறைப் பணிகளில் ஈடுபட்டார். *1921-30*ல் அயல்துறை துணை மக்கள் கமிசாராக இருந்தார்.—*83.*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], **வில்ஹெல்ம்** *(1826—1900)*— ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கப் பிரமுகர், ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிறுவகர் மற்றும் தலைவருள் ஒருவர். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர், இக்கட்சியின் மத்திய ஏடான *Vorwärts* (''முன்னேற்றம்'')இன் பொறுப்பாசிரியர். ஜெர்மன் ரைஹ்ஸ்டாக்குக்குப் பல முறை பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நாடாளுமன்ற மேடையைத் திறமையுட

பயன்படுத்தி பிரஷ்யன் ஐங்கர்களின் பிற்போக்கான அயல் துறை, உள்நாட்டுக் கொள்கைகளை அம்பலப்படுத்தினர். —*195*.

லெவி (ஹார்ஸ்டீன்) [Levi], **பாவுல்** *(1883—1930)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காங்கிரசில் ஜெ. க.க. மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிரதிநிதியாகச் சென்றார். *1921* பிப்ரவரியில் ஜெ. க. க. மத்தியக் கமிட்டியில் இருந்து விலகிக் கொண்டார். கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக ஏப்ரல் மாதத்தில் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். மீண்டும் சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தார்.—*23, 28, 40*.

லெனின் (உலியானவ்) [Lenin (Ulyanov)], **விளதீமிர் இலியீச்** *(1870—1924)—207, 234*.

லொங்கே [Longuet], **ழான்** *(1876—1938)* — பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி மற்றும் இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது பி. சோ. கட்சியின் அமைதிவாத சிறுபான்மையின் மையவாதிகளுக்குத் தலைமை தாங்கினர். பி. சோ. க. கம்யூனிஸ்டு அகிலத்தில் சேருவதையும் பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்படுவதையும் எதிர்த்தார். *1921* முதல் இரண்டரையாவது அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். *1923* முதல் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் எனப்படுவதன் தலைவர்களில் ஒருவர்.—*54*.

வரோவ்ஸ்கி [Vorovsky], **வாத்ஸ்லாவ் வாத்ஸ்லாவவிச்** *(1871—1923)* —முழுநேரப் புரட்சியாளர், போல்ஷிவிக்குகளின் கட்சிப் பிரமுகர், தலைசிறந்த சோவியத் அரசுறவாளர், அரசியல் பத்திரிகையாளர் மற்றும் இலக்கிய விமர்சகர்.—*83*.

வர்லேன் [Varlin], **லுயீ எழேன்** *(1839—1871)*—பிரெஞ்சுப் புரட்சியாளர், முதலாவது அகிலம் மற்றும் *1871* பாரிஸ் கம்யூனின் தலைசிறந்த பிரமுகர். பாரிஸ் கம்யூனின் போது அதன் கவுன்சிலின் (அரசாங்கத்தின்) உறுப்பினர், கம்யூனில் இருந்த இடதுசாரி சிறுபான்மையுடன் சேர்ந்து நின்றார். தடையரண்களில் நின்று தீரமாகப் போராடினர். வெர்சேய் ஆட்களால் விசாரணை இன்றிச் சுடப்பட்டார். —*194, 195*.

விராங்கெல் [Wrangel], **பியோத்தர் நிக்கலாயெவிச்** *(1878—1928)*—ஜாராட்சி இராணுவத்தின் ஜெனரல், கோமான், தீவிர முடியாட்சிவாதி. அன்னிய ராணுவத் தலையீடு மற்றும் உள்நாட்டுப் போரின் போது தெற்கு ருஷ்யாவில் எதிர்ப்புரட்சித் தலைவருள் ஒருவர். *1920* ஏப்ரல்—நவம்பரில் ''தெற்கு ருஷ்ய ஆயுதப் படைகளின்'' வெண்காவலர் பிரிவின் தலைமைத் தளபதி. செஞ்சேனையால் அவை முறியடிக்கப்பட்ட பிறகு வெளிநாட்டுக்குத் தப்பி ஓடினார்.—*77*.

வில்ஹெல்ம் இரண்டாவது (ஹோஹன்சோலர்ன்) [Wilhelm II (Hohenzollern)] *(1859—1941)*—ஜெர்மன் பேரரசர் மற்றும் பிரஷ்யாவின் மன்னர் *(1888—1918)*—*182*.

வீப்பர் [Wipper], **ரோபெர்த் யூரியெவிச்** *(1859—1954)*—பிரபல வரலாற்றியலாளர்; மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்.—*94*.

ஷெத்ரீன் (சல்திக்கோவ்-ஷெத்ரீன், மிஹயீல் யெவ்கிராஃபவிச்) [Shedrin], நி. *(1826—1889)*—ருஷ்யன் நையாண்டி எழுத்தாளர், புரட்சிகர ஜனநாயகவாதி.—*100*.

ஷெய்டெமன் [Scheidemann], **ஃபிலீப்** *(1865—1939)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் கடைக்கோடி வலதுசாரி சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவருள் ஒருவர். *1918* நவம்பர் புரட்சியின் போது ஜெர்மனியில் மக்கள் பிரதிநிதிகள் கவுன்சில் எனப்படுவதில் உறுப்பினர். இதன் செயல்பாடுகள் முதலாளித்துவ வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி நலன்களால் நிர்ணயிக்கப்பட்டன. *1919* பிப்ரவரி—ஜூன் மாதங்களில் வைமார் குடியரசின் கூட்டு அரசாங்கத்துக்குத் தலைமை தாங்கினார். *1918-21*ல் ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தை மிருகத்தனமாக அடக்குவதற்கு ஏற்பாடு செய்தவருள் ஒருவர்.—*195*.

ஷ்பெங்களர் [Spengler], **ஓஸ்வால்டு** *(1880—1936)*—ஜெர்மன் கருத்துமுதல்வாத தத்துவஞானி, ஜெர்மன் பாசிசத்தின் சித்தாந்த முன்னோடி.—*191, 194*.

ஷ்மெரால் [Šmeral], **பகுமீர்** *(1880—1941)*—செக்கோஸ்லோவாகிய மற்றும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கப் பிரமுகர். செக்கோஸ்லோவாகியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். செக்கோஸ்லோவாகிய தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மற்றும் தேசவிடுதலை

இயக்கத்தின் தலைமையில் தீவிரப் பங்கேற்றார். *1918* முதல் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினியக் கட்சியை நிறுவ இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் நடத்திய போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர். செ. க. க. நிறுவப்பட்ட பின் (*1921*) அதன் மத்தியக் கமிட்டி யின் உறுப்பினர். *1921-29*ல் மற்றும் *1935* முதல் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியில் பதவி வகித்தார்.—*30*.

ஸினோவியெவ் (ரதமீஸ்லிஸ்கி) [Zinoviev], **கிரிகோரி யெவ்சேயெவிச்** (*1883—1936*)—*1901* முதல் போல்ஷிவிக்குகளின் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குத் தயாரிப்புகள் செய்து அதை நடத்தி முடிக்க வேண்டிய தருணத்தில் ஊசலாட்டத்தை வெளிக்காட்டி ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியை எதிர்த்தார். ஆயுதமேந்திய புரட்சி எழுச்சி பற்றிய மத்தியக் கமிட்டியின் தீர்மானத்தை மறுத்து காமெனெவ் தம் சார்பிலும் ஸினோவியெவ் சார்பிலும் அரை மென்ஷிவிக்குப் பத்திரிகையான ''நோவயா ழீஸ்ன்''இல் வெளியிட்ட அறிக்கை இரகசியமான கட்சி முடிவை பகிரங்கப்படுத்திய செயல் மற்றும் புரட்சிக்குத் துரோகம் விளைக்கும் செயலுமாகும்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல பொறுப்பான பதவிகள் வகித்தார். கட்சியின் லெனினியக் கொள்கையை அடிக்கடி எதிர்த்து வந்தார்: *1917* நவம்பரில் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் பங்கேற்புடன் ஒரு கூட்டு அரசாங்கம் நிறுவப்படுவதை ஆதரித்தார்; *1925*ல் ''புதிய எதிர்ப்பணியை'' நிறுவியவருள் ஒருவர்; *1926*ல் திரோத்ஸ்கி-ஸினோவியெவ் கட்சி-விரோதக் குழுவின் தலைவருள் ஒருவர். *1934*ல் அவரது கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காகக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.—*197, 259, 273*.

ஸூடேகும் [Südekum], **அல்பெர்ட்** (*1871—1944*)—ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது சோஷலிஸ்டு-தேசியவெறியர். *1918-20*ல் பிரஷ்யாவின் நிதி அமைச்சர்.—*195*.

ஸ்ட்ரேசர் [Strasser], **இயோசிஃப்** (பிறப்பு: *1871*)—ஆஸ்திரியாவின் அரசியலாளர், இடதுசாரி சமூக-ஜனநாயகவாதி. *1918*ல் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். பின்னல்

சந்தர்ப்பவாத சக்திகள் பால் ஈடுபாடு கொண்டார்.—*30.*

ஸ்தாலின் (ஜுகஷ்வீலி) [Stalin], **இயோசிஃப் விஸ்ஸரியோனவிச்** *(1879—1953)—1898* முதல் கட்சி உறுப்பினர். *1912* முதல் ரு. ச. ஜ. தொ. க. (போ.)இன் மத்தியக் கமிட்டி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு ஆயத் தங்கள் செய்து அதை நடத்தி முடிக்க வேண்டிய தருணத் தில் கட்சியின் மத்தியக் கமிட்டியால் நிறுவப்பட்ட புரட்சி கர-ராணுவ மையத்தில் பொறுப்பேற்றார்.

1917 நவம்பர் முதல் *1923* ஜூலை வரை தேசிய இனங் கள் விவகார மக்கள் கமிசாராக இருந்தார். *1919* மார்ச் முதல் அரசுக் கண்காணிப்பு கமிஷன் பின்னர் தொழிலா ளர், விவசாயிகளது மேற்பார்வை அமைப்பின் மக்கள் கமிசார். ரு. க. க. (போ.)இன் அரசியல் பியூரோ உறுப் பினர். உள்நாட்டுப் போரின் போது குடியரசின் புரட்சி கர ராணுவக் கவுன்சில் மற்றும் சில போர்முனைகளின் புரட்சிகர ராணுவக் கவுன்சில்களின் உறுப்பினர்.

*1922*ல் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். *1941* முதல் மக்கள் கமிசார்களின் கவுன்சில் தலைவர், பின்னர் அமைச் சரவைத் தலைவர்.

கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் பதவியை நெடுங்காலம் வகித்து வந்த ஸ்தாலின் இதர தலைவர்களுடன் சேர்ந்து சோஷலிச நிர்மாணத்திற்காகத் தீவிரமாகப் பாடுபட்டார். கட்சி-விரோதப் போக்குகளைக் குறிப்பாயும் திரோத்ஸ்கிவாதம் மற்றும் வலதுசாரி சந் தர்ப்பவாதத்தை எதிர்த்து அவற்றை முறியடிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

அதோடு இவருடைய பெயருடன் சோவியத் சமு தாயத்தில் தலைகாட்டிய வக்கிரமான போக்குகள் சம் பந்தப்பட்டவை. இவற்றை மார்க்சிய-லெனினியத்துக்கு அன்னியமானவை தனிநபர் வழிபாட்டின் வெளிப்பாடு கள் என்பதாக கம்யூனிஸ்டுக் கட்சி பண்புரை செய்தது. *—197, 200, 201, 204, 206, 258, 261, 275, 280.*

ஹதரோவ்ஸ்கி [Khodorovsky], **இயோசிஃப் இசயேவிச்** *(1885—1940)—1903* முதல் ரு. ச. ஜ. தொ. கட்சி உறுப் பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் போது மாஸ்கோ எழுச்சியில் கலந்து கொண்டார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு கட்சி, இராணுவம் மற்றும் சோவியத் பணிகளில் ஈடுபட்டார்.—*288, 290.*

ஹில்ஃபர்டிங் [Hilferding], **ருடோல்ஃப்** *(1877—1941)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின், இரண்டாம் அகிலத்தின் ஒரு சந்தர்ப்பவாதத் தலைவர்; "ஆஸ்திரோ-மார்க்சியம்" எனப்படுவதன் சித்தாந்தவாதி. "ஒழுங்கமைந்த முதலாளித்துவம்" எனும் தத்துவத்தின் ஆசான். அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் ஆதரவாளர். *1917* முதல் ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்.—*54*.

ஹில்குவித் [Hillquit], **மோரிஸ்** *(1869—1933)*—அமெரிக்காவின் சோஷலிஸ்ட். முதலில் மார்க்சியத்தை ஆதரித்தார். பிறகு சந்தர்ப்பவாதியானுர். அமெரிக்காவின் சீர்திருத்தவாத சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகருள் ஒருவர் *(1901)*; சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ உறுப்பினர்; இரண்டாவது அகிலத்தின் காங்கிரசுகளின் பணிகளில் கலந்து கொண்டார்.—*54*.

ஹெகல் [Hegel], **கியோர்கு வில்ஹெல்ம் பிரெடெரிக்** *(1770—1831)*—மாபெரும் ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவ ஞானி. கருத்துமுதல்வாத இயக்கவியலை மிக விரிவான, ஆழமான முறையில் அவர் செப்பம் செய்தார். இது தத்துவஞானத்துக்கு ஹெகல் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொண்டாகும். இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் தத்துவார்த்தத் தோற்றுவாய்களில் ஒன்ருய் ஹெகலின் இயக்கவியல் பயன்பட்டது.—*99, 100*.

ஹெண்டர்சன் [Henderson], **ஆர்த்தர்** *(1863—1935)*—பிரிட்டிஷ் தொழிற்கட்சி மற்றும் தொழிற்சங்க இயக்கத் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு ஏகாதிபத்தியப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று பிரசாரம் செய்வதற்காக ருஷ்யாவுக்கு வந்தார். *1919*ல் இரண்டாவது (பெர்ன்) அகிலத்தை நிறுவியவர்களில் ஒருவர். இங்கிலாந்தில் முதலாளித்துவ அரசாங்கங்களில் பல முறை பதவி வகித்தவர்.—*194*.

ஹெம்பெல் [Hempel]—கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் கலந்து கொண்ட ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் பிரதிநிதி.—*35*.

ஹோல்ட்ஸ் [Hölz], **மாக்ஸ்** *(1889—1933)*—ஜெர்மன் இடதுசாரி கம்யூனிஸ்ட். *1920*ல் ஜெனரல் காப் தலைமையிலான

அரசுக்கவிழ்ப்பு திடீர்ப்புரட்சியை எதிர்த்து வோர்க்ட் லண்ட் (மத்திய ஜெர்மனி) தொழிலாளரின் ஆயுதமேந்திய போராட்டத்துக்குத் தலைமை வகித்தார். அவரது அராஜகப் போக்குகள் காரணமாக ஜெ. க. க.இலிருந்து நீக்கப்பட்டார். *1921* மார்ச்சில் மத்திய ஜெர்மனியில் தொழிலாளர் படைகளின் ஆயுதமேந்திய போராட்டத்துக்குத் தலைமை வகித்தார். இதற்காக விசேஷ நீதி மன்றம் அவருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்கியது. *1922*ல் சிறையிலிருந்தே மீண்டும் ஜெ. க. க.இல் சேர்ந்தார். *1929*ல் விடுதலையான பிறகு சோவியத் ஒன்றியத்தில் வாழ்ந்து பணி புரிந்தார்.—*40*.

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும்முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட். சென்னை—600098.

ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு. சென்னை—600002.

கிளைகள்

80. மேலக் கோபுர வீதி. மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு. கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு. திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு. சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை,
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.